வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை: அறிமுகமும் ஆய்வுகளும்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை-
அறிமுகமும் ஆய்வுகளும்

முனைவர் ஆறு. இராமநாதன் எம். ஏ., பிஎச். டி.
நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

ISBN:81-7090-107-3

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு : 89

திருவள்ளுவர் ஆண்டு 2019 பங்குனி : மார்ச்சு 1988

நூல் : வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை-
அறிமுகமும் ஆய்வுகளும்

பாடம்
(Subject) : நாட்டுப்புறவியல்

ஆசிரியர் : ஆறு. இராமநாதன்

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : உரூ 60-00

அச்சு : சிவகாமி அச்சகம்
அண்ணாமலைநகர்

பதிப்புரை

நாட்டுப்புற இலக்கியங்கள், கலைகள், கைவினைப் பொருட்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், அறிவியல் நுட்பங்கள் போன்ற பல்வேறு வழக்காறுகளைத் தொகுப்பதும் பேணிக்காப்பதும் ஆய்வு செய்வதும் சமுதாயத்திற்குப் பயனளிக்கக் கூடிய பணிகளாகும்.

இப்பணிகளைச் செய்வதற்கெனத் தமிழ்ப் பல்கலைக் கழகம் நாட்டுப்புறவியல் துறையைத் தொடங்கியுள்ளது. நாட்டுப்புறவியல் ஆய்வுத் தொடர்பான முதல்வெளியீடாக 'வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை - அறிமுகமும் ஆய்வுகளும்' என்னும இந்நூல் வெளிவருகின்றது.

நாட்டுப்புற மக்களிடையே வாய் மொழியாகப் பல்வேறு இலக்கியங்கள் வழக்கில் உள்ளன. அவை வாய்மொழியாகப் பரவும் போது காலத்திற்கேற்பவும் பரவும் நிலத்திற்கேற்பவும் மக்கள் பண்பாட்டிற்கேற்பவும் மொழிக்கேற்பவும் பல்வேறு மாற்றங்களை அடைகின்றன. அவற்றை ஆராய்வதால் அவை வழங்கப்படும் பகுதியின் சமுதாயப் பண்பாட்டு நிலைகளைத் தெரிந்து கொள்ள இயலும்.

நிட்டூரிகதை, சின்னண்ணன் சின்னச்சாமி கதைப்பாடல் ஆகிய இரண்டு கதை வழக்குகளும் இந்நூலில் ஆராயப் படுகின்றன. நாட்டுப்புறவியல் ஆய்வாளர் முனைவர் ஆறு. இராமநாதன் கள ஆய்வில் இறங்கி உள்ளார்ந்த ஊக்கத்துடன இதனை நிறைவேற்றியுள்ளார். திட்டமிட்டும் நெறிவகுத்தும் முறைப்படுத்தியும் துளிச் செய்தியையும் விடாமல் கூர்ந்து நோக்கியும் இப்பணியை நிறைவேற்றியுள்ளார். ஒரு கள ஆய்வுப்பணி எவ்வாறு நிகழ வேண்டும் என்பதற்குரிய எடுத்துக்காட்டாக இதனைச் செய்துள்ளார் என்று உறுதியாகக் கூறலாம். அவருக்கு

நன்றி. அவர் பணி முயற்சிகள் வளர்க, வெல்க என வாழ்த்துகிறேன்.

நாட்டுப்புறவியலில் ஈடுபாடும் கருத்தாழமும் கொண்ட துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் இந்நூலைப் பதிப்பிகக ஆர்வமுடன் இசைவளித்தார்கள். அவர்களுக்கு என் நன்றி.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் சரசுவதிவேணுகோபால் அவர்கள் இந்நூலை நுண்ணாய்வு செய்து உதவியமைக்கு நன்றி கூறுகிறேன்.

தஞ்சாவூர்-1
11.3.88

கோவை. இளஞ்சேரன்
துணைஇயக்குநர், பதிப்புத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்

நன்றியுரை

இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கு ஒப்புதலளித்து, இந்த ஆய்வின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் தக்க ஆலோசனைகள் வழங்கி வழிநடத்திய மதிப்பிற்குரிய முன்னாள் துணைவேந்தர் முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்களுக்கு இதயபூர்வமான நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

இந்த ஆய்வுரையை நூலாக வெளியிட இசைவளித்த மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கு என் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பணி நான் சமூகவியல் துறையில் பணியாற்றிய போது செய்து முடிக்கப்பட்டது. அக்காலக் கட்டத்தில் வேண்டும் போதெல்லாம் அன்புடன் கலந்துரையாடி நல்லறிவூட்டிய சமூகவியல் பேராசிரியர் முனைவர் சீ. செ. தேக்கமலை அவர்களுக்கும்

நிட்டூரி கதை ஆய்வில் நெறிப்படுத்திய பேராசிரியர் முனைவர் இராம. சுந்தரம் அவர்களுக்கும்

கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துரை கூறிய முனைவர் மு. இராமசாமி அவர்களுக்கும்

மொழியியல் பற்றிய ஐயங்களைத் தெளிவுபடுத்திய பேராசிரியர் முனைவர் கி. அரங்கன், முனைவர் சு. இராசாராம் ஆகியோருக்கும்

வரலாற்று நிலவியல் ஆய்வு பற்றிய கோல்ட்பெர்க் கட்டுரையைத் தக்க நேரத்தில் அனுப்பி உதவிய பேராசிரியர் முனைவர் தே. லூர்து அவர்களுக்கும்

இந்த ஆய்வுரையை நுண்ணாய்வு செய்து, பாராட்டிய தோடு இதில் காணப்பட்ட சில தவறுகளைச சுட்டிக் காட்டி செப்பம் செய்ய உதவிய முனைவர் சரசுவதி வேணுகோபால் அவர்களுக்கும்

பல்வேறு நிலைகளில் உதவிபுரிந்த தமிழ்ப் பல்கலைக்கழக நூலக இயக்குநர் திரு த. பத்மநாபன் மற்றும் நண்பர் முனைவர் தா. இராபர்ட் சத்தியசோசப் ஆகியோருக்கும்

நிட்டூரி கதை மற்றும் சின்னண்ணன் சின்னச்சாமி கதைப் பாடல் ஆகியவற்றைச் சேகரித்து ஆய்வுசெய்த ஆய்வு முன்னோடிகளுக்கும்

களப்பணிக்கு உதவிசெய்த அன்பு நெஞ்சங்களுக்கும் (அவர்களின் பெயர்கள் உரிய இடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளன)

என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

* * *

நூல் சிறப்பாகப் பதிப்பாவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு ஒத்துழைப்பு நல்கிய பதிப்புத்துறைத் துணை இயக்குநர் கோவை. இளஞ்சேரன் அவர்களுக்கும், மெய்ப்புத் திருத்திய புலவர் வேல். சம்பந்தமூர்த்தி அவர்களுக்கும் என் நன்றி யைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தஞ்சாவூர்
10-3-88

ஆறு. இராமநாதன்

பொருளடக்கம்

பதிப்புரை iii

நன்றியுரை v

வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை - அறிமுகம் 1

1. நிட்டூரி கதை: வரலாற்று நிலவியல் ஆய்வு 29

இணைப்புகள்

1. சேகரிப்புப் பணி விவரங்கள் 84
2. கதைச் சுருக்கங்கள் I 92
3. கதைப் பாத்திரங்கள் 125
4. கதைக் கூறுகளின் பட்டியல் 128
5. கதைச் சுருக்கங்கள் II 155

2. சின்னண்ணன் சின்னச்சாமி கதைப்பாடல்/கதை வரலாற்று நிலவியல் ஆய்வு 166

இணைப்புகள்

1. களப்பணி சென்ற ஊர்கள் பற்றிய விவரங்கள்

1.1. களப்பணி சென்ற ஊர்கள் - நிலப்படம் 214அ

1.2. சி.சி. கதைப்பாடல்/கதை சேகரிக்கப்பட்ட இடங்கள் - நிலப்படம் 214ஆ

1.3 களப்பணி சென்ற ஊர்கள் பற்றிய விவரங்கள் 215

2. தகவலாளர் பற்றிய விவரங்கள் 226
3. சி.சி. கதைப்பாடல்கள்/கதைகள் 232
4. கதைக் கூறுகளின் பட்டியல் 487
5. துணை நூற்பட்டியல் 601
6. பெயரகராதி 613
7. பொருளகராதி 617

பிழைதிருத்தம் 623

வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை -அறிமுகம்

இக்கட்டுரை இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவதாக வரலாற்று நிலவியல் ஆய்வுமுறையின் தோற்றம், வளர்ச்சி, ஆய்வுமுறை, நிறைகுறைகள், எதிர்காலம் முதலியன அறிமுக நிலையில் சுட்டிக் காட்டப்படுகின்றன. இரண்டாவதாக வரலாற்று நிலவியல் ஆய்வு முறையைப் பயன்படுத்திச் செய்யப் பட்டு இந்த ஆய்வேட்டுடன் இணைக்கப்பட்டுள்ள இரு ஆய்வுகள் பற்றிய பொதுவான சில செய்திகள், பின்பற்றப்பட்ட சில முறைகள் ஆகியன சுருக்கமாக அறிமுகப்படுத்தப்படு கின்றன.

1.0. முன்னுரை

உலகில் நாட்டுப்புற வழக்காறுகளைச் (folklore)[1] சேகரித் தலும ஆராய்தலுமான பணிகள் பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வருகின்றன. ஆயினும், ஜேக்கப் கிரிம் (Jakob Grimm, 1785-1863) என்ற செருமானிய மொழியியலாளர் 'Deutsche Mythologie' என்னும் நூலை வெளியிட்ட 1835-ஆம் ஆண்டி

---

1. தொடக்கக் காலத்தில் நாட்டுப்புற வழக்காறுகளைக் குறிக்க Popular Literature, Popular Antiquities ஆகிய தொடர்கள் பயன்படுத்தப் பட்டன. அத்தொடர்களுக்குப் பதிலாக Folk, Lore என்னும் இரு சொற் களை இணைத்து Folklore என்னும் கலைச்சொல்லை வில்லியம் ஜான் தாம்ஸ் என்ற ஆங்கிலேயர் 1846–இல் உருவாக்கினார். இச்சொல் இன்று உலகம் முழுவதிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நாட்டுப்புற நம்பிக்கை கள், பழக்கவழக்கங்கள், கலைகள், கைவினைப் பொருள்கள், இலக்கியங்கள் போன்ற பலவற்றையும் சுட்ட இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இச் சொல்லுக்கு ஈடாக 'நாட்டுப்புற வழக்காறுகள்' என்னும் தொடர் இந்த ஆய்வில் பயன்படுத்தப்படுகிறது.

லிருந்துதான் முறையான - அறிவியல்பூர்வமான - நாட்டுப்புற வியல் (folkloristics)[2] ஆய்வு தொடங்கியதாகக் கணக்கிடப் படுகிறது. அந்த அடிப்படையில் நோக்கினால் 1985 - ஆம் ஆண்டோடு உலக நாட்டுப்புறவியல் ஆய்வு தோன்றி நூற்றைம பது ஆண்டுகள் முடிந்துவிட்டன என்று கொள்ளலாம்.

மொழியியல், மானிடவியல், உளவியல், இலக்கியம் போன்ற பலதுறை ஆய்வாளர்களின் பங்களிப்பால் உலகளவில் நாட்டுப்புறவியல் இன்று தனித்துறையாக வளர்ச்சிபெற்றுள்ளது. இத்துறையில் பல்வேறு சிந்தனைப் பிரிவுகளும் (Schools of thought), கொள்கைகளும் (Theories) தோன்றி வளர்ந்துள்ளன. அமெரிக்க நாட்டு இந்தியானா பல்கலைக் கழகத்தில் பணி புரிந்த, வரலாறு மற்றும் நாட்டுப்புறவியல் துறைகளின் பேராசிரியர் ரிச்சர்ட் எம். டோர்சன் தம் கட்டுரையொன்றில் (1963:93-112) ஐந்து நாட்டுப்புறவியல் கொள்கைகள் பற்றி விளக்கிக் கூறியுள்ளார். அவை:

1. ஒப்பீட்டு நாட்டுப்புறவியல் கொள்கை
   (Comparative Folklore Theory)
2. தேசிய நாட்டுப்புறவியல் கொள்கை
   (National Folklore Theory)
3. மானிடவியல் கொள்கை (Anthropological Theory)
4. உளநிலைப் பகுப்பாய்வு நாட்டுப்புறவியல் கொள்கை
   (Psycho-analytical Folklore Theory)

---

2. நாட்டுப்புற வழக்காறுகளைக் குறிப்பதற்கு Folklore என்ற சொல்லையும் அவற்றை ஆராயும் ஆய்வுத் துறைக்கு Folkloristics என்ற சொல்லையும் மேலை நாட்டினர் பயன்படுத்துகின்றனர். 'நாட்டுப்புறவியல்' என்னும் சொற்றொடர் Folkloristics என்ற சொல்லுக்கு ஈடான தமிழ்ச் சொற்றொடர் இல்லை. இதற்கு ஈடாகக் கூறப்படும் 'நாட்டார் வழக் காற்றியல்' என்னும் தொடரும் குறையுடையதே. தக்க சொற்றொடர் கிடைக்கும்வரை, தமிழக ஆய்வாளர்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப் படும் நாட்டுப்புறவியல் என்ற தொடரையே பயன்படுத்தலாம். இந்த ஆய்வில் Folkloristics என்பதற்கு ஈடாக 'நாட்டுப்புறவியல்' என்ற தொடர் பயன்படுத்தப்படுகிறது.

5. அமைப்பியல் நாட்டுப்புறவியல் கொள்கை
(Structural Folklore Theory)

பின்னர் அவரே தாம் பதிப்பித்த நூலொன்றின் முன்னுரையில் (1972: 7–50) பன்னிரெண்டு நாட்டுப்புறவியல் கொள்கைகள்பற்றி விரிவாகக் குறிப்பிடுகின்றார்.

அவை:

1. வரலாற்று - நிலவியல் (Historical - Geographical) கொள்கை.
2. வரலாற்று – மீட்டுருவாக்கக் (Historical - Reconstructional) கொள்கை.
3. இலட்சியக் (Ideological) கொள்கை.
4. செயல்முறைக் (Functional) கொள்கை.
5. உளநிலைப் பகுப்பாய்வுக் (Psycho - analytical) கொள்கை.
6. அமைப்பியல் (Structural) கொள்கை.
7. வாய்மொழி-வாய்பாட்டுக் (Oral-Formulaic) கொள்கை.
8. கலப்புப் பண்பாட்டுக் (Cross - Cultural) கொள்கை.
9. நாட்டுப்புறப் பண்பாட்டுக் (Folk-Cultural) கொள்கை.
10. மக்கட் பண்பாட்டுக் (Mass - Cultural) கொள்கை.
11. அரை (பாதி) உலகக் (Hemispheric) கொள்கை.
12. சூழ்நிலைக் (Contextual) கொள்கை.

முன்னர்க் கூறியுள்ள 'ஒப்பீட்டு நாட்டுப்புறவியல் கொள்கையே' இதில் 'வரலாற்று நிலவியல்' என்று கூறப்பட்டுள்ளது. தேசிய மற்றும் மானிடவியல் கொள்கைகள் இதில் கூறப்படவில்லை. வேறுசில ஆய்வாளர்கள் (Handoo, Jawaharlal 1978: 3-12; Subramanian, P.R, 1974:132) தொன்மவியல் கொள்கை (Mytho

logical Theory), புலப்பெயர்வுக்கொள்கை (Migrational Theory) ஆகிய இரண்டையுங் கூட இன்றியமையாக் கொள்கைகளாகக் கூறுகின்றனர். இவர்கள் மானிடவியல் கொள்கையையும் குறிப்பிடுகின்றனர்.[3] இவற்றையும் இணைத்துப் பார்க்கும்போது நாட்டுப்புறவியல் துறையில் தற்போது பதினைந்து வெவ்வேறு கொள்கைகள் உள்ளன என்றுகூறலாம். காலப்போக்கில் மேலும் பல கொள்கைகள் தோன்றலாம்.

மேற்கூறப்பட்ட கொள்கைகளுள் வரலாற்று-நிலவியல் கொள்கை பற்றி மட்டும் இங்குக் காணலாம்.

1.1. வரலாற்று நிலவியல் ஆய்வு முறை[4]- தோற்றமும் வளர்ச்சியும்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பாதிமுதல் இருபதாம் நூற்றாண்டின் முன்பாதி வரையிலான சுமார் ஒரு நூற்றாண்டுக் காலம் நாட்டுப்புறவியல் துறையில் மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்த வரலாற்று-நிலவியல் ஆய்வுமுறை, பன்னாட்டு அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்து வந்துள்ளது. நாட்டுப்புற வழக்காறுகளை முதன் முதலில் அறிவியல்பூர்வமாக ஆராய்ந்ததும் பின்னர்த் தோன்றிய அமைப்பியல் ஆய்வுகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்ததும் இந்த ஆய்வுமுறையேயாகும். இந்த ஆய்வு முறை அறிஞர்களின் பாராட்டுக்கு உட்பட்டதைப் போலவே பலத்த கண்டனததுக்கும் உட்பட்டு வந்திருக்கிறது. இந்த ஆய்வுமுறை படிப்படியாகத் தோன்றி வளர்ந்த வரலாற்றையும் அதன் ஆய்வுமுறைகளையும் அதன் நிறை குறைகளையும் அறிந்து கொள்வதற்குப் பல்வேறு அறிஞர்களின் கட்டுரை

3. பி.ஆர். சுப்பிரமணியன் அவர்கள் ஐயுறவுச் சிந்தனைப்பள்ளி (Skeptica School) பற்றியும் குறிப்பிடுகின்றார் (1974:132). இப்பள்ளியைச் சேர்ந்தவர்கள் முன்னர் உள்ள கொள்கையை மறுத்துள்ளார்களே தவிர, தனிக்கொள்கை எதையும் கூறவில்லை. எனவே, இங்கு இதனைத் தனியாகக் குறிப்பிடவில்லை.

4. இந்த ஆய்வு உத்தி (Research Technique), கொள்கை (Theory) என்பதற்குப் பதிலாக ஆய்வுமுறை (Method) என்று அழைக்கப்படுகிறது (Dorson, Richard, M., 1963:94). இக்கட்டுரையில் இனி 'ஆய்வுமுறை' என்றே குறிக்கப்படும்.

களும் நூல்களும் நமக்குத் துணைபுரிகின்றன.[5] அவற்றின் அடிப்படையில் இங்குச் செய்திகள் சுருக்கமாகத் தரப்படுகின்றன.

தியோடார் பென்பே (Theodor Benfey, 1809-1881) என்னும் செருமானிய-இந்தியவியல் அறிஞர் சமஸ்கிருதக் கதை இலக்கியங்களை ஆய்வதில் ஆர்வம் காட்டினார். 'மக்கள் ஒருவருக்கொருவர் நாட்டுப்புற வழக்காறுகளைக் கடன் வாங்கிக் கொண்டனர்' (borrowed folklore materials from one another) என்று வில்ஹெம் கிரிம் போகிறபோக்கில் கூறிய கருத்தை இவர் எடுத்துக் கொண்டார். இவர் பஞ்சதந்திரக் கதைகளைச் செருமானிய மொழியில் மொழிபெயர்த்தார். இம்மொழி பெயர்ப்புக்கான முன்னுரையில் சமஸ்கிருத-ஐரோப்பியக் கதைகளுக்கிடையேயுள்ள ஒற்றுமைகளைப் பற்றி எடுத்துரைத்துள்ளார். இந்த ஒற்றுமைகளுக்கான காரணம் மாக்ஸ்முல்லரும் அவரைப் பின்பற்றியோரும் நம்புவதுபோல மக்களின் தோற்றத் தொடர்பு (genetic relationship) மட்டுமல்லாது மக்களின் பண்பாட்டு வரலாற்றுத் தொடர்புகளால் அல்லது அவர்களிடையே கடன் வாங்குதலால் (borrowing) ஏற்பட்டது என்பது அவர் கருத்து. கடன் வாங்குதல் என்பது இயல்பாகவோ, போர், நாடுபிடித்தல் போன்ற காரணங்களால் மக்கள் புலம்பெயர்ந்ததாலோ ஏற்பட்டிருக்கலாம் என்று அவர் கூறுகின்றார். கதைகள் இந்தியாவில் தோன்றிஅங்கிருந்து மத்திய தரைக் கடல் (Mediterranean Sea) அங்கிருந்து தூரமேற்கு, ஸ்பெயின், கிரேகக நாடுகளின் வழியாக ஐரோப்பாவுக்குப் பரவின என்று அவர் அனுமானித்தார். பரவுதலை அடிப்படையாகக் கொண்ட அவருடைய 'புலப்பெயர்வுக் கொள்கை' (Migrational Theory) பின்னர் எழுச்சிபெற்ற 'பலவழித தோற்றக் கொள்கை' (Polygenetic) காரணமாக ஏற்றுக்

---

5. Thompson, Stith, (1965:414-74); Dundes, Alan, (1965:414-74); Dorson, Richard, M., (1963:93-112, 1972:7-15); Subramanian, P.R., (1974:132-53); Handoo, Jawaharlal (1978); Goldberg, Christine (1984:1-18); Islam, Mazharul (1985).

சுப்பிரமணியம், வி.ஐ. (1981:1-24); ஊர்து, தே. (1976:22-27).

கொள்ளப்படாவிட்டாலும்[6] பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நாட்டுப்புறவியல் ஆய்வில் பெரும் செல்வாக்குப்பெற்றிருந்தது. தொடக்கத்தில் இது மாக்ஸ்முல்லரின் வரலாற்று மீட்டுருவாக்க ஆய்வுமுறையோடு (Historical reconstruction methodology) 'பரவுதல்' என்ற கருத்தையும் சேர்த்து ஆதரித்தது. யூரி போலிவ்கா (Yuri polivka) என்னும் செக் நாட்டு நாட்டுப்புறவியலாளர் (folklorist) பென்பேயைப் பின்பற்றி 'புலப் பெயரும் பொருள்'களுக்கு (Wandering subjects) ஓர் அடைவு (index) உருவாக்கினார். இது ஸ்காண்டிநேவிய - குறிப்பாகப் பினலாந்து - அறிஞர் குழுவினரின் கவனத்தை ஈர்த்துக் கதையின் பழைய வடிவம், கதையின் தோற்றம், வரலாறு, பரவிய வழி முதலியவற்றை ஆராய வழி வகுத்தது. இதுவே, பின்னாளில் நாட்டுப்புறவியலில் மிகவும் புகழ்பெற்ற வரலாற்று 'நிலவியல் ஆய்வு' என்னும் அறிவியல் பூர்வமான ஆய்வு முறை தோன்றக் காரணமாக இருந்தது. கதைகளின் தோற்றம், பொருள் போன்றவை பற்றி முறையாக ஆராயாமல் தவறான ஒரு பொது முடிவுக்கு வருவதைத் தடுப்பதற்கு இந்த ஆய்வு முறை உருவாக்கப்பட்டது. ஒரு கதையின் வரலாற்றையும் பரவிய நில வழிகளையும் ஆய்வதால் இந்த ஆய்வுமுறை அப் பெயர் பெற்றது.[7]

இந்த ஆய்வுமுறையின்படி ஒரு நாட்டுப்புறக் கதை நூறு மாற்று வடிவங்களில் காணப்படலாம். ஆனால், அவையனைத்தும் ஒரு காலத்தில் ஓரிடத்தில் ஒருவனால் தெரிந்து படைக்கப்

---

6. பேடியர் (Bedier, 1864-1938) என்னும் பிரெஞ்ச் ஆய்வாளர் பென்பேயின் கொள்கையை மறுத்தார். சில கதை வகைகள் பல்வேறிடங்களில் தோன்றியிருக்க சாத்தியக் கூறுகள் உண்டு என்பதை இவர் எடுத்துக் காட்டினார். கதைகள் ஓரிடத்தில் தோன்றிப் பல இடங்களுக்குப் பரவின என்பதும் ஒத்த கதைகள் பல இடங்களிலும் தோன்றியிருக்கலாம் என்பதும் உலகில் மனிதன் தோன்றியது குறித்த மாணிடவியலார் கொள்கைகளோடு தொடர்புடையவை.

7. இந்த ஆய்வுமுறை, கதைகளை ஒப்பிட்டு ஆய்வதால் 'ஒப்பீட்டு ஆய்வு முறை' (Comparative method) என்றும், பின்லாந்து நாட்டு அறிஞர்களால் வளர்க்கப்பட்டதால் 'பின்னிஷ் ஆய்வுமுறை' (Finnish method) என்றும் வேறு பெயர்களால் அழைக்கப்படுவதுண்டு.

பட்ட (Concious invention) ஒரு கதையிலிருந்து கிளைத்ததாக லாம். பின் அக்கதை தான் தோன்றிய இடத்தினின்றும் பல் வேறிடங்கட்கும் அலைபோல் பரவிச்சென்று ஊடுருவும் போது எளிதாக அவ்வெவ்விடங்கட்கேற்ப மாற்றமடைந்திருக்கலாம். சில வேளைகளில் அவை எழுதப்பட்டும் அச்சிடப்பட்டும் இருப் பினும் நிலவெல்லை கடந்து அவை பரவிச் செல்லும் போது மாற்றம் அடைந்தே தீரும். பல்வேறு கருவிலிருந்து பல இடங் களில் (Polygenesis) ஒரு கதை தோன்றியிருக்கலாம் என்பது போன்ற கொள்கைகளை இந்த ஆய்வுமுறை ஏற்றுக் கொள்வ தில்லை. 'மேலும் கனவு, சடங்குகள் (rituals), தெய்வத்தன்மை (origin based on heavenly phenomena), காட்டுமிராண்டி மனப்பான்மை, அடக்கி வைக்கப்பட்ட இளமைக் கற்பனை களின் வெளிப்பாடு முதலியவற்றிலிருந்து தோன்றியிருக்கலாம்' என்ற கொள்கைகளையும் இந்த ஆய்வுமுறை ஏற்றுக் கொள்வ திலலை.

பின்லாந்தைச் சேர்ந்த ஜூலியஸ் குரோன் (Julius Krohn 1835-1888) கலிவேலா (Kalevela) என்னும் வாய்மொழிக் காவி யத்தின் பழைய வடிவத்தினை மீட்டுருவாக்கம் செய்ய வர லாற்று-நிலவியல் ஆய்வு முறையைப் பயன்படுத்தி ஓரளவு வெற்றிகண்டார். அவரைப் பின்பற்றி அவருடைய மகன் கார்ல் குரோன் (Kaarle Krohn, 1863-1933) நாட்டுப்புறக் கதைகளை ஆராய இந்த ஆய்வு முறையைப் பயன்படுத்தினார். இவர்களே 1960 வரை நாட்டுப்புறவியல் துறையின் தலை விதியை நிருணயித்த இந்த ஆய்வுமுறையைத் தோற்றுவித்த வர்கள் எனலாம். ஆயினும் இந்த ஆய்வுமுறையைப் பெரிதும் வளர்த்துப் பரப்பியதில் பின்லாந்து நாட்டு அறிஞரான ஆண்ட்டி ஆர்னி (Antti Aarne, 1867-1925) அவர்களின் பங்கு குறிப்பிடத்தகுந்தது. ஒப்பீட்டு ஆய்வின் வாயிலாக ஒரு கதை யின் வரலாறு நிருணயிக்கப்படும்வரை அக்கதை தொன்மவியல் அல்லது பண்பாட்டை அனுமானிப்பதற்குப் பயன்படாது என்பதை அவர் வற்புறுத்தினார்.

வரலாற்று-நிலவியல் ஆய்வுமுறை வளர்ச்சிபெற்றதன் விளைவாக உலக நாட்டுப்புறக் கதைகளை வகைப்படுத்தும்

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்ட்டி ஆர்னி பின்லாந்து மற்றும் ஐரோப்பாவில் சேகரிக்கப்பட்ட கதைகளை வகைப்படுத்திக் கதை வகை அடைவை (tale type index) 1911-இல் வெளியிட்டார். ஜெர்மன் மொழியில் அமைந் திருந்த இந்த நூலை அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டித் தாம்சன் (Stith Thompson) சிறு மாற்றங்களுடன் 'நாட்டுப்புறக் கதை வகைகள்' (The Types of the Folktale) என்னும் பெயரில் ஆங்கிலத்தில் 1928-இல் வெளியிட்டார். ஆர்னியின் இந்த நூல் விரைவில் உலகப்புகழ்பெற்றது. இதன் விளைவாக உலக நாட்டுப்புறவியலாளர்கள் தங்கள் தங்கள் நாடுகளின் கதை வகை அடைவுகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். புதுப்புதுக் கதைவகைகளைக் கண்டறிவதில் ஆர்வம் காட்டி னர். ருஷ்ய நாட்டினரான ஆந்தர்யேவ் ருஷ்யக் கதைகளை ஆர்னியின் முறைப்படி அடைவு செய்ததை இங்குக் குறிப் பிடலாம்.

இதுவரை நடைபெற்ற ஆய்வுப்பணிகளின் அடிப்படையில் கார்ல் குரோன் தம்முடைய புகழ்பெற்ற நாட்டுப்புறவியல் ஆய்வுக் கொள்கைகளை உருவாக்கி 'Die Folkloristische Arbeitsmethode' என்னும் பெயரில் 1926-இல் வெளியிட்டார். இதில் வரலாற்று-நிலவியல் ஆய்வுமுறை பற்றி விரிவாகக் கூறியுள்ளார் எனத் தெரிகிறது.

ஆர்னியின் கதைவகை அடைவை மொழிபெயர்த்த ஸ்டித் தாம்சன் அவ்வகை அடைவு குறையுடையது எனக் கண்டறிந் தார். ஐரோப்பாவுக்கு வெளியே அப்பணியின் பயன் மிகக் குறைவு என்பதை உணர்ந்தார். உலக நாட்டுப்புறக் கதைகளில் முழுக் கதைகளைப் பார்க்கிலும் தனிக் கூறுகளில் (motifs) மிகுந்த ஒப்புமை காணப்படுவதைக் கண்ட இவர் 'நாட்டுப்புற இலக்கியங்களின் கதைக்கூறு அடைவு' (motif-Index of Folk-Literature) தயார் செய்து ஆறு பாகங்களாக 1955-58 ஆண்டு களில் வெளியிட்டார். Motif என்பதற்கு இவர் தந்த விளக்கம் தெளிவில்லாதது-குறையுடையது என்று ஆய்வாளர்களால்

சுட்டிக்காட்டப்படுகிறது.[8] ஆயினும் இந்நூலின் பயன்பாடு மிகப் பெரியது. இதன் சிறப்பு காரணமாக இந்த நூல் உலகப் புகழ் பெற்றது. ஆர்னிக்குப் பின் வரலாற்று நிலவியல் ஆய்வு முறையை வளர்த்தவர்களுள் ஸ்டித் தாம்சன் குறிப்பிடத் தக்க வர். இவருடைய 'The Star Husband Tale'[9] என்னும் ஆய்வு இந்த ஆய்வுமுறைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கு கின்றது.

வான்சிடோ (C.W. Von Sydow, *1878-1952*), ஆக்சல் ஓல்ரிக் (Oxel Olrik), ஆர்ச்சர் டெய்லர் (Archer Taylor), வாரன்

---

8. Subramanian, P.R. *(1974;142-43)*; Handoo, Jawaharlal *(1978; 109-12)*
கதைக்கூறுகளைச் (motifs) சரியாக வரையறுக்காதவரை கதையின் பெரிய பகுதிகளையும் (Chunks) சிறிய பகுதிகளையும் கதைக்கூறுகளாகக் கொள்ளும் பிழை, தாம்ஸனின் கதையடைவில் இடம்பெற்றிருப்பதைப் போலத் தொடர்ந்து இருந்தே வரும் என்று கூறும் பேராசியர் வி. ஐ. சுப்பிரமணியன் அவர்கள் 'இலக்கியத்தைப் பயனுள்ள முறையில் ஒப்பிட்டு நோக்குதற்கு, அதனைப் பல அலகுகளாகப் பிரிப்பது மிகமிக இன்றியமை யாதது' என்றும் 'பகுத்தறிவுக்கொத்த பயன்தரத்தக்க ஆய்வாக அமைய பிரிக்கப்பட்ட அலகு புறநிலை மெய்ம்மை (Objective) சார்ந்ததாகவும் தெளிவும் முழுமையும் கொண்டதாகவும் இருக்கவேண்டும்' என்றும் குறிப் பிடுகினறார். அத்துடன் இல்லாமல் அவர் ஒரு பயனுளள புதிய முறை யையும் அறிமுகபபடுத்துகின்றார். 'குறைத்தலும (சுருக்குதலும்) மாற்று தலுமாக' உள்ள இந்த ஆய்வுமுறை 'பெரிதும வாக்கிய அமைப்பு இலக் கணம் ஆகியவற்றைப் பொறுத்தது'. இந்த முறை கதைகளை மேலும் மேலும் சுருக்கி, சுருக்கப்பட்ட வடிவிலிருந்து கதையின் கருத்துப் போக்கை உரைக் கூற்றுகளாக (Propositions) மாற்றியமைத்து, பின்னர் உரைக் கூற்றுகளின் அடிப்படைக் கருத்துக்களைத் தலைப்புச் சொற்களாக மாற்று கின்றது. இவை கதைக் கூறுகளுக்கான (motif) தலைப்புகளாகப் பயன் படுகின்றன. பேராசிரியர் அறிமுகப்படுத்தும் இந்த முறை கதைகளுக்கு மட்டுமல்லாமல் பாடல்களை ஆராயவும் பயன்படுகிறது. (விளக்கத்திற்குக் காண்க: சுப்பிரமணியம். வி;ஐ., *1971:2-24*).

9. இதே கதை திருமதி காம்ப்பெல் என்பவரால் இந்தியானா பல்கலைக்கழக எம்.ஏ. (ஆங்கிலம்) படிப்புக்காக ஆய்வு செய்யப்பட்டது. (Campbell, Edith Gore, 1931, 'The Star Husband Tale: A Comparative Study by the Historic-Geographic Method', M.A. English, Indiana Uuiversity, 131 pp,)
காம்ப்பெல் சேகரித்து ஆராய்ந்த கதை வடிவங்களோடு ஸ்டித் தாம்சன் வேறு வடிவங்களையும் சேகரித்து ஆராய்கிறார்.

இ. இராபர்ட் (Warren E. Robert) போன்றோர் வரலாற்று நிலவியல் ஆய்வுமுறையில் மிகச் சிறந்த ஆய்வுகளைப் படைத்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

இந்த ஆய்வு முறையில் கதைகளே மிகுதியாக ஆராயப்பட்டுள்ளன. கதைப்பாடல்கள், புதிர்கள், பழமொழிகள் முதலியனவும் இந்த ஆய்வுமுறையில் ஆராயப்பட்டுள்ளன.

இந்த ஆய்வு முறையைப் பொறுத்தவரை 1900-இற்கு முன்னுள்ள காலத்தைப் 'பரிசோதனைக் காலக்கட்டம்' என்றும் 1920-இற்கும் 30-இற்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தை மிகப்பெரிய உற்பத்திக் காலக்கட்டம் என்றும் கூறுவர்.

ஸ்டித் தாம்சன் எழுதிய 'The Folk Tale' (New York: Drydon Press, 1951) என்னும் நூலின் பின்னிணைப்பில் இருபத்தேழு வரலாறறு நிலவியல் ஆய்வுகளின் பட்டியல் தரப்படுகிறது என்றும், வில் எரிச் பெக்கெர்ட் (Will-Erich Peuckert), ஒட்டோலாபர் (Otto Lauffer) ஆகியோரின் ஆய்வில் Volkskuned Quellen und Forschungen Seit, 1930-Berline: A.Francke 1951) இம்முறையில் செய்யப்பட்ட சில சிறு ஆய்வுகளின் பட்டியல் தரப்படுகிறது என்றும் கிரிஸ்டைன் கோல்டுபெர்க் (Christine Goldberg) தம் கட்டுரை ஒன்றில் கூறுகின்றார். மேலும், அவர் அக் கட்டுரையின் (1984:12-16) பின்னிணைப்பில் இம்முறையில் செய்யப்பட்ட இன்றியமையாத ஆய்வுகளின் பட்டியலையும் (அவ்வாய்வுகளில் காணப்படும் சில கண்டுபிடிப்புக்களோடு) தருகின்றார். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் எம்.ஏ., பிஎச்.டி. பட்ட ஆய்வுகள் இந்த ஆய்வுமுறையில் 1968 வரை நிகழ்ந்துள்ளன.[10]

---

10. பின்வரும் இரண்டு ஆய்வுகளைக் குறிப்பிடலாம்:
1. Stekert, Ellen Jane 1961, "'The Farmer's curst wife': A modified Historic-Geographic Study", M.A, Folklore, Indiana University, 136.pp.
2. Long, Eleanor Ruth, 1968, "Child 95 The Maid Freed from the Gallows': A Geographical Historical Study" Ph.D. English. University of California at Los Angeles, 368 pp.

விவரம்: Dundes, Alan. (1976)

1.2. ஆய்வுமுறை

வரலாற்று – நிலவியல் ஆய்வுமுறை பின்வருமாறு அமைந்திருக்கும்.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் நாட்டுப்புறக் கதையின் (அல்லது ஏதேனும் ஒரு நாட்டுப்புற வழக்காற்றின்) பல்வேறு வடிவங்கள் அச்சான நூல்கள், நாட்டுப்புற ஆவணக் காப்பகங்கள் (Folklore archives) முதலியவற்றிலிருந்தும், பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களிடம் வழங்கப்படும் வாய்மொழி வடிவங்களிலிருந்தும் இயன்றவரை மிகுதியான அளவில் சேகரிக்கப்பட்டு ஒன்று திரட்டப்படும். சேகரிக்கப்பட்ட வடிவங்களுள் பழைய வடிவங்கள் கால வரிசைப்படி அடுக்கப்படும்.

புதிய வாய்மொழி வடிவங்கள் அவை வழங்கப்படும் நில அடிப்படையில் வரிசைப்படுத்தப்படும்.

பின்னர், அக் கதை வடிவங்கள் சிறுசிறு கூறுகளாகப் (Motif or traits or essential Components) பிரிக்கப்பட்டு அவற்றுக்கும் அவற்றின் வேறுபாடுகளுக்கும் அடையாளங்கள் (Variations are coded) தரப்படும்.

கூறுகள் ஒவ்வொன்றும் கதைகளில் பயின்றுவரும் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு விழுக்காட்டு அட்டவணை தயாரிக்கப்படும்.

அவற்றின் நிலப்பரவல் (Geographical distribution) பற்றிய நிலப்படம் தயாரிக்கப்படும்.

முன்னதாகத் தொகுக்கப்பட்ட பழைய வடிவங்கள் மதிப்பீடு செய்யப்படும்.

பின்னர் ஒவ்வொரு கூறும் தனித்தனியே ஆராயப்பட்டு அவற்றின் பழைய வடிவம் (arche-type) அல்லது மூல வடிவம (Original form) தீர்மானிக்கப்படும்.

தீர்மானிக்கப்படும் பழைய கூறுகளை அடிப்படையாகக் கொண்டு பழைய அல்லது மூலக்கதை (Original tale) மீட்டுருவாக்கம் செய்யப்படும்.

தொடர்ந்து, அக்கதை முதன்முதலில் எங்குத் தோன்றியது என்பது ஆராயப்படும்.

பின்னர் அக்கதை எந்தெந்த நிலப்பகுதி வழியாக எங்கெங்குப் பரவிச் சென்றிருக்கும் என்று ஆராயப்படும்.

கதை தோன்றிய காலமும் ஆராயப்படும்.

இந்த ஆய்வுமுறைப்படி ஒரு கதைக்கூறு (trait) மூலக் கதையைச் சேர்ந்ததா என்பதைக் கண்டறிவதற்குப் பல்வேறு அடிப்படை விதிமுறைகள் (criteria) உள்ளன. அவை:

அ. ஒரு பழைய வடிவக்கூறு (traits) பல வேறுபட்ட வடிவங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

ஆ. ஒரு பழைய வடிவக்கூறு பல்வேறு இடங்களில பரவி வழங்க வேண்டும்.

இ. ஒரு பழைய வடிவக்கூறு ஓரளவு நிலையான வடிவில் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வரவேண்டும்.

ஈ. பழைய வழக்கங்களை உட்கொண்டிருக்கும் ஒரு கூறு பழமையானது.

உ. கதையின் தொடர்ச்சிக்கு இன்றியமையாத ஒரு கூறு பழமையானது.

ஊ. பல கூறுகட்கிடையே ஒன்றுக்கொன்று தருக்கமுறையில் தொடர்பிருக்குமாயின், ஒன்றையடுத்து ஒன்று அமையும் மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட கூறுகள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாம். (சுப்பிரமணியம், வி. ஐ., 1981:6)

1.3. நிறை குறைகள்

வரலாற்று-நிலவியல் ஆய்வு முறையில் பல்வேறு நிறைகள் உள்ளன. அவற்றுள் சில வருமாறு:

ஒரு நாட்டுப்புற வழக்காற்றின் பல்வேறு வடிவங்களை முறையாக ஆராயாமல் மனம்போன போக்கில் பொதுக் கருத்துக்களைக் கூறுவதை விடுத்து முறையாக ஆராய இந்த ஆய்வுமுறை உதவுகிறது.

ஒரு வழக்காற்றின் பழைய வடிவம், அது தோன்றிய இடம், காலம், பரவிய வழிகள், பெற்ற மாற்றங்கள் போன்ற விவரங்களை ஊகிக்க இந்த ஆய்வு முறை உதவுகிறது. சுருக்கமாகக் கூறினால் ஒரு வழக்காற்றின் வரலாற்றை அறிந்துகொள்ள இந்த ஆய்வுமுறை உதவுகிறது.

இந்த ஆய்வுமுறையால் அறியப்படும் ஒரு வழக்காறு தோன்றிய இடம், பரவிய வழிகள் முதலான உண்மைகள் மக்கள் நாடுகடந்து பரவிய அல்லது இடம் விட்டு இடம் பெயர்ந்த வரலாற்றையும் மக்கள் சமூகங்களிடையே காணப்பட்ட தொடர்புகளையும் அறிந்து கொள்ளத் துணை செய்யும்.

சில கதைகள் மற்றும் கதைப்பாடல்கள் பண்பாட்டெல்லையைக் (Cultural frontiers) கடப்பதைவிட விரைவாக மொழி எல்லையைக் கடக்கும் என்பது வரலாற்று நிலவியல் ஆய்வுகளால் அறியப்பட்ட உண்மையாகும். கதைப் பரவலையும் மாற்றங்களையும் அடிப்படையாகக் கொண்டு பண்பாட்டு எல்லையை வரையறுக்க அல்லது ஊகிக்க இந்த ஆய்வு முறை பயன்படுகிறது. (ஒரு பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வழக்காறு ஒன்று அதற்கு மாறுபாடான பண்பாட்டினையுடைய மக்களிடையே பரவுவது கடினமானது. அப்படியே பரவினாலும் அப்பண்பாட்டுக்கேற்ப சில மாற்றங்கள் பெற்றே பரவும். இந்த ஆய்வுமுறைக்காக வேண்டி ஒரு வழக்காற்றின் பல்வேறு வடிவங்களைச் சேகரித்துக் கால மற்றும் நில அடிப்படையில் வரிசைப்படுத்தி ஒப்பிட்டு நோக்கினால் இந்த உண்மை தெளிவாக விளங்கும்).

வழக்காறுகள் - குறிப்பாகக் கதைகள் - நாகரிகம் மிக்க முன்னேறிய மக்களிடமிருந்து நாகரிகத்தில் குறைந்த மக்களிடம் பரவுகின்றன என்பது இந்த ஆய்வு முறையின் கண்டுபிடிப்பாகும். ஐரோபபியர் 15, 16 நூற்றாண்டுகளில் அமெரிக்காவிலும் ஆப்பிரிக்காவிலும் குடியேறினர் என்றும், அவர்களின் கதைகள் அமெரிக்க இந்தியர்களிடமும்

ஆப்பிரிக்கர்களிடமும் பரவின என்றும், அதே நேரத்தில் இவர்களின் கதைகள் ஐரோப்பிய விவசாயிகளிடம பரவவில்லை என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த ஆய்வு முடிவு பண்பாட்டுப் பரவல் தொடர்பான ஆய்வுகளுக்கு உதவக்கூடும்.

ஒரு குறிப்பிட்ட பண்பாட்டைச் சேர்ந்த தகவலாளியிடமிருந்து ஒரு குறிப்பிட்ட கதையின் வடிவத்தைச் சேகரிக்கும் நாட்டுப்புறவியலாளன் அத்தகவலாளி அக்கதையில் எவ்வாறு மாறுபடுகிறார் என்பதை அறிவதில் ஆர்வமுடையவனாக இருக்கலாம். இது போன்ற உண்மைகளை அறிந்து கொள்வதற்கு வரலாற்று - நிலவியல் ஆய்வுமுறை பெரிதும் உதவியாக இருக்கிறது.

நாட்டுப்புறக் கதைகளுக்கு உலக அளவில் ஒரு மிகச் சிறந்த கருவிநூலாக விளங்கும் ஆர்ணி-தாம்சனின் கதைக் கூறு அடைவு (Motif-Index) நூல் உருவானதற்கு இந்த ஆய்வு முறையே காரணமாக இருந்திருக்கிறது.

1920-இற்கும் '50-இற்கும் இடைப்பட்ட காலக் கட்டங்களில் விளாடிமிர் பிராப் (Vladimir Propp), ஆண்ரெஜேவ் (N. P. Andrejev) (இவர் மதத் தொடர்பான புராணங்களை வரலாற்று நிலவியல் ஆய்வு முறையில் ஆராய்ந்தவர்), நிகிபோரோவ் (A. I. Niki forov), பெட்ரோவ் (V. Petrov) முதலிய ருஷ்ய ஆய்வாளர்கள் வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை தொடர்பாக மிகப் பெரிய அளவில் கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தார்கள். இந்த ஆய்வு முறையைக் கைவிடுவது தொடர்பான கட்டுரை ஒன்றில் ருஷ்ய ஆய்வாளர்களின் திறனாய்வுகளை மெல்வில் ஜேக்கப்ஸ் (Melville Jacobs) மற்றும் ஹேடா ஜாசன் (Heda Jason) ஆகியோர் தொகுத்து வரிசைப்படுத்தியுள்ளனர். அவர்களின் குற்றச்சாட்டுகளுள் சில ஆற்றலுள்ளவை. ஆனாலுங்கூட, அவை வரலாற்று-நிலவியல் ஆய்வுமுறையின் மதிப்பைப் பெரிய அளவில் குறைத்து விடவில்லை என்றும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது அவர்களின் ஆட்சேபங்களுள் பெரும்பான்மையானவை ஆய்வு நுணுக்கங்கள் (Techniques) பற்றியவையாகவும் சிறுபான்மையே ஆய்வுமுறை

(Method) பற்றியனவாகவும் உள்ளன என்றும் குறிப்பிடும் கிரிஸ்டைன் கோல்டு பெர்க் (1984:7-9), மெல்வில் முதலியோர் தொகுத்துள்ள பத்து ஆட்சேபங்களைக் கூறி அவற்றுக்குரிய பதில்களையும் தந்துள்ளார். அவை வரலாற்று-நிலவியல் ஆய்வு முறை பற்றிய குறை நிறைகளை அறிந்துகொள்ளப் பெரிதும் உதவுகின்றன. ஆட்சேபங்களும் பதில்களும் வருமாறு:

"1. கண்டுபிடிக்கப்பட்ட ஆய்வுமூலங்கள் பெரும்பாலும் பழைய உலகத் தேவதைக் கதைகளைப் (Old World fairy tales) பற்றியவையே.

உண்மைதான். இருந்தாலும் பாடல்கள் மற்றும் புராணங்கள் (Legends) பற்றியும் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

2. கிளைக்கதைகள் (episodes) பலவகைப்பட்ட கதைகளில் (Tales of different types) ஒன்றுக்கொன்று அடிக்கடி வந்து போகின்றன.

வரலாற்று-நிலவியல் ஆய்வுமுறையானது எந்த அளவு இது நிகழ்கிறது என்பதையும் எந்தக் கிளைக்கதை அவ்வாறு செயல்படுகிறது என்பதையும் தெரிவிக்கிறது.

3. துணுக்குகள் மற்றும் வழக்கத்திற்கு மாறான கதைகள் தள்ளப்படக் கூடாதவை. வெறும் கூடு போன்ற சுருக்கம் முழுமையற்ற கதைகளையே காட்டுகின்றது.

நல்ல அறிவுரை. ஆனால் சுருக்கங்களை ஒப்பிடுவது வாயிலாக (கதைகளின்) அமைப்புகள் வெளிப்படுத்தப்படலாம்.

4. ஆர்னி-தாம்சன் முறை அடைவு (Index) ருஷ்யக்கதைகளுக்குச் சரியாகப் பொருந்தவில்லை.

இதுவும் உண்மைதான். வடமேற்கு ஐரோப்பாவிற்கு வெளியிலுள்ள பிற பகுதிகளுக்கும் இது ஒத்துவருவதில்லை. ஒரு வேளை ஆர்னி - தாம்சன் அடைவால் தூண்டப்பட்டு டர்க்கிஷ் கதைகளுக்கு உருவாக்கப்பட்ட அடைவு போல் தனி அடைவு தேவைப்படலாம். அல்லது ஆர்னி-தாம்சன் எண்களோடு வேறு கதைகளையும் சேர்க்கலாம்.

இந்த (கதை) வகைகள் (types) மேலும் செய்யப்படும் ஆய்வுகளினால் மாறுபடும்.

அப்படியென்றால் அடைவு (index) புதுப்பிக்கப்படவும், மாற்று மேற்கோள்கள் (Cross reference) சேர்க்கப்படவும் வேண்டும். 1961 ஆம் ஆண்டு தாம்சனால் திருத்தியமைக்கப்பட்ட அடைவு இதில் சிலவற்றைச் செய்கிறது. டேகின் (Degh) வரலாற்று நிலவியல் ஆய்வு எவ்வாறு ஒரு கதை அமைப்பின் விளக்கத்தை அபிவிருத்தி செய்யலாம் என்பதைக் காட்டுகிறது. (Linda Degh, 'The Tree that Reached up to the Sky', in Studies in East European Folk Narrative: ed. Linda Degh, American Folklore Society and Indiana University Folklore Monograph Series, 1978, pp. 263-316).

5. ஒரு கதையானது ஒரு மூலத்திலிருந்து தோன்றியது (Monogenesis) என்று அனுமானிக்கப்படுகிறது. ஆனால் சில நேரங்களில் ஒரு கதைக்குப் பல மூலங்கள் (polygenesis) இருக்கும் சாத்தியக் கூறு உள்ளது.

ஒத்த கதைகளைச் சேகரித்து அதை ஒப்பிட்டு நோக்கும் ஆய்வானது மட்டுமே பல மூலங்கள் உள்ளனவா என்ற புத்திசாலித்தனமான முடிவுக்கு வர உதவியாக இருக்கும். இதைப்பற்றிய அதிக விளக்கம் பின்னால் தரப்படும்.

6. வேண்டுமென்றே மாற்றி எழுதுவதை விட (reworking) மறதி என்பது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது அன்று.

மாற்றி எழுதுதற்கு முன்பும் பின்புமுள்ள கதை வடிவத்தை நிச்சயிக்க வரலாற்று-நிலவியல் ஆய்வு உதவுகிறது. எனவே, கதையின்மீது மாற்றி எழுதுதலின் வழிமுறையையும் அதன் விளைவுகளையும் (process and effects) இது அடையாளம் காட்டுகிறது. போட்கரின் ஆய்வு இதில் கவனம் செலுத்துகிறது. (Laurits Bodker, 'The Brave Tailor in Danish Tradition' in Studies in Folklore in Honour of ... Stith Thompson, ed. W. Edson Richmond, Bloomington: Indiana University Press, 1959, pp. 1-23)

7. புலப்பெயர்வு (migration) என்பதானது ஒரு தேர்ந்தெடுத்த மற்றும் படைப்பாக்க வழிமுறையாகும் (Selective and creative process).

வரலாற்று-நிலவியல் ஆய்வுகள் புலப்பெயர்வின்போது கதை எவ்வாறு செயல்படுகிறது (behaves) என்பதனைக் காட்டுகின்றன. (கதையில்) செய்துகொள்ளப்பட்ட தேர்ந்தெடுத்தலையும் கையாளப்பட்ட புதிய ஆக்கங்களையும் அவை விவரிக்கின்றன.மற்றும் ஒரு புறக்கணிக்கப்பட்ட கதையைக் கூட அண்மையிலுள்ள பண்பாட்டிலிருந்து கண்டு கொள்ளலாம்.

8. பழைய வடிவங்களைச் (archetypes) சோதித்து அறிய முடியாது; அவை பெரும்பாலும் புள்ளிவிவரங்களையும் உள்ளுணர்வுகளையும் அடிப்படையாகக் கொண்டவை.

இந்தப் பிரச்சினையானது ஒரு குறிப்பிட்ட கதை எவ்வளவு தூரம் வேறுபடுகிறது என்பதனைப் பொறுத்தது. கதையின் மாற்று வடிவங்களை (Variants) முறையாக அமைப்பதானது வேறுபாடு (Variation) செயல்கூடு நிலையையும் அதன் எல்லைகளையும் காட்டுகிறது.

9. ஒரு கதையின் பல வடிவங்கள் (a tale monograph)சேகரிக்கப்பட்ட மூலத்தின் சாரமே (digest) தவிர அதன் விளக்கமல்ல. இதன் முடிவு ஒரு வடிவமைப்பே(typology)தவிர வரலாறு அல்ல.

வரலாற்று-நிலவியல் ஆய்வுக்குப் பொருந்தி வராத குறைந்த மாற்று வடிவங்களைக் கொண்ட கதைகளுக்கு அல்லது மிக அதிக மாற்றங்கள் (great variations) கொண்ட கதைகட்கு மட்டுமே இப்பிரச்சினை பொருந்தும்.அத்தகைய கதைகளின் உள்ளுறுப்புகளை (Components) ஆராயத் தனி ஆய்வுகள் தேவைப்படுகின்றன.வடிவமைப்பும்கூட ஒரு சில பகுதிகளில் ஏற்படும் கதை மாற்றங்களைச் சுருக்குவதற்குப் பயன்படும்.

10. இத்தகைய ஆய்வுகளின் செயற்பரப்பு (scope) மிகவும் குறுகியவை. கதையானது அது வழங்கப்படும் சமூகச் சூழலிலிருந்தும் அழகியல் வடிவத்திலிருந்தும் தனித்து விடப்படுகிறது.

பலவிடங்களில் பல காலங்களில் கூறப்பட்டுவரும் ஒரு கதை

யான்து ஓரளவு சமூகச் சூழலை மீறுவதுண்டு. ஓர் ஆய்வானது ஒரு கதை குறிப்பிட்ட பண்பாட்டிற்கு மட்டும் உரியதா என்பதையும் தெரியப்படுத்தும். அதன் அழகியல் வடிவம் பற்றிய புத்தாய்வு எந்த ஒரு சூழ்நிலை ஆய்விலும் ஒரு பகுதியாகும்.

பொதுவாக வரலாற்று-நிலவியல் ஆய்வுகளின் வாயிலாகக் குறிப்பிடத்தக்க கொள்கை முடிவுகள் ஏதும் இல்லை.

இக்கூற்றோ இதன் செப்பமிடப்படாத அமெரிக்கக் கூற்றோ உண்மையானதுதான். 'பின்னிஷ்' ஆய்வு முறையானது நாட்டுப்புறக்கதைகள் இடம்பெயரும் தன்மையுடையன என்ற அனுமானத்தின் (assumption) அடிப்படையில் ஏற்பட்டது. எனவே, இம்முறையில் செய்யப்பட்ட அனேக முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வுகளிலெல்லாம் எவ்விதப் புது விஷயங்களையும் கொடுக்காமல் மறுபடியும் கதைகள் பயணம் செய்கின்றன என்ற கருத்தையே நமக்கு வலியுறுத்துகின்றன என்பதில் ஆச்சரியம் இல்லை. மிகவும் சாதாரணமாகவும் கற்பனை ஏதுமில்லாமலும் செய்யப்படுகின்ற ஆய்வுகள் கூடக் கதையின் பல்வேறு வடிவங்களையும் அவை காணப்பட்ட இடங்களையும் தெளிவாக்குகின்றன. அவை (அந்த ஆய்வுகள்) இலக்கிய வடிவங்கள் வாய்மொழி வடிவங்களோடு ஒத்துப் போகின்றனவா என்பதைக் காட்டுகின்றன. மேலும், ஒரு கதையானது ஒரு குறிப்பிட்ட எல்லையில் வழங்குகிறதா அல்லது விரிவாகப் பல பகுதிகளுக்குச் சென்றுள்ளதா என்பதனையும் தெரிவிக்கின்றன. நாம் அறிந்தவரை இவ்வாய்வுகள் ஐரோப்பிய நாட்டுப்புறக் கதைகளின் இயல்புகள் பற்றியும் அவை எப்படி நிலையாக உள்ளன; எப்படி, எப்பொழுது மாறுபடுகின்றன; பல்வேறு சூழல்களில் அவற்றின் கூறுகளின் பொருள் என்ன என்றும் கூறுகின்றன. கதை எப்பொழுது எங்கு உருவானது என்பது போன்ற பிரச்சினைகளைத் தவிர ஆய்வாளர்கள் மற்றவற்றில் ஈடுபாடு கொண்டு கதை வடிவங்களில் (monographs) ஆர்வம் செலுத்தினால் மிகுதியான வரம்புக்குட்பட்ட மரபுவழி வரலாற்று நிலவியல் ஆய்வுக்கு (more limited traditional

historic-geographic approach) நிறைவு (supplement) செய்வதாக அமையும்."

வரலாற்று-நிலவியல் ஆய்வுமுறை குறித்த பத்து ஆட்சேபங்களுக்கும் கூறப்பட்டுள்ள பதில்கள் அந்த ஆய்வுமுறை பற்றிய குறைநிறைகளை அறிந்துகொள்ள உதவுகின்றன என்பதில் ஐயமில்லை. இவற்றைத் தவிர இந்த ஆய்வுமுறை பற்றிய வேறு சில விமர்சனங்களையும் காணலாம்.

நார்வே நாட்டினரான கிரிஸ்டியான்சன் (Christiansen), டென்மார்க் நாட்டினரான போட்கர் (Bodker) முதலியோர் இந்த ஆய்வு முறையின் கடினமான் மற்றும் எந்திரமயமான தன்மையை (rigidity and mechanical nature) எதிர்க்கின்றனர். வரலாற்று-நிலவியல் ஆய்வுமுறையானது கதை ஆய்வுகளை வெறும் புள்ளி விவரங்களாகவும் குறியீடுகளாகவும் அட்டவணைகளாகவும் நிலப்படங்களாகவும் மாற்றி விடுகின்றன என்றும் முருகியல் மற்றும் நடைநயக் கூறுகளைப் புறக்கணித்து விடுகின்றன என்றும் கிரிஸ்டியான்சன் குறிப்பிடுகின்றார். வரலாற்று-நிலவியல் ஆய்வுமுறைப்படி ஆய்வாளன் சில வேளைகளில் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கதை வடிவங்களை ஆராய வேண்டியுள்ளது. அப்போது அவன் அனைத்துக் கதை வடிவங்களையும் நினைவில் கொள்வது இயலாததாகிறது. எனவே, கதைச்சுருக்கங்கள், குறியீடுகள் போன்றவற்றை அவன் அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.[11] முருகியல் நடைநயக்கூறுகளைத் தனியாக ஆராயலாம். ஒரே ஆய்வு வழக்காற்றின் அனைத்துக் கூறுகளையும் ஆராய வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு.

---

11. அடையாளங்கள் (Code) தருவது பற்றிய பின்வரும் கருத்து இங்கு எண்ணத்தக்கது: 'இந்த ஆய்வுமுறை தேவையில்லாமல் சிக்கலை ஏற்படுத்துவதைப்போல் தோற்றமளித்தாலும் நாட்டுப்புறவியல் ஆய்வாளர் ஆயிரக்கணக்கான கதை வடிவங்களை ஒப்பிட்டு ஆராய முயல்கையில் அனைத்துக் கதை வடிவங்களையும் படித்து நினைவில் வைத்துக் கொள்வது இயலாது என்பதை உணர வேண்டும். அதற்கு இந்த முறை பயன்படும்' (Dundes, Alan, 1965:415).

ஒரு பண்பாட்டு வரலாற்றில் நாட்டுப்புற வழக்காறுகளைப் பதிவு செய்தல், அச்சிடுதல் போன்ற பணிகளின் வரலாறு நூறு ஆண்டுகளாக இருப்பின் வரலாற்று-நிலவியல் ஆய்வுமுறைப் படி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் வழக்காற்றின பழைய அல்லது மூல வடிவம் அதன் வரலாற்றிலும் வடிவத்திலும் நூறு ஆண்டுகட்கு முற்பட்டதாக இருக்க முடியாது; உண்மையில் அது நூறுஆண்டுகட்கு முற்பட்டதானாலுங்கூட; எனவே, தர்க்கரீதியாக, கண்டுபிடிக்கப்படும் 'பழைய வடிவம்' ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் வழக்காற்றின் முதல் வடிவம் என்று கூறவியலாது என்பது இந்த ஆய்வு முறை குறித்த ஒரு குற்றச்சாட்டாகும். இது உண்மைதான். உலகம் முழுதும் காணப்படும் 'இரக்கமுள்ள மற்றும் இரக்கமற்ற பெண்கள் கதை'யின் (The Tale of the kind and unkind Girls) 900 வடிவங்களை வரலாற்று-நிலவியல் ஆய்வு முறையில் ஆராய்ந்த வாரன் இ. இராபர்ட் இது போன்ற குற்றச்சாட்டுகளை மனத்தில் கொண்டு 'பழைய வடிவம்' (arche type) என்பதற்கான கருத்தினை (concept) மாற்றுவதை இங்குச் சுட்டிக் காட்டலாம். இவர், கதையின் 'பழைய வடிவம்' என்பது 'மூல வடிவம்' (Original form) அன்று என்றும் 'இன்று ஒரு குறிப்பிட்ட பகுதியில் காணப்படும் வடிவங்களுள் செல்வாக்கு வாய்ந்த மிக இன்றியமையாத வடிவம்' என்றும் குறிப்பிடுகின்றார். இந்தப் புதிய விளக்கமானது மேற் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பதிலாக அமைகிறது.

1.4. எதிர்காலத்தில் இந்த ஆய்வுமுறை

வரலாற்று-நிலவியல் ஆய்வுமுறையில் உள்ள குறைகளை எடுத்துக்காட்டி அம்முறையைக் கைவிட வேண்டும் என்று சில ஆய்வாளர்கள் கூறும் அதே நேரத்தில் அந்த ஆய்வு முறையின் ஒரு பகுதியை எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றோ, அந்த ஆய்வு முறையைச் சில திருத்தங்களுடன் பயன்படுத்தலாம் என்றோ சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மஸ்ருல் இஸ்லாம் தன்னுடைய ஆய்வு ஒன்றில் (Islam, Mazharul, 1985:66-67), நாட்டுப்புறவியலில் விளக்க ஆய்வு

(Synchronic study) வளர்ந்ததால் வரலாற்றாய்வினை அடிப்படையாகக் கொண்ட வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை அதன் மதிப்பினை இழந்தது என்றும் ஆனாலுங்கூட அந்த ஆய்வு முறை அறிமுகப்படுத்திய ஒப்பீட்டு ஆய்வுமுறை தொடர்ந்து நிலவும் என்றும் கூறுகின்றார். ஒரு நாட்டுப்புற வழக்காற்றின் ஒத்த வடிவங்கள் ஒருமொழி மற்றும் பண்பாட்டிலோ, ஒரு நாட்டின் பிற பகுதிகளிலோ,உலகம் முழுவதுமோ காணப்பட்டால் அவற்றின் பழைய வடிவத்தைக் காணாவிட்டாலும் அவற்றை ஒப்பிட்டு ஆராயலாம் என்று அவர் குறிப்பிடுகின்றார். மேலும், ஒரு வழக்காற்றின் வரலாற்று-நிலவியல் பரவல் (அது ஓரளவு தவறுடையதானாலும்) தவிர, நம்முடைய கண்டுபிடிப்பு மானிடவியல், பண்பாடு, சமூகம் அல்லது இலக்கியம் சார்ந்த தாக இருக்கவேண்டும் என்றும் இதனை மனத்தில் கொண்டு நாம் இந்திய நாட்டுப்புற வழக்காறுகளை அணுகினால் வரலாற்று-நிலவியல்ஆய்வுமுறை இந்தியச் சூழலுக்கு அப்படியே பொருந்தி வரவில்லை; ஆனாலும் அந்த ஆய்வு முறையில் கவனம் செலுத்தப்படும் 'ஒப்பீட்டாய்வு' இந்தியச் சூழலுக்கு முற்றிலும் பொருந்தி வருகிறது என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஆலன் டண்டிஸ் (Dundes, Alan, 1965:415-16) வரலாற்று-நிலவியல் ஆய்வுமுறை பற்றிக் குறிப்பிடும்போது பின்வரும் கருத்துக்களைக் கூறுகின்றார்.

> "பெரும்பான்மையான வரலாற்று- நிலவியல் ஆய்வு முடிவுகள் சில இன்றியமையாத வினாக்களுக்கு விடையளிக்கவில்லை. மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட பழைய வடிவம் மதிப்பு வாய்ந்தது என அனுமானித்தாலும், முதலில் (அவ் வடிவம்) ஓரிடத்தில் ஏன் தோன்றியது? ஏன் துணை வகைகள் (sub-types) வளர்ச்சியடைந்தன? ஏன் அவை தோன்றிய இடத்திலேயே நுட்பமாக வளர்ச்சியடைந்தன? கதையின் பன்மடங்கான வடிவங்கள் (multiple form) ஏன் தொடர்ந்து சொல்லப்பட்டு வருகின்றன? (அல்லது சொல்லப்படவில்லை?) இதுபோன்ற வினாக்களுக்கு விடைகாண ஒரு கூட்டு அணுகுமுறை(Synthesis of approaches) தேவைப்படுகிறது. மொத்தத்தில் வரலாற்றுத் தோற்றங்கள், பரவிய

வழிகள் முதலியன ஆய்வின் இன்றியமையாத பகுதியே. அதே நேரத்தில் உளவியல் தோற்றமும் (Psychological origin) அதன் செயல்பாடும் ஆய்வின் ஒரு பகுதியேயாகும். இத்தகைய கூட்டு அணுகு முறைகளே நாட்டுப்புற வழக்காறுகளின் தன்மையை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு நம்மை இட்டுச் செல்லமுடியும்."

மேற்காட்டப்பட்ட அறிஞர்களின் கருத்துக்கள் வரலாற்று-நிலவியல் ஆய்வு முறையை முற்றிலும் புறக்கணித்துவிடவில்லை என்பதை உணரமுடிகிறது. அந்த ஆய்வு முறையில் முக்கியத்துவம் அளிக்கப்படும் 'ஒப்பீட்டுமுறை' யைப் புறக்கணிக்க இயலாது என்பதையும் அந்த ஆய்வுமுறையோடு மேலும் செய்யப்பட வேண்டிய பணிகள் உள்ளன என்பதையும் அக்கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன. உண்மையில் ஓரிடத்தில் காணப்படும் வழக்காறு ஒன்றின் ஒத்த வடிவங்கள் பல இடங்களில் காணப்படும்போது அவை அனைத்தையும் சேகரித்து ஆய்வதற்கு வேறு சரியான ஆய்வுமுறை உருவாகும்வரை இந்த ஆய்வு முறை (சில குறைபாடுகள் காணப்பட்டாலும்) பயனுடைய ஆய்வுமுறையாகவே விளங்கும். கிரிஸ்டைன் கோல்டுபெர்க் (1984:12) கூறியுள்ள பின்வரும் கருத்துக்களோடு இப்பகுதியை முடிக்கலாம்:

"நாம் நாட்டுப்புறக் கதைகளைப் புரிந்துகொள்வதற்கு வரலாற்று-நிலவியல் ஆய்வு முறை எதிர்பார்த்ததற்கும் அதிகமாகப் பங்களித்துள்ளது; அதே நேரத்தில் நாட்டுப்புறக் கதை ஒரு வகை (genre) என்ற நிலையில் அதன் தோற்றம மற்றும் வரலாற்றை நிருணயம் செய்யும் அதன் குறிக்கோளில் அது விரைவாக வீழ்ச்சியடைந்துள்ளது. அமெரிக்காவில் இதற்குத் தற்போது ஏற்பட்டுள்ள ஆதரவின்மையானது இந்த ஆய்வுமுறையைச் சூரியத் தொன்மவியல் (solar mythology) மற்றும் நாட்டுப்புற வழக்காறுகளில் கனவு பற்றிய கருத்து விளக்கங்கள் போன்றவற்றுடன் வரலாறு ஆர்வமுள்ள துறைகளுக்கு அனுப்பி விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது. நமது துறை அத்தகைய இழப்பை ஏற்க இயலாது. சில நேரங்களில் மரபுவழி ஆய்வு

களுக்கு (traditional subjects) மதிப்பளித்து நாம் நம் நிலையைக் காத்துக் கொள்ள வேண்டியுள்ளது. நமது அறிவுத்துறைப் பாரம்பரியத்திற்குப் புத்துயிர் அளித்தல் என்பதைவிட முன்னேறுவதற்கு வேறு சிறந்த வழிமுறை என்ன இருக்கிறது? நாம் நாட்டுப்புறக் கதைகள் பற்றி அறிந்தவற்றைப் புறக்கணிப்பதைவிட முன்னரே உருவாக்கப்பட்டுள்ள அடித்தளத்தின்மேல் (நாம் அறிந்தவற்றை) வளர்த்துச் செல்வது முறையாகும். வரலாற்று–நிலவியல் ஆய்வு வழக்கொழிந்து பழம்பொருளாகி விடாமல் இன்றும் தப்பி இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் அது ஒரு கொள்கையாக இல்லாமல் ஓர் ஆய்வுமுறையாக இருப்பதுதான். மக்களின் ஆர்வங்கள் மாறுபடும்போது அந்த ஆய்வுமுறை காலத்துக்கொவ்வாத ஒரு முறையாக மாறிவிடத் தேவையில்லை. அதனைத் திருத்தியும் புதுக்கியும் அமைப்பதற்கு வாய்ப்பு உண்டு. இவ்வாறாக, விரிந்த தரவுகளின் (data) அடிப்படையில் நாட்டுப்புறக் கதையின் ஆய்வைப் பேணி வளர்ப்பதற்கும் சவால்மிக்க கொள்கையளவிலான தேடலை மேற்கொள்வதற்கும் பல சாத்தியக் கூறுகள் உள்ளன.''

2.0. ஆய்வுகள் - அறிமுகம்

2.0.1 இந்தியாவில் வரலாற்று-நிலவியல் ஆய்வு முறையை முழுமையாகப் பயன்படுத்தி ஆய்வுகள் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

ஒரு கதையின் பல வடிவங்களை ஒப்பிட்டு, பழைய வடிவம் முதலியனவற்றை ஆராய்ந்த வகையில் எமனோவின் (Emenaeu M. B., 1967: 383-412) 'The Faithful Dog as Security for a Dept' என்ற கதை ஆய்வைக் குறிப்பிடலாம். தமிழ் உள்ளிட்ட பல இந்திய மொழிகளில் காணப்படும் கதை வடிவங்களை இவர் ஆராய்கிறார். இந்த முறையில் இந்தியாவில் நிகழ்ந்த முதல் ஆய்வாக இதனைக் கூறலாம்.

வரலாற்று-நிலவியல் ஆய்வுமுறையினை ஓரளவு பின்பற்றித் (partially applied) தாம் ஓர் ஆய்வு செய்திருப்பதாகவும் அது தம் வங்காள நூலொன்றில் இடம்பெற்றிருப்பதாகவும் மஸ்ருல்

இஸ்லாம் தன்னுடைய நூலில் குறிப்பிடுகிறார் (Islam, Mazharul, 1985:77).

தமிழைப் பொறுத்தவரை (வரலாற்று-நிலவியல் ஆய்வோடு ஒத்த) ஓரிரண்டு ஒப்பீட்டு ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் பேராசிரியர் டாக்டர் வி.ஐ. சுப்பிரமணியம் (1969:87-89) அவர்களின் 'பஞ்சதந்திரமும் சிலப்பதிகாரமும்' என்னும் கட்டுரை குறிப்பிடத்தக்கது. 'பலமொழிகளில் வழங்கிவரும் கீரிக் கதையின் செய்திகளை ஒத்து நோக்கி எந்தக்கூறு முன்னது, எந்தக்கூறு பின்னது' என்று தெளிவதை முதல் நோக்கமாகவும் பஞ்சதந்திர ஸ்லோகம் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டிருப் பதால் அதன்காலம் பஞ்சதந்திரத்தின் பின்தான்' என்று எஸ். வையாபுரிப்பிள்ளை வாதிப்பது தக்கதா என்பதை ஆராய் வதை இரண்டாவது நோக்கமாகவும் கொண்டது இக் கட்டுரை.

தே. லூர்து (1976:89-101) அவர்கள் 'வாய்மொழி இலக் கியத்தின் இயல்புகளும் சில சிக்கல்களும்' என்னும் கட்டுரை யில் 'ஆக்காட்டிப்பறவை' பற்றிய பாடல் வடிவங்களை ஒப்பிட்டு ஆய்வதையும் இங்குக் குறிப்பிடலாம்.

2.0.2 இங்கு, வரலாற்று-நிலவியல் ஆய்வு முறையைப் பயன் படுத்தி இரண்டு ஆய்வுகள் நிகழ்த்தப்படுகின்றன. அவை வருமாறு:

1. நிட்டூரி கதை.

2. சின்னண்ணன் சின்னச்சாமி கதைப்பாடல்/கதை.

(கதைத் தலைப்புகளின் விளக்கங்கள் அந்தந்த ஆய்வுகளின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ளன) இரண்டு ஆய்வுகளும் பின் னால் இணைக்கப்பட்டுள்ளனவாதலால் அவற்றைப் பற்றிய விரிவான அறிமுகம் தேவையில்லை. ஆயினும் இரண்டு ஆய்வு களிலும் பின்பற்றப்பட்ட பொதுவான சில செய்திகள் மற்றும் முறைகளை மட்டும் இங்கே குறிப்பிடுவது அவசியம்:

1) வரலாற்று நிலவியல் ஆய்வுக்குப் பல்வேறு காலக்கட்டங் களில் சேகரிக்கப்பட்ட ஒரு கதையின் பல்வேறு வடிவங்கள்

(அல்லது ஆய்வுக்குட்படுத்தப்படும் ஏதேனும் ஒரு வழக்காற்றின் வடிவங்கள்) தேவை. அப்போதுதான் அக்கதையின் வரலாற்றை அனுமானிக்க இயலும். இந்த முறையில் செய்யப்பட்ட மேற்கத்திய ஆய்வுகள் பல்வேறு காலக்கட்டங்களில் சேகரிக்கப்பட்ட வழக்காறுகளையே ஆராய்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை பல்வேறு காலக்கட்டங்களில் சேகரிக்கப்பட்ட ஒரு கதையின் பல வடிவங்கள் கிடைப்பது எளிதன்று. எனவே, இங்குச் சமீபத்தில் சேகரிக்கப்பட்ட கதை மற்றும் கதைப்பாடல் வடிவங்களே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. கதை கூறியோரின் அல்லது பாடல் பாடியோரின் வயது, அவர்கள் அதனைக் கற்றுக்கொண்ட காலம் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டு வழக்காறுகளின் வரலாறு கூறப்பட்டது. இது முழுமையாகாது ஆயினும் தவிர்க்கவியலாதது.

2) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் வாய்மொழிக்கதை பல்வேறு காலக்கட்டங்களில் எழுத்திலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டிருக்குமானால் அதன் வரலாற்றை அறிந்துகொள்ள அந்த எழுத்திலக்கியக் கதைகள் பயன்படும். அதே நேரத்தில் ஆய்வாளன் எழுத்திலககியச் சான்றுகளால் வேறு பல தொல்லைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று கருதப்படுகிறது. எனவே, ஸ்டித் தாம்சன் முற்றிலும் வாய்மொழியாகவே வழங்கப்பட்ட - இலக்கியத்தில் இடம்பெறாத - The Star Husband Tale-ஐத் தம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டார். இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கதை மற்றும் கதைப்பாடல் வடிவங்கள் மக்களிடம் வாய்மொழியாக வழங்கப்படுபவை; ஏட்டிலக்கியங்கள் எதிலும் எடுத்தாளப்படாதவை.

3) இந்த ஆய்வுகளில் கதைக்கூறுகளைப் பிரித்த முறை பற்றி இங்குக் குறிப்பிடுவது அவசியம்.

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கதை வடிவங்களைத் தனித்தனியே எடுத்துக் கொண்டு அவற்றுள் இடம்பெறும் நிகழ்ச்சிகள் சுருக்கப்பட்டுத் தனித்தனியே வரிசைப்படுத்தப் பட்டன. பின்னர் அனைத்து வடிவங்களிலும் காணப்

படும் ஒத்த நிகழ்ச்சிகள் தனித்தனியே வரிசைப்படுத்தப் பட்டு அவை பொருத்தமான தலைப்புகளின் கீழ் வைக்கப் பட்டன. (ஒரு தலைப்பின் கீழ் வைக்கப்பட்ட நிகழ்ச்சி களில் காணப்படும் சிறுசிறு மாறுபாடுகளைக் கவனத்தில் கொண்டு அவற்றுக்குத் துணைத் தலைப்புகள் தரப் பட்டன). பின்னர் கதைவடிவங்களின் கதைப் போக்கினைக் கருத்தில் கொண்டு தலைப்புகள் வரிசைப்படுத்தப்பட்டன. இவ்வாறு வரிசைப்படுத்தப்பட்ட தலைப்புகள் ஒவ்வொன் றும் ஒவ்வொரு கதைக் கூறாகக் (trait) கருதப்பட்டு அவற்றுக்குத் தனித்தனி அடையாளங்கள் தரப்பட்டன. (இதுபற்றி நிட்டூரி கதை ஆய்வில் கூறப்படுகிறது). துணைத் தலைப்புகள் துணைக் கூறுகளாகக் (sub-traits) கருதப்பட்டன. துணைத்தலைப்புகள், நிகழ்ச்சிகள் அனைத் திற்கும் தனித்தனி அடையாளங்கள் நல்கப்பட்டன. (இவ் வாறு தயாரிக்கப்பட்ட கதைக் கூறுகளின் பட்டியல்கள் அந்தந்த ஆய்வுகளின் பின்னே இணைக்கப்பட்டுள்ளன.) மூலக்கதைக்கூறுகள் எவை என்பது அக்கூறுகள் கதைகளில் பயின்றுவரும் விழுக்காட்டு அடிப்படையில் முடிவு செய்யப் பட்டன.

'சின்னண்ணன்-சின்னச்சாமி' ஆய்வைப் பொறுத்தவரை முதலில் கதைப் பாடல்களை மட்டும் ஆராய்வதே நோக்க மாக இருந்தது. ஆனால், இறுக்கமாகக் கதைகூறும் அமைப்பு இல்லாமலும் பாடல் தன்மை குறைந்தும் காணப்பட்டதால் கதைப் பாடல்களை ஆராய்வது மிகுந்த சிரமத்தை ஏற் படுத்தியது. எனவே, அந்த எண்ணம் கைவிடப்பட்டது.[12] பின்னர் கதைப்பாடல்களின் கதைகளை ஆராய முடிவு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து 'சின்னண்ணன்

---

12. மேலை நாடுகளில் வரலாற்று-நிலவியல் ஆய்வுமுறையைப் பயன்படுத்தி சில கதைப் பாடல்கள் ஆராயப்பட்டுள்ளன. ஆனாலும் 'இறுக்கமாகக் கதைகூறும் அமைப்புடையதும் திரும்பத் திரும்ப வரும் பத்தியமைப்புடை யதுமான' (Tight narrative structure and stanzas of incremental repetition) கதைப்பாடல்கள் மட்டுமே இவ்வகை ஆய்வுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன எனத் தெரிகிறது. (Dorson, Richard M., 1963:95).

சின்னச்சாமி' கதைப் பாடல்கள் மட்டுமல்லாமல் உரை நடையில் கூறப்பட்ட அக் கதையின் வடிவங்களும் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. கதைப்பாடல்களைப் பொறுத்தவரை அவை முதலில் உரை நடைப்படுத்தப்பட்டன. பின்னர் அவை ஒவ்வொன்றிலும் இடம் பெறும் நிகழ்ச்சிகள் தனித்தனியே வரிசைப்படுத்தப் பட்டு முன்னால் கூறியவாறே கதைக் கூறுகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட கதைக்கூறுகளின் பட்டியல்கள், கதையில் இடம்பெறும் எந்தவொரு சிறு நிகழ்ச்சியையும் ஆய்வில் மேற்கோளாக எடுத்துக்காட்ட உதவியாக உள் ளன. அதே நேரத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் கதை வடிவங்களின் எண்ணிக்கை நூறு, ஆயிரமாகப் பெருகும்போது இந்த முறையில் கதைக் கூறுகளின் பட்டி யல் தயாரிப்பது சிரமமாக இருக்கும் என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளது.

4. இந்த ஆய்வுமுறை குறித்துக் கூறப்படும் சில குறைபாடுகள் (குறிப்பாக ஆலன் டண்டிஸ் கூறுவன) மனத்திற் கொள்ளப் பட்டு அக்குறைகள் நீங்கும் வண்ணம் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அறிமுகத்தின் முடிவுரையாகச் சில கருத்துக்கள் வருமாறு:

இந்த ஆய்வுமுறையைப் பொறுத்தவரை ஆய்வுக்கு எடுத் துக் கொள்ளப்படும் கதை முழுமையாகச் சேகரிக்கப்பட்டால் தான் ஆய்வு முடிவு ஓரளவு சரியானதாக அமையும். இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள கதை வடிவங்கள் மற்றும் கதைப்பாடல் வடிவங்கள் முழுமையாகச் சேகரிக்கப் படவில்லை. எனவே, இந்த ஆய்வுரைகளில் கூறப்படும் முடி வுகள் மேலாய்வு செய்வதற்கு உரியவையே.

இரண்டு ஆய்வுரைகளின் பின்னிணைப்புகளிலும் ஆய்வுக் கெனச் சேகரிக்கப்பட்ட கதை மற்றும் கதைப்பாடல் வடிவங் கள் தரப்பட்டுள்ளன. ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யப் பட்ட பாடல் வடிவங்களும் உள்ளன. இவை இலக்கியம்,

மொழியியல், இசை போன்ற பல துறை ஆய்வாளர்களுக்கு சிறந்த ஆய்வு மூலங்களாக அமையும்.

இந்த அறிமுக உரையோடு ஆய்வுகளைக் காணலாம்.

1. நிட்டூரி கதை:
வரலாற்று - நிலவியல் ஆய்வு
(முதல் பகுதி)

1. ஆய்வுக்குரிய கதை

'நீட்டூரி கதை' இங்கு வரலாற்று - நிலவியல் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது. 'நிட்டூரி', என்பது 'நிஷ்டூரி' என்ற சொல்லின் தற்பவம். 'நிஷ்டூரம் கொலை, களவு, பொய் முதலியன புரிபவள்' என்பது பொருள். கதையில் நிகழும் கொலைக்குக் காரணமாக இருப்பவள் ஒரு பெண்ணாதலாலும் அப்பெண் பல கதை வடிவங்களில் 'நிஷ்டூரி' என்று மக்களால் வருணிக்கப்படுவதாலும் கதைக்கு 'நீட்டூரி கதை' என்று தலைப்பிடப்பட்டது.[1]

---

1. கதை கூறிய யாரும் கதைக்குத் தலைப்பொன்றும் கூறவில்லை. கதை எழுதிஅனுப்பிய திரு கி. சீத்தாராமன் (க. எ. 17) கதைக்கு 'வாளண்ணன் கதை' என்று தலைப்பிட்டு அனுப்பியிருந்தார். இத்தலைப்பு மக்களிடம் வழங்கப்படுகிறதா என்று தெரியவில்லை. தலைப்பு பொருத்தமானதாகவும் தெரியவில்லை.

சேகரிக்கப்பட்ட கதைகளில் இடம்பெறும் பாடல்களில் கொலைக்குக் காரணமான பெண் பின்வரும் சொற்களால் சுட்டப்படுகிறாள்.

பாவி-நீலி (க. எ. 3, 4, 10); பாதகத்தி (2); நெட்டூரி (1, 9);
நெட்டருவி (11, 12); நெட்டுருவி (16); நிட்டுருவி (17);
நெத்திளி (14); பொன்னுருவி (20); கொடிசூலி (5);
தொத்தல் - ரெட்டிச்சி (13); பத்தினி-அவுசேரி-காந்தேரி (13, 14);
புண்ணுவதி-பொண்விதி (புண்ணியவதி) (15, 19).

இவற்றுள் புண்ணியவதி, பத்தினி, ரெட்டிச்சி முதலியன வஞ்சப்புகழ்ச்சிச் சொற்களாகக் காணப்படுகின்றன. தொத்தல், அவுசேரி முதலியன இகழ்ச்சிச் சொற்கள். காந்தேரி திருதராட்டிரன் மனைவியின் பெயர். கொடிசூலி, பாதகத்தி என்பன கொடுமையானவள் என்னும் பொருளில் கூறப்படுகின்றன. நீலி என்ற சொல் 'தன்னைக்கொன்ற கணவனை மறுபிறப்பில் வஞ்சகமாகக் கொன்று பழி தீர்க்கும் நீலி'யைப் போன்றவள் என்ற பொருளில் கையாளப்படுகிறது. நீலி கதை என்று முன்பே ஒரு கதை இருப்பதால் இக்கதையையும் அதே பெயரால் சுட்ட இயலாது. நிஷ்ட்டூரி என்ற சொல் நெஷ்டூரி என்று மாறிப் பின் நெட்டூரி, நெட்டருவி, நெட்டுருவி, நிட்டுருவி, நெத்திளி (ரொட்டி > ரொத்தி என்பது போல

1.1. சேகரிப்புப்பணி

நிட்டூரி கதையின் பல்வேறு வடிவங்களைச் சேகரிக்கும் முயற்சி பின்வரும் இரு வழிகளில் மேற்கொள்ளப்பட்டது:

அச்சாகி வெளிவந்துள்ள நாட்டுப்புறக்கதை அல்லது பாடல் தொகுப்புகளில் இக்கதை வடிவங்கள் வெளிவந்துள்ளனவா எனக் கண்டறிவது.

நேரடியாகவும் கடிதத் தொடர்பு வாயிலாகவும் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து சேகரிப்பது.

முதலில் தமிழில் வெளிவந்துள்ள கதைத் தொகுப்புகள், பாடல் தொகுப்புகள், திறனாய்வு நூல்கள் ஆகியவற்றில் காணப்படும் பாடல்கள், கதைகள் முதலியன பார்வையிடப்பட்டன.[2] இதன் விளைவாகத் திருவாளர்கள் வ.மு.இராமலிங்கம் (1961), மு.வை. அரவிந்தன் (1965,1977), பி.எஸ்.கே. பக்தவச்சலம் (1979), கு.கிருட்டிணசாமி (1980) ஆகியோர் நிட்டூரி கதைகளின் ஐந்து வடிவங்களைச் சேகரித்து வெளியிட்டுள்ளனர் என்பதை அறியமுடிந்தது. இக்கதைகள் இலங்கையிலிருந்தும் தமிழகத்தின் வடார்க்காடு, குமரி, கோவை மாவட்டங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டவை.

அடுத்து சென்னை, செங்கல்பட்டு தவிர்ந்த தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களையும் மற்றும் புதுவை மாநிலத்தையும் சேர்ந்த சுமார் எழுபது பேர்களிடம்[3] நேரடியாகவும் கடிதங்

ட > த வாக மாறியுள்ளது) என்றெல்லாம் மாறி வந்துள்ளது என்பதை உணர முடிகிறது. 'பொன்னருவி மசக்கை' என்ற கதையில் வரும் 'பொன்னருவி' என்ற பாத்திரத்தின் ஒலிப்பு 'நெட்டருவி' என்னும் சொல்லின் இறுதியோடு ஒத்துக் காணப்படுவதால் நெட்டருவி என்பதற்குப் பதில் பொன்னருவி இடம் பெற்றிருக்கும் எனத் தெரிகிறது. எப்படியாயினும் இந்த வேறுபாடுகளுக்கும் நிஷ்டூரி என்ற சொல்லே மூலச் சொல்லாக இருக்கும் என்று அறியமுடிகிறது.

2. பார்வையிடப்பட்ட நூல்கள் துணை நூல் பட்டியலில் தரப்படுகின்றன.

3. கிராமப்புற மக்கள், கிராமப்புறங்களில் பிறந்து நகர்ப்புறங்களில் பணியாற்றுவோர், கிராமப்புறங்களில் களப்பணி மேற்கொண்டவர்கள், நாட்டுப்புறவியலில் ஈடுபாடு கொண்டவர்கள், நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள்,

கள் வாயிலாகவும் தொடர்பு கொண்டு கதை சேகரிப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இம் முயற்சியின் விளைவாகக் குமரி, மதுரை, திருச்சி தஞ்சை, புதுக்கோட்டை, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங் களிலிருந்தும் புதுவை மாநிலத்திலிருந்தும் பதினைந்து கதை வடிவங்கள் சேகரிக்கப்பட்டன. இக்கதை வடிவங்கள் சைவ வேளாளர், ரெட்டியார், செட்டியார், செங்குந்த முதலியார், படையாட்சி, நாடார், பறையர், கிருத்துவ உடையார் போன்ற பல்வேறு சாதிகளைச் சேர்ந்த பதினான்கு முதல் எழுபத்து நான்கு வயதுக்குட்பட்ட இரு பாலாரிடமிருந்தும் சேகரிக்கப் பட்டன. (விவரங்களுக்குக் காண்க: இணைப்பு-1).

நேரில் சந்தித்த பலர் தாங்கள் இக்கதையைச் சிறு வயதில் கேட்டிருப்பதாகக் கூறினர்.[4] சிலர் இன்னின்னாரிடம் சென் றால் இக்கதையைச் சேகரிக்கலாம் என்று வழிகாட்டினர்.[5] பெரியார், தருமபுரி, சேலம், திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்தோர் அம் மாவட்டங்களில் இக் கதை வழங்கப்பட

போன்ற பல தரப்பைச் சேர்ந்த இவர்களுக்குக் கதைச் சுருக்கமும் நோக்கமும் நேரிலும் கடிதங்கள் வாயிலாகவும் எடுத்துரைக்கப்பட்டு' இக்கதை உங்களுக்குத் தெரியுமா? உங்கள் ஊர்ப்பகுதிகளில் வழங்கப்படு கிறதா? என்று கேட்கப்பட்டன. (கடிதங்கள் 11, 12-12-82 தேதி களில் எழுதப்பட்டன)

4. டாக்டர் பொன். கோதண்டராமன் (இணைப்பேராசிரியர், தமிழ் இலக் கியத்துறை, செ.ப.கழகம்), டாக்டர் ந. அறிவழகன் (மு.நி.ஆ., த.ப. கழகம்), திருமதி ப. பழனியம்மாள் (இ.நி.ஆ., த.ப.கழகம்), டாக்டர் க.காந்தி (மு.நி.ஆ., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) ஆகியோர் முறையே திருச்சி, தென்னார்க்காடு, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங் களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நிட்டூரி கதையைச் சிறுவயதில் தங்கள் ஊர்களில் கேட்டிருப்பதாகக் கூறினர்.

5. சான்றாகத் திரு அற்புதம் (தோட்டப்பணியாளர், த.ப.கழகம்) அவர்கள் தஞ்சைக்கு அருகிலுள்ள தென்னங்குடியைச் சேர்ந்த வைத்தியர் மாரியர் பனிடம் சென்றால் இக்கதையைச் சேகரிக்கலாம் என்று கூறினார். அவர் குறிப்பிட்ட வைத்தியர் ஊரில் இல்லாததால் அங்குச் செல்லும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை.

வில்லை என்று கூறினர்.[6] இராமநாதபுர மாவட்டம் செட்டி நாட்டுப் பகுதியிலும் வழங்கப்படவில்லை என்று கூறப்பட்டது.[7] இக் குறிப்புகளைக் கொண்டு நிட்டூரி கதைகள் இன்னின்ன பகுதிகளில் மிகுதியாக அல்லது குறைவாக வழங்கப்படுகிறது என்றோ, இன்னின்ன பகுதிகளில் வழங்கப்படவில்லை என்றோ அறுதியிட்டுக் கூற இயலாது. முறையான கள ஆய்வு (Field Research) மேற்கொண்டால் மட்டுமே அது போன்ற முடிவுகளை நல்க முடியும். ஆனால், நிட்டூரி கதைகள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் தமிழகத்தையொட்டிய புதுவை மாநிலத்திலும் இலங்கையிலும் பல்வேறு சாதியினரிடையேயும் பல்வேறு வயதினரிடையேயும் செல்வாக்குடன் காணப்படுகிறது என்பதையும் முயன்றால் இக் கதைகளின் நூற்றுக்கணக்கான வடிவங்களைச் சேகரிக்க முடியும் என்பதையும் உறுதியாகக் கூறுவதற்கு அக் குறிப்புகள் போதுமானவையாக உள்ளன.

2. கதைகள் வரிசைப்படுத்தப்பட்ட முறை

சேகரிக்கப்பட்ட கதைகள் நில அமைப்பு அடிப்படையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பின்வருமாறு வரிசைப் படுத்தப்பட்டன:

---

6. சான்றாகப் பின்வருவோரைக் குறிப்பிடலாம்:
   - பெரியார் மாவட்டம் : புலவர் செ. இராசு (கல்வெட்டுத்துறை, த. ப. கழகம்)
   - தருமபுரி மாவட்டம் : திரு சி. கதிர்வேல் (அரசு மேல்நிலைப்பள்ளி, கேளமங்கலம், தென்கனிக்கோட்டை வட்டம்)
   - சேலம் மாவட்டம் : டாக்டர் கு. முருகேசன் (மு.நி.ஆ. த.ப. கழகம்)
   - திருநெல்வேலி மாவட்டம் : திரு ஆ. சிவசுப்பிரமணியன் (55, முதல்தெரு, பிரைண்ட் நகர், தூத்துக்குடி)
7. இராமநாதபுரம் மாவட்டம் : டாக்டர் இராம. சுந்தரம் (இயக்குநர், திட்டமும் வளர்ச்சியும், த. ப. கழகம்)
   திரு க. நாராயணன் (மேலாளர், கற்பகம் அச்சகம், 6 நல்லதம்பி செட்டித்தெரு, சென்னை)

வரிசை எண்.	கதை சேகரிக்கப்பட்ட நிலப்பகுதி		கதைக்குத் தரப்பட்ட வரிசை எண்	மொத்தக் கதைகள்
1.	இலங்கை (மட்டக்களப்பு)	...	1	1
2.	இலங்கை (வட இலங்கை)	...	2	1
3.	குமரி மாவட்டம்	...	3-4	2
4.	மதுரை மாவட்டம்	...	5	1
5.	புதுக்கோட்டை மாவட்டம்	...	6-7	2
6.	கோவை மாவட்டம்	...	8	1
7.	திருச்சி மாவட்டம்	...	9	1
8.	தஞ்சை மாவட்டம்	...	10	1
9.	தென்னார்க்கார்டு மாவட்டம்	...	11-17	7
10.	புதுவை மாநிலம்	...	18-19	2
11.	வடார்க்காடு மாவட்டம்	...	20	1

இக்கதைகளின் சுருக்கப்பட்ட வடிவங்கள் இணைப்பு-2இல் தரப்பட்டுள்ளன. இவற்றுள் பதினேழு கதைகளில் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. கதை கூறிய சில தகவலாளர்கள் கதை முழுதும் பாடலாகப் பாடப்படுவதுண்டு என்ற கருத்தினைக் கூறினர் (காண்க: இணைப்பு-1, வ.எ.6,8,9-இற்கான குறிப்புகள்). இக்கருத்தானது ஒரு காலத்தில் இக்கதைகள் முழுவதும் பாடலாகவே பாடப்பட்டுப் பின்னாளில் கதையின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லது இடங்களில் மட்டும் பாடலாகவும் ஏனைய பகுதிகள் உரைநடையாகவும் மாறினவோ என்னும் ஐயத்தை ஏற்படுத்துகின்றது. இது ஆய்வுக்குரியது. சில கதைகளில் பாடல் தொடர்கள் கதை கூறுவோர் செய்யும் தவறுகளை அல்லது மாற்றங்களைக் கண்டுபிடிக்கவும் உண்மையை ஊகிக்கவும் பயன்படுகின்றன. எனவே, பாடல்களின் முக்கியத்துவம் கருதி கதைச் சுருக்கங்களில் பாடல்கள் அப்படியே முழுமையாகத் தரப்படுகின்றன.

கதைகளை வரிசைப்படுத்திப் பார்க்கும்போது பின்வரும் இரண்டு கருத்துக்களைப் புரிந்துகொள்ள முடிந்தது.

கதையின் மூலக்கதைக் கூறுகள் (basic traits) குறைந்த அளவு மாற்றங்களுடன் அனைத்துப் பகுதிகளிலும் காணப் படுகின்றன.

ஒவ்வொரு குறிப்பிட்ட நிலப்பகுதிக்கும் உரிய தனித்தன்மை களுடன் கதைகள் வழங்கப்படுகின்றன.

3. கதைக் கூறுகளின் பட்டியல்

முதலில் கதைகளில் இடம்பெறும் பாத்திரங்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டது. இப் பட்டியல் தலைமைப் பாத்திரங்கள் எவை என்பதைத் தெளிவுபடுத்தும். (காண்க : இணைப்பு-3)

அடுத்து, ஆய்வு செய்யப்படும் கதைகள் இருபத்து நான்கு கதைக் கூறுகளாகப் (traits) பிரிக்கப்பட்டன. அக் கூறுகளை ஆய்வில் எடுத்தாள்வதற்கு வசதியாக அவற்றுக்கு அ, ஆ, இ, ஈ என்பன போன்ற குறியீடுகள் நல்கப்பட்டன. அக் கூறு களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளைச் சுட்டத் தனிக் குறியீடுகள் தரப்பட்டன.[8] மேலும், அக் கூறுகள் இடம்பெறும் மொத்தக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு கதைக்கூறு கள் பயின்றுவரும் விழுக்காடு கணக்கிடப்பட்டது.

4. ஆய்வு

இனி, (இணைப்பு-4-இல் உள்ள) கதைக் கூறுகளை ஒவ் வொன்றாக ஆராய்ந்து அவற்றுள் விழுக்காட்டு அடிப்படை யில் மூலக்கதைக் கூறுகள் (basic traits) எவை என்பதைக் காணலாம்.

4.1. மூலக்கதைக் கூறுகள்

அ) மந்திர சக்தியால் பெண் பிறந்து வளர்தல்

ஐந்து முதல் ஏழு கதை வடிவங்களில் (அதிக பட்சம் 35%)

---

8. முதலில் தமிழின் உயிர், மெய் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. குழப்பங்களைத் தவிர்ப்பதற்கு ஆங்கில எழுத்துக்களும் பயன்படுத்தப் பட்டன. தட்டச்சு செய்வதற்கு வசதியாக அவை தமிழிலேயே தரப் பட்டன.

(அ1.7)[9] மட்டுமே இடம்பெறும் இக்கதைக் கூறு மூலக் கதைக் கூறாக இருக்க இயலாது. இது நிட்டூரி கதையின் பிற்கால வளர்ச்சியாகலாம்.

ஆ. தொழில்

ஆண்கள் தொழிலுக்குச் செல்வதாக அமையும் இக்கூறு ஒரு கதையைத் (ஆ0) தவிர, ஏனைய பத்தொன்பது கதைகளில் இடம் பெறுகின்றது. தொழிலுக்குச் செல்வோர் (ஆ1-4), செய்தொழில் (ஆ1ஜி,எச்) ஆகியன மாறுபட்டாலும் 'அண்ணன்மார் வயல் வேலைக்குச் செல்லல்' (ஆ1ஜி) என்னும் கதைக்கூறு பதினைந்து கதை வடிவங்களில் (75%) இடம் பெறுவதால் இதனையே மூலக்கதைக் கூறாகக் கொள்ளலாம். இதனோடு தொடர்புடையதாக அமைந்த அண்ணன்மார் விறகு வெட்டச் செல்லும் கூறுபிற்காலத்திய மாற்றமாகலாம்.

இ. தொழில் துணை

எடுத்துச் செல்லும் உணவு, எடுத்துச் செல்லும் காரணம், எடுத்துச் செல்லும் முறை ஆகியவற்றில் மாற்றங்கள் காணப்பட்டாலும் (இ1.1ஜி-1.2கே) 'அண்ணன்மாருக்குத் தங்கை உணவு எடுத்துச் செல்லல்' என்னும் நிலையில் ஒன்றுபடும் கூறு (இ1) பதினாறு கதைவடிவங்களில் (80%) இடம் பெறுவதால் அதனையே மூலக்கதைக் கூறாகக் கொள்ளலாம். வழக்கம்போல் தங்கை உணவு எடுத்துச் செல்வதாகப் பதினோரு கதைவடிவங்களில் (55%) கூறப் படுவதால் (இ1.1ஜி-கே) இதுவும் மூலக்கூறாதல் வேண்டும்.

ஈ. தடை

நான்கு கதைவடிவங்களில் (ஈ0) தடை பற்றிய செய்தி எதுவும் இடம் பெறவில்லை. மீதியுள்ள பதினாறு கதை வடிவங்களுள் 'தங்கை நீர் நிலை'யைக் கடக்க வேண்டும்'

---

9. இணைப்பு 4-இல் கதைக் கூறுகளுக்குத் தரப்பட்டுள்ள குறியீடு இது. இனி இது போன்ற குறியீடுகள் தேவையான இடங்களில் பார்வைக்காக அடைப்புக் குறிக்குள் தரப்பட்டிருக்கும்.

(ஈ1) என்னும் கூறு பதினான்கு கதைவடிவங்களில் (70%) இடம் பெறுகிறது. இதுவே மூலக்கதைக் கூறாகக் கொள்ளத் தக்கது.

உ. பிறர் உதவியுடன் கடந்து செல்லல்

பத்துக் கதைவடிவங்களில் (உ0) நீர் நிலையைக் கடத்தல் பற்றிய குறிப்பே இடம் பெறவில்லை. மீதியுள்ள பத்துக் கதைவடிவங்களுள் பெண் மனிதரின் உதவியுடன் நீர் நிலையைக்கடப்பதாக இரு கதைவடிவங்களிலும் (உ1ஜி,எச்) வாளை மீனின் உதவியுடன் கடப்பதாக ஆறு கதைவடிவங் களிலும் (உ1ஜே,கே) முதலையின் உதவியுடன் கடப்பதாக இரு கதைவடிவங்களிலும் (உ1பி) கூறப்படுகின்றன. இவற் றுள் எந்த ஒன்றும் தனிப் பெரும்பான்மை பெறவில்லை. இவற்றைப் 'பிறர் உதவியுடன் கடந்து செல்லல்' என்ற ஒரே தலைப்பில் அடக்கினாலும் இவை பத்துக் கதைவடிவங் களில் (50%) மட்டுமே இடம் பெறுகின்றன. இடம் பெறாத கதையின் விழுக்காட்டுடன் சமமான விழுக்காடு பெற்றுள்ள இது மூலக் கதைக்கூறுஎன்று உறுதியாக ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லாமல ஐயத்துக்குரியதாக உள்ளது.[10]

ஊ. உணவை இறக்குமாறு பெண் ஏர் ஓட்டும் அண்ணன்மார்களிடம் வேண்டுதலும் அவர்களின் செயலும்

நான்கு கதைவடிவங்களில் (20%) (ஊ1ஜி,எச்) மட்டுமே இடம் பெறும் இக்கூறு மூலக்கதைக் கூறாகக் கொள்ளத் தக்கது அல்ல. இது பிற்கால வளர்ச்சியாகலாம்.

எ. திரும்புகையில் பெண் போதுமான உணவு எடுத்து வரவில்லை

இக் கூறு பத்துக் கதைவடிவங்களில் (50%) (எ1ஜி-ஜே) மட்டுமே இடம் பெறுகின்றது. 'பிறர் உதவியுடன் நீர் நிலையைக் கடத்தல்' (உ)என்னும் கதைக்கூறின் தொடர்ச்சி

---

10. ஸ்டித் தாம்சன் தன்னுடைய The Star Husband Tale என்னும் கட்டு ரையில் 52% உள்ள ஒரு கூறினை மூலக்கதைக் கூறாகக் கொள்கிறார். ஆனாலும், அது ஐயத்திற்குரிய கூறு என்று ஆய்வில் குறிப்பிடுகின்றார். (Dundes, Alan, 1965;449) இங்கு 50% பெறும் கூறு மூலக்கதைக் கூறுதானா என்ற ஐயம் எழுவதில் தவறில்லை.

யான இக்கூறும் மூலக்கதைக்கூறு என்று உறுதியாக ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இல்லை.

ஏ. பெண் தவறுதல்

ஒரு கதைவடிவத்தில் மட்டும் (ஏ0) பெண் தவறு செய்யும் செய்தி காணப்படவில்லை. ஏனைய அனைத்துக் கதை வடிவங்களிலும் காணப்படுகின்றன. எதிர்பாராமல் நிகழும் தவறுகள் (ஏ 1.1,1.3,1.5,4), சிறு பிள்ளைத்தனமான தவறுகள் (ஏ 1.2,2), திட்டமிட்டுச் செய்யும் தவறுகள் (ஏ 1,7,3) என்று செய்யும் தவறுகள் பலவாக மாறுபடுகின்றன. தவறு என்னும் நிலையில் இவை ஒன்றுபடுகின்றன. இவற்றுள் 'தங்கை தவறு செய்தல்' (ஏ1) என்னும் கூறு பதினாறு கதைவடிவங்களில் (80%) இடம் பெறுவதால் இதனை மூலக்கதைக் கூறாகக் கொள்ளலாம்.

'பெண் என்ன தவறு செய்கிறாள்?' என்ற ஐயம் இங்குத தோன்றுகிறது. பெண் பிறரை ஏமாற்றுவதாகப் பதினோரு கதைவடிவங்களில் காணப்படுகிறது (ஏ 1.7,3). இவற்றுள் பத்துக் கதைவடிவங்களில் (50%) தங்கை நீர் நிலையைக் கடக்க உதவியவரை ஏமாற்றுதல் (ஏ 1.7) என்னும் செய்தி இடம்பெறுகிறது. இது, கூறுகள் உ,எ ஆகியவற்றோடு தொடர்புடையதாகக் காணப்படுகிறது. உதவியவர் மனிதர், வாளை, முதலை என்று பலவாறாக மாறுபடுவதால் இதுவும் மூலக்கதைக்கூறு என்று ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இல்லை.

'பெண் யாரிடம் தவறு செய்கிறாள்?' என்ற ஐய வினாவிற்கும் இங்கு விடை காண முயலலாம். மனிதர், வாளை, முதலை ஆகியோரிடம் பெண் தவறு செய்வதாகக் கதைவடிவங்களில் குறிப்பிடப்படுகிறது. இவற்றுள் வாளையிடம் தவறு செய்வதாகப் பத்துக் கதைவடிவங்களில் (ஏ 1.4-6, 1.7 எச்-பி,2) குறிப்பிடப்படுகிறது. இவற்றுள், 'தங்கை வாளையிடம் தவறு செய்வதாக' ஒன்பது கதை வடிவங்கள் (45%) (ஏ 1.4-6, 1.7 எச்-பி) குறிப்பிடுகின்றன. இதுவும் மூலக்கதைக்கூறு என்று ஏற்றுக்கொள்ளத்தக்க தாக இல்லை.

ஐ. துன்புறுதல்

பெண், காயமுறுதல் (ஐ1.1ஜி-ஹ, 2,4), பாவாடை கிழிதல் (ஐ1.?), அன்புக்குரிய மானை இழத்தல் (ஐ3) போன்ற காரணங்களால் உடல் மற்றும் மனத்துன்பமுறுவதாகக் கதைவடிவங்களில் கூறப்படுகின்றன. இவற்றுள் காயமுறுவதாகப் பதினெட்டுக் கதைவடிவங்களில் (ஐ1.1, 2,3) கூறப்படுகின்றன. இதில் 'தங்கை காயமுறுதல்' (ஐ1. 1ஜி-ஹ) என்னும் செய்தி பதினாறு கதைவடிவங்களில் (80%) இடம் பெறுவதால் அதுவே மூலக் கதைக்கூறாக இருத்தல் வேண்டும். ஏனையவை பிற்கால மாற்றங்களாகலாம்.

பெண் காயமுறுவதற்கான காரணங்கள் பல கூறப்பட்டாலும் வாளை மீனால் காயமுறுவதாகப் பதினோரு கதைவடிவங்களில் கூறப்படுகின்றன. அவற்றுள் தங்கை வாளை மீனால் காயமுறுவதாகப் (ஐ1.1பி-ஒய்) பத்துக் கதைவடிவங்களில் (50%) கூறப்படுகின்றன. பிறவற்றை ஒப்பிட வாளை தனிப்பெரும்பான்மை பெறுவதால் இது மூலக் கதைக் கூறாக இருக்கக்கூடும்.

ஒ. பழிகூறல்

ஒரே ஒரு கதைவடிவத்தில் (ஒ0) மட்டும் இக்கூறு இடம் பெறவில்லை. பிறவற்றுள் சின்னண்ணன் அடித்ததாகத் தாயிடம் பொய் கூறுதல் (ஒ1.1) என்னும் செய்தி பதினாறு கதை வடிவங்களில (80%) இடம் பெறுவதால் இதுவே மூலக்கதைக் கூறு என்று கொள்ளலாம். சின்னண்ணன் பாவாடையைக் கிழிததாக வரும் கூறு (ஒ1.2) பிற்கால மாற்றமாகலாம். சின்னண்ணன் மீது பழி கூற ஓரிரு காரணங்கள் (ஒ1.1ஜி,எச்) கூறப்பட்டாலும் பதின்மூன்று கதைவடிவங்களில (65%) (ஒ1.1.ஜே) காரணம் எதுவும கூறப்படவில்லை.

ஓ. கொலை

மகளின் பேச்சை நம்பிய தாய் சின்ன மகனைத் தானே தனியாகவும் (ஓ1.1ஜி-ஒய், 1,3) மகளோடு (ஓ1.2) அல்லது

கணவனோடு (ஓ1.4) சேர்ந்தும் கொன்று புதைப்பதாகக் கதைவடிவங்கள் அமைந்துள்ளன.

'தாய் சின்ன மகனைக் கொன்று புதைத்தல்' என்ற நிலையில் இவை ஒன்றுபடுகின்றன. பதினேழு கதை வடிவங்களில் (85%) இடம்பெறும் இச்செய்தியை மூலக்கதைக்கூறு என்று கூறலாம். தாய் மகளோடும் கணவனோடும் சேர்ந்து சின்ன மகனைக் கொல்வதாக அமைந்த செய்திகள் பிற்கால மாற்றம் எனலாம்.

பதினேழு கதைவடிவங்களுள் மூன்று கதை வடிவங்களில் (ஓ1.1ஜி,1.4) கொல்லப்படும் முறை பற்றிய குறிப்பு எதுவுமில்லை. பிற கதைவடிவங்களுள் தாய் சின்னமகனை நச்சுணவுதந்து கொல்வதாகவும் (ஓ1.1எச்,ஜே) பாம்புணவு தந்து கொல்வதாகவும் (ஓ1.1கே-1.2) வெட்டிக் கொல்வதாகவும் (ஓ1.3) கூறப்படுகின்றன. இவற்றுள் பாம்புணவு என்பதும் நஞ்சு கலந்த உணவு என்ற நிலையில் நச்சுணவோடு ஒன்று படுகின்றது. இந்த அடிப்படையில் நோக்கினால் நச்சுணவு தந்து கொல்லும் செய்தி பதின்மூன்று கதை வடிவங்களில் (65%) இடம் பெறுகிறது. இதுவும் மூலக்கதைக் கூறாதல் வேண்டும்.

ஔ. புதைத்த இடத்தில் பூந் தாவரம் முளைத்துப் பூத்தல்

ஒரு கதைவடிவத்தில் (ஔ0) பூந் தாவரம் இடம் பெற்றாலும் அது முளைத்து வளரும் இடம குறிப்பிடப்படவில்லை. பிற கதைவடிவங்களைப் பொறுத்தவரை புதைத்த இடத்தில் பூந் தாவரம் முளைப்பதாகப் பொதுவாகவும் (ஔ1.1, 2,3,4) புதைத்த தலைப்பகுதியில் முளைப்பதாகச் சிறப்பாகவும் (ஔ1.2) கூறப்படுகின்றன. மூன்று கதைவடிவங்களில் பூந் தாவர வகைகளும் (ஔ1.1ஜி-ஜே) கூறப்படுகின்றன. இவற்றுள் 'பெண்ணின் சின்னண்ணனைப் புதைத்த இடத்தில் (தலைப்பகுதியில் முளைத்தலும் இதில் அடங்கும்) பூந் தாவரம் முளைத்துப் பூதல்' (ஔ1.1-1.2) என்னும் செய்தி பதினாறு கதை வடிவங்களில் (80%) இடம் பெறுவதால் இதுவே மூலக்கதைக்கூறு எனலாம்.

க. பெண்ணின் திருமணத்திற்குப் பூ கிடைக்காமை

இக்கூறு ஒரு கதை வடிவத்தைத் (க0) தவிர அனைத்துக்கதை வடிவங்களிலும் இடம பெறுகிறது. அவற்றுள் 'அண்ணன் கொலைக்குக் காரணமான பெண்ணின் திருமணத்திற்குப் பூ கிடைக்காமை' (க1) என்னும் செய்தி பதினாறு கதை வடிவங்களில் (80%) இடம் பெறுவதால் இதுவே மூலக் கதைக்கூறு எனலாம்.

ங. குடும்பத்தார் பூப் பறிக்கச் செல்லல்

பூ இருக்குமிடத்தை எவ்வாறு அறிந்தனர் என்பதிலும் பூப் பறிக்கச் செல்வோரிலும் மாற்றங்கள் காணப்பட்டாலும் 'சின்னவனைப் புதைத்த இடத்தில் பூ இருப்பதை அறிந்து குடும்பத்தார் பறிக்கச் செல்லல்' (ங1ஜி-ஷ) என்ற நிலையில் ஒன்றுபடும் கதைச்செய்தி பதினேழு கதைவடிவங்களில் (85%) இடம் பெறுவதால் இதனையே மூலக்கதைக் கூறு எனலாம்.

ச. பூக்கள் மறைந்து/வாடிவிடுதல்

இக்கூறு ஒன்பது கதைவடிவங்களில் (ச0) இடம் பெற வில்லை. ஏனைய பதினோரு கதைவடிவங்களுள் 'சின்ன வனைப் புதைத்த இடத்திலுள்ள பூ, பறிக்க முயல்கையில் மறைந்து/வாடிவிடுதல்' (ச1) என்னும் செய்தி பத்துக் கதை வடிவங்களில் (50%) இடம்பெறுகிறது. தனிப்பெரும் பான்மை பெற்றுள்ள இது மூலக்கதைக் கூறாக இருக்கக் கூடும்.

ஞ. பூந் தாவரம்/பூ உண்மையை வெளிப்படுத்தல்

இச்கூறு ஒரு கதைவடிவத்தில் (ஞ0) மட்டும் இடம் பெற வில்லை. இடம்பெறும் பிற கதைவடிவங்களுள் 'கொலைக் குக் காரணமானவள் தங்கை என்பதை வெளிப்படுத்துவ தாக' (ஞ1) அமையும் செய்தி பதினாறு கதைவடிவங்களில் (80%) காணப்படுகிறது. இதுவே மூலக்கதைக் கூறாதல் வேண்டும்.

ட. பூ தருவது தொடர்பாகக் கொலையுண்டவன் எடுக்கும் முடிவு

ஒரு கதைவடிவத்தில் மட்டும் (ட0) கொலையுண்டவன் என்ன முடிவெடுக்கிறான் என்பது பற்றிய குறிப்பு இடம் பெறவில்லை. பிற கதைவடிவங்களுள் 'தங்கைக்குப் பூ தர மறுப்பதாக' (ட1.1) அமையும்செய்தி பனிரண்டு கதைவடி வங்களில் (60%) இடம்பெறுகிறது. தங்கைக்குப் பூ தருவ தாக (ட1.2) நான்கு கதைவடிவங்களில் கூறப்படுகிறது. இவற்றுள் முன்னது மூலக்கதைக்கூறு என்றும் பின்னது பிற்காலத்திய மாற்றம் என்றும் கருதலாம்.

ண. உண்மை அறிந்த உறவினர்கள் சின்னானுக்குப் பூசை செய்து அவன் கோபத்தைத் தணித்தல்

த. பெண்ணைத் தவிர பூகேட்கும் அனைவரும் உயிரற்றவர்களாதல்

ந. பெண் வருந்தி அழுதல்

ப. சக்திமிக்க ஒருவர் தோன்றி உயிரற்றவர்களுக்கு உயிரளிக்க உதவல்

ம. உயிர் பெற்ற சின்னவன் வீட்டிற்கு வர மறுத்து மீண்டும் இறத்தல்

மேலே உள்ள ஐந்துகூறுகளும் முறையே 1,4,5,7.17 கதை வடிவங்களில் மட்டுமே இடம் பெறுகின்றன. குறைந்த கதைவடிவங்களில் இடம்பெறும் அக்கூறுகள் மூலக்கதைக் கூறுகளாகக் கொள்ளத்தக்கன அல்ல. அவை பிற்கால வளர்ச்சியாகலாம்.

ய. திருமணம்

திருமணம் நடைபெறுவதாகப் பதினோரு கதைவடிவங் களில் (ய1.2 & 3,3) தெளிவாகக் குறிப்பிடப்படுகிறது. ஒரு கதைவடித்தில் (ய2) குறிப்பாகச் சுட்டப்படுகிறது. திருமணம் நின்று விடுவதாக ஒரு கதைவடிவத்தில் மட்டுமே (ய1.1ஜி) தெளிவாகக் குறிப்பிடப்படுகிறது. ஏழு கதை வடிவங்களில் (ய1.1எச், ஜே & 4) குறிப்பாக அறிந்துகொள்ள முடிகிறது. எனவே, திருமணம் நடைபெறுதல் என்பதே மிகுதியாக உள்ளது. இவற்றுள் தங்கையின் திருமணம்

நடைபெறுவதாகப் பத்துக் கதைவடிவங்களில் (50%) (ய1:2 & 3) கூறப்படுவதால் இது மூலக்கதைக் கூறாதல் கூடும்.

ர. பழிவாங்கிய கதை

பல துணைக் கூறுகளையுடைய (ர1-10) இக்கூறு ஒரு தனிக் கதைவடிவமாகவே இருக்கிறது; எனவேதான் இக்கூறு 'பழிவாங்கிய கதை' என்று கூறப்பட்டது. இரு கதை வடிவங்களில் (10%) மட்டும் இடம்பெறுவதால் இது மூலக் கதைக் கூறாக இராது என்று கூறலாம்.

4.2. மூலக்கதை *(Basic Tale) / (பழையவடிவம் - Arche-type)*

இதுவரை கண்டவற்றுள் பிற்கால வளர்ச்சியாக இருக்கலாம் என்று கருதப்பட்ட கூறுகள் நீங்கலாக ஏனைய மூலக்கதைக் கூறுகளை நோக்கும் போது அவற்றுள் நான்கு கதை வடிவங்கள் இருப்பதைக் காணமுடிகிறது. (காண்க: இணைப்பு-4). அவை வருமாறு:

வடிவம்-1

வயல் வேலைக்குச் செல்லும் அண்ணன்மார்களுக்கு (75%) வழக்கம் போல் (55%) தங்கை உணவெடுத்துச் செல்கிறாள் (80%). வழியில் ஒரு நீர்நிலையைக் கடக்க வேண்டும் (70%). வழியில் அவள் தவறு செய்கிறாள் (80%). வாளை மீனால் (50%) காயமுறும் (80%) அவள், சின்னண்ணன் அடித்ததாகத் தாயிடம் பொய் கூற (80%), நச்சுணவு தந்து (65%) தாய் தன் சின்னமகனைக் கொன்று புதைக்கிறாள் (85%). புதைத்த இடத்தில் பூந் தாவரம் முளைத்துப் பூக்கிறது (80%). பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமான போது பூ கிடைக்கவில்லை (80%). சின்னவனைப் புதைத்த இடத்தில் பூ இருப்பதை அறிந்து குடும்பத்தார் பறிக்கச் செல்லப் (85%) பூக்கள் மறைந்து/வாடிவிடுகின்றன (50%) அவர்கள் பூ கேட்க, பூந் தாவரம் வாயிலாகச் சின்னவன் தன் கொலைக்குக் காரணமானவள் தங்கை என்ற உண்மையை அனைவரும் அறியும்படி வெளிப்படுத்திப் (80%) பூ தர மறுத்துவிடுகிறான் (60%). திருமணம் நடைபெறுகிறது (50%).

விழுக்காட்டு அடிப்படையில் இதனையே 'நிட்டூரி கதை' யின் மூலக்கதை அல்லது பழைய வடிவம் என்று கூறலாம். ஆயினும் இதுவே முதன்முதலில் தோன்றிய 'நிட்டூரி கதை' வடிவம் என்று கூற இயலவில்லை.

இந்த மூல வடிவத்தோடு பேரளவில் ஒத்தும் சிறு அளவில் மாறுபட்டும் காணப்படும் ஏனைய மூன்று வடிவங்களையும் இதன துணை வடிவங்கள் (sub-types) எனலாம். அவை வருமாறு :

வடிவம்-2

வயல் வேலைக்குச் செல்லும்அண்ணன்மாருக்கு (பெரியம்மா மகன்கள்) (5%) தங்கை (சின்னம்மா மகள்) உணவு எடுத்துச் செல்கிறாள் (5%). வழியில் ஆற்றைக் கடக்க வேண்டும் (5%). ஆற்றில் வாளையிடம் விளையாட (5%) வாளையால் காயமுறுகிறாள் (5%). சின்னண்ணன் அடித்ததாகத் தன் தாயிடம் பொய் கூறத் (5%) தாய தன் மூத்தாளின் சின்ன மகனைக் கொன்று புதைக்கிறாள் (5%)· அந்த இடத்தில் ஒரு பூமரம் முளைத்துப் பூக்கிறது (5%). பெண்ணின் திருமணத்திற்கு எங்கும் பூ கிடைக்கவில்லை (5%). மூத்தாள் மகனைப் புதைத்த இடத்தில பூ இருப்பதை அறிந்து மாற்றாந்தாய் பறிக்கச் செல்கிறாள் (5%). பூக்கள் மறைகின்றன (5%). பூ கேட்கப் பூந்தாவரம் வாயிலாகச் சின்னவன் தன் கொலைக்குக் காரணமானவள் தங்கை என்ற உண்மையை வெளிப்படுத்திப் (5%) பிறகு பூ தருகிறான் (5%).

வடிவம்-3

வயல் வேலைக்குச் செல்லும் அண்ணன்மாருக்கும் தம்பிக்கும் (5%) உணவெடுத்துச் செல்லும் சகோதரி (5%) வழியிலுள்ள காட்டைக்கடந்து செல்கையில் (5%) தன் வெறுப்புக்குரிய தம்பியின் உணவைக் காட்டிலுள்ள தன் அன்புக்குரிய மானுக்குத் தந்து தம்பியை ஏமாற்ற (5%), கோபமுற்ற தம்பி அந்த மானைக் கொன்று அதன் இறைச்சியை அவளிடம் ஆட்டிறைச்சி என்று தந்து அவள் மனத்தைத்

துன்புறுத்துகிறான் (5%). அவள் அவனுக்கு நச்சுணவு (பாம்புக்கறி) தந்து கொல்கிறாள்(5%). அவனைப் புதைத்த இடத்தில் பூந் தாவரம் முளைத்துப் பூக்கிறது (5%). அவள் திருமணத்திற்கு எங்கும் பூ கிடைக்கவில்லை (5%). பூ இருக்குமிடமறிந்து சகோதரர்களும் மாமாவும் பறிக்கச் செல்ல (5%) பூந் தாவரம் வாயிலாகக் கொலையுண்டவன் தன் கொலைக்குக் காரணமானவள் தன் அக்கா என்ற உண்மையை வெளிப்படுத்தி (5%) முதலில் பூ தர மறுப்பவன், மாமா கேட்கும்போது பூ தருவதோடு (5%) அக்காவின் திருமணத்தில் தெய்வமாக நின்று வாழ்த்துகிறான் (5%).

வடிவம்–4

காட்டு வேலைக்குச் செல்லும் வேலைக்காரன் சின்னானுக்குக் (5%) கஞ்சி எடுத்துச்செல்லும் எசமானி (5%) தாழை வேர் தடுக்கிக் கீழே விழுந்து கஞ்சிக்கலயத்தை உடைக்கிறாள் (5%) அப்போது தாழைமுள் குத்திக் காயமுறுகிறாள் (5%). சின்னான் அடித்ததாக அண்ணன்மார்களிடம் கூற (5%) அவர்கள் சின்னானை அடித்துக் கொல்கின்றனர் (5%). அவளைப் புதைத்த இடத்தில் பூந் தாவரம் முளைத்துப் பூக்கிறது (5%). பெண்ணின் திருமணத்திற்கு எங்கும் பூ கிடைக்கவில்லை (5%). சின்னானைப் புதைத்த இடத்தில் பூ இருப்பதை அறிந்து உறவினர்கள் பறிக்கச் சென்றனர் (5%). பூ கேட்கப் பூந் தாவரம் வாயிலாகச் சின்னான் தன் கொலைக்குக் காரணமானவள் எசமானி என்ற உண்மையை வெளிப்படுத்திப் (5%) பூ தர மறுத்து விடுகிறான் (5%).

4.3. கதை வளர்ச்சி, மாற்றம், துணை வடிவங்களின் தோற்றம் ஆகியவற்றுக்கான காரணங்கள்

மூலக்கதையைப் படிக்கும் போது நமக்குச் சில ஐயங்கள் தோன்றுகின்றன. தங்கை உணவெடுத்துச் செல்வதும் காயமுறுவதும் மூலக்கதைக் கூறுகள் என்பது தெளிவாகத் தெரிகின்றன. ஆயின் 'வழக்கம் போல் எடுத்துச் செல்கிறாள்' என்பதிலும்

'வாளை மீனால் காயமுறுதல்' என்பதிலும் விழுக்காடுகள் பெரிதும் வேறுபடுகின்றன. இதற்கான காரணங்கள் என்ன? தங்கை ஏன் குறிப்பாகச் சின்னண்ணன் அடித்ததாகப் பழி கூறு கிறாள்? மகள் பேச்சைக் கேட்டு எந்தத் தாயாவது ஒரு சிறிய குற்றத்திற்காகப் பெற்ற மகளைக் கொலை செய்வாளா? பூ தர மறுத்த பிறகு திருமணம் நடைபெறுவதாகக் கூறப்படுவது முரண் பாடாக உள்ளதே! இந்த முரண்பாடு எவ்வாறு தோன்றியது?

இந்த ஐயங்களுக்கு விடை காண்பதாவது மூலக்கதையைத் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுவதோடு கதைகளில் காணப் படும் வளர்ச்சி, மாற்றம் முதலியவறறுக்கான காரணங்களை யும் துணை வடிவங்கள் தோன்றியதற்கான காரணங்களையும் புரிந்துகொள்ள உதவும். எனவே, முதலில் இந்த ஐயங்களுக்கு விடைகாண முயலலாம்.

4.3.1. வழக்கம்போல் (55%) தங்கை உணவெடுத்துச்செல்லல் (80%)

இது மூலக்கதைக்கூறு என்பது தெளிவான ஒன்று. ஆயின் துணைக்கூறுக்கும் (sub-trait) தலைமையான மூலக்கூறுக்கு (basic-trait) மிடையே காணப்படும் இந்த விழுக்காட்டு வேறு பாடு எவ்வாறு ஏற்பட்டது?

'வழக்கம்போல் தங்கை உணவெடுத்துச் செல்கிறாள்' என் பதற்குப் பதிலாக 'வழக்கமாகத் தாய் எடுத்துச்செல்ல அன்று மட்டும் தங்கை எடுத்துச்செல்கிறாள்' (இ 1.2) என்று கூறியதன் வாயிலாக 'அன்று ஏதோ ஒன்று நடக்கப் போகிறது' என்று முன்னறிவிக்கப்படுகிறது. இது கதை கூறுவோர் கதை கூறும் உத்தியால் ஏற்பட்ட மாற்றமாகும். 'அன்று மட்டும் ஏன் தங்கை எடுத்துச் செல்கிறாள்' என்ற ஐயத்துக்கு விடையளிக்கும் முயற்சியும் (இ 1.2 எச்-ஜே) மாற்றத்திற்குக் காரணமாகத் தெரிகிறது. இந்த மாற்றங்கள் கதைகளில் பரவலாக இடம் பெறுவதால் விழுக்காட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது எனலாம்.

4.3.2. வாளை மீனால் (50%) காயமுறுதல் (80%)

இது மூலக்கதைக்கூறு என்பது தெளிவாகத் தெரிகிறது. இதில் துணைக் கூறுக்கும் தலைமையான மூலக்கூறுக்குமிடையே

காணப்படும் விழுக்காட்டு வேறுபாடு எவ்வாறு ஏற்பட்டது என்பதைக் காணலாம்.

உணவு எடுத்துச் செல்லும் பெண் கவனக் குறைவால் கீழே விழும்போது கத்தாளை (ழ) அல்லது தாளை(ழ) முள் கிழிப் பதால் காயமுறுகிறாள் என்றும் தாழம்பூ பறிக்கும்போது தாழை கிழிப்பதால் காயமுறுகிறாள் என்றும் கதைகளில் பெண் காயமுற்றதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன(ஐ). முள் வாழை பெண்ணின் பாவாடையைக் கிழிப்பதாகக் கூறப் படும் கதைக் கூறும் (ஐ 1.2) இங்குக் கருதத்தக்கது.

பெண்ணுக்குத் துன்பத்தை (காயமேற்படுத்தல்/பாவாடை யைக் கிழித்தல்) ஏற்படுத்துவன கத்தாளை(ழ), தாளை(ழ). வாழை, வாளை, முதலை மற்றும் மனிதர் ஆகும். இவற்றுள் மனிதர் தவிர்த்த ஏனைய அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புகொண்டவையாகக் காணப்படுகின்றன. முள்ளால் அல்லது பல்லால் கிழித்துக் காயப்படுத்தும் பண்பால் இவை ஒன்றுபடுகின்றன. இவை ஒன்றிலிருந்து ஒன்றாக மாறியோ ஒன்றுக்குப் பதில் ஒன்றாக மாற்றம் பெற்றோ கதைகளில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

இந்த ஆய்வுமுறைப்படி விழுக்காட்டின் அடிப்படையில் நோக்கும்போது வாளையால் காயமுறுதல் (ஐ 1.1பி-ஓய்,2) என்பதே பழமையான கூறு என்று கொள்ளவேண்டும். இவ் வாறு கொண்டால் வாளையிலிருந்துதான் ஏனையவை மாற் றம் பெற்றிருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டும். இம்மாற்றம் எவ்வாறு நிகழ்ந்திருக்கும் என்பதைக் காணலாம்.

வாளையில் இரு நிலைகளைக் காணமுடிகிறது. முதலாவ தாக, வாளை ஒரு சாதாரண மீனாகப் படைக்கப்பட்டிருத்தல் (ஐ 1.1டி-ஓய்). ஆற்றைக் கடக்கும்போது இந்த மீன் பெண் ணைக் கடிக்கிறது; அல்லது அவள் செயலால் கோபமுற்று அவளைக் காயப்படுத்துகிறது. இரண்டாவதாக, பெண் உணவு தருவாள் என நம்பி ஆற்று நீரைக் குடித்து அல்லது அவளை முதுகில் ஏற்றிச் சென்று அவள் ஆற்றைக் கடக்க உதவும் அதீத சக்தி படைத்ததாகப் படைக்கப்பட்டிருத்தல் (உ 1ஜே & கே).

பெண் வாக்களித்தபடி உணவு தராமல் ஏமாற்றியதால் கோபமுற்று இந்த வாளை அவளைக் காயப்படுத்துகிறது. இதே தன்மைகளுடையதாக முதலை படைக்கப்பட்டிருக்கிறது (உ.1பி; ஏ1.7டி;ஐ1.1ஹ). கதைகளில் முதலை இடம் பெற்றதற்கான காரணங்களைத் தகவலாளர்களிடம் கேட்டபோது ஒருவர் நினைவுக்குறைவால் கூறியதாகவும் மற்றவர் சிறிய வாளை மீன் ஒரு பெண்ணை எவ்வாறு தூக்கமுடியும் என்று ஐயப்பட்டதால் முதலை என்று மாற்றிக் கூறியிருக்கலாம் என்றும் அறிய முடிந்தது (காண்க: இணைப்பு-1, வரிசை எண்கள் 5, 8-இற்கான குறிப்புகள்). வாளையைப் போலவே முதலையும் நீரில் வசிப்பது என்பதும் நீரில் வசிக்கும் பிராணிகளுள் மக்கள் மிகுதியாக அறிந்ததும் மனிதரைத் தாக்குமளவு உருவில் பெரியதுமாக விளங்குவது முதலை என்பதும் வாளை முதலையாக மாறியதற்குரிய காரணங்களாகும். எனவே, முதலையின் தோற்றத்திற்கு அதீத சக்தி படைத்த வாளையே காரணம் என்ற முடிவுக்கு வரமுடிகிறது. இத்தகைய கதைகள் தென்னார்க்காடு, திருச்சி மாவட்டங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இம்மாவட்டங்களில் 'நிட்டூரிகதை' யே 'வாளண்ணன் கதை' என்று வழங்குமளவிற்கு 'வாளைமீன்' கதைகளில் ஒரு பாத்திரமாகவே சிறப்பிடம் பெறுவதைக் காணமுடிகிறது.

வாளையில் காணப்படும் இரு நிலைகளும் கதை வளர்ச்சியின் படிநிலைகள் என்றே கொள்ள வேண்டும். இவ்வாறு கொண்டால் இவற்றுள் எது முந்தையது என்ற எண்ணம் தோன்றுகிறது. உண்மைக் கதை நிகழ்ச்சிகள் வாய்மொழியாகப் பரவும்போது இயற்கையிகந்த கூறுகளைப் (supernatural elements) பெறுவது இயல்பு[11]. இந்த அடிப்படையில் நோக்கினால் வாளை சாதாரண மீன் என்ற நிலையிலிருந்து வாய்மொழிப்பரவலின்போது மெல்லமெல்ல அதீத சக்தி படைத்த

11. தேசிங்குராசன் குதிரை மீது ஏறி வீரப்போர் புரிந்ததாக வரலாறும் அந்த வரலாறு நிகழ்ந்த காலத்தையொட்டித் தோன்றிய கதைப்பாடல்களும் குறிப்பிடுகின்றன. ஆனால் பிற்காலக் கதைப்பாடலில் தேசிங்குராசன் குதிரை அதீத சக்தியுள்ளதாகப் படைக்கப்பட்டிருப்பதை இங்குச் சான்றாகக் கூறலாம். (காண்க: A Ramanathan, 1981:680)

பாத்திரமாக மாறியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கே வர இயலும். எனவே, வாளையின் இரு நிலைகளுள் சாதாரண வாளைமீன் என்பதே பழமையானது என நம்பலாம். இதன் வாயிலாக அதீத சக்தி படைத்த வாளை மற்றும் முதலையோடு தொடர்புடைய கதைக்கூறுகளான உ,எ,ஏ 1.7 முதலியன பிற்கால வளர்ச்சிகள் என்பது உறுதியாகிறது.

அடுத்து, வாளையோடு நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படும் வாழை, கதையில் எவ்வாறு இடம்பெற்றது என்பதைக் காணலாம்.

இலங்கை மட்டக்களப்பில் சேகரிக்கப்பட்ட கதையில் (க.எ.2) சாதாரண வாளை **மீன் இடம்** பெற்றிருக்க, வட இலங்கையில் சேகரிக்கப்பட்ட கதையில் (க.எ.1) வாழை இடம் பெற்றிருக்கின்றது. வாளை பழைய கதை வடிவத்தில் இடம் பெற்றிருப்பதால் வாளைதான் வாழையாக மாற்றம் பெற்றிருக்க வேண்டும் என அனுமானிக்க முடிகிறது. இங்கு வாளை > வாழையாக மாறிய ஒலிநிலை மாற்றத்தோடு (phonetic change) நீரில் வாழ்வது > நிலத்தில் வாழ்வது என்ற பொருள்நிலை மாற்றமும் (semantic change) நிகழ்ந்திருக்கிறது. இம் மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்தன?

இம்மாற்றம் இரு வழிகளில் நிகழ வாய்ப்பிருக்கிறது. அவை வருமாறு:

1. இலங்கைத் தமிழில் ழகரம் ளகரமாக உச்சரிக்கப்படும்.[12] எனவே, அங்கு வாழை (தாவரம்), வாளை (மீன்) ஆகிய இரண்டும் 'வாளை' என்றே கூறப்படும். இந்நிலையில் கதை கூறியவர் வாளையை மீன் என்று நினைத்துக் கொண்டு கதையைக் கூற, கதையைக் கேட்டவர் கவனக் குறைவால் அதனைத் தாவரம் என்று கருதியிருக்காலம். பிறகு அவர் அக்கதையைப்

12. ''தென் கிளை மொழியுடன் பெரும்பான்மை ஒப்புமையுடையது இலங்கைத் தமிழ். எடுத்துக்காட்டாக ழகரம் ளகரத்துடன் இணைதலைக் குறிப்பிடலாம்'' (கோ. சீனிவாசவர்மா, 1977:156).

பிறருக்குக் கூறும்போது வாளையை வாழை (தாவரம்) என்னும் பொருளில் கூறியிருக்கலாம். வாழை (தாவரம்) எனக் கொண்டதால் அது இருக்குமிடம் நிலமாக மாற்றம் பெறுகிறது. இவ்வாறு வாளை வாழையாக ஒலி நிலையிலும் பொருள் நிலையிலும் மாற்றம் பெற்றிருக்கக் கூடும்.

2. பேச்சுத்தமிழில் ழ>ள மாற்றம் இயல்பானது. இந்த அடிப்படையில் வாழை வாளையாக மாறும். ஆனால், வ>ழ மாற்றம் இயல்பானது என்று கூறமுடியாது. விதிவிலக்காக சென்னை அயோததிக்குப்பம், தென்னார்க்காடு மாவட்ட கிள்ளை, தேவனாம்பட்டினம் போன்ற பகுதிகளின் மீனவர் கிளைமொழியில் ள>ழ மாற்றம் காணப்படுவதாக டாக்டர் கோ. சீனிவாசவர்மா (1977:197-98) குறிப்பிடுகின்றார். அதற்குச் சான்றாக அவர் தரும் சொற்களுள் வாழை, வாளை முதலியனவும் இடம் பெறுகின்றன.

அவை வருமாறு:

மீனவர் பேச்சு		தென்னார்க்காட்டுப் பேச்சு		எழுத்துமொழி
ழ்	<	ள்	<	ள்
வாழை	<	வாளெ	<	வாழை
வாழெ	<	வாளெ	<	வாளை

வாழை என்ற தாவரமும் வாளை என்ற மீன் வகையும் மீனவரின் கிளைமொழியில் ஒன்றாகவே உச்சரிக்கப்படுகின்றன. நாஞ்சில் நாட்டிலும் ள>ழ மாற்றம் காணப்படுவதாகத் தெரிகிறது. இந்தக் கிளைமொழி பேசும் மீனவர் ஒருவர் இலங்கையில் குடியேறிய போதோ, இலங்கை சென்றபோதோ இக்கதையைப் பிறருக்குக் கூறியிருக்கலாம். அவர் மீன் வகை என நினைத்து வாளையை 'வாழெ' என உச்சரிக்க அதைக்கேட்ட இலங்கைத் தமிழர் தாவர வகையைச் சேர்ந்த வாழை எனத் தவறாக எண்ணியிருக்கலாம். இவ்வாறு வாளை>வாழை மாற்றம் நிகழ்ந்திருக்க வாய்ப்பு உண்டு.

வாளை > வாழை மாற்றம் கதையில் நிகழ்ந்த பிறகு வாழை கிழிக்கக் கூடிய தன்மையுடையதன்று என்னும் எண்ணம் கதை கூறியவருக்கு ஏற்பட்டிருக்கலாம். உடனே அவர் இது 'முள் வாழை' என்று கூறிவிட்டார். (கதையின் பாடலில் வாழை என்றே உள்ளது. கதையில்தான் 'முள்வாழை' (தாவரம்) என்று மாற்றப்பட்டுள்ளது) உண்மையில் அப்படி ஒரு தாவரவகை இருப்பதாகத் தெரியவில்லை.[13]

'வாழை' என்பது இலங்கைக் கதையில் காணப்படுவதால் வாளை வாழை மாற்றம் இலங்கையில்தான் நடைபெற்றிருக்க வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. தென்கிளைமொழி ஏதாவதொன்றில் இம் மாற்றம் நிகழ்ந்திருக்கவும் வாய்ப்பிருக்கிறது. மாற்றத்திற்குப் பின்னர் கூட இலங்கைக்குப் பரவியிருக்கலாம்.

(முள்) வாழை கதையில் இடம் பெற்ற பின்னர் தாளை (ழ), கத்தாளை(ழ) முதலியன கதைகளில் இடம் பெற்றிருக்க வாய்ப்பு உண்டு. இவற்றுக்கிடையே காணப்படும் ஒலியொற்றுமை, நிலத்தில் வாழும் முட்செடிகள் என்ற தாவர இன ஒற்றுமை போன்ற காரணங்களால் இந்த மாற்றம் நிகழ்ந்திருக்கலாம். இங்கு ஒன்றுக்குப்பதில் ஒன்றாக மாறி வருவதைக் காணமுடிகிறது. இம்மாற்றம் வாளை முதலை மாற்றத்தை ஒத்தது.

நீர்வாழ் உயிர் (வாளை) நிலவாழ் உயிராக (வாழை, தாழை, கத்தாழை) மாற்றம் பெற்ற காரணத்தால் கூறு 'ஈ' யில் நீர்நிலையின் விழுக்காடு குறைகிறது.

கதைகளில் நிகழும் வாளையின் மாற்றங்களைப் பின்வருமாறு சுட்டலாம்:

வாளை (சாதாரண மீன்) > வாளை (அதீத சக்தி

13. மரப்பெயர் அகராதி தொகுக்கும் தொகுப்பியல்துறை (த.ப.கழகம்) ஆய்வாளர் டாக்டர் பெ.மாதையன் இதுவரை 'முள்வாழை' என்ற தாவர வகை பற்றிய செய்தி எதுவும் கிடைக்கவில்லை என்று கூறினார். திரு. கே.கே. இராமமூர்த்தி எழுதிய 'தமிழ்நாட்டுத் தாவரங்கள்' என்னும் நூல் தொகுதிகளிலும் இத்தாவரம் பற்றிய குறிப்பெதுவும் இல்லை. மக்களின் பேச்சு வழக்கில் அப்படி ஏதேனும் தாவரவகை இருக்கிறதா என்று தெரியவில்லை.

படைத்தது) > முதலை (அதீத் சக்தி படைத்தது)
(முள்) வாழை > தாளை (ழ) > கத்தாளை (ழ)

மனிதரால் காயமுறுவதாக இரு கதைகளில் இடம்பெறும் குறிப்பு இந்த எதனோடும் தொடர்பு கொள்ளாமல் தனித்து நிற்பதால் அது பிற்கால மாற்றமாக இருக்கலாம்.

இதுவரை கண்டவற்றை ஆதாரமாகக் கொண்டு காயத்தை ஏற்படுத்தும் வாளை கதைகளில் பலவாறு மாற்றம் பெற்றுச் சென்றுள்ளதே விழுக்காட்டு வேறுபாட்டுக்கான காரணம் என்று கூறலாம்.

4.3.3. சின்னண்ணன் அடித்ததாகப் பொய் கூறக் காரணம் என்ன?

சின்னண்ணன் மீது பழி கூற இரு காரணங்கள் கதைகளில் கூறப்படுகின்றன. ஒன்று, சின்னண்ணன் குடும்பத்தாரால் அன்பற்ற முறையில் நடத்தப்படும் (இ1.1கே) நொண்டி (ஒ1.1ஜி) என்பது. மற்றொன்று, அவன் தங்கையிடம் அன்புள்ளவனாதலால் அவனிடம் உண்மையைக் கூறிச் சமாதானப்படுத்திக் கொள்ளலாம் என நினைத்துக் (ஒ1.1எச்) கூறினாள் என்பது. இவற்றுள் எந்த ஒன்றும் கதையின் பழமையான கூறாகக் காணப்படவில்லை. இவை கதை கூறுவோர் கதைப்பொருத்தம் கருதி உருவாக்கிய கற்பனைக் காரணங்களாகலாம்.

ஒரு குடும்பத்தில் பல குழந்தைகள் இருந்தால் அக்குழந்தைகளுள் ஒரு குழந்தைக்கும் அதற்கு அடுத்துள்ள குழந்தைக்கும் (Immediate relation) இடையேயுள்ள உறவுகள் பெரும்பாலும் போட்டி, பொறாமை காரணமாக சர்ச்சைக்குரிய உறவாகவே அமைவதைக் காணலாம். பெற்றோர்கள் அன்பு செலுத்துவதில் (தின்பண்டங்களைப பிரித்துத் தருதல் போன்றவற்றில்)குழந்தைகளுக்கிடையே காட்டும் வேறுபாடு இதற்குக் காரணமாகலாம். இக்கதையில் தங்கை தன் சின்னண்ணன் மீது பழி கூற இது போன்றதொரு உறவு அவர்களிடையே நிலவியது காரணமாகலாம் என்று ஊகிக்கமுடிகிறது.[14]

---

4. டாக்டர் இராம. சுந்தரம் அவர்களிடம் உரையாடியபோது (21. 4. 83 அவர் கூறிய இக்கருத்து சரியானது என்பதை டாக்டர் கதிர்காமன் (உள்நோய் மருத்துவர், இரர்சா மிராசுதார் அரசினர் மருத்துவமனை) உறுதி செய்தார்.

4.3.4. தாய் மகனைக் கொல்வாளா?

பெண் குற்றவாளிகளைப் பற்றி உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் மாநிலங்களில் சமீபத்தில் மேற்கொள்ளப் பட்ட சமூக--உளவியல் (Soeio-Psychological) ஆய்வொன்று திருமணமானபெண்களே மிகுதியான குற்றங்களைச் செய்கிறார்கள் என்றும் அவர்கள் செய்யும் குற்றங்களுள் கொலைக் குற்றமே மிகுதி (92.5%) என்றும் சுட்டுகிறது. மேலும் குறைந்த மற்றும் மிகக்குறைந்த வருவாயுடைய குடும்பங்களைச் சேர்ந்த கல்வியறிவற்ற கிராமப்புறப் பெண்களிடையே இத்தகைய குற்றங்கள் மிகுதி என்றும் குடும்பப்பகை, உறவுகளுக்குள் காணப்படும் பூசல்கள், பொருளாதாரம், பாலுறவுப் பூசல்கள் போன்ற காரணங்களால் கொலைகள் நடைபெறுகின்றன என்றும் அந்த ஆய்வு தெளிவுபடுத்துகிறது.[15] இம்முடிவுகள் தமிழகத்திற்குப் பொருந்தாது என்று கூற முடியாது. பத்திரிகைச் செய்திகளும் நாட்டுப்புற இலக்கியங்களும் பெண் கொலைக் குற்றவாளிகளைப் பற்றிய ஏராளமான செய்திகளை நமக்குத் தருகின்றன. அவற்றுள் மாமியார்-மருமகள், அண்ணி-நாத்தி போன்ற போராட்ட உறவுகளுக்கிடையே நடக்கும் கொலைகள் பற்றிய செய்திகளே மிகுதி.[16] மனைவி கணவனைக் கொல்லும் செய்திகளும் காணப் படுகின்றன.[17] ஆனால்,முதனிலைக் குருதி உறவினர் (primary consanguineos) களுக்கிடையே ஒரு பெண் தன் பெற்றோர் களையோ சகோதர சகோதரிகளையோ குழந்தைகளையோ கொல்வதாகவரும் செய்திகள் மிகமிக அருகியே காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாகத் தாய் மகனைக் கொல்வதாக அமையும் செய்தி புதுமையானதே.[18] மேலும், இது திட்டமிட்டுச்

15. மத்திய சமூக நலத்துறை அமைச்சகத்தின் உதவியுடன் பேராசிரியர் பத்மா அகர்வால என்பவர் நிகழ்த்திய ஆய்வு முடிவுகள் இவை. விவரங்களுக்குக் காண்க: 'Married Women Commit more Crime than unmarried', Indian Express, 14. 3. 83, p.7.
16. சான்றுக்குக் காண்க: கி. ராஜநாராயணன் (1976:82)
17. சானறுக்குக் காண்க: ஆ. இராமநாதன் (1980:561-64)
18. நல்லதங்காள் குழந்தைகளைக் கொல்வது முற்றிலும் வேறான சூழ்நிலையாகும. வறுமைக்கொடுமையால் தாய் குழந்தைகளைக் கொல்வதாக இன்று வெளிவரும் செய்திகளும் (Indian Express, 23. 3. 83 p.3) இதனோடு ஒத்ததே.

செய்யப்படும் கொலையாகக் காணப்படுகிறது. எனவேதான் கதையைக் கேட்கும் பலருக்கும் தாய் மகனைக் கொல்வாளா என்ற ஐயம் தோன்றுகிறது. தாய் மகனைக் கொலை செய்யும் செய்தி தெளிவாகக் காணப்படுகிறதானாலும் கொலை செய்வதற்கான காரணம் பலமற்றதாக அமைவதால் கதை கேட்போரின் ஐயம் பலமாகிறது. இந்த ஐயத்தைப் போக்கக் கதைகளில் கொல்வோரும், கொல்லப்படுவோரும் மட்டும் மாற்றப்படுகின்றனர். மாற்றங்கள் நிகழ்ந்த நிலப்பகுதிகளில் உண்மைக் கொலை நிகழ்ச்சி ஏதேனும் நடைபெற்றிருந்தால் அவைகூட மாற்றங்களுக்குக் காரணமாக அமைந்திருக்கலாம். இதுபோன்ற சிறு மாற்றங்கள் வாயிலாகத் துணை வடிவங்கள் (வடிவங்கள் 2,3,4) தோற்றம் பெற்றுள்ளன எனக் கொள்வது தவறாகாது.

வடிவம் 2-இல் மகளின் தூண்டுதலால் ஒரு தாய் தன் மூத்தாளின் சின்ன மகனைக் கொல்கிறாள். இங்குக் கொல்பவரும் கொல்லப்படுபவரும் போராட்ட உறவினராக மாற்றப்படுகின்றனர். இம் மாற்றத்தின் வாயிலாக இக்கொலை இயல்பான தானே என்னும் எண்ணத்தையூட்டி மக்களுக்கு எழும் ஐயம் போக்கப்படுகிறது. இலங்கையில் சேகரிக்கப்பட்ட கதை இது.

மாற்றாந்தாய் மூத்தாள் மகனைக் கொல்லும் கதையே பழங்கதையாக இருந்து பின்னால் தாய் மகனைக் கொல்வதாக மாற்றம் பெற்றிருக்குமோ என்ற ஐயம் இங்கு எழுவது இயல்பு. அவ்வாறு மாற்றம் பெற்றிருக்கும் என்று கூறுவதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. மேலும், பண்பாடற்றதாக அல்லது இயல்புக்கு ஒவ்வாததாகச் சமுதாயத்தால் கருதப்படும் ஒரு நிகழ்ச்சி, பண்பாட்டுக்கு ஓரளவு ஒத்து வரும் வண்ணம் அல்லது இயல்புக்கு ஒத்துவரும் வண்ணம் மெல்ல மெல்ல மாற்றம் பெறுவதற்கே நாட்டுப்புற இலக்கியச் சான்றுகள் காணப்படுகின்றன.[19] அவ்

19. அண்ணன், உடன்பிறந்த தங்கையின் எதிர்ப்பை மீறி அவளைப் புணர்வதாக ஒரு கதைப்பாடல் கூறுகிறது. (ஆ. இராமநாதன், 1980: 587-601). இதே கதைப்பாடல் அண்ணன் தங்கைகளாகப் பழகிய அடுத்தடுத்த வீட்டைச் சேர்ந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் உறவு ஏற்படுவதாக மாற்றமுற்ற நிலையைக் காணமுடிகிறது (நா. வானமாமலை, 1977: 247-48).

வாறிருக்க இயல்புக்கு ஒத்துவரும் ஒரு நிகழ்ச்சி (மாற்றாந்தாய் மூத்தாள் மகனைக் கொல்வது) இயல்புக்கு ஒவ்வாத நிகழ்ச்சி யாக (தாய் மகனைக் கொல்வதாக) மாறியிருக்கும் என்று கூற இயலாது.

வடிவம் 3-இல் அக்காள் தம்பியைக் கொல்கிறாள். கோவை மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட இவ்வடிவத்தில் தாய் இடம் பெறவேயில்லை. அக்காள்-தம்பி உறவும் முதனிலைக் குருதி உறவுதான். ஆயினும் தாய்-மகன் உறவை ஒப்பிட இவ்வுறவு நெருக்கமானதன்று. கதையில் அக்காள்-தம்பி உறவு அன்பற்ற தாகவே கூறப்படுகிறது (ஏ3). தங்கை தன் சின்னண்ணன் மீது பழி கூறுவதற்குக் கூறப்பட்ட அதே காரணம் இந்த உறவு அன்பற்றதாக இருப்பதற்கும் காரணமாகலாம். இந்த மாற்றங் கள் இக்கொலையை இயல்பாக்குகின்றன. இக் கதை வடிவத்தில் பெண் கடந்து செல்லவேண்டிய பகுதி காடு எனவும் அவள் அங்கு ஒரு மானிடம் அன்பு செலுத்தியதாகக் கூறப்படுவதும் குறிப்பிடத்தக்க மாற்றங்களாகும். இம் மாற்றங்கள் நீர்நிலை யற்ற காடுகள் மிகுந்த நிலப்பகுதியில் இக்கதை வழங்கும்போது ஏற்பட்டிருக்கலாம்.

வடிவம் 4-இல் தங்கையின் தூண்டுதலால் அண்ணன்மார் சின்னானைக் கொல்கின்றனர். குமரி மாவட்டத்தில் சேகரிக்கப் பட்ட இவ்வடிவத்திலும் தாய் இடம்பெறவில்லை. சின்னண்ணன் சின்னான் என்ற வேலைக்காரனாக மாற்றம் பெறுகிறான். சின்னண்ணன் > சின்னான் மாற்றம் ஒலிப்பொற்றுமையால் நிகழ்ந்ததா அல்லது திட்டமிட்டு நிகழ்ததப்பட்டதா என்பதை உறுதி செய்யமுடியவில்லை.[20] இங்கு வேலைக்காரனைப்

---

20. கேரளத்தில் வழங்கப்படும் கதையொன்று இக்கதை வடிவத்தோடு ஒப்பு நோக்கத்தக்கதாக உள்ளது.
''வேலைக்காரன் உண்ணும் பழம் எசமானன் வீட்டுப் பெண் மீது தவறி விழ, தண்டனைக்குப் பயந்து ஊரைவிட்டு ஓடிய வேலைக்காரன் பல நாள் கழித்து ஊர் திரும்புகிறான். அவன் குளத்தில் குளித்துக் கொண்டி ருக்கும்போது அவனை எசமானன் கொலை செய்கிறான். கொலையுண்ட வேலைக்காரன் குளக்கரையில் வைத்திருந்த வாள் பறந்து சென்று தாமரை மலர்களை வெட்டி விட்டுக் கடலோரக் குடிசையின் அருகே விழு கிறது. பயந்த எசமானன் அங்கே ஒரு கோயில்கட்டிப் பூசை செய்தான்''.
ஆதாரம்: K. K. N. Kurup (1973: 52-53)

பெண்ணின் சகோதரர்கள் கொலை செய்கிறார்கள். இக்கொலை இயல்பான ஒன்றாக மாற்றப்படுகிறது. பெண்ணின் பொய்யால் இக்கொலை நிகழ்ந்தது என்ற உண்மை வெளிப்படும் போது பெண்ணின் சகோதரர்கள் சின்னானுக்குப் பூசை செய்துஅவன் கோபத்தைத் தணிக்கின்றனர் (ண1) என்று கதை முடிகிறது.

எது எப்படியாயினும், 'தாய் மகனைக் கொல்வாளா' என்ற ஐய வினா கதையில் துணை வடிவங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம் என்பதை ஊகிக்க முடிகிறது. இதே வினா கதை வளர்ச்சிக்கு எவ்வாறு காரணமாக அமைந்தது என்பதைக் காணலாம்.

4.3.4.1. ஐய வினாவும் கதை வளர்ச்சியும்

'தாய்தான் கொலை செய்தாள்' என்று ஒப்புக் கொண்டபின் 'ஏனென்றால்..' என்ற வினாவை எழுப்பிக்கொண்டுஅதற்கு விடைகூற முயலும் போது கதை கூறுவோரின் கற்பனை வளத்திற் கேற்பக் கதை வளர்ச்சி பெறுவதைக் காண முடிகிறது.

பெண் குழந்தை இல்லையே எனத் தாய் ஏங்குவதாகவும் மந்திர சக்தி உள்ள ஒருவரின் உதவியால் அவளுக்கு ஒரே ஒரு பெண் தப்பிப் பிறப்பதாகவும் அப் பெண் தாயின் செல்லப் பிள்ளையாக இருப்பதாகவும் கூறப்படும் 'குழந்தை பிறப்பு வளர்ப்பு' (அ) பற்றிய கதை நிகழ்ச்சிகள் இத்தகைய வளர்ச்சிக்குச் சிறந்த சான்றாகிறது. ஏங்கித் தவமிருந்து பெற்ற ஒரே செல்வ மகளாதலால் அவளைக் காயப்படுத்திய மகன் மீது கோபங்கொண்டு அவனை அவள் கொல்வது இயல்புதானே என்று தாயின் செயலுக்கு ஒரு காரணத்தைக் கற்பிக்கின்றன இந்நிகழ்ச்சிகள். இது 'நிட்டூரிகதை'யின் பிற்கால வளர்ச்சி. இதில் காணப்படும் மாற்றங்கள் (அ2-5) மக்களின் பல்வேறு

இக்கதையில் இடம்பெறும் வேலைக்காரன், எசமான், பெண், குற்றம், கொலை, அதிதசக்தி, மலர், பூசைவழிபாடு முதலிய கூறுகள் வடிவம் 4-உடன் ஒத்துக் காணப்படுகின்றன. இக்கதையின் செல்வாக்கால் வடிவம் 4 தோற்றம்பெற்றதோ என்ற ஐயமும தோன்றுகிறது.

வகைப்பட்ட நம்பிக்கைகளை ஆதாரங்களாகக் கொண்டவை யாகும்.[21]

அடுத்து, சின்னவனை நொண்டியாகக் கூறும் கதை நிகழ்ச்சி அவன் நொண்டியாதலால் தாய் அவனைத் தாழ்வாகவே நடத்துவதாகவும் (இ 1.1 கே)மகள் அவன்மீது பழி கூறியவுடன் அவனைக் கொல்வதாகவும் இக்கதை கூறுகிறது. தாயின் மனநிலை திரிவதற்கான ஒரு காரணத்தைக் கூற முயன்றாலும் இக்கதை பிற்கால வளர்ச்சியே. சின்னவனை நொண்டி என்று மாற்றியவர்கள் அவன் பிறரைப் போலவே ஏர் உழுவதாகக் கூறப்படுவதை(ஊ)மாற்ற மறந்து விட்டனர். கதை, உழைப்பை முதன்மையாகக் கொண்ட ஒரு விவசாயக் குடும்பத்தில் நிகழ்கிறது (ஆ). இததகைய குடும்பங்களில் பால் (sex) வேறு பாடில்லாமல் உழைப்போர் அனைவரும் முக்கியத்துவம் பெறு கின்றனர். இங்கே, நொண்டி வேலையே செய்ய முடியாதவ னாகச் சித்திரிக்கப்பட்டிருந்தால் ஒரு வேளை அவன் அந்தக் குடும்பத்தில் மதிப்பற்றவனாகக் கருதப்பட்டிருக்க வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால், இங்கு நொண்டி உழைப்பவனாகவே கூறப்படுவதால் மாற்றத்தின் நோக்கம் நிறைவேறவில்லை.

இந்த வளர்ச்சிகள் அனைத்தும் தாய் செய்யும் கொலைக்குப் பொருத்தமான காரணங்களைக் கற்பிக்கவே முயல்கின்றன. ஆயின் மகளைக் காயப்படுத்திய ஒரு சிறு குற்றத்திற்காகத்

---

21. மந்திர சக்தியால் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை இதில் தலையாய தாகும். சாமியார், முனிவர், குடுகுடுப்பைக்காரன், மந்திரவாதி (அ2) போன்றோர் மந்திரசக்தி உள்ளவர்களாக நம்பப்படுவதால் அவர்கள் கதைகளில இடம் பெறுகின்றனர். நாட்டு மருத்துவத்தில் மிளகு ஒரு மருத்துவப்பொரு ளாகும். ''நாட்டு இலந்தை இலை ஒருபிடி, கெட்டி மிளகு ஆறு, பூண்டு உரித்தது நான்கு ஆகியவற்றைப்போட்டு நன்றாக அரைத்து, பெண்கள் மாத ருது ஆன முதல் நாள் இரண்டாம் நாள் காலை வெறும் வயிற்றில் கொடுத்துவிட, கருப் பையின் குற்றங்கள் நீங்கி புத்திர சந்தானம் உண்டாகும். இது நமது நாட்டுச் சித்தர்களின் இரகசிய முறைகளில் ஒன்றாகும'' (ஆ.இரா. கண்ணப்பர்,1974:33). இந்த அடிப்படையில் மிளகு கதையில் இடம் பெற்றிருக்கலாம் (அ 3,4,5). மிளகு என்பதைக் குறியீடாகக்கொண்டு விந்து எனக் கொள்வோமேயானால் 'தப்பி ஓடிய மிளகு பெண்ணாகப் பிறத்தல்' என்பது பல ஆண் பிள்ளைகள் பிறந்த இடத்தில் 'தப்பிப் பிறந்த பெண்' என்று பொருள் கூறலாம்.

தாய் மகனைக் கொலை செய்வாளா என்ற வினாவிற்கு அவை சரியான விடையளிக்கவில்லை.

'கிழித்தல்', 'காயப்படுத்தல்' என்பனவற்றைக் குறியீடுகளாகக் கொண்டு 'பெண்ணின் கன்னித்தன்மைக்கு ஊறு செய்தல்' என்று பொருள் கொண்டால் தாயின் செயலுக்குப் பொருத்தமான விடை கிடைக்கிறது. பெண், தான் செய்த தவறு காரணமாகவோ பிற காரணத்தாலோ வேறொரு ஆடவனிடம் தன் கன்னிமையை இழந்து நிற்க, மகளின் நிலையை ஊகித்த தாய் அந்நிலைக்குக் காரணம் யார் என்று கேட்க, பெண் சின்னண்ணன் மீது பழி கூற, தாய் கோபமுற்று அவனைக் கொல்கிறாள் என்று கொள்வது பொருத்தமாகத் தோன்றுகின்றது. 'வாளை கிழித்தல் – காயப்படுத்தல்' என்பதே ஏதேனும் ஒரு சமுதாயத்தில் 'ஓர் ஆண் ஒரு பெண்ணின் கன்னித் தன்மையை அழித்தல்' என்னும் பொருளைத் தரும் குறியீடாக வழங்கப்படுகிறதா என்பதைக் கண்டறிய வேண்டும். ஊகத்தினடிப்படையாகத் தோன்றிய இக்கருத்துகளுக்குப் போதிய ஆதாரம் கிடைக்கும்வரை இதனை உண்மை என்று ஏற்றுக் கொள்ள இயலாது.

நச்சுணவு தந்து (65%) தாய் தன் சின்ன மகனைக் கொன்று புதைக்கிறாள் (85%)' என்னும் மூலக்கதைக்கூறில் காணப்படும் விழுக்காட்டு வேறுபாட்டிற்கான காரணத்தை இங்கே காண்பது பொருத்தமாகும்.

நச்சுணவு தந்து கொல்வதான செய்தியைக் கதை கூறுவோர் கலை உணர்வோடும் கேட்போர் வியக்கும் வண்ணமும் கூற முனையும்போது நச்சுத்தன்மையுள்ள பாம்பினைச் சமைத்துப் போடுவதாகவும் பிறகு அதற்கேற்பப் பாம்புணவின் நஞ்சு உடலில் பரவுவதற்குத் தாய் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளும் (ஓ1.1கே-1.2) கூறப்படுகின்றன. கதை கூறுவோர் தாயின் கொடூரச் செயலை மிகைப்படுத்துவதன் வாயிலாக அத்தாயின் மீது மிதமிஞ்சிய வெறுப்பையும் கொலை செய்யப்படுபவன் மீது அனுதாபத்தையும் ஏற்படுத்த முனைவதை உணரமுடிகிறது. வெட்டிக்கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டுள்ள செய்தி (ஓ1.3)

கதை கூறியவரின் நினைவுக் குறைவால் கதையில் இடம் பெற்ற தாகும். அடித்துக்கொல்லல் (ஓ4) என்பதும் பிற்காலததில் நிகழ்ந்த மாற்றம் எனலாம். இவ்வாறு, கொல்லப்படும் முறை பலவாறாக மாற்றமடைந்து நிற்பதால் விழுக்காட்டு வேறுபாடு காணப்படுகிறது எனலாம்.

4.3.5. பூ தர மறுத்த பிறகு திருமணம் நடைபெறுவதாகக் கூறப்படும் கதை முடிவு சரியானதா?

தங்கையே தன் கொலைக்குக் காரணமாக அமைந்தவள் என்பதை அனைவரும் அறியுமாறு வெளிப்படுத்தும் சின்னண் ணன் அவள் திருமணத்திற்குப் பூ தர மறுப்பதன் வாயிலாகத் திருமணத்தை நிறுத்தி அவள் செயலுக்கான தண்டனையை வழங்குகிறான். ‘தவறு செய்வோர் தண்டனையடைவர்’ என் னும் உலக நியதிப்படி பார்த்தால், இத்துடன் கதை முடிவு பெறவேண்டும். ஏழு கதைகள் (ய1.1ஜி,எச்,ஜே) இவ்வாறு முடிகின்றன. ஏனைய கதைகளில் இம்முடிவு மாறியும் வளர்ச்சி பெற்றும் காணப்படுகிறது. இதற்கான காரணங்களைக் காணலாம்.

‘தவறு செய்யும் பெண்ணுக்குப் பூ வாடிவிடும் என்றும் அவளை மணக்கப்போகும் மாப்பிள்ளை தவறு செய்யாதவ னாதலால் அவனுக்குப் பூ வாடாது’ என்றும் கூறி சின்னண்ணன் பூ தருவதாக அமையும் ஒரு கதை (ட1.2ஜே) ‘தவறு செய்யா தவர் தண்டனையடையக்கூடாது’ என்ற எண்ணத்தால் வளர்ச்சி பெற்றதாகலாம். இக்கதை திருமணத்தில் முடிகிறது.

அனைவருக்கும் பூ தர மறுப்பவன் மாமா கேட்கும்போது மட்டும் தருவதாகக்கூறப்பட்டிருக்கும் கதை (ட3) அது வழங்கும் சமுதாயததில் மாமாவுக்குள்ள மரியாதையைச் சுட்டுவதாக அமைகிறது. பெண்ணின் திருமணம் நடைபெறுவதாக இக்கதை முடிகிறது.

தான் குற்றமற்றவன் என்பதை அனைவரும் அறிய மெய்ப் பித்த பிறகு சின்னவன் பூ தருவதாக ஒரு கதை (ட1.2கே) முடிகிறது. ‘பழியுடன் இறக்கக்கூடாது; அப்படியே இறந்தாலும்

அப்பழியைத் துடைத்துக் கொள்ள வேண்டும்' என்ற கருத்தை விளக்குவதாக இம்முடிவு காணப்படுகிறது.

தவறு செய்யும் பெண் தன் தவறுக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டபிறகு சின்னண்ணன் பூ தருவதாக அமையும் இரண்டு கதைகள் (ட 1.2ஜி & எச்) கிருத்துவ மதத்தைச் சேர்ந்தவர்களால் கூறப்பட்டவை. 'பாவமன்னிப்பு' பற்றிய கிருத்துவ மதக் கொள்கை காரணமாக இம்முடிவு ஏற்பட்டிருக்கலாம். இக்கதைகளும் திருமணத்தில் முடிகின்றன.

வேறு சில கதைகள் பூ கேட்கும் அனைவரும் உயிரற்றவர்களாகின்றனர் என்றும் தனித்துவிடப்பட்ட பெண் வருந்தி அழ, சக்திமிக்க ஒருவர் தோன்றி உயிரற்றவர்களுக்கு உயிரளிக்கிறார் என்றும் தொடர்ந்து செல்கிறது (த-ப). இங்கே, செய்த தவறுக்கு வருந்தினால் கடவுள் அருள் கடவுளிடமிருந்து நேரடியாகவோ சாமியார், முனிவர் போன்றோர் வாயிலாகவோ கிடைக்கும் என்ற நம்பிக்கை இந்துக்களிடையே உள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது. 'செய்த பாவத்திற்கு வருந்தி மன்னிப்பு கேட்டால் கடவுள் மன்னிப்பார்' என்னும் நம்பிக்கை இந்து–கிருத்துவ மதங்கள் இரண்டிலும் காணப்பட்டாலும் கிருத்துவ மதத்தினர் அந்நம்பிக்கைக்குத் தரும் முக்கியத்துவத்தைப் பிரதிபலிப்பதாகக் கிருத்துவர்கள் கூறிய கதைகள் காணப்பட்டதால் அது தனியே குறிப்பிடப்பட்டது.

உயிர் பெற்றதாகக் கூறப்படும் கதை ஏழனுள் (ப1ஜி–கே)ஒரு கதையில் (ம) மட்டும், உயிர்பெற்ற சின்னண்ணன் வீட்டிற்குத் திரும்ப மறுத்து மீண்டும் இறந்து விடுவதாகக் கூறப்படுகிறது. 'இறந்தவர் வந்தால் இருக்க எடங் கொள்ளாது' என்ற நம்பிக்கை (இது கதையில் இடம்பெறுகிறது) இக்கதைப் போக்கிற்குக் காரணமாக அது மறைகி.[22] பிற கதைகளில் (ய1.3)

---

22. இந்த நம்பிக்கையின் அடிப்படையிலான கற்பனை பல நாட்டுப்புறப் பாடல்களிலும் கதைகளிலும் காணப்படுகின்றன. இக்கற்பனை, பாடல்கள் மற்றும் கதைகளை மக்கள் விரும்பியவாறு நடத்திச் செல்லத் துணை புரிகின்றன. காண்க: கி. ராஜநாராயணன் (1976:68-70); ஆ. இராமநாதன் (1980:302).

உயிர்பெற்ற சின்னண்ணன் வீடு திரும்புவதாகவும் தங்கையின் திருமணம் நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது. 'கதைகள் மங்கலமாக முடியவேண்டும்' என்ற இந்திய இலக்கியக் கொள்கை காரணமாக இநத முடிவு கதைகளில் தோற்றம் பெற்றிருக்கவேண்டும். இவ்வாறு பல்வேறு காரணங்களால் கதைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியானது திருமணம் நடைபெறுவதாக அமையும் கதைக்கூறினுடைய விழுக்காட்டினை மிகுதிப்படுத்தியுள்ளது.

திருமணத்தில் முடியும் கதைகளுள் இரு கதைகள் மட்டும் (ர1·1·) பெண் புகுந்த வீடு செல்வதாகவும் கருவுற்ற அவளை அழைத்துவரும் வழியில் அவள் அண்ணன் அவளைக் கொன்று விட்டுப் பிறரறியாமல் மறைப்பதாகவும் அவள் கொல்லப் பட்ட இடத்தில் முளைக்கும் செடி (அல்லது அவள் பிணம்) உண்மையைப் பிறரறிய வெளிப்படுத்துவதாகவும் வளர்ந்து செல்வதை அறியமுடிகிறது. இப் 'பழிவாங்கும் கதை' இதுவரை நாம் ஆராய்ந்த 'நிட்டூரிகதை'யினின்று வேறுபட்ட வடிவ மாகக் காணப்படுகிறது. நிட்டூரி கதையே இவ்வாறு இயல்பாக வளர்ச்சி பெற்றதா? அல்லது அதனை ஒத்த வேறொரு கதை நிட்டூரி கதையோடு இணைந்ததா? என்ற ஐயம் தோன்று கின்றது. இயல்பான வளர்ச்சியானாலும் இணைப்பால் ஏற்பட்ட வளர்ச்சியானாலும் இவ்வளர்ச்சி பிற்காலத்தில் நிகழ்ந் திருக்கும் என்று அறியமுடிகிறது.

இதுவரை கண்டவற்றால்-

கதையின் பழைய வடிவத்தை (அல்லது மூலக்கதையை) மேலும் தெளிவாக அறிந்துகொள்ள முடிந்தது.

சமூகச்சூழல் போன்ற காரணங்களால் கதைகூறுவோருக் குக் கதையில் ஏற்படும் ஐயங்கள், அந்த ஐயங்களுக்கு அவர்கள் கூறும் விளக்கங்கள், கதை கேட்போருக்கு ஐயம் ஏற்படுமிடங் களை உணர்ந்து அதனைப்போக்க மேற்கொள்ளும் முயற்சி கள், வட்டாரவழக்கு, நினைவுக்குறைவு, பிழையாகக் கூறுதல் பின்னர் அதனைப் பொருத்தமானதாக மாற்றும் முயற்சி, கதைகூறும் உத்திமுறைகள், சார்ந்திருக்கும் மதம் போன்ற

பல்வேறு காரணங்களாலும் கதை வழங்கப்படும் நிலத்தின் கருப் பொருள்கள் சமுதாயத்தில் நிலவும் நம்பிக்கைகள் முதலியன கதையில் இடம் பிடிப்பதாலும் கதைகளில் வளர்ச்சியும் மாற்றங் களும் ஏற்படுகின்றன; துணை வடிவங்களின் தோற்றத்திற்கும் இவையே காரணங்களாகும் என்பதனைப் புரிந்துகொள்ள முடிந்தது.

கதைகளில் முதன்மைக் கூறுகளை ஒப்பிட்டத் துணைக்கூறு களே மிகுதியான மாற்றங்களுக்கு உள்ளாகின்றன என்ற உண் மையை அறிந்து கொள்ள முடிந்தது.

துணைக்கூறுகளில் நிகழும் மாற்றங்கள் பெரும்பாலும் ஏதேனும் ஒருவகையில் தொடர்புள்ளனவாகவே அமைகின்றன என்ற உண்மையையும் உணர்ந்து கொள்ளமுடிந்தது. (உ-ம். வாளை, முதலை, (முள்) வாழை, தாளை, கத்தாளை).

4.4. கதை தோன்றிய (Origin) இடம்

'எந்த நாட்டில் ஒரு கதையின் மிகமிக முந்தைய வடிவம் வழக்கில் காணப்படுகிறதோ அதுவே அது தோன்றிய நாடா கும். அங்கிருந்துதான் அது பல நாடுகட்கும் பரவியிருக்கும்' (வி. ஐ. சுப்பிரமணியம், 1981:5). மீட்டுருவாக்கம் செய்யப் பட்ட நிட்டூரி கதையின் பழைய வடிவத்தோடு தஞ்சை, வடார்க் காடு மாவட்டக் கதைகளும் புதுச்சேரி மாநிலக கதைகளும் நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. தென் னார்க்காடு, திருச்சி மாவட்டக் கதைகள் அதன் வளர்ச்சியாகக் காணப்படுகின்றன. இவற்றின் மூலக்கதைக் கூறுகள் பெரிதும் மாற்றமடையாமல் உள்ளன. இவற்றைக் கொண்டு நோக்கும் போது மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஒரு பகுதியில் இக்கதை தோற்றம் பெற்றுப் பிற இடங்களுக்குப் பரவியிருக்கலாம் என்று அனுமானிக்க முடிகிறது.

ஒரு கதை எவ்வளவுக்கெவ்வளவு அதிக தூரம் பரவிச் செல்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதில் வேறுபாடுகள் மிகுந்து காணப்படும். நிட்டூரி கதையின் துணை வடிவங்கள் கோவை மாவட்டம்,குமரி மாவட்டம், இலங்கை முதலிய பகுதிகளிலேயே

கிடைக்கின்றன. கதையின் துணைக் கூறுகளில் மாற்றங்கள் காணப்படுவதும் தமிழகத்தின் தென் மாவட்டங்களிலேயே மிகுதியாகக் காணப்படுகின்றன. இவற்றைக்கொண்டு நோக்கும். போது நிட்டூரிகதை வடார்க்காடு, தென்னார்காடு, புதுச்சேரி, திருச்சி, தஞ்சாவூர் மாவட்டப் பகுதிகளில் தோன்றிப் பிற இடங்களுக்குப் பரவியிருக்கலாம் என்ற கருத்து வலுப்படுகிறது. தெற்கு நோக்கிப் பரவிச் செல்லச்செல்ல மாற்றங்கள் தோன்றியிருக்கலாம்.

4.5. தோன்றிய காலம்

'நிட்டூரி கதை' ஏட்டிலக்கியங்கள் எதிலும் இடம் பெற்றதாகத் தெரியவில்லை. நாட்டுப்புற இலக்கியத் தொகுப்புக்களுள்ளும் 1961-இல்தான் முதன் முதலில் இடம்பெறுகிறது. இந்த ஆய்விற்காகக் கதைகூறிய தகவலாளர்களுள் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி தங்கப்பழம் (வயது 74) என்பவரே அதிக வயதானவர். இவர் இக்கதையைச் சுமார் அறுபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கற்றுக் கொண்டாராதலால் இக்கதை அறுபத்திரண்டு ஆண்டுகட்கு முற்பட்டது என்று கூறலாம். அடுத்து, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி அம்மாதனம் (வயது 70) ஐம்பத்தைந்து ஆண்டுகட்கு முன் இக்கதையைக் கற்றுக்கொண்டதாகக் கூறினார். முன்னவர் கூறிய கதையின் ஒரு துணைக்கூறு மூலக்கதையினின்று மாற்றம் பெற்றுக் காணப்படுகிறது. (வாளை > கத்தாளை (ழ) மாற்றம் இங்குக் குறிப்பிடப்படுகிறது). பின்னவர் கூறிய கதை மூலக்கதை விரிவாக வளர்ந்திருந்த வளர்ச்சியாகக் காணப்படுகிறது. ஐம்பத்தைந்து ஆண்டுகட்கு முன்பே மாற்றம் பெற்ற மற்றும் வளர்ச்சி பெற்ற கதை வடிவங்கள் தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் காணப்பட்டிருப்பதால் அவை தோன்றிப் பரவி வளர்ச்சி பெற எடுத்துக்கொள்ளும் காலத்தைக் கருதி இக்கதை ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்குள் தோன்றியதாக இருக்கலாம் என்று ஊகிக்கமுடிகிறது.

உண்மையில் இக்கதை பல நூற்றாண்டுகட்கு முற்பட்டதாகவும் இருக்கக் கூடும். நமக்குப் போதிய ஆதாரங்கள்

கிடைக்கும்வரை இக்கதையின் காலம் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்குள் தோன்றியது என்றே கொள்ளவேண்டும்.

4.6. கதையின் நிலைபேற்றுக்கான காரணங்கள்

கதை, பாடல் முதலிய நாட்டுப்புற இலக்கிய வடிவங்கள் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களிடமே மிகுதியாகக் காணப்படுகின்றன. முன்னேறிய சாதியினரிடம் மிகக் குறைந்த அளவே காணப்படுகின்றன. அவையும் பெரும்பாலும் நாட்டுப்புற இலக்கிய அமைப்பில் எழுதிப் பரப்பப்பட்ட பாடல்களாகவே இருக்கும் (உ ம். இராமர் தாலாட்டு, கிருஷ்ணர் தாலாட்டு, ஞானஏத்தம்). பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியினரிடையே வழங்கப்படும் இலக்கியங்களை இவர்கள் விரும்பாததற்குக் காரணம் அந்த இலக்கியங்களின் பொருண்மையும் அவற்றில் பயின்றுவரும் கொச்சைச் சொற்களுமேயாகும். 'நிட்டூரி கதை'யைப் பொறுத்தவரை முன்னேறிய சாதியினர் உட்பட அனைத்துச் சாதியினரிடமும் செல்வாக்குடன் காணப்படுகிறது. கதை கூறியோருள் பெரும்பான்மையோர் இக்கதையைப் பெரியோர்கள் விரும்பிக் கூற, பத்து அல்லது பன்னிரண்டு வயதில் கற்றுக்கொண்டதாகக் கூறினர். இக் கூற்றால் இக் கதை பெரியோர்களால சிறியோருக்கு விருமபிக் கூறப்படும் ஒரு கதை என்பதையும் சிறியோர் இதனை விரும்பிக் கேட்டு மனத்தில் பதித்துக்கொண்டுள்ளனர் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. 'நிட்டூரி கதை' பல்வேறு சாதியினைச் சேர்ந்த கதை கூறுவோர் கேட்போர் ஆகிய இரு தரப்பினராலும் விரும்பப்படுவதானது கதையின் நிலை பேற்றுக்கு அடிப்படையாக அமைகிறது. அவ்வாறு விரும்பப்படுவதற்கான காரணங்கள் வருமாறு:

தாய் மகனைக் கொலை செய்வதாக அமையும் கதை நிகழ்ச்சி இயல்புக்கு விரோதமாக இருப்பதால் கதை கேட்போரின் நினைவில் சட்டென்று பதியக்கூடியதாக உள்ளது. தொடக்கத்தில் கதை பரவுவதற்கு இதுவே காரணமாக இருந்திருக்க வேண்டும்.

கதையில் பூ கேட்டலும் தர மறுத்தலுமாகிய இடத்தில்

இடம் பெறும் பாடலின் சோக இசை மக்களைத் தன் வயப் படுத்தக் கூடியதாக உள்ளது. சிலர் பாடலை மட்டுமே நினைவில் வைத்திருந்து அதன் வாயிலாகக் கதையை நினைவு கூர்ந்ததை இங்குச் சுட்டிக் காட்டலாம்.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அதே குடும்பத்தைச் சேர்ந்த மற்றவரைப் பற்றிப் பொய்யான தகவல்களைக் கூறினால் அன்புறவுகளுக்குள் பகைமையும் பழிவாங்கும் எண்ணமும் தோன்றிக் கொலை நிகழவும் காரணமாகி விடும் என்ற எச்சரிக்கையும் 'தவறு செய்வோர் தண்டனை யடைந்தே தீருவர்' என்னும் சமூக நீதியும் இக்கதையில் காணப்படுவதால் குடும்பப் பெரியவர்கள் சிறியவர்களுக்கு இதனைத் தொடர்ந்து கூறி வருகின்றனர். பல்வேறு சாதி யினரும் நிட்டூரி கதையை விரும்புவதற்கு இவையே காரண மாகலாம்.

கதையில் இடம்பெறும் இயற்கையிகந்த நிகழ்ச்சிகளும கதை கூறுவோர் கதைகூறும்போது பயன்படுத்தும் உத்தி முறைகளும் கதை கேட்போருக்குக் குறிப்பாக இளை யோருக்கு ஆர்வத்தைத் தூண்டுவனவாக உள்ளன.

5. முடிவுரை

இதுவரை நிட்டூரி கதையின் 'வாழ்க்கை வரலாறு' ஆராயப் பட்டு அதன் பழைய வடிவம், அது தோன்றிய இடம், காலம் முதலியன அனுமானிக்கப்பட்டன. அத்துடன் அக்கதையின் துணை வடிவங்கள் தோன்றியதற்கான காரணங்கள், கதையின் பல்வேறு மாற்றங்களுக்கான மற்றும் நிலைபேற்றுக்கான கார ணங்கள் முதலியனவும் அனுமானிக்கப்பட்டன. இக்கதை முதன்முதலில் நடந்த நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டோ கற்பனையாகவோ தோன்றியிருக்கலாம். அதனை நிச்சயமாகக் கூற இயலவில்லை. இக்கதை வடிவங்கள் மேலும் சேகரிக்கப் பட்டு ஆராயப்பட்டால் இவ்வுண்மையும், மேலும் பல உண்மை களும் விளங்கக்கூடும்.

நிட்டூரிகதை: வரலாற்று - நிலவியல் ஆய்வு (இரண்டாம் பகுதி)

தமிழர்களிடையே (தமிழ்நாடு, புதுச்சேரி, இலங்கை முதலிய பகுதிகளில்) செல்வாக்குடன் காணப்படும் நிட்டூரிகதை இந்தியாவின் பிற மாநிலங்களிலும் உலகின் பிற நாடுகளிலும் வழங்கப்படுகிறதா என்பதைக் கண்டறிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது.[1] அதன் விளைவாக இக்கதையோடு ஒப்புநோக்கத் தக்க கதை வடிவங்கள் ஆந்திரம், மகாராட்டிரம், பீகார், வங்காளம் ஆகிய மாநிலங்களில் வழங்கப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. மேலும், தமிழகத்தின் குமரி மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட கதை ஒன்றும் இதனோடு ஒப்பு நோக்கத்தககதாகக் காணப்படுகிறது. அத்துடன் நிட்டூரிகதையில் காணப்படும் ஓர் அடிப்படையான கதைக்கூறு மட்டும் (காண்க: இணைப்பு-4, ஔ.) இந்தோனேசியா, வியத்நாம் நாட்டுக் கதைகளில் காணப்படுவதையும் அறியமுடிந்தது.

பல்வேறிடங்களில் வழங்கப்படும் இக்கதைகளைப் படிக்கும் போது பின்வரும் ஐயங்கள் எழுகின்றன. இக்கதைகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமைக்குக் காரணம் என்ன? இவை அனைத்தும் ஓரிடத்தில் தோன்றிப் பிற இடங்களுக்குப் பரவினவா? அல்லது வெவ்வேறிடங்களில் தோற்றம் பெற்றனவா? இவற்றுள் முதலில் தோற்றம் பெற்ற கதை அல்லது கதைக்கூறு எது? அது தோன்றிய இடம் எது? அதன் காலம் என்ன? தோன்றிய இடம் பற்றி அறிந்துகொள்வதற்குப் போதிய சான்றுகள்

---

1. கேரளம், கருநாடகம், ஆந்திரம், மகாராட்டிரம், பீகார், அஸ்ஸாம், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், காஷ்மீர், பஞ்சாப், வங்காளம், குஜராத், ராஜஸ்தான், அரியானா, இமாசலப்பிரதேசம் முதலிய இந்திய மாநிலங்களிலிருந்தும் இந்தோனேசியா, ஈரான், எகிப்து, பாகிஸ்தான், இலங்கை, பர்மா, நேபாளம், தாய்லாந்து, டர்க்கிஷ், மலேசியா, பிரான்சு, ஆர்மீனியா முதலிய நாடுகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட கதைத் தொகுதிகள் பார்வையிடப்பட்டன. மேலும், ஆசிய நாடோடிக்கதைகள், உலக நாடோடிக் கதைகள் போன்ற கதைத் தொகுப்புகளும் பார்வையிடப்பட்டன. இவை எதுவும் முழுமையாகவோ முறையாகவோ தொகுக்கப்பட்டவை அல்ல (எகிப்து விதிவிலக்கு) என்றாலும் உலக நாட்டுப்புறக்கதைகளை ஓரளவு அறிந்துகொள்ள இவை உதவுகின்றன.

நமக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் கிடைத்திருக்கும் சான்று களைக் கொண்டு ஓரளவு ஊகிக்க முயலலாம்.

முதலில் ஆய்வு வசதிக்காகக் 'கொலை செய்யத் தூண்டு பவர்-கொல்பவர்-கொல்லப்படுபவர்' என்ற அடிப்படையில் கதைகளை வகைப்படுத்தி அவற்றுக்குக் குறியீடுகள் நல்குவது பயனுடையதாக அமையும். இந்தவகையில் தமிழர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட 'நிட்டூரிகதை' யின் பழைய வடிவத்தைக் கொண்டிருக்கும் கதைகளை 'பி' வகைக் கதைகள் என்றும், அதன் வடிவங்களை முறையே $பி_1$, $பி_2$, $பி_3$ எனறும் கொண்டு ஆய்வினைத் தொடரலாம். இங்கு ஆய்வு செய்ய இருக்கும் கதைகளுக்கு உரிய இடங்களில் குறியீடுகள் நல்கப்படும்.

1. ஆந்திரம், பீகார், மகாராட்டிரக் கதைகள்

சேகரிக்கப்பட்ட பிற மாநிலக் கதைகளுள் ஆந்திரம், பீகார் மாநிலக் கதைகள் நெருங்கிய தொடர்பு கொண்டனவாகக் காணப்படுகின்றன. அவற்றின் கதைச்சுருக்கம் வருமாறு (விரி வான கதைகளுக்குக் காண்க: இணைப்பு-5):

தாய் வீட்டில் தங்கியிருக்கும் மணமான பெண்ணொருத்தி விழாநாளொன்றில் தன் அண்ணியின் புடவையை இரவல் கேட்க, 'அழுக்கடையக்கூடாது' என்ற நிபந்தனையுடன் அண்ணி நாத்திக்குப் புடவை இரவல் தருகிறாள். புடவை அழுக்காகிறது அல்லது அண்ணியின் சூழ்ச்சியால் அழுக் காக்கப்படுகிறது. அண்ணி படுக்கையில் படுத்துக்கொண்டு நாத்தியைக் கொன்றால்தான் அல்லது கொன்று அவள் இரத்தத்தைப் புடவையில் நனைத்தால்தான் எழுவேன் என்று கணவனிடம் கூறுகிறாள். கணவன் மனைவியின் பேச் சைக் கேட்டுக்கொண்டு தங்கையைத் தனியாக அழைத்துச் சென்று கொல்கிறான். கொன்ற இடத்தில் முளைக்கும் தாமரை/மாமரம் தக்க நேரத்தில் கொலைகாரர்களைப் பிறர் அறிய வெளிப்படுத்துகிறது. பெண்ணின் கணவன் மலரைத் தன் தலையில் சூடிக்கொள்ளும்போது அல்லது மரத்திடம் பேசும்போது பெண்ணாகிறது. அப்பெண் கணவனோடு சென்று வாழ்கிறாள்.

அடுத்து, மகாராட்டிரக் கதை வருமாறு:

> 'அமாவாசையன்று மனித இரத்தத்தில் நனைத்த சோளியுடன் குளக்கரையில் இருக்கும் அரச மரத்தை இருபத்தொருமுறை சுற்றினால் குழந்தை பிறக்கும்' என்று மந்திரக்காரி கூறியதைக்கேட்ட பெண், தன் நாத்தியைக் கொன்று சோளியை இரத்தத்தில் தோய்த்துத் தருமாறு கணவனை வற்புறுத்த, அதற்கிணங்கும் அவன், தங்கையை அத்தை வீடு செல்வதாகக் காட்டிற்கு அழைத்துச்சென்று கொன்று மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றுகின்றான். பெண்ணின் தலை எறியப்பட்ட குளத்தில் முளைத்துப் பூக்கும் செந்தாமரை தக்க நேரத்தில் கொலைகாரர்களைப் பிறர் அறியச் செய்கிறது. இறுதியில் தாய் தொட செந்தாமரை பெண்ணாகிறது. கொலைக்குக் காரணமானவர்கள் வீட்டை விட்டு விரட்டப்படுகின்றனர்.

இம் மூன்று கதைகளும் கொல்லப்படும் காரணங்களால் வேறுபடுகின்றனவானாலும் 'மனைவியின் தூண்டுதலால் அண்ணன் தங்கையைக் கொல்கிறான்' என்ற நிலையில் ஒன்றுபடுகின்றன. இவ்வகைக் கதைகளை 'சி' வகைக் கதைகள் என்று கொள்ளலாம்.

'சி' வகைக் கதைகளோடு 'பி' வகைக் கதைகளில் காணப்படும் 'உயிர்பெற்ற சின்னவன் தங்கையைக் கொன்று பழி வாங்கிய கதை' (ர) ஒப்பு நோக்கத்தக்கதாக உள்ளது. அண்ணன் தங்கையைக் கொலை செய்யும் வகையில் இவை ஒன்றுபடுகின்றன. கொலைக்கான காரணங்கள் ('சி' வகைக் கதைகள்: மனைவியின் தூண்டுதலால் கொலை நிகழ்கின்றது. 'பி' வகைக் கதைகள்: தன் கொலைக்குக் காரணமாக இருந்த தங்கையை அண்ணன் தான் உயிர்பெற்ற பின் கொன்று பழி வாங்குவதாக அமைகிறது) வேறுபடுகின்றன. இந்த ஒற்றுமை வேற்றுமைகள் எவ்வாறு ஏற்பட்டிருக்கும் என்பதனை அறிந்து கொள்ளப் பின்வரும் மூன்று வழிகளில் சிந்திக்கலாம்:

முதலாவது, அண்ணன் தங்கையைக் கொல்வதாகத் தமிழகத்திலேயே தோன்றிய கதை ஒன்று 'பி' வகைக் கதை

தமிழர்களிடையே பெற்றுள்ள செல்வாக்கு காரணமாகத் தனித்தியங்க இயலாமல் 'பி' வகைக் கதையோடு பொருத்த மாக (பழிவாங்கும் கதையாக) இணைந்திருக்கலாம்.

இரண்டாவது, தமிழகத்தின் வடக்கு மாநிலங்களுள் ஏதேனும் ஒன்றில் தோன்றித் தமிழகத்தில் பரவிய 'சி' வகைக் கதை, 'பி' வகைக் கதை தமிழர்களிடையே பெற்றுள்ள செல்வாக்கு காரணமாகத் தனித்தியங்க இயலாமல் சிற்சில மாற்றங்களைப் பெற்று 'பி' வகைக் கதையோடு இணைந் திருக்கலாம்.

மூன்றாவது, 'பி' வகைக் கதையின் வளர்ச்சியாகத் தோற் றம் பெற்ற 'பழிவாங்கும் கதை' தனியே பிரிந்து சில மாற் றங்களைப் பெற்றுத் தமிழகத்தின் வடக்கு மாநிலங்களுக் குப் பரவி 'சி' வகைக் கதையாகியிருக்கலாம்.

இந்த மூன்றனுள் இரண்டாவது ஊகம் உண்மையாக இருப்பதற்கு வாய்ப்பு அதிகம் எனத் தோன்றுகிறது. இதற்கான காரணங்கள் வருமாறு:

தமிழகத்தின் வடக்கு மாநிலங்களில் 'சி' வகைக் கதை பரவ லாகக் காணப்படுவதால் அம் மாநிலங்களுள் ஏதேனும் ஒன்றில் அது தோன்றியிருக்க வாய்ப்பிருக்கிறது.

ஆந்திரம், மகாராட்டிரம் முதலிய மாநிலங்களில் அக்கதை காணப்படுவதால் தெலுங்கு நாயக்கர்கள் அல்லது மராட் டிய மன்னர்கள் தமிழகத்தை ஆண்ட காலக் கட்டத்தில் (16-18 நூற்றாண்டுகளில்) கதை தமிழகத்தில் பரவியிருக் கலாம். அவ்வாறு பரவியபோது அது 'பி' வகைக் கதையோடு இணைந்திருக்கலாம்.

கதைத் துவக்கம், உச்சம், முடிவு ஆகியவற்றைக்கொண்டு நோக்கினால் இரண்டு தனித்தனிக் கதைகள் ஒன்றாக இணைந்திருக்கின்றன என்றே கருதத் தோன்றுகிறது. ஒரே கதையின் வளர்ச்சியாகத் தோன்றவில்லை.

இருவேறு கதைகள் ஒன்றாக இணைவது நாட்டுப்புறக் கதைகளில் நடக்கக் கூடிய ஒன்றே.[2]

'பழிவாங்கும் கதை' இடம் பெறும் 'பி' வகைக் கதைகள் குறிப்பாகத் தஞ்சை,[3] திருச்சி, தென்னார்க்காடு மாவட்டப் பகுதிகளில் காணப்படுகின்றன. பிற பகுதிகளிலிருந்து கிடைக்கவில்லை. தெலுங்கு நாயக்கர்களும் தஞ்சை மராட்டியர்களும் ஆட்சி செய்த தஞ்சைப் பகுதியிலிருந்து இக் கதை பிற இடங்களுக்குப் பரவியிருக்கலாம்.

இக் காரணங்கள் ஓர் அழுத்தமான முடிவுக்கு வரப் போதுமானவையாக இல்லைதான். ஆயினும் முற்றிலும் புறக் கணிக்கத்தக்கன அல்ல.

2. குமரி மாவட்டக் கதை

கதைப் பாத்திரங்களில் காணப்படும் ஒப்புமை கருதி அடுத்து குமரி மாவட்டக் கதையைக் காணலாம். கதைச்சுருக்கம் வருமாறு:

> கணவனில்லாத நேரத்தில் ஒரு பெண் தன் நாத்தியைக் கொன்று புதைத்துவிட்டு அவளை விலங்கு அடித்துக் கொன்று விட்டதாகக் கணவனிடம் பொய் கூறிவிடுகிறாள். புதைத்த இடத்தில் தாழைச்செடி முளைக்கிறது. பண்டிகை நாளில் மனைவி சூட அச்செடியில் மலர் பறிக்க முயலும் கணவனுக்குத் தாழையாக இருக்கும் அவன்

---

2. இக்கட்டுரையாளர் சேகரித்துள்ள 'அதிரசப்பிரியன்' என்னும் கதையை இதற்குச் சான்றாகக் கூறலாம். இக் கதையின் முன் பகுதி 'பெண்மணியும் பெண் நரியும்' என்னும் பஞ்சதந்திரக்கதை (பாகம்-2, 1977) ஆகும். பின்பகுதி நாட்டுப்புறத்தில் வழங்கும் தனிக்கதையாகும். அவை பொருத்தமாக-ஒரே கதையாக இணைந்துள்ளன.

3. இத்தகைய கதையொன்று தஞ்சை மாவட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்டது. (கூறியவர் பற்றிய விவரம்: கே.சதாசிவம், வயது-35; சாதி-பறையர்; முகவரி: சர்வமானியம் தெரு, திருநகரி அஞ்சல், சீர்காழி வட்டம்-609 122). தாமதமாகக் கிடைத்ததால் அக்கதை இந்த ஆய்வில் சேர்த்துக் கொள்ள இயலவில்லை. அக்கதை பின்னிணைப்பு 2-இல் உள்ள 9,12 எண்ணுள்ள கதைகளை அப்படியே ஒத்திருக்கும்.

தங்கை நடந்த உண்மையைக் கூற, அவன் மனைவியைக் கொல்கின்றான்.

அண்ணன், அண்ணி, நாத்தி ஆகிய பாத்திரங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளை மையமாகக் கொண்டது என்ற அடிப்படையில் இக்கதை 'சி' வகைக் கதையோடு தொடர்புடையதாகக் காணப்படுகிறது. ஆயினும் கொல்வோர், கொல்லப்படுவோர் என்ற நிலையில் இக்கதை 'சி' வகைக் கதையிலிருந்து மாறுபடுகிறது. எனவே, இதனை 'டி' வகைக் கதை என்று கூறலாம.

'சி' மற்றும் 'டி' வகைக் கதைகளுக்கிடையே காணப்படும் தொடர்பு 'சி' வகைக்கதையே 'டி' வகைக் கதையாக மாற்றம் பெற்றதோ என்ற ஐயததை ஏற்படுத்துகின்றது.

'சி' வகைக் கதையைக் கேட்போருக்கு'என்னதான் மனைவி தூண்டினாலும் அண்ணன் (முதனிலைக் குருதி உறவினனான) தங்கையைக் கொல்வானா' என்னும் ஐயம் ஏற்படுவது இயல்பு. அந்த ஐயத்தைப் போக்குவதற்குப் போராட்ட உறவினளான அண்ணியே நாத்தியைக் கொலை செய்ததாகக் கதை மாற்றப் பட்டிருக்கலாம். இவ்வாறாக 'சி' வகைக் கதை தமிழகத்தில் பரவும்போது 'டி' வகைக் கதையாக மாறியிருக்க வாய்ப்பிருக் கிறது. ஆனால், இக்கருத்தைத் திட்டவட்டமாகக் கூறப் போதிய சான்று இல்லை.

'டி' வகைக் கதை தமிழகத்திலேயே தோன்றியிருக்கவும் வாய்ப்பிருக்கிறது. அண்ணி-நாத்தி உறவு, போராட்ட உற வாகவே காணப்படுகிறது. இந்த உறவுகளுக்கிடையே ஒருவரை யொருவர் கொடுமைப்படுத்தல், கொலை முயற்சி, கொலை போன்ற நிகழ்வுகள் காணப்படுவது இயல்பு. இந்தியாவெங் கிலுமுள்ள கூட்டுக் குடும்பங்களில் இதுபோன்ற நிகழ்வுகளை மையமாகக் கொண்ட கதைகள் நாட்டின் பல்வேறிடங்களி லும் தோன்றுவதில் வியப்பில்லை.[4]

4. 'கொடிய அண்ணிமார்' என்ற பீகார் கதை (ராய் சௌதரி, 1979:48-50)இங்குக் குறிக்கத் தகுந்தது. அண்ணன்மார் வெளியூர் சென்ற நேரத்தில்

3. வங்காளக்கதை

வங்காளக் கதையின் சுருக்கம் வருமாறு:

> அரசனின் அன்புக்குரிய சின்ன மனைவிக்கு ஏழு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறக்க, அரசனின் மூத்த மனைவியர் அறுவரும் சேர்ந்து அக்குழந்தைகளைப் புதைத்துவிட்டு அரசனிடம் சின்னவளுக்குப் பூனைக்குட்டிகளும், நாய்க்குட்டிகளும் பிறந்ததாகப் பொய்கூறி அவளை அரண்மனையை விட்டு விரட்டுகின்றனர். குழந்தைகளைப் புதைத்த இடத்தில் முளைக்கும் செடியிலிருக்கும் பூக்கள் தக்க நேரத்தில் கொலையாளிகளைப் பிறர் அறியச் செய்கின்றன. தாய் பூக்களைத் தொடக் கடவுள் அருளால் அவை நன்கு வளர்ந்த ஏழு ஆண் பிள்ளைகளாகவும் ஒரு பெண்ணாகவும் மாறுகின்றன. அரசன் கொலைகாரிகளை உயிருடன் புதைத்துவிட்டு, சின்ன மனைவியோடும் குழந்தைகளோடும் வாழ்கிறான்.

இக்கதை முன் கூறப்பட்ட கதை வகைகளிலிருந்து மாறுபடுவதால் இதனை 'எப்' வகைக் கதை எனலாம்.

'எப்' வகைக் கதை சிறு வேறுபாடுகளுடன் தமிழ்நாடு[5], உத்திரப்பிரதேசம் (K. P. Bahadur, 1979: 43-45), இமாசலப் பிரதேசம் (K. A. Seethalakshmi 1980: 61-63) போன்ற பிற மாநிலங்களிலும் வழங்கப்படுகிறது. வங்காளக் கதைக்கும் பிற

அண்ணிமார் அறுவரும் நாத்தியைக் கொடுமைப்படுத்தி இறுதியில் ஒரு மரத்திலேற்றிக் கொல்ல முயல்வதாகவும், ஊர் திரும்பும் அண்ணன்மார் அந்த மரத்தில் இளைப்பாறும்போது தப்பித்து மரத்திலிருக்கும் தங்கையைக் கண்டு உண்மையை அறிந்து வீட்டிற்கு அழைத்து வருவதாகவும், மனைவிமாரைக் கொல்வதாகவும் கதை அமைந்துள்ளது. இக்கதையில் அண்ணிமார் கொடுமைப்படுத்தும் பகுதி மகாராட்டிரக் கதையின் முதல் பகுதியோடு ஒத்துப்போகிறது. இக்கதையில் கொலை முயற்சி நடைபெறுகிறதேயொழிய கொலை நடைபெறவில்லை. கொலை முயற்சி தாவரத்தோடு தொடர்புபடுத்தப்படுகிறது. முயன்றால் இதுபோன்ற கதைகள் மிகுதியாகக் கிடைக்கும்.

5. இதே கதை 'புத்திகெட்ட ராசா' என்ற பெயரில் தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்து (தமிழ்நாடு) இக்கட்டுரை ஆசிரியரால் சேகரிக்கப்பட்டது.

மாநிலக் கதைகளுக்குமிடையே காணப்படும் அடிப்படை வேறுபாடுகள் வருமாறு:

வங்காளக் கதையில் கொலை நடக்கிறது. பிற மாநிலக் கதைகளில் கொலை முயற்சி நடக்கிறது.

வங்காளக் கதையில் கொன்று புதைக்கப்பட்ட இடத்தில் செடி முளைத்து அச் செடியிலிருந்து தெய்வ அருளால், கொல்லப்பட்டவர்கள் உயிருடன் மீள்கின்றனர். பிற மாநிலக் கதைகளில் பல்வேறு கொலை முயற்சிகளிலிருந்து தெய்வ அருளால் குழந்தைகள் தப்புகின்றனர்.

பிற வகையில் கதைகள் ஒன்றுபடுகின்றன (உத்திரப் பிரதேசக் கதையில் மட்டும் தாய் இறந்த நிலையில் மாற்றாந் தாய் கொடுமைப்படுத்துவதாகக் கூறப்படுகிறது). ஒற்றுமைகளை மனத்தில் கொண்டு நோக்கும்போது முன்பே நாட்டின் பல்வேறு மாநிலங்களில் வழங்கிக் கொண்டிருக்கும் ஒரு கதை வங்காளத்தில் வழங்கும்போது கொலை, செடி முளைத்தல், குற்றவாளிகளைப் பிறர் அறியச் செய்தல் முதலிய கூறுகளைப் புதிதாகப் பெற்றிருக்கும் என்று நினைக்கத்தோன்றுகிறது.

4. நால்வகைக் கதைகளின் பழைய கூறுகள்/கூறு

பி, சி, டி, எப் ஆகிய நால்வகைக் கதைகளையும் ஒப்பிட்டு நோக்கும்போது பின்வரும் நான்கு மூலக்கதைக் கூறுகள் பெரும்பான்மையான கதைகளில் இடம் பெற்றிருப்பதை அறிந்து கொள்ள முடிந்தது:

மனித உயிரொன்று நியாயமற்ற முறையில் கொலை செய்யப்படுகிறது (100%).

கொலையுண்ட இடத்தில் அல்லது உடல் புதைக்கப்பட்ட இடத்தில் ஒரு தாவரம் முளைக்கிறது (96%)

தக்க நேரத்தில் தாவரம் கொலையாளிகளைப் பிறரறியச் செய்கிறது (100%).

கொலைக்குக் காரணமானவர்கள் (ஏதேனும் ஒரு விதத்தில்) தண்டிக்கப்படுகின்றனர் (92%).

நால்வகைக் கதைகளுள்ளும் இந்த நான்கு கூறுகளே பழமையானவை என்று கூறலாம்.

இக் கூறுகள் முதன்முதலில் ஏதேனும் ஒரு கதையில் தோன்றியிருக்கலாம். அது இங்கு ஆய்வு செய்யப்பட்ட நாலவகைக் கதைகளுள் ஒன்றாகவோ, இதே போன்றதொரு நிகழ்ச்சியமைந்த வேறு ஏதேனும் கதையாகவோ இருக்கக்கூடும். எனவே, அக்கதையை 'எக்ஸ்' என்று சுட்டலாம். பின்னர் பல்வேறு இடங்களில் பல்வேறு காலக்கட்டங்களில் உண்மைகளை ஆதாரமாகக் கொண்டோ, கற்பனையாகவோ புதிதாகத் தோன்றிய அல்லது முன்பே வழக்கிலிருந்த கதைகளில் 'எக்ஸ்' கதையில் தோன்றிய இந்தக் கூறுகள் பொருத்தமாக இணைந்திருக்கவேண்டும். அவ்வாறு இணைந்ததற்கான காரணத்தைக் காணலாம்.

நால்வகைக் கதைகளிலும் கொலை நிகழ்ந்து கொலைக்குக் காரணமானவர்கள் தப்பிப்பது வரையிலான நிகழ்ச்சிகள் யதார்த்தமானவை. ஆனால், அத்துடன் கதைகள் முடிக்கப்பட்டால் 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்ற சமுதாய நீதிக்குப் புறம்பாக அக்கதைகள் அமைந்துவிடும். அதனை மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயங்குவர். (இங்கு ஆய்வு செய்யப்பட்ட கதைகளுள் ஆந்திரம், பீகார் மாநிலக் கதைகளில் மட்டும் குற்றவாளிகள் தண்டனையடைவது பற்றிய குறிப்பு காணப்படவில்லை. இது உண்மையில் கதை கூறுவோரின் (அல்லது கதை சேகரித்தோரின் கவனக் குறைவால் நேர்ந்த விடுபாடாக இருக்கலாம்.) எனவே, குற்றவாளிகள் தண்டனையடையுமாறு கதைகளை அமைக்கவேண்டிய கட்டாயமும் கடமையும் கதை கூறுவோருக்கு ஏற்படுகிறது. ஆனால், பிறர் அறியாவண்ணம் கொலை செய்த குற்றவாளிகளைப் பிறர் அறிய வெளிப்படுத்துவது எவ்வாறு என்ற சிக்கல் அவர்களுக்கு ஏற்படுகிறது. இக்காலத் துப்பறியும் கதை எழுதுவோர் இதுபோன்ற சிக்கல்கள் தோன்றும் இடங்களில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து வெளிப்

படுத்தத் துப்பறியும் நிபுணர் அல்லது காவல்துறை அதிகாரி போன்ற பாத்திரங்களைப் படைப்பர். ஆனால், கிராமப்புற மக்களின் கற்பனையில் கொலை செய்யப்பட்டவரின் உயிர் மற்றொரு உயிராக (தாவரம்) உருவெடுத்துக் கொலைக்குக் காரணமானவர்களை வெளிப்படுத்தித் தண்டனையடையச் செய்வதாகக் கதை அமைக்கப்படுகிறது. இங்குக் குற்றவாளிகளைத் தண்டனையடையச் செய்வதற்காகத் தாவரம முளைத்தல், அது குற்றவாளிகளைப் பிறரறியச் செய்தல் என்னும் இயற்கையிகந்த கூறுகள் (Supernatural Elements) தோற்றம் பெறுகின்றன. இக்கூறுகளை 'ஒய்' என்ற குறியீட்டால் சுட்டலாம்.

முதன்முதலில் இவ்வாறு கதையில் ஏற்படும் சிக்கலைத் தீர்த்தல், கதையை மேலும் வளர்த்துச் செல்லல், சமுதாய நீதியை நிலை நிறுத்தல் போன்ற பல்வேறு காரணங்களுக்காகத் தோற்றம் பெற்ற கதைக் கூறுகள் பின்னர் அதேபோன்ற சூழலமைந்த கதைகளில் கதை கூறுவோரால் எளிதில் பயன்படுத்தப்பட்டன. இந்த வகையில் 'ஒய்' கூறுகள் இந்தியாவில் பரவலாகக் காணப்படும் பலவகைக் கதைகளில் இடம் பெறுவதைக் காணமுடிகிறது. இவ்வாறு ஒரு சில கூறுகள் மட்டும் நாட்டின் பல்வேறிடங்களுக்குப் பரவிச் சென்று பல கதைகளில் பொருத்தமாக இணைவதும் நாட்டுப்புறக் கதைகளில் காணக் கூடிய ஒன்றே.

அடுத்து, பழமையான கூறுகள் என்று மேலே குறிப்பிடப்பட்ட நான்கு கூறுகளுக்கும் எக்கூறு பழமையானது? அக்கூறு தோன்றுவதற்கு அடிப்படையாக அமையும் செய்தி என்ன? அச்செய்தி எக்காலச் சமுதாயத்தில் தோற்றம் பெற்றது என்பன போன்ற ஐயங்களுக்கு விடை காணலாம்.

முதலில் 'பழமையான கூறு எது' என்பதைக் காணலாம். இதற்கு இந்தோனேசியா, வியத்நாம் ஆகிய நாடுகளில் வழங்கும் கதைகள் துணைபுரிகின்றன.

இந்தோனேசியக் கதையில்[6] நல்ல மனித உயிரொன்று கொன்று புதைக்கப்படுகிறது. புதைக்கப்பட்ட இடத்தில் நெற் பயிர் முளைக்கிறது. (இக் கதையில் ஒரு நல்ல நோக்கத்திற் காகக் கொலை நிகழ்வதால் கொலை செய்யப்பட்ட உயிர் கொலையாளிகளைப் பிறர் அறியக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.) வியத்நாம் கதையில்[7] கணவனும், மனைவியும் விழுந்து இறக்கும் இடத்தில் தாவரம் முளைப்பதாகக் கூறப்படு கிறது.

இந்த ஆதாரங்களைக் கொண்டு நோக்கும்போது 'கொலை யுண்டு இறந்த இடத்தில் அல்லது உடல் புதைக்கப்பட்ட இடத் தில் தாவரம் முளைக்கிறது' என்ற கூறே மிகப்பழைய கூறாக இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வர முடிகிறது. இக்கூறு 'உடலை விட்டுப் பிரிந்த ஓர் உயிர் மற்றொரு உயிராக மாறும்' அல்லது 'உயிர் கூடு விட்டுக் கூடு பாயும்' என்ற மறுபிறப்பு

---

6. ''தேவ தேவரின் வளர்ப்பு மகளான தேவிஸ்ரீ அழகு மிக்கவள். அவள் அழகில் மயங்கி தேவதேவரே அவளை மணந்து கொள்வாரோ எனத் தேவர்கள் பயந்தனர். அவ்வாறு செய்தால் தேவலோகம் அழிந்துவிடும். எனவே, வேறு வழியின்றி தேவர்கள் தேவிஸ்ரீயை விஷமிட்டுக் கொன்று விடுகின்றனர். அவள் கல்லறையில் விநோதச் செடியொன்று முளைக்கிறது. அதுவே நெற்பயிராகும். நெல் மணிகளைப் பூமிக்கு எடுத்துச் சென்று பாஜாஜர மன்னனுக்குத் தன் பரிசாக அளிக்குமாறு தேவதேவர் உத்தரவிடு கிறார்......'' இவ்வாறு செல்கிறது கதை.

கி. குருமூர்த்தி, (1980:53-58)

7. ''உருவ ஒற்றுமையுள்ள சகோதரர்கள் இருவருள் தம்பியின் காதலியை அண்ணன் மணந்து கொள்ள நேர்கிறது. ஒரு நாள் அண்ணி தன் கொழுந் தனைக் கணவன் என்று தவறாகக் கருதிக் கையைப்பற்ற, அதனைக் கண் ணுற்ற அண்ணன் கோபங்கொள்ள, வீட்டில் அமைதியின்மை ஏற்படுகிறது. தம்பி வீட்டைவிட்டு வெளியேறிப் பல இடங்களுக்குச் செல்பவன் அசதியி னால் ஓரிடத்தில் விழ்ந்து இறக்க, அந்த இடம் ஒரு சுண்ணாம்புக்கல்லாக மாறுகிறது. பிறகு, தம்பியைத் தேடி அண்ணன் வந்து அதே இடத்தில் விழுந்து இறக்க சகோதர பாசத்தினால் பாக்கு மரமாகிறான். கணவனை யும், மைத்துனனையும் தேடிவரும் பெண் அதே இடத்தில் விழுந்து இறக்க அவள் உடல் வெற்றிலைக் கொடியாகி பாக்கு மரத்தில் படர்ந்தது. மக்கள் அவர்களுக்கு நினைவாலயம் அமைத்தனர். மன்னர் சுப நிகழ்ச்சி களில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு பயன்படுத்தப்படவேண்டும் என்று உத்தரவிட்டார்''.

கி. குருமூர்த்தி (1980:47-51).

நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டது. இக்கருத்தும் நம்பிக்கையும் கதைக்கூறும் முதன்முதலில் எக்காலக் கட்டத்தில் தோற்றம் பெற்றிருக்கும் என்பதைக் காணலாம.

5. பழைய கூறு தோற்றம் பெற்ற காலம்

திராவிட மொழிகளுள் மிகப்பழமையான இலக்கணச் சான்றான தொல்காப்பியத்தில் 'உயிர் அழியாதது' என்ற கருத்தும், 'உயிர் ஒருடம்பை விட்டு வேறுடம்பு செல்லும்' என்ற நம்பிக்கையும் காணப்படுகிறது (ச.தண்டபாணி தேசிகர், 1978: 256–57). தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளும் சங்க காலத்தில் 'உயிர் அழியாதது' என்ற கருத்து தமிழகத்தில் நிலவியது என்பதை உறுதிப்படுத்துகின்றன.[8] எனவே, இக் கருத்தும் நம்பிக்கையும் சங்க காலத்திற்கும் தொல்காப்பியர் காலத்திற்கும் முற்பட்டவை எனத் தெரிகிறது.

திராவிட நாகரிகம் என்று ஆய்வாளர்களால் கருதப்படும் சிந்துவெளி நாகரிக[9] காலத்தில் (கி.மு. 2500- 1500) 'உயிர் அழியாதது' என்ற கருத்தும் மறுபிறப்பு பற்றிய நம்பிக்கையும் மககளிடையே காணப்பட்டன என்று ஊகிக்க முடிகிறது.[10]

---

8. ''சங்ககாலத் தமிழர்களது கல்லறைகள் பொதுவாகக் கிழக்குப் பக்கத்தில் ஒரு மனிதன் நுழையுமளவுக்கு இடைவெளியைக் கொண்டுள்ளன. இறந்தோரின் ஆன்மா, தான் வேண்டும்போது கல்லறைக்குள் நுழையவும் வெளியே செல்லவும் அந்த இடைவெளியைப் பயன்படுத்தக்கூடும் என்று அவர்கள் நம்பி வந்தார்கள். இறந்தவர்கள் இவ்வுலக வாழ்வைத் துறந்த பின்னரும் உயிர் வாழ்வர் என்று நம்பியே அவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் பயன்படுத்திய அன்றாடத் தேவைப் பொருள்களையும் சேர்த்துப் புதைத்து வந்தார்கள் போலும்''.

சா. குருமூர்த்தி (1974:50),

9. 'சிந்து நாகரிகம் திராவிட நாகரிகத்திலிருந்து வேறுபட்டது என்பது ஐயப்படக்கூடியது. ஆராய்ச்சியாளர்கள் இவ்விரு நாகரிகத்திற்கும் பெரும் ஒற்றுமை காணப்படுவதாகக் கூறுகின்றனர் ...... திராவிட நாகரிகத்தைப் பற்றிச் சொல்லியவை எல்லாம் சிந்து நாகரிகத்திற்கு மிக நன்றாகப் பொருந்துகின்றன''.

இராதாகிருஷ்ணன், சர்வபள்ளி, (1970:47),

10. '' சிந்து நதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தில் தெளிவாகக் காணும் வேதத் தொடர்பில்லாத் ஒரு மூலக்கருத்து' மிக முக்கியமானது; இறந்த உடலைப் போக்கும் முறை அது. புதை தாழிகள் இங்குத்தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இறந்த மனிதர்கள் புதைக்கப்பட்டனர், எரிக்கப்படவில்லை என்று இவை

நான்கு வேதங்களுள் மிகப் பழமையானதாகக் கருதப் படும் இருக்கு வேத காலத்திலும் (கி. மு. 1500) மறுபிறப்பு பற்றிய நம்பிக்கை நிலவியதாக ஊகிக்கப்படுகிறது.[11] பிந்திய வேதகால நாகரிகத்தில் (கி.மு.800-600) கூடுவிட்டுக் கூடு பாய்தல், கர்மவிதி போன்ற சமயத்துறைக் கொள்கைகள் தோன்றின என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. (கோ. தங்கவேலு, 1976; 113) மேலும், கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் ''ஆத்மா அழியாதது; உயிர் கூடுவிட்டுக் கூடுபாயும்; கருமவினை தொடர்ந்து வரும் ஆகிய மூன்று கொள்கைகளும் ... நாடெங்கிலும் பரவி நின்றன'' (கோ. தங்க வேலு, 1976; 124) என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

இவற்றை எல்லாம் நோக்கும்போது 'கொலையுண்டு இறந்த இடத்தில் அல்லது உடல் புதைக்கப்பட்ட இடத்தில் தாவரம் முளைக்கிறது' என்ற கூறு சிந்துவெளி நாகரிக காலத்தைச் சேர்ந்த சமுதாயத்திலோ, அதற்கு முன்னரோ கூடத் தோன்றிப்

காட்டுகின்றன. இறந்த உடலை எரித்துவிடும் வேதத்திற் காணும் பழக்கத்தி லிருந்து இப்பழக்கம் வேறுபட்டது. இறந்தவர்கள் புதைக்கப்படும் காரணத்தைப் பற்றிக் கருதுவது நம் கவனத்தைக் கவர்கிறது. ஆன்மா இவ் வுலகத்திற்கு மீண்டும் வரும் என்ற நம்பிக்கையால் இப் பழக்கம் ஏற்பட்ட தாகுமா? ஒரு கால் அழிந்துவிடாது புதைத்த அதே உடலுக்கு ஆன்மா திரும்பி வரும் என்ற கருத்தால் நிகழ்ந்தது ஆகுமா? மறுபிறப்புக் கொள்கையின் தொடக்கம் இது ஆகுமா?...''.

மேற்படி, ப-ம். 45.

'' இறந்த உடலைப் புதைக்கும் முறை, தன் ஊழைத் தானே அமைத்துக் கொள்ளமுடியும்; மீண்டும் உயிர்வாழத் திரும்பி வரமுடியும் என்ற நம்பிக் கையை அடிப்படையாகக் கொண்டது''.

மேற்படி, ப-ம்.46.

11. '' உயிர் பிறவிகளில் பல்வேறு உடல்களைப் பெறவல்லது என்னும் கொள் கையின் (Metempsychosis) கரு (இருக்கு வேதம் 10-16. 3- இல்) ஒருவாறு அமைந்திருப்பதாக மெக்டானல் காண்கிறார்''.

— இராதாகிருஷ்ணன், சர்வபள்ளி, (1970; 69).

''இக் கருத்தைக்கொண்டு அவர்களது நோக்கினை ஆராய்ந்தால் மறுபிறப்பு இருக்கு வேதத்தில் (10- 14- 8 ஸி) காணப்படுகிறது. பிரிந்த உயிர், இந்த வீட்டிற்கு வருப்படி கேட்கப்படுகிறது. இவ்வுயிர் மீண்டும் வாழ்வு பெற்று மக்கட்பேறு பெற (10-16- 5) அக்கினியிடம் இரந்து வேண்டப் படுகிறது''.

மேற்படி, ப- ம். 69

பின்னர் நாடு முழுதும் பரவியிருக்க வாய்ப்பிருக்கிறது என்று கருதலாம். மனித உயிர் தாவரமாதல்; அந்தத் தாவரம் மனிதரைப் போலப் பேசும் ஆற்றலுள்ளதாக இருத்தல்; பின்னர் அத் தாவரம் முன் விடுத்த அதே மனித உடலாக மாறுதல் (இணைப்பு-4, கூறுகள்: ப1 எச், கே; 'சி' மற்றும் 'எப்' வகைக் கதைகள்) போன்ற கதை நிகழ்ச்சிகள் கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்ற பழைய நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டவையே யாகும்.

6. தாவரம் சிறப்பிடம் பெறுவதற்கான காரணம்

இங்கு, 'மனித உயிர் தாவரமாதல்' பற்றிய ஐயம் ஒன்று தோன்றுகிறது. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கதைகளுள் ஒரு கதையில் (இணைப்பு-4; கதை எண். 1) மட்டும் தாவரம் முளைத்து வளரும் இடக்குறிபபு இடம்பெறவில்லை. ஆனால், அக் கதையில் தாவரம் இடம்பெறுகிறது. அதாவது இறந்துவிட்ட மனித உயிர்தான் தர்வரமாயிற்று என்று கதையில் தெளிவாகக் குறிப்பிடவில்லை. கதையை ஆழ்ந்து படித்தால் கதை கூறுவோரின் கவனக் குறைவால் நேர்ந்த விடுபாடு என்றே இதனைக் கருத முடிகிறது. இதனைத் தவிர ஏனைய கதைகள் அனைத்திலும் உடல் புதைக்கப்பட்ட இடத்தில் தாவரம் முளைக்கிறது என்று கூறுவதன் வாயிலாக 'மனித உயிர் தாவரமாதல்' பற்றிக் கூறப்படுகிறது. ஏன் அனைத்துக் கதைகளிலும் 'மனித உயிர் தாவரமாகிறது' என்றே குறிப்பிடப் படுகிறது? தாவரத்திற்குச் சிறப்பளிப்பதற்குக் காரணம் என்ன?

இதற்கு அடிப்படையான காரணம் மக்கள் தாவரங்களை வழிபடுபொருளாகக் கருதுவதுதான். மரம், செடி, கொடிகள் ஆற்றலுள்ளவையாகக் கருதப்பட்டு வழிபடும் பழக்கம் சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்து இருந்து வருகிறது.[12] தேவதைகள் மரங்களில் தங்கியுள்ளதைப் போலக் காட்டும் அடையாளச்

---

12. ''சிந்துவெளி மக்கள் உருவ வழிபாடு செய்தனர்; விலங்கு, மரம், செடி, கொடி, நாகம், லிங்கம், மூன்றுதலை (சிவன்) உருவம் முதலியவற்றை வணங்கினார்கள்''.

கோ. தங்கவேலு, (1976: 105).

சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன (Ernest Mackay, 1976: 58). வேதகால ஆரியர்களிடம் இப்பழக்கம் இல்லை என்றாலும்[13] வேதத்திற்குப் பிற்பட்ட காலத்தில் மரங்களை வழிபடத் தொடங்கியதை அறியமுடிகிறது. "முக்கியமாக அரசமரம் இத்தகைய மரங்களுள் சேரும். மற்ற மரங்களும் செடிகளும் வேறுவேறு ஆற்றலுள்ளவையாகக் கொள்ளப்பட்டன" (இராதாகிருஷ்ணன், சர்வபள்ளி, 1970:39). "பிரிந்த உயிர், உடல் பெறப்போமாறு பணிக்கப்படும் இடங்களுள் செடிகளும் ஒன்றாகும். அங்குப் பிரிந்த உயிர்கள் உடலைப் பெறுகின்றன ......இது பிராமணங்களில் தெளிவாகின்றது (சதபத பிராமணம், 1-5-3-14; 10-4-3-10)" (மேற்படி, ப-ம். 69). அகால மரணமடைந்தவர்களின் உயிர்கள் மரங்களில் தங்கும் என்று மக்களிடையே நிலவும் நம்பிக்கையும் இங்கு நோக்கத் தக்கது.

இச்சான்றுகள் வாயிலாகத் 'தாவரங்கள் ஆற்றலுள்ளவை; அவற்றில் தேவதைகள் தங்கும்; உயிர்கள் தங்கும்; உயிர்கள் உடலைப்பெறும்' என்பன போன்ற நம்பிக்கைகள் சிந்துவெளி நாகரிகக் காலந்தொட்டு இன்றுவரை மக்களிடையே நிலவி வருகின்றன என்பதையும், அந்நம்பிக்கையின் விளைவாகவே 'மனித உயிர் தாவரமாக மாறியது' என்ற கூறு உருவாகி இருக்கவேண்டும் என்பதையும், அக்கூறு சிந்துவெளி நாகரிக காலத்திலேயே கூடத் தோற்றம் பெற்றிருக்கலாம் என்பதையும் அறிந்து கொள்ள முடிந்தது.

சில கதைகளில் தாவரங்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றுள் நித்திய கல்யாணி (இணைப்பு-4,ஔ 1.1ஜே) என்னும் தாவரம் அது இடம்பெறும் கதை வழங்கப்படும் நிலப் பகுதியின் (புதுச்சேரி) சுடுகாடுகளில் எக்காலத்திலும் முளைத்திருக்கும் என்று கூறப்பட்டது. இங்கு, கதை வழங்கப்படும் நிலத்தின் கருப்பொருள் கதையில் இடம் பெறுவதைக் காண முடிகிறது. மல்லிகை முல்லை (இணைப்பு-4, ஔ 1.1ஜி), ரோஜா

---

13. "விலங்குகள், பறவைகள், மரங்கள், செடிகள் முதலியவை வேதங்களில் தற்செயலாக வந்துள்ளன. அவை மனித வாழ்வில் கீழ்ப்பட்ட பொருள்களாகக் குறிப்பிடப்படுகின்றன."
இராதாகிருஷ்ணன் சர்வபள்ளி (1970:39).

(இணைப்பு-4, ஔ1.1எச்) முதலியன இடம் பெறுவதற்கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை. நித்திய கல்யாணி இடம் பெற்றதற்கான காரணமே இவற்றுக்கும் இருக்கலாம். அல்லது கதை கூறியோரின் சொந்தக் கற்பனையாகவுமிருக்கலாம். தாமரை தெய்வீகத் தன்மை பொருந்தியதாக மக்கள் நம்புகின்ற காரணத்தால் ஆந்திரா, மகாராட்டிரா கதைகளில அது இடம் பெறுகின்றது. பருல் மலர்ச்செடி (வங்காளக்கதை) இடம் பெறுவதற்கான காரணம் தெரியவில்லை. மாமரம் பீகார் கதையில் இடம் பெறுகிறது. சூரன் மாமரமாக நின்றான் என்கிறது புராணம். இறந்தவர் மாமரமாக மாறுவதாக வேறு நாட்டுப்புறக் கதைச்சான்று கூட நமக்குக் கிடைக்கிறது[14]. மாமரம் ஆற்றலுள்ளதாகக் கருதப்படுவதற்கான காரணம் என்ன என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை.

மனித உயிர் தாவரமாக மாறுவதாகக் கூறுமிடங்களில் கதை வழங்கும் பகுதிகளிலுள்ள தாவரங்கள், முன்பே சிறந்ததாக அல்லது ஆற்றலுள்ளதாக நம்பப்படும் தாவரங்கள், கதை கூறுவோரின் கற்பனையில் தோன்றும் தாவரங்கள் ஆகியன இடம் பெறுகின்றன என்று அறியமுடிகிறது.

சுருக்கவுரை

இதுவரை கண்டவற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்:

சிந்துச் சமவெளி காலத்திலோ அதற்கு முன்போ வாழ்ந்த சமுதாயத்தில் (இதனை 'எஸ்' என்ற குறியீட்டால் சுட்டலாம்) 'உயிர் அழியாதது' என்னும் கருத்துடைய 'உடலை விட்டு நீங்கும் உயிர் மற்றொரு உயிராக மாறும்' என்ற நம்பிக்கையும் 'தாவரங்கள் ஆற்றலுடையவை', 'உயிர்கள் மரங்களில் தங்கும்' என்னும் நம்பிக்கைகளும் இணைந்து 'மனித உயிர் தாவரமாதல்' என்னும் நம்பிக்கை (இதனை 'க்யூ' என்னும் குறியீட்டால் சுட்டலாம்) தோன்றியிருக்க வேண்டும். இதிலிருந்து முதன்முதலில் 'எக்ஸ்' என்னும் கதையில் (ஒருவர் நியாயமற்ற

---

14. இக்கட்டுரை ஆசிரியரால் தென்னார்க்காடு மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட கதை ஒன்றில் இக்கூறு இடம்பெறுகிறது.

முறையில் கொல்லப்படுவதாகவும் கொலையாளிகள் பிறரறி யாமல் தப்பிப்பதாகவும் இக்கதை அமைந்திருக்கவேண்டும்) 'ஒய்' என்னும் கூறுகள் (கொலையுண்ட இடத்தில் அல்லது உடல் புதைக்கபபட்ட இடத்தில் முளைக்கும் தாவரம் தக்க நேரத்தில் கொலையாளிகளைப் பிறரறியச் செய்து தண்டனையடையவும் செய்வதாக அமைபவை) தோற்றம் பெற்றிருக்கும்.

பின்னர் நாட்டின் பல்வேறிடங்களில் பல்வேறு காலக்கட டங்களில் உண்மை நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டோ, கற்பனையாகவோ தோன்றிய பி, சி, டி, எப் வகைக் கதைகளில் 'ஒய்' கூறுகள் பொருத்தமாக இணைந்து கதை களை நடத்திச் செல்கின்றன.

'பி' வகைக் கதையின் துணை வடிவங்களான பி$_1$, பி$_2$, பி$_3$ கதைகளிலும் இதே அடிப்படையில் 'ஒய்' கூறுகள் இணை கின்றன.

இக் கருத்துக்களை மேலும் சுருக்கமாகப் பின்வருமாறு குறிப் பிடலாம்.



கதைகள்

பல்வேறிடங்களில் தோன்றும் ஊற்றுகளும் ஓடைகளும சிற்றாறுகளாகி, சிற்றாறுகள் இயற்கைச் சக்தியால் இணைந்து

நதியாவதைப் போல, பல்வேறிடங்களில் பல்வேறு காலக்கட்டங்களில் தோன்றிய கருத்துக்களும் நம்பிக்கைகளும் நடைமுறை வாழ்க்கைச் சம்பவங்களும் சமூக மதிப்பீடுகளும் நீதிகளும் மனிதனின் கற்பனா சக்தியால் இணைந்து நாட்டுப்புறக் கதைகளாகின்றன என்பதை இந்த ஆய்வு தெளிவுபடுத்துகின்றது.

7. முடிவுரை

'பி' வகைக் கதைகள் எங்கே தோன்றி எவ்வாறு பரவின என்பதையும் அதில் காணப்படும் பல்வேறு மாற்றங்களுக்கான மற்றும் நிலைபேற்றுக்கான காரணங்களையும் இந்த ஆய்வின் முதல் பகுதியில் (Part I) அனுமானிக்க முயற்சி மேற்கொள்ளப் பட்டது. அவ்வாறே பகுதி இரண்டில் 'சி' வகைக் கதைக்ள் வட மாநிலங்களில் தோன்றி, நாயக்கர் அல்லது மராட்டிய மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் தஞ்சைக்குப் பரவி 'பி' வகைக் கதையோடு இணைந்து தமிழகத்தில் பரவியிருக்க வேண்டும் என்றும் அனுமானிக்கப்பட்டது.

'எக்ஸ் ஒய்' வகைக் கதை முதன்முதலில் எங்கே, எக்காலக் கட்டத்தில் தோற்றம் பெற்றது என்பதை அனுமானிக்க முடியுமேயானால் 'ஒய்' கூறுகளின் பரவல் எவ்வாறு நிகழ்ந் திருக்கலாம் என்பதை ஓரளவு அனுமானிக்கமுடியும். இந்த அனுமானம் மக்களின் இடப்பெயர்ச்சி மற்றும் அரசியல் கலாச்சார உறவுகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளத் துணை புரியும். முறையான களஆய்வும் அக் களஆய்வில் கிடைக்கும் ஆய்வு மூலங்களில் மேற்கொள்ளப்படும் ஆழமான ஆய்வுமே இது போன்ற முடிவுகளை நல்க முடியும்.

இணைப்புகள்

இணைப்பு-1: சேகரிப்புப்பணி

வரிசை எண்	கதை கூறியவரின் பெயர்	வயது	சாதி	கல்வி	பணி	நிலையான முகவரி
1	2	3	4	5	6	7
1.	அண்ணாமலை, சீ.	52	ரெட்டியார்	5-ஆவது	விவசாயம்	செல்லம்பட்டு அஞ்சல், வடக்கநந்தல்-வழி, கள்ளக்குறிச்சி வட்டம் தெ. ஆ. மாவட்டம்.
2.	அம்மாதனம்.	70	படையாட்சி	...	...	கொக்கரணை, கடாரங்கொண்டான் அஞ்சல், கங்கைகொண்ட சோழபுரம்-வழி, திருச்சி மாவட்டம்
3.	இளங்கோ, நா.	24	படையாட்சி	எம். ஃபில்	ஆய்வாளர் தமிழ் இலக்கியத்துறை செ.ப. கழகம்.	17, தென்றல் வீதி, சோலைநகர், புதுச்சேரி-3.

விவரங்கள்

கதை சேகரிக்கப் பட்ட / கதை கிடைத்த தேதி	ஆய்வாளரின் குறிப்பு 9
20.1.83	கட்டுரையாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க திரு கி. அன்பன் (தமிழ்த்துறை, தார்வார் பல்கலைக் கழகம்) அவர்களின் சகோதரர் திரு கி. சீத்தாராமன் சேகரித்து அனுப்பினார். இதே ஊரைச் சேர்ந்த மேலும் மூவர் இக் கதையைக் கூறினர் என்றும் அவர்கள் அனைவரும் தங்கள் நான்காம் வகுப்பு ஆசிரியரிடமிருந்து இக்கதையைக் கற்றுக் கொண்டனர் என்றும் அந்த ஆசிரியர் இறந்து விட்டார் என்றும் திரு சீத்தாராமன் எழுதியிருந்தார். (க. எ. 17)
19.12.82	கேட்டுக் கொண்டதற்கிணங்க திரு கு. இராசேந்திரன் (ஆய்வாளர், தமிழ்த்துறை, அ.ப. கழகம்) தன் தாயாரிடமிருந்து சேகரித்து அனுப்பினார். தன் தாயார் தன் பிறந்த ஊரான புடையூர் சோழதரத்தில் (காட்டு மன்னார்குடி வட்டம், தெ. ஆ. மா.) 55 ஆண்டுகளுக்கு முன் இக்கதையைக் கற்றுக் கொண்டதாகவும் தன் அண்ணியாரும் இதே கதையைக் கூறியதாகவும் இராசேந்திரன் எழுதியுள்ளார். (க. எ. 9)
29.12.82	தமிழ்ப்பல்கலைக் கழகம் வந்த போது நேரில் கூறினார். பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தன் தாயாரிடமிருந்து கற்றுக்கொண்டதாகவும் கதையில் வரும் பாடலை மறந்து விட்டதாகவும் கூறினார். (க. எ. 18)

1	2	3	4	5	6	7
4. ஒப்பாயாள், நா.	65	படையாட்சி	5–ஆவது	...		திருக்கணங்கூர் அஞ்சல், ஆலத்தூர் வழி, கள்ளக் குறிச்சி வட்டம், தெ. ஆ. மாவட்டம்.
5. கதிர்வேல், எம்.	14	செட்டியார்	10ஆவது	...		லட்சுமிநாராயணபுரம் அஞ்சல், பண்ருட்டி வட்டம், தெ. ஆ. மாவட்டம்.
6. கருப்பையா, கு.	45	பறையர்	5-ஆவது	விவசாயம்		கரிசல்பட்டி, மூர்த்தி நகரம் கருமாத்தூர் அஞ்சல், உசிலம்பட்டி வட்டம், மதுரை மாவட்டம்.

8	9
18.12.82	கேட்டுக்கொண்டதற்கிணங்க திரு கோ. அருணகிரி (அரசு மேல்நிலைப்பள்ளி, வடக்குநந்தல்-606207) தான் பணிபுரியும் பகுதியிலிருந்து சேகரித்து அனுப்பினார். திருமதி ஒப்பாயாள் அரியலூரில் (திருச்சி மாவட்டம்) பிறந்தவர் என்றும் தன் இருபதாவது வயதில் அவர் இக் கதையைக் கற்றுக் கொண்டார் என்றும் அருணகிரி எழுதியிருந்தார் (க. எ. 16)
6.1.83	கேட்டுக்கொண்டதற்கிணங்க திரு ஆ. கலைச்செல்வன் (அ. உ. பள்ளி, பூங்குணம், பண்ருட்டி வட்டம்) தன் மாணவனிடமிருந்து சேகரித்து அனுப்பினார். கதிர்வேல் இக்கதையைத் தன் தாயாரிடமிருந்து கற்றுக்கொண்டிருக்கிறார். அவர் தாயாரைச் சந்தித்தபோது, கதிர்வேல் கூறிய கதையில் முதலை என்று கூறியது தவறு என்றும் வாளை என்பதே சரி என்றும கூறியதாகக் கலைச்செல்வன் எழுதியுள்ளார் (க.எ.14). கதிர்வேல் நினைவுக் குறைவால் அவ்வாறு கூறினார் என்பதையும் அறிந்து எழுதியிருந்தார்.
17.12.82	கேட்டுக்கொண்டதற்கிணங்க திரு க.கருப்பையா (நூலகத் துணையாளர், தமிழ்ப் பல்கலைக் கழகம்) தன் தந்தையிடமிருந்து சேகரித்து உதவினார். தன் தந்தையார் இக் கதையை வில்லுப்பாட்டாகப் பாடுவதுண்டு என்று கூறினார் (க. எ. 5).

1	2	3	4	5	6	7
7.	சவரியம் மாள், எஸ்.	34	கிருத்துவ உடையார்	...	...	முக்காணிப் பட்டி, வட வாளம் அஞ் சல், ஆலங் குடி வட்டம், புதுக் கோட்டை மாவட்டம்
8.	சின்னப் பிள்ளை	33	படையாட்சி	...	...	கு.நல்லூர், வி. சாத்தமங் கலம்அஞ்சல், விருத்தாசலம் வட்டம், தெ.ஆ.மா
9.	சீதா லெட்சுமி, ஆ.	45	படையாட்சி	5-ஆவது	...	மஞ்சக் கொல்லை, அஞ்சல், புவனகிரி-608601 தெ.ஆ,மா.
10.	சொக்க லிங்கம், வீ.	54	சைவவேளாளர்	வித் வான்	தலைவர், தமிழ்ப் பிரிவு, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.	861, தத் தோஜி அப்பா சந்து, கீழவீதி, தஞ்சாவூர்.

8	9
26.12.82	திரு எஸ். ஜோசப் (துப்புரவுப் பணியாளர், த. ப. கழகம்) தன் அக்காளிடமிருந்து சேகரித்து வந்து உதவினார். சவரியம்மாள் இக்கதையைத் தன் ஊரைச் சேர்ந்த ஆரோக்கிய உடையாரிடம் (வயது 57) 1964-இல் கற்றுக்கொண்டதாகவும் அவர் அக்கதையை 1947-இல் தன் பாட்டியிடமிருந்து கற்றுக் கொண்டதாகவும் ஜோசப் கூறினார். ஆரோக்கிய உடையார் இக்கதையைச் சவரியம்மாள் கூறியதைப் போலவே மாற்றமின்றிக் கூறியதால் அதனைச் சேகரிக்கவில்லை என்றும் கூறினார் (க. எ. 6).
1979	திருமதி பவளக்கொடி (கட்டுரையாளரின் துணைவியார்) தன் பிறந்த ஊரிலிருந்து சேகரித்து உதவினார். கதை முழுதும் பாடலாகப் பாடப்படுவதுண்டு என்று கூறிய திருமதி சின்னப்பிள்ளை தற்போது உயிருடன் இல்லை (க. எ. 12). 'வாளை பெண்ணைத்தூக்க இயலாது ஆதலால் முதலை என்று கூறினார்' என்பது சேகரிப்பாளர் கருத்து.
27.12.76	கட்டுரையாளரின் தாய். இவர் இக்கதையைத் தன் பன்னிரண்டாவது வயதில் தன் அத்தையிடமிருந்து கற்றுக்கொண்டதாகக் கூறினார். சிலர் இக்கதையை மேலும் நீளமாகக் கூறுவதுண்டு என்றும் வேறு சிலர் முழுவதும் பாடலாகவே பாடுவர் என்றும் கூறினார். கதையில் இடம்பெறும் பாடலைச் சோகத்துடன் பாடினார் (க. எ. 11).
23.12.82	நூலகத்தில் சந்தித்தபோது நேரில் கூறினார். தாயாரிடமிருந்து தன் பன்னிரண்டாவது வயதில் இக் கதையைக் கற்றுக் கொண்டதாகக் கூறினார். முதலில் பாடலை மட்டுமே நினைவு கூர்ந்து கூறிய இவர், பின்னர் பாடலை ஆதாரமாகக் கொண்டு கதையின் சில நிகழ்ச்சிகளைக் கூறினார் (க. எ. 10).

1	2	3	4	5	6	7
11.	தங்கப்பழம்	74	நாடார்	...	...	ஒசரவிளை புத்தளம்-அஞ்சல், அகத்திஸ்வரம் வட்டம், குமரி மாவட்டம்
12.	பெரியண்ணன், ஜெ.	19	படையாட்சி	3-ஆவது	...	ஈச்சங்குப்பம்,தெ. ஆ. மாவட்டம்.
13.	இராச மாணிக்கம	58	பறையர்	...	விவசாயம்	பெரியாக் குறிச்சி அஞ்சல், விருத்தாசலம் வட்டம்,தெ.ஆ மாவட்டம்
14.	விருத்தாம்பிகை	58	செங்குந்த முதலியார்	5-ஆவது	...	புதுச்சேரி
15.	ஜோசப்,எஸ்.	21	கிருத்துவ உடையார்	5-ஆவது	துப்புரவுப் பணியாளர் த.ப. கழகம்.	வரிசை எண் ஏழில் உள்ளபடி.

8	9
20.12.82	டாக்டர் ஏ. என். பெருமாள் (உ. த. நி., சென்னை-113) அவர்கள் தன் தாயாரிடமிருந்து சேகரித்து அனுப்பியிருந்தார். 10 அல்லது 12 வயதில் அவர் இக் கதையைக் கற்றுக்கொண்டாராம். தன் தந்தை வழிப்பாட்டி வாயிலாகத் தானும் இக்கதையைக் கேட்டிருப்பதாகச் சேகரிப்பாளர் கூறினார்.
6.1.83	திரு நா. இளங்கோ (காண்க வரிசை எண். 3) இவரிடமிருந்து சேகரித்து அனுப்பினார் (க. எ. 15). இவர் தெ. ஆ. மாவட்டத்திலிருந்து மற்றொரு கதையையும் சேகரித்து அனுப்பினார். அக்கதை முற்றுப்பெறாமல் இருந்ததால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.
4.1.83	கேட்டுக்கொண்டதற்கிணங்க திரு மாசி. மதியழகன் (கிராம நிருவாக அலுவலர், பெரியாக் குறிச்சி, விருத்தாசலம் வட்டம், தெ. ஆ. மா) இவரிடமிருந்து கதையைச் சேகரித்து அனுப்பியிருந்தார் (க.எ. 13). வேறு சிலரும் இக்கதையைக் கேட்டிருப்பதாகக் கூறினார்.
28.12.82	பேராசிரியர் சுந்தரசண்முகனாரின் (தொகுப்பியல்துறை, த.ப. கழகம்) துணைவியார். பேராசிரியர் அவர்கள் சேகரித்துத் தந்து உதவினார். திருமதி விருத்தாம்பிகை இக்கதையைத் தன் தாயாரிடமிருந்து அறிந்ததாகத் தெரிகிறது (க. எ. 19).
18.12.82	நேரில் இக் கதையைக் கூறினார் (க. எ. 7). தன் அக்காவிடம் இக்கதையைக் கேட்டதாகக் கூறிய இவர், அவரிடமிருந்தும் இக் கதையைச் சேகரித்து உதவினார். (காண்க: வரிசை எண் ஏழுக்கான குறிப்பு) இரண்டையும் ஒப்பிட்டபோது இவர் அக்கா கூறிய கதையில் சில கூறுகள் இவர் கூறிய கதையில் இல்லாததை அறிய முடிந்தது. நினைவுக் குறைவு என்று காரணம் கூறினார்.

இணைப்பு - 2: கதைச் சுருக்கங்கள்

1. இலங்கை (மட்டக்களப்பு)

ஒரு தாய்க்கு இரண்டு ஆண் பிள்ளைகள்; ஒரு பெண். பெண்ணின் பாவாடையை ஒரு முள் வாழை கிழித்து விடுகிறது.

அவள் தன்னைச் சின்னண்ணன் அடித்ததாகத் தாயிடம் பொய் கூறுகிறாள்.

தாய் சின்ன மகனைக் கொல்கிறாள்.

பெண்ணின் திருமணத்தன்று தாயார் பூப்பறிக்கச் செல்ல, பூ மரத்தில் பூக்கள் மறைகின்றன.

தாயாருக்குப் பூ கொடுக்க மனமில்லாமல் நின்றதை அறிந்த மூத்த மகன், பூ மரத்திடம் பூ கேட்கிறான்.

பூத்தாரும் பூத்தாரும்
புண்ணியனே பூத்தாரும்
செல்வத்தாற் தங்கச்சிக்குச்
செல்வக் கலியாணமாம்
வரிசையால் தங்கச்சிக்கு
வரிசைக் கலியாணமாம்.

பூ மரம் நடந்த நிகழ்ச்சியை அவனிடம் கூறுகிறது.

பூவும் நான் தருவேன்
பூமணமும நான் பார்ப்பேன்
மாலையும் நான் தருவேன்
மலர் மணமும் நான் பார்ப்பேன்
கோலநீலக் கண்தாங்கி
துகிலுடுத்துப் போகையிலே
வடதெருவே நின்ற

வாழை கிழித்திடவே
சின்னண்ணன் கிழித்ததென்று
சொன்னாளே நெட்டூரி
நெட்டூரி பெற்ற ஆத்தை
நஞ்சையிட்டுக் கொன்றாளே.

ஆதாரம்: வ.மு. இராமலிங்கம் (1961:11)

குறிப்பு: கண்டாங்கி (சேலை) என்ற சொல்லே கண்தாங்கி என்று பாடலில் இடம் பெறுகிறது (கட்டுரையாளர்).

2. இலங்கை (வட இலங்கை)

ஒருவனுக்கு இரண்டு மனைவிகள். அவனுக்கு முதல்தாரத்தில் இரண்டு ஆணும் இரண்டாம் தாரத்தில் ஒரு பெண்ணும் இருந்தனர்.

பெண், வயலில் வேலை செய்யும் அண்ணன்மார்களுக்கு உணவு கொண்டு செல்கிறாள். வழியில் ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும். அவள் ஆற்றிலிருந்த வாளையோடு விளையாட, வாளை அவளைக் கடித்து விடுகிறது.

சின்னண்ணன் அடித்தானென்று தாயிடம் பொய் கூறுகிறாள்.

சிற்றன்னை அவனைக் கொன்று விடுகிறாள். அவன் கல்லறையில் பூ மரம் ஒன்றுள்ளது. பெண்ணின் திருமணத்திற்குப் பூ கிடைக்காததால் சிற்றன்னை பூ மரத்திற்குச் சென்று பூப்பறிக்க முயல்கிறாள்.

பூக்கள் மறைந்து விடுகின்றன. பூமரம் நடந்த உண்மையைக் கூறுகிறது.

பூவும் தருவேன் தாயே
பூவழகும் பார்ப்பேன் தாயே
மாலை தருவேன் தாயே
மார்பழகும் பார்ப்பேன் தாயே
வாளை கிழித்ததல்லோ

வடதுருவம் போனதல்லோ
சின்னண்ணன் கிழித்ததென்று
சொன்னாளே பாதகத்தி

பிறகு பூ தந்தது.

ஆதாரம்: வ.மு. இராமலிங்கம் (1961:9)

3. குமரி மாவட்டம்

ஒரு தாய்க்கு நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும். ஆண்கள் மரம், விறகு வெட்டக் காட்டுக்குச் செல்லுகையில் பெண் கஞ்சி எடுத்துச் செல்கிறாள்.

ஒரு வேர் தடுக்கிக் கீழே விழுந்ததால் கஞ்சிக் கலையம் உடைவதோடு வேலியிலிருந்த கத்தாளை முள் கைகளைக் கீறி விடுகிறது.

தாயின் கோபததிற்கு அஞ்சி (உண்மையை மறைத்து) சின்ன அண்ணன் அடித்துக் காயப்படுத்தியதாகப் பொய் கூறுகிறாள்.

தாய் கோபங்கொண்டு சின்ன மகனை உணவில் நஞ்சிட்டுக் கொன்று விடுகிறாள்.

பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமானபோது எங்கும் பூ கிடைக்கவில்லை.

சின்னண்ணனைப் புதைத்த இடத்தில் அவனுடைய தலைப் பகுதியில் மலர்ந்துள்ள பூக்களைப் பறிக்கச் செல்லும்போது பூவைக் கொடுக்கச் செடி மறுத்துவிடுகிறது.

'பாவிக்குப் படுமாலை இங்குமில்லை
நீலிக்கு நெடுமாலை இங்குமில்லை'

எங்கும் பூ கிடைக்காமல் உண்மை வெளியாகித் திருமணம் நின்று விடுகிறது.

கூறியவர்: திருமதி தங்கப்பழம்

4. குமரி மாவட்டம்

சகோதரர்கள், சகோதரி உள்ள ஒரு குடும்பம். சகோதரி காட்டில் வேலை செய்து கொண்டிருந்த வேலைக்காரர்களுக்குக் கஞ்சி கொண்டு சென்றாள்.

வழியில் தாழைவேர் தட்டிக் கீழே விழ, கஞ்சிக் கலையம் உடைகிறது. தாழைவேர் அவள் உடலையும் ஆடையையும் கிழித்து விடுகிறது.

சின்னான என்ற வேலைக்காரன் பிடித்து இழுத்ததால் கஞ்சிக்கலையம் உடைந்து ஆடை கிழிந்தது என்று வீட்டில் பொய் கூறுகிறாள்.

கோபமுற்ற சகோதரர்கள் சின்னானை அடித்துப் புதைத்து விடுகின்றனர். புதைத்த இடத்தில் அரளிச் செடி முளைத்து மலர்கிறது. பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமானபோது மாலைக்கு எங்கும் பூ கிடைக்கவில்லை. உறவினர்கள் சின்னான் புதைக்கப்பட்ட இடத்தில் மலர்ந்திருந்த அரளிச் செடியிடம் வருகிறார்கள். அரளிச்செடி நடந்த உண்மையைக் கூறிப் பூ தர மறுக்கிறது.

'தாள கிளிச்சதென்ன—தாள
தம்மானி பட்டதென்ன
சின்னான் கிளிச்சாண்ணு
சொன்னாளே நீலியவ
நீலிக்கு மாலை
நெழுமாலை இங்கில்லை
பாவிக்கு மாலை
பகுத்து இங்கே குடுப்பதில்லை'

பூப்பறிக்க வந்தவர்கள் திடுக்கிட்டு வீடு திரும்பிப் பெண்ணிடம் கேட்க, அவள் நடந்த உண்மையைக் கூறுகிறாள்.

சின்னானுக்குப் பூசை கொடுத்து அவன் கோபத்தைத் தணித்தனர்.

ஆய்வாளர் குறிப்பு: கதை கூறும்போது சேகரிப்பாளர் தாழை என்று கூறுகிறார். வழக்குத்தமிழில் அவர் தந்துள்ள

தந்துள்ள பாடலில் 'தாள' என உள்ளது. எனவே, 'தாளை' என்றே இருத்தல் வேண்டும்.

ஆதாரம்: பி.எஸ்.கே. பக்தவச்சலன் (1979: 430—31)

5. மதுரை மாவட்டம்

அண்ணன் தம்பி ஏழுபேர். அவர்களுக்கு ஒரு தங்கை. அவள் பெயர் எழுவக் கண்ணாச்சி. இளையவன் நொண்டி.

வயலில் உழும் அண்ணன்மார்களுக்குத தங்கை உணவு (ஓர் அண்டா சோறு, ஓர் அண்டா குழம்பு, ஒரு கலையத்தில் கூழ்) எடுததுச் செல்கிறாள். உணவைத் தலையிலிருந்து இறக்க உதவுமாறு மூத்த அண்ணனிடம் கேட்க ("உச்சி உருகுதண்ணே, உள்ளங்கால் நோகுதண்ணே, இறக்கண்ணே இறக்கண்ணே") அவன் அடுத்தவனிடம் அனுப்ப .... கடைசியில் இளைய வன் இறக்குகிறான்.

முதல் ஆறு அண்ணன்மார்களுக்கும் சோறும் குழம்பும் நொண்டி அண்ணனுக்குக் கூழும் கொடுத்துத் திரும்புகிறாள்.

திரும்பும் வழியில் தாழை மரத்தில் ஏறித் தாழம்பூ பறிக்க முயல்கையில் தாழைமுள் அவளைக் காயப்படுத்துகிறது.

தாயிடம் சென்று சாட்டைக் கம்பால் சின்ன அண்ணன் அடித்ததாகப் பொய் கூறுகிறாள்.

தாயும் மகளும் முத்திருளிப் பாம்பை அடித்துக் குழம்பு வைத்து, சின்னவனுக்குத் தனியாகப் போடுகின்றனர்.

'சின்னவன் உணவைப் பூனை, நாய், கோழி ஆகியவற்றுக்குப் போட அவை இறந்து விடுகின்றன. அவனும் உண்டு இறக்கிறான்.

அவனைப் புதைத்த இடத்தில் மல்லிகை, முல்லைச் செடிகள் முளைத்து மலர்கின்றன.

தங்கைக்குத் திருமணம் நிச்சயமானபோது காடுமேடெல்லாம் சுற்றியலைந்தும் பூ கிடைக்கவில்லை.

தம்பியின் புதை குழியில் பூ இருப்பதைக் கண்டு பெரிய அண்ணன் தம்பியிடம் பூ கேட்க, தம்பி தர மறுத்து விடுகிறான். ஏனைய அண்ணன்மார்களும் பெற்றோரும் பூ கேட்க அவர்களுக்கும் தர மறுத்து விடுகிறான்.

(அண்ணே, பூவும் கொடுக்கமாட்டேன்
பூவழகும் பார்க்கமாட்டேன்

அண்ணே, மாலை கொடுக்கமாட்டேன்
மாலை அழகும் பார்க்கமாட்டேன்
தாழை இழுத்ததிற்கும்
தன்மேனி பட்டதிற்கும்
சின்னண்ணன் அடிச்சாண்ணு எனக்கு
முத்திருளி பாம்படிச்சு என்னைக்
கொண்ணுட்டாளே கொடிசூலி)

பெண்ணை மணந்து கொள்ளப்போகும் மைத்துனன் கேட்கும் போது உண்மைக் கதையை எடுத்துச் சொல்கிறான்.

திருமணத்தில் மைத்துனன் போடும்போது மலர் மாலையாகவும் தங்கை போடும் போது வாடிய மாலையாகவும் இருக்கும் என்ற நிபந்தனையோடு பூ தருகிறான். மாலை அவ்வாறே ஆகிறது.

கூறியவர்: கு. கருப்பையா.

6. புதுக்கோட்டை மாவட்டம்

கணவனும் மனைவியும் உள்ள ஒரு குடும்பம். குழந்தைகள் இல்லை. குழந்தை இல்லையே எனத் தாய் வருந்துகிறாள்.

பிச்சை எடுக்க வரும் சாமியார் குடும்பத் தலைவியிடம் ஏழுமிளகை மந்திரித்துத் தந்து இதனைக் கீழே விழாமல் உண்டால் குழந்தை பிறக்கும் என்று கூற, அவள் அந்த மிளகுகளை அம்மியில் வைக்கும்போது ஒரு மிளகு கீழே விழுகிறது; பாக்கி மிளகைத் தின்று விடுகிறாள்.

அவளுக்கு நான்கு ஆண் குழந்தைகளும் தப்பி விழுந்த

மிளகு பெண் குழந்தையாகவும் பிறக்கின்றன. பெண் குழந்தை அன்போடு வளர்க்கப்படுகிறாள்.

நான்கு ஆண்களில் இளையவன் நொண்டி.

அண்ணன்மார் வயலில் ஏர் உழச் சென்றபோது தங்கை அவர்களுக்கு உணவு கொண்டு செல்கிறாள்.

வழியில் ஆற்றைக் கடக்க வேண்டும். ஆற்றைக் கடக்க உதவினால் வரும்போது ஓர் உருண்டை உணவு தருவதாகக் கூறி ஆற்றில் நின்ற ஒருவனின் உதவியுடன் ஆற்றைக் கடக்கிறாள்.

தலையிலிருக்கும் சோற்றைக் கீழே இறக்குமாறு அவள் மூத்த அண்ணனிடம் கேட்க அவன் மறுக்கிறான். இவ்வாறே அடுத்தடுத்த அண்ணன்மாரும் மறுக்க சின்னவன் இறக்குகிறான். (ஒவ்வொருவரிடமும் சோற்றை இறக்குமாறு கூறும் போது பாடும் பாடல்)

அண்ணா, உச்சி எரியுதண்ணா
உள்ளங்கால் பத்துதண்ணா
சித்தே இறக்குங்கண்ணா
சண்டாள அண்ணன்மாரே

மூத்த அண்ணன்மார்களுக்குச் சோறும் நொண்டி அண்ணனுக்குக் கூழும் போடுகிறாள்.

திரும்பும்போது சோறு கொண்டுவர மறந்துவிடுகிறாள். எனவே, மண்ணுருண்டையின் மீது சோற்றை ஒட்டி எடுத்து வருகிறாள். மீண்டும் அவனுடைய உதவியோடு ஆற்றைக் கடந்தபிறகு அவனுக்கு மண்ணுருண்டையைக் கொடுத்து ஏமாற்றுகிறாள்.

உண்மையை உணர்ந்த அவன் அவளை அடித்துக் காயப் படுத்துகிறான்.

தாய் காயத்திற்கான காரணத்தைக் கேட்டபோது உண்மையை மறைத்து நொண்டி அண்ணன் அடித்ததாகக் கூறுகிறாள்.

தாய் கறி சமைத்து முதல் மூன்று மகன்களை வெளியில் உட்காரவைத்துச் சோறிடுகிறாள். நொண்டியின் உணவில் மருந்திட்டு உள்ளே உட்கார வைத்து உணவிட்டுக் கொல்கிறாள்.

பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமானபோது பூ எங்கு தேடியும் கிடைக்கவில்லை.

நொண்டியைப் புதைத்த இடத்தில் பூக்கள் மிகுதியாகப் பூத்திருந்ததைப் பார்த்து, தாய் தந்தை இருவரும் சென்று மகனிடம் பூ கேட்டார்கள்.

மகனே மகனே
உன் தங்கைக்கு கலியாணம்
பூ கொடுக்கணும்
பூ மாலையும் போடணும்
நீயும் வரணும்.

அவன் நடந்ததைக் கூறி பூ தர மறுத்துவிடுகிறான்.

(அப்பா அம்மா, நீங்கள் என் தங்கையால் என்னை மருந்தைப் போட்டுக் கொன்றுவிட்டீர்கள. நான் பூவும் கொடுக்கமாட்டேன் பூமாலையும் போடமாட்டேன். நானும் வரமாட்டேன்)

அதை மீறி பூப் பறித்து வந்து மாலை கட்டிப் போட்டார்கள்.

மாப்பிள்ளைக்குப் போட்டமாலை வாடாமலும் பெண்ணுக்குப் போட்ட மாலை வாடியும் போயிற்று. மாலையை மாற்றிப் போட்டார்கள். மாப்பிள்ளை மாலை மலர்ந்தது. பெண் மாலை வாடியது.

பெண் அழுதுகொண்டே அண்ணனைப் புதைத்த இடத்திற்குச் சென்று மன்னிக்குமாறு கூறிப் பூகேட்டு அவனை அழைத்தாள்.

(நொண்டி அண்ணா நொண்டி அண்ணா
பூவும் கொடுக்கணும் பூ மாலையும் போடணும்
நீங்களும் வரணும்)

அண்ணன் மனமிரங்கி தங்கைக்குப் பூ கொடுத்தான். அப் பூவில் கட்டிய மாலை வாடவில்லை. திருமணம் நடந்தது.

கூறியவர்: எஸ். சவரியம்மாள்.

7. புதுக்கோட்டை மாவட்டம்

ஒரு பெற்றோர்க்கு நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும். பெண் வயலில் ஏர் உழும் அண்ணன்மார்களுக்கு உணவு எடுத்துச் செல்கிறாள். வழியில் ஒரு ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும். ஆற்றில் உள்ள பாலத்தின் காவல்காரனுக்கு வரும் போது ஒரு உருண்டை சோறு தர வேண்டும். வரும்போது சோறுகொண்வர மறந்து விடுகிறாள். எனவே, ஒரு களிமண் உருண்டையின் மேலே இறைந்து கிடக்கும் சோற்றுப் பருக்கை களை ஒட்டவைத்துக் காவல்காரனை ஏமாற்றுகிறாள்.

காவல்காரன் உண்மையை அறிந்து அவளை அடித்துவிடு கிறான்.

நடந்த உண்மையை மறைத்து, சின்ன அண்ணன் அடித்த தாகத் தாயிடம் பொய் கூறுகிறாள்.

தாய் சின்னமகனுடைய உணவில் விஷமிட்டுக்கொல்கிறாள்.

பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமானபோது பூ எங்குத் தேடியும் கிடைக்க வில்லை. வழிப் போக்கன் ஒருவன் கூறிய இடத்திற்குச் சென்று பார்க்கும்போது சின்னவனைப் புதைத்த இடத்தில் ஒரு ரோஜாச்செடி முளைத்திருக்கிறது. பூப் பறிக்கச் செல்லும்போது பூ வாடி விடுகிறது. அப்பா, அம்மா, அண்ணன்மார் அனைவருக்கும் பூ வாடி விடுகிறது. (கேட்கும் பாடல் வசனமாகக் கூறப்பட்டது)

பெண் தன் தவறுக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்டபிறகு பூவைப் பறிக்கும் போது பூ வாடாமல் இருக் கிறது. திருமணம் நடைபெறுகிறது.

கூறியவர்: எஸ். ஜோசப்.

8. கோவை மாவட்டம்

ஒரு விவசாயிக்கு மூன்று மகனும் ஒரு மகளும் இருந்தனர்.

(மகள் மூன்றாவதாகப் பிறந்தவள்) அவளுக்குத் தம்பியைப் பிடிக்காது (பொறாமை, சண்டை). விவசாயி இறந்து விட்டான்.

பெண் வயலில் வேலை செய்யும் சகோதரர்களுக்கு உணவு சமைத்து எடுத்துச் செல்வாள்.

வழியில் ஒரு காடு.

தினமும் அக்காட்டிலுள்ள ஒரு மானுக்கு உணவு கொடுத்து விட்டு மீதியை எடுத்துச் செல்வாள்.

சின்னவனுக்கு உணவு பற்றாது. எனவே அவன் பசியால் வருந்தி இளைத்தான்.

உண்மையை அறிந்த அவன் அந்த மானைக் கொன்று விட்டான்.

மானைக் காணாமல் அவள் வருந்தினாள்

ஆட்டுக் கறி என்று பொய் கூறி மான் கறியை அவன் அவளிடம் தந்தான்.

அவள் அவனுக்கு மட்டும் பாம்புக் கறியைச் சமைத்துப் போட்டாள். அதனை உண்டு அவன் இறந்தான்.

அவளுக்குத் திருமண ஏற்பாடுகள் நடந்தபோது எங்கும் பூ கிடைக்கவில்லை. சின்னவனைப் புதைத்த இடத்தில் நிறைய பூக்கள் பூத்திருந்ததை அறிந்து அவளுடைய அண்ணன்களும் மாமாவும் அங்கே பூப்பறிக்கச் சென்றனர். அண்ணன்கள் பூவைத் தொட முயன்றபோது 'பாம்புக் கறியைப் போட்டவளுக்குப் பூ கொடுக்கமாட்டேன்' என்று ஒரு குரல் கேட்டது.

அவள் கேட்டபோதும் அக்குரல் அவ்வாறே கூறி

தொடாதே தொடாதே எந்தங்கச்சி
தொட்டு மயங்காதே எந்தங்கச்சி
கத்தி வச்சது நீதானே
கழுத்தறுத்ததும் நீதானே

என்று பாடியது.

இறுதியில் மாமா கேட்க சின்னவன் பூ கொடுத்தான். அவன் திருமணத்திற்குத் தெய்வமாக வந்து அவன் வாழ்த்தினான்.

ஆதாரம்: க. கிருட்டிணசாமி, (1980:60-61)

9. திருச்சி மாவட்டம்

ஒரு பெற்றோருக்கு ஐந்து மகன்கள்.

பெண் பிள்ளை இல்லையே என்ற தன் கவலையைத் தாய் ஒரு சாமியாரிடம் கூற, சாமியார் ஐந்து மிளகு கொடுத்து அவற்றை அரைத்து உண்ணுமாறும் அரைபடாது கீழே ஓடும் ஒரு மிளகை எடுக்க வேண்டாம் என்றும் கூறுகிறார்.

தாய் அவ்வாறே செய்ய, கீழே உருண்டு ஓடும் ஒரு மிளகு பெண்ணாக மாறித் தாய்க்குத் தெரியாமல் மறைந்திருக்கிறது.

தாய் வயலுக்குச் சென்று வேலை செய்துவிட்டு வரும் போது வீடு சுத்தமாக இருப்பதோடு சமையல் வேலை முடித்து வைக்கப்பட்டிருக்கும். பக்கத்து வீட்டுப் பெண் அவ்வாறு செய்து உதவுவதாகத் தாய் நினைக்கிறாள்.

பெண் வளையல் போட்டுக்கொண்டு தன் தாயிடம் காசு வாங்கிக் கொள்ளுமாறு வளையல்காரனிடம் கூறிச் செல்ல, வயலிலிருந்து திரும்பிய தாயிடம் வளையல்காரன் காசுகேட்க, தனக்கு மகளே இல்லை என்று கூறி அவள் மறுக்க, வளையல் காரனின் உதவியால் உண்மை வெளிப்படுகிறது. தாய் தனக்கு மகள் இருப்பதறிந்து மகிழ்கிறாள்.

பெண் வயலில் வேலை செய்யும் அண்ணனுக்கு உணவு கொண்டு செல்கிறாள். வழியில் ஓர் ஆற்றைக் கடக்க வேண்டும். தன்னை அக்கரையில் கொண்டு சேர்த்தால் திரும்பும் போது சோறு தருவதாகக் கூறி வாளை மீனின் உதவியுடன் அக்கரைக்குச் செல்கிறாள்.

அண்ணன் எல்லாச் சோற்றையும் உண்டு விடவே கீழே இறைந்து கிடக்கும் சோற்றைக் களிமண் உருண்டையில் ஒட்டி வாளைக்குக் கொடுத்து வாளையை ஏமாற்றவே வாளை

கோபங்கொண்டு அவளைக் கீழே தள்ளிக் காயப் படுத்தி விடுகிறது. தாயிடம் தன் சின்ன அண்ணன் அடித்து விட்டதாகப் பொய் கூறுகிறாள். கோபங் கொண்ட தாய் புற்றிலிருந்து பாம்பைப் பிடித்துவந்து சமைத்து பாம்புக் குழமபு போட்டு சின்ன மகனைக் கொல்கிறாள்.

பெண்ணுக்குத் திருமண ஏற்பாடானபோது எங்கும் பூ கிடைக்கவில்லை.

சின்னவனைப் புதைத்த இடத்தில் மலர்ந்திருந்த பூவைப் பறிக்க அவள் முயன்றபோது பூ மறைந்து விடுகிறது.

அங்கு வரும் சாமியாரிடம் அவள் நடந்ததைக் கூற அவர் நீரும் ஒரு மந்திரக் கோலும் கொடுத்து இறந்த பெற்றோரின் புதைமேடையில் அதனைத் தெளித்துத் தட்டினால் இறந்த பெற்றோர் வருவர் என்றும் அவர்களுடன் சென்று பூவைப் பறிக்கலாம என்றும் கூற அவள் அவ்வாறே செய்து பெற்றோரை எழுப்புகிறாள்.

தாய் சென்று மகனிடம் பூ கேட்கிறாள்.
தம்பியடா தம்பியடா தங்கையர்க்குக் கல்யாணம்
பூவும் கொடுக்கவேணும் நீ பொண்ணழகும் பார்க்கவேணும்
மாலை கொடுக்கவேணும் மயிரழகும் பார்க்கவேணும்

மகன் பூ தர மறுக்கிறான்:

வாளைகிழிச்சி வடநாடு போகையில்
சின்னண்ணன் அடிச்சாண்ணு சொன்னாள நெட்டூரி
கொண்டையில் வச்சிக் குலுக்கிடுவா என்பூவ
கூந்தலிலே வச்சிக் குலுக்கிடுவா என்பூவ
மார்மேல அணைச்சு மசக்கிடுவா என்பூவ
தோளாலவச்சு தொவட்டிடுவா என்பூவ

பிறகு அந்த இடத்திலும் தண்ணீர் தெளித்துக் கோலால் தட்டவே சின்னவன் உயிர் பெறுகிறான்.

திருமணம் நடைபெறுகிறது. பெண் புகுந்தவீடு செல்கிறாள்.

பெண் கருவுற்றபோது அவளை அழைத்து வருவதற்கு சின்னமகனை அனுப்புகிறாள் தாய்.

அழைத்து வரும்வழியில் அவளை வெட்டிப் பிள்ளை வேறு அவள் வேறாக ஆக்கிப் புதைத்துவிட்டு வந்து தங்கை வர மறுத்து விட்டதாகத் தாயிடம் பொய் கூறுகிறான்.

பெண்ணுடைய கணவன் தன் மனைவியைப் பார்க்க அவள் தாய் வீட்டிற்கு வருகிறான்.

வரும் வழியில் பூத்திருந்த பூவைத் தன் மனைவிக்காகப் பறிக்கச் சென்றான். அப்போது ஒரு குரல்:

தொடாத தொடாத என் கணவா
தொட்டுப் பறிக்காத என் கணவா
கத்தி விழுந்தது எம்மேல
கத்திசோலபட்டுது எம்மேல
வெட்டு விழுந்தது எம்மேல
வீசி வுழுந்தது எம்மேல

என்று பாடியது.

உடனே அவன் தன் மாமியார் வீட்டிற்குச் சென்று தன் மனைவி எங்கே என்று கேட்கிறான்.

தாய் மகனிடம கேட்க மகன் உண்மையை மறைக்கிறான்.

மருமகன் அனைவரையும் அழைத்துச் சென்று மனைவியை மீண்டும் பாடவைத்து உண்மையை வெளிப்படுத்துகிறான்.

கூறியவர்: அம்மாதனம்.

10. தஞ்சை மாவட்டம்

தங்கை, வயலில் ஏர் உழும் அண்ணனுக்குச் சோறு எடுத்துச் செல்கிறாள். வழியில் வாய்க்காலைக் கடக்க வேண்டும். வாய்க்காலில் இருந்த வாளைமீனிடம் குறும்பு (சேட்டை) செய்ய அம்மீன் அவளைக் கிழித்துக் காயப்படுத்திவிடுகிறது.

தாயிடம் தன் சின்னண்ணன் அடித்ததாகப் பொய் கூறுகிறாள். தாய் சின்ன மகனைக் கொன்று விடுகிறாள் (வெட்டிப் புதைத்ததாக நினைவு). அவனைப் புதைத்த இடத்தில் பூச் செடி முளைத்துப் பூத்திருக்கிறது. பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமானபோது பூ எங்கும் கிடைக்கவில்லை.

சின்னவனைப் புதைத்த இடத்தில் மலர்ந்திருக்கும் பூவைப் பெற்றோர்களும் அண்ணன்மாரும் கேட்க பூச்செடி பூ தர மறுக்கிறது.

வாளை கிழிச்சதுண்ணு
வழிநெடுக போகாமே
சின்னண்ணன் கிழிச்சதுண்ணு
சொன்னாளே நீலியவ
அவளுக்கா பூ கொடுப்பேன்
அவ கொண்டைக்கா பூ கொடுப்பேன்

கூறியவர்: வித்வான் திரு வீ. சொக்கலிங்கம்.

11. தென்னார்க்காடு மாவட்டம்

ஓர் இடைச்சிக்கு மூன்று ஆண் மக்கள். பெண் குழந்தை இல்லை. பிச்சையெடுக்க வரும் சாமியாரிடம் தனக்குப் பெண் பிள்ளை இல்லாத குறையைச் சொல்கிறாள்.

சாமியார் மந்திரம் ஓதித் தந்த ஏழு மிளகை வாயில் போட்டு நீர் குடிக்க ஒரு மிளகு கீழே விழுந்து உருண்டோடிப் பரண் ஏறிப் பெண்ணாகிறது. இது தாய்க்குத் தெரியாது.

தினம் இடைச்சி பால் விற்றுத் திரும்பும்போது சமையல் உட்பட வீட்டு வேலைகள் முடிந்திருப்பதைப் பார்த்துப் பக்கத்து வீட்டுப் பெண் இவ்வாறு உதவுவதாக எண்ணி மகிழ்வாள்.

ஒரு நாள் வளையல்காரனிடம் வளையல் போட்டுக் கொண்ட பெண் தன் தாயிடம் பணம் வாங்கிக் கொள்ளுமாறு கூற, வளையல்காரன் உதவியுடன் இடைச்சி தனக்கொரு

பெண் இருப்பதை அறிந்து அவளே தனக்கு வீட்டு வேலைகள் செய்து தருகிறாள் என்பதையும் உணர்ந்து மகிழ்கிறாள்.

வயலில் ஏர் ஓட்டும் சின்னமகனுக்கு உணவு எடுத்துச் செல்லுமாறு தாய் கூற, மகள் உணவு எடுத்துச் செல்கிறாள். வழியில் ஒரு வாய்க்காலைக் கடக்க வேண்டும். வாய்க்காலில் நீர் மிகுதியாகச் செல்ல அதனைக் குடித்து, தான் அக்கரை செல்ல உதவினால் திரும்பி வருகையில் சோறு தருவதாக வாளைஅண்ணனிடம் அப்பெண் கூற, வாளை உதவுகிறது.

அண்ணன் மீதி வைக்காமல் உண்டு விடவே, கீழே இறைந்து கிடந்த சோற்றைச் சப்பாத்தி முள்ளில் வைத்து வாளையை ஏமாற்றுகிறாள். அப்போது குளிக்கத் தொடங்கிய அவள் தன் முதுகைச் சொறிந்து விடுமாறு வாளையிடம் கேட்க அது வாலால் அடித்துக் காயப்படுத்துகிறது.

தாயிடம் உண்மையைச் சொல்லப் பயந்து சின்ன அண்ணன் தார்க்கழியால் அடித்து விட்டதாகப் பொய் கூறுகிறாள்.

தாய் சினந்து உணவில் விஷமிட்டு, சின்ன மகனைக் கொல்கிறாள். பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமானபோது பூ எங்கும் கிடைக்கவில்லை.

சின்னவனைப் புதைத்த இடத்தில் பூக்கள் பூத்துக் குலுங்குவதைக் கண்டு அவற்றைப் பறிக்கச் செல்லும்போது மறைந்து விடுகின்றன.

தந்தை, தாய், அண்ணன்மார் முதலிய அனைவரும் ஒவ்வொருவராகப் பூ கேட்க, சின்னவன் தர மறுத்து விடுகிறான்.

தம்பியடா தம்பியடா
தங்கையர்க்குக் கல்லியாணம்
பூவும் கொடுக்க வேணும்
பூவழகு பார்க்கவேணும்
மால கொடுக்கவேணும்

மாலழகு பார்க்க வேணும
வாள கிழிச்சதுண்ணு
சொன்னாளா நெட்டருவி
சின்னண்ணன் அடிச்சாண்ணு
சொன்னாளே நெட்டுருவி
நெட்டருவி கொண்டைக்கு
நெறக்குமா எம்பூவு
காந்தேரி கொண்டைக்கு
கனக்குமா எம்பூவு
கண்ணுல வச்சிக்
கசக்கிடுவா எம்பூவ
மடியில வச்சி
மசக்கிடுவா எம்பூவ

கூறியவர்: ஆ. சீதாலெட்சுமி.

12. தென்னார்க்காடு மாவட்டம்

ஒரு தாய்க்கு நான்கு மகன்கள். பெண் இல்லை. மோர் விற்றுவிட்டு வீட்டிற்கு வந்த பிறகு அசதி காரணமாக வீட்டு வேலைகள் செய்ய இயலாமல் உதவி செய்ய ஒரு பெண் பிள்ளை இல்லையே என்று ஒப்பாரி வைத்து அழுகிறாள்.

தெருவில் செல்லும் முனிவர் ஒருவர் அழுகைக்கான காரணத்தைக் கேட்டு அறிந்து ஏழுமிளகை எடுத்துவரச் செய்து மந்திரித்து அவற்றை அம்மியில் வைத்து அரைத்து உண்ணச் சொல்கிறார்.

அவள் அவ்வாறு செய்யும்போது ஒரு மிளகு உருண்டோடிப் பெண்ணாகிறது. இது தாய்க்குத் தெரியாது.

தாய் தினம் மோர் விற்றுவிட்டு வரும்போது வீட்டு வேலைகள் முடிக்கப்பட்டிருப்பது கண்டு ஆச்சரியப்படுவாள்.

ஒரு நாள் பெண் வளையல்காரனைக் கூப்பிட்டு வளையல் போட்டுக் கொண்டு தன் தாயிடம் பணம் வாங்கிக் கொள்ளுமாறு கூறுகிறாள். வளையல்காரன் பணம் கேட்கவே தாய்

தனக்கு மகள் கிடையாது என்று கூறுகிறாள். பிறகு அவன் உதவியுடன் தனக்கு மகள் இருப்பதை அறிந்து மகிழ்கிறாள்.

ஒரு நாள் தாய்க்கு உடல் நலக் குறைவாக இருக்கிறது எனவே, மகளை மகன்களுக்கு உணவு எடுத்துச் செல்லுமாறு கூற அவள் உணவு எடுத்துச் செல்கிறாள். வழியில் ஒரு ஆற்றைக் கடக்க வேண்டும். ஆற்றில் நீர் மிகுதியாகச் செல்லவே அதனைக் குடித்து ஆற்று நீரை வற்றச் செய்து தான் அக்கரை செல்ல உதவினால் திரும்பி வருகையில் சோறு தருவதாக முதலையிடம் கூற, முதலை உதவுகிறது.

முன் ஏரை நிறுத்தினால் பின் ஏர்களும் நின்று வேலை கெடுமாதலால் முன் ஏரை நிறுத்தாமல் பின் ஏரு ஓட்டும் சின்னண்ணனிடம் சோற்றை இறக்குமாறு கூறுகிறாள். அவன் மறுக்கிறான். பெரியண்ணன் இறக்குகிறான்.

சாப்பிடும்போது உணவு மீதியாகவில்லையாதலால் கீழே இறைந்து கிடக்கும் சோற்றைப் பொறுக்கி சப்பாத்தி முள்ளில் குத்தி உருண்டையாக்கி முதலையிடம் தர அதனை விழுங்கும் போது முட்கள் அதன் வாயில் சிக்கிக் கொள்கின்றன.

அவள் ஆற்றைக் கடக்கும்போது முதலை அவள் முதுகைச் சொறிந்து காயப்படுத்துகிறது.

அவள் உண்மையை மறைத்து சின்ன அண்ணன் அடித்த தாகத் தாயிடம் பொய் கூறுகிறாள்.

தாய் மற்ற மகன்களுக்கு மீன் குழம்பும் சின்னவனுக்குப் புற்றிலிருந்து பிடித்துவந்து சமைத்த பாம்புக் குழம்பும் போடு கிறாள்.

தன்னை மட்டும் ஏன் தனியாக உடகார வைக்கிறாய் என்று சின்ன மகன் கேட்க, 'அவர்களுக்குத் தலையும் வாலும் உனக்கு நடுத் துண்டம்' என்று தாய் கூறுகிறாள்.

உண்டபிறகு அவன் வயிற்றை வலிக்கிறது என்று கூற' அவள் உரல் மீது ஏறிக் குதிக்குமாறு கூறுகிறாள். அவன்

அவ்வாறு செய்து மீண்டும் வலிக்கிறது என்று கூற, அவள் மரத் தொம்பை மீது ஏறிக் குதிக்கச் சொல்கிறாள். அவன் அவ்வாறு செய்ய இறக்கிறான். பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமான போது பூ எங்கும் கிடைக்கவில்லை.

மாடு மேய்க்கும் சிறுவர்கள் சின்னவனைப் புதைத்த இடத்தில் பூ இருப்பதாகக் கூறுகிறார்கள். பூப்பறிக்கச் செல்பவர்கள் பூவைத் தொட்டதும் பூ மறைந்து விடுகிறது.

தந்தை பூ கேட்க சின்னவன் தர மறுக்கிறான்.

தம்பியடா தம்பியடா
தங்கையர்க்குக் கல்யாணம்
பூவு கொடுக்க வேணும்
பூவழகு பார்க்கவேணும்
மால கொடுக்கவேணும்
மாலழகு பார்க்கவேணும்
வாளண்ணன் அடிச்சி
வடநாடு போயிருக்க
சின்னண்ணன் அடிச்சாண்ணு
சொன்னாளே நெட்டுருவி
நெட்டுருவி கொண்டைக்கு
நெறக்காது எம்பூவு
கையில வச்சிக் கசக்கிடுவா எம்பூவ
மாருல வச்சி மசக்கிடுவா எம்பூவ

தந்தை சின்னவன் மறுப்பை மீறிப் பூப்பறிக்கவே கல்லாகி விடுகிறான்.

இவ்வாறே அடுத்தடுத்து தாய், அண்ணன்மார் மூவர் ஆகியோர் பூ கேட்கவும் சின்னவன் மறுப்பை மீறிப் பூப் பறித்துக் கல்லாகின்றனர்.

பெண் தனித்து நின்று பூப் பறிக்கச் சென்றோரைக் காணாமல் அழ, அப்பக்கம் வந்த முனிவர் ஒருவர் விவரமறிந்து ஒரு சொம்பில் நீரும் ஒரு கோலும் தந்து நீர் தெளித்துத் தட்டினால் அவர்கள் உயிருடன் வருவர் என்று கூற, அவள்

அவ்வாறே செய்து சின்னண்ணன் உட்பட அனைவரையும் உயிர் பெறச் செய்கிறாள்.

அவள் திருமணம் சிறப்பாக நடைபெறுகிறது. கணவனோடு செல்கிறாள்.

சில காலங்கழித்து கருவுற்றிருந்த அவளை வரிசை கொடுத்து அழைத்து வருமாறு சின்னவனை அனுப்புகின்றனர்.

தங்கையை அழைத்துக் கொண்டு காட்டுவழியே வரும் போது அவளை வெட்டித் தலைவேறு முண்டம் வேறாகப் போட்டுவிட்டு வந்து விடுகிறான்.

தாய் கேட்டபோது தங்கை வர மறுத்துவிட்டதாகப் பொய் கூறுகிறான்.

சில நாள்களில் பெண்ணின் கணவன் மனைவியைக் காண மாமியார் வீட்டிற்கு வரும் வழியில் மனைவி வெட்டுண்டு கிடப் பதைக் காண்கிறான். அவளைத் தொட்டுத் தூக்கச் செல்லும் போது அவள் தொட வேண்டாம் என்று கூறிவிடுகிறாள்.

(தொடாத தொடாத எங்கணவா
தொட்டுப் பாக்காத எங்கணவா
கத்திப்பட்டது எம்மேல
கருஞ்சோலபட்டது புள்ளமேல)

அவன் மாமியார் வீட்டிற்குச் சென்று நடந்ததைக கூற அனை வரும் அங்கே வருகின்றனர்.

தந்தை முதலானோர் ஒவ்வொருவராகத் தொட முயலும் போதும அவள் மேற்கண்டவாறே கூறி மறுக்கிறாள்.

முன்பு சின்னவனைத் தொட்டுக் கல்லாகிய பயம் இருந்த தால் அவளைத் தொடாமலேயே அடக்கம் செய்துவிட்டு வீடு திரும்புகின்றனர்.

கூறியவர்: சின்னபிள்ளை

13. தென்னார்க்காடு மாவட்டம்

நான்கு சகோதரர்கள். ஒரு தங்கை. வயலில் ஏர் உழும் அண்ணன்மார்களுக்குத் தங்கை வழக்கம்போல் உணவு எடுத்துச் செல்கிறாள். வழியில் ஓர் ஆற்றைக் கடக்க வேண்டும். ஆற்றில் நீர் மிகுதியாகச் செல்லவே தன்னை அக்கரைக்குக் கொண்டு சென்றால் திரும்பி வருகையில் உணவு தருவதாக ஆற்றில் உள்ள வாளைமீனிடம் கூற, வாளை ஆற்றைக் கடக்க உதவுகிறது.

அண்ணன்மார் மீதி வைக்காமல் உண்டுவிடவே இறைந்து கிடக்கும சோற்றை மண்ணுருண்டைமேலே ஒட்டி வாளையிடம் கொடுத்து ஏமாற்றுகிறாள். அவள் குளிக்கும்போது வாளை அவள் முதுகைக் கிழித்து விடுகிறது.

தாமதமாக உணவு எடுத்து வந்ததாகச் சின்னண்ணன் அடித்துவிட்டான் என்று தாயிடம் பொய் கூறுகிறாள்.

தாய் அனைவருக்கும் மீன் குழம்பும் சின்னவனுக்குப் பாம்புக் குழம்பும் போட அதனை உண்ட சின்னவன் இறக்கிறான்.

பெண் பருவமடைந்து திருமணம் நிச்சயமானபோது பூ எங்கும் கிடைக்கவில்லை.

சின்னவனைப் புதைத்தஇடத்தில் பூத்துக் குலுங்கும் பூவைப் பறிக்கப் பெற்றோர்கள் முற்படும்போது பூ வாடி விடுகிறது. அவர்கள் மகனிடம் பூ கேட்கின்றனர்.

(தம்பியடா தம்பியடா
தங்கைக்கு கல்யாணம்
பூ கொடுக்க வேண்டும்
பூவழகு பார்க்க வேண்டும்
மாலை கொடுக்க வேண்டும்
மாலையழகு பார்க்க வேண்டும்
தாலி கொடுக்க வேண்டும்
தாலியழகு பார்க்க வேண்டும்)

மகன் பூத்தர மறுத்துவிடுகிறான். பெற்றோர் கல்லாகி விடுகின்றனர்.

(சின்னண்ணன் அடிச்சான்னு
சொன்னாளே ரெட்டிச்சி
ரெட்டிச்சி கொண்டைக்கு
நிரக்குமா என் பூவு
தொத்தல் கொண்டைக்கு
துலக்குமா என் பூவு
பத்தினி கொண்டைக்கு
பறக்குமா என் பூவு
அவுசேரி கொண்டைக்கு
அலங்குமா என் பூவு)

அண்ணன்மாரும் ஒவ்வொருவராகப் பூ கேட்க தம்பி மறுத்து விடுகிறான். அவர்களும் அனைவரும் கல்லாகி விடுகின்றனர்.

பெண்மட்டும் தனியாக அங்கு நின்று அழுதுகொண்டிருக்க, அங்குவரும் பரமசிவன் அழுகைக்கான காரணத்தைக் கேட்டறிந்து ஒரு சொம்பில் நீரும் ஒரு கோலும் கொடுத்துக் கல்லானவர்கள் மேல் நீரைத் தெளித்துக் கோலால் தட்டினால் உயிர் பெறுவர் எனக் கூறுகிறார். பெண் அவ்வாறு செய்ய கல்லானவர்கள் உயிர் பெறுகிறார்கள்.

சின்ன அண்ணன் பூப் பறிக்க அனுமதிக்கின்றான். திருமணம் சிறப்பாக நடக்கிறது.

கூறியவர்: ராசமாணிக்கம்.

14. தென்னார்க்காடு மாவட்டம்

ஒருத்திக்கு நான்கு ஆண் மக்கள். பெண் குழந்தை இல்லை.

பெண் இல்லையே என்று அவள் அழுது கொண்டிருக்க அழுகைக்கான காரணத்தைக் கேட்டுணர்கிறான் குடுகுடுப்பைக் காரன்.

அவன் கொடுத்த ஏழுமிளகை அவன் கூறியவாறு நசுக்கிச் சாப்பிட ஒரு மிளகு கீழே விழுந்து அடுக்குப்பானைச் சந்துக்குள் புகுந்து பெண்ணாகிறது. இது தாய்க்குத் தெரியாது.

தினமும் தாய் வயலில் வேலை செய்யும் மகன்களுக்கு உணவு கொடுத்துத் திரும்பும்போது வீட்டு வேலைகள் செய்யப் பட்டிருக்கும்.

ஒருநாள் வளையல்காரனிடம் வளையலும் பூக்காரனிடம் பூவும் வாங்கிக் கொண்டு தன் தாயிடம் பணம் பெற்றுக் கொள்ளுமாறு கூறுகிறாள்.

அவர்கள், தாயிடம் பணம் கேட்க அவள் தனக்கு மகள் இல்லை என்றும் யாரென்று தெரிந்து கொண்டு பணம் தருவ தாகவும் கூறி அனுப்புகிறாள்.

இரவில் கண் விழித்து அப்பெண்ணைக் கண்டுபிடித்து விவரமறிகிறாள்.

அண்ணன்களுக்கு எடுத்துச் செல்வதற்கான உணவைக் காலத்தில் சமைக்க வேண்டும் என்று தாய் மகளிடம் கூறு கிறாள்.

தாய் தினமும் மூன்று மகன்களுக்குக் கூழும் சின்னமகனுக் குச் சோறும் எடுத்துச் செல்வாள். ஒரு நாள் மகள் தான் உணவு எடுத்துச் செல்வதாகக் கூறி உணவு எடுத்துச் செல்கிறாள் வழியில் நதியைக் கடக்க வேண்டும். பெண் திரும்புகையில். ஒரு உருண்டை சோறு தருவதாகக் கூறி முதலையின் உதவி யுடன் நதியைக் கடக்கிறாள்.

பசி காரணமாக சின்னண்ணன் மீதி வைக்காமல் உண்டு விட்டே கீழே இறைந்து கிடக்கும் சோற்றைச் சப்பாத்தி முள்ளில் சொறுவி உருண்டையாக்கி முதலையிடம் கொடுத்து ஏமாற்றுகிறாள்.

முதலை அவளை அடித்துக் காயப்படுத்துகிறது.

தாயிடம் சின்னண்ணன் அடித்ததாகப் பொய் கூறுகிறாள்.

தாய் அனைவருக்கும் மீன் குழம்பும் சின்னவனுக்குப் புற்றி லிருந்து பாம்பைப் பிடித்து வந்து பாம்புக் குழம்பும் போட, சின்னவன் இறக்கிறான்.

பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமானபோது எங்கும் பூ கிடைக்கவில்லை. சினனவனைப் புதைத்த இடத்தில் ஒரு செடி முளைத்து பூ பூததிருந்தது. பெரியவன் தங்கையின் திருமணத் திற்காகச் சின்னவனிடம் பூ கேட்டான். சின்னவன் பூ தர மறுத்ததோடு அவனைக் கல்லாக்கி விட்டான்.

(வாள அண்ணன் அடிச்சிருக்க
சின்னண்ணன் அடிச்சான்னு
சொன்னாளே நெட்டூரி
நெட்டூரி கொண்டைக்கு
நிறக்காது என்பூவு
காந்தேரி கொண்டைக்கு
காணாதே என்பூவு
பத்தினி கொண்டைக்கு
பலிக்காது என்பூவு
நெத்திளி கொண்டைக்கு
நிலைக்காதே என்பூவு)

பூ கேட்கும் ஏனைய மூன்று அண்ணன்களையும் இவ் வாறே கூறி ஒருவர் பின் ஒருவராகக் கல்லாக்குகிறான். பெண் தன் தவறை உணர்ந்து அழுதாள். பரமசிவன் வந்து பெண் ணின் அழுகைக்கான காரணத்தைக் கேட்டறிந்து இறந்து விட்ட சின்னண்ணனுக்கு உயிர் கொடுத்தார்.

பரமசிவன் கூறியதற்கிணங்க கல்லாக மாறிய அண்ணன் மார்களுக்குச் சின்னவன் உயிரளித்தான். பூப்பறித்துச் சென்று திருமணத்தை நடத்தினர்.

கூறியவர்: எம். கதிர்வேல்.

15. தென்னார்க்காடு மாவட்டம்

அண்ணன் தம்பி ஆறுபேர். ஒரே தங்கை. தினமும் வயலில் ஏர் உழும் அண்ணன்மார்களுக்கு உணவு கொண்டு செல்வாள்.

ஆற்றைக் கடந்து செல்லவேண்டும். ஆற்றுநீரைக் குடித்து ஆற்றைக் கடக்க உதவினால் திரும்பும்போது ஓர் உருண்டை உணவு தருவதாக வாளையிடம் கூறுகிறாள்.

ஒரு நாள் சின்னண்ணன் மீதி வைக்காமல் உண்டு விடவே களிமண் உருண்டையில் சோற்றை ஒத்தித் தந்து வாளையை ஏமாற்றுகிறாள்.

மறுநாள் அவள் குளிக்கும்போது தன் முதுகைத் தேய்த்து விடுமாறு கூற கோபங் கொண்டிருந்த வாளை அவள் முதுகில் வாலால் கீறிவிடுகிறது.

தாயிடம் சின்னண்ணன் அடித்துவிட்டதாகப் பொய் கூறு கிறாள்.

தாய் ஆறு பேருக்கும் வெளிச்சத்தில் சோறுபோட்டு சின்ன வனுக்கு இருட்டில் பாம்புக்கறி ஆக்கிப்போட, அவன் இறக் கிறான்.

பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமானபோது பூ எங்கும் கிடைக்கவில்லை.

சின்னவனின் சமாதியில் பூ உள்ளதாக மாடு மேய்ப்பவர் கள் பெண்ணின் தந்தையிடம் கூறுகின்றனர். அவர் சின்னவ னின் சமாதியில் காணப்பட்ட பூக்களைப பறிக்க முற்பட, பூக்கள் மறைகின்றன. தூரத்தில் சென்றுபார்க்க மீண்டும் காணப்படுகின்றன.

மகனிடம் பூ கேட்கிறார்:

(தம்பியடா தம்பியடா
தங்கைக்குக் கல்யாணம்
பூவும் கொடுக்கவேணும்
பூவழகு பார்க்கணும்
மாலை கொடுக்கவேணும்
மாலழகு பார்க்கணும்)

அவன் தரமறுக்கிறான்.

(அப்பாவே அப்பாவே
வாளன் அடிச்சிருக்க
வடநாடு போயிருக்க
சின்னண்ணன் அடிச்சாண்ணு
சொன்னாளே பொண்விதி (புண்ணியவதி)
பொண்விதி கொண்டைக்கு என்
பூவு பொறுக்குமா?)

குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பூ கேட்டும் அவன் தர மறுத்து விடுகின்றான்.

பார்வதியும் பரமசிவனும் வந்து இறந்தவனை உயிர்ப்பித்து அனைவரையும் மகிழ்வித்தனர். திருமணம் நடைபெறுகிறது.

கூறியவர்: ஜெ. பெரியண்ணன்

16. தென்னார்க்காடு மாவட்டம்

ஒரு தாய்க்கு நான்கு ஆண் குழந்தைகள். பெண் குழந்தை கிடையாது. பெண் குழந்தை இல்லையே என்று வருந்திய தாய் மந்திரவாதியின் சொற்படி ஏழு மிளகுகளை அம்மியில் வைத்து நசுக்க ஒரு மிளகு உருண்டோடிப் பெண்ணாகிவிடுகிறது.

உருண்டோடிய மிளகு பெண்ணானதைத் தாய் அறியாள். தாய் காட்டிற்குச் சென்று வேலைகள் முடித்துத் திரும்பி வந்து பார்க்கும்போது சமையல் உட்பட வீட்டு வேலைகள் முடித்து வைக்கப்பட்டிருக்கும். எண்ணெய் விற்கும் செக்கானிடம் எண்ணெயும் வளையல்காரனிடம் வளையலும் வாங்கிக் கொண்டு தன் தாயிடம் பணம் வாங்கிக் கொள்ளுமாறு அப் பெண் கூறினாள்.

ஒரு நாள் அப்பெண் சமைத்துக் கொண்டிருக்கையில் தாய் திரும்பிவர, உண்மையை அறிந்து மகிழ்ந்து பெண்ணைப் போற்றுகிறாள்.

தாய் தடுத்தும் கேட்காமல் ஏர் உழும் அண்ணன்மார்களுக்குச் சோறு எடுத்துச் செல்கிறாள். வழியில் ஒரு வாய்க்காலைக் கடக்கவேண்டும். வாய்க்காவில் நீர் மிகுதியாக இருந்த

தால் அதனைக் கடப்பதற்கு 'வாளை அண்ணன்' உதவியை நாடு கிறாள். திரும்பி வருகையில் உணவு கொடுப்பேன் என்று சொன்னதைக் கேட்டு வாளை அண்ணன் அவளை அக்கரையில் கொண்டு சேர்க்கிறது. சோற்றை இறக்குமாறு அவள் பெரிய அண்ணனிடம் கூற அவன் இறக்கவில்லை. இவ்வாறே அடுத் தடுத்த அண்ணன்மார்களும் மறுக்கவே சின்ன அண்ணன் இறக்குகிறான்.

அண்ணன்மார் மீதி வைக்காமல் சோற்றை உண்டு விடு கின்றனர். சின்ன அண்ணன் உண்ட இடத்தில் மட்டும் சோறு இறைந்து கிடக்க அவற்றைப் பொறுக்கிக் களிமண் காரைமுள் ஆகியவற்றோடு சேர்த்து உருட்டி எடுத்துவந்து வாளையின் வாயில் போடுகிறாள்.

அவள் குளிக்கும்போது முதுகைச் சொறிந்துவிடுமாறு வாளையிடம் கூறுகிறாள். வாளை தன் வாலால் அடித்து அவளைக் காயப்படுத்துகிறது. சின்ன அண்ணன் தன்னைச் சாட்டையால் அடித்ததாகத் தாயிடம் பொய் கூறுகிறாள்.

தாய் தன் மற்ற மகன்களுக்குமீன் குழம்பும் சின்ன மகனுக் குப் புற்றில் வெந்நீர் விட்டுப் பாம்பைப் பிடித்து பாம்புக் குழம் பும் செய்து சின்னவனைத் தனியே அமரச்செய்து போடுகிறாள்.

பாம்புக் குழம்பு சாப்பிட்ட சின்ன மகன் வயிற்றுவலி, மயக்கம் என்று கூற, தாய் குந்தாணி (உரல்) மீது ஏறிக் குதித் தால் சரியாகும் என்று கூற, அவன் அவ்வாறே செய்ய, இறக் கிறான்.

நெட்டுருவிக்குத் திருமணம் நிச்சயமானபோது பூ எங்கும் கிடைக்கவில்லை. மாடுமேய்க்கும் சிறுவர்கள் சின்னவனைப் புதைத்த இடத்தில் மலர் இருப்பதாகக் கூறுகின்றனர்.

பெற்றோர் பூப்பறிக்கச் செல்லப் பூ மறைகிறது. பெரிய அண்ணன் முதலியோர் பூ கேட்கின்றனர்.

பூவுகொடுக்க வேண்டும்
பொன்னழகு பார்க்க வேண்டும்

மாலை கொடுக்க வேண்டும்
மால அழகு பார்க்க வேணும்

அதற்குச் சின்னவன் பூ தர மறுக்கிறான்.

'வாள கிழிச்சிருக்க
வடபுறமா சாய்ந்து இருக்க
சின்ன அண்ணன் அடிச்சாண்ணு
சொன்னாளே நெட்டுருவி
நெட்டுருவி கொண்டைக்கு
நிரக்காது என்பூவு
காந்தாரி கொண்டைக்கு
கனக்காது என்பூவு
மாரின்மேல் வைத்து
மசக்கிடுவாள் என்பூவை
தோளின்மேல் வைத்து
துவட்டிடுவாள் என்பூவை
கையின்மேல் வைத்துக்
கசக்கிடுவாள் என்பூவை'.

அப்போது பார்வதியும் பரமசிவனும் சின்னவனைத் தடியினால் எழுப்பத் திருமணம் நல்லமுறையில் நடந்தது.

கூறியவர்: ஒப்பாயாள்.

17. தென்னார்க்காடு மாவட்டம்

ஒரு குடியானவரும் அவருடைய மனைவியும் உள்ள குடும்பம். அவர்களுக்குக் குழந்தையில்லை. குழந்தை இல்லையே எனத் தாய் வருந்துகிறாள். குடியானவனின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு சாமியார் ஏழு மிளகு மந்திரம் ஓதிக் கொடுத்து வீட்டின் ஏழு மூலைகளில் போட்டு வைத்தால் ஏழு ஆணும் ஒரு பெண்ணும் பிறக்கும் என்று கூறுகிறார்.

சாமியார் கூறியபடி செய்யவே எலி ஒரு மிளகை எடுத்துச் சென்று பரணில் போட்டுவிடுகிறது.

கீழே கிடந்த மிளகுகள் ஏழு ஆண் குழந்தைகளாயின. பெற்றோர் அவர்களை அன்புடன் வளர்த்தனர். பரணில்

இருந்த மிளகு பெண் குழந்தையாகி அங்கேயே வளர்ந்தது. இது யாருக்கும் தெரியாது.

ஒரு நாள் வீட்டில் யாருமில்லாதபோது பரணிலிருந்த பெண் கீழே இறங்கி வந்து துணி வியாபாரியிடம் சித்தாடையும் வளையல்காரனிடம் வளையலும் வாங்கிக்கொண்டு அம்மா வந்த பிறகு ரூபாய் தருவதாகக் கூறிப் பரணில் ஏறிக் கொள்கிறாள்.

வியாபாரிகளின் குறிப்புகளைக்கொண்டு தாய் அப்பெண்ணைக் கண்டுபிடித்து உண்மையை அறிந்து தனக்கொரு மகள் கிடைத்ததை எண்ணி மகிழ்கிறாள்.

ஒருநாள் தாய் தன் மகளை அழைத்து வயலில் ஏர் உழும் அண்ணன்மார்களுக்கு உணவு எடுத்துச் செல்லுமாறு கூற, பெண் உணவு எடுத்துச் செல்கிறாள். வழியில் நீர் மிகுந்த ஓர் ஆற்றைக் கடக்க வேண்டும். சாப்பாடு கொடுத்தால் ஆற்றைக் கடக்க உதவுவதாக ஒரு வாளை கூறவே அவள் ஒப்புக் கொண்டு ஆற்றைக் கடந்த பின் திரும்பும்போது சாப்பாடு தருவதாகக் கூறிச் செல்கிறாள்.

அண்ணன் உண்டபிறகு தங்கைக்கென்று சிறிது சோறு மீதி வைத்தான். அச்சோறு அளவில் குறைவாக இருந்ததால் மண்ணையும் நெறிஞ்சி முள்ளையும் அந்தச் சோற்றோடு கலந்து வாளைக்குத் தந்து ஏமாற்றுகிறாள்.

அந்தச் சோற்றை உண்ணும்போது கைகளில் முள் குத்திக் கொண்ட வாளை, ஆற்றில் குளித்துக்கொண்டிருந்த அப் பெண்ணின் உடம்பில் அந்த முள்ளால் கீறிக் காயப்படுத்து கிறது.

சின்னண்ணன் அடித்ததாகத் தாயிடம் பொய் கூறினாள். தாய் தன் சின்னமகனுக்குப் பாம்புக்கறி கொடுத்துக் கொல்கிறாள். அவன் சமாதியில் பூஞ்செடி முளைக்கிறது.

பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமானபோது திருமணத் திற்குப் பூ எங்கும் கிடைக்கவில்லை. சின்னவனின் சமாதியில்

உள்ள பூஞ்செடியில் பூ இருப்பதை அறிந்து பெற்றோரும் அண்ணன்மாரும் சென்று பறிக்க முயல்கின்றனர். செடி பூ தர மறுக்கிறது.

(வாளண்ணன் அடிச்சி இருக்க
வடநாடு சென்று இருக்க
சின்ன அண்ணன் அடிச்சான் என்று
சொன்னாளே நிட்டுருவி
நிட்டுருவி கொண்டைக்கு
நெலக்குமா என்பூவு
பத்தினி கொண்டைக்கு
பலிக்குமா என்பூவு

அப்போது பெண் தவிர அனைவரும் இறந்து விடுகின்றனர்.

பெண் அழுதுகொண்டிருக்க, முன்பு வந்த சாமியார் அங்கு வந்து அனைவரையும் உயிர்ப்பித்தார்.

சின்னவன் வீட்டிற்கு வர மறுத்து மீண்டும் இறந்து விடுகிறான்.

(இறந்தவர் வந்தால்
இருக்க எடங்கொள்ளாது
மாண்டவர் வந்தால்
மாள எடங்கொள்ளாது)

அனைவரும் அந்தப் பெண்ணால்தான் இவ்வளவும் என்று கூறினார்கள்.

கூறியவர்: சீ. அண்ணாமலை ரெட்டியார்.

18. புதுச்சேரி மாநிலம்

அண்ணன் தம்பி நால்வர்; ஒரு தங்கை.

சின்னவன் தங்கைமீது அன்பாக இருப்பான். தங்கை வயலில் வேலை செய்யும் அண்ணன்மார்களுக்கு உணவு எடுத்துச் செல்கிறாள்.

வழியில் ஆற்றைக் கடக்க வேண்டும். அவள் ஆற்றில் குளித்து நீரைக் கலக்கி விடுகிறாள். அதனால் கோபங் கொண்ட வாளை அவளை அடித்துக் காயப்படுத்துகிறது. சின்ன அண்ணன் காயத்திற்கான காரணம் என்ன என்று கேட்க அம்மா அடித்ததாகப் பொய் கூறுகிறாள்.

தாய் கேட்கும்போது சின்ன அண்ணன் அடித்ததாகப் பொய் கூறுகிறாள். தன்னிடம் அன்பாக இருப்பவன் ஆதலால் அவனிடம் உண்மையைக் கூறிவிடலாம் என்ற எண்ணத்தில் அவ்வாறு செய்கிறாள்.

தாய் சின்ன மகனுக்கு உணவில் விஷமிட்டுக் கொல்கிறாள்.

சின்னவனின் பிணமேடை (சமாதி) உட்பட சுடுகாட்டிலுள்ள பிணமேடைகளில் நித்திய கல்யாணி பூத்திருக்கின்றது. பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமானபோது எங்கும் பூ கிடைக்கவில்லை.

நித்திய கல்யாணி எப்பருவத்திலும் சுடுகாட்டில் மலர்ந்திருக்கும். ஆதலால் அதனைப் பறித்து வர அண்ணன்மார் அங்குச் செல்கின்றனர்.

சின்னவனின் பிணமேடையிலிருந்த பூவைப் பறிக்க முயலும்போது அப் பூ வாடிவிடுகிறது. சின்னவன் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஏனைய பிணமேடைப் பூக்களும் வாடிவிடுகின்றன. அண்ணன்மார் தம்பியின் பிண மேடைக்குச் சென்று பூ தருமாறு தம்பியிடம் கேட்கின்றனர்.

தங்கையை அழைத்து வந்தால் தருகிறேன் என்று சின்னவன் கூறுகிறான்

தங்கையை அழைத்து வந்தபோது தாயை அழைத்து வருமாறு கூறுகிறான்.

தாயை அழைத்து வந்தபோது ஊராரை அழைத்துத் தான் குற்றமற்றவன் என்று நிரூபித்தால் பூ தருவதாகக் கூறுகிறான்.

ஊரார் முன் உண்மையை ஒப்புக்கொண்டபிறகு பூக்கள் மலர்கின்றன. பூப் பறித்து வந்து திருமணத்தை நடத்துகின்றனர்.

கூறியவர்: நா. இளங்கோ.

19. புதுச்சேரி மாநிலம்

வயலில் வேலை செய்யும் அண்ணன்மார்களுக்குக் கஞ்சி கொண்டு செல்கிறாள் தங்கை. வழியில் ஆற்றைக் கடந்து செல்லவேண்டும். ஆற்றில் வசிக்கும் வாளைக்குத் தினமும் உணவிட்டுச் செல்லும் அவள் அனறு உணவு இடாததால் வாளை அவள் முதுகில் காயத்தை ஏற்படுத்துகிறது.

தாயிடம் சின்னண்ணன் அடித்ததாகப் பொய் கூறுகிறாள். தாய் சின்னமகனைக் கொன்றுவிடுகிறாள். பெண்ணுக்குத் திருமணம நிச்சயமான போது எங்கும் பூ கிடைக்கவில்லை.

சின்னவனைப் புதைத்த இடத்தில் பூத்திருக்கும் பூவைத் தாய் பறிக்கச் செல்லும்பொது பூ மறைந்து விடுகிறது. தாயும் அண்ணன்மாரும் ஒவ்வொருவராகப் பூ கேட்க சின்னவன் பூ தர மறுத்து விடுகிறான்.

சின்னண்ணன் அடிச்சாண்ணு சொன்னாளே புண்ணுவதி
புண்ணுவதி கொண்டைக்கு எம்பூவு நிறக்குமா
மாலை கழுத்திலிட்டால் மயங்கிடுவா புண்ணுவதி
தலையிலே சூடினா சாஞ்சிடுவா புண்ணுவதி
கூறியவர்: திருமதி விருத்தாம்பிகை.

20. வட ஆர்க்காடு மாவட்டம்

ஒரு விவசாயக் குடும்பத்தில் நான்கு அண்ணன்மார்களுக்கு ஒரு தங்கை.

நால்வரும் உழவுத் தொழில் செய்யும்போது அப்பெண் சோறு எடுத்துச் செல்வாள். வழியில் ஓர் ஆற்றைக் கடக்க வேண்டும். ஆற்றைக் கடக்கும்போது வாளை மீன் அவளை அடித்துவிடுகிறது. வீட்டில் தன் சின்ன அண்ணன் அடித்து விட்டதாகப் பொய் கூறுகின்றாள்.

அவள் பெற்றோர் சின்ன அண்ணனைக் கொன்று விடுகின்றனர்.

அவளுக்குத் திருமணம் நிச்சயமானபோது பூ எங்கும கிடைக்கவில்லை.

சின்னவனைப் புதைத்த இடத்தில் முளைத்த செடிகளில் பூக்கள் உள்ளதை அறிந்து அதனைப் பறிக்கச் செல்கின்றனர்.

'பறிக்காதே' என்ற குரலைத் தொடர்ந்து சின்னவனின் குரல் பின் வருமாறு பாடி பூ தர மறுத்து விடுகிறது:

வாளை அடிச்சிருக்க
வடதேசம் போயிருக்க
சின்னண்ணன் அடிச்சாண்ணு
சொன்னாளே பொன்னுருவி!
பொன்னுருவி கொண்டைக்குப்
பூவும் கொடுக்கலாமோ?
பூ அழகு பார்க்கலாமோ?
மாலை கொடுக்கலாமோ?
மார்(பு) அழகு பார்க்கலாமோ?

மு. வை. அரவிந்தன் (1965: 87- 88)

மு. வை. அரவிந்தன் 1977- இல் வெளியிட்ட நூலிலும் இக்கதை இடம் பெற்றுள்ளது. கதையில் பெரிய மாற்றங்கள் எதுவுமில்லை. பாடலில் சில அடிகள் கூடுதலாக உள்ளன. மாற்றங்கள் மட்டும் கீழே தரப்படுகினறன:

1. அண்ணன்மார் மூவர்

2. வாளை கடித்தது

3. வாளை அடிச்சிருக்க
வடதேசம் போயிருக்க
சின்னண்ணன் அடிச்சாண்ணு
சொன்னாளே பொன்னுருவி

பொன்னுருவி கொண்டைக்குப்
பூவும் கொடுப்பேனோ?
பூவழகு பார்ப்பேனோ?
மாலை கொடுப்பேனோ?
மார் அழகு பார்ப்பேனோ?
கொடும்பாவி கொண்டைக்கு
என்பூ நிறக்குமா?

மு. வை. அரவிந்தன் (1977: 240- 42)

குறிப்பு:-

திரு மு. வை. அரவிந்தன் அவர்களை 28. 12. 82 அன்று தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நேரில் சந்தித்தபோது இக்கதையை வடார்க்காடு மாவட்டம் செங்கம் வட்டம் வளையாம்பட்டுக் கிராமத்தில் திருவேங்கடமுதலியார் என்பவரிடமிருந்து சேகரித்ததாகக் கூறினார். 1965- இல் வெளியிட்ட பாடலைவிட இப்பாடல் சற்று விரிவாக இருந்ததால் 1977 பதிப்பில் இதனை வெளியிட்டதாகக் கூறினார்.

இணைப்பு - 3 : கதைப் பாத்திரங்கள்

வரிசை எண் (1)	பாத்திரங்கள் (2)	இடம்பெறும் கதை எண்கள் (3)	இடம்பெறும் மொத்தக் கதைகள் (4)
1.	குடும்பத் தலைவன்	2,5-13, 15-17,20	14
2.	குடும்பத் தலைவி		
	2ஜி. ஒருவர்	1,3,5-7,9-20	17
	2எச். இருவர்	2	1
3.	மகன்கள்		
	3ஜி. இருவர்	1,2*	2
	3எச். மூவர்	8,11	2
	3ஜே. நால்வர்	3,6,7,12-14,16,18,20	9
	3கே. ஐவர்	9	1
	3பி. அறுவர்	15	1
	3டி. எழுவர்	5,17	2
	3ஹ. எண்ணிக்கைக் குறிப்பின்மை	4,10,19	3

* கதை எண் இரண்டில் மட்டும் மகன்கள் மூத்த தாரத்திற்கும் மகள் இளைய தாரத்திற்கும் பிறந்தவர்கள்.

(1)	(2)	(3)	(4)
4.	மகள்		
	4ஜி. கடைசியாகப்பிறந்த ஒரே மகள்	1-7,9-20	19
	4எச். மூன்றாவதாகப்பிறந்த ஒரேமகள்	8	1
5.	சின்னான்	4	1
6.	மாப்பிள்ளை	5,6,9,12	4
7.	மாமன்	8	1
8.	சாமியார்	6,9,11,17	4
9.	முனிவர்	12	1
10.	மந்திரவாதி	16	1
11.	குடுகுடுப்பைக்காரன்	14	1
12.	பரமசிவன்/பரமசிவன்-பார்வதி	13-16	4
13.	ஆற்றில் நின்ற ஒருவன்	6	1
14.	காவல்காரன்	7	1
15.	வளையல்காரன்	11,12,14,16,17	5
16.	துணி வியாபாரி	17	1

(1)	(2)	(3)	(4)
17.	பூக்காரன்	14	1
18.	செக்கான்	16	1
19.	வழிப்போக்கன்	7	1
20.	மாடுமேய்ப்போர்	12,15,16	3
21.	உவரார்	18	1

இணைப்பு - 4: கதைக் கூறுகளின் பட்டியல்

கதைக்கூறுகளுக்கான குறியீடுகள்	கதைக்கூறுகள்	இடம்பெறும் கதை எண்கள்	இடம்பெறும் மொத்தக் கதைகள்	விழுக்-காடு
(1)	(2)	(3)	(4)	(5)
அ.	மந்திரசக்தியால் பெண் பிறந்து வளர்தல்			
அ.1.	குடும்பத் தலைவி வருந்தல்			
1ஜி.	குழந்தை இல்லை என வருந்தல்	6,7	2	10
1எச்.	பெண் ,, ,, ,,	9,11,12,14, 16	5	25
0	குறிப்பின்மை	1-5,7,8,10, 13,15,18-20	13	65
அ.2.	மந்திரசக்தி உள்ளவரின் வருகை			
1ஜி.	சாமியார்	6,9,11,17	4	20
1எச்.	முனிவர்	12	1	5
1ஜே.	குடுகுடுப்பைக்காரன்	14	1	5
1கே.	மந்திரவாதி	16	1	5
0	குறிப்பின்மை	1-5,7,8,10, 13,15,18-20	13	65

(1)	(2)	(3)	(4)	(5)
அ.3.	மந்திரசக்தி உள்ளவர் குடும்பத் தலைவிக்கு உதவல்			
1ஜி.	ஏழு மிளகினைத் தந்து அவற்றை அரைத்துக் கீழே விழாமல் உண்டால் குழந்தை பிறக்கும் எனல்.	6,11,12,14,16	5	25
1எச்.	ஏழு மிளகினைத் தந்து அவற்றை வீட்டுமூலைகளில் போட்டு வைத்தால் குழந்தை பிறக்கும் எனல்	17	1	5
1ஜே.	ஐந்து மிளகினைத் தந்து அவற்றை அரைத்து உண்ணுமாறும் கீழே விழுவதை எடுக்கவேண்டாம் என்றும் கூறல்	9	1	5
0	குறிப்பின்மை	1-5,7,8,10,13,15, 18-20	13	65
அ.4.	மந்திரித்துத் தந்த மிளகுகளுள் ஒரு மிளகு தப்பித்தல்			
1ஜி.	அம்மியிலிருந்து கீழே விழுகிறது	6,9,12,16	4	20
1எச்.	" விழுந்து பாணைச்சந்திற்கு ஓடல்	14	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
	1ஜே. உண்ணும்போது தவறிவிழுந்து பரணில் ஏறல்	11	1	5
	1கே. எலி தூக்கிச் சென்று பரணில் போடல்	17	1	5
	0 குறிப்பின்மை	1-5,7,8,10,13,15, 18-20	13	65
அ.5.	குழந்தை பிறத்தல்			
	1ஜி. மிளகுகளை உண்டதால் ஆண் குழந்தைகளும் தப்பிய மிளகு பெண்ணாகவும் பிறத்தல்	6	1	5
	1எச். மூலையில் போட்டமிளகு ஆண்களாகவும் எலிதூக்கிச் சென்ற மிளகு தாயறியாமல் பெண்ணாகவும் ஆதல்	17	1	5
	1ஜே. தப்பிய மிளகு தாயறியாமல் பெண்ணாதல்	9,11,12,14,16	5	25
	0 குறிப்பின்மை	1-5,7,8,10,13,15, 18-20	13	65
அ.6.	பெண் வளர்ந்து தாய் வெளியே சென்றிருக்கும்போது வீட்டு வேலைகளைச் செய்தல்			

(1)	(2)	(3)	(4)	(5)
	1. இடம் பெறல்	9,11,12,14,16	5	25
	0. இடம் பெறாமை	1-8,10,13,15,17-20	15	75
அ.7.	பெண், வியாபாரிகளிடம் (வலையல்காரன், பூக்காரன் முதலியோர்) பொருள் வாங்கிக் கொண்டு தாயிடம் பணம் பெற்றுக் கொள்ளச் சொல்லல்			
	1. இடம் பெறல்	9,11,12,14,16.17	6	30
	0. இடம் பெறாமை	1-8,10,13,15,18-20	14	70
அ.8.	தனக்கு ஒரு பெண் இருப்பதை அறிந்து தாய் மகிழ்ந்து போற்றல்			
	1. இடம் பெறல்	9,11,12,14,16,17	6	30
	0. குறிப்பின்மை	1-8,10,13,15,18-20	14	70
ஆ.	தொழில்			
	1ஜி. அண்ணன்மார் வயலுக்கு ஏர் உழச் செல்லல்	5-7,9-20	15	75
	1எச். அண்ணன்மார் விறகுவெட்டச் செல்லல்	3	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
2.	அண்ணன்மார் (பெரியம்மா மகன்கள்) வயலுக்குச் செல்லல்	2	1	5
3.	பெண்ணின் அண்ணன்மாரும் தம்பியும் வயலுக்குச் செல்லுதல்	8	1	5
4.	சின்னான் வேலை செய்யக் காட்டுக்குச் செல்லல்	4	1	5
0.	குறிப்பின்மை	1	1	5
0.1.	(தாய் பால் மோர் விற்க/வயலுக்குச் செல்லல் 12,13/10,17)			
இ.	தொழில் துணை			
1.0.	தங்கை அண்ணன்மாருக்கு உணவு எடுத்துச் செல்லல்			
1.1ஜி.	அண்ணன்மாருக்கு வழக்கம் போல் கஞ்சி எடுத்துச் செல்லல்	3,19	2	10
1.1எச்.	அண்ணன்மாருக்கு வழக்கம் போல் சோறு எடுத்துச் செல்லல்	7,9,10,13,15,20	6	30

(1)	(2)	(3)	(4)	(5)
1.1ஜே.	அண்ணன்மாருக்கு வழக்கம் போல் உணவு எடுத்துச் செல்லல்	18	1	5
1.1சே.	வழக்கம்போல் மூத்தவர்களுச்குச் சோறும் நொண்டி அண்ணனுக்குக் கூழும் எடுத்துச் செல்லல்	5,6	2	10
1.2.	வழக்கமாகத் தாய் எடுத்துச் செல்ல அன்று மட்டும் அண்ணன்மாருக்குத் தங்கை எடுத்துச் செல்லல்			
1.2ஜி.	தானே விரும்பி மூத்தவர்களுக்குக் கூழும் சின்னவனுக்குச் சோறும் எடுத்துச் செல்லல்	14	1	5
1.2எச்.	தாய் நலக்குறைவாக இருப்பதால் பெண் சோறு எடுத்துச் செல்லல்	12	1	5
1.2ஜே.	தாய் கூறியதற்கிணங்க பெண் சோறு எடுத்துச் செல்லல்	11,17	2	10
1.2கே.	தாய் தடுத்தும் கேளாமல் பெண் சோறு எடுத்துச் செல்லல்	16	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
2.	அண்ணன்மாருக்கு (பெரியம்மா மகள்கள்) உணவு எடுத்துச் செல்லல்	2	1	5
3.	அண்ணன்மாருக்கும் தம்பிக்கும் உணவு எடுத்துச் செல்லல்	8	1	5
4.	சின்னானுக்குக் கஞ்சி எடுத்துச் செல்லல்	4	1	5
0.	குறிப்பின்மை	1	1	5
ஈ. தடை				
1.	தங்கை நீர் நிலையைக் கடக்க வேண்டும்			
1ஜி.	வாய்க்கால்	10,11,16	3	15
1எச்.	ஆறு	6,7,9,12,13,15, 17-20	10	50
1கே.	நதி	14	1	5
2.	தங்கை (மாற்றாந்தாய் மகள்) ஆற்றைக் கடக்க வேண்டும்	2	1	5
3.	அக்காள் காட்டைக் கடக்க வேண்டும்	8	1	5
0.	குறிப்பின்மை	1,3,4,5	4	20

(1)	(2)	(3)	(4)	(5)
உ.	பிறர் உதவியுடன் கடந்து செல்லல்			
1ஜி.	நீர் நிலையில் நிற்பவனின் உதவியுடன்	6	1	5
1எச்.	பாலக் காவல்காரனின் அனுமதியுடன்	7	1	5
1ஜே.	வாளையின் உதவியுடன் (நீரைக் குடித்து/ தூக்கிச் சென்று உதவல்)	9,11,13,15,16	5	25
1கே.	உணவு தந்தால் ஆற்றைக் கடக்க உதவுவதாகக் கூறி வாளை உதவுவதால்	17	1	5
1பி.	முதலை தூக்கிச் சென்று உதவுவதால்	12,14	2	10
0.	குறிப்பின்மை	1-5,8,10,18-20	10	50
ஊ.	உணவை இறக்குமாறு பெண் ஏர் ஓட்டும் அண்ணன்மார்களிடம் வேண்டுதலும் அவர்களின் செயலும்			
1ஜி.	மூத்தவர்கள் மறுத்தலும் சின்னவன் சுமையை இறக்குதலும்	5,6,16	3	15
1எச்.	சின்னவர்கள் மறுத்தலும் மூத்தவன் சுமையை இறக்குதலும்	12	1	5
0.	குறிப்பின்மை	1-4,7-11,13-15, 17-20	16	80

(1)	(2)	(3)	(4)	(5)
எ.	திரும்புகையில் பெண் போதுமான உணவு எடுத்து வரவில்லை			
1ஜி.	மறதி காரணமாக	6,7	2	10
1எச்.	அண்ணன்மார் மீதி வைக்காததால்	9,11-16	7	35
1ஜே.	அண்ணன் மீதி வைக்கும் சோறு வாளைக்குப் பத்தாது என்று கருதியதால்	17	1	5
0.	குறிப்பின்மை	1-5,8,10,18-20	10	50
ஏ.	பெண் தவறுதல்			
1.	தங்கை தவறு செய்தல்			
1.1.	வேர் தடுக்கிக் கீழே விழுந்து கஞ்சிக் கலயத்தை உடைத்தல்	1	1	5
1.2.	தாழம்பூ பறிக்க முயலல்	5	1	5
1.3.	(பாவாடை முள் வாழையில் படுமாறு நடத்தல்)	1	1	5
1.4.	வாளைக்குத் தினமும் உணவிடுபவள் அன்று உணவிடவில்லை	19	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
1.5.	(வாளையிருக்கும்) ஆற்று நீரைக் கலக்கல்	18	1	5
1.6.	வாளையிடம் குறும்பு (?) செய்தல்	10	1	5
1.7.	நீர் நிலையைக் கடக்க உதவியவரை ஏமாற்றுதல்			
1.7ஜி.	மண்ணுருண்டையில் சோற்றை ஒட்டித் தந்து மனிதரை ஏமாற்றுதல்	6,7	2	10
1.7எச்.	மண்ணுருண்டையில் சோற்றை ஒட்டித் தந்து வாளையை ஏமாற்றுதல்	9,13,15	3	15
1.7ஜே.	மண்-காரைமுள்ளில் சோற்றை ஒட்டித் தந்து வாளையை ஏமாற்றுதல்	16	1	5
1.7கே.	மண்-நெறிஞ்சி முள்ளில் சோற்றை ஒட்டித்தந்து வாளையை ஏமாற்றுதல்	17	1	5
1.7பி.	சப்பாத்தி முள்ளில் சோற்றை ஒட்டித்தந்து வாளையை ஏமாற்றுதல்	11	1	5
1.7டி.	சப்பாத்திமுள்ளில் சோற்றை ஒட்டித்தந்து முதலையை ஏமாற்றுதல்	12,14	2	10
2.	தங்கை (மாற்றாந்தாய் மகள்) வாளையிடம் விளையாடல்	2	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
3.	அக்காள், தன் வெறுப்புக்குரிய தம்பியின் உணவைக் காட்டு மானுக்குத் தந்து தம்பியை ஏமாற்றுதல்	8	1	5
4.	எசமானி தாழைவேர் தடுக்கித் தாழையில் விழுந்து கஞ்சிக் கலயத்தை உடைத்தல்	4	1	5
0.	குறிப்பின்மை	20	1	5
ஐ.	துன்புறுதல்			
1.	தங்கை துன்புறுதல்			
1.1.	தங்கை காயமுறுதல்			
1.1ஜி.	விழும்போது கத்தாளைமுள் கிழித்துக் காயமுறுதல்	3	1	5
1.1எச்.	பூப்பறிக்க முயல்கையில் தாழை முள் கிழிக்கக் காயமுறுதல்	5	1	5
1.1ஜே.	ஆற்றைச் கடக்க உதவியவன் ஏமாற்றங் கொண்டு அடிப்பதால் காயமுறுதல்	6	1	5
1.1கே.	பாலக்காவல்காரன் ஏமாற்றங்கொண்டு அடிப்பதால் காயமுறுதல்	7	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
1.1பி.	வாளை ஏமாற்றங்கொண்டு அடிப்பதால் காயமுறுதல்	9,11,13,15-17	6	30
1.1டி.	தினமும் உணவிடுபவள் அன்று உணவு இடாததால் வாளை அடிக்கக் காயமுறுதல்	19	1	5
1.1யு.	நீரைக்கலக்கியதால் வாளை அடிக்கக் காயமுறுதல்	18	1	5
1.1வி.	ஆற்றைக் கடக்கும்போது வாளை கடிப்பதால் காயமுறுதல்	20	1	5
1.1ஒய்.	குறும்பு செய்தவளை வாளை அடிக்கக் காயமுறுதல்	10	1	5
1.1ஹ.	முதலை ஏமாற்றங்கொண்டு அடிப்ப தால் காயமுறுதல்	12, 14	2	10
1.2.	பாவாடையை முள் வாழை கிழித்தல்	1	1	5
2.	தங்கை (மாற்றாந்தாய் மகள்) வாளை யிடம் விளையாட, வாளை அடித்துக் காயமுறுதல்	2	1	5
3.	பெண்ணின் தம்பி அவளுடைய அன்புக் குரிய மானைக் கொன்று அதன் இறைச்சியை			

(1)	(2)	(3)	(4)	(5)
	ஆட்டிறைச்சி என்று தருவதால்		1	5
	மனம் வருந்தல்	8	1	5
4.	எசமானி கீழே விழுகையில் தாளைமுள் குத்திக் காயமடைகிறாள்	4	1	5
ஒ.	பழிகூறல்			
1.1.	சின்னண்ணன் அடித்ததாகத் தாயிடம் பொய் கூறல்			
1 1ஜி.	நொண்டி என்ற காரணத்தால்	5, 6	2	10
1.1எச்.	தன்மீது அன்புள்ளவனாதலால் அவனிடம் உண்மையைக் கூறிச் சமாதானப்படுத்திக் கொள்ளலாம் என்பதால்	18	1	5
1.1ஜே.	காரணம் எதுவுமின்றி	3,7,9-17,19,20	13	65
1.2.	சின்னண்ணன் பாவாடையைக் கிழித்ததாகத் தாயிடம் கூறல்	1	1	5
2.	சின்னண்ணன் (பெரியம்மா மகன்)அடித்ததாகத் தாயிடம் பொய்கூறல்	2	1	5
3.	சின்னான் அடித்ததாகச் சகோதரர்களிடம் கூறல்	4	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
0.	குறிப்பின்மை	8	1	5
ஓ.	கொலை			
1 1ஜி.	தாய் சின்னமகனைக் கொல்லல்	1,19	2	10
1.1எச்.	தாய் சின்னமகனுக்கு நச்சுணவு தந்து கொல்லல்	3,7,11,18	4	20
1.1ஜே.	தாய் சின்னமகனுக்கு நச்சுணவைத் தனியே அமரச்செய்து தந்து கொல்லல்	6	1	5
1.1கே.	தாய் சின்னமகனுக்குப் பாம்புக் கறியினைத் தனியே அமரச் செய்து தந்து கொல்லல்	13,17	2	10
1.1பி.	தாய் சின்னமகனுக்குப் பாம்புக்கறியினை இருட்டில் அமரச்செய்து தந்து கொல்லல்	15	1	5
1.1டி.	தாய் சின்னமகனுக்குப் புற்றிலிருந்து பிடித்து வந்த பாம்பின் கறியினைத் தந்து கொல்லல்	9,14	2	10
1.1வி.	தாய் புற்றிலிருந்து பாம்பினைப் பிடித்து வந்து சமைத்துத் தனியாக அமரச்செய்து தருதல்-ஐயமுறுவோனுக்குத் தக்க காரணம் கூறுதல். உண்டபின் வயிற்றுவலி என்று			

(1)	(2)	(3)	(4)	(5)
	கூறுபவனை உரல், தொம்பை மீது ஏறி குதிக்கச் செய்து நஞ்சு அவன் உடலில் பரவச்செய்து கொல்லல்,	12	1	5
1.1ஓய்.	தாய் புற்றில் வெந்நீர்விட்டு, பாம்பைப் பிடித்து வந்து சமைத்துத் தனியே அமரச் செய்து போட, உண்டபின் வயிற்றுவலி மயக்கம் என்று கூற, உரல் மீது ஏறிக் குதிக்கச் செய்து நஞ்சு உடலில் பரவச் செய்து கொல்லல்	16	1	5
1.2.	தாய் மகளோடு சேர்ந்து முத்திருளிப் பாம்பை அடித்துச் சமைத்துப் போட அவன் அதனை நாய், பூனை, கோழி முதலியவற்றுக் குப் போட்டுத் தானும் உண்ணல்.	5	1	5
1.3.	தாய் சின்னமகனை வெட்டிக் கொல்லல் (?)	10	1	5
1.4.	தாய் கணவனோடு சேர்ந்து சின்னமகனைக் கொல்லல்	20	1	5
2.	மாற்றாந்தாய் மூத்தாளின் சின்னமகனைக் கொல்லல்	2	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
	3. அக்காள் தம்பியைப் பாம்புக் கறி கொடுத்துக் கொல்லல்	8	1	5
	4. பெண்ணின் சகோதரர்கள் சின்னானை அடித்துக் கொல்லல்	4	1	5
ஒள.	புதைத்த இடத்தில் பூந்தாவரம் முளைத்துப் பூத்தல்			
	1.1. பெண்ணின் சின்னண்ணனைப் புதைத்த இடத்தில்			
	1.1ஜி. மல்லிகை முல்லை முளைத்துப் பூத்தல்	5	1	5
	1.1எச். ரோஜா முளைத்துப் பூத்தல்	7	1	5
	1.1ஜே. நித்தியகல்யாணி முளைத்துப் பூத்தல்	18	1	5
	1.1கே. பூஞ்செடி முளைத்துப் பூத்தல்	6,9-17,19,20	12	60
	1.2. பெண்ணின் சின்னண்ணனைப் புதைத்த தலைப் பகுதியில் செடி முளைத்துப் பூக்கிறது	3	1	5
	2. பெண்ணின் சின்னண்ணனைப்(பெரியம்மா மகன்) புதைத்த இடத்தில் பூமரம் முளைத்துப் பூத்தல்	2	1	5
	3. பெண்ணின் தம்பியைப் புதைத்த இடத்தில் செடி முளைத்துப் பூத்தல்	8	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
	4. சின்னானைப் புதைத்த இடத்தில் செடி முளைத்துப் பூத்தல்	4	1	5
	0. முளைத்துவளரும் இடக்குறிப்பின்மை	1	1	5
க.	பெண்ணின் திருமணத்திற்குப் பூ கிடைக்காமை			
	1. அண்ணன் கொலைக்குக் காரணமான பெண்ணுக்கு	3,5-7,9-20	16	80
	2. அண்ணன் (பெரியம்மா மகன்) கொலைக்குக் காரணமான பெண்ணுக்கு	2	1	5
	3. தம்பி கொலைக்குக் காரணமான பெண்ணுக்கு	8	1	5
	4. வேலைக்காரன் கொலைக்குக் காரணமான பெண்ணுக்கு	4	1	5
	0. குறிப்பின்மை	1	1	5
ங.	குடும்பத்தார் பூப்பறிக்கச் செல்லல்			
	1. சின்னவனைப் புதைத்த இடத்தில் பூ இருப்பதைத் தேடி அறிந்து			
	1ஜி. சகோதரர்களும் மாப்பிள்ளையும் செல்லல்	5	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
1எச்.	பெற்றோரும் தொடர்ந்து பெண்ணும் செல்லல்	6	1	5
1ஜே.	பெற்றோரும் தொடர்ந்து அண்ணனகளும் செல்லல்	11	1	5
1கே.	வழிப்போக்கர் கூற அறிந்து அண்ணன்களும் செல்லல்	7	1	5
1டி.	மாடுமேய்ப்போர் அறிந்து அண்ணன்களும் செல்லல்	12, 16	1	5
1யு.	மாடுமேய்ப்போர் அறிந்து தந்தையும் செல்லல்	15	1	5
1வி.	தாங்களே அறிந்து தாய்-மகன் செல்லல்	1	1	5
1ஒய்.	தாங்களே அறிந்து பெண் செல்லல் (?)	3	1	5
1ஹ.	தாங்களே அறிந்து பெண்ணின் சகோதரர்கள் செல்லல்	14	1	5
1ஸ.	தாங்களே அறிந்து பெற்றோரும் செல்லல்	10,13,17,20	4	20
1ஷ.	தாங்களே அறிந்து பெண்ணும் தாயும் செல்லல்	9	1	5
1ஷி.	தாங்களே அறிந்து தாயும் அண்ணன்மாரும் செல்லல்	19	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
1ஷீ.	சுடுகாட்டில் பூ இருக்கும் என்ற நிச்சயத்தில் முதலில் அண்ணன்மாரும் பிறகு பெண், தாய், ஊரார் ஆகியோரும் செல்லல்	18	1	5
2.	மூத்தாள் மகனைப் புதைத்த இடத்தில் பூ இருப்பதை அறிந்து சகோதரர்களும் மாமாவும் செல்லல்	2	1	5
3.	சின்னவனைப் புதைத்த இடத்தில் பூ இருப்பதைத் தேடி அறிந்து மாற்றாந்தாய் செல்லல்	8	1	5
4.	சின்னானைப் புதைத்த இடத்தில் பூ இருப்பதை அறிந்து பெண்ணின் உறவினர்கள் செல்லல்	4	1	5
ச.	பூக்கள் மறைந்து/வாடிவிடுதல்			
1.	சின்னவனைப் புதைத்த இடத்திலுள்ள பூ			
1ஜி.	தாய் பறிக்க முயல்கையில்	1,19	2	10
1எச்.	தந்தை பறிக்க முயல்கையில்	15	1	5
1ஜே.	பெற்றோர் பறிக்க முயல்கையில்	13,16	2	10

(1)	(2)	(3)	(4)	(5)
1சே.	பெண் பறிக்க முயல்கையில்	9	1	5
1டி.	அண்ணன்மார் பறிக்க முயல்கையில்	18	1	5
1யு.	அனைவரும் பறிக்க முயல்கையில்	7,11,12	3	15
2.	சின்னவனை (மூத்தாள் மகன்) புதைத்த இடத்திலுள்ள பூ சிற்றன்னை பறிக்க முயல்கையில்	2	1	5
0.	குறிப்பின்மை	3,4,5,6,8,10, 14,17,20	9	45
ஞ.	பூந்தாவரம்/பூ உண்மையை வெளிப்படுத்தல்			
1.	கொலைக்குக் காரணமானவள் தங்கை என்பதை	1,3,5,6,9-20	16	80
2.	கொலைக்குக் காரணமானவள் (மாற்றாந் தாய் மகள்) என்பதை	2	1	5
3.	கொலைக்குக் காரணமானவள் அக்கா என்பதைக்	8	1	5
4.	கொலைக்குக் காரணமானவள் எசமானி என்பதை	4	1	5
0.	குறிப்பின்மை	7	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
ட.	பூ தருவது தொடர்பாகக் கொலையுண்டவன் எடுக்கும் முடிவு			
1.1.	தங்கைக்குத் தர மறுத்தல்	1(?),3,9-17,19, 20	13	65
1.2.	தங்கைக்குத் தரல்			
1.2ஜி.	மறுப்பை மீறிப் பறித்துச் சென்ற பூ பெண்ணுக்கு வாடியும் மாப்பிள்ளைக்கு வாடாமலும் இருக்க, பெண் நடந்ததற்கு வருந்தி மன்னிப்புக் கேட்கவே பூ தரல்	6	1	5
1.2எச்.	தங்கை மன்னிப்புக்கேட்க பூ தரல்	7	1	
1.2ஜே.	அனைவருக்கும் மறுப்பவன் மாப்பிள்ளை கேட்கும் போது 'மாப்பிள்ளைக்கு வாடாது பெண்ணுக்கு வாடும்' என்ற நிபந்தனையோடு பூ தரல்	5	1	5
1.2கே.	தான் குற்றமற்றவன் என்பதை உறவினர் ஊரார்முன் நிரூபித்தால் பூ தருவேன் என்று கூறி, அவ்வாறு நிரூபித்த பிறகு பூ தரல்	18	1	5
2.	தங்கைக்குத் (மாற்றாந்தாய் மகள்) தரல்	2	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
	3. முதலில் தர மறுப்பவன் மாமா கேட்கும் போது அக்காவுக்குப் பூ தரல்	8	1	5
	4. எசமானிக்குத் தர மறுத்தல்	4	1	5
ண.	உண்மை அறிந்த உறவினர்கள் சின்னானுக்குப் பூசை செய்து அவன் கோபத்தைத் தணித்தல்			
	1. இடம்பெறல்	4	1	5
	0. இடம் பெறாமை	1-3,5-20	19	95
த.	பெண்ணைத் தவிர பூ கேட்கும் அனைவரும் உயிரற்றவர்களாதல்			
	1ஜி. மறுப்பைமீறிப் பூப்பறிப்போர் கல்லாதல்	12	1	5
	1எச். பூ கேட்போர் கல்லாதல்	13	1	5
	1ஜே. பூ கேட்போரைக் கொலையுண்டவன் கல்லாக்கல்	14	1	5
	1கே. பூ கேட்போர் இறத்தல்	17	1	5
	0. குறிப்பின்மை	1-11,15,16,18-20	16	80

(1)	(2)	(3)	(4)	(5)
ந.	பெண் வருந்தி அழுதல்			
1.	இடம்பெறல்	12-15,17	5	25
0.	இடம்பெறாமை	1-11,16,18-20	15	75
ப.	சக்திமிக்க ஒருவர் தோன்றி உயிரற்றவர்களுக்கு உயிரளிக்க உதவல்			
1ஜி.	சாமியார் இறந்தவர்களை உயிர்ப்பிக்க உதவல்	9,17	2	10
1எச்.	முனிவர் கல்லானவர்களையும் இறந்தவனையும் உயிர்ப்பிக்க உதவல்	12	1	5
1ஜே.	பரமசிவன் கல்லானவர்களை உயிர்ப்பிக்க உதவல்	13,14	2	10
1கே.	பரமசிவனும் பார்வதியும் இறந்தவனை உயிர்ப்பிக்க உதவல்	15,16	2	10
0.	குறிப்பின்மை	1-8,10,11,18-20	13	65
ம.	உயிர்பெற்ற சின்னவன் வீட்டிற்கு வர மறுத்து மீண்டும் இறத்தல்			

(1)	(2)	(3)	(4)	(5)
1.	இடம்பெறல்	17	1	5
0.	இடம்பெறாமை	1-16,18-20	19	95
ய.	திருமணம்			
1.	தங்கையின் திருமணம்			
1.1ஜி.	நின்றுவிடுதல்	3	1	5
1.1எச்.	திருமணச்செய்தியின்மை (நின்றுவிடுகிறது?)	1,10,11,19,20	5	25
1.1ஜே.	தூற்றப்படுகிறாள் (நின்றுவிடுகிறது?)	17	1	5
1 2.	திருமணம் நடைபெறுதல்	5-7,18	4	20
1.3.	கொலையுண்டவன் உயிர்பெற்ற பின் திருமணம் நடைபெறல்	9,12-16	6	30
2.	தங்கையின் (மாற்றாந்தாய் மகள்) திருமணம் நடைபெறல் (?)	2	1	5
3.	தம்பி தெய்வமாக நின்று வாழ்த்த அக்காவின் திருமணம் நடைபெறல்	8	1	5
4.	எசமானியின் திருமணம் நின்றுவிடல் (?)	4	1	5

(1)	(2)	(3)	(4)	(5)
ர.	பழிவாங்கிய கதை			
ர1.	பெண் புகுந்த வீடு செல்லல்			
1.	இடம்பெறல்	9,12	2	10
0.	இடம்பெறாமை	1-8,10,11,13-20	18	90
ர2.	கருவுற்ற பெண்ணை அழைத்துவரத் தாய் தன் சின்ன மகனை அனுப்புதல்			
1.	இடம் பெறல்	9,12	2	10
0.	இடம் பெறாமை	1-8,10,11,13-20	18	90
ர3.	அழைத்துவரும் வழியில் அண்ணன் தங்கையைக் கொல்லல்			
1ஜி.	வெட்டி பிள்ளைவேறு அவள் வேறாக்கிப் புதைத்தல்	9	1	5
1எச்.	வெட்டித் தலைவேறு முண்டம் வேறாக எறிந்து விடல்	12	1	5
0.	குறிப்பின்மை	1-8,10,11,13-20	18	90
ர4.	பெண்ணின் கணவன் மனைவியைப் பார்க்க அவள் தாய் வீடு வருதல்			

(1)	(2)	(3)	(4)	(5)
ர5.	வழியில் பூத்திருந்த பூவைப் பறிக்க/வெட்டுண்டு கிடக்கும் மனைவியைத் தொட முயலல்			
	1. இடம் பெறல்	9,12	2	10
	0. இடம் பெறாமை	1-8,10,11,13-20	18	90
ர6.	தொடவேண்டாம் என்ற குரலைத் தொடர்ந்து உண்மைப் பாடலாகக் கூறப்படல்			
	1. இடம் பெறல்	9,12	2	10
	0. இடம் பெறாமை	1-8,10,11,13-20	18	90
ர7.	மாமியார்வீடு சென்று மனைவி எங்கே என்று கேட்க, சின்னவன் உண்மையை மறைத்தல்			
	1. இடம் பெறல்	9	1	5
	0. இடம் பெறாமை	1-8,10-20	19	95
ர8.	மாப்பிள்ளை அனைவரையும் நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு அழைத்துச் செல்லல்			
	1. இடம் பெறல்	9,12	2	10
	0. இடம் பெறாமை	1-8,10,11,13-20	18	90

(1)	(2)	(3)	(4)	(5)
ர9.	பூவைப் பாடச் செய்து உண்மையை வெளிப்படுத்தல்			
	1. இடம் பெறல்	9	1	5
	0. இடம் பெறாமை	1-8,10-20	19	95
ர10.	வெட்டுண்டு கிடப்பவளைத் தொடுவதற்கு ஒவ்வொருவராக நெருங்க, தொட வேண்டாம் என்று பாடல் கூற, முன்பு சின்னவனைத் தொட்டுக் கல்லான பயத்தில் தொடாமலேயே புதைத்து விட்டு வீடு திரும்புகின்றனர்.			
	1. இடம் பெறல்	12	1	5
	0. இடம் பெறாமை	1-11,13-20	19	95

இணைப்பு-5: கதைச் சுருக்கங்கள்-II

குமரி மாவட்டம்

அண்ணனில்லாத நேரம் பார்த்து அண்ணி நாத்தியைக் கொல்கிறாள்.

நாத்தியை விலங்கு அடித்துக் கொன்றுவிட்டதாக அரணையின் இரத்தத்தில் தோய்த்த துணியைக் காட்டிக் கணவனை ஏமாற்றுகிறாள்.

நாத்தியைப் புதைத்த இடத்தில் அவள் ஒரு தாழைச் செடியாக முளைத்து வளர்கிறாள்.

ஒரு பண்டிகை நாளில் மனைவிக்குச் சூட அத்தாழையில் ஏறிப் பூப் பறிக்க அண்ணன் முயல்கிறான்.

அப்போது அத்தாழை:

ஏறாதே ஏறாதே என்னண்ணா
தாழயிலே ஏறாதே என்னண்ணா
சூடாதே சூடாதே என்னாத்தி
தாழம்பூ சூடாதே என்னாத்தி

அரணையைக் கொன்னதும் என்னாத்தி
அரும்பாவம் கெட்டினதும் என்னாத்தி
தாழம்பூ சூடாதே என்னாத்தி
தலையிலே வைக்காதே என்னாத்தி

என்று பாட அண்ணன் உண்மையை உணர்கிறான். மனைவியைக் கொல்கிறான்.

ஆதாரம்: J. Nirmalabai, (1981:297-98)

ஆந்திரம்

ஒருவன் தன் மனைவியோடும் தங்கையோடும் வசித்து வந்தான். மனைவி தீயவள். தங்கை மணமானவளானாலும் கணவன் வீட்டிற்கு அனுப்பப்படாமல் இருந்தாள். ஒரு விழா நாளன்று தங்கை தன் தோழிகளைச் சந்திக்க விரும்பினாள். அவளிடம் உடுத்திச் செல்ல நல்ல புடவையில்லையாதலால் அவள் தன் அண்ணியின் பட்டுப்புடவையை இரவல் கேட்டாள்.

அண்ணி முதலில் மறுத்தாலும் நாத்தியின் வற்புறுத்தலுக்கு இணங்கி 'அழுக்குப்படாமல் திருப்பித் தரவேண்டும்' என்ற நிபந்தனையுடன் புடவையைத் தந்தாள். அவளும் அவ்வாறே கவனமாகத் திருப்பித் தந்தாள்.

அண்ணி உற்றுப் பார்த்தபோது ஒரு துளி அழுக்கு புடவையில் இருக்கவே கோபமுற்று வீட்டின் இருட்டறையில் படுத்துக் கொண்டாள்.

நாத்தியைக் கொன்றால்தான் உண்பேன் என்று கணவனிடம் கூறினாள்.

பெண்டாட்டிதாசனான கணவன் அவள் ஆசையை நிறைவேற்றுவதாக உறுதி கூறினான்.

கணவன் வீட்டிற்கு அழைத்துச் செல்வதாகக் கூறி அண்ணன் தங்கையை அழைத்துச் சென்றான்.

இரவில் அவர்கள் ஒரு கிணற்றுக்கு அருகே சென்றபோது அண்ணன் களைப்புடன் கிணற்றுச் சுவரில் அமர்கிறான். சற்று நேரம் உறங்கி இளைப்பாறுமாறு தங்கையிடம் கூறுகிறான்.

அவள் தூங்கும்போது அவளைத் தூக்கிக் கிணற்றில் போட்டுவிட்டு வீடு திரும்புகிறான்.

மறுநாள் காலை கிராமத்து மக்கள் கிணற்றருகே வந்தபோது ஆயிரம் இதழுள்ள தாமரைப் பூ ஒன்று கிணற்றில் பூத்திருப்பதைக் கண்டனர். அவர்கள் பின்வரும் பாடலையும் கேட்டனர்.

என்னைத் தொடாதே என்னைத் தொடாதே
என்னைப் பிடிக்க முயன்றால்
உன் கை வீங்கிவிடும்
கொடுமைக்கார அண்ணியும் அவள் பட்டுப் புடவையும்
கொடுமைக்கார அண்ணன் என்னை
இங்கே எறிந்துவிட்டான்.
(Touch me not, touch me not
If you attempt to catch me, your
hand will have a swelling
sinful sister-in-law and her silk sari
sinful brother threw me here)

மக்களுக்குப் பாடலின் முழுப்பொருள் தெரியவில்லை. அவர்கள் கிணற்றில் இறங்க முற்பட்டபோது தாமரை அவர்கள் கையில் அகப்படாமல் நீரில் மூழ்குகிறது.

சில நாள்களுக்குப் பிறகு, இறந்துவிட்ட பெண்ணின் கணவன் அவ்வழியே செல்ல, பூவின் பாடல் பற்றிக் கேள்வியுற்றுக் கிணற்றுக்குச் சென்றான்.

தாமரைமலர் அவன் கைகளுக்கு நகர்ந்து சென்றது. அதே பாடலைப் பாடியது.

பாடுவது தன் மனைவி என்பதையும் அவள் இறந்த சூழலையும் உணர்ந்து அவன் அதிர்ச்சியுற்றான்.

துயரமிகுதியோடு அந்த மலரை எடுத்துத் தன் தலையில் வைத்துக் கொண்டான்.

உடனே மலர் பெண்ணாக மாறியது.

அதன்பிறகு கணவனும் மனைவியும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

ஆதாரம்: B. Ramaraju, (1981: 52-53)

கதைத்தலைப்பு: 'The Thousand Petalled Lotus'

மகாராட்டிரம்

ஒரு விவசாயிக்கு மனைவியும் மூன்று மகன்களும் ஒரு மகளும் இருந்தனர். மகன்கள் மூவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. மகள் சிறுபெண். விவசாயி குடும்பத்துடன் வாரணாசிக்குப் புனிதயாத்திரை செல்ல முடிவு செய்கிறான். வீட்டையும் நிலங்களையும் பார்த்துக் கொள்வதற்கு மூத்த மகனையும் மருமகளையும் அவர்களுக்கு உதவியாகத் தன் ஒரே மகளையும் விட்டுச் செல்கிறான்.

மூத்தவன் மனைவி தன் கணவனிடம் அவன் தங்கையைப் பற்றிக் கோள் சொல்லி அவளை அடிக்கச் செய்கிறாள்.

அவன் வயல் வேலைக்குச் செல்லுங்காலத்தில் அவள் தன் நாத்திக்குப் பல்வேறு வேலைகள் தந்து கொடுமைப் படுத்துகிறாள். நாததி பொறுமையாகச் சகித்துக் கொள்கிறாள்.

> நீரில் நனைக்காமல் கல்லில் தப்பாமல் துணிகளை வெளுத்துவர அண்ணி நாத்தியை ஏவுவாள். பெண்மீது அனுதாபம் கொண்ட வண்ணான் துணி வெளுக்க உதவுவான்.
>
> ஓட்டைப் பானையில் நீரெடுத்து வர அண்ணி நாத்தியை ஏவுவாள். பெண்ணின்மீது அனுதாபங் கொண்ட தவளை ஓட்டையில் அமர்ந்து உதவி புரிய நீரெடுத்து வருவாள்
>
> ஏராளமான நெல்லைக் கொடுத்தது உரல் உலக்கை உதவியில்லாமல் ஒரு நெல்மணி கூடக் குறையாமல் அரிசியாக்கி வரவேண்டும் என்று அண்ணி நாத்திக்கு ஆணையிடுவாள்.
>
> அனுதாபங் கொண்ட குருவிகளின் உதவியுடன் அவள் அவ்வாறு செய்வாள்.

மூத்தவனுக்குக் குழந்தையில்லையாதலால் குழந்தை பிறப்பதற்காக அவன் மனைவி ஒரு மந்திரக்காரியின் ஆலோசனையை நாடுகிறாள்.

'அமாவாசையன்று நள்ளிரவில் மனித இரத்தத்தில் தோய்த்த சோளியுடன் குளக்கரையில் இருக்கும் அரசமரத்தை இருபத்தோரு முறை சுற்றினால் குழந்தை பிறக்கும்' என்று மந்திரக்காரி கூறுகிறாள்.

கணவனிடம் அவன் தங்கையைக் கொன்று அவள் இரததத்தில் சோளியை நனைக்குமாறு வற்புறுத்தி முதலில் மறுத்த அவனை இணங்க வைக்கிறாள்.

அத்தை வீட்டிற்கு அழைத்துச் செல்வதாகக் கூறித் தங்கையை அழைத்துச் சென்ற அவன் அவளைக் காட்டில் விட்டுவிட்டு ஒரு சேவலைக் கொன்று அதன் இரத்தத்தில் சோளியை நனைத்துக்கொண்டு வீடு திரும்புகிறான்.

அவன் மனைவி சந்தேகப்பட்டு அவனுடைய தங்கையின் தலையை எடுத்து வருமாறு கூறுகிறாள். வேறு வழியில்லாமல் காட்டிற்குச் சென்று தங்கையைக் கொன்று தலையை எடுத்து வருகிறான். அவன் மனைவி மகிழ்ந்து மந்திரக்காரி கூறிய படியே செய்து நாத்தியின் தலையைக் குளத்தில் எறிகிறாள்.

குளத்தில் விழுந்த தலை ஒரு செந்தாமரையாக மலர்கிறது.

வாரணாசி சென்றவர்கள் திரும்பி வந்து ஊருக்கு வெளியே இருந்து கொண்டு தங்கள் வரவைக் குடும்பத்தினர்க்கும் ஊராருக்கும் சொல்லி அனுப்புகின்றனர்.

பெண்ணைத் தவிர்த்து ஊராரும் குடும்பத்தினரும் எதிர் வந்து யாத்ரீகர்களை வரவேற்கின்றனர்.

தாய் தன் மகள் எங்கே என்று மூத்த மருமகளைக் கேட்க அத்தை வீடு சென்றிருப்பதாக அவள் பதிலளிக்கிறாள்.

யாத்ரீகர்கள் குளத்தில் இறங்கிக் குளிக்கும்போது குளத்திலிருந்த செந்தாமரையைத் தந்தை பறிக்க முயல்கையில் அம்மலர் அவன் கைக்கு அகப்படாமல் அங்குமிங்கும் சென்று கொண்டே மெல்லியகுரலில்

தந்தையே, என்னைத் தொடாதே!
மனைவியின் சோளியில்
இரத்தத்தைத் தோய்ப்பதற்கு
சகோதரன் சகோதரியைக் கொன்றான்
(Brother killed sister
To soak wife's choli in blood
Touch me not, Oh my father!)

என்று பாடுகிறது. தந்தை திடுக்கிடுகிறான்.

மூத்த மருமகள் பறிக்கச் செல்லும்போது அம்மலர் சட்டென்று விலகி 'ஓ கொடுமைக்காரியே, என்னைத் தொடாதே' என்று கோபத்துடன் கத்துகிறது.

குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தன்னைத் தொடவேண்டாம் என்று தந்தைக்குக் கூறியவாறே கூறுகிறது.

தாயிடமும் இவ்வாறு கூறவே தாய் 'உண்மையில் நான் உன் தாயாக இருந்தால் என் அருகே வா' என்று கூற மலர் அருகே வருகிறது.

தாய் தொட்டவுடன் மலர் பெண்ணாக மாறுகிறது. பெண் நடந்த நிகழ்ச்சிகளைக் கூற, தந்தை தன் மூத்த மகனையும் அவன் மனைவியையும் வீட்டைவிட்டு விரட்டி விடுகிறான்.

ஆதாரம்: Indumati Sheorey (1981: 82-86)
கதைத் தலைப்பு: 'The Red Lotus Flower'

பீகார்

ஓர் அரசனுக்கு ஏழு மகன்களும் ஒரு மகளும் இருந்தனர். மகன்களுக்குத் தக்க வயதில் திருமணம் நடைபெற்றது. பெண்ணுக்கும் திருமணமாயிற்று. ஆனால், அரசன் தன் மகளைப் பிரிய மனமில்லாமல் மேலும் ஓராண்டு தன்னுடனேயே வைத்திருக்க முடிவு செய்தான்.

இளவரசர்கள் எழுவரும் தங்கைமீது அன்புடையவர்கள் அவர்களின் மனைவியருள் இளையவளைத் தவிர ஏனைய அனைவரும் நாத்தி மீது (இளவரசி) அன்பு செலுத்தினர். இளையவள்மட்டும் நாத்தி மீது பொறாமை கொண்டிருந்தாள்.

மழைக்காலத்தில் கொண்டாடப்படும் தீஜ் (Teej) விழா வின்போது கிராமப்புறப் பெண்கள் ஆற்றில் குளித்துவிட்டு சிறந்த ஆடைகளை அணிவர்.

இளவரசிக்குத் தன்னிடமிருந்த புடவைகள் எதுவும் பிடிக் காததால் தன் சின்ன அண்ணியின் புடவைகளில்ஒன்றைக் கட்டிக்கொள்ள விரும்புகிறாள்.

சின்ன அண்ணி அதனை விரும்பவில்லை. ஆனாலும் 'அழுக் கானால் உன் இரத்தத்தில் தோய்த்தே (Tinged) உடுத்துவேன்' என்ற நிபந்தனையோடு நாத்தியிடம் புடவையைத் தருகிறாள்.

இளவரசி நிபந்தனையை ஏற்றுக்கொண்டு புடவையைப் பத்திரமாகப் பாதுகாக்கிறாள்.

சின்ன அண்ணி இளவரசியின் (நாத்தியின்) உயிரை மாய்க் கத் திட்டமிடுகிறாள். சன்னலில் வந்து அமரும் காக்கையிடம் தன் புடவையின் அடையாளத்தைக் கூறி அப்புடவையை அழுக் காக்கி விட்டு வந்தால் பாலும் சோறும் தருவதாகக் கூறு கிறாள். காக்கை அவ்வாறு செய்கிறது.

புடவை அழுக்கானதைக் கண்டு திடுக்குறும் இளவரசி துயரத்துடன் வீடு திரும்புகிறாள்.

சின்ன அண்ணி கோபத்துடன் அப்பெண்ணை அடித்து விட்டு ஓர் அறையில் சென்று கட்டிலில் படுத்துக் கொள்கி றாள்.

இளவரசியின் இரத்தத்தில் அவள் அழுக்காக்கிய தன் புடவையை நனைத்தால்தான் கட்டிலைவிட்டு இறங்குவேன் என்று கணவனிடம் கூறுகிறாள்.

சின்னவன் மனைவியின் பேச்சைக் கேட்டு அதிர்ந்தாலும் அவள் விருப்பத்தை நிறைவேற்றுவதாகக் கூறுகின்றான்.

தங்கையை அரண்மனையைவிட்டுத் தனியாக அழைத்துச் சென்று அவள் தலையை வெட்டி அவள் இரத்தத்தில்

மனைவியின் புடவையை நனைத்துச் சென்று மனைவியை மகிழ்ச்சிப் படுத்துகிறான்.

இளவரசியின் இறப்பிற்காக அனைவரும் வருந்துகின்றனர். நடந்த உண்மையை அவர்கள் அறியவில்லை.

சில நாள்களுக்குப் பிறகு இளவரசியைக் கொன்ற இடத்தில் ஓர் அழகிய மாமரம் வளர்கிறது.

ஓர் ஆண்டுக்குப்பிறகு இளவரசியின் மாமனார் அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துக் கொள்வது தொடர்பான செய்தியை நாவிதன் வாயிலாகக் கூறி அனுப்புகிறான். நாவிதன் வழியிலிருந்த அழகிய மாமரத்தைக் கண்டு அதனை நெருங்கவே மரத்தின் அருகிலிருந்து

"மாமனாரின் நாவிதரே
கிளைகளைத் தொடாதீர்
இலைகளைத் தொடாதீர்
அண்ணி தூண்ட அண்ணன் கொன்றான்
புடவை இரத்தத்தில் தோய்க்கப்பட்டது
அங்கே செல்ல வேண்டாம்
திரும்பிச் செல்க"

(Father-in-law's barber, don't touch the branches, don't touch the leaves. The sister - in-law instigated the brother to kill. The Sari was soaked in blood. Don't go there. Go Back.)

நாவிதன் திரும்பிச் சென்று அரசனிடம் நடந்ததைக் கூற, அரசன் அந்த இடத்துக்குச் செல்கிறான். அப்போது 'மாமனாரே, கிளைகளைத் தொடாதீர்...' என்று முன் கேட்டவாறே குரல் கேட்கிறது.

அரசன் திரும்பிச் சென்று மகனிடம் கூற, மகன் அந்த இடத்தை அடைந்து 'யார் நீ? தேவதையா? ஏன் என் முன்னால் வரவில்லை' என்று கூறுகிறான்.

அப்போது கொல்லப்பட்ட இளவரசி பதினாறு வயதுப் பெண்ணாக மரத்திலிருந்து இறங்கி வருகிறாள்.

அவளுக்கு நேர்ந்த கொடுமையை அறிந்து அவன் வருந்தினாலும் அவளை மீண்டும் அடைந்ததை எண்ணி மகிழ்ந்து அவளைத் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

இளவரசியின் பெற்றோர் அவள் உயிருடனிருப்பதை அறிந்து மகிழ்ந்தனர்.

சின்ன அண்ணி மட்டும் காலமுழுதும் பொறாமையால் வெந்து கொண்டிருந்தாள்.

ஆதாரம்: Mira Pakrasi (1981: 90–92)

கதைத் தலைப்பு: 'The Youngest Sister-in-Law'.

வங்காளம்

ஓர் அரசனுக்கு ஏழு மனைவியர். அழகிலும் பண்பிலும் சிறந்தவளான சின்ன மனைவி சுலதா (Sulata) மீது அரசன் அதிக அன்பு கொண்டிருந்தான். இதனால் அவள் மீது ஏனைய மனைவியர் பொறாமை கொண்டனர்.

சுலதா கருவுறவே அவள் மீது அரசனின் அன்பு மிகுதிப்படுவதைக் கண்டு அவர்கள் மேலும் பொறாமை கொண்டனர். சுலதாவின் பிரசவத்திற்கு உதவ சிறந்த மருத்துவச்சியை அழைக்க அரசன் முயன்றபோது மூத்த மனைவியான பிரேம்லதா (Premlata) தாங்களே கவனித்துக் கொள்வதாகக் கூறி அதனைத் தடுத்து விடுகிறாள்.

கவனமாகப் பார்த்துக் கொள்ளுமாறும் குழந்தை பிறந்தவுடன் தனக்குத் தெரிவிக்குமாறும் கூறி அரசன் அனுமதிக்கிறான். மூத்த மனைவியர் அறுவரும் சுலதாவின் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டு அவளிடம் நல்லவர்கள் போல் நடிக்கின்றனர்.

சுலதாவிற்கு ஏழு ஆண் குழந்தைகளும் கடைசியில் ஒரு பெண்குழந்தையுமாக எட்டுக் குழந்தைகள் பிறக்கின்றன.

பிரேம்லதா அக்குழந்தைகளை அறைக்குப் பின்புறமாக எடுத்துச் சென்று உயிருடன் புதைத்து விடுகிறாள்.

தோட்டத்திலிருந்து நாய்க்குட்டி, பூனைக்குட்டி, எலிகள் முதலியவற்றைப் பிடித்துவந்து சுலதாவின் அருகில் வைத்து விட்டு அரசனை வரவழைக்கிறாள்.

அரசன் அவற்றைப் பார்த்து அதிர்ச்சியடைந்து அவற்றைப் புதைக்குமாறும் அவற்றைப் பெற்ற சுலதாவை அரண்மனையை விட்டு வெளியேற்றுமாறும் ஆணையிடுகின்றான்.

பிரேமலதா அரசனின் ஆணையை இரக்கமற்ற முறையில் நிறைவேற்றுகிறாள்.

அதன்பிறகு அரண்மனையிலோ, அரசனிடத்திலோ, நகரிலோ மகிழ்ச்சியையே காணமுடியவில்லை. மரங்கள் கூடப் பூப்பதை நிறுத்திவிட்டன.

ஒருநாள் காலை சம்பா (Champa) மரத்தில் எட்டு அழகிய மலர்கள் மலர்ந்திருப்பதை அரண்மனைத் தோட்டக்காரன் காண்கிறான்.

அரசனுக்குக் கொடுக்கும் நோக்கத்துடன் அம்மலர்களைப் பறிக்க முயன்ற போது மலர்கள் அவன் கைக்கு எட்டாமல் மேலே உயர்ந்தன.

தோட்டக்காரன் பேயோ எனப் பயந்து அரசனிடம் சொல்ல நினைத்தபோது உச்சியில் இருந்த மலர் மனிதக் குரலில் 'அரசன் வந்தால் மலர் தருவோம்' என்று பாடியது.

('We will not will not give any flower,
we will rise up higher and higher.
Let only the king come,
and then we will give flowers')

செய்தியை அறிந்து அரசன் வந்து மலரைப் பறிக்க முயன்ற போது மலர் கைக்கு எட்டாமல் மேலே உயர்ந்தது. உச்சியில்

இருந்த மலர் 'மூத்த ராணி வந்தால் தான் பூ தருவோம்' என்று பாடியது.

மூத்த ராணி வந்தபோது அதற்கடுத்தவள் வந்தால் தருவோம் என்றிவ்வாறு எல்லா ராணிகளையும் அங்கே வருமாறு செய்தது அம்மலர்.

கடைசியில் இளையராணி சுலதா வந்தால்தான் மலர் தருவோம் என்று கூறியதைக் கேட்டு அரசன் திடுக்கிட்டான். அரசன் ஆணையிட்டதன் பேரில் ஏழ்மையில் உழன்றுகொண்டிருந்த இளையராணி அரண்மனைக்கு அழைத்து வரப்பட்டாள்.

அரசன் கூறியபடி இளையராணி மலரைப் பறிப்பதற்காகத் தொட்டபோது சம்பா மரத்திலிருந்து ஏழு மலர்களும் ஏழு இளைஞர்களாகவும் உச்சியிலிருந்து பாடிய பருல் மலர் அழகிய பெண்ணாகவும் உருவெடுத்துத் தங்கள் தாயை அன்புடன் தழுவி முத்தமிட்டனர்.

பெண் பருல் (Parul) நடந்த அனைத்தையும் கூறியதோடு தங்களைக் கடவுள் சாவினின்றும் காப்பாற்றி, சம்பா மரமாக வைத்திருந்தார் என்பதையும் தாய் தொடும்போது தாங்கள் மனித உரு பெறுமாறு செய்திருந்தார் என்பதையும் கூறினாள்.

உண்மையறிந்த அரசன் கொடுமை செய்த ஆறு ராணிகளையும் முள் நிறைந்த குழியிலிட்டுப் புதைத்தான்.

பிறகு அவன் சுலதாவுடனும் அவளுடைய எட்டுக் குழந்தைகளுடனும் இன்பமாக வாழ்ந்தான்.

ஆதாரம்: Geetha Majumdar (1979: 17-23)
கதைத் தலைப்பு: 'The Story of the Seven Brothers'.

2. சின்னண்ணன் சின்னச்சாமி கதைப்பாடல்/கதை வரலாற்று நிலவியல் ஆய்வு

1. ஆய்வுக்குரிய கதைப்பாடல்/கதை

தமிழகத்தின் பல மாவட்டங்களில் நாட்டுப்புற மக்களிடையே பாடலாகவும் உரைநடையாகவும், வாய்மொழியாகவும் வழங்கிவரும் 'சின்னண்ணன் சின்னச்சாமி கதைப்பாடல்/கதை (இனி சி. சி. கதைப்பாடல்/கதை என்று சுருக்கமாகச்சுட்டலாம்) வரலாற்று நிலவியல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது. அண்ணன், தம்பி, அண்ணன் மனைவி ஆகியோர் இக் கதையின் முக்கிய பாத்திரங்கள். தன் மனைவியோடு பாலுறவு கொண்டான் என்று கருதிய அண்ணன் தம்பியைக் கொல்ல, அவன் மனைவி இறந்துவிட்ட கொழுந்தனோடு தீயில் விழுந்து இறப்பதே கதை. அண்ணனால் வஞ்சகமாகக் கொல்லப்படும் தம்பி மக்களின் கவனத்தைக் கவரக்கூடியவனாகவும் அனுதாபத்துக்குரியவனாகவும் இருப்பதால் அவன் பெயரே கதைப்பாடல்/கதைக்குச் சூட்டப்படுகிறது.[1]

---

1. மக்களிடம் இக்கதைப்பாடல்/கதைக்கு என்ன பெயர் என்று கேட்டபோது ஒன்பது பேர் பெயர் கூறினர். 'பள்ளப்பிள்ளை முத்திருளி' (இ.5:6) என்று ஒருவர் கூறினார். இது தவறான தலைப்பு என்றும் இதே பெயரில் வேறு கதை வழங்கப்படுகிறது என்றும் கதை கேட்டுக்கொண்டிருந்த அனைவரும் கூறினர். தருமபுரி மாவட்டத்தில் 'மாட்டுப் பாட்டு' என்றொரு கதைப் பாடல் செல்வாக்குடன் வழங்குகிறது. அதிலிருந்து வேறுபிரித்து அறிய இதனை 'மானு பாட்டு' என்கின்றனர். கதையில் மான் இடம் பெறுவதால் இப்பெயர் பெற்றது. இது பொருத்தமான பெயர் அன்று. இவற்றைத் தவிர, சின்னச்சாமி பெரியசாமி கதை (இ.5:2), சின்னத்தம்பி செல்லத்தம்பி கதை (இ.5:10), சின்னண்ணன் பெரியண்னன் கதை (இ.5:13), சின்னண்ணன் பெரியண்ணன் சாமி (இ.5:14), சின்னண்ணன் பெரியண்ணன் (இ. 5:18) என்ற பெயர்கள் கூறப்பட்டன. இவை தம்பி - அண்ணன் ஆகியோரைக் குறித்து இடப்பட்ட பெயர்கள். சின்னண்ணன் சின்னச் சாமி (இ.5:8), செல்லத்தம்பி பாட்டு (இ.5:11) என்பன தம்பியின் பெயரால் சுட்டப் படுபவை. கதைப்படி அண்ணன், தம்பி, அண்ணன்

பாடல் தொடர்ச்சியற்றுத் தெளிவில்லாமல் இருக்கும் சந்தர்ப்பங்களிலோ, பாடல் நினைவில்லாத போதோ உரைநடை வடிவில் கதை கூறப்பட்டது. அவ்வாறு கூறப்பட்ட கதைகள் பாடல் வடிவங்களிலிருந்து சிற்சில வேறுபாடுகளுடன் காணப் பட்டன. மேலும், இவ்வாய்வில் கதைக் கூறுகளே மீட்டுருவாக் கம் செய்யப்படுவதால் பாடல் மற்றும் உரைநடை ஆகிய இரு வடிவங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

1.1. சேகரிப்புப் பணி

சி. சி. கதையின் பல்வேறு வடிவங்களே இந்த ஆய்வின் ஆய்வு மூலங்களாக அமையுமாதலால் அவற்றைச் சேகரிக்கும் பணி தொடங்கப்பட்டது.

1.1. இதழ்கள், நூல்கள் வழி

முதலில் இதழ்கள், நூல்கள், வெளியிடப்படாத ஆய்வேடு கள் முதலியவற்றின் வாயிலாகத் தமிழகத்திலும் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் இக்கதைப்பாடல் அல்லது இதனை ஒத்த கதைப் பாடல்/கதை வழங்கப்படுகிறதா என்று ஆராயப்பட்டது. இதன் விளைவாகத் தமிழகத்தின் தென்னார்க்காடு (ஆறு. இராமநாதன், 1980 295-306), தருமபுரி (ச. வரதராசுலு, 1979: 237-40), பெரியார் (இர. பன்னீர்செல்வம், 1981) மாவட்டங் களிலிருந்து சேகரிக்கப்பட்ட சி. சி. கதைப் பாடல் வடிவங்கள்

மனைவி ஆகியோர் முக்கியத்துவம் பெறுகின்றனர். ஆனாலும் மிகுந்த பாதிப்புக்கு ஆளானவன் தம்பியே. இவனே மக்களிடம் அதிக அனு தாபத்தைப் பெறுகிறான். பெரும்பாலான கதைப்பாடல்களில் (இ.5:1-4, 7, 8, 12-15, 17-20, 24,25) தம்பியே முதலில் அறிமுகப்படுத்தப்படு கிறான். எனவே,தம்பியின் பெயரால் 'சின்னண்ணன் சின்னச்சாமி' என்று பெயரிட்டு அழைப்பது பொருத்தமானதாகத் தெரிகிறது. டாக்டர் இர. பன்னீர்செல்வம் (1981) இதே பெயரில் இக் கதையை வெளியிட்டுள் ளார். அதற்கு முன்னர் இக்கதைப் பாடல் வடிவம் ஒன்றை ச.வரதராசுலு (1979:237-40) 'சின்னண்ணன்-சின்னத்தம்பி கதை' என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். அண்ணன்-தம்பி ஆகியோரின் பெயரில் கதைக்குப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் பெயருக்குப் பாடலில் அகச்சான்று எதுவு மில்லை. மேலும், 10-ஆம் எண்ணுள்ள கதையில் சின்னத்தம்பி என்ற பெயர் அண்ணனைக் குறிப்பதாக உள்ளது. எனவே பெயர்க் குழப்பம் ஏற்படும் என்பது கருதி இத்தலைப்பு தவிர்க்கப்பட்டது.

கிடைத்தன. மேலும், மன்னான் பழங்குடிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட (பீ. டாக்டர் நசீம்தீன், 1977:பி.இ.1, 41-45) கதைப் பாடலும் கிடைத்தது. பிற மாநில நாட்டுப்புறப் பாடல் மற்றும் கதைத் தொகுப்புகளில் இக்கதைப் பாடல் அல்லது இதனை ஒத்த கதைப் பாடல்/கதை எதுவும் கிடைக்கவில்லை. சி. சி. கதைப்பாடல் குறித்து நூல்களிலிருந்து கிடைத்த பிற செய்திகள் வருமாறு:

> சி. சி. கதைப் பாடல் சேலம், தருமபுரி, கோவை மாவட்டங்களில் பல்வேறு வடிவங்களில் வழங்கப்பட்டு வருகிறது.
>
> கலைஞர் சடையப்பன் அவர்களாலும், டாக்டர் தெய்வம் அவர்களாலும் சேகரிக்கப்பட்டு, பேராசிரியர் நா. வானமாமலை அவர்களிடம் அளிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதியொன்றில் இக் கதையின் வேறு வடிவத்தைக் காணலாம். இவ்வடிவத்தைப் பிற்கால வளர்ச்சி என்று கூறலாம்.

மேற்குறிப்பிட்ட மாவட்டங்களிலும் தேக்கடி மன்னான் பழங்குடிகளிடமும் சி.சி. கதைப்பாடல்/கதை எந்த அளவு செல்வாக்குப் பெற்றுள்ளது? மாவட்டத்தின் அனைத்துச் சாதியினரிடமும் வழங்கப்படுகிறதா அல்லது குறிப்பிட்ட பகுதிகளில் குறிப்பிட்ட சாதியினரிடம் மட்டும் வழங்கப்படுகிறதா? தமிழகத்தின் பிற மாவட்டங்களில் வழங்கப்படுகிறதா? வழங்கப்படுகிறதாயின் எவ்வெப்பகுதிகளில் வழங்கப்படுகிறது? பேராசிரியர் நா. வானமாமலை உயிருடன் இல்லையாதலால் அவரிடம் சேகரித்தளிக்கப்பட்டதாகக் கூறப்படும் கதைப் பாடல் வடிவத்தைப் பெற இயலுமா அல்லது அவருக்காகச் சேகரித்த நாட்டுப்புறப் பாடல் கலைஞர் வழி மீண்டும் சேகரிக்க முடியுமா? இந்த விவரங்களை அறிந்து கொள்வதற்குத் தமிழகம் முழுதும் பயணம் செல்வதென்பது இயலாததொன்று. அவ்வாறு செல்வதால் காலமும் பொருளும் விரயமாகும். எனவே, முதலில் கடிதங்கள் வாயிலாக இச் செய்திகளையும் இயலுமாயின் பாடல் மற்றும் கதை வடிவங்களையும் சேகரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

1.1.2. கடிதத் தொடர்பு வாயிலாக

சி. சி. கதைச் சுருக்கமும் அக்கதைப் பாடல்/ கதை பற்றிய விவரங்களைச் சேகரிக்கும் வழிமுறைகளடங்கிய கடிதமும் வினாப்பட்டியும் இணைத்துத் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த நாட்டுப்புறவியலாளர்கள், களப் பணியோடு தொடர்புடைய பிற துறையாளர்கள், களப்பணியில் ஆர்வமுடைய நண்பர்கள் மற்றும் நண்பர்களின் நண்பர்கள் போன்ற நூற்றுக்கு மேற்பட்டோருடன் 17.8.83 முதல் கடிதத் தொடர்பு கொள்ளப்பட்டது. நேரில் சந்தித்த சுமார் ஐம்பது பேர்களிடமும் வினாப்பட்டி தரப்பட்டு ஒத்துழைப்பு நாடப்பட்டது. இம் முயற்சியின் விளைவுகள் வருமாறு:

தொடர்பு கொண்டோருள் ஐம்பத்தேழு பேர்களிடமிருந்து பதில்கள் பெறப்பட்டன. பதில் எழுதியோருள் நாற்பத்தி ரண்டு பேர் தங்கள் பகுதியில் சி. சி. கதைப்பாடல்/ கதை வழங்கப்படவில்லை என்று எழுதியிருந்தனர். பதினைந்து பேர் தங்கள் பகுதிகளில் பாடல் வடிவமாகவும் உரை நடை வடிவமாகவும் வழங்கப்படுவதாக எழுதியிருந்த னர் (அவர்களுள் இருவர் பாடல் வடிவங்களையும், மற் றொருவர் உரைநடை வடிவத்தையும சேகரித்து அனுப்பி யிருந்தனர்).

கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், திருச்சி, செங்கற்பட்டு மாவட்டங்களில் சி.சி. கதைப்பாடலோ, கதையோ வழங்கப்படவில்லை என்றும்; மதுரை, தஞ்சை, தென்னார்க்காடு, வடார்க்காடு, சேலம், பெரியார், கோவை, நீலகிரி, தருமபுரி, சென்னை மாவட்டஙகளில் வழங்கப்படுவதாகவும் அறிய முடிந்தது.

தேக்கடி மன்னான் பழங்குடிகளைப் பொறுத்தவரை இரு வர் மட்டுமே சி.சி. கதைப்பாடலை அறிந்திருந்தனர் என் றும் அவர்களிடமிருந்தே தான் பாடலைச் சேகரித்ததாகவும் அம்மக்களைப் பற்றி ஆராய்ந்த பி.டாக்டர் நசீம்தீன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

பேராசிரியர் நா. வானமாமலை அவர்களிடம் சேர்ப்பிக்கப் பட்டிருந்த பாடல்வடிவத்தைப் பெற அல்லது பார்வையிட எடுத்துக் கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. அவர் பாதுகாத்து வந்த கையெழுத்துப் பிரதிகளில் அப்பாடல் காணப்படவில்லை என்று தக்கவர்கள் கடிதமெழுதிய தால் அம்முயற்சி கைவிடப்பட்டது. மேலும், அப்பாடலைச் சேகரித்துப் பேராசிரியர் அவர்களிடம் அளித்திருந்த தரும புரி மாவட்ட நாட்டுப்புறக் கலைஞரோடு தொடர்பு கொண்டபோது அவரிடமிருந்து சரியான ஒத்துழைப்பு இன்மையால் அம்முயற்சியும் கைவிடப்பட்டது.

நமக்கு உதவிபுரிவோர் நம் நோக்கத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளத் தவறியபோது (புரிந்து கொள்ளாமை அவர் களின் கல்விக் குறையாலும் சில நேரங்களில் நம் அறிவுறுத்தல் குறைவினாலும் ஏற்படுகிறது) நாம் தந்த கதைச் சுருக்கத்தைக் கொண்டு கற்பனையாகவே நமக்குக் கதை எழுதி விடுகின்றனர். அவ்வாறு எழுதிய ஒருவர் இது என் கற்பனைக் கதை என்றே எழுதியிருந்தார்.

கடிதத் தொடர்பு வாயிலாக விவரங்களைச் சேகரிக்கும் முயற்சியில் நல்ல பயன் ஏற்பட்டது என்றாலும் அம்முயற்சி முழு வெற்றி என்று கூறுவதற்கில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் சேகரிக்க முயன்ற கதை பாலுறவுத் தொடர்பானது என்பதேயாகும். இக்கதையைப் பிறரிடம் எவ்வாறு கேட்பது என்று பலர் தயங்கியதை அவர்களின் கடிதங்கள் வாயிலாக அறியமுடிந்தது. சிலர் படித்தவர்களிடமிருந்து மட்டும் விவரம் கேட்டுப் பதில் எழுதியிருந்தனர். டாக்டர் பட்டம் பெற்ற இருவர் கூட (அவர்களுள் ஒருவர் களப்பணியில் ஈடுபட்டவர்) கதையை வெளியே கூறிக் கேட்கத் தயங்கினர். காரணத்தை ஆராய்ந்தபோது அவர்கள் இருவருமே கூட்டுக் குடும்பத்தில் வாழ்பவர்கள் என்பதை அறிய முடிந்தது. இச் சேகரிப்பு முறையில் உள்ள மற்றொரு தவிர்க்கமுடியாத குறைபாடு கால தாமதமாகும்.

1.1.3. களப்பணி

நூல்கள் மற்றும் கடிதத் தொடர்புகள் வாயிலாகச் சேகரிக்

கப்பட்டத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்ட களப்பணி, நான்கு கட்டங்களில் (27.9.83-29.9.83; 15.10.83-20.10.83; 9.1.84-14.1.84; 2.3.84-15.3.84) தஞ்சை, இராமநாதபுரம், மதுரை, இடுக்கி(கேரளம்), தென்னார்க்காடு, கோவை, நீலகிரி, பெரியார், சேலம், தருமபுரி ஆகிய பத்து மாவட்டங்களைச் சேர்ந்த முப்பத்தைந்து ஊர்களில் செய்து முடிக்கப்பட்டது (காண்க:இ.1). இதன் பயனாக (திரு இராதா கிருட்டிணன் பதிவு செய்து தந்த பாடல்/கதை உட்பட) சி.சி. கதைப்பாடலின் பதினான்கு வடிவங்களும் அக்கதைப்பாடல் கதையின் ஏழு வடிவங்களும் (காண்க:இ.3) சேகரிக்கப்பட்டன.

1.1.3.1. களப்பணி வாயிலாகப்பல உண்மைகள் வெளிப்பட்டன.

1.1.3.1.1 முதலாவதாக, கடிதத் தொடர்பில் சேகரிக்கப்பட்ட தகவல்களில் சில தவறுகள் உள்ளன என்பது களப்பணியில் உணரப்பட்டது. அவை வருமாறு:

படித்துவிட்டு அலுவலகம் ஒன்றில் பணிபுரியும் ஒருவர் தனக்கு சி.சி கதை தெரியும் என்று எழுதியிருந்தார். அவரை நேரில் சந்தித்துப் பேசியபோது அக்கதை தன்னுடைய பூர்வீக ஊரான இராமநாதபுரம் மாவட்டம் தித்திக்குளம் என்ற ஊரில் நிகழ்ந்த உண்மைக் கதை என்று கூறினார். அவரிடம் திரும்பத் திரும்பப் பேசிப் பார்த்ததில் அவர் பேசியது உண்மையானதுதானா என்பதில் ஐயம் எழுந்தது. அதே நேரத்தில் அவர் கூறியது உண்மையாக இருந்தால் அது ஆய்வுக்கு மிகவும் உதவியாக இருக்குமே என்ற எண்ணம் தோன்றியதால் தித்திக்குளம் சென்று பலரை விசாரித்த போது அவர் கூறியது தவறு என்பதை அறிய முடிந்தது.

திண்டுக்கல்லுக்கு அருகிலுள்ள ஊரைச் சேர்ந்த எம்.ஏ. படிக்கும் மாணவர் ஒருவர் தங்கள் குடும்பத்தினருக்கும் தங்கள் ஊரினருக்கும் சி.சி. கதை தெரியும் என்று கூறி, கதையையும் எழுதி அனுப்பியிருந்தார். அவரை அழைத்துச் செல்லாமல் அவருடைய ஊருக்குச்சென்று அவருடைய குடும்பத்தினரையும் ஊராரையும் கேட்டபோது அவர் கூற்று தவறானது என்பதை அறியமுடிந்தது. அத்துடன் அந்த

மாணவர் கதை எழுதுவதில் ஆர்வமுடையவர் என்பதையும் அறிய முடிந்தது.

(மேற்கூறப்பட்ட இருவரும் தங்களுக்கு அனுப்பப்பட்ட கதைச் சுருக்கத்தை வைத்தே தங்கள் கற்பனா சக்தியை வெளிப் படுத்தியிருக்கிறார்கள் என்பது தெளிவு.)

கோத்தகிரி (நீலகிரிமாவட்டம்) அருகிலுள்ள ஊரைச் சேர்ந்த படகர் இன ஆசிரியர் ஒருவர் தங்கள் ஊரில் சி.சி. கதை இருக்கிறது என்று என் நண்பர் ஒருவரிடம் கூறியிருந்தார். இத்தகவலை அடிப்படையாகக் கொண்டு அங்கு வசிக்கும் கோத்தர்கள், தோடர்கள் போன்ற பிற பழங்குடிகளிடமும் இக் கதைப்பாடல்/கதை வழங்கப்படலாம் என்று கருதி களப்பணி மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் யாரிடமும் அக்கதை வழங்கப்படவில்லை என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. தகவலளித்த ஆசிரியர் தன் பெயரும் தங்கள் ஊரின் பெயரும் ஆய்வில் இடம்பெற வேண்டும் என்று விரும்பி இவ்வாறு கூறினார் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

நண்பரொருவர் கடலூருக்கருகில் ஒரு மூதாட்டியிடமிருந்து சி.சி. கதைப்பாடலைச் சேகரித்து அனுப்பியிருந்தார். அந்த மூதாட்டியை நேரில் சந்தித்துப் பாடச் சொன்னபோது கதைப் போக்கு நண்பர் அனுப்பியிருந்ததற்கு மாறாக இருந்தது.இதுபற்றிக் கேட்டபோது அறிந்த தகவல்: நண்பர் அந்த மூதாட்டியை அணுகிப் பாடச்சொன்னபோது நண்பருக்கு அனுப்பப்பட்டிருந்த கதைச் சுருக்கத்துக்கு மாறாகப்பாட, நண்பர் கதைச் சுருக்கத்தைக் கூறி இவ்வாறல்லவா இருக்கவேண்டும் என்று கூறவே மூதாட்டி அதற்கேற்பப் பாடிவிட்டார்.

1.1.3.1.2. அடுத்ததாக சி.சி. கதைப்பாடல் பற்றி முன்பே ஆய்வாளர்களால் உருவாக்கப்பட்டிருந்த கருத்துக்களில் காணப் படும் தவறுகள் களப்பணியில் கண்டறியப்பட்டன. அவை வருமாறு:

தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை, அரூர் வட்டாரங்களில் சி.சி. கதைப்பாடலின் பல்வேறு வடிவங்கள் காணப் படுகின்றன என்று கூறப்பட்ட செய்தி சரியானதாகத் தெரியவில்லை.

சி.சி. கதைப்பாடலின் வேறு வடிவமாகவும் பிற்கால வளர்ச்சியாகவும் கருதப்பட்ட கதைப்பாடல் உண்மையில் சி.சி. கதைப்பாடல் அன்று. அது சி.சி. கதைப்பாடல் கதையோடு ஓரளவு தொடர்புடையதும் தருமபுரி மாவட்டத் திற்கேயுரியதுமான 'மாட்டுப்பாட்டு' என்னும் வேறொரு கதைப்பாடலாகும் [1-அ]. (இக்கதைப் பாடலிலும் அண்ணன், தம்பி, அண்ணன் மனைவி ஆகியோரே கதைப் பாத்திரங் கள். சகோதரர்கள் பல்வேறு துன்பங்களிடையே மாடு வாங்கி அதனைப் பெருக்குவதைப் பாடலின் முதற் பகுதி விளக்குகிறது. பிற்பகுதியில் கதை தொடங்குகிறது. கொழுந் தனை அண்ணி பாலுறவுக்கு அழைக்க, அவன் மறுக்க, அவள் அவனைக் கொன்று புதைக்க, நாயின் உதவியால் உண்மை அறிந்த கணவன் மனைவியைக் கொல்வதாகப் பாடல் தொடர்ந்து செல்கிறது. இதன் உரைநடை வடிவங் களும் தருமபுரி மாவட்டத்தில் வழங்கப்படுகின்றன (காண்க: கு. கிருட்டிணசாமி, 1980:21-25).

1.1.3.1.3. சி.சி. கதைப்பாடல்/கதை குறித்துக் களப்பணி வாயிலாக அறிந்து கொண்ட பிற செய்திகள் வருமாறு:

தேக்கடி மலை (கேரளம்) மன்னான் பழங்குடிகளிடம் சி.சி. கதைப் பாடல் காணப்பட்டதுபோலவே அதனையொட்டிய பகுதிகளில் வாழும் பிற பழங்குடி மக்களிடமும் அப் பாடல் இருக்கலாம் என்ற எண்ணத்தில் இடிக்கி மாவட் டம் (கேரளம்) கோமாளிக்குடியைச் சேர்ந்த முதுவான்

1-அ. காவேரி (57, நான்காம்வகுப்பு, வன்னியக்கவுண்டர், பிளியனூர் அக்ர காரம், தருமபுரிவட்டம்) என்பவர் முன்பாட்டுப்பாட முனியன் (வயது65), கந்தன் (வயது 50) என்போர் பின்பாட்டுப் பாடி இக்கதைப் பாடலைப் பாடிக்காட்டினர்.

பழங்குடிகளை அணுகியபோது அவர்களிடம் அக்கதைப் பாடல் காணப்படவில்லை என்பதை அறியமுடிந்தது.

கம்பம், போடி, தேவாரம் பகுதிகளில் சி.சி. கதைப்பாடல்/கதையைப் பலர் அறிந்திருந்தனர். அதேபோல் சேலம் மாவட்டத்திலும் இக்கதைப் பாடல்/கதை பெருவழக்கினதாகக் காணப்படுகிறது. பிற மாவட்டங்களில் மிக அருகிய நிலையிலேயே காணப்படுகிறது.

வன்னியக்கவுண்டர், தேவர் (அம்பலவர்), பள்ளர், பறையர், சக்கிலியர், குறவர், லம்பாடி, மன்னான் போன்ற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடிகளிடம் இக்கதைப்பாடல் வழக்கில் உள்ளது. வேளாளக் கவுண்டர் சாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணும் இப்பாடலைப் பாடினார்.

சி.சி. கதைப்பாடல்/கதையை ஆண்களே மிகுதியாக அறிந்திருக்கின்றனர் ஆயினும் பெண்களும் அறிந்துள்ளனர். சி.சி. கதைப்பாடல்/கதை பெரும்பாலும் நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே தெரிந்திருக்கிறது. இளைஞர்கள் அப்பாடலைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை. ஒரு சிலர் கதையை மட்டும் அறிந்திருந்தனர். விரைவில் மறைந்து கொண்டிருக்கும் கதைப்பாடல்/கதை என்று இதனைக் கூறலாம்.

சி.சி. கதைப்பாடலின் பெரும்பாலான வடிவங்கள் கட்டுக்கோப்புடன் அமைந்திருக்கவில்லை. கதை நிகழ்ச்சிகள் முன் பின்னாகவும் பாடல் தன்மை குறைந்தும் காணப்பட்டன.

கதைப்பாடல் 32 அடிகள் முதல் 883 அடிகள் வரை பல அளவுகள் கொண்டதாகக் காணப்பட்டது. சில பாடல்களில் இடையிடையே குறைந்த அளவில் உரைநடை கலந்திருக்கிறது.

ஒருவித சோக இசையிலேயே பாடல் பாடப்பட்டது. கதையின் சோக முடிவு இதற்குக் காரணமாகலாம்.

2.0. கதைப்பாடல்/கதைகள் வரிசைப்படுத்தப்பட்டமுறை

அச்சிடப்பட்ட மற்றும் அச்சிடப்படாத ஆய்வுகளிலிருந்தும் கடிதங்கள் வாயிலாகவும் களப்பணி வாயிலாகவும் சேகரிக்கப் பட்ட சி. சி. கதைப்பாடல்கள் பதினெட்டும், கதைகள் ஏழும் (ஆக இருபத்தைந்து வடிவங்கள்) இந்த ஆய்விற்குரிய ஆய்வு மூலங்களாகும். இவை பாடல், உரைநடை என்ற வேறு பாடின்றி நில அமைப்பு அடிப்படையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பின் வருமாறு வரிசைப்படுத்தப்பட்டன:

வரிசை எண்	கதைப்பாடல்/கதை சேகரிக்கப்பட்ட நிலப்பகுதி	கதைப்பாடல்/ கதைக்குத் தரப்பட்ட வரிசை எண்	மொத்தக் கதை பாடல்/ கதைகள்
1.	கேரளம்(தேக்கடி)	1	1
2.	கேரளம் (கஜனாப்பாறை)	2-3	2
3.	மதுரை மாவட்டம்	4-7	4
4.	பெரியார் மாவட்டம்	8-11	4
5.	சேலம் மாவட்டம்	12-19	8
6.	தென்னார்க்காடு மாவட்டம்[2]	20-21	2
7.	தஞ்சாவூர் மாவட்டம்	22	1
8.	தருமபுரி மாவட்டம்	23-24	2
9.	வடார்க்காடு மாவட்டம்	25	1

இக் கதைப்பாடல்கள் மற்றும் கதைகள் இணைப்பு 3-இல் தரப்பட்டுள்ளன.

2. நிலப்படத்தை வைத்துக்கொண்டு மாவட்டத்தை வரிசைப்படுத்தும்போது நிட்டூரி கதைக்கும் இதற்கும் சிறு மாற்றம் ஒன்று ஏற்பட்டுவிட்டது. அதில் தஞ்சைக்குப் பிறகு தென்னார்க்காடு மாவட்டம் குறிக்கப்பட்டுள் ளது. இதில் தென்னார்க்காடு முன்னர்க் குறிக்கப்பட்டுள்ளது. இது ஆய்வுகள் முடிந்தபின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. இச்சிறு மாற்றத்தால் ஆய்வு முடிவுகள் எதுவும் மாறாது என்பதால் திருத்தம் செய்யாமல் விடப்பட்டது.

3.0. கதைக் கூறுகளின் பட்டியல்

சி. சி. கதைப்பாடல்/கதைகள் மொத்தம் அறுபத்து நான்கு கதைக் கூறுகளாகப் பிரிக்கப்பட்டன (காண்க: இ.4). அக்கூறுகளை ஆய்வில் எடுத்தாள்வதற்கு வசதியாக (நிட்டூரி கதைக் கூறுகளுக்குத் தந்தது போலவே) அ, ஆ, இ, ஈ என்பன போன்ற குறியீடுகள் நல்கப்பட்டன. ஒவ்வொரு கூறிலும் காணப்படும் மாற்றங்களைச் சுட்டுவதற்குத் தனிக் குறியீடுகள் தரப்பட்டன. மேலும், அக்கூறுகள் இடம் பெறும் கதைகளின் மொத்த எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு விழுக்காடு கணக்கிடப்பட்டது.

4. ஆய்வு

இனி, இணைப்பு 4-இல் தரப்பட்டுள்ள கதைக் கூறுகளைத் தனித்தனியே ஆராய்ந்து அவை பயின்றுவரும் விழுக்காட்டு அடிப்படையில் மூலக்கதைக் கூறுகள் (basic traits) எவை என்பதைக் காணலாம்.

4.1. மூலக் கதைக் கூறுகள்

0. பாத்திரங்கள்

இது ஒரு தனிக் கூறு அன்று; ஆயினும் கதைவடிவங்களில் இடம்பெறும் பாத்திரங்களை அறிந்துகொள்வது அவசியம் என்னும் நோக்கில் முதலில் பாத்திரங்கள் அட்டவணைப் படுத்தப்பட்டன.

பாத்திரங்களின் பெயர்கள் மற்றும் உறவுமுறைப் பெயர்களில் மாற்றங்கள் காணப்பட்டாலும் அண்ணன், தம்பி, அண்ணன் மனைவி ஆகியோர் இருபத்திமூன்று கதை வடிவங்களில் (92%) இடம்பெறுகின்றனர். ஒரு கதைவடிவத்தில் (4%) அண்ணன்மார் அறுவர், அண்ணன் மனைவி, தம்பி, தம்பி மனைவி, பெற்றோர் முதலிய பாத்திரங்கள் (0. 0. 1. 2; 0. 0. 2. 2; 0. 0. 5; 0. 0. 7) இடம்பெறுகின்றன.

மற்றொரு கதைவடிவத்தில் (4%) கணவன், மனைவி, மைத்துனன் (0. 0. 8) ஆகியோர் இடம் பெறுகின்றனர். இவற்றுள் அண்ணன், தம்பி, அண்ணன் மனைவி ஆகியோரே மூலக்கதைப் பாத்திரங்கள் எனலாம். இவர்களோடு ஒரு கதைவடிவத்தில் மட்டும் (0. 0. 3) தங்கை குறிப்பிடப் படுகிறாள். இது மூலக்கதைப் பாத்திரமன்று.

அண்ணன் குழந்தை (0. 0. 6) என்ற பாத்திரம் பதினான்கு கதைவடிவங்களில் (56%) இடம்பெறுகின்றது. செயற்பாடு இல்லாத பாத்திரமானாலுங்கூட விழுக்காட்டு அடிப்படையில் இதனையும் மூலக்கதைப்பாத்திரம் என்று கொள்ள வேண்டியுள்ளது.

இவற்றைத் தவிர இப்பாத்திரங்களுக்குத் துணைபுரிய வரும் பாத்திரங்களான பங்காளிகள் முதல் பரமசிவன் ஈறாக (0. 0. 9 - 0. 0. 17) உள்ள பாத்திரங்கள் எதுவும் மூலக் கதைப் பாத்திரங்கள் என்று கொள்ளும் அளவுக்கு மிகுதியான கதைவடிவங்களில் குறிப்பிடப்படவில்லை.

அ. வேட்டைக்கான முன்னேற்பாடுகள்

பங்காளிகளை வேட்டைக்கழைத்தல் (அ1), அவர்கள் வர மறுத்தல் (அ2) என்பன இரு கதைவடிவங்களிலும் (8%) சகோதரர் (எழுவர் என்பது உட்பட) வேட்டைக்குச் செல்ல முடிவு செய்தல் (அ3) என்பது பதினோரு கதைவடிவங்களிலும் (44%) ஆயுதங்கள் தயார் செய்தல் (அ4) இரு கதைவடிவங்களிலும் (8%) மதனியைக் கேட்டு வருவதாகத் தம்பி கூறல் (அ5) ஒரு கதைவடிவத்திலும் (4%) கட்டு சாதம் கட்டல் (அ6) நான்கு கதைவடிவங்களிலும் (16%) இடம் பெறுகின்றன. இவை எதுவும் மூலக் கதைக் கூறுகள் அல்ல.

ஆ. சகோதரர் வெளியேறல்

ஐந்து கதைவடிவங்களில் (ஆ0) (20%) இது பற்றிய குறிப்பெதுவும் இல்லை. ஏனைய இருபது கதைவடிவங்களுள்

சகோதரர் இருவரும் வேட்டைக்குச் செல்வதாகப் (ஆ1.1) பதினெட்டுக் கதைவடிவங்களிலும் (72%) சகோதரர் எழுவரும் வேட்டைக்குச் செல்வதாக (ஆ1.2) ஒரு கதைவடிவத்திலும் (4%) குறிப்புகள் காணப்படுகின்றன. சகோதரர் பால்கறப்பதற்குக் காட்டுக்குச் செல்வதாக (ஆ2) ஒரு கதைவடிவம் குறிப்பிடுகின்றது. இவை அனைத்தும் (80%) 'சகோதரர் வீட்டை விட்டு வெளியேறல்' என்ற நிலையில் ஒன்றுபடுகின்றன. இதுவே மூலக்கதைக் கூறாகும். சகோதரர் எத்தனைப்பேர்? எங்கே செல்கிறார்கள்? என்ற வினாக்கள் எழும்போது இருவர் (72%) வேட்டைக்குச் செல்கிறார்கள் (76%) என்பதே மூலக்கதைக் கூறு எனலாம்.

இ. தாகமுறல்

அண்ணன் தாகமுற்று நீர் கேட்கத் தம்பி தருவதாக மூன்று கதைவடிவங்களில் (12%) மட்டுமே குறிப்பிடப்படுகிறது. இது மூலக் கதைக்கூறாக இருக்க முடியாது.

ஈ. உண்ணல்

காட்டில் களைப்புடன் நுழைந்தவர்கள் உண்டு களைப்பாறுவதாக நான்கு கதைவடிவங்களில் (16%) மட்டுமே குறிப்பு வருகிறது. இதுவும் மூலக் கதைக் கூறாகாது.

உ. விலங்குக்காட்சி

சகோதரர்கள் மான்கள் (மற்றும் விலங்குகளைக்) காண்பதாகப் பதின்மூன்று கதைவடிவங்களில் (52%) இடம்பெறும் இக்கூறினை மூலக் கதைக்கூறாகக் கருதலாம்.

ஊ. அம்பெய்யும் முயற்சி

ஒரே ஒரு கதைவடிவத்தில் (4%) மட்டுமே இடம்பெறும் இக் கூறு மூலக் கதைக்கூறாகாது.

எ. ஆயுதமின்மை

பத்துக் கதைவடிவங்களில் (எ0)(40%)இதைப்பற்றிய குறிப்பெதுவும் இல்லை. ஏனைய கதைவடிவங்களுள் ஆயுதத்தை

மறந்து வீட்டில் வைத்து வந்ததை அறிதல் (எ1) பதின்மூன்று கதைவடிவங்களிலும் (52%) திட்டமிட்டு வில்லை வீட்டில் வைத்து வருதல் (எ2) இரு கதைவடிவங்களிலும் (8%) குறிப்பிடப்படுகின்றன. இந்தப் பதினைந்து கதைவடிவங்களும் (60%) 'ஆயுதமின்மை' என்ற நிலையில் ஒன்றுபடுகின்றன. இதுவே மூலக் கதைக்கூறாகும். ஏன் இல்லை என்ற வினா எழும்போது 'மறந்து வைத்து வந்ததால்' என்பதே மூலக் கதைக் கூறாகும்.

ஏ. வீட்டுக்கேவல்

நான்கு கதைவடிவங்களில் (ஏ0) (16%) இதுபற்றிய குறிப்பு எதுவுமில்லை. ஏனைய கதைவடிவங்களுள் அண்ணன் தம்பியை ஆயுதம் எடுத்து வருமாறு வீட்டுக்கேவல் (ஏ1.1) பதினெட்டுக் கதைவடிவங்களிலும் (72%) பந்தெடுத்து வருமாறு ஏவல்(ஏ1.2) ஒரு கதைவடிவத்திலும் (4%) உணவு எடுத்து வருமாறு ஏவல் (ஏ1.3) இரு கதைவடிவங்களிலும் (8%) குறிப்பிடப்படுகின்றன. 'வீட்டுக்கேவுதல்' என்ற நிலையில் இவை (84%) ஒன்றுபடுகின்றன. இதுவே மூலக் கதைக் கூறாகும். வீட்டுக்கேவுவதற்கான காரணத்தை நோக்கும்போது 'ஆயுதம்எடுத்து வருமாறு வீட்டுக்கேவல்' என்பதை மூலக் கதைக்கூறாகக் கொள்ளலாம்.

ஐ. தயக்கம்

தம்பி தயங்குவதாக ஆறு கதைவடிவங்களில் (24%) மட்டும் குறிப்புகள் காணப்படுகின்றன. இது மூலக் கதைக்கூறாகாது.

ஒ. வற்புறுத்தல்

அண்ணன் தம்பியை வற்புறுத்துவதாக நான்கு கதைவடிவங்களில் (16%) மட்டுமே குறிப்புகள் வருகின்றன. இதுவும் மூலக் கதைக் கூறாகாது.

ஓ. வீடு செல்லல்

வீடு செல்லும் நோக்கங்கள் மாறுபட்டாலும் (ஓ1.1-1.4)

தம்பி வீடு செல்வதாக மூன்று கதைவடிவங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துக் கதைவடிவங்களும் (88%) குறிப்பிடுகின்றன. இது மூலக் கதைக்கூறு என்பதில் ஐயமில்லை.

ஔ. வேண்டல்

ஏழு கதைவடிவங்களில் (ஔ0) (28%, இக் கூறு இடம் பெறவில்லை. ஏனைய பதினெட்டுக் கதைவடிவங்களும் (72%) 'அண்ணியிடம் வேண்டல்' என்ற நிலையில் ஒன்றுபடுகின்றன. இது மூலக்கதைக் கூறு ஆகும். என்ன வேண்டப்படுகிறது என்பதில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. ஆயுதம் எடுத்துத் தருமாறு வேண்டுவதாக (ஔ1.1) பதினான்கு கதைவடிவங்களிலும் (56%) பந்தெடுத்துத் தருமாறு வேண்டுவதாக (ஔ1.2) ஒரு கதைவடிவத்திலும் (4%) அண்ணனுக்கும் நாய்க்கும் உணவெடுத்துத் தருமாறு வேண்டுவதாக (ஔ1.3) ஒரு கதைவடிவத்திலும் (4%) பால் கலையத்தை வாங்கிக் கொள்ளுமாறு வேண்டுவதாக (ஔ.1.4) இரு கதைவடிவங்களிலும் (8%) குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் ஆயுதம் எடுத்துத் தருமாறு அண்ணியிடம் வேண்டுவதே மூலக் கதைக் கூறாகக் கொள்ளத் தக்கது.

க. வீட்டினுள் வரவழைத்தல்

பத்துக் கதைவடிவங்களில் (க0) (40%) இதுபற்றிய குறிபெதுவும் இல்லை. ஏனைய கதைவடிவங்களுள் வீட்டினுள் வந்து ஆயுதத்தை எடுத்துக்கொள்ளுமாறு அண்ணி கூறுவதாகப் (க1.1) பன்னிரெண்டு கதைவடிவங்களிலும் (48%) பந்தை எடுத்துக் கொள்ளுமாறு கூறுவதாக (க1.2) ஒரு கதைவடிவத்திலும் (4%) வீட்டினுள் வந்து பாலை வைக்குமாறு கூறுவதாக (க1.3) இரு கதைவடிவங்களிலும் (8%) குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் எந்த ஒன்றையும் மூலக் கதைக் கூறாகக் கொள்ள இயலவில்லை. ஆயின் இவை அனைத்தும் 'அண்ணி கொழுந்தனை வீட்டினுள் வரவழைத்தல்' என்ற நிலையில் ஒன்றுபடுகின்றன (60%). இதுவே மூலக்கதைக் கூறாதல் வேண்டும்.

ங. தீய சகுனங்கள்

கொழுந்தன் வீட்டினுள் நுழையும்போது தீய சகுனங்கள் தோன்றுவதாக இரு கதைவடிவங்களில் (8%) மட்டுமே குறிப்புகள் வருகின்றன. இது மூலக் கதைக்கூறாகாது.

ச. தாழிடல்

அவனை உள்ளே வைத்து அண்ணி கதவைத் தாழிடுவதாக நான்கு கதைவடிவங்களில் (16%) மட்டுமே குறிப்புகள் வருகின்றன. இதுவும் மூலக் கதைக் கூறாகாது.

ஞ. விருப்பறிவித்தல்

ஏழு கதைவடிவங்களில் (ஞ0) (28%) இது பற்றிய குறிப்பெதுவும் இல்லை. கொழுந்தனை ஓய்வெடுத்துச் செல்லுமாறு கூறுவதாக (ஞ2) ஒரு கதைவடிவத்தில் (4%) குறிப்பிடப்படுகிறது. ஏனைய பதினேழு கதைவடிவங்களிலும் (68%) அண்ணி கொழுந்தனுடன் பாலுறவுக்கு முயல்வதைப் பற்றியே குறிப்புகள் வருகின்றன. இவற்றுள் சில கதைவடிவங்கள் வெளிப்படையாகவும் சில குறிப்பாகவும் இச்செய்தியைக் குறிப்பிடுகின்றன (ஞ1ஜி-1ய). இதனை மூலக்கதைக் கூறாகக் கொள்ளலாம்.

ட. இணங்க மறுத்தல்

அண்ணியின் பாலுறவு விருப்பத்திற்குக் கொழுந்தன் இணங்க மறுப்பதாக (ட1) ஒன்பது கதைவடிவங்களிலும் (36%) அண்ணி கூறியவாறு ஓய்வெடுக்க மறுப்பதாக (ட2) ஒரு கதைவடிவத்திலும் (4%) குறிப்புகள் வருகின்றன. ஏனைய பதினைந்து கதைவடிவங்களில் (60%) இது பற்றிய குறிப்பெதுவும் வரவில்லை. எனவே இது மூலக் கதைக்கூறு அல்ல.

ண. இணங்க வைத்தல்

அண்ணி கொழுந்தனைத் தன் இச்சைக்கு இணங்க வைக்க அவன் இணங்குவதாகக் குறிப்பாகவும் வெளிப்படை

யாகவும் (ண1)பதின்மூன்று கதைவடிவங்களிலும (52%) ஒப்வெடுக்க இணங்குவதாக (ண2) ஒரு கதைவடிவத்திலும் (4%) குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் முன்னது மூலக்கதைக் கூறாகலாம்.

த. காணல்

அண்ணன் பருந்தில் வந்து பாலுறவைக் காண்பதாக ஒரு கதைவடிவத்தில் (4%) மட்டும் கூறப்படுகிறது. இது மூலக் கதைக் கூறு அல்ல.

ந. பயம்

அண்ணன் அறிந்தால் கொல்வான் என்று தம்பி பயப் படுவதாக ஆறு கதைவடிவங்களில் (24%) மட்டும் இடம் பெறும் இக்கூறு மூலக்கதைக் கூறாகாது.

ப. உபாயம் கூறல்

அண்ணி கொழுந்தனிடம் வேட்டைக்குச் செல்ல வேண் டாம் என்று கூறுவதாக (ப1 .1) இரு கதைவடிவங்களிலும் (8%) அவன் உடல் மீதுள்ள காயத்திற்கான பொய்க் காரணம் கூறுமாறு கூறுவதாக (ப1. 2) ஏழு கதைவடி வங்களிலும் (28%) கூறப்படுகின்றன. இவை மூலக்கதைக் கூறுகளாக முடியாது.

ம. காடு திரும்பல்

தம்பி காடு திரும்புவதாக மூன்று கதைவடிவங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துக் கதைவடிவங்களிலும் (88%) குறிப்புகள் வருகின்றன. இதுவே மூலக்கதைக் கூறாகும். இக் கதைவடிவங்களுள் தம்பி ஆயுதத்துடன் காடு திரும்புவதாகப் (ம1.1) பத்தொன்பது கதைவடிவங் களும் (76%) பந்துடன் திரும்புவதாக (ம1. 2) ஒரு கதை வடிவமும் (4%) உணவுடன் திரும்புவதாக (ம1. 3) இரு கதைவடிவங்களும் (8%) குறிப்பிடுகின்றன. இவற்றுள் முன்னது மூலக்கதைக் கூறாகும்.

ய. கோபமுறல்

அண்ணன் கோபமுறுவதாக ஒரேயொரு கதைவடிவத்தில் (4.1) மட்டும் இடம்பெறும் இக்கூறு மூலக்கதைக் கூறாகாது.

ர. மீண்டும் வீட்டிற்கேவல்

ல. சென்று திரும்பல்

ஒரே கதைவடிவத்தில் (4%) மட்டும் இடம்பெறும் இக் கூறுகள் மூலக்கதைக் கூறுகளாகா.

வ. காரணங்கேட்டல்

பன்னிரெண்டு கதைவடிவங்களில் (வ0) (48%) இக் கூறு இடம் பெறவில்லை. அண்ணன் தம்பியை ஐயுற்றுக் காரணங்கேட்டல் என்ற நிலையில் ஏனைய பதினமூன்று கதைவடிவங்களும் (52%) ஒன்றுபடுகின்றன. இது மூலக் கதைக் கூறாகும். அதற்கான காரணத்தை அண்ணன் தம்பியிடம் கேட்கிறான் என்று நோக்கும் போது, காயத்திற்கான காரணத்தைக் கேட்ப தாக (வ1.1) எட்டுக் கதைவடிவங்களிலும் (32%) சந்தனம்/ திருநீறு அழிந்ததற்கான காரணத்தைக் கேட்பதாக (வ1.2) இரு கதைவடிவங்களிலும் (8%) தாமதமாக வந்ததற்கான காரணத்தைக் கேட்பதாக (வ1.3) மூன்று கதைவடிவங்களிலும் (12%) குறிப்புகள் வருகின்றன. இக் காரணங்களுள் எதுவும் மூலக்கதைக் கூறாகாது.

ழ. மறுமொழி

பத்துக் கதைவடிவங்களில் (ழ0) (40%) இது பற்றிய குறிப் பில்லை. தம்பி பொய்யுரைத்ததாகப் (ழ1) பதின் மூன்று கதை வடிவங்களிலும் (52%) உண்மையுரைத்ததாக (ழ2) இரு கதைவடிவங்களிலும் (8%) குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் முன்னது மூலக் கதைக் கூறாகலாம்.

ள. சந்தேகித்தல்

தம்பி தன் மனைவியுடன் பாலுறவு கொண்டிருப்பான் என்று அண்ணன் சந்தேகிப்பதாக (ள1) பத்துக் கதைவடிவங்களில்

(40%) மட்டுமே குறிப்பிடப்படுகிறது. இது மூலக்கதைக் கூறு அன்று.

ற. கொல்ல முடிவு

தம்பியைக் கொலை செய்ய அண்ணன் முடிவு செய்வதாக (ற1) மூன்று கதைவடிவங்களில் (12%) மட்டுமே வெளிப்படையாகக் கூறப்படுகிறது. இதுவும் மூலக்கதைக் கூறாகாது.

ன. வேலையிடல்

நான்கு கதைவடிவங்களில் (ன0) (16%) இது பற்றிய குறிப்பு எதுவுமில்லை. மான் (மற்றும் விலங்கு) வேட்டைக்கு உதவும் வண்ணம் அண்ணன் தம்பிக்கு வேலையிடுவதாக (ன1. 1) ஏனைய இருபத்தோரு கதைவடிவங்களும் (84%) குறிப்பிடுகின்றன. (அண்ணன்மார் அறுவர் என வரும் கதையிலும் (ன1. 2) அண்ணனே வேலையிடுவதாக வருவதால் அதுவும் இத்துடன் இணைத்தே கணக்கிடப்பட்டது.) இதுவே மூலக் கதைக் கூறாகும்.

கக. தயக்கம்

அண்ணனிட்ட வேலையைச் செய்வதற்குத் தம்பி தயங்குவதாக ஏழு கதைவடிவங்களில் (28%) மட்டுமே குறிப்புகள் வருகின்றன. இது மூலக் கதைக்கூறு அன்று.

கஉ. சினம்

அண்ணன் சினப்பதாக இரு கதைவடிவங்களில் மட்டுமே இடம் பெறும் இக்கூறும் மூலக்கதைக் கூறு அன்று.

கச. வேலை செய்தல்

ஏழு கதைவடிவங்களில் (கச0) (28%) இதுபற்றிய குறிப்பு எதுமில்லை. ஏனைய பதினெட்டுக் கதைவடிவங்களிலும் (72%) அண்ணனிட்ட வேலையைத் தம்பி செய்வதாகக் (கச1) குறிப்பு இடம்பெறுகிறது. இது மூலக்கதைக் கூறாகும்.

கரு. கொலை

இரு கதைவடிவங்களில் மட்டுமே (கரு0) (8%) கொலை

பற்றிய குறிப்பு இடம்பெறவில்லை. ஏனைய கதைவடிங்களுள் அண்ணன் தம்பியை (மானுடன்) அம்பெய்து கொல்வதாகப் (கஞ1.1) பத்தொன்பது கதைவடிவங்களிலும் (76%) குண்டெய்து கொல்வதாக (கஞ1.2) இரு வடிவங்களிலும் (8%) அறைந்து கொல்வதாக (கஞ1.3) ஒரு வடிவத்திலும் (4%) கூறப்படுகின்றன. இவை அனைத்தும் (88%) 'அண்ணன் தம்பியைக் கொல்லல்' என்னும் நிலையில் ஒன்றுபடுகின்றன. இதுவே மூலக்கதைக் கூறாகும். எவ்வாறு கொல்கிறான் என்று பார்க்கும்போது 'அம்பெய்து கொல்லல்' என்பது மூலக் கதைக் கூறாகும்.

அண்ணி கொழுந்தனைக் கொன்று புதைப்பதாக (கஞ2) ஒரே ஒரு கதைவடிவத்தில் (4%) மட்டும் குறிப்பிடப்படுகிறது.

கட. கொலையை அறிதல்

கொலையை அண்ணி அறிவதாக மூன்றுகதைவடிவங்களில் (12%) மட்டுமே குறிப்பிடப்படும் இக்கூறு மூலக்கதைக் கூறாகாது

கண. கொலையாளி ஆலோசனை

கத. கொலையாளி ஆசுவாசம்

ஒவ்வொரு கதைவடிவத்தில் மட்டுமே இடம்பெறும் இக் கூறுகள் மூலக்கதைக் கூறுகளாகா.

கந. கொலையுண்டவன் துயரம்

கப. கொலையாளி வினவல்

கம. கொலையுண்டவன் பதிலுரை

இக்கூறுகளுள் முதலாவது (கந) ஐந்து கதைவடிவங்களிலும் (20%) இரண்டாவது (கப) ஆறு கதைவடிவங்களிலும் (24%) மூன்றாவது (கம) ஏழு கதைவடிவங்களிலும் (28%) மட்டுமே இடம்பெறுகின்றன. இவை மூலக்கதைக் கூறுகளல்ல.

கய. கொலையாளி வீடு திரும்பல்

மூன்று கதைவடிவங்களில் (கய0) (12%) இது பற்றிய குறிப்பில்லை. ஏனைய கதைவடிவங்களுள் அண்ணன் வீடு திரும்புவ

தாக (கய1.1) இருபத்தோரு கதைவடிவங்களிலும் (84%) அண்ணன்மார் வீடு திரும்புவதாக (கய1.2) ஒரு கதை வடிவத்திலும் (4%) குறிப்புகள் வருகின்றன. இவற்றுள் முன்னது மூலக்கதைக் கூறாகும்.

கர. வரவேற்பு

வீடு திரும்பும் கணவனுக்கு மனைவி ஆலத்தி எடுத்து வரவேற்கத் தயாராதல் (கர1) பற்றி ஒரு கதைவடிவத்திலும் (4%) வரவேற்கவில்லை (கர2) என்று ஒரு வடிவத்திலும்(4%) குறிப்புகள் வருகின்றன. இவை மூலக் கதைக் கூறுகள் ஆகா.

கல. கொலையாளியை ஐயுறல்

மூன்று கதைவடிவங்களில் (கல0) (12%) இது பற்றிய குறிப்பேதுவும் இடம்பெறவில்லை. ஏனைய கதைவடிவங்களுள் கொழுந்தனைக் காணாத அண்ணி கணவனை ஐயுறுவதாகப் (கல1) பத்தொன்பது வடிவங்களிலும் (76%) சின்ன மகனைக் காணாத பெற்றோர் அண்ணன்மாரை ஐயுறுவதாக (கல2) ஒரு வடிவத்திலும் (4%) தம்பியைக் காணாத பெண் கணவனை ஐயுறுவதாக (கல3) ஒரு வடிவத்திலும் (4%) தம்பியைக் காணாத அண்ணன் மனைவியை ஐயுறுவதாக (கல4) ஒரு வடிவத்திலும் (4%) குறிப்புகள் வருகின்றன. இவற்றுள் முன்னது மூலக்கதைக் கூறாகும்.

கவ. கொலையாளி பதிலுரை

மனைவியிடம் உண்மையை மறைப்பதாக (கவ1.1) பதினாறு கதைவடிவங்களிலும் (64%) பெற்றோரிடம் உண்மையை மறைப்பதாக (கவ1.2) ஒரு கதைவடிவத்திலும் (4%) கணவனிடம் உண்மையை மறைப்பதாக (கவ1.3) ஒரு கதைவடிவத்திலும் (4%) மனைவியிடம் உண்மையுரைப்பதாக (கவ2) இரு கதைவடிவங்களிலும் (8%) குறிப்புகள் வருகின்றன. ஐந்து கதைவடிவங்களில் (கவ0) (20%) இதுபற்றிய குறிப்பில்லை. மேற்குறிப்பிட்டவற்றுள் முதலாவது மூலக் கதைக்கூறு ஆகும்.

கழ. பெண் வெளியேறல்

மூன்று கதைவடிவங்கள் (கழ0) (12%) தவிர்ந்த ஏனைய அனைத்துக் கதைவடிவங்களிலும் இக்கூறு இடம்பெறு கிறது. அண்ணி கொழுந்தனைத் தேடி வீட்டைவிட்டு வெளியேறுவதாக (கழ1) இருபது கதைவடிவங்களிலும் (80%) சின்னவனின் மனைவி கணவனைத் தேடி வெளி யேறுவதாக (கழ2) ஒரு கதைவடிவத்திலும் (4%) அக்கா தன் தம்பியைத்தேடி வெளியேறுவதாக (கழ3) ஒரு கதை வடிவத்திலும் (4%) குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் முன்னது மூலக் கதைக்கூறு ஆகும்.

கள. கொலையுண்டவனைக் காணல்

மூன்று கதைவடிவங்களில் (கள0) (12%) இது பற்றிய குறிப்பில்லை. அண்ணி கொழுந்தனைப் பிற(ர்) உதவி யுடன் காண்பதாக (கள1.1) பதினாறு வடிவங்களிலும் (64%) தானே சென்று காண்பதாக (கள1.2) மூன்று வடி வங்களிலும் (12%) குறிப்புகள் வருகின்றன. இந்தப் பத் தொன்பது கதைவடிவங்களும் (76%) 'அண்ணி கொழுந் தனைக் காணல்' என்ற நிலையில் ஒன்றுபடுகின்றன. இதுவே மூலக் கதைக் கூறு ஆகும். எப்படிக் காண்கிறாள் என்ற வினா எழும்போது 'பிறர் உதவியுடன் காண் கிறாள்' என்பதே மூலக்கதைக் கூறாதல் வேண்டும். இவற்றைத் தவிர சின்னவன் மனைவி பிறர் உதவியுடன் கணவனைக் காண்பதாக (கள2) ஒரு கதைவடிவத்திலும் (4%) அக்காள் சென்று தம்பியின் பிணத்தைக் காண்ப தாக (கள3) ஒரு கதைவடிவத்திலும் (4%) அண்ணன் விலங்குகளின் உதவியுடன் தம்பியைக் காண்பதாக (கள4) ஒரு கதைவடிவத்திலும் (4%) குறிப்புகள் வருகின்றன.

கற. பெண் துயரம்

அண்ணி துயரமடைவதாக (கற1) எட்டுக் கதைவடிவங் களிலும் (32%) மனைவி துயரமடைவதாக (கற2) ஒரு வடிவத்திலும் (4%) குறிப்புகள் இடம்பெறுகின்றன. இவை மூலக் கதைக் கூறுகள் அல்ல.

கஎ. மாண்டவன் உயிர்த்தெழல்

பத்துக் கதைவடிவங்களில் (40%) மட்டுமே இடம்பெறும் இக்கூறு மூலக் கதைக்கூறு அன்று.

சக. மரணவாக்குமூலம்

கொழுந்தன் அண்ணியிடம் கூறுவதாக (சக1) நான்கு கதைவடிவங்களிலும் (16%) சின்னவன் மனைவியிடம் கூறுவதாக (சக2) ஒரு வடிவத்திலும் (4%) ஆக ஆறு கதைவடிவங்களில் மட்டுமே இடம்பெறும் இக் கூறும் மூலக் கதைக்கூறு அன்று.

சங. வீட்டுக்கழைத்தல்

அண்ணி கொழுந்தனை வீட்டிற்கு வருமாறு அழைப்பதாக (சங1) இரு கதைவடிவங்களிலும் (8%) சின்னவன் தன் மனைவியை வீட்டிற்கு அழைப்பதாக (சங2) ஒரு வடிவத்திலும் (4%) ஆக மூன்று கதைவடிவங்களில் மட்டுமே இடம்பெறும் இக்கூறும் மூலக்கதைக்கூறு அன்று.

சச. வர மறுத்தல்

கொழுந்தன் வர மறுப்பதாக (சச1) ஏழு கதைவடிவங்களிலும் (28%) சின்னவன் மனைவி வரமறுப்பதாக ஒரு வடிவத்திலும் (4%) ஆக எட்டுக் கதைவடிவங்களில் மட்டும் இடம்பெறும் இதுவும் மூலக் கதைக்கூறு ஆகாது.

சரு. இறுதி வேண்டுகோள்

அண்ணியிடம் தன்னை நல்லடக்கம் செய்யுமாறு கூறுவதாக (சரு1.1.) ஒரு கதைவடிவத்திலும் (4%) கணவனுடன் வாழுமாறு கூறுவதாக (சரு1.2) நான்கு கதைவடிவங்களிலும் (16%) ஆக ஐந்து கதைவடிவங்களில் (20%) இடம்பெறும் இக்கூறும் மூலக்கதைக் கூறாகாது.

சடு. இறத்தல்

சஎ. பெண் நீதி கேட்டல்

அவள் கொழுந்தன் மீண்டும் இறப்பதாக! (சடு1.1 & 1.2)

ஆறு கதைவடிவங்களில் (24%) குறிப்பிடப்படுகின்றன. பெண் கொலையுண்டவனின் உடலை எடுத்துச் சென்று கொலை செய்த கணவனிடம் நீதி கேட்பதாக (சண 1) ஒரே ஒரு வடிவத்தில் (4%) மட்டும் குறிப்பு வருகின்றது. இவை இரண்டுமே மூலக்கதைக் கூறுகள் அல்ல.

சத. பிணத்தை எரிக்க உதவி வேண்டல்

அழுகுரல் கேட்டு வருவோரிடம் அவர்களுக்கு மனைவியாக இருப்பதாகக் கூறிப் பிணத்தை எரிக்க உதவி கேட்பதாக (சத1.1) ஏழு கதைவடிவங்களிலும் (28%) அடிமையாக இருப்பதாகக் கூறி உதவி கேட்பதாக (சத1.2) ஒரு கதை வடிவத்திலும் (4%) ஆடை ஆபரணம் தருவதாகக் கூறி உதவி கேட்பதாக (சத1.3) இரு கதைவடிவங்களிலும் (8%) ஆக பத்துக் கதைவடிவங்களில் மட்டும் இடம்பெறும் இக் கூறு மூலக் கதைக் கூறு அன்று.

சந. தீ மூட்டல்

அண்ணி பிறர் உதவியுடன் கொழுந்தனின் பிணத்திற்குத் தீ மூட்டுவதாக (சந1.1) பதினோரு கதைவடிவங்களிலும் (44%) தானே தீ மூட்டுவதாக (சந1.2) ஏழு கதைவடிவங் களிலும் (28%) ஆக அண்ணி தீ மூட்டுவதாகப் பதினெட் டுக் கதைவடிவங்களில் (72%) குறிப்புகள் வருகின்றன. அண்ணன் தம்பியின் பிணத்திற்குத் தீ மூட்டுவதாக (சந2) ஒரேயொரு வடிவத்தில் (4%) மட்டும் குறிப்பிடப்படு கிறது. ஆறு கதைவடிவங்களில் (சந0) (24%) இது பற்றிய குறிப்பில்லை. இவற்றுள் 'அண்ணி தீ மூட்டல்' என்பது மூலக்கதைக் கூறாகும்.

சப. தற்கொலை

அண்ணி தீப்பாய்ந்திறப்பதாகப் (சப1) பதினெட்டுக் கதை வடிவங்களிலும் (72%) அக்காள் பிணத்தின் மீது விழுந் திறப்பதாக (சப2) ஒரு கதைவடிவத்திலும் (4%) குறிப்புகள் வருகின்றன. இவற்றுள் முன்னது மூலக்கதைக் கூறாகும்.

சம. உதவியோர் தற்கொலை

பெண்ணின் சோக முடிவைக் கண்டு அவளுக்கு உதவி செய்தவர்கள் (அவர்களின் மாடுகள் உட்பட) தற்சொலை செய்து கொள்வதாக (சம1) ஏழு கதைவடிவங்கள் (28%) குறிப்பிடுகின்றன. இது மூலக் கதைக் கூறு அன்று.

சய. பெண் தெய்வமாதல்

மூன்று கதை வடிவங்களில் (12%) மட்டுமே இடம்பெறும் இதுவும் மூலக் கதைக கூறாகாது.

சர. இறுத்ச் சடங்கு

அண்ணன் இறந்தவர்களுக்கு இறுதிச் சடங்கு செய்வதாக ஒரே ஒரு கதைவடிவத்தில் (4%) இடமபெறும் இக் கூறு மூலக் கதைக் கூறு அன்று.

சல. கொலையாளி(கள்) முடிவு

அண்ணன் தற்கொலை செய்து கொள்வதாக (சல1.1) இரு கதை வடிவங்களிலும் (8%) தற்கொலை முயற்சி செய்ய மக்கள் அவனை அவமானப்படுத்துவதாக (சல 1.2) ஒரு கதைவடிவத்திலும்(4%)சாமியாராவதாக (சல1.3) ஒரு கதை வடிவத்திலும்(4%) தம்பி அண்ணன்மாருக்குப் புத்தியுரைப் பதாக (சல 1.4) ஒரு கதைவடிவத்திலும் (4%) அண்ணன் கொலையாளியான அண்ணியைக் கொல்வதாக (சல 1.5) ஒருகதைவடிவத்திலும் (4%) ஆக கொலையாளி(கள்) முடிவு பற்றி ஆறு கதை வடிவங்களில் மட்டுமே குறிப்புகள் வருகின்றன. இது மூலக்கதைக் கூறு அன்று.

சவ. பெண் காட்டில் வசித்தல்

சழ. சகோதரர் தங்கள் பிறப்பை அறிய முயலல்

சள. குழந்தையின் மறுபிறப்பு

ஒவ்வொரு கதைவடிவத்தில் (சவ1,சழ1,சள1) மட்டுமே இடம்பெறும் இக்கூறுகள் மூலக்கதைக் கூறுகள் அல்ல.

4.2. மூலக்கதை (Basic Tale)

இதுவரை தீர்மானிக்கப்பட்ட மூலக்கதைக் கூறுகளை இணைத்தால் பின்வரும் மூலக் கதையை உருவாக்கலாம்.

அண்ணன், தம்பி, அண்ணன் மனைவி (92%), அண்ணன் குழந்தை (56%) ஆகியோர் அடங்கிய குடும்பம்.

சகோதரர் இருவரும் (72%) வேட்டைக்கென (76%) வீட்டை விட்டு வெளியேறுகின்றனர் (80%). மான்கள் (மற்றும் விலங்குகளைக்) காண்கின்றனர் (52%). வீட்டில் மறந்து வைத்து விட்டு வந்ததால் (52)% ஆயுதமில்லை (60%). அண்ணன் தம்பியை ஆயுதம் எடுத்து வருமாறு (72%) வீட்டுக்கேவுகிறான் (84%). தம்பி வீடு செல்கிறான் (88%). ஆயுதம் எடுத்துத் தருமாறு (56%) அண்ணியிடம் வேண்டுகிறான் (72%). அண்ணி அவனை வீட்டினுள் வரவழைக்கிறாள் (60%). அவனுடன் பாலுறவுக்கு முயல்கிறாள் (68%). அவனை இணங்க வைக்கிறாள் (52%). தம்பி ஆயுதத்துடன் (76%) காடு திரும்புகிறான் (88%). அண்ணன் ஐயுற்றுத் தம்பியிடம் காரணம் கேட்கிறான் (52%). மான் (மற்றும் விலங்கு) வேட்டைக்கு உதவும் வண்ணம் அண்ணன் தம்பிக்கு வேலையிடுகின்றான் (84%). தம்பி செய்கிறான் (72%). அண்ணன் தம்பியை (மானுடன்) அம்பெய்து (76%) கொல்கிறான் (88%). பின்னர் வீடு திரும்புகிறான் (84%). கொழுந்தனைக் காணாத அண்ணி கணவனை ஐயுறுகிறாள் (76%). அவளிடம் உண்மையை மறைக்கிறான் (64). அவள் கொழுந்தனைத் தேடி வீட்டை விட்டு வெளியேறுகிறாள் (80%). கொழுந்தனைப் பிற(ர்) உதவியுடன் (64%) காண்கிறாள் (76%). தீ மூட்டுகிறாள் (72%). தீப்பாய்ந்து இறக்கிறாள் (72%).

கதைக் கூறுகள் பயின்றுவரும் விழுக்காட்டு அடிப்படையில் மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட 'சின்னண்ணன் சின்னச்சாமி கதை' இது. முதன் முதலில் தோன்றிய மூல வடிவம் (Original Form) என்று இதனைக் கொள்ள இயலாது.

வாரன் இ. இராபர்ட் கூறியதைப்போல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 'சின்னண்ணன் சின்னச்சாமி' கதை வடிவங்களுள் 'செல்வாக்கு வாய்ந்த மிக இன்றியமையாத வடிவம் இது' என்று கொள்வதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

4.3. துணை வடிவங்கள்

மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட கதை வடிவத்தைத் தவிர அதனோடு சிறிதளவு மாறுபடும் வேறு ஐந்து வடிவங்களும் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதையில் மட்டுமே இடம்பெறுகின்றன. அவற்றைத் துணை வடிவங்கள் எனலாம். அவை வருமாறு:

துணை வடிவம்-1

அண்ணன், தம்பி, அண்ணன் மனைவி, அண்ணன் குழந்தை ஆகியோர் அடங்கிய குடும்பம்.

பால் கறந்து வீட்டில் கொடுத்துவிட்டு நாய்க்கும் தனக்கும் உணவெடுத்து வருமாறு அண்ணன் தம்பியை வீட்டுக்கு ஏவ, சகுனம் சரியில்லை என்று தம்பி தயங்குகிறான். அண்ணன் வற்புறுத்த, தம்பி வீடு செல்கிறான். மைந்தனை மடியில் வைத்துக் கொண்டு சாதம் சமைக்கும் அண்ணியிடம் பால் கலையத்தை வாங்கிக் கொள்ளுமாறு வேண்ட, அவள் அவனை உள்ளே வரவழைத்து கதவைத் தாழிட்டுஅவனுக்கு வாசனைப் பொருளிடுகிறாள். பொழுது விடிந்தது கதவைத் திறவுங்கள் என்று அவன் கூற, அவள் திறக்க அவன் அழுகிறான். காலதாமதம், காயம் முதலியன பற்றி அண்ணன் கேட்டால் என்ன சொல்வதென்று அவன் கேட்க, முட்காயம் என்று கூறுமாறு அவள் கூறுகிறாள். காலந்தாழ்ந்து உணவெடுத்துச் சென்று முன் ஏர் ஓட்டும் அண்ணனை உண்ண அழைக்க, அவன் ஆல விழுதால் பல்துலக்கி வருகிறான். அண்ணன் மீண்டும் வீட்டிற்கேவ, சென்று வருகிறான். அண்ணன் காயத்திற்கான காரணம் கேட்கும்போது அண்ணி கூறியபடி பொய் யுரைக்கிறான். அண்ணன் தம்பியிடம் ஆடுமாடுகளை

மேய்ச்சலுக்கு விட்டுவிட்டு (அஃம்பெய்வதற்கு வசதியாகத்) தென்புறமாக நிற்குமாறு கூற, அவன் அவ்வாறே நிற்க, மானுக்கு எய்த அம்பு தம்பிக்கும் படுகிறது. அண்ணி ஆல மரத்திலேறிக் கொலை நடந்ததைப் பார்த்து வீடு திரும்பு கிறாள். பாட்டப்பன் கூறிய யோசனைப்படி தம்பி உட லைக் கோவைக் கொடியில் சுற்றி, பெரண்டையை மேல் ஒடித்துப் போட்டுவிட்டு மான் மயிலுடன் வீடு திரும்பு கின்றான். அவன் மனைவி கொழுந்தன் எங்கே என்று கேட்க அவன் உண்மையை மறைக்கிறான். அவள் வீட்டைவிட்டு வெளியேறி பறவை உதவியுடன் கொழுந்தனைக் காண் கிறாள். அவன் பிணத்தை எரிக்க உதவினால் ஆறுமாதம் மனைவியாக இருப்பேன் என்று வண்டிக்காரர்களிடம் கூறி, அவர்கள் உதவியுடன் தீமூட்டி, அவர்களை ஏமாற்றி விட்டுத் தீப்பாய்கிறாள். வண்டிக்காரர்களும் அவர்களைத் தொடர்ந்து மாடுகளும் தீப்பாய்கின்றன.

இவ்வடிவம் பெரியார் மாவட்டம் விளக்கேத்தியில் காணப் பட்டது. (காண்க: இ.3:8)[3]

துணை வடிவம்-2

அண்ணன்மார் எழுவர், அண்ணன் மனைவி, தம்பி மனைவி, அண்ணன் குழந்தை, அண்ணன்மாரின் பெற்றோர் அடங்கிய குடும்பம்.

சகோதரர் கருநாயுடனும் வெடியுடனும் வேட்டைக்குச் செல்கின்றனர். வீட்டில் வைத்துவந்த குண்டு மருந்தை எடுத்து வருமாறு அண்ணன் தம்பியை ஏவுகின்றான். தம்பி வீடு சென்று அண்ணியிடம் குண்டை எடுத்துத் தருமாறு கேட்க, அவள் அவனை உள்ளே வரவழைத்துத் தன் பாலு றவு விருப்பத்தைத் தெரிவிக்க, அண்ணி தாய் போன்றவள் என்று கூறி அவன் மறுக்கிறான். அவள் வற்புறுத்தலுக்கு இணங்கியிருந்து காயப்பட்டு காடு திரும்புகிறான். அண் ணன் காயத்திற்கான காரணத்தைக் கேட்க, தம்பி பொய்

3. துணை வடிவங்கள் ஒவ்வொரு கதையில் மட்டுமே இடம்பெறுவதால் அவற்றுக்குக் குறியீடுகளைப் பயன்படுத்தவில்லை. ஒப்பிட்டுப்பார்க்க வசதி யாகக் கிடைத்த இடம் மற்றும் வரிசை எண் தரப்படுகின்றன.

யுரைக்கிறான். நாங்கள் அறுவரும் காடுகட்டிக் குந்து கிறோம்; நீகருநாயுடன் சென்று மான்களை ஓட்டிவா என்று அண்ணன் கூற, தம்பி அவ்வாறே செய்கிறான். அண்ணன் மானுக்கும் தம்பி மார்புக்கும் குறிபார்த்து அம்புவிட அம்பு தம்பி மார்பில் தைக்கிறது. அண்ணன்மார் அறுவரும் 'இவனை எடுத்துச் சென்றால் இழவாகும், மானை எடுத்துச் சென்றால் கறியாகும்' என்று மானை எடுத்துக் கொண்டு வீடு செல்கின்றனர். இறைச்சியைப் பங்கிட்டு எடுத்துக் கொண்டு சின்னவன் பங்கைக் கொடுத்தனுப்ப, சின்னவன் எங்கே எனப் பெற்றோர் கேட்க, அக்கா வீட்டிற்கு இறைச்சி எடுத்துச் சென்றுள்ளதாக அவர்கள் கூறுகிறார்கள். சின்னவன் மனைவி கணவனைத் தேடி வெளியேறி ஏழேருகாரர்கள் காட்டக் கணவனைக் கண்டு அழுகிறாள். பரமசிவனும் பார்வதியும் அவள் கணவனை உயிர்ப்பிக்கின்றனர். அவன் தன் மனைவியிடம் நடந்ததைக் கூறுகிறான். 'நீ சொன்ன சொல் பலிக்கும்; அண்ணன்மார் விறகு சுமப்பர்; நீ அவர்களுக்குச் சம்பாதித்துப் போடு' என்று கூவன் நாக்கில் பரமசிவன் எழுதுகிறார். கூவன் தன் மனைவியை வீட்டுக்கழைக்கிறான். அவள் வரமறுக்கிறாள். அண்ணன்மாருக்கு இல்லாத சொத்து சுகம் காட்டில் உண்டாகவேண்டும் என்று அவன் கூற அவ்வாறே நடக்கிறது. அண்ணன்மார் மனைவிமார்களுடன் விறகு சுமந்து வர, அவர்களைத் தம்பி விசாரிக்க, தம்பியைக் கொன்றதுமுதல் இவ்வாறு ஆயிற்றென்று அவர்கள் கூற, பெற்றோரையும் அழைத்துவரச்செய்து, உண்மையை உணர்த்தி, தம்பி அண்ணன்மாருக்குப் புத்தியுரைக்கிறான்.

இவ்வடிவம் சேலம் மாவட்டம் சின்னதண்டாவில் வழங்கப்படுகிறது (காண்க:இ. 3:15).

துணை வடிவம் –3

அண்ணன், தம்பி, தங்கை, அண்ணன் மனைவி உள்ள குடும்பம்.

ஆயிரம் வண்டி கரி, உமி, இரும்பு முதலியவற்றால் வானத்துக்கும் பூமிக்கும் ஒரு வேலாகச் செய்யுமாறு

அண்ணன் கூற, பத்ரகாளியினுடைய பூதத்தின் உதவியுடன் ஆசாரிகள் செய்கிறார்கள். மான்கள் மேய்தலைக் கண்டு, வில்லெடுத்து வருமாறு அண்ணன் தம்பியை ஏவ, தம்பி வீடு செல்கிறான். அண்ணி அவனிடம் தன் பாலுறவு விருப்பத்தைக் கூற, அண்ணி தாய் போன்றவள் என்று கூறி அவன் இணங்க மறுக்கிறான். அவள் வற்புறுத்தி இணங்க வைக்க, கிள்ளுபடா அவன் பேனி கிள்ளுபட்டுப் போயிற்று. அண்ணன் கிள்ளுக்காயம் என்னவெனக் கேட்பான் என்று கூற, பூனை கிழித்ததாகக் கூறுமாறு அவள் கூறுகிறாள். தம்பி காடு திரும்புகிறான். அண்ணன் காயத்திற்கான காரணம் கேட்க, அண்ணி கூறியவாறு தம்பி பொய்யுரைக்கிறான். பத்ரகாளி அண்ணன்மாரின் பிறப்பைக் கூற வேண்டுமானால் அவர்கள் வேங்கையைப் பிடித்து வரவேண்டும் என்பது போன்ற கடினமான வேலைகளை ஒவ்வொன்றாகக் கூற, சின்னண்ணன் அவற்றைச் செய்தும் காளி உண்மையைக் கூறாமல் தட்டிக்கழிக்கிறாள்.

இவ்வடிவம் சேலம் மாவட்டம் வெள்ளக்கல்பட்டியில் கூறப்பட்டது (காண்க:இ. 3:19).

துணை வடிவம் -4

கணவன், மனைவி, அவள் தம்பி ஆகியோர் கதைப் பாத்திரங்கள்.

மானெங்கே மயிலெங்கே உன் கூட வந்த (என்) தம்பி எங்கே என்று கணவனிடம் மனைவி கேட்கிறாள். முதலில் மனைவியிடம் உண்மையை மறைப்பவன் பின்னர் மானென்று தெரியாமல் மச்சானைச் சுட்டுவந்தேன் என்று உண்மையைக்கூறுகின்றான். அவள் என் தம்பியை எங்கே கண்டு தேடுவேன் என்று புலம்பிச் செல்கிறாள். தம்பி இறந்து கிடப்பதைக் காண்கிறாள். பிணத்தின்மீது விழுந்திறக்கிறாள்.

தென்னார்க்காடு மாவட்டம் செல்லங்குப்பத்தில் கூறப்பட்ட வடிவம் இது (காண்க: இ. 3:21)

துணை வடிவம்-5

அண்ணன், தம்பி, அண்ணன் மனைவி, அண்ணன் குழந்தை ஆகியோர் உள்ள ஒரு குடும்பம்.

தம்பி (அண்ணனுடன்?) பால் கறப்பதற்குக் காட்டுக்குச் செல்லல். காடு சென்று பால் கறந்து வருகிறேன் என்று அண்ணன் கூற, தம்பி தான் செல்வதாவும் அவனை வீட்டி லிருக்குமாறும் (?) கூறி வீட்டிற்குச் செல்கிறான். தலையி லுள்ள பால் குடத்தை இறக்குமாறு அண்ணியிடம் வேண்ட, அவள் அவனை உள்ளே வரவழைத்து கதவைத் தாழிட்ட பின் தன் பாலுறவு விருப்பத்தை வெளியிடுகின்றாள். அண்ணி தாய் போன்றவள் என்று கூறி இணங்க மறுக்கி றான். அவள் அவனை இணங்க வைக்கிறாள்(?) (அவனை வாரி மெத்தையில் போட்டாள்). 'மானை வளைத்து வாரும்' என்று அண்ணன் வேலையிட, 'மானோடும் ஓட்ட மெல்லாம் நானோட வல்லவனா' எனத் தம்பி தயங்கு கிறான். அண்ணி கொழுந்தனைக் கொதிநீரில் போட்டுக் கொன்று புதைக்கிறாள். மாடு, நாய்களெல்லாம் கத்திக் கொண்டு வர அண்ணன் வந்து தன் மனைவியிடம் தம்பி எங்கே என்று கேட்கிறான். பாலை இறக்கி வைத்துவிட்டு உடனே திரும்பியாயிற்று என்று அவள் கூறுகிறாள். நாய்கள், மாடுகள் முதலியன புதைகுழியைத் தோண்டி எடுக்க, அண்ணன் தம்பியின் பிணத்தைக் காண்கிறான். நாய், பசு, பரமசிவன் ஆகியோர் வரத்தால் மாண் டவன் உயிர்த்தெழுகிறான். தம்பி நடந்ததைக் கூறு கிறான். அண்ணன் தன்மனைவியைச் சுண்ணாம்புக் கல்லில் வைத்துச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தம்பியோடு நன்றாக வாழ்கிறான்.

தருமபுரி மாவட்டம் ஆதாழியூரில் சேகரிக்கப் பட்ட வடிவம் இது. (காண்க: இ.3:24).

4.3.1. துணை வடிவங்கள் தோன்றியமைக்கான காரணங்கள்

இந்த ஐந்து துணை வடிவங்களும் மீட்டுருவாக்கம் செய் யப்பட்ட வடிவத்தோடு பெரிதும் ஒத்தும் சிறிதளவு மாறுபட் டும் காணப்படுகின்றன. இந்த மாற்றங்களுக்கான காரணங் களை அல்லது துணை வடிவங்களின் தோற்றங்களுக்கான காரணங்களை முதலில் ஆராயலாம்

4.3 1.1. மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட வடிவத்தோடு துணை வடிவம் 1-இல் பெரிய மாற்றம் எதுவும் காணப்படவில்லை. பால் கறந்து கொண்டு வீடு செல்லும் நிலை (ஏ1.3ஜி) ஆடு மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டுவிட்டு (அம்பெய்ய வசதியாக) நிற்குமாறு கூறல் (ன1.1பி) என்பன போன்ற செய்திகளே மாற்றங்கள் எனலாம். மேய்ச்சல் தொழில் செய்தல், உழுது விவசாயம் செய்தல், வேட்டையாடுதல் ஆகிய மூன்றையும் செய்யும் ஒருவித வளர்ச்சியடைந்த சமுதாய அமைப்பில் இக் கதை நிகழ்வதைக் காண முடிகிறது. கதை வழங்கும் நிலப் பகுதி, மக்கள் வாழ்க்கைநிலை ஆகியவை காரணமாக இந்த மாற்றங்கள் நிகழ்ந்திருக்க வாய்ப்புண்டு.

4.3.1.2. அடுத்து துணை வடிவம் 2-ஐக் காணலாம். அண்ணன் மார் அனைவரும் ஒன்று சேர்ந்துகொண்டு தம்பியைப் (அவன் பெரும்பாலும் இயலாதவனாக-முடமானவனாக-இருப்பான்) பல வழிகளில் ஏமாற்றிக் கொடுமைப்படுத்த முயற்சிப்பதாக வும் அவர்களின் முயற்சிகள் தம்பிக்கு நன்மையாகவே முடிந்து இறுதியில் அவர்கள் துன்பப்படுவதாகவும் அமைந்த பல கதை கள் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வழங்கப்படு கின்றன. அததகையதொரு கதை சி.சி. கதையோடு இணைந்த தன்விளைவாகவே இந்த வடிவம் தோற்றம் பெற்றிருக்கிறது. பாடகரின் நினைவுக் குறைவால் இந்த இணைப்பு நேர்ந்திருக் கலாம்.

4.3.1.3. துணை வடிவம் 3-இன் தோற்றம் மிகத் தெளி வானது. இதனைப் பாடல் வடிவில் பாடியவர் சேலம் அருகி லுள்ள வெள்ளக்கல்பட்டி என்னும் ஊரைச் சேர்ந்த வேளாளக் கவுண்டர் இன மூதாட்டியாவார். வன்னியக் கவுண்டர்களிடம் மிகுதியாகக் காணப்படும் இக் கதைப் பாடல் வேளாளக் கவுண்டர்களிடம் அநேகமாக வழங்கப்படுவதில்லை என்றே கூற லாம். ஆனால், இந்த அம்மையார் விதிவிலக்காகப் பாடினார். இவர் பாடிய பாடல் 883 அடிகள் கொண்டதாக அமைந்திருந் தாலும் 44-ஆவது அடி முதல் 118-ஆவது அடி வரையிலான பகுதி மட்டுமே சி. சி. கதைப்பாடலோடு ஒத்திருந்தது. ஏனைய அடிகள் அப்பட்டமாக வேறுபட்டன. பாடலைக் கற்றுக் கொண்ட விதம் பற்றிக் கேட்டபோது அண்ணன்மார் சுவாமி

கோயிலில் பாடும் போதும் வீட்டில் தன் கணவர் பாடும்போதும் கேட்டுக் கற்றுக் கொண்டதாகக் கூறினார். இவர் சி. சி. கதைப்பாடலையும் அண்ணன்மார் சுவாமி கதைப் பாடலையும் கேட்டு நினைவுக் குறைவால் இரண்டையும் ஒன்றாக இணைத்து விட்டார் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. கதையில் சகோதரர் இடம் பெறல் என்னும் ஒப்புமை காரணமாக இரண்டு வெவ்வேறு கதைப்பாடல்கள் ஒன்றாக இணைந்ததால் இந்தத் துணை வடிவம் தோற்றம் பெற்றது என்பதைத் தெளிவாக அறியமுடிகிறது.

4.3.1.4. அடுத்ததாக 4-ஆவது துணை வடிவம். (காட்டிலிருந்து வீடு திரும்பும் கணவரிடம் மனைவி) 'மானெங்கே மயிலெங்கே கூடவந்த தம்பி எங்கே' (கல3ஜி) என்று கேட்கிறாள்.

பொதுவான கதைப் போக்கின்படி இதன் பொருள் **உன் தம்பி** எங்கே? என்று மனைவி கணவனிடம் கேட்பதுதான்.

அவன், 'மானென்று தெரியாமல் **மச்சானைச்** சுட்டு வந்தேன்' (கவ2.1ஜி) என்று அவளுக்குப் பதில் கூறுகிறான்.

பொதுவான கதைப் போக்கின்படி இதன் பொருள் **'உன் மச்சானைச் சுட்டுவந்தேன்'** என்பதுதான். கொழுந்தனை மச்சான் என்று அழைக்கும் பழக்கம் தென்னார்க்காடு மாவட்டத்தில் பறையர்களிடம் உள்ளது.

கதையை அறியாமல் கதைப்பாடலை மட்டுமே அறிந்த ஒருவர் 'தம்பி' என்பதை **அவளுடைய தம்பி** என்று கருதியிருக்க வேண்டும். அதற்கேற்ப மச்சான் என்பதை **அவனுடைய மச்சான்** என்று கருதியிருக்க வேண்டும். மனைவியின் தம்பியையும் மச்சான் என்று அழைக்கும் பழக்கம் உள்ளதால் இந்த மாற்றம் பொருத்தமாக அமைந்துவிட்டது. இங்கு உறவு முறைப் பெயர்கள் பாடலில் பயின்றுவந்த விதமும் வெவ்வேறு உறவுகளைக் குறிக்கப் பயன்படும் ஒரே உறவுமுறைச் சொல் பாடலில் இடம் பெற்றுள்ள பாங்கும் துணை வடிவம் தோற்றம் பெறக் காரணமாக இருந்திருக்கின்றன. இவ்வாறு கொண்டால் பாடகர் அறியாமல் இந்த மாற்றம் நிகழ்ந்திருக்கிறது எனக் கருத

முடிகிறது அல்லது அண்ணி-கொழுந்தன் உறவு நிலையைக் கூறுவது பண்பற்றது எனக் கருதிப் பாடகர் தெரிந்தே இந்த மாற்றத்தைச் செய்திருக்கவும் வாய்ப்புண்டு.

4.3.1.5. துணை வடிவம்-5 பற்றிக் காணலாம். தருமபுரி மாவட்டத்தில் சி. சி. கதைப் பாடலைப் பாடுமாறு கூறினால் அவர்கள் 'மாட்டுப்பாட்டைப்' பாடுகிறார்கள். இரண்டுமே அண்ணன், தம்பி, அண்ணி தொடர்பான கதைகள். இரண்டிலும் அண்ணி கொழுந்தனுடன் பாலுறவுக்கு முயல்கிறாள். இந்த ஒப்புமை காரணமாக அவர்கள் இரண்டையும் ஒன்றெனக் கருதி ஒரு கணம் குழம்பிய நிலையை நேரில் காண முடிந்தது. இரண்டு பாடல்களையும் கேட்ட பாடகர் இரண்டையும் ஒன்றாக இணைத்துவிட்ட காரணத்தால் இத்துணை வடிவம் தோற்றம் பெற்றது எனக் கூறலாம்.

மேற்கூறிய விளக்கங்களால் துணை வடிவங்கள் தோற்றம் பெற்றதற்கான காரணங்கள் தெளிவாகின்றன. ஒரு கதை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பரவிச் செல்லும்போது அங்கே முன்னரே மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ள ஒதத கதைகளோடு இணைவதுண்டு என்பதையும் இந்த விளக்கங்கள் தெளிவுபடுத்துகின்றன. இதனை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்குப் பாடல் வடிவம் பெரிதும் உதவுகிறது.

4.4. தோன்றிய இடமும் பரவிய வழிகளும்

சி.சி. கதைப்பாடல்/கதை தோன்றிய இடத்தை ஆராயத் தொடங்குமுன் முதன்முதலில் தோன்றிய வடிவம் (பாடல்/உரைநடை) எது என்பதைக் காணலாம். சி.சி. கதை முதலில் பாடலாகவே தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்பதையும் பாடல் வடிவமே மக்களிடம் பிரபலமடைந்திருந்தது என்பதையும் களப்பணியில் அறியமுடிந்தது. பாடலைக் கேட்டு அதனை நினைவில் வைத்துக் கொள்ள இயலாதவர்களே கதையை மட்டும் நினைவில் கொண்டு உரைநடையில் கதை கூறினர். (இருவர் மட்டுமே தாங்கள் உரைநடையாகவே கதையைக் கேட்டதாகக் கூறினர். ஏனையோர் தாங்கள் பாடலாகவே கதையைக் கேட்டதாகவும் தங்களுக்குப் பாடலாகப் பாடத்

தெரியாது ஆதலால் உரை நடையில் கதையைக் கூறுவதாகவும் கூறினர்).

இனி, கதைப்பாடல் முதலில் தோன்றிய இடத்தைக் காண முயலலாம்.

மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட சின்னண்ணன் சின்னச் சாமி கதை வடிவத்தை ஒத்த வடிவங்கள் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தேவாரம், கம்பம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலும் சேலம் மாவட்டத்திலும் காணப்படுகின்றன. இப்பகுதிகளில் ஏதேனும் ஒன்றில்தான் இக்கதைப் பாடல்/கதை முதலில் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். இதற்கான வேறு சில ஆதாரங்களைக் காணலாம்.

4.4.1. களப்பணி மற்றும் வரலாற்றுச் சான்றுகள்

சி.சி. கதைப் பாடல்/கதை வடிவங்கள் தமிழகத்தின் ஏழு மாவட்டங்களிலும்[4] தமிழகத்தை ஒட்டிய கேரளப் பகுதிகளிலும் காணப்படுகின்றன என்று முன்னரே கூறப்பட்டுள்ளது.

சி.சி கதைப் பாடல/கதை வடிவங்கள் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தேவாரம், கம்பம் பகுதிகளில் தேவர், பள்ளர் இன மக்களிடம் மிகுதியாகக் காணப்படுகின்றன.

கஜனாப்பாறை (இடிக்கி மாவட்டம், கேரளம்) போன்ற பகுதிகளில் சி.சி. கதைப்பாடல்/கதை வடிவங்கள் வழக்கில் உள்ளன. இவற்றை அறிந்திருக்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் (பெரும்பாலும் தேவர், பள்ளர் இனத்தைச் சேர்ந்தோர்) மதுரை மாவட்டம் கம்பம், போடி, தேவாரம் பகுதிகளிலிருந்து சுமார் முக்கால் நூற்றாண்டுக் காலக்கட்டத்தில் மலைக்குச் சென்று குடியேறியவர்கள் என்றும் தங்கள் ஊர்களிலேயே கதைப் பாடலைக் கற்றுக் கொண்டதாகவும் கூறினர்.

---

4. சேகரிப்புப்பணி நிகழ்த்திய காலக்கட்டத்தில் உள்ள மாவட்டக் கணக்கு இங்கே குறிப்பிடப்படுகிறது. தற்போது பல புதிய மாவட்டங்கள் தோன்றியுள்ளதால் இக்கணக்கு மாறுபடலாம்.

அடுத்து, தேக்கடி மலை மன்னான் பழங்குடிகளிடம் மிக மிக அருகிய நிலையில் (ஓரிருவர் மட்டுமே அறிந்திருந்தனர்) சி.சி. கதைப்பாடல் வழக்கிலுள்ளது. கம்பம், தேவாரம் பகுதியிலிருந்து அங்குச் சென்று குடியேறிய மக்கள் வாயிலாக மன்னான்களிடம் இப்பாடல் பரவியிருக்கலாம். மன்னான்களின் வரலாற்றைப் பற்றிய பின்வரும் செய்தி இங்கு நோக்கத் தக்கது.

> 'மதுரையிலிருந்து வரும்போது கம்பம் என்னும் ஊருக்கு வந்து சில காலம் தங்கிப் பின்னர் 'கம்பம் மேடு' எனும் மலைவழி கேரளப் பகுதிக்கு வந்து பூஞ்சாறு ராஜாவுடன் இணைந்துகொண்டதாக இவர்கள் வரலாறு கூறுகின்றனர்' (டாக்டர் நசீம்தீன், 1977:182).

இச் செய்தி மன்னான் பழங்குடிகளுக்கும் கம்பம் பகுதி மக்களுக்கும் இருக்கும் தொடர்பை அறிந்து கொள்ள உதவுகிறது. எப்படியாயினும் தேவாரம், கம்பம் பகுதியிலிருந்து சி.சி. கதைப் பாடல்/கதை மன்னான்களிடம் பரவியிருக்கலாம் என்று கருத இடமுள்ளது.

இவற்றிலிருந்து மதுரைமாவட்டம் தேவாரம், கம்பம் போன்ற பகுதிகளிலிருந்து சி.சி. கதைப்பாடல்/கதை தமிழகத்தையொட்டிய கேரளப் பகுதிகளுக்குப் பரவிச் சென்றிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

இனி, சேலம் பகுதியிலிருந்து பிற பகுதிகளுக்குப் பரவிச் சென்றதைப் பற்றிக் காணலாம். சேலம் மாவட்டம் மேட்டூர் அணைப் பகுதியில் வன்னியக் கவுண்டர்களிடம் சி.சி. கதைப் பாடல்/கதை வடிவங்கள் மிகுதியாக வழங்கப்படுகின்றன.

சேலம் மாவட்டம் சின்னதண்டா என்னும் ஊரில் லம்பாடி இன மக்கள் சி.சி. கதைப்பாடலைப் பாடினர். இவர்கள் அப் பகுதியில் வன்னியக் கவுண்டர்கள் பாடக் கேட்டு அறிந்ததாகக் கூறினர்.

தருமபுரி மாவட்டத்தில் அண்ணன், தம்பி, அண்ணி தொடர்புடைய கதைப்பாடலைப் பாடுமாறு/கதையைக் கூறுமாறு

மக்களிடம் கேட்டபோது அவர்கள் பெரும்பாலும் 'மாட்டுப் பாட்டு' என்ற கதைப்பாடலையே பாடினர். சில இடங்களில் இக் கதைதையைக் கூறினர். ஆனால் சி.சி. கதைப்பாடலை மிக அருகிய நிலையிலேயே அறிந்திருந்தனர். மாட்டுப் பாட்டிலிருந்து வேறு பிரித்துச் சுட்ட சி.சி. கதைப்பாடலை (அதில் மான் இடம் பெறுவதால்) 'மானுப்பாட்டு' என்றனர். சி.சி. கதைப் பாடல் பற்றிக் கேட்டபோது அக்கதைப்பாடலை, சேலம் மாவட்டப் பகுதியிலிருந்து தருமபுரி மாவட்டத்திற்கு வந்த ஒருவர் (வன்னியக்கவுண்டர் இனத்தைச் சேர்ந்த முதியவர்) சுமார் முப்பது ஆண்டுகளுக்குமுன் உடுக்கை அடித்துப் பாடுவார் என்றும் பூர்வீகமாக அங்கு வசிப்பவர்கள் சி.சி. கதைப்பாடல்/கதையை அறியமாட்டார்கள் என்றும் கூறப்பட்டது[5]. இச் செய்தி, சி.சி. கதைப்பாடல்/கதை சேலம் மாவட்டத்திலிருந்து தருமபுரி மாவட்டத்திற்குப் பரவியது என்பதைத் தெரிவிக்கிறது.

வறட்சியான காலங்களில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்கள் குடும்பம் குடும்பமாக அண்டை மாவட்டங்களுக்குத் தொழில் தேடிச் செல்வதை இன்றும் காணமுடிகிறது. தஞ்சை மாவட்டக் கொள்ளிடக் கரையோரப் பகுதிகளிலும் தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம், கடலூர் வட்டப் பகுதிகளிலும் அவர்கள் வேலை தேடி வருவதை இந்த ஆய்வாளரே கண்டிருக்கிறார். அவ்வாறு தொழில் தேடி வருவோர் தொழிற் களங்களில் பாடுதல் அல்லது சொல்லுதல் வாயிலாக சி.சி. கதைப்பாடல்/கதை அவர்களோடு இணைந்து பணிபுரியும் தஞ்சை, தென்னார்க்காடு மாவட்ட விவசாயத் தொழிலாளர்களிடம் பரவியிருக்கலாம். இம்மாவட்டங்களின் விவசாயத் தொழிலாளர்களான அரிசனங்களிடம் மட்டுமே சி.சி. கதைப்பாடல்/கதை வடிவங்கள் பரவியுள்ளன என்பதை இங்குக் கருதிப் பார்க்க வேண்டும். இம்மாவட்டத்தைச் சேர்ந்த பெண்களிடம் மிக அருகிய நிலையில் வழக்கிலுள்ள இக்கதைப் பாடல்/கதையை அவர்கள் தங்கள் மூத்த தலைமுறையிடமிருந்து கற்றுக் கொண்டதாகக் கூறினர். எனவே, இக்கதைப்பாடல்/

5. கூறியவர்: திரு முருகேசன், 37, எம்.ஏ., மாம்பாடி, வேப்பம்பட்டி-அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்.

கதை பரவல் சுமார் முக்கால் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்கலாம்.

பெரியார் மாவட்டத்தில் மிக அருகிய நிலையில் தெலுங்குச் சக்கிலியர்களிடம் (மற்றும் குறவர்களிடம்) சி.சி. கதைப்பாடல் காணப்படுகிறது. ஒருவர் தன் தாயார் கூறக்கேட்டு கற்றுக் கொண்டதாகக் கூறினார். ஏனையோர் எந்த ஊரிலிருந்து கற்றுக் கொண்டார்கள் என்பதை அவர்களால் சரியாகக் கூற இயலவில்லை. இக் கதைப்பாடல்/கதை வழங்கும் பகுதி சேலம் மாவட்டம் மேட்டூரை ஒட்டி உள்ளதால் அங்கிருந்து இங்குப் பரவியிருக்க வாய்ப்பிருக்கிறது.

வடார்க்காடு மாவட்டத்திலும் மிக அருகிக் காணப்படும் சி.சி. கதைப்பாடல் சேலத்திலிருந்து நேரடியாகவோ, தென்னார்க்காடு, தருமபுரி, மாவட்டங்கள் வழியாகவோ பரவிச் சென்றிருக்கக் கூடும்.

மேற்கூறப்பட்ட செய்திகளிலிருந்து சி.சி. கதைப்பாடல், கதை மதுரை மாவட்டம் கம்பம், தேவாரம் பகுதிகளிலிருந்தும் சேலம் மாவட்டம் மேட்டூர் பகுதியிலிருந்தும் பிற இடங்களுக்குப் பரவியது என்பதை அனுமானிக்க முடிகிறது.

4.4.2. அகச்சான்றுகள்

மேற்கூறப்பட்ட இரண்டு இடங்களுள் ஏதேனும் ஓரிடத்தில்தான் சி.சி. கதைப்பாடல் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்று அனுமானிப்பதற்கு வேறு சில அகச்சான்றுகளையும் கூறலாம்.

நேரம் பார்த்தல் (அ2ஜி), ஆயுதம் தயார் செய்தல் (அ4.1ஜி), கட்டுச்சோறு கட்டல் (அ6), காடு செல்லல் (ஆ), விலங்குகளைக் காணல் (உ), வில்லம்பு-அங்குவடி-குத்துவடி-குண்டுமருந்து (எ) போன்ற ஆயுதங்கள் பற்றிய செய்திகள், வனத்திலுள்ள முள் கிழித்தல் (ப1.2எச்,ஜே), காடுகட்டிக்குந்துதல் மற்றும் மான்களை ஓட்டி வருதல் (ன,கச), அம்புவிடல் (கஞ), வேட்டைப் பொருளுக்கு முக்கியத்துவம் தரல் (கம1ஜே; கய1.1டி,யு,1.2ஜி), வேட்டையாடித் திரும்புவோரை வரவேற்றல் (கர), இறைச்சியைப்

பங்கிடுதல் (கல$_2$ஜி), உறவினர்களுக்குத் தரல் (கவ1.1டி-ஒய், 1.2ஜி), இறைச்சி சமைத்தல் (கழ1.1வி,ஒய்) போன்ற வேட்டைத் தொடர்பான மற்றும் வேடுவர்களின் வாழ்க்கைத் தொடர் பான செய்திகள் சி சி. கதைப்பாடல்/கதை வடிவங்களில் மிக விரிவாகப் பேசப்படுகின்றன. இந்தச்செய்திகள், இக்கதை வேட்டைச் சமுதாயத்தில் தோற்றம் பெற்றது என்பதை உறுதி செய்யப் போதுமானவை. காட்டுக்கு வேட்டையாடச் சென்றதாகப் பெரும்பாலான கதைப் பாடல்/கதைகள் கூறுகின்றன. மான், கரடி, புலி, சிங்கம், யானை முதலிய காட்டு விலங்குகள் (உ), இண்டமுள் (ப1.2எச்), காரை முள், சூரைமுள் (ப1.2ஜே) போன்ற காட்டு முட்செடி கள், ஊனாங்கொடி (கய1.1ஆர்) போன்ற கொடி, பலா (உ1ஜே) மூங்கில் (கச1.1எம்,வி) சந்தன குங்கும மரங்கள் (கய1.1ஓய்) போன்ற பல காட்டு மரங்கள் முதலியன பாடல்/கதைகளில் இடம்பெறுகின்றன. சிலவற்றில் (ஆ1.1எஸ்,1.2, உ1எம், ஐ1எச) மலை பற்றியும் குறிப்புகள் வருகின்றன. இவற்றைக் கொண்டு காடு, மலை சார்ந்த பகுதியில் கதை தோற்றம் பெற்றிருக்கும் என்று ஊகிக்க முடிகிறது. தற்போது கதைப்பாடல்/ கதை வழங்கும் இடங்களை நோக்கினால் கஜனாப்பாறை (கேரளம்), தேக்கடி (கேரளம்), கம்பம், தேவாரம் பகுதிகள் (மதுரை மாவட்டம்), சேலம், தருமபுரி மாவட்டங்களில் இத்தகைய நில அமைப்பு காணப்படுகிறது. இவற்றுள் கம்பம், தேவாரம் பகுதி களிலிருந்துதான் கேரளப்பகுதிகளுக்குக் கதைப்பாடல்/கதை பரவிச் சென்றிருக்க வேண்டும் என்றும் சேலம் பகுதியிலிருந்து தான் தருமபுரி பகுதிக்குப் பாடல் பரவிச் சென்றது என்றும் முன்னரே கூறப்பட்டது. எனவே, கம்பம், தேவாரம் பகுதி களும் சேலம் மாவட்டப் பகுதியும் எஞ்சுகின்றன. இப்பகுதி களில் இன்றும் அருகிய நிலையில் சிறு வேட்டைகள் நடக் கின்றன என்பதை அப்பகுதிகளைச் சேர்ந்த தகவலாளர்கள் உறுதிப்படுத்தினர். இச்சான்றுகள் சி.சி. கதைப்பாடல் முதன் முதலில் இப்பகுதிகளில் ஏதேனும் ஒன்றில் தோன்றிப் பரவி யிருக்க வேண்டும் என்ற அனுமானத்திற்கு வர உதவுகின்றன.

4.4.3. இனி, இந்த இரண்டு பகுதிகளில் எது சி.சி. கதைப்பாடல் தோன்றிய பகுதியாக இருக்க முடியும் என்று ஆராயலாம்.

ஒரு கதைப்பாடல் அல்லது கதை எவ்வளவுக்கெவ்வளவு அதிக தூரம் பரவிச் செல்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதில் மாற்றங்கள் காணப்படும் என்னும் கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு இதற்கு விடைகாண முயலலாம். மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட கதை வடிவத்திலிருந்து மாறுபட்ட வடிவங்கள் அதாவது துணை வடிவங்கள் சேலம், பெரியார், தென்னார்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் கிடைக்கின்றன. இதிலிருந்து மதுரைமாவட்டம் தேவாரம், கம்பம் பகுதியில் முதன் முதலில் தோற்றம் பெற்ற சி.சி. கதைப்பாடல் பின்னர் சேலம் மாவட்டம் மேட்டூர் பகுதிக்குப் பரவி அங்கிருந்து பிற இடங்களுக்குப் பரவியிருக்க வேண்டும் என்று அனுமானிக்க முடிகிறது. கம்பம், தேவாரம் பகுதியிலிருந்து மேட்டூர் பகுதிக்கு மக்கள் சென்றனரா அல்லது மேட்டூர் பகுதியிலிருந்து கம்பம், தேவாரம் பகுதிக்குச் சென்றனரா? ஏன் சென்றார்கள்? எக்காலத்தில் சென்றார்கள்? இந்த இரு பகுதிகளுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதிகளில் இக்கதைப்பாடல்/கதைவடிவங்கள் வழக்கிலுள்ளனவா என்பன போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டும். அந்த விவரங்கள் கிடைக்கும் வரை சி.சி. கதைப்பாடல் கம்பம், தேவாரம் பகுதியில் முதன் முதலில் தோன்றிப் பிற இடங்களுக்குப் பரவியது என்னும் கருத்தைத் தற்காலிகமாக நாம் ஏற்றுக் கொள்ளலாம்.

4.5. தோன்றிய காலம்

சி.சி. கதைப்பாடல்/கதை ஏட்டிலக்கியங்கள் எதிலும் பயின்று வரவில்லை. வாய்மொழி வழக்கில் மட்டுமே உள்ளதாலும் 1975-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் பாடல் வடிவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாலும் தோன்றிய காலத்தைத் துல்லியமாகக் கணிக்க இயலாது. பாடலில் இடம்பெறும் சில குறிப்புகளை நோக்கும்போது பாடல் சமீபத்தில் தோன்றியது என்று கருத முடியவில்லை. சில குறிப்புகளைக் காணலாம்.

4.5.1. பெண் தன் கொழுந்தனின் பிணத்தை வைத்துத் தீ மூட்டும்போது சக்கிமுக்கிக் கல்லைக் கொண்டு தீமூட்டுவதாகச் சில கதைகளில் (சந1.1ஜே,கே) குறிப்புகள் வருகின்றன. கற்களைக் கொண்டு தீ மூட்டும் பழக்கம் பழமையானது. அவள்

தீப்பெட்டியுடன் காட்டுக்குச் செல்வதாகக் கூறும் செய்திகள் (கழ1.1வி,கீ) பிற்காலத்தன. சக்கிமுக்கிக் கல்லின் இடத்தைத் தீப் பெட்டி பிடித்துக் கொண்டது.

4.5.2. அடுத்து, பொதிமாடு பற்றிய செய்திகள். காட்டில் பொதி மாட்டுக்காரர்கள் வருவதாகக் (சத1.1கே,எல்,எம்,1.2ஜி) கூறப் படும் செய்திகள் நோக்கத் தக்கவை. முற்காலத்தில் தானியங்கள் மற்றும் பொருட்களை ஏற்றிச் செல்ல மாடுகள் பயன்படுத்தப் பட்டன. குறிப்பாக வண்டிகள் செல்ல இயலாத காட்டுப் பகுதிகளில் மாடுகளே பயன்படுத்தப்பட்டன எனத் தெரிகிறது. சுமார் ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு முன் தென்னார்க்காடு மாவட்டப் பகுதிகளில் இப் பழக்கம் இருந்ததாக வாய்வழிச் செய்தியால் அறியமுடிந்தது. பொதி ஏற்றிச் செல்லப் பயன் படுத்தப்படும் மாடு பொதி மாடு என்று அழைக்கப்பட்டது. பொதி மாட்டை ஓட்டிச் செல்வோர் பொதி மாட்டுக்காரர்கள் எனப்பட்டனர். இப்பழக்கம் தற்போது முற்றிலும் மறைந்து விட்டதால் அதனை அறியாத பாடகர்கள் பொதிமாட்டுக் காரர்கள் என்பதை வண்டிக்காரர்கள் என்று மாற்றிப்பாடு கின்றனர். இது பிற்கால மாற்றம்.

இதைத் தவிர, பழமையான வேட்டைச் சமுதாயத்தைப் பற்றிய செய்திகள், வில்லம்பு போன்ற ஆயுதங்கள் பற்றிய செய்திகள் முதலியன கதைப்பாடல் மிகப் பழைய சமுதாயத் தில் தோன்றியிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. குண்டு மருந்து போன்ற வேட்டைக் கருவிகள் (எ1என்) பிற் காலத்தில் கதைப்பாடலில் இடம்பெற்றிருக்க வேண்டும்.

இச் சான்றுகள் கதைப்பாடல் தோன்றிய காலம் பழமை யானது என்பதைப் புரிந்து கொள்ள உதவுகின்றனவேயொழிய சரியாக இந்தக் காலம்தான் என்பதை வரையறுக்க உதவ வில்லை.

தகவலாளர்கள் அளித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கினால் தென்னார்க்காடு, தஞ்சை மாவட்டங் களில் சுமார் முக்கால் நூற்றாண்டுக்கு முன்னரே சி.சி. கதைப்

பாடல்/கதை பரவியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரமுடிகிறது. (இக்கருத்து முன்பே கூறப்பட்டது). தோன்றிய இடத்திலிருந்து பரவி வந்த நில வழிகளைக் கணக்கிட்டு இக்கதைப் பாடலின் தோற்றக் காலத்தை ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்டது என்று தற்காலிகமாக நிருணயிக்கலாம்.

5. இந்த ஆய்வுக்கான ஒரு பின்னுரை

சி. சி. கதைப்பாடல் பற்றிக் குறிப்பிடும்போது ச. வரத ராசுலு (1979:238-39) 'தருமபுரி மாவட்டம் அரூர் வட்டாரப் பகுதிகளில் ஒரு பிரிவினரிடையே அண்ணன் மனைவிக்கும் தம்பிமார்களுக்குமிடையில் பாலுறவுகள் சென்ற தலைமுறை வரை அனுமதிக்கப்பட்டன ... இங்குக் கூறப்பட்டுள்ள கதைப் பாடலில் அண்ணன் மனைவிக்கும் தம்பிக்கும் இடையிலான உறவுகள் பற்றிய பழைய சமூக மதிப்புகள் தகர்ந்து புதிய மதிப்புகள் இடம்பெறுவதைக் காணலாம்' என்னும் கருத்தினைக் கூறுகின்றார். சகோதரப் பலகணவ மணம் (fraternal polyandry) நடைமுறையில் இருந்து பின்னர் மாற்றம் பெற்றதையே அவர் இங்குச் சுட்டுகின்றார். பழந்தமிழ் இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு நாம் கூறிவரும் தமிழர் பண்பாடு குறித்த கருத்துகளுக்கு மாறுபட்ட இக் கருத்து உண்மையானதுதானா என்று கண்டறியும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது. உண்மையானதாக இருக்கலாம் என்பதற்கான சில ஆதாரங்கள் கிடைத்தன (ஆறு. இராமநாதன், 1982:63-70). அக் கருத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளவும் உண்மையானது தான் எனில் அது தமிழகத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு மட்டுமே உரிய பழக்கமா அல்லது தமிழகம் முழுவதற்குமுரிய ஒரு பழக்கமா அல்லது தமிழகத்தின் ஒரு பகுதிக்கு மட்டுமே உரிய பழக்கமாக இருந்து தமிழகம் முழுதும் பரவிய பழக்கமா, பழங்காலத்தில் நடைமுறையில் இருந்து இன்று மாறியுள்ள பழக்கமா அல்லது தற்போதும் நடைமுறையில் உள்ள பழக்கமா என்பன போன்ற ஐயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்கு முதலில் சி.சி. கதைப் பாடல்/கதையின் பழைய வடிவம், அது தோன்றிய இடம், தோன்றிய காலம், பரவிய வழி, பரவியுள்ள நிலப்பகுதி, கதை வடிவங்களில் காணப்படும் மாற்றங்களுக்கான காரணங்கள் போன்ற விவரங்களை அறிந்துகொள்ள வேண்டும். வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை மேற்கண்ட விவரங்களை அறிந்து

கொள்ள உதவுமாதலால் சி. சி. கதைப்பாடல்/கதை வடிவங்களை அம்முறையில் ஆராய முடிவு செய்யப்பட்டது.

நாட்டுப்புற இலக்கியங்களுக்கும் அவை வழங்கப்படும் மக்களின் பண்பாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. படகர் கதை ஒன்றில் அண்ணியை மணந்து கொள்ளும் ஆசையால் அண்ணனைக் கொல்கிறான் தம்பி; தான் கொல்லப்படுவோம் என்பதை முன்னரே அறிந்த அண்ணனின் சொற்படி அவன் மனைவி அவனுடன் சேர்ந்து இறக்கிறாள்.[6] இக் கதை வழங்கப் படும் படகர்களிடம் அண்ணன் இறந்து விட்டால் அவன் மனைவியைத் தம்பி மணந்து கொள்ளலாம் என்ற பழக்கம் காணப்படுகிறது. இப்பழக்கம் இல்லாத ஒரு சமுதாயத்தில் இது போன்ற கதை தோன்றாது.

தமிழகத்தில் அண்ணி கொழுந்தன் பாலுறவு குறித்த பல பாடல்களும் கதைகளும் வழங்கப்படுகின்றன. 'பூசாமணி கதைப்பாடல்' இத்தகையதொரு கதையையே கூறுகிறது. தம்பி தன் மனைவியோடு தொடர்பு கொண்ட செய்தியை அறிந்து அண்ணன் தம்பியைப் பலர் முன்னிலையில் அடிக்க, அவ மானம் தாங்காமல் தம்பி தற்கொலை செய்து கொள்வதாக இக் கதைப் பாடல்கதை அமைந்துள்ளது.[7] இராமன் லெட்சு மணனையும் சீதையையும் சந்தேகிப்பதாக அமைந்த கதை கூட இதனோடு ஒத்ததே.[8] இவை எல்லாம் தமிழகத்தின் பல பகுதி களிலும் இத்தகைய கதைகள் வழங்கி வருகின்றன என்பதைத் தெளிவு படுத்துகின்றன.

சி. சி. கதையைப் பொறுத்த வரை அது தமிழகத்தின் பல பகுதிகளுக்குப் பரவிச் சென்றுள்ளதை ஆய்வு தெளிவுபடுத்து கின்றது. இக்கதை வழங்கப்படும் சாதியினரிடையே ஒரு

---

6. கூறியவர்: கே. பி. செவனாகவுடர், 70, படகர், 9-ஆம் வகுப்பு, கட்ட பெட்டு, கோத்தகிரி வட்டம், நீலகிரி மாவட்டம், 6.3.84.
7. பாடியவர்: சரஸ்வதி, 17, அரிசன், படிப்பு இல்லை, காட்டுநெமிலி, உளுந்தூர்ப்பேட்டை வட்டம், தெ. ஆ. மா., 9.1.84.
8. 2.11.82 அன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பகல் வேட நிகழ்ச்சியில் இக்கதை கூறப்பட்டது.

வகையான பண்பாட்டுத் தொடர்பு காணப்படுகிறது. அதாவது இக் கதை வழங்கப்படும் சாதிகளில் மணவிலக்கு, மறுமணம் போன்ற பழக்கங்கள் அனுமதிககப்படுகின்றன. ஆயினும் இன்றைய நடை-முறை வாழ்க்கையில் இச் சாதியினரிடையே சகோதரப் பலகணவ மணம் (fraternal polyandry) காணப்படவில்லை. அதே நேரத்தில் அண்ணி-கொழுந்தன் பாலுறவு அக்கதை வழங்கப்படும் சமுதாயத்தில் மறைமுகமாகக் காணப்படுகிறது. களப்பணி சென்ற ஊர்களிலெல்லாம் இரகசியமாகப் பலரும் இதனை ஒப்புக் கொண்டனர். பலர் முன்னிலையில் பேசும் போது அப்பழக்கத்தை மறைக்கின்றனர். இதற்குக் காரணம் பண்பாட்டு மாற்றம். இன்றைய நிலையில் அத்தகையதொரு உறவு பண்பாட்டுக்கு மாறுபட்டதாகக் கருதப்படுகிறது. அண்ணி தாய்க்குச் சமமானவளாகக் கூறப்படுகிறாள். இது சி. சி. கதைப்பாடல்/கதையிலும் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது (ஆ1. 1 என், ஆர்; ட 1ஜி, ஜே-எல்). கதைப்பாடல்களில் அண்ணி கொழுந்தன் பாலுறவுகூட வெளிப்படையாகக் கூறப்படாமல் மறைமுகமாகவே கூறப்படுகின்றன. இதற்கு மாறுபாடாகச் சேலத்துக்கு அருகிலுள்ள செலவடை என்னும் ஊரில் வன்னியக்கவுண்டர் இனத்தைச் சேர்ந்த 80 வயது முதியவர் ஒருவர் (காண்க:இ.3:17 குறிப்பு) அண்ணன் தம்பியைக் கொன்றது தவறு என்றும் தம்பி தன் மனைவியோடு கொண்டிருந்த தொடர்பைக் கண்டும் காணாமலும் இருந்திருக்க வேண்டும் என்றும் கூறினார். தங்கள் காலத்தில் அப்படித்தான் இருப்பார்கள் என்றார். இதனை இன்றைய தலைமுறையினர் ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. இன்றைய தலைமுறையினரிடம் சி.சி. கதைப்பாடல்/கதையின் செல்வாக்கு குறைந்து வருவதற்கும் இப்பண்பாடு மாற்றமே காரணமாகலாம்.

தேவாரத்திற்கு அருகிலுள்ள மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த பள்ளர் வகுப்பினர் ஒருவர் (காண்க:இ.3:4. குறிப்பு) அண்ணி-கொழுந்தன் உறவை நியாயப்படுத்திப் பேசினார்.

இக் கருத்துரைகள் எல்லாம் வன்னியக்கவுண்டர், பள்ளர் இன மக்களிடம் சகோதரப் பலகணவ மணம் நடைமுறையில்

இருந்தது என்பதை உறுதியாகக் கூறப் போதுமானவை அல்ல. அதே நேரத்தில் அப்பழக்கம் அவர்களிடையே இருந்திருக்கலாமோ என்னும் ஐயத்தை ஏற்படுத்துவனவாக உள்ளன.

சி.சி. கதைப்பாடல் தோன்றியதாக அனுமானிக்கப்பட்ட கம்பம், தேவாரம் பகுதியிலும் அக்கதைப்பாடல் அதிகமாக வழங்கப்படும் சேலம் மாவட்டப் பகுதியிலும் தீவிரமாகக் களப்பணி மேற்கொண்டால் இது குறித்து ஒரு முடிவுக்கு வர இயலும்.

இணைப்பு

இணைப்பு: 1.1

* களப்பணி சென்ற ஊர்கள்



** களப்பணி சென்ற ஊர்களின் வரிசை எண்கள் படத்தில் தரப்பட்டுள்ளன. விவரங்கள் இணைப்பு - 1.3இல்.*

இணைப்பு: 1.2

சி.சி. கதைப்பாடல்/கதை சேகரிக்கப்பட்ட இடங்கள்

(வரிசை எண்கள் இணைப்பு - 3இல் உள்ளபடி)



இணைப்பு : 1.3
களப்பணி சென்ற ஊர்கள் பற்றிய விவரங்கள்

1. வேட்டங்குடி

சீர்காழியிலிருந்து திருமுல்லைவாசல் செல்லும் பேருந்தில் 8 கி.மீ. தூரம் சென்று எடமணல் என்னும் ஊரில் இறங்கி சற்றுதூரம் நடந்தால் இந்தச் சிற்றூரை அடையலாம். எடமணலைச் சேர்ந்த திரு நா.செல்வராஜ் (தற்போது தமிழ்ப் பல்கலைக் கழக இலக்கியத் துறையில் பணிபுரிகிறார்) களப் பணிக்குப் பெரிதும் உதவினார். 27.9.83, 28.9.83 ஆகிய இரு நாள்கள் இங்கே களப்பணி நிகழ்த்தப்பட்டு ஒரு மூதாட்டியிட மிருந்து உரைநடையாகக் கதை சேகரிக்கப்பட்டது.

2. சிதம்பரம்

சேலம் மாவட்டம் சின்னதண்டா என்னும் ஊரில் வசிக்கும் லம்பாடிகளிடம் பதிவு செய்யப்பட்ட பாடலைத் திரு இராதா கிருட்டிணன் (ஆய்வாளர், மொழியியல் துறை, அண்ணா மலைப் பல்கலைக் கழகம்) தந்துதவினார். 29.9.83 அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழக நண்பர்களுடன் இக்கதைப் பாடல் பற்றிய விவரங்களைக் கேட்டபோது இக்கதைப்பாடல் கிடைத்தது.

3. கம்பம்

தஞ்சையிலிருந்து திருச்சி, திண்டுக்கல் வழியாகக் கம்பம் என்னும் சிறுநகரைச் சென்றடையலாம். 15.10.83 அன்று இப் பகுதிக்குச் சென்றேன். சி.சி. கதைப்பாடல்/கதை பற்றிய செய்தி கிடைக்கவில்லை. பின்னர் தேவாரத்தில் திரு பவுன்துரையின் தாயார் கூற்றுப்படி இவ்வூரில் அக்கதைப்பாடல் பாடுவோர் உள்ளதாக அறிந்து கொள்ள முடிந்தது.

4. காமயக்கவுண்டன்பட்டி

கம்பத்திலிருந்து 3 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள இவ்வூரில் திரு பவுன்துரை (அருங்காட்சியகம், தமிழ்ப்பல்கலைக் கழகம்)

அவர்களின் உதவியோடு திரு கூழுத்தேவர் வீட்டில் தங்கிக் கொண்டு 15, 16.10.83 ஆகிய தேதிகளில் களப்பணி மேற் கொள்ளப்பட்டது. சி.சி.கதைப்பாடலோ கதையோ கிடைக்க வில்லை.

5. தேவாரம்

கம்பத்திலிருந்து 18 கி.மீ. தூரத்திலுள்ள இச்சிறு நகரில் 16.10.83 அன்று பகலில் திரு பவுன்துரையின் தாயார் சி.சி. கதையை நினைவு கூர்ந்தார்.

6. மீனாட்சிபுரம்

தேவாரத்திலிருந்து தென்மேற்கே 2 கி.மீ. தூரம் நடந்தால் இவ்வூரை அடையலாம். தேவாரத்தைச் சேர்ந்த திரு இன்ப ராஜ், திரு பவுன்துரை ஆகியோரின் உதவியுடன் 16.10.83 அன்று பிற்பகல் இவ்வூரின் பள்ளர் வகுப்பாரிடம் களப்பணி மேற்கொள்ளப்பட்டது. இருவர் பாடலாகவும் இருவர் உரை நடையாகவும் சி.சி. கதையைக் கூறினர். பலரும் அறிந்திருந்த னர். பக்கத்து ஊர்களிலும்கூட இக் கதை பிரபலமாக உள்ளது என்பதை அறிந்துகொள்ள முடிந்தது.

7. கஜனாப்பாறை

போடிநாயக்கனூரிலிருந்து போடிமெட்டு, பூப்பாறை வழி யாக 60 கி.மீ. சென்றால் இந்த மலைக் கிராமத்தை அடைய லாம். கேரளாவைச் சேர்ந்த இந்த ஊர் அமைந்திருக்கும் பகுதி 'மேகமலை வட்டாரம்' என்றழைக்கப்படுகிறது.பூப்பாறை வரை பேருந்து வழி உண்டு. அதன் பிறகு ஜீப் அல்லது வாடகைக் காரில் செல்லவேண்டும். இங்குள்ள சுமார் 2000 மக்களுள் பெரும்பாலோர் தமிழர்கள். மதுரை மாவட்டத்தின் பல பகுதி களிலிருந்தும் மலைத் தோட்டத் தொழில் செய்ய இங்கு வந்து குடியேறியோர். தேவர் இனத்தைச் சேர்ந்த ஒருவர் பாடலாக வும் ஒருவர் கதையாகவும் (சி.சி. கதையைக்) கூறினர். இவர் கள் முறையே போடிநாயக்கனூர் அருகிலுள்ள எஸ். தருமத்துப் பட்டியிலிருந்து 30 ஆண்டுகளுக்கு முன்னும் திருமங்கலம் வட் டம் நல்லதேவன்பட்டி (உசிலம்பட்டி அருகில்) யிலிருந்து 23

ஆண்டுகளுக்கு முன்னும் குடியேறியோராவர். தேவாரத்தி லிருந்து இங்கு வந்து குடியேறிய திரு பி. வி. ஆர். நடராஜன் என்பவர் (வயது 62, தேவாங்கச் செட்டியார்) தன் சிறு வய தில் தேவர் இனத்தவர்கள இப்பாடலைப் பாடியதைக் கேட்டி ருப்பதாகக் கூறினார். இவ்வூரின் ஏலக்காய் வியாபாரியான திரு அய்யாதுரை என்பவர் களப்பணிக்குப் பெரிதும் உதவி னார்.

8. கோமாளிக்குடி

கஜனாப்பாறையிலிருந்து மூன்று கி.மீ. ஏற்ற இறக்கமான மலைப்பாதையில் நடந்து சென்றால் (எதிர்பாராமல் ஜீப் கிடைத்து 5 கி. மீ. சென்றால்) இந்த ஊரை அடையலாம். பாண்டிய நாட்டிலிருந்து (மதுரையிலிருந்து) கண்ணகியம்மாள் கலகத்தின் போது இங்கு வந்து குடியேறியதாகக் கூறிக் கொள் ளும் முதுவான் பழங்குடிகளின் இக் குடியிருப்பில் சுமார் 250 பேர் வசிக்கின்றனர். சி. சி. கதையை இவர்கள் அறிந்திருக்க வில்லை. நிட்டூரி கதையையும் சில பாடல்களையும் கூறினர். திரு அய்யாதுரையே இவ்வூர் களப்பணிக்கும் உதவிபுரிந்தார்.

9. மதுரை

மதுரை திருமலை காலனியில் ஒருவர் சி. சி. கதை கூறி னார். ஐயத்திற்கிடமானதாக இருந்தது. இக் கதை தோன்றிய இடம் என்று அவர் தந்த தகவலடிப்படையில் துத்திக்குளம் என்னும் கிராமத்திற்குச் சென்றேன்.

10. துத்திக்குளம்

மதுரையிலிருந்து மானாமதுரை செல்லும் வழியில் 36 கி மீ. பேருந்தில் சென்றால் முத்தனேந்தல் என்ற ஊரையடையலாம். இங்கிருந்து 2 கி. மீ. தூரம் நடந்து அல்லது மிதிவண்டியில் சென்றால் இவ்வூரை அடையலாம். இவ்வூரிலோ சுற்றுப்புற ஊர்களிலோ சி. சி. கதை வழங்கப்படவில்லை.

11. இரண்டெல்லைபாறை

திண்டுக்கல்லிலிருந்து நத்தம் செல்லும் சாலையில் 6 கி.மீ. தூரம் பேருந்தில் சென்றால் ரெட்டியபட்டி என்னும் ஊரை

அடையலாம். அங்கிருந்து சுமார் 1 கி.மீ. தூரம் நடந்தால் இவ்வூரை அடையலாம். இவ்வூரில் சி. சி. கதை வழங்கப் படுவதாகத் தரப்பட்ட தகவல் சரியானதன்று என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

12. அரசகுழி

விருத்தாசலத்திலிருந்து நெய்வேலி செல்லும் சாலையில் 10 கி.மீ. தூரத்தில் அமைந்திருக்கும் அரசகுழி என்னும் ஊரில் சி. சி. கதைப்பாடல் தெரிந்த மூதாட்டி இருப்பதாகக் கூறப் பட்டது. எனவே, அவரை 11.1.84 அன்று சந்தித்துப் பேசிய போது அவர் அக்கதைப்பாடல்/கதையை அறிந்திருக்கவில்லை என்பதையும் அப்பகுதியில் வேறு யாரும் இக் கதையை அறிந்தவர்கள் இல்லை என்பதையும் அறியமுடிந்தது.

13. காட்டு நெமிலி

உளுந்தூர்ப்பேட்டையிலிருந்து விருத்தாசலம் செல்லும் பேருந்துச் சாலையில் 5 கி.மீ. தூரத்தில் உள்ளது இச்சிற்றூர். இவ்வூரில் என்னுடைய பிஎச்.டி. ஆய்வுக்காக 1976-இல் களப் பணி மேற்கொண்ட போது பல அரிய பாடல்களைப் பாடும். அரிசனப் பெண்களைச் சந்தித்தேன். அவர்களிடம் சி.சி. கதைப் பாடல்/கதை கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில் 9.1.84 அன்று இவ்வூர் சென்றேன். இக் கதைப்பாடல்/கதை கிடைக்கவில்லை. ஆனால், இதனைப் பெரிதும் ஒத்த 'பூசாமணி கதைப் பாடல்' இங்குக் கிடைத்தது.

14. வளையாம்பட்டு

விழுப்புரத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தூரம் பேருந்தில் சென்றால் பேரங்கியூர் என்னும் ஊரை அடையலாம். அங்கிருந்து நடந்தோ சைக்கிளிலோ 3 கி.மீ. சென்றால் இவ்வூரை அடையலாம். என்னுடைய பிஎச்.டி. பட்டத்திற்காக இவ்வூரைச் சேர்ந்த ஒரு மூதாட்டியிடமிருந்து சி.சி. கதைப்பாடலைச் சேகரித் திருந்தேன். எனவே, அவ்வூரிலும் சுற்றுப்புற ஊர்களிலும் கதைப்பாடல் பெருவழக்காக இருக்கக் கூடும் என்ற எண்ணத் தில் 12.1.84 அன்று மீண்டும் இவ்வூரில் களப்பணி மேற்

கொள்ளப்பட்டது. அந்த மூதாட்டியிடம் மீண்டும் அதே கதைப் பாடல் பதிவு செய்யப்பட்டது. பெரிய மாற்றம் எதுவுமில்லை. அந்த ஊரிலோ சுற்றுப்புறங்களிலோ அக்கதைப்பாடல் வழங்கப் படவில்லை என்பதை அறிந்து கொள்ளமுடிந்தது.

15. செல்லங்குப்பம்

கடலூரிலிருந்து சிதம்பரம் செல்லும் சாலையில் 2 கி.மீ. தூரத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரின் அரிசன மக்களி டையே 13.1.84 அன்று களப்பணி மேற்கொள்ளப்பட்டது. நண்பர் டாக்டர் அய்யாசாமி தந்த தகவலடிப்படையில் சி.சி. கதைப்பாடல் தெரிந்த மூதாட்டியை அணுகி அவரிடம் பாடல் பதிவு செய்யப்பட்டது. நண்பர் சேகரித்து அனுப்பிய பாடலி லிருந்து மாறுபட்டிருந்தது. அப்பாடல் அல்லது அக்கதை தெரிந்த யாரும் அவ்வூரிலோ பக்கத்து ஊர்களிலோ இல்லை என்று அம்மூதாட்டி கூறினார்.

16. கோயம்புத்தூர்

கோவை பூ. சா. கோ. கலைக் கல்லூரியில் பயிலும் மாண வர் ஒருவர் சி.சி. கதையை அறிந்திருந்த செய்தியை அக்கல்லூரி தமிழ்த் துறை ஆய்வாளர் திரு செ. பழனிச்சாமி அவர்களின் கடிதம் வாயிலாக அறிந்திருந்த நான், அம்மாணவரைச் சந்தித்து மேற்கொண்டு விவரம் சேகரிப்பதற்கு 2.3.84 அன்று மேற்படி கல்லூரிக்குச் சென்றேன். அவர் கோபிச்செட்டிப்பாளையம் அருகிலுள்ள அக்கரைபாளையம் என்ற ஊரைச்சேர்ந்த பெரிய வர் ஒருவர் சி.சி. கதைப்பாடலைப் பாடுவார் என்ற விவரத் தைத் தந்தார். பல ஊர்களைச் சேர்ந்த மாணவர்களிடம் பேசிப் பார்த்தபோது சி.சி. கதை/பாடல் பற்றிய விவரம் எதுவும் கிடைக்கவில்லை.

17. கோத்தகிரி

நண்பர் மா. பொன்னுசாமி அவர்கள் தந்த தகவலடிப் படையில் 3.3.84 அன்று இவ்வூரில் களப்பணி மேற்கொள்ளப் பட்டது. மறுநாள் காலையில் நடைபெறவிருக்கும் ஒரு படகர் திருமணத்திற்குச் சென்றால் அத்திருமணத்திற்கு வரும் பல

ஊர்களைச் சேர்ந்த பல வயதுடைய படகர் இனமக்களைச் சந்திக்கலாம் என்ற முடிவுடன் திருமணம் நடைபெறும் கெரப் பாடு என்ற ஊருக்குச் செல்ல முடிவு செய்யப்பட்டது.

18. கெரப்பாடு

கோத்தகிரியிலிருந்து குன்னூர், குந்தா வழியாகப் பேருந் தில் 62 கி.மீ. சென்றால் இச்சிற்றூரை அடையலாம். படகர் மட்டுமே இவ்வூரில் வாழ்கின்றனர். 3.3.84 இரவு இவ்வூரில் தங்கி, படகர் இனப் பெரியவர்கள் பலரைச் சந்தித்தேன். 4.3.84 அன்று நண்பகல் வரை பலருடன் பேசிப்பார்த்தபோது யாருக்கும் சி.சி. கதைப்பாடல்/கதை தெரிந்திருக்கவில்லை. இரவு கோத்தகிரி திரும்பினேன்.

19. புதுக்கோத்தகிரி

கோத்தகிரியிலிருந்து 2½ கி.மீ. நடந்தால் (அல்லது 2 கி.மீ. பஸ்ஸில் சென்று ½ கி.மீ. நடந்தால்) இச் சிற்றூரை அடையலாம். பழங்குடிகளான கோத்தர்கள் மட்டுமே இவ்வூரில் வசிக் கின்றனர். இவர்களிடம் 6.3.84 அன்று காலை களப்பணி மேற் கொள்ளப்பட்டது. இவர்களிடம் சி.சி. கதைப்பாடல்/கதை வழங்கப்படவில்லை என்பதை அறிந்துகொள்ள முடிந்தது.

20. கிருஷ்ணாபுதூர்

கோத்தகிரியிலிருந்து 2.கி.மீ. தூரத்தில் புதுக்கோத்தகிரி செல்லும் வழியில் அமைந்துள்ள இச்சிற்றூரில் சமவெளிப்பகுதி யிலிருந்து வந்து குடியேறிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர் கள் மிகுதியாக வசிக்கின்றனர். இவர்கள் அண்ணன்மார் சுவாமி கதையை அறிந்திருந்தனர். சி.சி. கதைப்பாடலை அறிந்திருக்க வில்லை என்பதை 6.3.84 அன்று நண்பகல் இவர்களிடம் மேற் கொள்ளப்பட்ட களப்பணியால் அறிந்து கொள்ள முடிந்தது.

21. கட்டபெட்டு

கோத்தகிரியிலிருந்து 10 கி.மீ. பேருந்தில் சென்றால் இச் சிற்றூரை அடையலாம். படகர்கள் மட்டுமே வாழக்கூடிய இவ் வூரில் 6.3.84 அன்று மாலை களப்பணி மேற்கொள்ளப்பட்டது.

யாரும் சி.சி. கதைப்பாடல்/கதையை அறிந்திருக்கவில்லை. ஒரு பெரியவர் சி.சி. கதையை ஒத்த ஒரு கதையைக் கூறினார்.

22. அக்கரை பாளையம்

கோபிச்செட்டிப் பாளையத்திலிருந்து கொளப்பலூர் வழியாக 10 கி.மீ. பேருந்தில் சென்றால் இச் சிற்றூரை அடையலாம். 7.3.84 அன்று இவ்வூரில் களப்பணி மேற்கொள்ளப் பட்டது. ஒரு முதியவர் சி.சி. கதைப் பாடலைப் பாடினார். கற்றுக்கொண்ட ஊர் பற்றிய விவரத்தை அவரால் கூற இயலவில்லை. அவ்வூர் மக்களின் கூற்றுப்படி அவ்வூரிலோ அவ்வூரைச் சுற்றியுள்ள ஊர்களிலோ இக்கதைப் பாடல்/கதையை அறிந்தவர் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

23. ஆலூத்துப் பாளையம்

ஈரோட்டிலிருந்து 14 கி.மீ. தூரத்திலுள்ள மொடக்குறிச்சிக்கு அருகில் உள்ளது இவ்வூர். இவ்வூருக்கு நேரில் செல்லவில்லை. மொடக்குறிச்சி மேல்நிலைப் பள்ளியில் பணிபுரியும் புலவர் சிவ. ஆறுமுகம் அவர்கள் தகவலாளரை மொடக்குறிச்சிக்கே வரவழைத்திருந்தார். 9.3.84 அன்று காலை அவரிடமிருந்து கதை பதிவு செய்யப்பட்டது. அவரைத் தவிர அக்கதையை அறிந்தவர்கள் அப்பகுதியில் இல்லை என்று அறிய முடிந்தது.

24. விளக்கேத்தி கரட்டாங்காடு

மொடக்குறிச்சியிலிருந்து விளக்கேத்தி 11 கி.மீ. தூரத்தில் உள்ளது. விளக்கேத்தியிலிருந்து 2 கி.மீ. தூரத்திலுள்ள மேகரையானூர் குடியிருப்புக்குப் பாடகர்களைத் தேடிச் சென்றபோது அவர்கள் கரட்டாங்காட்டில் இருப்பதாக அறிந்து அங்கிருந்து 1 கி.மீ. தூரம் நடந்து அவ்வூரை அடைந்தேன். 8.3.84 அன்று பிற்பகல் சகோதரர் இருவரிடமிருந்து பாடல்கள் பதிவு செய்யப் பட்டன. பெண்கள் பலரும் பாடலை விரும்பிக் கேட்பதுண்டு என்றனர். யாரும் பாடலைக் கற்றுக் கொள்ளவில்லை. அருகிலுள்ள ஊர்களிலும் பாடலைத் தெரிந்த யாரும் இல்லை.

25. நவபட்டி

மேட்டூர்-பவானி சாலையில் மேட்டூரிலிருந்து 6 கி.மீ. தூரத்தில் உள்ளது இவ்வூர். மேட்டூரைச் சேர்ந்த திரு தருமன் அவர்களின் உதவியோடும் இவ்வூரைச் சேர்ந்த தி.எஸ். இருசன் அவர்களின் ஒத்துழைப்போடும் 9.3.84 அன்று இரவு மூவரிடமிருந்து பாடல்கள் பதிவு செய்யப்பட்டன. இவ்வூரிலும் அருகிலுள்ள ஊர்களிலும் சி.சி. கதைப்பாடல் பிரபலமாக உள்ளது எனத் தெரிகிறது.

26. மேட்டூர்

மேட்டூரில் தங்கியிருந்தபோது (9.3.84 - 10.3.84 முற்பகல் வரை) திரு தருமனின் உதவியுடன் மேட்டூரில் சி.சி. கதைப் பாடல்/கதை வழங்கப்படுகிறதா என்று பலரிடம் விசாரித்த போது இல்லை என்ற பதிலே கிடைத்தது.

27. செலவடை

மேட்டூரிலிருந்து (நங்கவள்ளி, ஜலகண்டாபுரம் வழியாக சேலம் செல்லும் பாதையில்) 30 கி.மீ. தூரத்தில் உள்ளது இவ்வூர். 10.3.84 அன்று பிற்பகல் இவ்வூரிலிருந்து ஒரு முதியவரிடம் சி.சி. கதைப்பாடல் வடிவம் ஒன்றும், மற்றொருவரிடம் உரைநடை வடிவம் ஒன்றும் பதிவுசெய்யப்பட்டன. உடனிருந்து உதவியவர் திரு தருமன்.

28. பிளியனூர் அக்ரகாரம்

தருமபுரியிலிருந்து (ஒகேனக்கல் செல்லும் வழியில்) 22 கி.மீ. தூரத்திலுள்ளது இவ்வூர். சி. சி. கதைப்பாடலின் மாறுபட்ட வடிவம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இவ்வூர் சென்றபோது அதனை ஒத்த முற்றிலும் மாறான 'மாட்டுக்காரன் பாட்டு' என்னும் கதைப்பாட்டு கிடைத்தது. 11.3.84 அன்று இப்பாடல் பதிவு செய்யப்பட்டது. அவ்வூரைச் சேர்ந்த திரு மதிவாணன், திரு சின்னவேடி, திரு வீராசாமி செட்டியார் ஆகியோர் உதவி புரிந்தனர்.

29. ஊத்தங்கரை

தருமபுரி மாவட்டத்திலுள்ள சிறுநகர். 12.3.84 காலை இவ்வூருக்கு வந்திருந்த கிராம மக்கள் பலரிடம் பேசிப்பார்த்த

போது சி. சி. கதைப்பாடல் ஆதாழிலூர் என்னும் கிராமத்தில் வழங்கப்படுவதாக அறியமுடிந்தது.

30. வளத்தாக்கவுண்டனூர்

ஊத்தங்கரையிலிருந்து 11 கி. மீ. தூரத்திலுள்ள காரப்பட்டு என்னும் கிராமத்தில் இறங்கி அவ்வூர் பள்ளி ஆசிரியர் ஒருவர் உதவியுடன் வாடகை மிதிவண்டி எடுத்துக் கொண்டு 5 கி.மீ. தூரத்திலுள்ள ஆதாழியூரை நோக்கிச் செல்கையில் வழியிலுள்ள இவ்வூரிலும் 12.3.84 அன்று களப்பணி நிகழ்த்தப் பட்டது. சி. சி. கதைப்பாடலோ கதையோ இவ்வூரைச் சேர்ந்த வர்களிடம் வழங்கப்படவில்லை. களப்பணிக்கு உதவியவர் புலவர் கேசவன் (ஆசிரியர்).

31. ஆதாழியூர்

இவ்வூர் பள்ளியில் பணிபுரிந்த ஆசிரியர் திரு என். சந்திர சேகரன் உதவியுடன் இவ்வூரில் 12.3.84 அன்று பிற்பகல் களப் பணி நிகழ்த்தப்பட்டது. சத்துணவுக் கூடத்தில் பணிபுரிந்த ஒரு பெண்ணிடமிருந்து சி. சி. கதைப்பாடல் பதிவு செய்யப் பட்டது. வேறு யாரும் பாடலை அறிந்திருக்கவில்லை.

32. அரூர்

ஊத்தங்கரையிலிருந்து 28 கி. மீ. தூரத்திலுள்ள தருமபுரி மாவட்டத்தின் சிறுநகர். 13.3.84 அன்று காலையில் இங்கு வந்தி ருந்த கிராம மக்கள் பலரிடம் சி.சி. கதைப்பாடல்/கதை பற்றிய விவரங்கள் கேட்கப்பட்டன. செய்தி எதுவும் கிடைக்கவில்லை.

33. மாம்பாடி

அரூரிலிருந்து 10 கி. மீ. தூரத்திலுள்ள இவ்வூரில் 13.3.84 அன்று களப்பணி நிகழ்த்தப்பட்டது. யாரும் சி. சி. கதைப் பாடல்/கதையை அறிந்திருக்கவில்லை. இவ்வூரிலிருந்து 2 கி. மீ. தூரத்திலுள்ள வெளாம்பட்டி என்ற கிராமத்தில் பலரும் பாடு வர் என்று அறிந்து மிதிவண்டியில் அவ்வூர் சென்றேன்.

34. வெளாம்பட்டி

இவ்வூரில் பலரும் அண்ணன்மார் சுவாமி கதையையே நினைவு கூர்ந்தார்கள். ஓர் அரிசன இளைஞர் மட்டும் சி. சி·

கதையை ஒத்த கதை ஒன்றைக் கூறினார். அது மாட்டுக்காரன் கதைப்பாடலின் கதை. இந்த இரண்டு ஊர்களிலும் உடனிருந்து உதவியவர்: திரு மா. முருகேசன், எம். ஏ. (மாம்பாடிப்பள்ளி ஆசிரியர்). இவர் சி. சி. கதைப்பாடல் பற்றிய சில அரிய விவரங்களையும் கூறினார்.

35. வெள்ளக்கல்பாளையம்

சேலத்திலிருந்து சேலம் பொறியியல் கல்லூரி நிறுத்தத்தில் இறங்கி மேற்கு நோக்கி 2 கி. மீ. நடந்தால் இவ்வூரை அடையலாம். 15.3.84 அன்று காலை பாடல் பதிவு செய்யப்பட்டது. திரு செ. பெருமாள்கவுண்டர் உதவினார்.

இணைப்பு

இணைப்பு

தகவலாளர் பற்றிய

வ.எண் (1)	பெயர் (2)	பால் (3)	வயது (4)	கல்வி (5)	சாதி (6)
1.	அம்மாசிக்கவுண்டர்	ஆண்	80	இல்லை	வன்னியக் கவுண்டர்
2.	அம்மாசை	ஆண்	70	இல்லை	சக்கிலியர் (தெலுங்கு)
3.*	இருசன், எஸ்.	ஆண்	25	எஸ்.எஸ். எல்.சி.	வன்னியக் கவுண்டர்
4.	கந்தசாமி	ஆண்	40	இல்லை	வன்னியக் கவுண்டர்
5.	கந்தசாமி, பெ.	ஆண்	37	இல்லை	பள்ளர்
6.	** குப்பன்	ஆண்	60	இல்லை	மன்னான்
7.	சிவபாக்கியம்	பெண்	72	இல்லை	பறையர்
8.	*** சுப்பிரமணி	ஆண்	45	இல்லை	லம்பாடி

- 2

விவரங்கள்

முகவரி (7)	தகவல் திரட்டிய நாள் (8)	இலக்கிய வகை (9)	கதைப் பாடல்/ கதை வரிசை எண் (10)
செலவடை-அஞ்சல், ஓமலூர்-வட்டம், சேலம் மாவட்டம்	10.03.84	பாடல்	17
அக்கரைபாளையம், காழ்குணி-அஞ்சல், கொளப்பளூர்-வழி கோபிசெட்டிப் பாளையம்-வட்டம், பெரியார் மாவட்டம்	07.03.84	பாடல்	11
நவபட்டி-அஞ்சல், மேட்டூர்-வட்டம், சேலம் மாவட்டம்	1983 09.03.84	உரை	16
நவபட்டி-அஞ்சல் (பனங்காட்டுக் கொட்டாய்), மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்	09.03.84	பாடல்	14
பெருமாள்கவுண்டன்பட்டி சில்லமரத்துப்பட்டி-அஞ்சல் உத்தமபாளையம்-வட்டம் மதுரை மாவட்டம்	16.10 83	பாடல்	25
முறிக்காட்டுக்குடி (தேக்கடி மலைப்பகுதி) கேரளா.	1977	பாடல்	1
செல்லம்பட்டு-அஞ்சல், கடலூர் வட்டம், தென்னார்க்காடு மாவட்டம்	13.1.84	பாடல்	21
சின்னதண்டா-அஞ்சல், மேட்டூர் வட்டம் சேலம், மாவட்டம்	1983	பாடல்	15

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
9.	செல்லத்துரை, டி.	ஆண்	33	பி.ஏ.	பள்ளர்
10.	தனபாக்கியம்	பெண்	50	இல்லை	அரிசன்
11.	பரமன்	ஆண்	47	இல்லை	தேவர்
12.	†பழனிச்சாமி, அ.மா.	ஆண்	22	II எம்.எஸ்சி.	சக்கிலியர் (தெலுங்கு)
13.	பழனியப்பன்	ஆண்	40	இல்லை	வன்னியக் கவுண்டர்
14.	பாஞ்சாலை	பெண்	60	இல்லை	பறையர்
15.	பால்பொன்னையா, பி.	ஆண்	73	எஸ்.எஸ்எல் சி.	பள்ளர் (கிருத்துவர்)
16.	†† பூங்காவனத்தம்மாள்	பெண்	90	இல்லை	பறையர்
17.	பெரியகாளிமுத்து, க.	ஆண்	40	இல்லை	பள்ளர்

(7)	(8)	(9)	(10)
தவாரம் மீனாட்சிபுரம்-அஞ்சல் உத்தமபாளையம் வட்டம் துரை மாவட்டம்.	16.10.83	உரை	7
வேட்டங்குடி மேட்டுத்தெரு-அஞ்சல், சீர்காழி வட்டம் தஞ்சாவூர் மாவட்டம்	28.9.83	உரை	22
கஜனாப்பாறை, இடுக்கி மாவட்டம், கேரளா. பூர்வீகம்: நல்லதேவன் பட்டி, திருமங்கலம் வட்டம், மதுரை மாவட்டம்.	17.10.83	உரை	3
அக்கரைபாளையம், தாழ்குணி-அஞ்சல், கொளப்பளூர்-வழி கோபிச்செட்டிப்பாளையம்-வட்டம், பெரியார் மாவட்டம்.	19.9.83 02.3.84	உரை	10
நவபட்டி-அஞ்சல் (பனங்காட்டுக் கொட்டாய்), மேட்டூர் வட்டம் சேலம் மாவட்டம்	09.3.84	பாடல்	13
வளையாம்பட்டு, திருக்கோவிலூர் வட்டம், தென்னார்க்காடு மாவட்டம்	22.1.78 மீண்டும் 11.1.84	பாடல்	20
தேவாரம் மீனாட்சிபுரம்-அஞ்சல் உத்தமபாளையம் வட்டம் மதுரை மாவட்டம்	16.10.83	உரை	6
மகேந்திரவாடி-அஞ்சல், அரக்கோணம் வட்டம், வடார்க்காடு மாவட்டம்	15.9.83	பாடல்	25
தேவாரம் மீனாட்சிபுரம்-அஞ்சல் உத்தமபாளையம் வட்டம், மதுரை மாவட்டம்	16.10.83	பாடல்	4

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
18.	பெரியமுத்தான்	ஆண்	75	இல்லை	சக்கிலியர் (தெலுங்கு)
19.	பெருமாள்	ஆண்	60	இல்லை	வன்னியக் கவுண்டர்
20.	ரத்தினம், ஏ.பி.	ஆண்	55	8-ஆவது	குறவர்
21.	ராமக்கா	பெண்	60	இல்லை	வன்னியக் கவுண்டர்
22.	லெட்சுமணன்	ஆண்	55	இல்லை	வன்னியக் கவுண்டர்
23.	வீரம்மா	பெண்	60	இல்லை	வேளாளக் கவுண்டர்
24.	வெள்ளைச்சாமி,கே.	ஆண்	37	இல்லை	தேவர் (அம்பலவர்)
25.	@ ...	...	...	...	...

* திரு எஸ். இராதாகிருஷ்ணன் முதலில் (1983-இல்) இவரிடமிருந்து பட்டுள்ளது). பின்னர் (9.3.84) இவரை நேரில் சந்தித்தும் கதை கேட்

** இவரிடம் பாடல் சேகரித்தவர் பீ. டாக்டர் நசீம்தீன் ஆவார். இவர் பட்டுள்ளன. விவரங்கட்குப் பாடல் குறிப்பைக் காண்க.

*** இவரிடமிருந்து பாடலை ஒலிப்பதிவு செய்து தந்து அனுப்பியவர் திரு

† இவரிடமிருந்து முதலில் திரு செ. பழனிச்சாமி கதையைக் சேகரித்து தகவல் சேகரிக்கப்பட்டது. முதலில் சேகரித்து அனுப்பப்பட்ட கதையே

†† இவரிடமிருந்து பாடலைக்கேட்டு எழுதி அனுப்பியவர் திரு வெ.

@ இவ்வெண்ணுள்ள பாடலுக்கான பாடகர் பற்றிய விவரம் அதனைச் (பாடற் குறிப்பு காண்க).

(7)	(8)	(9)	(10)
கரட்டாங்காடு விளக்கேத்தி-அஞ்சல், சிவகிரி-வழி, ஈரோடு வட்டம், பெரியார் மாவட்டம்	8.3.84	பாடல்	8
நவபட்டி-அஞ்சல் (பனங்காட்டுக் கொட்டாய்), மேட்டூர் வட்டம் சேலம் மாவட்டம்	9.3.84	பாடல்	12
ஆலூரத்துப் பாளையம் மொடக் குறிச்சி அஞ்சல், ஈரோடு வட்டம், பெரியார் மாவட்டம்	9.3.84	உரை	9
ஆதாழியூர், மேட்டூர்-அஞ்சல் ஊத்தங்கரைவட்டம், தருமபுரி மாவட்டம்	12.3.84	பாடல்	24
செலவடை-அஞ்சல், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம்	10.3.84	உரை	18
வெள்ளக்கல்பட்டி கிராமம் சாமிநாய்க்கன்பட்டி அஞ்சல் ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம்	15.3.84	பாடல்	19
கஜனாப்பாறை - ராஜகுமாரி அஞ்சல், உடும்பன்சோலை வட்டம், இடுக்கி மாவட்டம் கேரளா, பூர்விகம்: எஸ். தருமத்துப் பட்டி, (போடி அருகில்)	17.10.83	பாடல்	2
ஊத்தங்கரை வட்டாரம் தருமபுரி மாவட்டம்	—	பாடல்	25

கதை பதிவு செய்து தந்துதவினார் (அக்கதையே இங்கு இணைக்கப் கப்பட்டது.
கடிதத்தில் எழுதிய தகவலின்படி பாடகர் பற்றிய விவரங்கள் தரப்

எஸ்.இராதாகிருஷ்ணன், விவரங்கட்குப் பாடல் குறிப்பைக் காண்க.
அனுப்பியிருந்தார். பின்னர் (2.3.84இல்) இவரை நேரில் சந்தித்துத் இங்கு இணைக்கப்பட்டுள்ளது.
இலக்குமணன். விவரங்களுக்குப் பாடற் குறிப்பைக் காண்க.
சேகரித்த திரு வரதராசுலு அவர்களால் தரப்படவில்லை.

இணைப்பு - 3

சி.சி. கதைப்பாடல்கள்/கதைகள்

குறிப்புகள்

* சேகரிக்கப்பட்ட பாடல்கள் எவ்வித மாற்றமுமின்றித் தரப்பட்டுள்ளன.

* இசையை அடிப்படையாகக் கொண்டு பத்திகள் பிரிக்கப் பட்டன.

* பாடல்களில் உரைநடைத்தன்மை மிகுதியாக இருந்த தால் வரியைப் பிரிப்பதில் எவ்வித வரைமுறையையும் பின்பற்ற இயலவில்லை.

* வரி எண்கள் 5-இன் பெருக்கமாகத் தரப்பட்டுள்ளன பாடலின் இடையே வரும் இசைக்குறிப்புத் தொடர்கள், உரைநடைகள், குறிப்புகள் முதலியனவற்றுக்கு வரி எண்ணிக்கை தரவில்லை.

* பாடகர் உச்சரிப்பாலோ, ஒலிப்பதிவு நாடா கோளாறி னாலோ தெளிவில்லாத சொற்கள், தொடர்கள் முதலி யன .... என்று புள்ளியிட்டுக் காட்டப் பட்டிருக்கும்.

* புரியாத சொற்கள் (?) என்ற குறியுடன் தரப்பட்டிரு கும்.

* இந்த ஆய்வைப் பொறுத்தவரை பாட்டு/கதை மற்றும் சேகரிக்கப்பட்ட இடம் மட்டுமே போதுமானது. ஆயி னும் பிற ஆய்வாளர்களின் வசதி கருதி சேகரிக்கப்பட்ட விவரங்கள் (பாடகரைப் பார்த்தும் கேட்டும் அறிந் தவை) ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'குறிப்பு' என் னும் தலைப்பில் தரப்பட்டிருக்கும்,

* ஆய்வாளர்களின் வசதிக்காக ஒவ்வொரு பாடல் இறுதியிலும் இப்பாடல் பதிவு செய்யப்பட்ட ஒலிப் பதிவு நாடா எண் தரப்பட்டுள்ளது இந்த ஒலிப் பதிவு நாடாக்கள் பொருளடக்கம் எழுதப்பட்டு தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத்தில் பாதுகாக்கப்படும்.

* பாடகர் பற்றிய முழு விவரங்களும் இணைப்பு 2-இல் தரப்பட்டுள்ளதால் ஒவ்வொரு பாடலிறுதியிலும் பாடகர் பெயர் மட்டும் தரப்பட்டிருக்கும்.

1. கேரளம் (தேக்கடி)

சின்னணே சின்னச்சாமி சின்னணே சின்னச்சாமி
சின்னணே சின்னச்சாமி சின்னணே சின்னச்சாமி
பெரியண்ணன் பெரியசாமி, நம்ம ரெண்டுபேரும்
மான் வேட்டக்குப் போகலா (ம்) என்று சொல்லுரானோ;
பெரியண்ணன் பெரியசாமி பெரியண்ணேன் பெரியசாமி
நம்ம ரெண்டுபேரும் மான் குளத்துள போ(ய்) மான
பாத்துட்டு வரலாம் என்று சொல்லுரானோ;
நாளக்கு எயிமணிலே மான்வேட்ட மான்குளத்த
பாத்துட்டு வரலாம் என்று சொல்லுரானோ;

மான் குளத்த போ பாக்கிறபோது மானெல்லாம் தண்ணி
குடிச்சிட்டு தகயாறி நின்றாராம் என்று சொல்லுரானோ;
புத்திகெட்டே பெரியண்ணன் பெரியசாமி புத்திகெட்டே
பெரியண்ணன் பெரியசாமி
சேதனகுப்பி சேதன வில்லும் எடுத்துட்டு வரச் சொன்னா
கேக்காது என்று சொல்லுரானோ

புத்திகெட்டே சின்னணேன் சின்னச்சாமி
புத்திகெட்டே சின்னணேன் சின்னச்சாமி;
சேதனக்குப்பிசேதன வில்லூ நம்மோடயாரு
முன்னாலபோய் உய்தமா எடுத்துட்டு வரச் சொன்னா;
அரச விரகடந்தோ ஆலாவிரகடந்தோ
புளியவிரகடந்தோ பூங்கா விரகடந்தோ
அம்பரக் குமரனூத்தி கான வழியே சுளகுசுளகு

தொண்ணூத்திக் காத வழியே
ஆனக் காட்டிலே கடுவாக் காட்டிலே சிம்கக்காட்டிலே
நான் ஒத்தக்கு எப்படிப் போயிட்டுவரலாம் என்று
சொல்லுரானோ
புத்திகெட்டே மடப்பயலே புத்திகெட்டே மடப்பயலே
புத்திகெட்டே மடப்பயலே
சேதனக்குப்பி சேதனவில்லும் எடுத்துட்டு வராட்டிப்
போனா

நின்னோட கட்டளமான் குளத்தில போகப் போகுது
என்று சொல்லுரானோ;
புத்திகெட்டே பெரியண்ணே பெரியசாமி புத்திகெட்டே
பெரியண்ணன் பெரியசாமி;
எனக்கு அம்மயில்லயா அப்பனில்லயா தாயாரில்லயா
உத்தாரில்லயா உடன் புறவியில்லயா மாமனில்லயா;
மச்சினனில்லயா நானொருதாய்க் கொரு தகப்பனுக்கே
பிறந்த மகனேயானா நம்மோட யாரு முன்னால
இப்பப்போய்ச்
சேரவேண்டும் என்று சொன்னானோ;
புத்திகெட்டேன் தேவியாரே புத்திகெட்டேன் தேவியாரே
புத்திகெட்டேன் தேவியாரே

நம்மோட சேதானவில்லூ சேதானக்குப்பியும் உயிதமா
எடுத்துட்டு வரச் சொல்லு என்று சொல்லுரானோ;
புத்திகெட்டே சின்னணே சின்னச்சாமி புத்திகெட்டே
சின்னணே சின்னசாமி
நானுபுள்ள தொட்டிலபோட்டு தோராட்டிக்கிட்டிருக்கல
சேதனக்குப்பி சேதானவில்லூ கேட்டுடனே நா(ன்)
கொடுக்காது என்று சொல்லுரானோ;

சின்னணே சின்னச்சாமி அகத்தேக் கொருகாலும்
புறத்தேக் கொருகாலும் வக்கிர நேரத்தில்
தேவியார் புடிச்சிக்கிட்டு மல்லுக்கட்டி தேவியார்
நெத்திலயிருந்து
பொட்டு சின்னணே சின்னச்சாமி நெத்தில விழுந்தாரம்;
சின்னணே சின்னச்சாமி சேதனுக்குப்பி சேதானவில்லூம்
எடுத்துக்கிட்டு மான்குளத்த போப் பாக்கிறபோது
மானெலாம் தண்ணிகுடிச்சு தகயாறி வேட்டமலயில
மானெலாம் போயிருச்சு என்று சொல்லுரானோ;
பெரியண்ணே பெரியசாமி பெரியண்ணே பெரியசாமி
மாங்குளத்தில மானமே பாக்காது என்று கேட்டாரோ;
சின்னணே சின்னச்சாமி சின்னணே சின்னச்சாமி
மானெலாம் தண்ணி குடிச்சு தகயாறி மேச்ச

மலேல போயிருச்சு என்று சொல்லுரானோ;
சுக்குமான் பிரம்பு கையிலெடுத்து சுக்குமான் தோலு
கையிலெடுத்து மானமே போயி விரட்டிக் கொண்டு
வந்து மான்குளத்தில நிறுத்தாட்டிப் போனா
நின்னோட கட்டளமான் குளத்துல போகப்போகுது என்று சொன்னாரோ
புத்திகெட்டே மடப்பயலே புத்திகெட்டே மடப்பயலே புத்திகெட்டே மடப்பயலே
அரச விரகடந்தோ, ஆலா விரகடந்தோ
புளியவிரகடந்தோ பூங்காவிரகடந்தோ
அம்பரக் குமரனூத்திக்கான வழியே சுளகுசுளகு
தொண்ணூத்திக் காத வழியே
நான் எப்பிடிப் போய் மான விரட்டிட்டு
வரலாம் என்று சொல்லுரானோ;
மானக் கொண்டுவந்து மாங்குளத்தில நிறுத்தி
மானுக்கு எழுமானுக்குப் பின்னால நிற்றாராம்

பெரியண்ணே பெரியசாமி மானுக்குத் தச்சாராம்;
எழுமானுக்குத் தச்சு எழுசச்சிலக்குத் தச்சு;
சின்னணே சின்னச்சாமி மாரில விழுந்தாராம்;
புத்திகெட்டே பெரியண்ணே பெரியசாமி
புத்திகெட்டே பெரியண்ணே பெரியசாமி
இந்த நேரமானாலும் சின்னணே சின்னசாமிய
இதுவர பாக்கல என்று சொன்னாரோ;
புத்திகெட்டே தேவியாரே புத்திகெட்டே தேவியரே
புத்திகெட்டே தேவியாரே
விறகு என்னமோ எடுத்துக்கிட்டு பின்னால வருது என்று சொன்னாரோ;
என்னாலும் தேவியாரு விசுவாசத்தே கிடக்காது என்று சொன்னாரோ
என்னா நீ தேவியாருகிட்ட நீபோய் படுத்து நல்ல தூங்க வேணு(ம்) என்று சொன்னாரோ;
புத்திகெட்டே பெரியண்ணே பெரியசாமி
புத்திகெட்டே பெரியண்ணே பெரியசாமி

நான் சின்னண்ணேன் சின்னச்சாமி படுதத இடத்தப்
பாக்காட்டி நான் தூங்காது என்று தேவியார்
சொன்னாராம்;

பெரியண்ணனயும் தூங்கவிட்டு குழந்தயும் தூங்கவிட்டு
தேவியார் மடியில பணத்தையும் எடுத்துக்கிட்டுப் பிறப்
பட்டாச்சு என்று சொல்லுரானோ;
ஊளாக் கெல்லாம் பெரியராஜே ஊளாக்கெல்லா
பெரியராஜோ
சின்னண்ணன் சின்னச்சாமி பட்ட படுக்கள காமிச்சுக்
கொடுத்தா
பெரியநாழிக்கு ஒரு நாழி பணமாச் கொடுக்கலாம் என்று
சொல்லுரானோ
ஏறுக்கெல்லாம் பெரியராயே ஏறுக்கெல்லாம் பெரியராயோ
சின்னண்ணன் சின்னச்சாமி பட்டபடுக்களகாமிச்சுக்
கொடுத்தா
பெரிய நாழிக்கு ஒரு நாழி பணமாக் கொடுக்கலாம் என்று
சொல்லுரானோ
பருந்துக்கெல்லாம் பெரியராயே பருந்துக்கெல்லாம் பெரிய
ராயோ
சின்னண்ணன் சின்னச்சாமி பட்டபடுக்கள காமிச்சுக்
கொடுத்தா
பெரிய நாழிக்கு ஒரு நாழி பணமாக் கொடுக்கலாம் என்று
சொல்லுரானோ:
காட்டு(க்) குருவிக் கெலாம் பெரியராயே காட்டுக்
குருவிக்கெலாம் பெரிய ராயே
சின்னண்ணன் சின்னச்சாமி பட்டபடுக்கள காமிச்சுக்
கொடுத்தா
பெரிய நாழிக்கு ஒருநாழி பணமாகக் கொடுக்கலாம் என்று
சொல்லுரானோ:
தேனுருவிக் கெலாம் பெரியராயே தேனுருவிக் கெலாம்
பெரிய ராயே
சின்னண்ணன் சின்னச்சாமி பட்டபடுக்கள காமிச்சுக்
கொடுத்தா
பெரியநாழிக்கு ஒரு நாழி பணமாக் கொடுக்கலாம் என்று
சொல்லுரானோ;

சித்துருவிக் கெலாம் பெரியராயே சித்துருவிக்கெலாம்
பெரியராயோ
சின்னண்ணன் சின்னச்சாமி பட்ட படுக்கள காமிச்சுக்
கொடுத்தா
பெரியநாழிக்கு ஒரு நாழிபணமாக் கொடுக்கலாம் என்று
சொல்லுராளோ;

கொண்டக்கண்ணருவிக் கெல்லாம் பெரியராயே
கொண்டக்கண்ணருவிக் கெலாம் பெரியராயோ
சின்னண்ணன் சின்னச்சாமி பட்டபடுக்கள காமிச்சுக்
கொடுத்தா
பெரிய நாழிக்கு ஒரு நாழி பணமாக கொடுக்கலாம் என்று
சொல்லுராளோ;
சின்னண்ணன் சின்னச்சாமிய போய் தேவியார் பாத்துடன
சிறகு இறகா கொடுத்துச் சின்னண்ணன் மேல படுத்திருக்
கிறா என்று சொல்லுரானோ:
சந்தனக்கட்டயும் குங்குமான்கட்டயும் வெட்டிபாட
அடிக்கி
பாடாய்க்குமேல் சின்னண்ணே சின்னச்சாமிய
எடுத்திட்டாராம்
இட்டு, சின்னண்ணே சின்னச்சாமிய நீத்துட்டாராம்
என்று சொல்லுரானோ.

பாடியவர்: குப்பன்
ஆதாரம்: பீ.டாக்டர் நசீம்தீன், (1977: 41- 45)

குறிப்பு:- ஆய்வுரையில் 'சின்னச்சாமியும் பெரியசாமியும் வேட்டைக்குப் போன பாகம்' என்று தலைப்பிடப் பட்டுள்ளது. டாக்டர் நசீம்தீனோடு கடிதத்தொடர்பு கொண்டபோது 'மன்னான் பழங்குடிகளுள் குப்பனைத் தவிர வேறு யாரும் இக்கதைப் பாடலை அறிந்திருக்கவில்லை' என்று 3 9.83 தேதியிட்ட தன் கடிதத்தில் திட்டவட்டமாகக் கூறியதால் அப்பகுதியில் களப்பணி செல்லும் முயற்சி கைவிடப்பட்டது. குப்பன் தன் பாட்டனாரிடமிருந்து இப்பாடலைக்

கற்றுக் கொண்டதாக எழுதியுள்ளார். டாக்டர் நசீம்தீன் தன்னுடைய ஆய்வுரையில் தந்துள்ள கதைச் சுருக்கம் வருமாறு:

சின்னச் சாமியும் பெரிய சாமியும் வேட்டைக்குப் போன பாகம்: கதை

"சின்னச்சாமியும் பெரியசாமியும் மான் வேட்டைக்குச் செல்கின்றனர். நடுக்காடுவரை சென்றபோது 'சேதனகுப்பியும், சேதனவில்லும்' (அம்பறாத்தூளியும் வில்லும்) எடுக்க மறந்ததை நினைக்கின்றனர். சின்னச்சாமியை அவற்றை எடுத்துவரப் பணிக்கின்றான் பெரியசாமி. கொடிய வனவிலங்குகள் உள்ள பகுதியைக் கடந்து சென்றுவர முதலில் அவன் தயங்கினான். பின்னர் வீடுசென்று அவற்றை எடுக்கச் செல்லும்போது தேவியார் (மனைவி) தடுக்கின்றாள். அவனோ அது கேளாது செல்கிறான். பெரியசாமியின் கட்டளைப்படி மான்களையெல்லாம் ஓட்டிக் கொண்டு வந்து குளக்கரையில் நிறுத்தி அவற்றின் பின்னால் நின்றான். பெரியசாமி வில்லை வளைத்து அம்பு எய்தான். அது ஏழு மான்களையும் துளைத்து, பச்சிலைகளையும் துளைத்துச் சின்னச்சாமியை வீழ்த்துகிறது. பெரியசாமி அவனை அங்கேயே விட்டு விட்டு வீடு திரும்புகிறான். தேவியார் சின்னச்சாமியை எங்கே என வினவுகிறாள். விறகெடுத்து உடன் திரும்புவான் என்று கூறி வீட்டிற்குள் செல்கிறான். தேவியார் அவனும், குழந்தையும் உறங்கிய பின்னர் நாழியில் பணம் எடுத்துக் கொண்டு சின்னச் சாமியைத் தேடிச் செல்கின்றாள். கழுகுராசன், வெருகுராசன் ஆகியோரிடமெல்லாம் சின்னச்சாமி இருக்கும் இடத்தைக் காட்டுமாறும், காட்டினால் நாழிப் பணம் அளிப்பதாகவும் கூறுகின்றாள். இறுதியில் சின்னச்சாமியைக் காணுகின்றாள். இறந்து கிடப்பவனைச் சந்தன விறகுகள் இட்டுச் சிதை மூட்டுகின்றாள். இவ்வாறு கதை முடிவடைகின்றது".

2. கேரளம்(கஜனாப்பாறை)

சின்னச்சாமி பெரியசாமி
சிறும்புலி வேட்டக்காரர்
வேட்டைக்குப் போகும்போது
என்னென்னா அடையாளம் வேணுமென்று
அந்த அண்ணனும் தம்பியும்
ஆளைகன் மூணு/இரண்டு பேரும்
அந்த வேட்டைக்குப் போய்கும்போது
தன்னுடைய மதனியிடம் சொல்லி
பிறப்பட்டு விட்டார்
காட்டுக்குப் போகும்போது போகும்போது
அம்புகளார் எடுத்துவாடா சின்னச்சாமி
நான் வேட்டைக்குப் போய்வருகிறேன் என்றுசொல்லி
பிறப்பட்டு பெரியசாமி அம்ப எடுத்து
பிறப்பட்டு போயி
காட்டிலே மானுவள எதிரகண்டு
ஏலே சின்னச்சாமி
சிறும்பிலி வேட்டக்காரா
அந்தமானுதான் ஏளுமானுமே நிக்குதுடா
அந்தமானு நிக்கிதென்று
மறுபடி(?) மரத்துக்கு
அந்தப்பக்கம் போய்
நில்லுடா என்று சொல்லி
சொல்லும்போது தம்பியபோயி
மரத்துக்கு அந்தப்பக்கம் போய் நிண்ணுட்டார்
அந்த ஏளுமல கடந்து
எளுத்தாணி தான்கடந்து
அந்தப் பக்கம் போயித்தான் நிக்கும்போது
அந்த மானு ஏளுமானுக்கும் தச்சி
ஏளு மரத்துக்கும் தைத்து
அந்தமானு சின்னச்சாமி நெஞ்சிலேயும்
போயித்தான் தச்சிடுச்சி
என்னடா சின்னச்சாமி
சிறும்புலி வேட்டக்காரா

உன்னுடைய நெஞ்சிலதான்
பாஞ்சிடுச்சி என்று சொல்லி
அழுது புலம்பி
முட்டி மோதி
போயித்தூனிருக்கும்போது அண்ணன்
ஏழுமானத்தான் தூக்கட்டா சின்னச்சாமி
ஒன்னைத்தான் தூக்கட்டா என்றுசொல்லி
அழுது புலம்பும்போது

ஏழு மானுமே தூக்கவாணாம்
என்னியும் தூக்கவாணாம்
நீர்போயி ஊரிலேதான்
தாக்கலு சொல்லி
என்னுடைய அண்ணிய
கூப்பிட்டு வாங்க என்று சொல்லி
சின்னச்சாமி சொல்லிவிட்டார்

சொன்னதுமே அப்படியே பிறப்பட்டு வந்து
மதினிய கூப்பிட்டு பிறப்பட்டுதான் வந்து
என்னங்க நீங்கமட்டும் வருகிறீங்க
சின்னச்சாமி என்னுடைய
கொழுந்தன் செறுகொழுந்தனக்

காணோமென்று கேக்கும்போது
இந்தமாதிரி சேதி
ஏழுமானுமே சுட்டு
ஏழுமான் மரத்துக்கும் தைத்து
அப்ப சின்னச்சாமி அங்கக்
காவலுக்குப் பாத்துட்டா நிக்கிறார்
ஒன்னிய கூப்பிட்டுக்கு வரச்சொன்னார்
என்று சொல்லி
பிறப்பட்டுப் போகும்போது
அப்ப சின்னச்சாமிக்கும்
போயி பாக்கும்போது

சின்னச்சாமி நெஞ்சிலே
அம்புதான் பாஞ்சி
அண்ணியரே அண்ணியரே
அண்ணிக்குவந்த மதனியரே
அண்ணன்மேல் குற்றமில்ல
ஏளுமான் வருகுதடா
அந்த ஏளு மானுக்கும்
அந்தப் பக்கம் போயி
மறைஞ்சிதான் நிக்கச்சொல்லி சொல்லிவிட்டார்
நான் மறைஞ்சிமே நிக்காமே
நான் கொஞ்சம் நேருக்குநேரா நின்றுவிட்டேன்
அண்ணன் போட்ட அம்பு
ஏளுமானுக்கும் தச்சி
இந்த ஏளு மலயும் கடந்து
என்னுடைய நெஞ்சிலேவந்து
பாஞ்சிருச்சி அண்ணியரே
அப்போ என்னிய ஓடிவந்துபாத்தார்
என்னடா சின்னச்சாமி
ஏளு மானத்தான் தூக்கட்டா
ஒன்னியநான் தூக்கட்டா என்றுசொல்லி
அண்ணன் முட்டிமோதி
அளுது புலம்பிவிட்டார்
அப்போ வாணாம் அண்ணே
நம்முடைய அண்ணியாரே
கூப்பிட்டு வாங்க
என்று நான் சொல்லிவிட்டேன்
அப்போ ஓடிவந்து ஒங்கள
கூப்பிட்டுக்கு வந்துவிட்டார்
என்னுடைய என்னுடைய மரணம்
போயிதான் மரணமாகிறது
அப்போ ஓடனே பொறப்பட்டு வந்து
வீட்டவிட்டு வெளியேறிவந்து
அப்ப சாமிகளே கும்பிட்டு
சரணம் சரணமென்று அளைத்து

ஆசைக் கொளுந்தா அருமைக்கொளுந்தா
அண்ணியருக்கு வந்த சிறு கொளுந்தா
என்னுடைய கொளுந்தன் உயிரு
செவலோகபதவி அடைகிறதே என்று
அளுதுபுலம்பி இருக்கும்போது
இனி என்னடா
நடக்கறது நடந்திடுச்சி
இந்த சந்தன குங்குமாக் கட்டைகளும் சேர்ந்து
இந்த சந்தனமரம் குங்குமமரம்
அத்தனையும் ஒண்ணுசேத்து
என்ன இந்த உயிரத்தான்
நல்லடக்கம் சேக்க வேணுமென்று
சொல்லிவிட்டு மரணமடைந்தார்
மரணமடையுமே
அப்ப இந்தமாதிரி
என்னாதான் செய்யிறது என்று
பொம்பளயளக் கேட்டு
பெரியசாமிய கேக்கவும்
கட்டயள அடுக்கிவிடு என்று
கட்ட சந்தன குங்குமாக்கட்டை அடுக்கி
அப்ப எண்ணெயுந்தானுமே ஊத்தி
அப்ப ... ...
இந்த மாதிரி எனக்கு
நல்ல முறையோட
கொளுந்தன சாம்பலாக்கி ...
தீயத்தான் பொருத்திவிட்டு
அந்த பொருத்திவிட்டு
எரியை மூன்றுதடவை சுத்திவந்து
சுத்திவந்து இருக்கும்போது
அப்ப என்ன செய்துவிட்டார்
அப்ப எனக்கு நல்லா ...
வாங்கம்மா வீட்டுக்குப் போகலாம் என்றுசொல்லி
சொல்லவும் பெரியசாமி
பொம்பளையாளிடம் சொல்லவும்

வருவதற்கு முடியாது என்று
அப்ப இலுமிச்சங்காய் ஒண்ணைக் கொண்டுவந்து
அந்த இலுமிச்சம் பளத்த சுண்டிவிடுறன்
நீ அந்த இலுமிச்சம் பளத்த
எடுத்துட்டு வந்தவுடன்
அப்பதான் வீட்டுக்கு
சென்றுவிடலாம் என்று சொல்லிவிட்டாள்
அப்ப சரித்தான் என்றுசொல்லி
மூன்றுதடவ சுத்திவந்து
இலுமிச்சம் பளத்த
சுண்டித்தான் விட்டுவிட்டு
அந்த இலுமிச்சம் பளத்த
போய் எடுத்துக்கு வருமிந்தி
மரணமாய் விட்டார்
நான் இளைய கொளுந்தன்மேலே
கட்டைமேல் கட்டையாடுக்கி
நான் ஒடன்பிறப்பு ஏறுறனென்று
மாண்டு விட்டாள்

மாண்டுவிடவும்
என்னடா நம்ம தம்பியும் இறந்துபோனார்
இரண்டாவது
பொம்பளநம்ப சமிசாரமும் இறந்துவிட்டது
அப்ப உடனே நம்ம இருந்தென்ன
இல்லாமப் போனென்ன என்றுசொல்லி
அப்ப இவருமேதானும் ...
அப்ப வீட்டுக்குத்தானும் வந்து
என்னாடா ஆடுமாடு அத்தனையும்
பில்லு திங்காம மூன்றுநாள் பட்டினியா
மூன்றுநாள் பட்டினியா
ஆடுகளும் மாடுகளும்
கோளிகளும் குஞ்சிகளும்
சாப்பாடு இல்லாம
தண்ணிகளும் இல்லாம இருக்கிறது
இனிநம்ம இருந்தென்னா

இல்லாமப் போனா என்று
பெரியசாமி மனசிலெண்ணி நினைத்துவிட்டு
ரொம்ப சிரமப்பட்டு இருக்கும்போது
அப்ப ஒருவர்வந்து ஈஸ்வரன் தானும்வந்து
சின்னசாமி சிறுபுலி வேட்டக்காரா
பெரியசாமி பெரும்புலி வேட்டக்காரா
இண்ணைக்கு நீ செய்த
நாயம் ஒன்று செய்யில என்றுசொல்லி
அதனால நீசிரமப்படு என்றுசொல்லி
இன்னும் சிரமம் வருகுமென்று நினைத்து
நீ எப்படியே இருக்கும்போது
வாணாமுடா என்றுசொல்லி
ஈஸ்வரனே தானும்சொல்லி
ஆடுகளும் மாடுகளும்
கோளிகளும் குஞ்சுகளும்
அத்தன சீவிசிந்தும் (?)
அத்தனையும் பார்த்துக்கொண்டு
இருந்துநீ பாதுகாக்க வேணுமென்று
பகவானத்தான் கையெடுத்து தான்கும்பிட்டு
நீ இருந்துநல்ல முறையோட வாளும்படி
அந்த ஈஸ்வரனே வரங்கொடுத்தார்
வரங்கொடுத்தாலும்
சாப்பாடு தண்ணிகளுக்கும்
ஆகாரம் உண்டாக்கி
சாப்புட முடியாமே
அந்த பெரியசாமி
பெரும்புலி வேட்டக்காரன்
அவருமே, அந்த சந்தன குங்கும கட்டைகளும்
அத்தனையும் அடுக்கிவிட்டு
அவருமே, இரண்டாவது வருஷம் இருந்து
மூன்றாவது வருஷம் மாண்டுவிட்டு
அவருமே போய் சேர்ந்தார்
பாடியவர்: கே. வெள்ளைச்சாமி.

குறிப்பு: நான் தங்கியிருந்த வீட்டிற்கு இவர் வந்தபோது இவரிடம் பேசினேன். பாடல் தெரியும் என்பதை அறிந்து பாடச் சொன்னேன். தனி அறையில் பாடியபோது இருவர் உடன் இருந்தனர். பத்து வயதில் பெரியவர்களிடமிருந்து கற்றுக் கொண்ட இப்பாடலை பத்து வருடங்களுக்கு முன் பிள்ளைகளுக்குப் பாடிக் காட்டுவது உண்டு என்றும் அதன் பின்னர் பாடியதில்லை என்றும் கூறினார். கதையின் பெயர் 'சின்னசாமி பெரியசாமி கதை' என்று கூறினார். கதைப்பாடலில் தெளிவில்லை. முரணாகவும் கதை விடுபட்டும் காணப்பட்டது. இதுபற்றிப் பாடகரிடம் கேட்டபோது 'வேறு ஒருவர் இவ்வாறுதான் பாடினார்' என்று கூறினார். கதையை உரைநடையாகக் கூறச்சொன்னபோது விடுபட்ட கதைப்பகுதியை ஓரளவு நினைவுப்படுத்திப் பின்வருமாறு கூறினார்.

கதை:

ஒரு ஊரில் பெரியசாமி, சின்னச்சாமி என்ற அண்ணன் தம்பி இருவர் இருந்தனர்.

அண்ணனுக்குத் திருமணமாகி மதனி வீட்டில் இருந்தாள். ஒரு நாள் அண்ணன் தம்பி இருவரும் வேட்டைக்குக் கிளம்புகின்றனர்.

ஏழு அம்புகள் எடுத்துச் செல்வதற்குப் பதில் நான்கு அம்புகள் எடுத்துச் செல்கிறார்கள்.

(இப்ப ஞாபகம் வந்திடுச்சி என்று பாடகர் கூறுதல்)

நான்கு மானிற்கு நான்கு அம்புகள் போட்டுவிட்டான்.

இன்னும் மூன்று அம்புகள் மதனியிடம் வாங்கி வருமாறு அண்ணன் தம்பியை வீட்டிற்கு அனுப்புகிறான்.

தம்பி மதனியிடம் அம்பு கேட்கிறான்.

அம்பெடுத்துப் புறப்படும்போது மதனி அவன் சுண்டு விரலைப் பிடித்துக் கொள்கிறாள். (கெட்ட எண்ணத்துக்கு) (மதனி தாய் போன்றவள்; அவளைக் கற்பழிக்கக்கூடாது ஆதலால்) அவன் தன் சுண்டுவிரலை நறுக்கிவிட்டு விட்டு அம்பெடுத்துச் செல்கிறான்.

அண்ணன் தம்பியிடம் சுண்டுவிரலில் இரத்தம் வருவதற்கான காரணம் கேட்கிறான்.

தம்பி உண்மையை மறைத்துப் பிறர் தன் கையைப் பிடித்ததால் அறுந்தது என்கிறான்.

அண்ணன் சந்தேகப்படுகிறான்.

தம்பியை மூன்று மானுக்கும் அந்தப்பக்கம் போய் நிற்கச் செய்து அம்பு விட அவ்வம்பு மூன்று மானிலும் பாய்ந்து மூன்று மரத்திலும் பாய்ந்து தம்பியின் நெஞ்சிலும் பாய்கிறது.

'ஏழு மானைத் தூக்கட்டா, உன்னைத் தூக்கட்டா' என்று அண்ணன் தம்பியிடம் கேட்க அவன் அண்ணியை வரச் சொல்லுமாறு கூறுகிறான்.

அண்ணன் தன் மனைவியிடம் நடந்ததைக் கூறாமல் காட்டுக்கு அழைத்துச் செல்கிறான்.

இருவரும் சின்னச்சாமியிடம் செல்கின்றனர்.

அண்ணன்மேல் குற்றமில்லை என்று தம்பி கூறுகிறான்.

கட்டைகளை நல்லமுறையில் அடுக்கித் தம்பிக்குத் தீ வைக்கிறான் அண்ணன்.

எலுமிச்சம் பழத்தைச் சுண்டிவிட்டு கணவனை எடுத்து வரச் சொல்கிறாள் அவள்.

அண்ணன் பழத்தை எடுத்து வரச்செல்லும்போது அவன் மனைவி கொழுந்தனோடு உடன்கட்டை ஏறிவிடுகிறாள்.

அவன் திரும்பி வந்து உண்மையை உணர்ந்து மனைவிக்கும் தம்பிக்கும் தப்புறவு இருந்திருக்கும் என நினைத்து வருந்தி வீடு திரும்புகிறான்.

ஈஸ்வரன் வந்து 'நீ செய்த தவறுக்கு அனுபவிக்க வேண்டும்' என்று கூறி நல்லமுறையில் சீவனம் செய்யுமாறு கூறுகிறார்.

அவன் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் சிரமம் தாங்காமல் சந்தனக் கட்டை குங்குமக் கட்டை முதலியவற்றை அடுக்கித் தானே தீ மூட்டி அதில் ஏறி இறக்கிறான்.

(ஒளிப்பதிவு நாடா எண்:1)

3. கேரளா (கஜனாப்பாறை)

சின்னண்ணன் சின்னச்சாமி-சிறுபுலி வேட்டைக்காரன்-அண்ணன் மனைவியிடம் உத்தரவு கேட்டுக்கொண்டு வேட்டைக்குச் செல்கிறார்கள். அங்கு ஒரு பொய்மான் வேடமெடுத்து நிற்கிறது. அண்ணன் தம்பியைஅம்புவிட்டுக் கொல்கிறான். அண்ணன் தம்பியின் பிணத்தை ஆற்று மேட்டில் போட்டுவிட்டு வீடு திரும்புகிறான். அவன் மனைவி கொழுந்தனைக் காணாமல் வருந்தி அவன் எவ்வளவு கூறியும் கேட்காமல் கொழுந்தனைத் தேடிச் செல்கிறாள். தான் பத்தினியாக இருந்தால் எறும்பு எண்ணாயிரப்பட்ட உயிர்களும் பட்சிகளும் வனதேவதைகளும் தன் கொழுந்தனிருக்குமிடத்தைக் காட்டவேண்டும் என்று அழுது முறையிட்டுச் செல்கிறாள். மயிலுங் குயிலும் கூவுமிடத்தில் தண்ணீர் இருக்கும் என்று பெரியவர்கள் சொல்வதை நினைத்து, அப்படிப்பட்ட ஆற்றுமேட்டில் போய்ப் பார்க்க, மணலில் எறும்பு ஊர்ந்து செல்வதைக்கண்டு, அந்த எறும்புத் தடத்தின் வழியே சென்று கொழுந்தன் பிணத்தைக் காண்கிறாள். பிணத்தைத் தூக்கிக்கொண்டு வீட்டிற்கு வருகிறாள். அம்புக் காயத்தைக் கணவனிடம் காட்டிக் கொழுந்தனை இவ்வாறு செய்ததை ஒப்புக் கொள்ள வேண்டும் என்கிறாள்.

*கொழுந்தனைத் தூக்கி வந்து காட்டில் சந்தன, குங்குமக் கட்டை அடுக்கி எரிக்கிறாள்.

*அவள் ஒரு காட்டில் கொழுந்தன்மீது பாசமாக இருந்து வருகிறாள்.

---

* கதை கூறியவர் கதை அவ்வளவுதான் என்று கூறிக் கதையை முடித்தபின்னர் வற்புறுத்திக் கேட்டபோது கூறிய கதை முடிவு.

கூறியவர்: பரமன்

குறிப்பு:

கஜனாப்பாறை அருகிலுள்ள கும்மப்பான்றயைச் சேர்ந்த சின்னச்சாமி என்பவர் தற்போதும் கதையைப் பாடலாகப்

பாடலாகப் பாடுவார் என்றும் அப்போது படுத்துக் கொண்டே கேட்டது உண்டு என்றும் கூறினார். பாடல் தெரியாது என்றார். இன்றுங்கூட காடு வெட்டும்போது பிறர் இக்கதைப் பாடலைப் பாடுவர் என்றும் கூறினார். சின்னச்சாமியைச் சந்திக்க இயலவில்லை. நினைவுக் குறைவு மிகுதியாக உடையவர். கோமாளிக்குடி செல்லும் போது பெட்டி முதலிய பொருள்களை எடுத்துக் கொண்டு உடன் வந்து உதவினார். அப்போது பேச்சுக் கொடுத்தபோது இக்கதையைக் கூறினார்.

(ஒளிப்பதிவு நாடா எண்:2)

4. மதுரை (மீனாட்சிபுரம்)

சின்னண்ணன் சின்னச்சாமி
சிறுபுலி ஆசானாம்
பெரியண்ணன் பெரியசாமி
பெரும்புலி ஆசானாம்

அண்ணா ங்ஙப்பனுள்ள நாளையிலே
ஙப்பனுள்ள நாளையிலே
சிறுமான் வேட்டை ஆடையிலே
சிறுமான் வேட்டைக்கே
போய்வருமானா வாங்களப்பா என்றார்

நம்ப அண்ணந்தம்பி இருவேரும் போனாலும்
இந்த மானக் கொண்டுவர முடியாது
நம்ப சித்தப்பமார பெரியப்பமார
கொண்டுவந்தாலும் இந்தமானக்
கொண்டுவர சத்துஉண்டு
நம்ப அண்ணமார கூப்புட்டுவா
என்றும் சொன்னான தம்பிய
பெரியண்ணன் பெரியசாமி

போனான சின்னண்ணன் சின்னசாமி
சிறுபிலி ஆசானாம்
பெரியண்ணன் பெரியசாமி
பெரும்புலி ஆசானாம்
போயி - னொப்பன் உள்ள நாளையில
சிறுமான் வேட்டை ஆடயில
சிறுமான் வேட்டைக்கே போய்வருவோம்
வாங்களப்பா என்றார்

எங்களுக்கு
வெள்ளிக்கிளமையும்
விடிஞ்சந்து நாளியும்
பொல்லாத நேரமப்பா
நீங்களே பொய்வாங்கள்

நாங்களே வல்லை என்றார்
அப்ப வீட்டுக்கு வந்து
அண்ணா பெரியண்ணா பெரியசாமி
பெரும்புலி ஆசானார்
சின்னண்ணார் சின்னசாமி
வெள்ளிக்கிழமையும்
விடிஞ்சந்து நாளியும்
பொல்லாத நேரமென்று சொல்லிவிட்டார்
நாங்களே வல்லையப்பா
நீங்களே போய்வாங்க என்று சொன்னார்
அண்ணா எந்த விதமாக
உங்களுடைய ஓசனைய சொல்கையளோ
அந்தவிதமாக நான்
கேட்டுவாரன் என்று சொல்லிவிட்டார்
சின்னண்ணர் சின்னச்சாமி
அப்ப பெரியண்ணன் பெரியசாமி
பெரும்புலி ஆசானாம்
என்ன கௌமையா இருந்தாலும்
இந்தமானக் கொண்டுவரவேணுமப்பா
கட்டிச் சோறு கட்டி அங்க
காதவழி போனாலும்
அந்தமான விடுவதாக இல்லை என்றார்
வாங்களண்ணா போய்வருவோம்
அண்ணி கட்டுச்சோறு எங்களுக்கு
வேணுமென்று சொன்னார்
சின்னண்ணர் சின்னச்சாமி
போனாராம் சின்னண்ணன் சின்னச்சாமி
சிறுபிலி ஆசானாம்
பெரியண்ணன் பெரியசாமி
பெரும்பிலி ஆசானும்
கட்டிச் சோறெடுத்து
அம்புகளும் தானெடுத்து
வீட்ட விட்டு வெளியேறி
வெள்ளிப்பட்டி நாடுகடந்து

வெராலிப்பட்டி நாடுகடந்து
கொளிஞ்சிப்பட்டி நாடுகடந்து
கொட்டாரம்பட்டி நாடுகடந்து
இண்டவனங் கடந்து
இடியவனம் தான் கடந்து - அங்க
புங்கவனம் கடந்தார்
புளியவனம் பூஞ்சோலதான் கடந்தார்
அங்கு போனான
பெரியண்ணன் பெரியசாமி
பெரும்பிலி ஆசானும்
சின்னண்ணன் சின்னசாமி
செறுபுலி ஆசானும்
அங்க ஏளுமானும்
ஏளுமான் பிள்ளையும்
பிலா மரத்தடிய நிக்கிதுங்க
அங்க பிலாமரத்தடில நிக்கும்போது
அங்க நிக்குதடா ஏளுமானும்
ஏளுமானு குட்டிகளும்
இந்த மான நாம்ப
அம்பவே போடணுண்று
பெரியண்ணன் பெரியசாமி சொல்லிவிட்டார்
பெரியண்ணன் பெரியசாமி
நான்போயி மானவே மறிப்பன் அண்ணா
நீ அம்பவிட்டு மாவை எய்யித வேண்டும் என்றார்
அட தம்பி அம்ப மறந்தனடா
ஏளுமானும் ஏளுமான் குட்டியும்
தப்பிவிட போகுதென்றார்
நான்கீள எச்சிமே துப்பிவிடுவேன்
எச்சி உணரந்தின
ஓட்டமா ஓடி
மாடுகண்டா ஒதுங்காமே
மனுஷங்கண்டா பேசாமே
தாகுடிண்ணிகண்டயாமே
தாவுகண்டா நிக்காமே

நான் எச்சிக்குமே எச்சிமேல் துப்பிவிடுவேன்
அந்த எச்சி உணரந்தின
நீ அம்பெடுத்துத் தானே
வரவேணுயப்பா என்றார்
சின்னண்ணன் சின்னசாமிகிட்ட
அங்க போனான்
சின்னண்ணன் சின்னசாமி
சிறுபிலி ஆசானாம்
பெரியண்ணன் பெரியசாமி
பெரும்பிலி ஆசானாம்
அங்க ஓடிவந்து
என்ன கொளுந்தா வந்த என்று சொல்ல
அம்ப மறந்து வந்தன்
அண்ணன்மார் ......
என்று சொன்னான்
சின்னண்ணன் சின்னசாமி
அப்ப அம்ப மறந்துவிட்டாலும்
அர்ச்சண்டா போய்நான் சேர வேணுமென்றார்
சின்னண்ணன் சின்னசாமி
உன் அண்ணனில்லா நேரமெல்லாம்
நீ வந்தா எனக்கு ஒரு
முத்தங் கொடுக்க வேணுமென்றார்
அண்ணனில்லா நேரம்
முத்தங்கொடுக்க என்னாலபத்தாது
அம்ப எடுத்துமே போகவேண்டுமென்று சொன்னார்
சின்னண்ணன் சின்னசாமி
அப்பநேரம் கொஞ்சமா நேரமானதில்ல
அம்பெடுத்துத் திரும்பிவரும்போது
நேரமும் தவறிவிட்டது
பெரியண்ணன் பெரியசாமி
சொன்ன சவர்தமாய்விட்டது (?)
அம்பக் கொண்டுபோயி
இந்தணா என்று கொடுக்கிறபோது

மீச துடிக்கிது
மின்கோபமாகுது
கண்ணுசிவக்குது
கடுங்கோபமாகுது
ஓடிமறியடா ஒருகோடி மானுகள
வன்னித் திருப்படா வனத்திலுள்ள மானுகள
என்று சொல்லிவிட்டார்
பெரியண்ணன் பெரியசாமி

அங்க ஓடிமறிச்சானாம்
ஒருகோடி மானுகள
வன்னித் திருப்பினான்
வனத்திலுள்ள மானுகள

பெரியண்ணன் பெரியசாமி
நம்மோட பொண்டாட்டியோட
அவன் வெளையாண்டு சிரிச்சி வந்தானா
இந்த விதமாக நம்பதம்பிய
கொன்றுவிட வேணுமென்று சொல்லி
அவன் கோபத்திலே நின்று
வெட்டி முடிஞ்சி வேமரப்பூ சிங்குவிட்டு
இழுத்துமே விட்டானாம் அம்புகள
ஏளுமானுக்கும் தச்சி

ஏளுமான் பிள்ளைக்கும் தச்சி
அங்க பிலாமரத்துக்கும் துள அறுத்துப்போயி
பெரியண்ணன் பெரியசாமி விட்டஅம்பு
சின்னன்னன் சின்னசாமி
கடகொடலுல போயி பாஞ்சிவிட்டதில்ல
அவன் ஓட்டமா ஓடி

ஆத்துல மூஞ்சி களுவி மொகங்களுவி
தண்ணியுமே சாப்புட்டு
தண்ணி கொண்டு போனான
சின்னன்னன் சின்னசாமிக்கு
என்னடா தம்பி ஒன்னோட அம்புமே

நீ கொடுத்த அம்பு ஒனக்கே பாஞ்சிவிட்டதென்று
சொல்லி விட்டான்
பெரியண்ணன் பெரியசாமி
அவக சொன்ன சொல்லும் தவறிவிட்டு வந்தோமே
பொல்லாத நேரமென்று அவக சொன்னாக
நம்ப பெரியப்பாமாரு சொல்லத்
தள்ளிட்டு வந்தோமே
வந்ததனாலே எனக்கு
அவகேடு வந்ததண்ணா
நீ ஏளுமானும் ஏளுமான் குட்டியும்
கொண்டுபோயி வீடுசேரு என்று சொன்னானே
சின்னண்ணன் சின்னசாமி
அட உண்ணைய என்னப்பா
செய்யவேணுமென்று சொல்ல
சந்தணகட்ட வெட்டி
என்ன அடுக்கியே தீய வச்சிடண்ணா
நான் சுத்தமாக வெந்திடுவன்
என்று சொன்னான
சின்னண்ணன் சின்னசாமி
நீ செய்த கொடுமைக்கு
நீ செய்த கொடுமைக்கு
நான் ஒன்னத் தீ வைக்க
என்னால பத்தாது என்று சொன்னானே
சரிதானப்பா, என்னத் தீவைக்க வேண்டாம்
ஒன்னோட அம்பஎடுத்து நீ
போகலாம் வீட்டுக்கு
என்று சொன்னானே
சின்னண்ணன் சின்னசாமி
சிறுபுலி வேட்டக்காரன்
அங்க அம்புமே எடுத்து வந்தானாம்
பெரியண்ணன் பெரியசாமி வீட்டுக்கு
என்னாங்க ராத்திரி பத்துமணி ஆனது
நீங்க தாமுசமுண்ணா

எங்க என்னோட கொழுந்தன் என்று
பெரியண்ணன் பெரியசாமி சம்சாரம் கேட்டதுங்க
எவ்வளவு...
அதுபோல ஒனக்குக் கைக்கு வந்துசேரும்
உன்னோட கணவனென்று சொன்னான்
பெரியண்ணன் பெரியசாமி

எனக்குக் கணவனில்ல
ஒனக்குத் தம்பி
எனக்குக் கொழுந்தன என்றாள்

நீ எந்தவிதமாக ஆசப்பட்டு இருந்தயோ
உன் ஆசயெல்லாம் அலங்கோலம் வந்திருச்சம்மா
என்று சொன்னான்
பெரியண்ணன் பெரியசாமி

எந்நேரம் வருவாகளென்று கேட்டதுக்கு
எனக்கு சோறுமேகுடு
நான் சாட்புட்டே சொல்லுறேனென்று சொன்னானாம்

சோறுமே சாப்பிடவிட்டு
எங்கே என் கொழுந்தன் என்று கேட்டதற்கு

எனக்கு பாயவிரிச்சிவிடு
நான் படுத்துக்கிட்டே சொல்லுறன் என்று சொன்னானாம்

பாய விரிச்சிவிட்டு படுக்கவிட்டாள் மனைவி

பாயிலே படுத்துக்கிட்டு
என் கண்ணுக்குக் கண்ணான கொழுந்தன
உண்மய சொல்லவேணுமென்று
ஒளியாம சொல்லவேணுமென்றாள்

நான் ஒருறக்கம் ஒறங்கி
ஒருகூறுசாமம்
பனிரெண்டு மணிக்கு நான்
சொல்லுறன்று சொன்னானாம்
பெரியண்ணன் பெரியசாமி

ஒருகூறு சாமம்
பனிரெண்டு மணிக்கு
இனியாரக் கேக்கப்போறோம்

இனி நாம்ம கேட்டோமானா
நமக்குக் காரியம் கெடைக்கும்
நாம வீட்டவிட்டு வெளியேறி நம்ம

கொளுந்தனத்தேடிப் போவோமென்று
மடியிலே நாளிப் பணத்த அள்ளி
மடியிலே முந்தியிலே முடிஞ்சுவைத்தாள்
தண்ணிக் கொடத்த கக்கத்திலே இடிக்கி
தண்ணிக் கெணத்திலே கொண்டிபோயி வைத்துவிட்டாள்
வைத்துவிட்டு ஊருக்கு அப்புறமா வெளியேறி
ஊருக்கு மேருக்கே போய்
நம்ம எந்தவிதமாக நம்ம கொளுந்தன
காண்சுப் போறோமென்று
பறக்கும் பெராந்துகள
என்னோட கொளுந்தன
கண்ணுக்குக் கண்ணான கொளுந்தன காமிச்சிகளானா
என்மடியிலிருக்க நாளிபணத்துக்கு ஒங்களுக்கு
காசிமால வாங்கிப் போடுறன்று சொன்னாளாம்

எனக்கும் ......
எந்தவிதமாகத் தெரியப்போகுது
எங்களுக்குத் தெரியாதம்மா
சிறுமல சுத்திவரும் சித்தெறும்ப கேளும்மா
என்று சொன்னார் பறக்கும் பிராந்துக

சிறுமல சுத்திவரும் சித்தெறும்புகா
என்னோட கொளுந்தன கண்டேயளானா
எங்கிட்டே காட்டிவிட்டேயளானா
என் மடியிலிருக்க நாளிபணத்துக்கு
ஒங்களுக்கு காசுமால வாங்கித் தருவனென்றாள்

ஒன்னோட கொளுந்தன காண்பிக்கிறமம்மா
நீ நல்லவளி சேரலாம்

உங்களுக்கு வளிகாட்டிவாரன்
என்பின்னாலே உன்னோட சீலய
கிளிச்சிப்போட்டு வாம்மா என்று சொல்லிச்சி
சித்தெறும்பு
அவமுந்திச்சிலய கிளிச்சி
எறும்பு சொன்னபடி போட்டுப்போனாள் கொளுந்த
னோட
போயிமே புருஷனவிட்டு
கொளுந்தனத் தேடிப்போகுங்காலம்
அங்க வனத்திலே
ஏளுமானும் ஏள்மான்குட்டியும் கொளுந்தனும்
உயிர்போயி மரணமாயி கிடப்பதை அவ பாத்தாளே
ஈதானம்மா ஒங்கொளுந்தன்
... ...

நீங்க போகலாம்
நான் வந்த வளியா போவேனென்று
சித்தெறும்ப வளியனுப்பிச்சி விட்டாளாம்

கண்ணுக்குக் கண்ணான கொளுந்தா
எங்கூடநீ கூடுனத்துக்கு
இந்த வனத்திலே
எறும்பு தின்ன ஒனக்குக் காலமா என்று
கட்டிச் சேர்ந்து புடிச்சி அழுதாளாம்

அளுகுகின்ற வேளையிலே
உயிருமே தெளிஞ்சி
நான் செத்தபய பொளைச்சா
சீம பொறுக்காதம்மா
மாண்டபய பொளைச்சா
மையுலகம் பொறுக்காதம்மா
என்ன அடிச்சிக் கொன்றுவிட்டான அண்ணமாரும்
உன்னால என் உயிரும் மரணமானதம்மா
இனிபோயி உன்னோட மக்கள பொளச்சி
நீநல்ல முறையாக வாளணும் என்று சொல்லி

வாக்குறுதி கொடுத்தானாம்
சின்னண்ணன் சின்னச்சாமி

உங்கள நான் காலிபண்ணிப்போயி
உலகத்தில் நான் வாளமாட்டன்
உங்களோட நான் உடன்கட்டை
ஏறுவன் என்று சொன்னாளாம்

உங்களோட நான் உடன்கட்ட
ஏறுவனென்று சொன்னொடனே
வாண்டாமம்மா
ஒன்னோட கணவனிடம் போயி பொளச்சிக்க
என்னோட விதிவசம் இவ்வளவுதான்
என்று சொன்னான சின்னசாமி

அப்பயேவாணாம்
ஒன்னோட நான் தஞ்சம் என்று
நான் சத்தியம் பண்ணிக்கொடுத்தன்
என்ன நல்ல முறையாக
சந்தணக் கட்டையிலே
என்னோட ஒடம்பு வேகவேணும்
என்று சொன்னளாம்

சரி நான் போய்வாரேனம்மா
என்னத் தஞ்சமென்று இருக்காதே
நீபோறவழி போ என்று
அப்பவும் வாக்குறுதி குடுத்து
சின்னண்ணன் சின்னச்சாமி இறந்துவிட்டார்

அப்போ வனத்திலே ஒக்காந்து அழுதாளாம்
... ...
ஏளுகுங்குமாக் கட்டக்காரரும் வந்து
என்னமோ இந்த வனத்திலே ஒருவரும் அழுவதின்று
ஓடிவந்து பார்த்தார்கள்
ஐயா ஏளு குங்குமாக் கட்ட கொண்டுவந்து
என்னோட கொளுந்தன

ஒடன்கட்ட ஏத்துங்க
ஒங்க ஏளுபேருக்கும் நான்
பொஞ்சாதியா ஆகிறேன்று சொன்னாளாம்

என்னடா இப்படிச் சொல்லுது இந்தப் பெண்ணு
நாம ஒடனேயே
ஒடங்கட்ட ஏத்துவோண்ணுசொல்லி
கட்டயவெட்டி
குங்குமாக்கட்ட சந்தணக்கட்ட வெட்டி
அடுக்கிவிட்டார்

அடுக்கிவிட்டுத் தீ வைக்குங்காலம்
தீயில பத்தி எரியுது

நாலு மூலயும் சுத்தி எரியுங்காலம்
ஐயா ஒங்களுக்கு ஏளுபேருக்கும்
நான் எந்தவிதமாக வாக்கப்படபோறேன்
இந்த இலுமிச்சங்கனி நான் வச்சிருக்கேன்
இந்த இலுமிச்சங்கனி நான் விரலிலே வச்சி
நான் சுண்டிவிடுவேனய்யா
இந்த இலுமிச்சங்கனிய எடுத்து வந்தவகளுக்கு
நான் பெண்சாதியாகிறனென்று
வாக்குறுதி குடுத்தாளாம்

அந்த இலுமிச்சங்கனி எவ்வளவு தூரமப்பா
பொம்பள சுண்டி விடுங்கனி
எவ்வளவு தூரம் ஓடப்போவுது
நம்மளோட யாரெடுத்தாலும்
அந்த இலுமிச்சங்கனிய யாரெடுத்தாகளோ
அவகவச்சி பொண்டுமனம் பொறுத்து
வச்சிக்கிடுவான் இந்த சம்சாரத்த இங்குமே
ஆகட்டும் என்று சம்மதிச்சார்
ஏழு சந்தண குங்குமகாரரும்

சம்மதிச்சி ஆகட்டும் அம்மா
ஆகட்டும் அம்மா

இந்தக் கனிய சுண்டிவிடு
நாங்க எடுத்து வாரோம் என்று சொன்னாக
ஆகட்டும் அம்மா
இந்தக்கனிய நாங்க எடுத்து வாரோம் என்று
நல்லமுறையாக வேட்டிய வரிஞ்சி கட்டி
நம்ம கையிலதான் கெடச்சிதுண்ணா
இந்த ஏளு பேரும் ஆலோசன பண்ணி
... ...
எலுமிச்சங்கனிய .... சுண்டிவிட்டார்

நான் ஒருத்திக்கு ஒருவனுக்குப் பிறந்திருந்தால்
என கண்ணுக்குக் கண்ணான கொளுந்தனோட
நான் ஓடங்கட்ட ஏறவேணுமென்றால்
சத்தியம் செய்தமே
நான் ஒருத்திக்கு ஒருவனுக்குப் பிறந்திருந்தா
உத்தமி பத்தினியானா
நான ஒருவன தஞ்சமென்று ஆமாந்திருந்தனானா
இந்தக்கனி யாரொரு கைக்கு சிக்கக்கூடாது
என்று சுண்டிவிட்டாள்
காதவளி தூரம் இலுமிச்சங்கனி ஓடிவிட்டதில்ல

அப்ப இலுமிச்சங்கனிய
இவள் பினனாலேயே தொடர்ந்து ஓடிப்போயி
இலுமிச்சங்கனி ஓடிவிட்டது
அதிலொருத்தன் ஒரு இலுமிச்சங்கனியப்போயி
இவ்வளவுதூரம் எந்தவிதமாக ஓடிக்
கனிபிடிக்கப் போறோமென்று
ஒரு இலுமிச்சம் மரத்தடியில போயி
ஒரு இலுமிச்சங் கனிய கைல எடுத்தார்
தப்பி விளுந்த பளதத

ஆறுபேரும் சுண்டிவிட்ட கனிய
கொண்டுபோயி அடையாளம் காமிக்க
வேணுமென்று ஓடிவிட்டார்
ஒருத்தனாவந்து நம்மதான்

ஒப்புக்கொள்ளுதமென்று மனசில எண்ணி
கன்னிப்போன கனிய எடுத்துத்
திரும்பி வருங்காலம்

பெரியண்ணன் பெரியசாமி பொண்டாட்டி
சின்னண்ணன் சின்னசாமி
ஒடங்கட்டையிலே சுத்திவந்து
தட்டிமுடிஞ்சாள் தாமரப்பூ சுங்குவிட்டாள்
என்னோட முந்திச் சீல ஒருமொளசில
வெளிய கிடக்கவேணும்

மதத ஒடம்பெல்லாம்
சுத்தமா வேகவேணும் என்று
சத்தியம் பண்ணி மனதுல எண்ணி தெய்வத்த
சுத்தமாய் இருந்தாலும்
யாரொருவருக்கும் என்னோட ஒடம்பு
வெளிய தெரியக்கூடாது
என்னோட முந்திச்சீல ஒருமொளசிலதான்
வேகாம கிடக்கவேணுமென்று சொல்லி
என்னுட தெய்வமே வந்து காத்துமே
நான் உத்தமி பத்தினியானால்
ஒருத்திக்கு ஒருவனுக்குப் பிறந்திருந்தால்
இந்த சீலயும் வெளியகிடக்கவேணுமென்று சொல்லி
பாஞ்சாளாம் அக்கினிலே

ஆறுபேரும் கனிபின்னால ஓடிவிட்டார்
ஒருத்தன் ஓடிவந்து பார்க்கும்போது
பெரியண்ணன் பெரியசாமி பொண்டாட்டி
சின்னண்ணன் சின்னசாமி ஒடங்கட்டை யிலிருந்து
அப்போ முந்திச்சீல ஒருமொளசீல
வெளியயும் வேகாம கெடக்குதென்று
கைலயும் எடுத்தான்
இதுதான் நம்ம சம்சாரமென்று
மனசுல எண்ணிவந்தான்
மீளவும் தானெடுத்து

கைவெச்சி நின்றான
கண்ணீரொடங்கவிட்டு
நமக்கு இந்தக்கனி கெடைக்கவில்லை என்று
ஒரும்காடி ஓசனயும்
அவனுக்கு ஓடிவந்ததில்ல

அப்ப ஆறுபேறும் கனியெடுத்து
ஒருத்தங் கனியெடுத்து
அஞ்சிபேரு கைலியும் சிக்கவில்ல
ஒருகனி அங்க எடுத்தவன்
நீ வச்சிக்கப்பா அந்த அவள பெண்சாதிய
என்று சொல்லிவிட்டான்
ஆறுபேரும் திரும்பிவரும் காலம்
பாத்தானாம் என்னவாம்

அங்கருந்து ஓடிவாராம
பதறாம வாங்கய்யா
சின்னண்ணன் சின்னசாமியோட
ஓடங்கட்ட ஏறிவிட்டதந்த
ஓடங்கட்ட ஏறிவிட்டதென்று சொன்னானாம்

அப்ப அவகளும் மிந்திச் சீல எடுத்து
இதுதானப்பா நம்ப கொலசாமி
எங்கயும் போகவேணாம்
இந்த சீலவச்சி நாம
கும்பிட்டா போதும் அல்லா கோயிலென்று
மனசுல எண்ணி
வீட்டுக்கு வாராக

சின்னண்ணன் சின்னசாமி
ஊருல வந்து நொளையும்போது
அப்போ பெரியண்ணன் பெரியசாமி
புள்ளய போட்டு
என்னவிதமா ஆட்டுனான்

பாலும் அடுப்பிலயாம்
பாலகனும் தொட்டியில

சித்தப்பன தேடிப்போன
சின்னக்கன்னி வரவுமில்ல
தூங்குடாமகனே தூங்கு என்று
தொட்டிப்பாட்டு படிச்சானாம்
பெரியண்ணன் பெரியசாமி

ஏளு குங்குமாக்கட்டக்காரரும் வந்து
ஐயா ஒன்னோட சம்சாரம்
ஒடங்கட்ட ஏறிட்டா
புள்ளய அனாதி பள்ளிக்கொடத்தில
விடவேணும் என்று சொல்லி விட்டாக

எங்கய்யா போயி நீங்க
பாத்த என்று கேக்கும்போது

ஏளுமானும் ஏளுமான் புள்ளையும்
ஏளு பிலாமரத்துக்கு அந்தப்பறம
அம்புனால எய்துவிட்டாயப்பா
ஒன்னோட பெண்சாதியும் சொன்னதென்று
நாங்க போய்ப் பாத்தோம்
உங்களுக்கு ஏளுபேருக்கு
பாரியாகிறேனென்று சொல்லி
எங்கள ஒடங்கட்ட வேகவச்சி
எங்கள கொளுந்தன வேகவையுங்கள்
என்று சொன்னாளாம்
நாங்க கட்ட வெட்டி அடுக்கி
வேகவச்சி விட்டமையா
இனி யாரொணும் பாக்கவேணாம்
ஒன்னோட கொளுந்தன நீம ஒப்புக்கொண்டுக
என்று சொல்லிவிட்டு
அப்பறமா காலிபண்ணிப் போனாக

பாடியவர்: க. பெரியகாளிமுத்து.

குறிப்பு:

ஒரு வீட்டின் அறையில் ஆணும் பெண்ணுமாக சுமார் இருபதுபேர் நெருக்கமாகக் குழுமியிருக்க பிடிப்புகையின்

நடுவே அமர்ந்து பாடகர் பாடினார். அனைவரும் ஆர்வத்துடன் பாடலைக் கேட்டனர். பாடல் ஒருவித சோக இசையில் பாடப்பட்டது. பாடல் கதை புரிந்து கொள்ளக்கூடியதாக அமைந்திருப்பினும் பாடல்அடிகள் முன் பின்னாகவும் முரணாகவும் தெளிவற்றும் பாடப்பட்டன. பாடகரின் நினைவுக்குறைவு இதற்குக் காரணமாகலாம். எட்டு வயதில் கற்றுக்கொண்ட இப்பாடலை இன்றும் பிறருக்குப் பாடிக் காட்டுவது உண்டு என்றார். பாடலுக்கு தலைப் பெதுவும் தரவில்லை.

கதையின் இறுதியில் வரும் ஏழுபேரும் ராவுத்தர்கள் என்றும் துணியை வைத்து அக்காலத்தில் வணங்கியிருக்கலாம் என்றும் பாடகர் கூறினார். தற்போது வணங்குகிறார்களா என்பது தெரியாது என்றார்.

அவள் தன்னைப் பத்தினி என்று கூறிக்கொள்வது சரியா என்று கேட்கப்பட்டதற்கு அவர் கூறிய பதிலின் சாரம் வருமாறு:

''கொழுந்தனைத்தான தஞ்சமென்று நடந்தாள்.
வெளியில் அடிப்படிச் செய்யவில்லை. கொழுந்தனிடம்
அவ்வாறு நடந்துகொள்வது தவறில்லை ...
இந்த வீட்டில் உணவு இல்லாவிட்டால் அடுத்த
வீட்டில் சாப்பிடுவது போல்தான் ... புருஷனைப்
பொறுத்தவரை தப்பு; அவளைப்பொறுத்தவரை சரி''.

(ஒலிப்பதிவு நாடா எண்: 1)

5. மதுரை (மீனாட்சிபுரம்)

பெரியண்ணன் பெரியண்ணன் பெரியசாமி
பெரும்புலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள பெரியாண்டியானவரும்

சின்னண்ணன் சின்னண்ணன் சின்னச்சாமி
சிறுபுலி வேட்டக்காரர்
னத்தினால் பிறந்த
வரணமுள்ள சின்னாண்டியானவரும்

இருவருமாகச் சேர்ந்து கொண்டு
வேட்டைக்குப் போகலாம் என்று
பேசிக்கொண்டு இருக்கின்ற நேரத்தில்

சின்னண்ணன் சின்னண்ணன் சின்னச்சாமி
சிறுபுலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள சின்னாண்டியானவரும்

அப்போது அது சமயமாக
மதனியைக் கேட்டுவிட்டு வருகிறேன் என்று சொன்னார்

அப்படிக் கேட்கின்ற நேரத்தில்
மதனியைக் கேட்டுவிட்டால்
போக வேண்டாம் என்று சொல்வார்கள்
நீ வேகமாகச் சென்று வருவாயப்பா
வேட்டைக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னார்

பெரியண்ணன் பெரியண்ணன் பெரியசாமி
பெரும்புலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள பெரியாடிண்யானவரும்

இருவருமாகச் சேர்ந்து கொண்டு
புளியமரம் கடந்து
ஆலாமரம் கடந்து

அரசமரம் தான் கடந்து
வன்னிமரம் போய் நின்று

சின்னண்ணன் சின்னண்ணன் சின்னச்சாமி
சிறுபுலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள சின்னாண்டியானவரும்
நாம் இருவரும் வருகின்ற நேரத்தில்
வில்லம்பை வீட்டில் வைத்துவிட்டோம்
இப்பொழுது இங்கு
எச்சித் துப்பி வைக்கிறேன்
இந்த எச்சி உணர்வதற்கு முன்பு
வில்லம்பைத் தானெடுத்துக் கொண்டு
வேகமாக வரவேண்டுமென்று சொன்னார்
பெரியண்ணன் பெரியண்ணன் பெரியசாமி
பெரும்புலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள பெரியாண்டியானவரும்

அப்போது
சின்னண்ணன் சின்னண்ணன் சின்னச்சாமி
சிறுபுலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள சின்னாண்டியானவரும்
வன்னிமரம் தான் கடந்து
அரசமரம் கடந்து
ஆலாமரம் கடந்து
புளியமரம் தான் கடந்து
வேகமாகச் சென்று
வீடு வருகின்ற நேரத்தில்
மதனியானவரும்
வேட்டைக்குப் போக வேண்டாம் என்றுரைத்தார்

அப்படிக் கேட்கின்ற நேரத்தில்
சின்னண்ணன் சின்னண்ணன் சின்னச்சாமி
சிறுபுலி வேட்டக்காரர்

வனத்தினால் பிறந்த
வரணமுள்ள சின்னாண்டியானவரும்
என்ன உரைக்கின்றார்
இப்பொழுது அண்ணனை வனத்தினில்
விட்டுவிட்டு வந்திருக்கிறேன்
வேகமாகத்தான் போகவேணுமென்று
மதனி சொல்லைத் தட்டிக் கொண்டு
வில்லம்பைக் கையிலெடுத்து
வில்லம்பைக் கையிலெடுத்து
வேகமாகச் சென்று
புளியமரம் தான் கடந்து
புங்கமரம் கடந்து
ஆலாமரம் கடந்து
அரசமரம் தான் கடந்து
வன்னிமரம் வந்திருக்கின்ற நேரத்தில்
தம்பி நீ கிழக்காமல மரத்தில் உட்காருவாயப்பா
நான் மேற்காமல மரத்தில் உட்காருகிறேன்
என்று சொன்னார்

பெரியண்ணன் பெரியண்ணன் பெரியசாமி
பெரும்புலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள பெரியாண்டியானவரும்

அது சமயமாகப்
பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில்
ஏழ்மான் வருகிறது
ஏழ்மான் குட்டியும் வருகிறது
ஏழ் முயல் வருகிறது
ஏழ் முயல் குட்டியும் வருகிறது

வருகின்ற நேரத்தில்
நீ மேற்காமல மரத்தில் உட்காருவாயப்பா
நான் கிழக்காமல மரத்தில் உட்காருகிறேன் என்று சொல்லி
இருவருமாக மரத்திலேறிக் கொண்டிருக்கின்றார்

அப்பொழுது மரத்திலேறிக் கொண்டு
பெரியண்ணன் பெரியண்ணன் பெரியசாமி
பெரும்புலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள பெரியாண்டியானவரும்
தம்பி நீ அம்பு போடுகிறாயா
நான் அம்பு போடவா என்று கேட்கின்றார்

கேட்கின்ற நேரத்தில்
நீங்கள் தான் அம்பு போட வேண்டும் என்று சொன்னார்
சின்னண்ணன் சின்னண்ணன் சின்னச்சாமி
சிறுபுலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள சின்னாண்டியானவரும்

பெரியண்ணன் பெரியண்ணன் பெரியசாமி
பெரும்புலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள பெரியாண்டியானவரும்
வில்லம்பைத் தானெடுத்து
வேகமாக அம்பை எய்து கொண்டு வருகின்றார்

வருகின்ற நேரத்தில்
ஏழு மானுக்கும் தைத்து
ஏழ்மான் குட்டிக்கும் தைத்து
ஏழ் முயலுக்கும் தைத்து
ஏழ் முயல் குட்டிக்கும் தைத்து
தம்பி நெஞ்சாங் குலையில் பாய்ந்து விட்டது அம்பு

அந்த அம்பையும் மண்டிகால் போட்டுப் பிடுங்கிக்
கொண்டு
மானையும் தூக்கிக் கொண்டு
ஏழ் மானையும் தூக்கி
ஏழ்மான் குட்டியும் தூக்கி
ஏழ் முயலையும் தூக்கி

ஏழ் முயல் குட்டியும் தூக்கி
வீடு வருகின்ற நேரத்தில்

மதனியானவரும் என்ன கேட்கின்றார்
எங்கே என் கொழுந்தனை எங்கே
என்று கேட்கும்போது

உன்னுடைய கொழுந்தன்
ஆடுமாடு மேய்க்கும் இடத்தில்
குண்டு வெளையாண்டு கொண்டிருப்பான்
அங்கு போய்ப்பார் என்று சொன்னார்
பெரியண்ணன் பெரியண்ணன் பெரியசாமி
பெரும்புலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள பெரியாண்டியானவரும்

அது சமயமாக
மதனியானவரும் வேகமாகச் சென்று
அங்கு ஆடு மாடு மேய்க்கின்ற இடத்திற்கு
வேகமாகப் போய்ப் பார்க்கின்ற நேரத்தில்
அங்கேயும் கொழுந்தனைக் காணவில்லை
வேகமாக வீடு வந்து கேட்கின்ற நேரத்தில்

பெரியண்ணன் பெரியண்ணன் பெரியசாமி
பெரும்புலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள பெரியாண்டியானவரும்
உன்னுடைய கொழுந்தன்
அங்கு பந்து விளையாடுமிடத்தில்
பந்து வெளையாண்டு கொண்டிருப்பான்
அங்கு போய்ப்பார் என்று சொன்னார்
அப்பொழுது வேகமாகச் சென்று
மதனியானவரும்
பந்து வெளையாண்டு கொண்டிருக்கும்

இடத்திற்குப் போய்ப் பார்க்கும்போது
அங்கேயும் கொழுந்தனைக் காணவில்லை

ஒரு சொம்பு தண்ணீரையும் எடுத்துக் கொண்டு
தட்டுப் பிரம்பைக் கையிலெடுத்து
புளியமரம் கடந்து
புங்கமரம் தான் கடந்து
ஆலாமரம் கடந்து
அரசமரம் தான் கடந்து
வன்னிமரம் போய்ப் பார்க்கின்ற நேரத்தில்
அந்தக் கட்டெறும்பானதும்
சூரசூரமாகப் புதையை
சுற்றிக் கொண்டு வருகின்றது சூரம்புதையை

சின்னண்ணன் சின்னண்ணன் சின்னச்சாமி
சிறுபுலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள சின்னாண்டியானவரும்
சூரம்புதையில் இருக்கின்றார்

மதனியானவரும்
ஒரு சொம்பு தண்ணீரையும் தெளித்து
தட்டுப்பிரம்பால் கொழுந்தனை
ஒரு தட்டுத் தட்டி எழுப்பினார்

எழுப்பியதும்
சின்னண்ணன் சின்னண்ணன் சின்னச்சாமி
சிறுபுலி வேட்டைக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள சின்னாண்டியானவரையும்
வாருங்கள் வீட்டுக்குப் போகலாம்
என்று சொன்னார் மதனியானரும்

அப்பொழுது
சின்னண்ணன் சின்னண்ணன் சின்னச்சாமி
சிறுபுலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த

வரணமுள்ள சின்னாண்டியானவரும்
என்ன உரைக்கின்றார்
செத்தவனைக் கொண்டு போனால்
உலகம் சிரிக்கும்
உற்றார்கள் பேசுவார்
நாடு ஏசும் என்று சொன்னார்
சின்னண்ணன் சின்னண்ணன் சின்னச்சாமி
சிறுபுலி வேட்டக்காரன்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள சின்னாண்டியானவரும்

அது சமயமாக
இருவரும் தாவாடிக் கொண்டு வருகின்ற நேரத்தில்
சந்தனக் கட்டை குங்குமாக் கட்டையுடன்
கிழமுகமாக இருந்து மேல்திசையை நோக்கி
ஏழ்வண்டிப் பாரம் வருகின்றது

வேகமாகச் சென்று மதனியானவரும்
ஏழ்வண்டிப் பாரத்தையும் முன்மறித்து
இந்த எலுமிச்சங் கனியை உருட்டி விடுகிறேன்
யார் ஏழுபேரில் முதலில் கொண்டு வருகிறாரோ
அவர்களுக்கு நான் அடிமையாகிறேன்
என்று சொன்னார்

அப்பொழுது
எலுமிச்சங் க்னியைப் பின்னோக்கிச்
சென்றுவிட்டார்கள் ஏழுபேரும்

ஏழுவண்டி சந்தனக் கட்டை
குங்குமக் கட்டையும் கீழிறக்கி
கொழுந்தனைத் தூக்கி மேலில் வைத்து
தீ மூட்டி எரிக்கின்ற நேரத்தில்
ஏழ் வண்டிக் காரர்களும் வந்துவிட்டார்கள்

வருகின்ற நேரத்தில்
சின்னண்ணன் சின்னண்ணன் சின்னச்சாமி

சிறுபுலி வேட்டக்காரர்
வனத்தினால் பிறந்த
வரணமுள்ள சின்னாண்டியோடு சேர்ந்து
தீயில் மூழ்கிவிட்டார்கள்

பாடகர்: பெ. கந்தசாமி.

குறிப்பு:

நான்காவது பாடல் குறிப்பில் குறிப்பிட்ட சூழலில் பாடல் பதிவு செய்யப்பட்டது. பாடல் ஒருவித சோக இசையில் பாடபபட்டது. பதினைந்து அல்லது பதினாறு வயதில் அப்பாவிடமிருந்து கற்றுக்கொண்ட இப்பாடலை இரவில் படுக்கப்போகும் போது பொழுதுபோக்காகப் பாடுவது உண்டு என்றும் பிறருக்குப் பாடிக் காட்டுவது உண்டு என்றும் கூறினார்.

'சின்னண்ணன் சின்னச்சாமி மதனியோடு இஷ்டமாக இருப்பதால்தான் பெரியண்ணன் பெரியசாமி தம்பி மீது சந்தேகப்படுகிறார்' என்றும் 'இச்செய்தி தான் கற்ற பாட்டில் இடம் பெறாததால்தான் பாடவில்லை' என்றும் பாடகர் கூறினார்.

'வனத்தினால் பிறந்த வரணமுள்ள' என்பதன் பொருளைப் பாடகர் அறிந்திருக்கவில்லை.

சூரம்புதை - பழவர்க்கமுள்ள முட்செடிப்புதர்' என்றார்.

(ஒலிப்பதிவு நாடா எண்: 1)

6. மதுரை (மீனாட்சிபுரம்)

ஒரு கிராமத்தில் அண்ணந்தம்பி இருவர்.

ஒருநாள் அந்தக் கிராமத்தில் உள்ள அனைவரும் வேட்டைக்குச் செல்கின்றனர்.

ஊர் இளைஞர்கள் கூப்பிட இந்த அண்ணன் தம்பியும் வேட்டைக்குச் செல்கின்றனர். தம்பிக்கும் தன் மனைவிக்கும் கள்ள உறவு இருப்பதாகச் சந்தேகப்படும் அண்ணன் அதனைச் சோதித்துப் பார்ப்பதற்காக வில்லை வீட்டில் வைத்துச் செல்கிறான்.

சிறிது தூரம் போனவுடன் தம்பியின் மாரில் சந்தனத்தைப் பூசி வில்லை எடுத்து வருமாறு வீட்டிற்கு அனுப்புகின்றான். வீடு செல்லும் தம்பி வீட்டில் தலைவாசலில் ஒரு காலும் உள்ளே ஒரு காலும் வைத்து குழந்தைக்குப் பால் கொடுத்துக்கொண்டிருக்கும் அண்ணியிடம் வில் எடுத்துத் தருமாறு கேட்கிறான்.

அண்ணி அவன் மீதுள்ள பாசத்தினால் உள்ளே வந்து எடுத்துச்செல்லுமாறு கூறுகிறாள்.

அண்ணன் கட்டளைப்படி தான் உள்ளே வரக்கூடாது என்று கூறி அவன் மறுக்கிறான்.

அவள் மீண்டும் வற்புறுத்தவே இவன் உள்ளே நுழைந்து பரணில் உள்ள வில்லை எடுக்கிறான்.

அவள் எழுந்து அவனைக் கட்டிப்பிடித்து முத்தமிடுகிறாள்.

மாரின் சந்தனம் அழிந்திருப்பதைக் கவனிக்காமல் வில்லை எடுத்துக்கொண்டு அண்ணனிடம் திரும்புகின்றான்.

உண்மையை உணர்ந்துகொள்ளும் அண்ணன் சந்தனம் அழிந்ததற்கான காரணத்தைத் தம்பியிடம் கேட்கிறான்.

'வீட்டுப்பூனை குறுக்கே பாய்ந்து மாரில் வரண்டி விட்டது என்று தம்பி கூறுகிறான்.

சந்தேகம் நீங்காத அண்ணன் தம்பியிடம் 'நீ மான்களைக் கலைத்துக் கொண்டு வா; நான் அம்பு போடுகிறேன்' என்று கூறுகிறான்.

தம்பி மான்களைக் கலைத்து விடுகிறான்.

அண்ணன் அம்பைவிட அம்பு ஏழு பெலா மரத்தில் பாய்ந்து மான்குட்டியில் பாய்ந்து தம்பி மீது பாய்ந்தது. அண்ணன் தம்பியிடம் சென்று தான் வேண்டுமென்றே இவ்வாறு செய்யவில்லை என்றும், மான்மீது விட்ட அம்பு தவறி அவன்மீது பட்டுவிட்டது என்றும் கூறுகிறான்.

தம்பி உண்மையை உணர்ந்து கொள்கிறான்.

அண்ணன் தம்பியிடம் 'மானைத் தூக்கிச் செல்லவா; உன்னைத் தூக்கிச் செல்லவா' என்று கேட்கின்றான்.

'மானைத் தூக்கிச் சென்றாலும் பலர் சந்தோஷப்படுவார்கள்; என்னைத் தூக்கிச் சென்றால் அழுகையும் கூக்குரலும் தான் இருக்கும்; எனவே மானைத் தூக்கிச்செல்' என்று தம்பி கூறுகின்றான்.

அண்ணன் மானைத் தூக்கிக்கொண்டு வீட்டிற்குச் செல்கிறான்.

அவன் மனைவி கொழுந்தன் எங்கே என்று கேட்கிறாள். அவன் பொய் கூறுகிறான்.

அவள் சந்தேகமுற்றுக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு காட்டிற்குச் செல்கிறாள். ஆடுமாடு மேய்ப்பவர்கள் வழி காட்ட இருட்டில் கொழுந்தன் இறந்து கிடந்த இடத்தை அடைகிறாள்.

அழுது புலம்பிவிட்டு விறகுகளைப் பொறுக்கி அடுக்கி அதில் கொழுந்தனைத் தூக்கி வைத்துக் கொளுத்துகிறாள்.

குழந்தையோடு* தானும் அத்தீயில் விழுந்துஇறக்கிறாள். பாரவண்டியுடன் அங்கு வரும் நான்கு ராவுத்தர்கள் இக் காட்சியைக் கண்டு வருந்துகிறார்கள்.

அங்கே அவள் சேலைத்துணியில் கொஞ்சம் எரியாமல் கிடக்கின்றது. அத்துணியை எடுத்துச்சென்று பள்ளிவாசலில் வைத்து வழிபடுவதாக ஐதீகம்.

---

* கதை கூறும்போது குழந்தையோடு தீயில் விழுவதாகக் கூறவில்லை. பேட்டியின்போது 'குழந்தை என்ன ஆயிற்று? என்று கேட்டபோது இவ்வாறு கூறினார்.

கூறியவர்: பி. பால்பொன்னையா.

குறிப்பு:

ஊர்ப்பொது இடம் ஒன்றில் சுமார் பத்து ஆண்கள் (பல வயதுடையோர்) குழுமியிருக்க, கதை கூறப்பட்டது. கதைக்கு 'பள்ளப்பிள்ளை முத்திருளி' என்று பெயர் கூறினார். கதையில் வரும் பெண்ணின் பெயர் முத்திருளி என்றும் அவள் பள்ளர் சாதியைச் சேர்ந்தவள் என்றும் கூறினார். இது தவறான தகவல் என்றும் அத்தலைப்பில் வேறொரு கதை உள்ளது என்றும் அருகிலிருந்தவர்கள் கூற அறிந்து கொள்ள முடிந்தது.

அறுபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் தன்னுடைய ஊரில் (மீனாட்சிபுரம்) ஒரு பெரியவரிடமிருந்து (தற்போது அவர் உயிருடன் இல்லை) கற்றுக் கொண்ட கதை என்று கூறினார். அப்பெரியவர் இரவு நேரத்தில் பாடலாகப் பாடுவார் என்றும் கூறினார். தன்னுடைய பேரனுக்குப் பொழுதுபோக்காக இக்கதையைக் கூறுவது உண்டு என்றார். அவள் தப்பு செய்தவளாக இருந்தால் கொழுந்தன் எங்கே என்று கணவனிடம் கேட்க முடியுமா என்று கேட்டபோது 'இந்தக் காலத்தில் முடியாது, அந்தக் காலத்தில் கேட்கலாம்; நாகரிகம் இல்லாத காலம்' என்றும் மனைவியும் தப்பு செய்திருக்க ஏன் அவளைக் கொல்லவில்லை என்று கேட்டபோது 'மனைவிமீது அதிக பாசம் இருந்திருக்கும்' என்றும் தப்பு செய்தவளை ராவுத்தர்கள் வழிபடுவார்களா என்று கேட்டபோது 'அவர்களுக்கு நடந்தது எதுவும் தெரியாது' என்றும் கூறினார்.

(ஒலிப்பதிவு நாடா எண்: 1)

7. மதுரை (மீனாட்சிபுரம்)

ஒரு கிராமத்தில் சின்னண்ணன் சின்னச்சாமி பெரியண்ணன் பெரியசாமி என்ற அண்ணன் தம்பி இருந்தனர்.

பெரியண்ணன் பெரியசாமி மணமானவர்.

அவர் மனைவி கொழுந்தனை ஒரு குழந்தையைப் போல் கருதி பாசமாக இருப்பாள்.

அண்ணன் தம்பி வேலைக்குச் செல்லும்போது கணவனுக்குச் சாதாரணமாகவும் கொழுந்தனுக்குச் சிறப்பாகவும் சமைத்து அனுப்புவாள்.

இது பெரியண்ணனுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

தம்பியைக் கொல்லத் திட்டமிடுகின்றான்.

அக்கால வழக்கப்படி ஒருநாள் அண்ணன் தம்பி இருவரும் வேட்டைக்குச் செல்லத் திட்டமிடுகின்றனர்.

மதனி, சின்னண்ணன் சின்னச்சாமியிடம் அவன் அண்ணனின் சந்தேகத்தையும் திட்டத்தையும் எடுத்துக்கூறி எச்சரிக்கிறாள்; மேலும், வேட்டைக்குச் செல்ல வேண்டாம் என்று கூறுகின்றாள்.

அண்ணன் பேச்சை மறுக்க முடியாது என்று கூறி அண்ணனோடு அவன் வேட்டைக்குச் செல்கிறான்.

பெரியண்ணன் பெரியசாமி திட்டமிட்டு வில்லை வீட்டில் வைத்து வருகிறான். தம்பியின் நெற்றியில் குறுமணலைப் பூசி வில்லை எடுத்துவர வீட்டிற்கு அனுப்புகின்றான்.

வீட்டிற்குச் செல்லும் தம்பி மதனியிடம் வில்லைக் கேட்கிறான்.

பூனை குறுக்கே வருதல் போன்ற தீய சகுனங்களைக் கூறிச் செல்ல வேண்டாம் எனப் பலாத்காரமாக மதனி தடுக்கும் போது அவள் கைப்பட்டு அவன் நெற்றியில் பூசியிருந்த திருநீறு அழிந்துவிட்டது.

வில்லெடுத்துத் திரும்பும் தம்பியிடம் திருநீறு அழிந்ததற்கான காரணத்தைக் கேட்கிறான் அண்ணன்.

விட்டத்திலிருந்த பூனை மேலே தாவியபோது அதன் கால் பட்டு திருநீறு அழிந்துவிட்டதாகவும் தானும முகத்தைக் கழுவி வந்ததாகவும் தம்பி கூறுகிறான்.

அண்ணன் மேலும் சந்தேகப்பட்டு தம்பியைக் கொல்ல முடிவு செய்கிறான். மானைக் கலைத்து வருமாறு தம்பியை அனுப்புகிறான்.

தம்பி மானைக் கலைத்து வரும்போது அண்ணன் அம்பை எய்ய அம்பு ஏழு மரத்தையும் துளைத்து ஏழு மானையும் துளைத்து தம்பியையும் வீழ்த்துகிறது.

அண்ணன் தம்பியிடம் சென்று 'தவறாக நடந்துவிட்டது' எனக் கூறி 'உன்னை வீட்டிற்குத் தூக்கிச் செல்லவா' எனக் கேட்கிறான்.

அதற்குத் தம்பி 'என்னைத் தூக்கிச் சென்றால் துயரத்தால் முட்டுவார் கோடி மோதுவார் கோடி; ஏழுமானைத் தூக்கிச் சென்றால் மகிழ்ச்சியால் ஆடுவார் கோடி, அங்கலாய்ப்பார் கோடி' என்று கூறுகின்றான்.

அண்ணன் ஒரு மானைத் தூக்கிக் கொண்டு வீடு செல்கிறான்.

'கொழுந்தன் எங்கே' என்று அவன் மனைவி கேட்க 'மானைத் தூக்கிக் கொண்டு வருவான்' என்று பதில் கூறுகின்றான்.

நேரம் ஆக ஆக அவள் சந்தேகித்து ஒப்பாரி வைத்துக் கொண்டு கொழுந்தனைத் தேடிச் செல்கிறாள்.

அவன் ஒரு பக்கத்தில் குற்றுயிராக முனகிக் கொண்டு கிடக்கிறான்.

அண்ணன் விட்ட அம்பு தவறிப் பட்டுவிட்டதாகவும் அண்ணன் தன்னைக் கொல்லவில்லை என்றும் கூறி உயிர்விடுகின்றான்.

அவள் அழுது புலம்பி அங்கிருந்த சந்தனக் கட்டை, குங்குமக் கட்டைகளை வெட்டி அடுக்கி அதில் கொழுந்தனைத் தூக்கி வைத்துத் தீ மூட்டித் தானும் அத்தீயில் பாய்ந்து விடுகிறாள்.

அவளுடைய ஒரு கையும் கோசுகலமும் (கொசுவம்) தீயில் வேகாமல் இருந்தன.

அந்த ஊர் மக்கள் அதை எடுத்து வைத்து சின்னண்ணன் சின்னச் சாமியையும் அவன் மதனியாரையும் தெய்வமாகக் கொண்டாடுகின்றார்கள் என்று கூறுவது ஐதீகம்.

கூறியவர்: டி. செல்லத்துரை.

குறிப்பு:

பால்பொன்னையா கூறிய கதையைக் கேட்ட இவர் இக்கதையைக் கூறினார். தன்னுடைய பாட்டியும் பிற பெண்களும் கூறக்கேட்டு சிறுவயதில் (சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்) கற்றுக் கொண்டதாகக் கூறினார்.

தான் கேட்ட கதையில் இராவுத்தர்கள் இடம் பெறவில்லை என்று கூறினார். இவர் கூறிய 'பள்ளப்பிள்ளை முத்திருளி' என்னும் கதையில் (இக்கதை இங்கு இணைக்கப்பெறவில்லை) இராவுத்தர்கள் இடம் பெற்றனர்.

(ஒலிப்பதிவு நாடா எண் : 1)

8. பெரியார் (விளக்கேத்தி)

(1)

என்னடா சின்னச்சாமி
சிறுபுள்ளோர் தாட்டியனெ
ஆட்பாலப் பீச்சி
ஆயாவீட்டிலெ கொடுத்திட்டு
மாட்பாலப் பீச்சி
நங்கையாவீட்டிலெ கொடுத்திட்டு
நாயிக்குப் பழையசோறு
அண்ணனுக்கு வெஞ்சோறு
வெத்திலெ பொயிலெ சுண்ணாம்பு பாக்கு
அதி சீக்கிரமா கொண்டுவாடா.

அந்தச் சின்னண்ணஞ் சின்னச்சாமி
சிறுபுள்ளோர் தாட்டியனும்
வெத்திலையும் எடுத்துப்
பாலுகளும் பீச்சைபிலெ
பட்டியிலெ ஏவலிலெ சொல்லுதுன்னான்.

பெரியண்ணா பெரியசாமி
பாலுகளும் பீச்சையிலெ
பட்டிகளில் ஏவலிலெ சொல்லுதுன்னான்.
அது சொன்னாலும் சொல்லிட்டும்
ஆட்பாலப் பீச்சி
ஆயாவீட்டிலெ கொடுத்திட்டு
மாட்பாலப் பீச்சி
நங்கையா வீட்டிலெ கொடுத்திட்டும்
நாயிக்குப் பழையசோறு
அண்ணனுக்கு வெஞ்சோறு
வெத்திலெ பொயிலெ சுண்ணாம்பு பாக்கு
(அதி சீக்கிரமா) கொண்டு வாடா.

(2)

அந்தப் பிறகாரம் தானே
சின்னண்ணஞ் சின்னச்சாமி

மாட்பாலப் பீச்சி
நங்கையா வீட்டுக்குக்கொண்டுகிட்டு
ஓடுனான் அந்நேரம்
ஓடும்போதுதானே நங்கையார்தானே
மைந்தனெ மடிமேல் வெச்சு
சாதங்கோ பண்ணுறாளே.

நங்கையாரெ நங்கையாரெ
பாலுகலயம் இந்தாங்கோ
சோறும் அடுப்பிலே
உங்கொண்ணம் பெத்த
பாலகனும் மடிமேலே
நடுட்டுலொரு காலும்
வாசப் புடியிலொரு காலும்
எட்டி உறியிலே வையுங் கொளுந்தனாரெ
எங்கண்ணந்தா(ங்) கண்டாலே
வெட்டித்தாம் போடுவானெ
குத்தித்தாம் போடுவானெ
இந்தாங்கோ பாலுகலயம்
போபோ கொளுந்தனாரெ
பொசங்கெட்ட கொளுந்தனாரெ
மதிகெட்ட கொளுந்தனாரெ
நடுட்டுலொரு காலும்
வாசப்புடியிலொரு காலும்
எட்டி உறியிலெ வையுங் கொளுந்தனாரெ
அந்தச் சின்னண்ணஞ் சின்னச்சாமி
சிறுபுள்ளோர் தாட்டியன்
ஏழெருமைப் பால் குடித்த
எளய தம்பி சின்னண்ணன்
நடுட்டுலொரு காலும்
வாசப்புடியிலொரு காலும்
எட்டி உறியிலெ வைக்கயிலெ
தள்ளித் தாளுகளெப் போட்டுக்கொண்டாள்
மைந்தனெ ஏணிகட்டி ஏறி

சுரங்காய் ஆட்டிட்டுத்தானெ
சின்னச்சாமிக்கு
மட்டிப்பால் மருக்கொழுந்து
சாந்து சவ்வாது
கெந்தங் கசுத்தூரி...
போத்தன தந்தாள்[2]...

(3)

பொழுது கிளம்புதுங்கோ
பொற்கோழி கூப்பிடுது
தாளுகளைத் துறங்க நங்கெ
இந்தப் பிறகாரம் தானும்
சின்னண்ணஞ் சின்னச்சாமி
பொழுது கிளம்புதுங்கோ
பொற்கோழி கூப்பிடுது
தாளுகளைத் துறங்க நங்கெ
போபோ கொளுந்தனாரெ
போசங்கெட்ட கொளுந்தனாரே
மதிகெட்ட கொளுந்தனாரெ...
கல்லால் அடிக்குஞ் சாதம் வாதி துலங்க[3]...
அந்தப் பிறகாரம் தானெ
அழுது புலம்பிக்கொண்டு
சின்னண்ணஞ் சின்னச்சாமி
மாருவிட்ட கண்ணீரும்
சாரா வடிக்கிறானெ
அந்தச் சின்னண்ணஞ் சின்னச்சாமி
மாருவிட்ட கண்ணீரும்
சாரா வடிச்சுக்கொண்டு
பொழுது கிளம்புதுங்கோ
பொற்கோழி கூப்பிடுது
தாளுகளைத்துறங்க நங்கெ
நங்கையார் தானே
திடுக்கிண்டு எழுந்திருச்சி
தாளுகளெ நீக்கிவிட்டாள்

திண்ணமேலே உக்காந்துக்கிட்டு
சின்னண்ணஞ் சின்னச்சாமி
மாருவிட்ட கண்ணீரும்
சாரா வடிக்கிறானெ

(4)

நாயிக்குப் பழய சோறு
அண்ணனுக்கு வெஞ்சோறு
வெத்திலெ பொயிலெ சுண்ணாம்பு பாக்கு
சீக்கிரமா கொண்டு வந்தான்

சும்மாட்டக் கூட்டி
தலைமேலெ வெச்சுக்கிட்டு
நங்கையாரெ நங்கையாரெ
எங்கண்ணந்தா(ங்) கண்டா!
வெட்டித்தாம் போடுவானெ
குத்தித்தாம் போடுவானெ
ஏதடா சின்னண்ணா
இத்தனாளுங் காணோ(ம்)
இதிகாலம் காணோம்
மேலுக் காலெல்லாம்
வாடையிலெ இருக்குதுன்னா
என்ன வழி சொல்வேன் நங்கெ?
ஆயா வீட்டுக்கும் பிறவாண்டை
தங்குருமாலை வாசங்கட்டி வைத்திருந்தது
உதிரிமயிர் கட்டிப்போச்சு
அந்த வாடையினு சொல்லுங் கொளுந்தனாரெ

ஏதடா சின்னண்ணா
இத்தனாளுங் காணோம்
இதிகாலம் காணோம்
கண்ணுக் காதெல்லாம்
சொருக்கியா இருக்குதுன்னா
என்னவழி சொல்வேன் நங்கெ?

அந்த ஆயாவீட்டிலெ
சாதமாக நேரமாயிப்போச்சு
முழிச்சிக்கிட்டிருந்த
அந்தச்சொருக்கியின்னு சொல்லுங் கொளுந்தனாரெ
ஏதடா சின்னண்ணா
இத்தனாளுங் காணோம்
இதிகாலம் காணோம்
மேலுக் காலெல்லாம்
கிள்ளுக் காயமா இருக்குதுன்னா
என்ன வழி சொல்வேன் நங்கெ?

ஆயா வீட்டுக்கும் பிறவாண்டை
கறவைக் கன்னு கட்டியிருந்தது
கறவைக் கன்னெ அவுத்துடப்போயி
அது முள்ளுமேலெ தள்ளி
அந்தக் காயோம் பெரிய அண்ணா

(5)

சும்மாட்டக் கூட்டித்
தலெ மேலெ வெச்சிக்கிட்டு
ஓடுனான் சின்னண்ணேன்
ஓடும்போது தானே
ஏழேருக்கு மிந்தேரு
ஒட்டுற. பெரியண்ணா பெரியசாமி
சாப்பிடலாம் வாங்கள் என்றான்

அந்தப் பெரியண்ணம் பெரியசாமி
இருந்தாலும் இருக்கட்டும் சின்னண்ணா
சிங்கார வில்லும் அம்பலப் பொதியும்
பெரிய அட்டாலியிலெ கெடக்குது
அதி சீக்கிரமா கொண்டுவாடா
கொண்டுவரச் சொல்லத்தானெ
அந்தச் சின்னண்ணஞ் சின்னச்சாமி
குண்டோட்டம் குறுநடையா

ஓடுறான் ஊட்டுக்குத்தான்
ஊட்டுக்குப் போகும்போது
அந்த நங்கையா
தண்ணிக் கொடம் எடுத்துத்
தண்ணிக்குப் போயிட்டாளெ
சன்னல்ல நுழைஞ்சோடித்தானெ
சிங்காரம் வில்லும் அம்பலப் பொதியும்
எடுத்துக்கொண்டு
வாசப்புடி தாண்டி
வெளியிலே வாரானெ

நங்கையார் தானே
கொடத்தைக் கொண்டு வந்து
சிங்கார வில்லும் அம்பலப் பொதியும் வில்லும்
முறிஞ்சுபோச்சுன்னு
சொல்லுங் கொளுந்தனாரெ[4]......
நீ குடுத்த குடி மாண்டனையோ

நங்கையாரெ நங்கையாரே
உன்னாலெ என்னுயிரு
போனாலும் சரி
விட்டுடு நங்கையாரெ

அந்தச் சிங்கார வில்லும்
அம்பலப் பொதியும் தானெ
பெரியண்ணன் எடத்துக்குச்
சின்னண்ணஞ் சின்னச்சாமி
கொண்டு போறான் அந்நேரம்

(7)

கொண்டு போயித்தானெ
பெரியண்ணன் தானெ
ஏழேரு அவுத்துட்டுட்டு
ஆலாமரத்துக்குப் போயி (விழுது) ஓடிச்சிப்
பல்விளக்கி வாரானே

ஏதடா சின்னண்ணா
இத்தனாளுங் காணோம்
இதிகாலங் காணோம்
கண்ணுக் காதெல்லாம்
சொருக்கியா இருக்குதடா?

ஆயா வீட்டிலெ
சாதமாக நேரமாயிப்போச்சி
முழிச்சிக்கிட்டிருந்த
அந்தச் சொருக்கி பெரியண்ணா
ஏதடா சின்னண்ணா
இத்தனாளுங் காணு(ம்)
இதிகாலங் காணும்
மேலுக் காலெல்லாம்
வாடைகள் வீசுதென்றான்
அந்த ஆயா வீட்டுலெ
தங்குருமாலெ
வாசங்கட்டி வைத்திருந்தது
உதிரி மதிரி பார்த்து
அந்த வாடை பெரியண்ணா

ஏதடா சின்னண்ணா
இத்தனாளுங் காணும்
இதிகாலங் காணும்
மேலுக் காலெல்லாம்
கிள்ளுக்காயமா இருக்குதடா

ஆயாவீட்டுக்கும் பிறவாண்டை
கறவைக்கன்னு கட்டியிருந்தது
கறவைக்கன்னெ அவுத்துடப்போயி
அது முள்ளுமேலெ தள்ளி
அந்தக் காயோம் பெரியண்ணா.

(8)

...... சாப்பிட்டுக்கிறேன்[5] ......
ஆட்டுக்களெ அவுத்துட்டு

வடபுறமாச் சாச்சு
மாட்டுக்களெ அவுத்துட்டு
மேவறமாச் சாச்சுட்டு
தென்புறமா நில்லுன்னான்
அந்தச் சின்னண்ணஞ் சின்னச்சாமி
ஆட்டுக்களெ அவுத்துட்டு
வடபுறமாச் சாச்சிட்டு
மாட்டுக்களெ அவுத்துட்டு
மேவறமாச் சாச்சிட்டு
தென்புறமா நின்னானெ
அந்தப் பெரியண்ணம் பெரியசாமீ
சிங்கார வில்லும் அம்பலப் பொதியும் எடுத்து
மானெ எய்தோம் என்று எய்ய
மானுக்கும் பட்டு மயிலுக்கும் பட்டு
அம்புதலைச் சிலம்போடிப்போச்சு
அம்புகளும் சிக்கவில்லை
தம்பி வெள்ளரீப் பழம்போலெ
வேகாந்து கிடக்கிறானே
அந்த நங்கையார் தானெ
கூடைகளெ எடுத்துப்போயி
ஆலாமரத்துக்கு மேலெ ஏறிப்
பாருவி பார்க்கிறாளெ

நூறுக்கு நூறுஞ் சொந்நாக்குறச்
கரவு கொண்ட பாட்டப்பன்
புகை குடிச்சு வாரானெ
பாட்டப்பா! பாட்டப்பா!
மானெ ஏவும்படி ஏவ
மானுக்கும் பட்டு மயிலுக்கும் பட்டு
அம்புதலைச் சிலம்பு சென்று
அம்புகளும் சிக்கவில்லை
தம்பி வெள்ளரிப்பழம் போலெ
வேகாந்து கிடக்கிறதுக்கு
ஒரு யோசினெ சொல்லு பாட்டப்பா![6]

... ...

... ...

1. இந்தக் கதைப்பாடலைப் பாடிய அந்த இருவருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இந்தப் பகுதிகளில் சில வரிகள் விடப்பட்டுள்ளன போலும். பாடியவரின் மறதியாக இருக்கலாம் அல்லது அவரே விட்டு விட்டுப் பாடியிருக்கலாம் என்று தோன்றுகிறது.

3. இங்கும் சில வரிகள் இல்லை. அல்லது பழைய வரிகள் திரும்பவும் கூறப்பட்டதுபோல் தோன்றுகிறது.

4. இங்கும் சில வரிகள் இல்லை.

5. இங்கும் சில வரிகள் இல்லை.

6. பாடல் முடிவுறவில்லை.

சேகரித்து மேற்கண்டவாறு 'புலமை' (ஜூன் 1981) இதழில் 'சின்னண்ணன் - சின்னச்சாமி கதைப்பாட்டு' என்னும் தலைப்பில் வெளியிட்டவர் டாக்டர் இர. பன்னீர்செல்வம் அவர்கள். அவர் இப்பாடல் சேகரிப்புப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"இந்தக் கதைப்பாடலை எனக்குப் பாடித் தந்தவர் எங்கள் தோட்டத்தில் பணியாற்றும் விவசாயி பெரிய முத்தான் என்பவர். இத்தோட்டம் கோவை மாவட்டம், ஈரோடு வட்டத்தில் விளக்கேந்தி என்ற கிராமத்துக்கு அருகில் உள்ள மேகரையானூர் என்ற குடியிருப்பில் இருக்கிறது. அவர் பாடும்போது பின் இசை கொடுத்தவர் சின்ன முத்தான் என்பவர். அந்தப் பின்னிசைக்கு 'முறுவு' என்று பெயர். 'முறுவு' என்பது அவர்களிடமிருந்து தெரிந்தவரையில், ஒருவர் பாடல் பாடும்போது, பின்னால் மற்றொருவர் ஒருவகையான ஓலத்தை நீட்டி முழக்குவது ஆகும். இது நாதஸ்வரத்துக்கு ஒத்து ஊது வது போன்றதாகும். அது இருக்கும்போது இந்தக்

கதைப் பாடல் சுவாரஸ்யமாகவும் இன்னும் சிறிது மெருகுடையதாகவும் ஆகிறது.

இந்தப் பாடலைப் பதிவு செய்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒலிப்பதிவிலிருந்து பெயர்த்தெழுதியும் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்போதே இதன் கடைசிப் பகுதிகளைச் சரியாகப் பெயர்க்க முடியாதவாறு இயந்திரம் பழுதடைந்து விட்டதால் கடைசிப்பகுதி பாடலாக இல்லை. கதையின் முடிவைக் கதைச் சுருக்கத்தில் காணலாம்''.

இக்கதைப்பாடல் விளக்கேந்தி பகுதியில் மிகுதியாக வழங்கப்படக்கூடும் என்ற எண்ணத்தில் அங்கு 8.3.1984 அன்று களப்பணி மேற்கொள்ளப்பட்டது. முதலில் மேற்கண்ட பாடலைப் பாடிய பெரிய முத்தான் அவர்களைநாடி அதே பாடலைப் பாடச்செய்து பதிவு செய்யப்பட்டது. ஒரு குடிசையின் உள்ளே அமர்ந்து அவர் தனியாகவே பாடலைப் பாடினார். ஆண், பெண் இருசாராரும் வீட்டினுள்ளேயும் வெளியேயும் குழுமியிருந்து பாடலை ஆர்வத்துடன் கேட்டனர். டாக்டர் பன்னீர்செல்வம் பதிவு செயது பல ஆண்டுகள் ஆனாலுங்கூட பாடலில் அடிப்படை வேறுபாடு எதுவுமில்லை. எனவே, பாடலின் இறுதிப்பகுதி மட்டும் (இப்பகுதி டாக்டர் பன்னீர்செல்வம் பதிப்பித்த பாடலில் விடுபட்டுள்ளதால்) மேற்கண்ட பாடலின் தொடர்ச்சியாகக் கீழே தரப்படுகிறது.

மானுமயிலு இரு காவடி போட்டு
வீட்டுக்குக் கொண்டுபோடா பெரியண்ணா

தம்பிய கோவக் கொடியில்ல கால்லகட்டி
பெரண்டக் கொத்து மேலொடிச்சித் தள்ளிட்டு
மானுமயிலு இருகாவடி போட்டு
வீட்டுக்குக் கொண்டுபோடா பெரியண்ணா

பெரியண்ணன் அப்படியே தம்பிய
பெரண்டக்கொத்து மேலொடிச்சித் தள்ளிட்டு
மானுமயிலு இரு காவடிபோட்டு

ஊட்டுக்குக் கொண்டுபோறான்

கொண்டுபோகு போடிதானே(?)
நங்கையா சரச்சரண்ணு கீளெறங்கி
வீட்டுக்குப் போறாளே

வீட்டுக்குப்போயி பெரியண்ணனக் கண்டத
என்னொட ஏளெருமப் பால்குடித்த
எளயசெறு கொளுந்தனாரு
எங்கியோ பெரியண்ணா

மான மயில எறக்கிவச்சி
சாதங்க பண்ணச் சொன்னான்
அப்பறம் வாருமிண்ணான்

மானுமயிலு எறக்கிவச்சி
சாப்பாடு ஆயிவிட்டது
இனித்தான் சொல்லுங்களேன்

நீ சாப்பாடு போடு
நான் சாப்பிட்டு சொல்லுகிறேன்

சாப்பாட்டப் போடு
சொல்லிட்டுப் போறமிண்டு சொல்லும்போது
சாப்பாட்ட பெரியண்ணன் சாமிக்குப் போட்டுட்டு
ஏளுசுத் துகில் எடுத்து
சொப்புக் கொடத்திலே போட்டுட்டு
தண்ணிக் குடமெடுத்து
தன்னிவளி போறாளே

தன்னிவளி போகும்போது தானே
சொப்புக் கொடத்தத் தண்ணிக்
கெணத்தடியெ நிஞ்சிவிட்டு
பெறப்பிட்டுப் போறாளே அந்நேரம்

அந்தக் குள்ளநரி அண்ணமார்
குறுக்கே விளுந்தாரு
குள்ளண்ணா குள்ளசாமி
என்னோட ஏளெருமப் பால்குடித்த

எளையசெறு கொளுந்தனாரு
பட்ட படுகளத்தக் காணீரோ

நான் குட்டித்தல ரெண்டுதிம்பேன்
கொரங்காடு ஒண்டிநிப்பேன்
நான் எங்கே கண்டபிடி

அதுதாண்டிப் போகும்படி
காகமாமணி அண்ணன்மார்
குறுக்கே விளுந்தாரு

காகமாமணி அண்ணமாரே
ஏளெருமப் பால்குடித்த
எளையசெறு கொளுந்தனார்
பட்டபடுகளத்த காணீரோ
நான் பால்போட்ட(?) ரெண்டுதிம்பேன்
பனங்காடு ஒண்டிநிப்பேன்
நான் எங்கே கண்டபிடி

அதுதாண்டி போகும்படி
பெருநரி யண்ணன்மார்
குறுக்கே விளுந்தாரு

பெரியண்ணார் பெரியசாமி
ஏளெருமப் பால்குடித்த
எளையசெறு கொளுந்தனார்
பட்ட படுகளத்த காணீரோ

நான் மாட்டுத்தல ரெண்டு திம்பேன்
மலங்காடு ஒண்டி நிப்பேன்
நானெங்கே கண்டபிடி

அதுதாண்டி போகும்படி
கும்மினிச் சட்டண்ணமார்(?)
குறுக்கே விளுந்தையோ

கும்மிணிச் சட்டண்ணமாரே

ஏளெருமைப் பால்குடித்த
எளையசெறு கொளுந்தனார்
பட்டபடுகளத்த காணீரோ
எனக்கு காமிச்சி துதவினா
என்னதாரே யென்று
கும்மிணிச்சட்டண்ணமாரே கேக்குதையோ

நான் ஏளுசுத்து துகில்ல
ஒருசுத்து துகிலுனாயும்
ஒங்களுக்கு ஆறுமாசத்துக்கு நான்
பாரியையா (இ)ருக்குறேனே

சரிநான் பறந்தோடிப்போறேன்
என் நெளல புடிச்சிக்கொண்டு
வரச்சொல்லித் தானே
கும்மிணிச்சட் டண்ணமார்
பறந்தோடிப் போகுது
நங்கையா நெளலப் புடிச்சிக்கிட்டு
போறாக ளன்னேரம் ம்ம்

ஓடித்தான ரோசனகாதவளி போயி
பெரண்டக்கொத்துமேல ஒக்காந்திருக்கும்போது
பெரண்டக்கொத்துமேல் ஒக்காந்துகிட்டு
மாருவிட்ட கண்ணீரு மடியாசமிக்கிறா நங்கையா

வடக்கேருந்துதானே
மாங்காப்பொதி அணணமார்
ஏளுவண்டிதான பாரமோட்டி வராக
பாரமோட்டி வரும்போது
நங்கையார் தானே
மாங்காப்பொதி அண்ணமார்--அந்த
மாங்காப் பொதிய போட்டு
என்னோட ஏளெருமப் பால்குடித்த
எளைய கொளுந்தனார தவம் (?)
பண்ணினது மெய்யானா
ஒங்களுக்கு ஆறுமாசத்துக்கு

பாருவியா (இ)ருக்குறனே
நம்ம மாங்காப்பொதி போனாலும் போச்சி
இப்பேர்ப்பட்ட பொம்பள நம்மளுக்கு
எண்ணைக்கு சிக்கப்போறாண்ணு
மாங்காப் பொதிய போட்டு
கட்டயடுக்குறாங்க

தெக்கருந்துதான
குங்குமக்கட் டண்ணமாரு
ஏளுவண்டி பாரமோட்டி வாராகோ
குங்குமாக்கட் டண்ணமாரே
இந்த ஏளு வண்டியும்போட்டு

ஏளெருமப் பால்குடித்த
எளையசெறு கொளுந்தனார
தவம் பண்ணனது (?) மெய்யானா
ஒங்களுக்கு ஆறுமாசத்திக்குநான்
பாருவியா ருக்குறனே ம்

அந்தக் குங்குமாக் கட்டயபோட்டு
ஏளெருமப்பால்குடித்த சின்னண்ணன்
ஏளுகட்டல (அ)டுக்கி வச்சாரு

கட்டயில வைக்கும்போது
சந்தனக்கட் டண்ணமார்
வடக்கருந்து ஏளுவண்டி பாரமோட்டி வராக ம்

சந்தனக்கட் டண்ணமாரே
இந்த சந்தனக்கட்டய போட்டு
ஏளெருமப் பால்குடித்த
எளைய செறு கொளுந்தனார
தவம் பண்ணனது (?) மெய்யானா
ஒங்களுக்கு ஆறுமாசத்திச்கு நான்
பாருவியா (இ)ருக்குறனே

சந்தனக் கட்ட குங்குமாக்கட்ட மாங்கட்ட
எல்லாம்போட்டு கட்டமா அடுக்கித்தானே

தீயிகள மூட்டுறானே
தீயிகள மூட்டும்போது
இத்தன பேருக்கும்நாம
ஆருக்குன்ணு பாரிவையாயிருக்க
நங்கையார் தானேஒரு
மாங்காயெடுத்துஇரு
காதவளி வீசுறாளேம்

இருகாதவளி வீசும்போது
எனக்கு மிந்திச்சி
ஒனக்கு மிந்திச்சிண்ணு
சந்தனக்கட் டண்ணமார்
குங்குமாக்கட் டண்ணமார்
ஓடிட்டி வரதுக்குள்ளாக
எடம்புரி வலம்புரிசுத்தி
தீயிலகூட குதிச்சாளேம்

தீயில குதிக்குமிறத்தானே (?)
அந்தமாடு ஏளேளு பதினாலு வண்டி
நம்ம பண்ணையக்காரன் போனதுபோன
நாமஇனி யாரக்கண்டு வச்சி நம்பள
பொளைக்கப் போறாண்ணு
ஒண்ணொண்ணா தீயிலே குதிக்குதையோ

குறிப்பு:

டாக்டர் இர. பன்னீர்செல்வம் கதைச்சுருக்கத்தில் சந்தன வண்டிக்காரன் தன் வண்டி மாடுகளுடன் தீயில் விழுந்து இறப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அச்செய்தி இதில் விடுபட்டுள்ளது. ஆயினும் 396-ஆவது வரி அச்செய்தியையே குறிப்பிடுகின்றது எனக்கொள்ளலாம்.

பெரியமுத்தானைத் தொடர்ந்து அவருடைய அண்ணன் கருப்பனிடம் (வயது 80) அதே பாடலைப் பாடச்செய்து பதிவு செய்யப்பட்டது. பின்னர் கதையை உரையாகவும் கூறினார். 'அண்ணன் தம்பி ஏழுபேர்' என்று கூறியதைத்தவிர பாடல்-

கதை இரண்டிலும் அடிப்படைக் கூறுகள் மாறுபடவில்லை. எனவே, அவை இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

கதையைக் கற்றுக்கொண்ட ஊரை இவர்களால் தெளிவாகக் கூற இயலவில்லை. பதினைந்து வயதில் கற்றுக்கொண்டதாகக் கூறினர். தூக்கம் வராத நேரங்களில் பாடுவது உண்டு என்றும் மக்கள் (இருபாலாரும்) விரும்பிக் கேட்பர் என்றும் கூறப்பட்டது. (அதனை மக்கள் ஆமோதித்தனர்.) அவர்கள் கூறியதிலிருந்து இக்கதைப்பாடலை அறிந்தவர்கள் வேறு யாரும் இந்த ஊரிலோ பக்கத்து ஊர்களிலோ இருப்பதாகத் தெரியவில்லை. குழுமியிருந்தோரும் இதையே கூறினர்.

கதைப்பாடலின் பெயர் 'சின்னண்ணன் சின்னச்சாமி' என்று கூறப்பட்டது.

(ஒலிப்பதிவு நாடா எண்:8)

9. பெரியார் (ஆலூத்துப் பாளையம்)

ஓர் ஊரில் அண்ணன் தம்பி இருவர். ஒற்றுமையாக இருந்தனர்.

அண்ணனுக்குத் திருமணம் ஆயிற்று.

அண்ணன் மனைவிக்குத் தம்பி மீது காதல் ஏற்பட்டது.

தம்பி தன் மனைவியை கைவசம் செய்துகொண்டான் என்று அண்ணன் சந்தேகிக்கிறான்.

தம்பியைக் கொன்றுவிட முடிவு செய்கிறான்.

வேட்டையாடி சீவனம் செய்தல் குலத்தொழிலாதலால் ஒரு நாள் மனைவியிடம் கூறிவிட்டு வேட்டைக்குரிய ஆயுதங்களோடு இருவரும் வேட்டைக்குச் செல்கின்றனர்.

காட்டில் ஏதோ ஓடுகிறது என்று அண்ணன் தம்பியை அனுப்ப, தம்பி அதனைத் துரத்திக்கொண்டு ஓட, அண்ணன் அவன் மீது அம்பு விட்டுக் கொன்று விடுகிறான்

உடலை ஒரு குகையில் தள்ளிவிட்டு வீடு திரும்புகிறான்.

அவன் மனைவி தம்பி எங்கே என்று கேட்கிறாள்.

தம்பி தனக்கு முன்னாலேயே திரும்பி விட்டதாகவும் விரைவில் வந்து விடுவான் என்றும் கூறுகிறான்.

நீண்ட நேரமாகியும் வராததால் இருவருக்கும் சண்டை ஏற்படுகிறது.

ஒப்பாரி வைத்து அழுதுகொண்டு கணவனிடமே மீண்டும் மீண்டும் கேட்கிறாள்.

அவன் சரியாகக் கூறாததால், 'நீ கணவனுமல்ல; நான் மனைவியுமல்ல; நானும் அவன் சென்ற இடத்திற்கே செல்கிறேன்' என்று கூறி வீட்டை விட்டு வெளியேறிவிடுகிறாள்.

கூறியவர். ஏ.பி. ரத்தினம், வேண்டுகோளுக்கிணங்கி மொடக்குறிச்சி வந்து உயர்நிலைப்பள்ளிக் கட்டடத்தில் கதை கூறினார். அருகில் அவரை அழைத்திருந்த பள்ளித் தமிழ் ஆசிரியர் இருந்தார்.

குறிப்பு: கதை கூறியவர் கூறிய செய்தியின் சாரம்: 'கதைக்குப் பெயர் எதுவுமில்லை. என்னுடைய பிள்ளைகள் கதை கேட்கும் நேரங்களில் நிலவு வெளிச்சத்தில் உட்கார்ந்துகொண்டு என் தாய் இந்தக் கதையைக் கூறும்போது கேட்டுக் கற்றுக்கொண்டதுதான். இக்கதையைப் பாடலாகப் பாடுவதில்லை. ஊரில் வேறு யாருக்கும் இக்கதை தெரியாது. என் தாய் 1½ மாதங்களுக்கு முன் இறந்துவிட்டார்'.

இயல்பாகக் கூறுமாறு பலமுறை கூறியும் ஓரளவு படித்தவராதலால் கதையைத் திருத்தமான நடையிலேயே கூறினார்.

(ஒலிப்பதிவு நாடா எண்: 8)

10. பெரியார் (அக்கரை பாளையம்)

முன்னொரு காலத்தில், ஓர் ஊரில் சின்னத்தம்பி, செல்லத் தம்பி என்ற அண்ணன் தம்பியர் இருந்தனர். இருவரும் செல் வம் மிகப் பெற்றவர்கள். அண்ணன் சின்னத் தம்பிக்குத் திருமணம் ஆகியிருந்தது. அவனுடைய மனைவி கள்ளமில்ல கற்பு நெறி கொண்டவள். தம்பி அதாவது, கொழுந்தனிடம் மிகப் பாசம் கொண்டவள். தன் கணவன் வேறு, தன் கொழுந் தன் வேறு என்று வித்தியாசம் பாராமல் இருவருக்கும் சமமாக அன்பு செலுத்துபவள். ஆனால், செல்லத் தம்பிக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.

ஒருநாள் அண்ணன் தன் தம்பியிடம் ''தம்பி, நாம் இன்று காட்டிற்கு வேட்டையாடப் போகலாம்'' என்று கூற, மறுப் பேதும் சொல்லத் தெரியாத தம்பியும் 'சரி' என்கிறான். இரு வரும் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றனர். காடு வெகுதொலைவில் இருந்தது. இருவருக்கும் தனித்தனியே குதிரை களும் உண்டு. அதில் சேணம் பூட்டி ஆயத்தமாக வைத்துக் கொண்டனர். பின் உணவுக்கு நிறையக் கட்டுச்சோற்றைக் கட்டிக் கொண்டு கிளம்ப ஆயத்தம் ஆகின்றனர். தம்பி தன் அண்ணியிடம் போய்வர விடை தர வேண்டுகிறான். அவளும சரியென விடை தந்து அனுப்புகிறாள். வீட்டிலிருந்து வெளியில் புறப்படும் பொழுதே தாழ்வாரம் தலைக்கு இடிக்கிறது. அது ஒரு தீச்சகுனம் அல்லவா! ஆகவே, அண்ணி போக வேண்டாம் என்கிறாள். ஆனால், அண்ணன் ஒரே முடிவாகப் போய்த் தான் தீரவேண்டும் என்பதிலேயிருக்கிறான். பின் முறையே சட்டைப் பூனை குறுக்கே ஓடுகிறது. இதுவும் கூடாது திரும்பி விடுவோம் என்று தம்பி கூற அண்ணன் மறுக்கிறான்.

பின் இன்னும் கொஞ்சம் தொலைவாகச் செல்லும்போது எதிரே விறகு கொண்டு ஒருவன் வருகிறான். இது கெட்ட சகுனம் வேண்டாம் அண்ணா, நாளை செல்வோம் வீட்டுக்குப் போகலாம் என்று செல்லத்தம்பி வற்புறுத்துகிறான். ஆனால், சின்னத் தம்பி கேட்டால்தானே! அவன் போகவே செய்கிறான். பின் முறையே, எண்ணெய்க்குடம் எதிரில் வருகிறது. அதே

போல் இன்னும ஆகாத கெட்டசகுனங்களெல்லாம் வருகின்றன. செல்லத்தம்பி எவ்வளவோ தடுத்தும் அண்ணன் கேட்கவில்லை. விதி அழைத்துச் செல்கிறது. இருவரும் காட்டுக்கருகில் வந்து விட்டனர். காடு மிகவும் பயங்கரமான வனம். பார்க்கவே பயங்கரமானது. அதில் பாம்புகளும் கொடிய கரடிகளும், துஷ்டமிருகங்களும் கொடிய நச்சு ஐந்துக்களும், வெள்ளைப் புறாக்களும், சிட்டுக்குருவிகளும் யானைகளும் மற்றும் துள்ளித் திரியும் புள்ளிமான்களும் ஏராளம்! ஏராளம்! கொடிய புதர் களும், முட்புதர்களும், பெரிய பெரிய மரங்களும், சூரிய ஒளி உட்புக முடியாத இருளடர்ந்த வனாந்திரம். அதில் இருவரும் நுழைகிறார்கள்! இருவரும் மிகவும் களைத்துவிட்டனர். நல்ல உச்சி வெய்யில் காய்ந்து கொண்டிருக்கிறது. இருவரும் நிதான மாகக் காட்டின் மையப் பகுதிக்கு வந்து சேர்கின்றனர். வந்து இருவரும் சிறிது உண்டு இளைப்பாறிவிட்டு வேட்டையாடலாம் என்று வில்லை அம்பை எடுக்க மறந்து விட்டு வந்து விட்டனர். இனி எப்படி வேட்டையாடுவது என்று திகைக்கின்றனர். அண் ணன் தம்பியிடம் தம்பி நான் இங்கே இருக்கிறேன். நீ உடனே போய் வில் அம்புகளை உடனடியாக எடுத்துக் கொண்டு வர வும் என்று அனுப்புகிறான். (அதாவது வில்லைக் கையில் எடுத் துச் சென்றிருந்தாலும் ஒரு வேளை அம்புகளை எடுத்துப் போக மறந்து இருக்கலாம்) செல்லத்தம்பி தன் குதிரையிலேறி வாயுவேகம் மனோவேகமாக வீட்டை நோக்கி வருகிறான். வீட்டை அடைகிறான். வீட்டில் சென்று அம்புகளை எடுத்துத் திரும்பும்போது அண்ணி வந்து அவனைத் தடுக்கின்றாள். ஏனெனில் குதிரையும் வாயில் நுரை தள்ளச் சோர்ந்து இருக் கிறது. அவனும் மிகவும் களைத்துப் போய் உள்ளான். ஆகவே அவனைப் பார்த்து ''செல்லத்தம்பி, நீ இங்கே கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துவிட்டுப் பின் செல். ரொம்பவும் களைத்துவிட்டாய்'' என்று அண்ணி கூறுகிறாள். அவன் 'இல்லை அண்ணி நான் போயே ஆகவேண்டும். ஏனெனில் அண்ணன் தனியாக இருக்கிறார்' என்று கூறுகிறான். அண்ணி தடுத்து விடுகிறாள். பின் அவள் சமைக்கிறாள்.. செல்லத்தம்பி சிறிது ஓய்வுக்காக அப்படியே சிறிதுநேரம் கண்ணயரப் படுக்கிறான். அப்படியே தூங்கிவிடுகிறான்.

எவ்வளவு நேரம் சென்றது என்று தெரியவில்லை. சட்டத்தில் பூனை தாவும்போது இவன்மீது விழுந்து விடுகிறது. அப்பொழுது அதனுடைய நகங்கள் முகத்தில், கைகள், மார்பில் பிராண்டி விடுகிறது. அவன் விழித்தெழுந்து அவசரமாகக் குதிரையிலேறி விரைகிறான். விரையும்போது குதிரையைப் படுவேகமாக செலுத்துகிறான். அப்பொழுது காட்டிலுள்ள செடிகளும், கொடிகளும், முட்புதர்களும் அவனைக் குத்திக் கீறல் காயம் ஏற்படுத்தி விடுகின்றன. சிறு சிறு இரத்தத்துளிகள் தெரிகின்றன. பின் விரைந்து அண்ணனிடம் செல்கிறான். அண்ணனைச் சந்தித்துத் தான் சிறிது நேரம் தூங்கிவிட்டதாகக் கூறுகிறான். ஆனால், அண்ணன் அதை நம்ப மறுக்கிறான். ஏனெனில் அவன் முகம், கை, கால், மார்பு ஆகியவை கீறல்களாக இருப்பதால் அவனுக்குச் சந்தேகம் வருகிறது. இவன் தன் மனைவியிடம் விளையாடி அவளுடைய வளையல்கள் உடைந்து கிழித்த கீறல்கள் என்பவை என்று கூறி மனத்துள் கறுவுகிறான். துரோகி. இவனை இன்று எப்படியும் கொல்ல வேண்டும் என்று எண்ணிச் சூழ்ச்சி செய்கிறான். அதாவது மான் வேட்டையாடச் சொல்லி இவன் மட்டும் வில்லை வைத்திருக்கிறான். செல்லத்தம்பியை வில்லைக் கீழே வைத்துவிடச் சொல்லியும் தூரத்தில் மான் ஒன்று மேய்ந்துகொண்டிருப்பதைப் பார்த்து அதை நான் கொல்லுகிறேன் நீ போய் அந்த மரத்தின் பின்பக்கம் மறைந்து கொள் என்று கூறி அவனை அனுப்புகிறான். செல்லத்தம்பியும் அவ்வாறே உண்மை என்று நம்பிப் போய் மரத்தின் பின்புறம் சென்று மறைந்து இருந்தான். அம்மரம் ஒரு பழைய பொந்துமரம். ஆகவே சினனத்தம்பி மானுக்குக் குறி வைப்பதுபோல் குறிவைத்து செல்லத்தம்பியிருக்குமிடம் செலுத்துகிறான். அம்பு செல்லத்தம்பியை வீழ்த்துகிறது. அவன் இறக்கும்போது அண்ணா! நான் என்ன தவறு செய்தேன்! நீ இப்படி கோழையாக என்னைக் கொன்று விட்டாயே என்று கதறியழுகிறான். ஆனால், அவன் அழுவது சின்னத்தம்பிக்குக் கேட்டால்தானே! மிகவும்வெறுப்புடன் அவன் சாகும்வரைகூடக் காத்திராமல், கைகளால் அவனைத் தூக்கி அடக்கம் செய்யவில்லை. காட்டில் உள்ள ஊனாங் கொடியைப் பிடுங்கி, கை, கால்களில் கட்டி தரதரவென்று இழுத்துச் செல்

கிறான். பின் ஒரு குழிந்த பகுதியில் (பள்ளத்தில்) தூக்கி வீசி விட்டு ஒன்றும் அறியாதவன் போல் பக்கத்திலுள்ள குளத்தில் கைகால்களைக் கழுவிக் கொண்டு பின் வீடு நோக்கிப் புறப்படு கிறான். வீட்டை அடைந்ததும் மனைவி அவனைத் தன கொழுந்தன் எங்கே என்று வினவுகிறாள். ஆனால், இவன் 'அவன் இன்னும் வேட்டையாடுகிறான். என்னை வீட்டிற்குச் சென்று விடுமாறும் பின் தான் வருவதாகவும் கூறினான் அத னால் வந்துவிட்டேன்' என்று கூற, அவளுக்குச் சந்தேகம் வர, வீட்டை விட்டு வெளியேறிக் காட்டில் தேடியலைந்து சவத்தைக் கண்டுபிடித்து, கட்டிக் கொண்டு பலவாறு தேம்பித் தேம்பி அழுகின்றாள். பின் முறைப்படி சந்தனக் கட்டைகளைக் கஷ்டப் பட்டு அடுக்கி சிதை மூட்டித் தானும் குதித்துத் தீயில் கருகிச் சாகின்றாள். இருவரும் இணைந்து கருகிச் சாம்பலாகின்றார்கள்' பின் அந்த இடத்தில் மலர்கள் முளைத்து வசந்தம் பாடுகின்றன. பின் சின்னத்தம்பி தன் மனைவியைத் தேடிச் சென்று அவர்கள் இறந்த சாம்பலைக் கண்டு மனம் கலங்கி திருந்தி, தானும் தற்கொலை செய்து கொள்கின்றான்.

கூறியவர்: அ.மா. பழனிச்சாமி

குறிப்பு: கதை சேகரிக்கும் முயற்சியாகத் திரு செ. பழனிச்சாமி (ஆய்வாளர், தமிழாராய்ச்சித்துறை, பூ. சா. கோ. கலை அறிவியல் கல்லூரி, கோவை) அவர்களோடு தொடர்பு கொண்டபோது, அக் கல்லூரியில் முது அறிவியல் இரண்டாமாண்டு படித்துக்கொண்டிருந்த திரு அ.மா. பழனிச்சாமியிடம் இக்கதையைக் கேட்டு எழுதி அனுப்பியிருந்தார். 'சின்னத்தம்பி செல்லத்தம்பி கதை' என்று தலைப்பிட்டிருந்தார். (கதையில் எவ்வித மாற்ற மும் செய்யாமல் மேலே தரப்பட்டுள்ளது) திரு. அ. மா. பழனிச்சாமி தங்கள் ஊரைச் சேர்ந்த திரு அம்மாசை என்பவர் பாடலாகப் பாடும்போது கேட்டு அறிந்த தாகக் கோவையில் நேரில் சந்தித்தபோது (2. 3. 84) கூறினார். பின்னர் அம்மாசையிடமும் பாடல் சேகரிக்கப்பட்டது. (பாடல் எண்: 11).

11. பெரியார் (அக்கரைபாளையம்)

தன்னன்னே நானேநானே
தனனன்னே நானேநன்னம்
தன்னன்னே நானேநன்னா ம்ம்

அண்ணந்தானே செல்வோராஜன்
தம்பிதானோ செல்லத்தம்பி

அத அண்ணஞ் சொன்ன வார்த்தைகளே
தவறாமே போவானய்யா
அண்ணஞ் சொன்ன வார்த்தைகளும்
தப்பாமே போவானே ம்ம்ம்

ஆருமடா செல்லத்தம்பி
அருமையுள்ளோ செல்லத்தம்பி
அட ஆனைக்குப் பாரங்கட்டி
குருதைக்குச் சீனிபூட்டி
அம்பாவே கைலெடுத்து நாம
வில்லவே கைலெடுத்தும்
நாம வேட்டைக்குப் பொறப்பட்டுப் போகுலாமா ம்ம்ம்

(போடு தனனன்னே)

ஆருமடா செல்லத்தம்பி
அருமையுள்ள செல்லத்தம்பி
அட அம்பவே கைலெடுத்து
வில்லவே கைலெடுத்து
நாம வேட்டைக்குப் பொறப்பட்டுப் போகுலாமா ம்ம்

அண்ணஞ் சொன்ன வார்த்தைகள்
தவறாமப் போவானய்யா
அண்ணஞ் சொன்ன வார்த்தைகளே
தப்பாமப் போவானய்யா
போகுலாமா செல்லத்தம்பி ஆம்ம்

அட காடை உறங்கும் வனம்
கரடிபுலி தூங்கும்வனம்

செம்புள் உறங்கும்வனம்
சிறுபுலியேர் தூங்கும்வனம் ஆம்ம்

காட்டான தூங்கும் வனம்
கரடிபிலி தூங்கும்வனம்
கரடிபுலி(உ)றங்கும் வனம் ஆம்ம்

அட வனமே வனந்தாண்டி
திம்பி வனந்தாண்டி
மலைய மலதாண்டி
சிறியமல தாண்டி
போறானய்யா செல்வுராஜா ஆம்ம்

அய்யய்யோ செல்லத்தம்பி நல்ல
தூங்குறானே செல்லத்தம்பி ம்ம்

அய்ய தூங்குநல்ல போதுதானும்
தூங்குநல்ல போதுதானும்
பூனைகள மேலுளுந்து ம்ம்

மேலுளுந்து......
அய்யய்யோ செல்லத்தம்பி நல்ல
தூங்குறானே செல்லத்தம்பி ம்ம்

தூங்குநல்ல(ம்) போதுதானும்
தூங்குநல்ல(ம்) போதுதானும்
பூனைகளை மேலுளுந்து
மேலுகால புரண்டிநல்ல
காலுங்கிய லாயிட்டுது ம்ம்

ஒரு நங்க நங்க நங்கை நங்கை
வரிசையுள்ள நங்கையாரே ம்ம்

நங்கே, பூனைகளேமேலுளுந்து
மேலுகால் புரண்டிநல்ல
காலுங்கிய லாயிட்டுது ம்ம்

காலைல லெளுந்திருச்சி
அண்ணந்தானோ செல்வுராஜன்
அவன் அள்ளயில
காயமேதுண்ணு கேப்பானம்மா ம்ம்

நங்கே, நான் என்னவழி கண்டுதானே
சொல்லுவேனே சொல்லுவேனே
சொல்லம்மா வாய்னாலே ம்ம்

அய்யய்யோ செல்லத்தம்பி நானு
சொல்லிவாரன் கேளுமய்யா ம்ம்

அய்யா, நீ ஆனமேல ஏறிவந்தே
நான் குருதமேல வந்தனண்ணா
ஒரு இண்டமுள்ளு புடிச்சிகிளிச்சி நல்லோ
அதுதான காயமுண்ணு சொல்லுமய்யா ம்ம்

அட, ஆருமடா செல்லத்தம்பி
அருமயுள்ள செல்லத்தம்பி உனக்கு
அள்ளயில காயமேது ம்ம்

அண்ணா, நீ ஆனமேல ஏறிவந்த
நான் குருதமேல வந்தேனண்ணா
இண்டமுள்ளு புடிச்சி கிளிச்சி நல்ல
அதுதானோ காயமண்ணா ம்ம்

தெரியுமடா தெரியுமடா
அருமையுள்ள செல்லத்தம்பி
நீயுமே நங்கையாளே
கொஞ்சி வெளயாடி - அட
குலவையிட்ட காயமடா ம்ம்

(தன்னன்னே)

அட இருந்தாலும் இருக்கட்டுடா
அருமையுள்ள செல்லத்தம்பி
ஆனைக்கு அவுதாரம்
குருதைக்கு சீனிபூட்டி
அம்பவே கைலெடுத்து நாம
பொறப்பட்டு போகுலாமா ம்ம்

(ஒரு தன்னன்னே)

அண்ணஞ்சொன்ன வார்த்தைகளே
தவுறாமே போவானையா
அண்ணஞ் சொன்ன வார்த்தைகளே
தப்பாமே போவானய்யா
போவானையா செல்வுராஜா ம்ம்

சாமி, ஊருவிட்டுப் பயணமாகி
பொறப்பட்டுப் போறபோதும்
அண்ணா, தாவாரம் முட்டுதண்ணா ம்ம்

அண்ணா, இதுபொல்லாத சகுனமண்ணா
பொளவந்து நேருமண்ணா
நான் வரநல்லோ முடியாதண்ணா ம்ம்

அய்யய்யோ செல்லத்தம்பி அட
தாவாரம் கூரையடா
அதுநல்லோ சகுனமில்லே ம்ம்

அண்ணஞ் சொன்ன வார்த்தைகள
தவுறாமே போகும்போதும்
அரண்மனைக்கு முன்பாக
பயணமாகிப் போறானய்யா ம்ம்

அய்யா சக்கரகத்தி அடுப்புகொண்டு (?)
வேகமா போறானே ம்ம்

அண்ணா, இதுபொல்லாத சகுனமண்ணா
பொளவந்து நேருமண்ணா நான்
வரநல்லோ முடியாதண்ணா ம்ம்

அட சக்கரகத்தி கண்டுபோனா
நல்லதடா செல்லத்தம்பி
அவன் கலியாண மூச்சதானும் (?)
சீர்தருமம் செய்யுறானே
சுத்த பத்தம் பண்ணுறானே
தலமயிரு வாங்காத போனா
கரடிபோலே லாகுமடா ஆம்ம்

வசனம் : அவனுடைய சகுனம் நல்லதுதான் செல்லத்தம்பி போகுவாய்.

(தன்னன்னே)

சாமி, அரண்மனைக்கு முன்பாக
பயணமாகிப் போகும்போதும்
அய்யா எண்ணசக்க எண்ணகொண்டு
எதிரகள வாராளே ம்ம்

அண்ணா, இது பொல்லாத சகுனமண்ணா
எண்ணகாரிய கண்டுபோனா
கொஞ்சம் இடருவந்து நேருமண்ணா ம்ம்

அட எண்ணகாரிய கண்டுபோனா
நல்லதடா செல்லத்தம்பி
ஒலகத்தில் பலகாரம் செய்யுறாங்க
காயிகறி (அ)லசுறாங்க
சாருபருப்பு காய்ச்சுறாளே
ருசியான பண்டமடா ஆம்ம்

வசனம் : அவரு கண்டு போகலாம்.

(தன்னன்னே)

சாமி, பயணமாகிப் போகும்போது
மின்னால அரண்மனைக்கு மின்னால போகும்போது
முண்டப் பாப்பாத்தி மூணுபேரு
முக்காடு போட்டுட்டு வாராங்கம்மா ம்ம்

அண்ணா, இது பொல்லாத சகுனமண்ணா
முண்டப் பாப்பாத்தி கண்டுபோனா
மொதலளிஞ்சி போகுமண்ணா ம்ம்

வசனம் : என்னண்ணா, அதும் நல்லதுங்கற இதும் நல்ல துங்கற ஒண்ணுந் தெரியலியே

ம்ம்......ஆருமடா செல்லத்தம்பி
அருமையுள்ள செல்லத்தம்பி
அருமையுள்ள செல்லத்தம்பி ம்ம்

அட வடக்கே மலதேடி
வடக்கே மலதேடி
கரடிபுலி சிங்கமெல்லாம்
கலந்தோடி நிக்குதடா ம்ம்
அட சீக்கிரமா லோட்டிவாடா
அருமையுள்ள செல்லத்தம்பி ம்ம்

அட தெக்கு நல்ல மலதேடி
தெக்கு நல்ல மலதேடி

ஆனபுலி சிங்கமெல்லாம்
சீக்கிரமா லோட்டிவாடா ம்ம்
அய்யய்யோ செல்லத்தம்பி நானு
அம்புகள மறந்துவிட்டேன் ம்ம்

நாம்ப வெள்ளக் குருதைக்கு
சீனிபூட்டி சீனிகட்டி
வேகமா போயிநல்லோ நல்ல
எடுத்துவாடா செல்லத்தம்பி ம்ம்

(தன்னன்னே)

அவன் வெள்ளைக் குருதைக்கு
ஜீனிகட்டி ஜீனிபூட்டி
வேகமா போறானையா ம்ம்

ஒருநங்க நங்கை நங்க நங்கை
வரிசையுள்ள நங்கையாரே ம்ம்

நங்கே, அங்கநான் அம்புகள வாங்கிக்கிட்டு
சீக்கிரமா வாரநல்லோ நல்ல
சொன்னானம்மா நங்கையாரே ம்ம்

அய்யய்யோ செல்லத்தம்பி அட
அம்புகள எதுக்காகவோ வேணுமடா ம்ம்

நங்க, எனக்கு ஒண்ணுந் தெரியியில
வாங்கிட்டுச் சீக்கிரமா
வரநல்லோ சொன்னாரம்மா மம்

அட அட்டாலி மேலருக்கும்
தொளாவி பாருமடா ம்ம்

(தன்னன்னே)

அட்டாலி மேல ஏறி
தொளாவி எடுத்துக்கொண்டு
வேகம்மா போறானையா ம்ம்

ஆருமடா செல்லத்தம்பி
அருமையுள்ள செல்லத்தம்பி
நான்சொன்ன நேரமென்னா
நீவந்த வேளையென்னா
ஊட்டிலே என்னுமடா சோலி ம்ம்

அண்ணா, அம்பு கெடைக்கிலியே
தொளாவி எடுத்து நன்னா
கொஞ்சநேரஞ் செல்லலாயிட்டுது ம்ம்

கொண்டாடா அம்புகள
சீக்கிரமா தாருமடா
சீக்கிரமா தாருமடா ம்ம்

(ம்ம்...தன்னன்னே)

ஆருமடா செல்லத்தம்பி
அருமையுள்ள செல்லத்தம்பி
கரடிபுலி சிங்கமெல்லாம்
காட்டான புலிகளெல்லாம்
கலந்தோடி நிக்குதடா ம்ம்

நான் மானுவேட்டை யாடோவேணும்
மயிலு வேட்டை யாடோவேணும்
மானுவேட்டை யாடுனாலும்
மாறிவந்து உளுகுமடா
மயிலுவேட்ட யாடுனாலும்
குதிச்சிவந்து பட்டுருமே

அட ஆலாமரத்துக் காட்டுக்குள்ளே
ஓடி நல்லா ஒளியுமடா ம்ம்

அண்ணா நீனு மானுவேட்ட ஆடறியோ
மயிலுவேட்ட ஆடறியோ
அண்ணா மனுசன்வேட்ட ஆடிறாதே ம்ம்

அட ஓடிப் பொளச்சியிண்ணா
தாய்பேரு சொல்லுவியே
தப்பிப் பொளச்சியிண்ணா
தகப்பன்பேரு சொல்லுவியே
இருந்து பொளப்ப மிண்ணா நல்ல
ஒன்உயிரு வரணுமடா ம்ம்

தம்பி வாய்ப்பேச்சி வாயிருக்க(?)
போட்டானாம் அம்புகளை
உளுந்துதையா நெஞ்சுமேலே ம்ம்

(தனனன்னே)

அட வாய்ப்பேச்சு வாயிலருக்கு
போட்டானே அம்புகள
உளுந்துதையா நெஞ்சுமேலே ம்ம்

அண்ணா, கொலகார அண்ணா நீயே
கொலபாத(க)ம் நெனச்சிட்டியே
வஞ்சகம் நெனச்சிட்டியே ஆம்ம்

அண்ணா, வல்லாமே உயிருகள்ளாம்
வாதாடி போகுதண்ணா
அண்ணா, எத்தன கோடியண்ணா
வஞ்சகம் நெனச்சீயண்ணா
நெனச்சியண்ணா ம்ம்

அட சண்டாள பாவி நீயே
எத்தன காலத்துக்கு
பொளப்பியண்ணா ம்ம்

வல்லாம உயிருகள்ளாம்
வாதாடி போச்சுங்கண்ணா
சண்டாள பாவிகளா
கொலபாவஞ் செய்துட்டியே ஆம்ம்

அண்ணா, ஒண்ணாப் பொறந்தமண்ணா
ஒருமொல பால்குடிச்சோம்
சேரப் பொறந்தமண்ணா
செல்லப் பாலு உண்டோமண்ணா
அட தம்பியிண்ணு நெனைக்கலியே ம்ம்

(தனனன்னே)

அந்த வடபத்ர காளியம்மா
பகவானே பாருமம்மா
அது அந்தரத்திலே நிக்குதங்கே ம்ம்

சாமி சாக்கிமில்லே சபதமில்லே
வடபத்ர காளியம்மா
நீதானே சாக்கியம்மா ம்ம்

அந்த வடபத்ர காளியம்மா
போயிநல்ல போயிநல்ல
அவிய நங்கைகிட்ட சொல்லுதையா ம்ம்

ஆரம்மா ராசோத்தி
ஆரம்மா ராசோத்தி
ஓம்புருஷன் செல்வுராஜன்
கொளுந்தனார அம்புலபோட்டு
கொண்ணுநல்லா போட்டானம்மா ம்ம்

நீ காலையில போயிதானும்
கண்டுபுடியி யிண்ணு
அந்த வடபத்ர காளியம்மா சொல்லுதங்கே ம்ம்

அய்யய்யோ செல்லத்தம்பி—நானு உன்ன
கண்ணுமேல காண்பேதுண்டா ம்ம்

கொலகார பாவிநல்லோ
கொலபாதம் நெனச்சிட்டானே
வஞ்சகம் தேடுனானே ம்ம்

அய்யய்யோ செல்லத்தம்பி
அருமையுள்ள செல்லத்தம்பி
நான் வளத்தின அருமையென்னோ
வாக்குமைகள் செய்தோனடா
தோளுல வச்சி வளத்து
தொடையில நடபளக்கி
கொலகார பாவிநல்லோ
கொலபாதஞ் செய்துட்டானே ம்ம்

அம்மா் பாடியளுகிறாளாம்
பாவி பாடியளுகிறாளாம் ம்ம்

(தன்னன்னே)

அட இண்ணைக்குப் புடிச்ச கிரகம்
இண்ணைக்கடா போச்சுமடா
செல்லத்தம்பி காலுல
ஒணாங் கொடிபுடுங்கி
செல்லத்தம்பி காலுல கட்டுறானாம் ம்ம்

பாட்டனாரு உளுதகாடு
பாங்குளுதி(?) காட்டுல
தகப்பனாரு உளுதகாடு
செம்புளுதி காட்டுல
அந்த முப்பாட்டன் உளுதகாடு
முப்புளுதி காட்டுல
போட்டு இளுத்துக்கொண்டு போறானய்யா ம்ம்

(தனனன்னே)

இளுத்துக்கொண்டு போயிநல்லா
சங்கம் பொதையயில
வீசிக்கொண்டு போறானையா செல்வோராஜன் ம்ம்

வீசிக்கொண்டு போயிதானும்
ஊடுதேடி பயணமாகி
வேகமா போறானையா ம்ம்

ஆரம்மா ராசோத்தி
ஆரம்மா ராசோத்தி
சோறுகள லாயிட்டுது
தண்ணிகள ஆஞ்சிடுதுண்ணு (?)
போயிநல்லா கேக்குறாரே ம்ம்

அய்யா பாலும் அடுப்புமேல
பாலகனும் தொட்டிமேல
சோறும் அடுப்புமேல
கொஞ்சம் சோலிகள லாகுமய்யா ம்ம்

நீயுமு செல்லத்தம்பி
அண்ணந்தம்பி ரெண்டு பேரும்
ஜோடியா போனீங்கள்ளா
செல்லத்தம்பி எங்குமய்யா ம்ம்

அம்மா வருவானம்மா வருவ்ானம்மா
சீக்கிரமா வருவானம்மா
சீக்கிரமா வருவானம்மா
தெக்குத் தெருவையிலே
பந்தாட வீதியில்லே (?)
வரவேநான் கண்டேனம்மா ம்ம்

அதுக்குஇம் பொறத்தியிலே
...... அண்டையிலே - அந்தப்
பலக்கடையிலே நின்னானே ம்ம்

(தன்னன்னே)

தண்ணிகளும் பாத்துகிட்டு
சோறுகள தின்னுபோட்டு
செலுவராஜன் சப்ரமஞ்ச கட்டமேல
சுகமாவே தூங்குறானே ம்ம்

அய்யய்யோ பாலகனே
நல்ல அய்யா பாலகனே
வளத்தின் அருமை என்ன
வாக்குமைகள் செய்தேனடா
பாலகனே பாத்தாலா இன்னைக்குத்தான்
இன்னமேல உன்னைய - என்
கண்ணுமேல பாப்பதில்ல ம்ம்

தூங்குமடா பாலகனே
அருமையுள்ளோ பாலகனே நல்ல
தூங்குமடா தொட்டமேலே ம்ம்

பாலகா, ஒனக்கு அஞ்சி நல்லா மாசங்கள
லாயிருந்தா லாயிருந்தா
தாயிதான் இல்லையடா ஆஆம்ம்

அய்யய்யோ பாலகனே - நானு
உன்னவிட்டு போறனடா ம்ம

(போடு தனனன்னே)

கொளந்தைய தூக்கிங்கீளே
படுத்துறாளே படுத்துறாளே
கொளந்தைய தூக்கிங்கீள படுத்திக்கொண்டு ம்ம்

பணத்தெடுத்து மடியில்கட்டி
கொடத்தெடுத்து கிச்சிலவச்சி
பளையசேல தோளுலபோட்டு
கொளுந்தனார தேடுறாளாம் ம்ம்

(தன்னன்னே)

மாடுமேய்க்கும் தம்பிகள
மாடுமேய்க்கும் தம்பிகளி
செல்லத்தம்பி செல்வுராஜா
அண்ணந்தம்பி ரெண்டுபேரும்
போனதாக தெரியுமய்யா ம்ம்

அம்மா போறபோது பாத்தேனம்மா
வாரபோது பாக்கலையிண்ணு
மாறாமே சொல்லுறானே ம்ம்

(தன்னன்னே)

பனமரமே பனமரமே
அர்த்தங்கெட்ட பனமரமே
நெட்ட மரம்போல
நெலுநெலுண்ணு போனியில்ல
செல்லத்தம்பி செல்வுராஜன்
அண்ணந்தம்பி ரெண்டுபேரும்
போனதாக தெரியுமம்மா ம்ம்

அம்மா, போறபோது பாத்தேனம்மா
வாரபோது பாக்கலையிண்ணு
அந்தப் பனமரமே மாறாமே சொல்லுதங்கே ம்ம்

நான் நெட்ட மரம்போலே
நெலுநெலுண்ணு போனதாலும்
கட்டக்கவுறுமானேன்
கன்னிக்கட்டு தூம்புமானேன்(?)
வெட்டவெறவுமானேன்
நானு சீனிக்கு நானுமானேன்
இந்தப்பேச்சி சொன்னதுக்காக
அஞ்சி...... ......
(யாரோ குறுக்கிடப் பாடலை நிறுத்திப் பின்னர் ஆரம்பித்தல்)

ம்ம் அம்மா, மயங்கிநல்ல உளுந்தாளே
மயங்கிநல்ல உளுந்துட்டாலும்
மயங்கிநல்லா உளுந்தாளமமா ம்ம்

அய்யா வருகுதையா கெருடன்கீளே
வேகத்துல இருந்து நல்லோ
வேகம்மா வருகுதையா ம்ம்

அம்மா ஏனம்மா சோந்துபோன
என்னம்மா வீரமம்மா
சொல்லம்மா வாய்னாலே ம்ம்

(தன்னன்னே)

ஏனம்மா சோந்துநல்ல
சோந்துநல்ல வீரமம்மா
சொல்லம்மா வாய்னாலே ம்ம்

அய்யய்யோ செல்லத்தம்பி நல்ல
சொல்லுமையா வாய்னாலே ம்ம்

அம்மா, அந்தக் கொளுந்தனார செத்ததாவே
கொண்டுபோயி காட்டுறனே
என்னம்மா தாரயம்மா ம்ம்

அய்யா, என்னோட சக்திபோல தாரனையா
சக்திபோத தாரனையா
அம்மா தாரேனம்மா ம்ம்

தாரமிங்கிறத சீக்கிரமா
தாரவேணும் தாரவேணும்
அம்மா தாருமம்மா சீக்கிரமா ம்ம்

மிந்தாணி சீலைநல்லா
கிளிச்சி நல்லா கிளிச்சி நல்லா
அய்யா சரியாகக் கிளிச்சி நல்லா
போட்டாளே களுத்தின்மேலே ம்ம்

அம்மா நீபோட்ட துகிலுநல்லா
என்னோட களுத்திலே வெள்ளையாச்சி
களுத்திலே வெள்ளையாச்சி ம்ம்

எளுந்திரியம்மா கொளுந்தனார
செத்தபக்கம் கொண்டுபோயி
சீக்கிரமா காட்டுறேனே ம்ம்

(போடு தனனன்னே)

நீ போற வேகத்துக்கு
நானுநல்ல தானுமையா
நடந்து நல்லா வரநல்லா முடியுமையா ம்ம்

அம்மா மெள்ளமெள்ள கீளரோகம்
கீளுரோகம் போறனம்மா
நடந்துநல்லா வந்துசேரு அம்ம்

பாரம்மா கொளுந்துனார
கொளுந்தனார கொண்டபோயி
செத்துதாவே காட்டுறனே ம்ம்

பாட்டனாரு உளுதகாடு
பாம்புளுதி காட்டுலே
தகப்பனாரு உளுதகாடு
செம்புளுதி காட்டுலே
பாரம்மா இளுத்துக்கொண்டு
போய்நல்லோ இருக்குறானே ம்ம்

கூட்டிக்கொண்டே போயிநல்லோ
சங்கும் பொதையையிலே
பாரமமா கொளுந்தனாரு
குளியிலே கெடக்குறானே ம்ம்

அய்யய்யோ செல்லத்தம்பி நல்ல
அண்ணன் கண்ணி(ன்) மேல காண்பேதுண்டா ம்ம்

அட மயிலுபோலே மடிஞ்சியோடா
அருமையுள்ள செல்லத்தம்பி
மயிலுபோல மடிஞ்சியேடா ம்ம்

பணத்த எறக்கிவச்சி
கொடத்த எறக்கிவச்சி
பளயசோறு (?) கீளேவச்சி
வச்சி நல்லா எடுக்குறாளாம் ம்ம்

குளியில எறங்கி நல்லா
கொளுந்தனார தாவிக்கட்டி
எடுத்தாந்து மோட்டுமேலே போடுமம்மா ம்ம்

குளியில எறங்கி நல்லா
தாவிச்கட்டி எடுத்துநல்லா
கொண்டாந்து மேட்டுமேல நல்ல
போட்டாளம்மா ம்ம்

பாடிய ளுகிறாளாம்
வலுதுபொறம் எடது பொறம் அய்யா
மாரடிச்சி அளுகுறாளே ம்ம்

கொலகார பாவிநல்லோ
கொலபாதஞ் செய்திட்டானே
வஞ்சகம் நெனச்சிட்டானே ம்ம்

பாரம்மா அம்புபட்ட
காயநல்ல காயத்த
பாரம்மா கண்ணினாலே ம்ம்

எலுமிச்சங் கனியெடுத்து
உள்ளுக்குப் புளிஞ்சிவிட்டு
அம்மா சீலய கட்டுமம்மா ம்ம்

வடபத்ர காளியம்மா
பகவானே பாருமம்மா
அந்தரத்துல நிக்குதங்கே ம்ம்

தீண்டாம திட்டாமே
இருந்துகொண்டு தானிருந்தா
கொளுந்தன்போல இருந்திருந்தா ம்ம

சாமிதேங்கா யொடச்சகத்தி
பளத்தய கண்ணு தொறந்தும்
சூடம் பரத்துறாளே ம்ம்

செல்லத்தம்பி செத்துநல்லா
மடிஞ்சிநல்லா கெடசகாம
வெடுக்குண்ணு எளுந்திருச்சான் ம்ம்

நங்கே, ஒங்கூட சேந்துநல்ல
ஒங்கூட சேந்துநல்ல
என்னோட வாள்க்கமே முடிஞ்சிதம்மா ம்ம்

நங்கே, ஒங்கூட சேந்துநல்ல
ஒங்கூட சேந்துநல்ல
என்னுயிரு வரணமம்மா ம்ம்

அய்யய்யோ செல்லத்தம்பி ஒனக்கு ஒருபோதும்
வஞ்சக (ம்) கெடையாதையா ம்ம்

என் கொளந்தபோல வளத்துநல்லா ஒனக்கு
ஆலயம் (?) செய்தேனய்யா
கொலகாரப் பாவிநல்லா நெனச்சிட்டானே ம்ம்

எம்மேல தப்புத்தவுறு கெடையாதையா ம்ம்

வசனம்: சத்தியமா கெடையாது செல்லத்தம்பி

(தன்னன்னே)

வசனம்: அப்படிப்பட்ட மகாப் ... (புரியவில்லை)
எப்படிண்ணு கேக்கறியா ம்

ம்ம் வேட்டி மடிச்சிகட்டி லேமைல லைலம்
வீதியிலே போயிட்டாளே தன்னே னன்னனே னானம்

சாரோட்டு வண்டிகட்டி லேமைல லேலம்
போரோட்டு (?) போயிட்டாளே சாமிமன்னார் ராஜம்

தம்பி, நாடு வெளங்கவேணும் தில்லேலம்படி லேலம்
ஒரு நல்லபேரு வாங்கவேணும் சாமிமன்னார் ராஜம்
அங்க பேருவெளங்கவேணும் தில்லேலேலே லேலம்
ஒரு பெரியகுடி யாகவேணும் சாமிமன்னாரு ராஜம்

வசனம்: ஆணு போனவருஷம் பெத்து அரசபட்டமான வர் (?)
பொண்ணு போனவருஷம் பெத்து பெரியகுடி யாகவேணும்

...... (புரியவில்லை)

(தன்னன்னே)

நங்கே நீயுமே எங்கண்ணனுமே
சொகமாக போனீங்கம்மா
என்னுயிரு வரணமாச்சே ஆம்ம்

சந்தனகட்ட வெட்டி
குங்குங்ககட்ட வெட்டி
சுட்டுநல்லா அங்கம்பொறுக்கி
ஆத்திலே உடவேணும் ம்ம்

உடாத போனீங்கண்ணா
அருகம்புல்லு வாடுனாப்போல்
வாடிநல்லா போகுமம்மா ம்ம்

கொண்டபோயி உட்டதானா
அருகம்புல்லு ...... (?)
கலையுமம்மா ம்ம்

அய்யய்யோ செல்லத்தம்பி நல்ல
கையிலோர் காசுமில்லோ
சுடங்கொடுப்பார் ஒருவரில்ல
நான் அவ்விதமா வந்திட்டேனே ம்ம்

செத்தவ னெழுந்திரிச்சா
சீமஎடங் கொள்ளாதோ
மாண்டவ னெழுந்திரிச்சா
மாளிஎடங் கொள்ளாதோ
நான் செத்தவன செத்துநல்லா போவேனம்மா

எனக்குச் சந்தனகட்ட வெட்டி
குங்கும கட்டவெட்டி
என்னசுட்டுநல்லா அங்கம்பொறுக்கி
ஆத்தில உடவேணும் ம்ம்

அய்யய்யோ செல்லத்தம்பி எனக்கு
கையிலே காசுமில்ல

காசிதான் இல்லாததான்
போனதானா போனதானா
அம்மா, நாலும் நடக்கும் நடக்கும்
தூக்கிக்கொண்டு போட்டுதானும்

(யாரோ குறுக்கிடுதல். பாடல் தடைப்படுகிறது)

(தன்னன்னே)

நாலு நடக்குந் தடத்து
தூக்கிக்கொண்டு போட்டு நல்லா
அழுதுகொண்டு நில்லுமம்மா ஆம்ம்

நாலு நடக்குந் தடத்து
தூக்கிக்கொண்டு போட்டுதானும்
ஐயா பாடி யழுகிறாளே ம்ம்

வலதுபொறம் சுத்திவந்து
எடதுபொறம் சுத்திதானும்
மாரடிச்சி யழுகிறாளே ம்ம்

(தனனன்னே)

அய்யா மேக்கிருந்து ஏழுவண்டி
வெறகுநல்லோ தானுமையா
ஓட்டிக்கொண்டு வாராங்கையா ம்ம்

நீ ஏழுவண்டி வெறவுக்காரரே
வெறவாகத் தாருங்கையா
வெறவநல்லாத் தாருங்கையா ம்ம்

ஆரம்மா பொம்பளைய
அர்த்தங்கெட்டு கேக்குறயே
வெறவுகாரன், சும்மாதானா குடும்பானம்மா ம்ம்

நீ நல்லாவே திட்டிச்சி (?)
பாருங்கையா பாருங்கையா
உங்க ஏழுபேர்த்துக்கும் பொண்டாட்டியா
இருக்குறமிண்ணு சொல்லுறாளே ம்ம்

அருமான பொம்பளயிண்ணு
ஏளுவண்டி வெறவநல்ல
தாந்தாங்கையா தாந்தாங்கையா ஆம்ம்

ஏளுவண்டி வெறவ வாங்கி
செல்லத்தம்பி அடியவச்சி
ஐயா, கட்டமட்டியா (அ)டுக்குறாளே ம்ம்

சுத்திவந்து ஆடிதானா
பாடிதானா (அ)ளுதுகொண்டு
ஐயா நிக்குறாளாம் ம்ம்

கெளக்கருந்து ஏளு டின்னு
சீமெண்ண காரர
வேகமா வாராங்கையா ம்ம்

அய்யா ஏளுடின்னு சீமெண்ண
காரர காரரே
அந்த எண்ணெய தாருங்கையா ம்ம்

பொம்பள எண்ணய தந்தாதானா
அந்த எண்ணகாரன் சும்மாதானா
இருப்பானாம்மா இருப்பானாம்மா ம்ம்

என்ன திட்டிச்சி பாருங்கையா
நல்லவெதமா பாருங்கையா
ஒங்களுக்கு ஏளுபேத்துக்கும்
பொண்டாட்டி(யா) இருக்குறமுண்ணு
சொல்லுறாளே ம்ம்

அருமான பொம்பளயிண்ணு
ஏளுடின்னு எண்ணெயும்
ஐயா தாந்தாங்கையா ம்ம்

ஏளுடின்னு எண்ணெய வாங்கி
வெறவுமேல ஊத்திதானே
கொள்ளிவச்சி கொடமொடைச்சி
தீயிகள மூட்டுறாளே ம்ம்

தீயிகள மூட்டும்போது
கொண்டனுட்டு எரியுதையா
கொண்டையும்/கொண்டனுட்டு எரியுதங்கே ம்ம்

(தனனன்னே)

அதிலொரு ஏளுபேரு
இதிலொரு ஏளுபேரு
பதினாலு பேருக்குத்தான்
ஒருபொம்பள பொண்டாட்டி
இருக்கநல்லா முடியுமாய்யா ம்ம்

ஒருத்தங்கிட்ட இருந்துதானா
சம்மாளிக்க முடியாம
பதினாலு பேர்ததுக்கு
சம்மாளிக்க முடியுமங்கே ம்ம்

அவங்கிட்ட இருந்தாலும்
அவனுக்கும் பொல்லாப்பு
இவருகிட்ட இருந்தாலும்
இவருக்கும் பொல்லாப்பு
ஐயா வெட்டும்பளி குத்தும்பளி
குடும்பங்கள கெட்டுப்போகும் ம்ம்

எல்லாத்துக்கும் பொதுவிலயும்
எலுமிச்சங்கனி வீசுறேனே
ஐயா ஓடிப்பிடிச்சவனுக்கு
அருமான (?) பொண்டாட்டி ம்ம்

எலுமிச்சங்கனி வீசும்போது
எலுமிச்சங்கனி வீசும்போது
எறக்ககட்டி பறக்குதையா ம்ம்

ஓடுங்கடா ஓடுங்கடா
உருட்டிகட்டி ஓடுங்கடா
ஓடிப் புடிச்சவனுக்கு
அருமான பொண்டாட்டி மம்

வடபத்ர காளியம்மா
மண்டபத்து போயிதானும்
அந்த எலுமிச்சங்கனி
ஏறிதான் ஒக்காந்தது மம்

ஏறுங்கடா ஏறுங்கடா
பக்கமா போகும்போது
எலுமிச்சங்கனி, எறக்ககட்டி பறக்குதையா ம்ம்

அட எட்டி எட்டி குதிங்கடா
பக்கமா போகுதடா
ஓடிப்பிடிச்சி அருமான பொண்டாட்டி ம்ம்

எட்டி எட்டி குதிக்கும்போ
காலு போனவன் சின்னம்போனவன்
மொண்டி மொண்டி ஓடுங்கடா
சண்டி சண்டி ஓடுங்கடா
ஓடுங்கையா ம்ம்

எலுமிச்சங்கனி போயிதானும்
தீயிலே உளுந்துதையா
தீயிலே உளுந்துதையா ஆம்ம்

இந்தப் பொம்பளகிட்ட வேலதானும்
... (?) இருக்குதுன்னு
பதினாலு பேரும் சேந்து
வளச்சுநல்லா முடுக்குறாங்க ம்ம்

பதினாலு பேருத்துக்கு
சிக்காம ஓடுறாளே
ஓடிநல்லா வந்துதானும்
தீயில குதிச்சாளம்மா ம்ம்

அட அருமான பொம்பளைய
தீயில குதிச்சிட்டாளே
நம்ம உயிரு

எதுக்காக வேணுமடா ம்ம்
இந்தப் பதினாலு பேருதானும்
தீயில குதிச்சிட்டாங்க ம்ம்

தினியில்லாம் போடுறாங்க
தவுடுநல்லாம் காட்டுறாங்க
நம்ம வன்னாடி (?) தீயில குதிச்சிட்டாங்க
... (?) தீயிலியே குதிச்சிட்டுது ம்ம்

பாடியவர்: *அம்மாசை.*

குறிப்பு: *திரு அ. மா. பழனிச்சாமியின் பெற்றோர் வாயிலாக இவரை அணுகியபோது இவர் பாட முன்வந்தார். மாலைநேரம். ஊரின் நடுவே உள்ள கோயிலொன்றின் உள் பகுதியில் ஊர்மக்கள் சூழப் பாடினார். மக்கள் ஆர்வத்துடன் கேட்டனர். பாடலின் பெயர் 'செல்லத்தம்பி பாட்டு' என்றும் கற்றுக்கொண்ட ஊர் நினைவில்லை என்றும் இந்த ஊரிலோ அருகிலுள்ள ஊர்களிலோ இப்பாடலை அறிந்தவர்கள் யாருமிருப்பதாகத் தெரியவில்லை என்றும் கூறினார். (குழுமியிருந்த மக்கள் ஆமோதித்தனர்). கற்றுக் கொண்ட பாடலை அப்படியே மாற்றம் செய்யாமல் பாடியதாகக் கூறினார். 'கொழுந்தனை நங்கையார் மகனைப்போல பார்த்துக் கொள்கிறான்; புருஷனுக்குச் சந்தேகம்; வேறு தப்பான தொடர்பு எதுவுமில்லை; நியாயமானவனாக இருந்ததால்தான் செத்தவன் எழுந்திருக்கமுடிந்தது' என்றும் கூறினார். தான் இப் பாடலைப் பிறருக்குப் பொழுது போக்காகப் பாடிக் காட்டுவது உண்டு என்றார்.*

பாடல் முடிந்த பின்னர் 'நிட்டூரி கதை'யை ஒத்த ஒரு கதையை இப்பாடல் கதையின் தொடர்ச்சியாகக் கூறினார்.

(ஒலிப்பதிவு நாடா எண்: 7)

12. சேலம் (நவபட்டி)

அட சின்னண்ணன் பெரியண்ணன்
அட சித்தானக் குட்டியண்ணன்
மட்டுக்கடங்காத மகுடமுடி சின்னண்ணன்
கொட்டுக்கடங்காத என் கோத்திரத்து சின்னண்ணன்

ஆரடா சின்னண்ணஞ்சாமி
பெரியண்ணஞ் சாமி
முப்பாட்டன் நாபபாட்டன் காலத்துல
ஆடுன வேட்டையடா
நான் பொறந்தடா (?) சின்னச்சாமி
நாம வேட்டைக்குப் பொறப்பட்டு
போகத்தான் வேணுமடா

அங்க ஆரடா சின்னண்ணஞ்சாமி
பெரியண்ணஞ் சாமி
நம்ப பம்பும்பைத்தாளி (?)
அந்த முப்பாட்டன் நாப்பாட்டன்
தலமொறையில ஆடுன வேட்ட
கத்தி கேடயம்
அம்பு வில்லு
அல்லாம் எங்க வச்சிருக்கிறான்
நமக்குத் தெரியாதுடா
அல்லாம் மறைஞ்சிபோச்சி

வசனம்: அல்லாம் மறைஞ்சிபோச்சி. அந்த அம்பு வில்லு கத்தி கேடயமெல்லாம், அப்படிண்ணு சின்னண்ணஞ்சாமியும் பெரியண்ணஞ்சாமியும் சொல்லும்போது ...... அத பாட்டாதான் சொல்லணும் அப்பதான் நல்லா இருக்கும்

அப்போவுந் தானும்
ஆரடா சின்னண்ணஞ்சாமி
பெரியண்ணஞ் சாமி
நம்ப அம்பும் ஆயுதம்

கத்திகேடயம்
வில்லும் அம்பும்
இதெல்லாம் வேணும்
நாம்ப சீக்கிரமா தேடி
நாம்ப வேட்டைக்குப் போகவேணும்

ஒரேரு காரங்கிட்ட
ஒரேரு கத்திவாங்கி
ரெண்டேரு காரங்கிட்ட
ரெண்டேரு கத்திவாங்கி
மூணேரு காரங்கிட்ட
மூணேரு கத்திவாங்கி
நாலேரு காரங்கிட்ட
நாலேரு கத்திவாங்கி
அவன் சின்னண்ணஞ் சாமி
ஒன (?) செமையா அவன்கட்டி
சிறுதோளு செமையா தூக்கிக்கிட்டு
பெறப்பட்டு வந்தானே
அங்க பொறப்பட்டு வரமுடியுந்தானும்
ஏளுட்டு ஆசாரியும்
ஒடனே கொடி (?) புடுங்கி ஓடுறாங்க

ஒரு மொண்டியும் ஆசாரியும்
ஒரு தாய் தகப்பனுக்குப் பொறந்திருந்தா
ஒரே ஊதா ஊதணும்
ஒரே தட்டா தட்டணும்
கத்தி கேடயம்
வில்லும் அம்பும்
அல்லாந்தான் ஆகணுமுண்ணுதான்
அந்த மொண்டிதான் ஆசேரி
அவன் தாய் தகப்பன் நெனந்துவருந்தி
கடவுள வருந்தி

ஒரே ஊதா ஊதி
ஒரே தட்டா தட்டுனான்

ஆரடா சின்னண்ணஞ்சாமி
வில்லும் அம்பும் ஆயுதம்
அல்லாம் ஆயிப் போச்சி
நீ எடுத்துக்கிட்டுப் பொறப்பட்டு போடாண்ணு
அந்த மொண்டிதான் ஆசாரி சொன்னானே

அப்பவுந்தானும்
ஆரடா சின்னண்ணன் பெரியண்ணன்
சித்தான குட்டியண்ணன்
மட்டுக்கடங்காத மகுடமுடிசின்னண்ணன்
கொட்டுக்கடங்காத கோத்திரத்து சின்னண்ணன்
நாம்ப வேட்டைக்குப் பொறப்பட
வேணுமுண்ணு தானும்

அட அந்தப் பெரியண்ணன் பெஞ்சாதி
அவ பேசா திருமுளியா
அவ கட்டிசாதம் கட்டதான் சொல்லுடாண்ணு
ஆரு அந்தப் பெரியண்ணஞ்சாமி
சின்னண்ணஞ்சாமிகிட்ட சொன்னானே

அவ வளிச்ச மொறமெடுத்தா
வரணசம்பா நெல்லெடுத்தா
கொளிச்ச மொறமெடுத்தா
குண்டஞ்சம்பா நெல்லெடுத்தா
உள்ளங்கையி ஒலக்கையும்
பெருவெரலு/உள்ளங்கையி ஒரலும்
பெருவெரலு ஒலக்கையா சேத்தி
அவகுத்தி பொடைச்சாளே

ஒரு அரிசிமொன முறியாத
பெரியண்ணன் பெண்சாதி
அவகுத்தி பொடைச்சா
குத்திப் பொடைச்சதும்
அவ சாதங்க சமைச்சாளே

ஆரடா சின்னண்ணஞ்சாமி
பெரியண்ணஞ் சாமி
அவ கட்டிச்சாதம் கட்டுமடா
நாம்ப வேட்டைக்குப்
பொறப்பட்டு போலாம்

வேட்டைக்குப் பொறப்பட்டுப் போயிதானும்
ஆரடா சின்னண்ணஞ்சாமி
பெரியண்ணஞ் சாமி
மட்டுக்கடங்காத மகுடமுடி சின்னண்ணன்
கொட்டுக்கடங்காத கோத்திரத்து சின்னண்ணன்
நம்ப அம்பும் ஆயுதம்
வில்லெல்லாம் மறந்துட்டு வந்துட்டமே
என்னடா பண்ணுறதுண்ணுதானும்

('கட்டி சோத்த எல்லாம் அப்படியே உட்டுட்டன். ஊட்டுக்குப் போறதெல்லாம் உட்டுட்டன்' என்று பாடகர்கூற, 'விட்டதெல்லாம் தொடர்ந்து பாடுமாறு' வேண்ட, பாடல் தொடர்கிறது)

அப்படியுந் தானும்
அந்த வில்லும் அம்பும்
ஆயுதம் அல்லாம் எடுத்துக்கிட்டு
சின்னண்ணன் சாமி
டை மட்டுக்கடங்காத மகுடமுடி சின்னண்ணன்
கொட்டுக்கடங்காத கோத்திரத்து சின்னண்ணன்
அட எச்சி மூஞ்சி
எச்சிதான் காயிறதுக்கிள்ளதானும்
அந்த வில்லும் அமபும்
ஆயுதம் வில்லும் எல்லாம்
எடுத்துக்கிட்டு வந்துறணும்
அப்படிந்தானும்
பெரியண்ணஞ்சாமி
அவரு சொல்லி அனுப்பிச்சாரு
சொல்ல முடியுந்தானும்
அவன் காக்காயா ரூவமாறி

அவன் சின்னண்ணஞ் சாமி
அவன் வீட்டுமேல தானும் வந்து ஒக்காந்தி
அவன் காகமா ரூவமாறி
காகாண்ணு கத்துனான்

கத்தமுடியுந் தானும்
என்னடா இத்தன இருகாலமும் இல்லாத
நம்பளோட வீட்டுமேல
இந்த காவம் கெடந்தாலும்
வந்துதான் கத்துனதுதானும்
பெரியண்ணன் பெஞ்சாதி
வீட்ட உட்டு எட்டியே பாத்தாளே

அவ எட்டியே பாக்கமுடிந்தானும்
இவன் சின்னண்ணஞ் சாமி
காக்கா ரூபமாறி
வந்து ......(?)......
ஒககாந்திருக்கும் படியுந்தானும்
அவன் சின்னண்ணஞ்சாமி
ஒக்கார முடியுந்தானும்
என் கொட்டுக்கடங்காத கோத்திரத்து சின்னண்ணன்
மட்டுக்கடங்காத மகுடமுடி சின்னண்ணன
அந்தக் காரணத்த சொல்லுமுண்ணு கேட்டாளே

பெரியண்ணன் பெஞ்சாதி
பேசா திரு முளியா
நான் அம்பும் ஆயுதம் எல்லாம்
மறந்துட்டுப் போயிட்டம்
அதுக்காகத்தான் காக்காயா ரூவமாறி
நான் இங்கத்தான் வந்தண்ணு
பெரியண்ணன் பெஞ்சாதி
பேசா திருமுளியாகிட்ட சொல்லுறானே
ஆரு சின்னண்ணஞ்சாமி

பெரியண்ணன் பெஞ்சாதி
அந்த வில்லும் அம்பும்

ஆயுதம் எல்லாம்
எடுத்துக் குடுண்ணு
ஆரு சொன்னான்
பெரியண்ணன்/சின்னண்ணன் சாமி
பெரியண்ணன் பெஞ்சாதிய

சொல்ல முடியுந்தானும்
அங்க சோறும் அடுப்புமேல
ஒண்ணம் பெத்த சோளகனும் மடிமேல
பாலும் மடிமேல
ஒண்ணம் பெத்த பாலனும் மடிமேல
சாமி நீங்க வந்து
எடுத்துகிட்டுப் போங்க
மட்டுக்கடங்காத மகுடமுடி சின்னண்ணன்
கொட்டுக்கடங்காத கோத்திரத்து சின்னண்ணன்
அந்த வில்லம்ப எடுத்துகிட்டு போனதா
பெரியண்ணன் பெஞ்சாதி சொன்னாளே
அவ கட்டிப் புடிச்சாளே
கடவாய முத்தமிட்டா
தாவிப் புடிச்சாளே
தாவாய முத்தமிட்டா

பெரியண்ணன் பெஞ்சாதி
பேசாதிரு முளியா
கிள்ளுபடா மேனி
கிள்ளுபட்டுப் போச்சி
காயம்படா மேனி
காயம்பட்டுப் போயிடுச்சி

(பாடுவதை நிறுத்திவிட்டு 'மூச்சிப்புடிச்சிக்கிட்டு இல்ல பாட வேண்டியிருக்கு' என்று கூறல்)

காயம்படா மேனி
காயம்பட்டுப் போச்சி
கிள்ளுப்படா மேனி

கிள்ளுப்பட்டுப் போச்சி
பெரியண்ணன் கேட்டா
பெரியண்ணன் பெஞ்சாதி

பேசாதிரு முளியா
என்னதான் சொல்லுவன் அப்படிண்ணுதான்
அளுது பொலம்புனான்

அவன் அளுது பொலம்பும் முடியுந்தானும்
ஆல செவுரேறி
...... (?) அம்பெடுத்தன்
அனந்த முள்ளிருந்து
அள்ளைய கிளிச்சதண்ணா
குட்டிச் செவுரேறி நான்
குதிகுதிச்சி அம்பெடுத்தன்
குட்டிதா பூனவந்து அங்க
குறுக்க கிளிச்சதண்ணா

('தொண்டைய கட்டிக்குது' எனல்)

ஆருடா சின்னண்ணன் பெரியண்ணன்
சித்தான குட்டியண்ணன்
மட்டுக்கடங்காத மகுடமுடி சின்னண்ணன்
கொட்டுக்கடங்காத கோத்திரத்து சின்னண்ணன்

அங்க ஏளுதாட்டு மானும்
எளம்பருத்திக் காட்டுல மேயுமடா
ஏள் மலைக்கும் அந்தாண்ட
எளம்பருத்திக் காட்டுல
ஏளுதாட்டு மானுதான் மேயுமடா
அட சின்னண்ணஞ் சாமி

அவன் சுத்தி வளச்சியல்லோ
சின்னண்ணஞ் சாமி
கொண்டுகிட்டு வந்துதானும்
ஏளுபெலா மரத்தியும் தாண்டி

ஏளு ஆவார குத்தியும் தாண்டி
அந்த சின்னண்ணஞ் சாமி

ஏளுதாட்டு மானையும்
ஓட்டிக்கிட்டு வந்துதானும்
ஊருபக்கம் சேத்துனான்

சேத்த முடியுந் தானும்
ஆருடா சின்னண்ணஞ்சாமி
மட்டுக்கடங்காத மகுடமுடி சின்னண்ணன்
கொட்டுக்கடங்காத கோத்திரத்து சின்னண்ணன்
அட பெரியம்ப போடுட்டா
சின்னம்ப போடுட்டா

அப்படியுந்தானும் அவன்
பெரியண்ணன் சின்னண்ணனை
சின்னண்ணன் கேக்கும்போது
(தடுமாற்றம்)
அண்ணா பெரியண்ணன் சாமி
பெரியம்ப போட்டாலுஞ்சரி
சின்னம்ப போட்டாலுஞ்சரி
அப்படிண்ணு தானும் அவன்
சின்னண்ணஞ் சாமி
பெரியண்ணன் சாமிகிட்ட சொல்லிபுட்டான்

அப்படியுஞ் சொல்ல முடியுந்தானும்
அவன் பெரியம்ப போட்டான்
பெரியண்ணஞ் சாமி
ஏளுபெலா மரத்தயும் பொத்துபுட்டு
ஏளுநா ஆவார (?) குச்சியும் பொத்துபுட்டு
ஏளுதாட்டு மானியும் பொத்துபுட்டு
சின்னண்ணன் மேல போய்
ஒரு அம்புகளும் பட்டுடிச்சி

இருந்தாலும் இருக்கட்டும்
வாடா சின்னண்ணஞ்சாமி
நாம்பளும் போலாண்ணு
அவன் பெரியண்ணஞ் சாமி
அவன் தட்டி எளுப்புனான்

தாவாய முத்தமிட்டான்
மாண்டவன் எந்திரிச்சா
வையகம் கொள்ளாது
செத்தவன் எந்திரிச்சா
சீமைடங் கொள்ளாது
நான் மாண்டவன் மாண்டபோறன்
செத்தவன் செத்த போறன்
அப்படிண்ணுதானும் அவன் சொல்லிபுட்டு
அவன் உயிரத்தான் உட்டுட்டான்
சின்னண்ணஞ் சாமி
உயிரத்தான் உட்டுட்டான்

உடமுடியுந் தானும்
அவன் ஏளுதாட்டு மானிலியும் ஒரு
ஏளுதாட்டு மானையும் எடுத்துகிட்டு
ஒருகோலுல தோள்பாரம போட்டுகிட்டு
பெரியண்ணஞ் சாமி
வரமுடியுந் தானும்

இவள் பெரியண்ணன் பெண்சாதி
பேசா திருமுளியா
அவ ஆலம் எடுத்துகிட்டு
எதிருதான் பாக்குறா

அங்க எதிருதான் பாக்கமுடியுந்தானும்
எங்கண்ணன் சாமி
பெரியண்ணன்சாமி
எங்க சின்னண்ணன் காணுமுன்னு கேட்டா

கேக்க முடியுந்தானும்
ஒப்பன் ஊட்டு ஊட்டுக்கு
அவன் மானுகொண்டு போயிகிறான்
அப்படிண்ணு தானும்
அவன் சொன்னான்
சின்னண்ணன் சாமியண்ணன்
பெரியண்ணன் பெண் சாதிகிட்ட

............தானும்
இருந்தாலும் இருக்கட்டும்
ஆரடி பெஞ்சாதி நீ
சாதங்களும் சமையுமடி
அவ சாதஞ்சமைக்கு முடியுந்தானும்
அவ சாதஞ் சமைச்சு
அவ சாதஞ்சமைக்கு முடியுந்தானும்
நாம்ப ரெண்டு பேருந்தானும்
சின்னண்ணனும் பெரியண்ணனும்
ஒரே மட்டையில நாம்ப
சாப்புடுவோ முண்ணுதானும்
இண்ணைக்கு உட்டுட்டு சாப்பிடுவோமுண்ணு
அவன் பெரியண்ணன் தானும்
அவன் அளுது பொலம்புனான்
அளுது பொலம்ப முடியும்
என்னா சாமி
எண்ணைக்கும் இல்லாம
நீ அளுக வேண்டிய காரணம் என்னா
அப்படிண்ணு கேக்கும்போது
பெரியண்ணன் பெஞ்சாதி
அண்ணாந்து பாத்தன்
அங்க கொண்டையிது (?) இரும்பு ஒரு
தூசிதான் விளுந்திடுச்சி
ஒண்ணுந்தான் இல்லைண்ணு
அந்த பெரியண்ணன் சாமி
பெரியண்ணன் பொண்டாட்டிகிட்ட
இவ்ளயிந்தான் சொல்லிட்டான்
சொல்ல முடியுந் தானும்
இண்ணைக்குத் தானும்
எனக்கு ஆயாசமா இருக்குது
ஒன்மடிமேல நான் படுத்து
நித்திர போகணுமுண்ணு
பெரியண்ணன் சாமி
அவ மடிமேல படுத்து நித்ரபோனாரு

அங்க நித்திர போகும்போது தானும்
அவ சந்த்ரோதி சாமத்துக்கு
பெரியண்ணன் பெஞ்சாதி

அங்க தூங்கதான் வச்சிட்டு
அவ புடிசொம்பு அங்க
பெரம்பதான் எடுத்துகிட்டு
அவ புடிசொம்பு தீர்த்தத்த
கைல புடிச்சிகிட்டு
அட ஆடுமேய்க்கும் அண்ணமார
குட்டிமேய்க்கும் அண்ணமார
எங்க சின்னண்ணன கண்டீங்களா

அவ அத்துவான அந்துவான கானகத்துல
அவ அளுது பொலம்பிகிட்டு
அவ போறாள பெரியண்ணன் பெண்சாதி

போவ முடியுந்தானும்
எண்ணைக்கும் இல்லாத
இருகாலம் இல்லாத
இந்த அத்துவான அந்துவான கானகத்துல
ஒரு பொண்ணுதானும்
அளுவுதுண்ணுட்டுதானும்
ஒரு செங்கருடனாகப் பட்டது
அங்க வட்டமா சுத்தி
வளியதான் வநதுது

அங்க வரமுடியுந்தானும்
நீ உடுத்திருக்கும் துயில்ல
ஒரு மொள துயிலுதான் போட்டீனா
அந்தச் சின்னண்ணன் சாமி
அவன் செத்த எடந்தான் கூட்டிப்போயி
காமிக்கிற முண்ணுதானும்
அந்தக் கெருடனாகப்பட்டது சொல்லிச்சி

சொல்ல முடியுந்தானும்
நெவல புடிச்சிக்கிட்டுப் போயி

அவன் சின்னண்ணஞ் சாமி
அவன் செத்த எடத்திலியே போயிதானும்
அவ புடிசொம்பு தீத்தத்த எறக்கி
பெரம்பால' அடிச்சி
அவ தட்டி எளுப்புனா
தாவாய முத்தமிட்டா

ஆனம்மா... ... (?) ...
பெரியண்ணன் பெண்சாதி
பேசா திருமுளியா
மாண்டவன் எந்திரிச்சா
வையகம் கொள்ளாது
செத்தவன எந்திரிச்சா
சீம எடங் கொள்ளாது
நான் மாண்டவன் மாண்டேபோறேன்
செத்தவன் செத்தே போறேன்
அப்படிண்ணுதானும்
அவன் செத்துதான் போயிட்டான்
சின்னண்ணன் சாமி

ஏளு பொதிமாட்டுக் காரனும்
ஏளு வண்டிக்காரனும்
சந்தனக்கட்ட குங்குமாங்கட்ட
அவுங்க வனத்துல ஓட்டிக்கிட்டு வரும்போது

என்னடா எண்ணைக்குமில்லாத
இப்பேர்கொண்ட கானகத்துல
ஒரு பொண்ணு அளுவுதுண்ணு
ஒரு பொங்கொரலுசத்தம் அளுவுதுண்ணுதான்
அந்த ஏளு பொதிமாட்டுக்காரனும்
ஏளு வண்டிக்காரனும்
அங்க என்னாண்ணு பாக்கலாமுண்ணுதானும்
நிறுத்திபுட்டு வந்தாங்க
வரமுடியுந்தானும்
சின்னண்ணன் சாமிய

சந்தனக் கட்டவெட்டி
சதுரமா தானடுக்கி
குங்குமாங் கட்டவெட்டி
கோபுரமான தானடுக்கி
எங்க சின்னண்ணஞ்சாமிய
நல்லடக்கம் பண்ணுனீங்கண்ணா
நான் ஏளு/ஏளு பேத்துக்கும் நான்
எளையதான் பெஞ்சாதியா
இருக்குறண்ணு தானும்
அந்தப் பெரியண்ணன் பெண்சாதி
அவ வாய்வார்த்த சொன்னாளே

(தொண்டையைக் கனைத்து 'அடேயப்பா' எனல்)

அங்க சொல்ல முடியுந்தானும்
அட இப்ப என்னமோ இருந்தாலும்
சந்தனக் கட்ட குங்குமாங்கட்ட
இதெல்லாம் அடுக்கிபுட்டுதானும் அவ
ஏளுபேத்துக்கும் பெஞ்சாதியா இருக்குறன்
வாங்கடா அப்பயிண்ணு
ஏளு பொதி மாட்டுக் காரரும்
ஏளு வண்டிக் காரரும்
அங்க குங்குமாங் கட்டவெட்டி
கோபுரமா தானடுக்கி
சந்தின கட்டவெட்டி
சதுரமா தானடுக்கி
அவளுந்தானும்

அவளும் வந்து
கல்ல எடுத்துதான் தட்டுனா
அங்க நெருப்பா பத்தி
அந்தக் குண்டமும்/குண்டமும் பத்தி எரியுது

குண்டம் பத்தி எரியும்போது தானும்
எங்களோட சாதியிலே
எடம்புரி வலம்புரி

நாங்க மூணுதாரம் வரணும்
அப்படிண்ணு தானும்
எடம்புரி வலம்புரி மூணுதாரம் வந்தா
அவ ... (?) கேக்கும்போது
பெரியண்ணன் பெண்சாதி
அவ எட்டிக் குதிச்சாளே

எட்டிக் குதிக்கு முடியுந்தானும்
இப்பேர் (கொ)ண்ட பொண்ணே போகும்போது
நாம்ப என்னடா பெரிசிண்ணுதானும்
அங்க ஏளுவண்டிக் காரனும்
ஏளு பொதிவண்டிக் காரனும்
அங்கே குண்டத்துல எட்டிக்குதிச்சாங்க
குதிக்க முடியுந்தானும்
பில்லுப்போட்டுத் தண்ணிக் காமிக்கிற
மனுசனே போயிட்டாரு
இந்த ஏளு வண்டியும்
ஏளு பொதி மாடுந்தானும்
அதுவுமே எறங்குச்சி

''அவ்வளவுதாம்பா எனக்குச் சத்து. அது பாட்டு கொள்ளையா இருக்குது. மூச்சி 'தம்' கட்டி பாட முடியில, எத்தனையோ கெள இருக்குது''.

பாடியவர்: பெருமாள்.

குறிப்பு : சிறு வீட்டின் அறை ஒன்றில் என் வேண்டுகோளுக் கிணங்கி பாடினார். அப்போது மூன்று நான்கு பேர் மட்டுமே அறையில் இருந்தோம். பதினாறு வயதில் கற்றுக் கொண்டதாகக் கூறினார். தூக் கம் வராதபோது பாடுவது உண்டு என்றார். 'நீங்க புத்தகம் படிக்கிற மாதிரி' என்று உதார ணம் தந்தார்.

(ஒலிப்பதிவு நாடா எண்:9)

13. சேலம் (நவபட்டி)

சின்னண்ணன் பெரியண்ணன் சுவாமி
சித்தானக் குட்டியண்ணன்
மட்டுக்கடங்காதே
மகுடம் பெருத்த மன்னா
குட்டுக் கடங்காதே
கோத்தரத்துச் சின்னண்ணஞ் சுவாமி

அட மட்டுக்கடங்காதே
மகுடம் பெருத்த மன்னா
குட்டுக் கடங்காதே
கோத்தரத்துச் சின்னண்ணஞ்சுவாமி

அட நாம்ப சின்னஞ்சிறு வயது
சிறு பாலகண்டா
நம்பள மூணு வருஷத்துக் கொளந்தையிலே
தாயுந் தகப்பனும்
உட்டுட்டு எறந்தும் போனாங்க
அடடா சின்னண்ணஞ் சுவாமி
எப்படிர்றா இப்படியே இருந்தாக்க
நாம்ப சீவசிந்த (?) நாளையிலே
நாம்ப எப்படிர்றா சீவிக்கறது

அப்படிண்ணு கேக்குறானே
பெரியண்ணஞ் சுவாமியும்
சின்னண்ணஞ் சுவாமி அதுக்கு
என்னா சொல்லுறாண்ணு கேக்குறானே

அடடா சின்னண்ணஞ் சுவாமி
மட்டுக்கடங்காதே
மகுடம் பெருத்த மன்னா
குட்டுக்கடங்காதே
கோத்திரத்து சின்னண்ணஞ் சுவாமி

அட அந்தப் பிரகாரம்

யாரடா சின்னண்ணஞ் சுவாமி
நாம்ப வேட்டைக்குப் போலாமுண்ணு
கேக்குறானே பெரியண்ணஞ் சுவாமியும்
அந்தக் காடு வனவாத (?)
ஊடு வனவாத (?)
நாம்ப விட்டுட்டு எங்கடா போலாண்ணு
கேக்குறானே சின்னண்ணஞ் சுவாமி

அந்தப் பிரகாரம்
ஆரடா அண்ணமாரே
நாம்ப வேட்டைக்குப் போலாமிண்ணு கேக்குறானே
சின்னண்ணஞ் சுவாமியும்
அந்தச் சித்தான குட்டிமன்னா
மட்டுக்கடங்காத
மகுடம் பெருத்த மன்னா
குட்டுக்கடங்காத
கோத்திரத்துச் சின்னண்ணஞ் சுவாமி
அட அந்தப் பிரகாரம்
நாம்ப பொறப்பட்டுப் போலாமுண்ணு
கேக்குறானே சின்னண்ணஞ் சுவாமி

'அந்த லைட்ட ஆப் பண்ணுங்க' என்று கூறல்.

அப்ப கேக்குமும் போது
யாரடா சின்னண்ணஞ் சுவாமி
நாம்ப காடு வனவாத (?)
ஊடு வனவாத (?)
நாம்ப போயிமு ...... போகுமும்போது
யாரடா அண்ணமாரே

(பேச்சுக்குரலால் பாடகர் பாடலை நிறுத்தி விட்டு 'ஏங்க என்று கேட்க 'நீங்க பாடுங்க' என்று கூறப்பட்டது)

அந்தப் பிரகாரம்
ஆரடா பெரியண்ணஞ் சுவாமி
நாம்ப பொறப்பட்டுப்
போலாமிண்ணு கேக்குமும் போது

அட நாம்ப கட்டிசாதம் கட்டிதான்
கைலெடுத்துப் போலாமுண்ணு கேக்குமும்போது

ஆரடா பெஞ்சாதி
கட்டிசாதம் கட்டியும்
எங்க கைலெடுத்துக் குடுமுண்ணு கேக்குறானே
பெரியண்ணஞ் சுவாமியும்
பெண்டாட்டிய கேக்குறானே

அவன் கேக்குமும் போது
அந்தச் சின்னண்ணஞ் சுவாமிக்கு
அந்தப் பெருவெரல ஒலக்கைக்கு/ஒரலுசேத்தி
அந்த உள்ளங்கைய ஒரலுசேததி
அந்தப் பெருவெரல ஒலக்கசேத்தி
அந்தச் சின்னசம்பா நெல்லெடுத்து
அவ உரிஉரியா (?) நெல்லெடுத்துக் குத்தியும்
கட்டிசாதம் கட்டியும்
சின்னண்ணஞ் சுவாமிக்குக்
கைலெடுத்துக் குடுக்கிறாளே

அந்தப் பெரியண்ணன் சாமிக்கு
என்னாத்தக் குடுக்குறா
அந்த ஏளு வருசத்து
.... (?)
எடுத்து ஒண்ணு ரெண்டா ஒடைச்சி
மாவும் அவ களிய கௌறியும் வச்சிக்குடுக்குறாளே
தன்னோட புருசனுக்கு

அப்ப அவ கைலெடுத்துக் குடுத்துட்டு
நாங்க வேட்டைக்குப் போயிதான்
நாங்க திரும்பிவர மாயாண்ணு
சொல்லிட்டுப் பொறப்பட்டுப் போறாங்க
அந்தச் சின்னண்ணஞ் சுவாமியும்
பெரியண்ணஞ் சுவாமியும்
ரெண்டுபேரும் இருவரும் சேர்ந்து போறாங்க

அப்ப அவிங்க போகுமும் போதுதான்
பொடு பொடுண்ணு போனாங்க
அந்த அத்தவான அலங்காடு
நாம்ப போயிமு தண்ணி தாவமண்ணா
பச்சத் தண்ணித் தாவமண்ணா
பந்தொணர்ந்து (?) போவுதண்ணா
நீசத் தண்ணித் தாவமண்ணா
நெஞ்சொணர்ந்து போவுதுண்ணு
கேக்குறானே பெரியண்ணஞ்சுவாமி

அப்ப அவுங்க கேக்குமும் போது
அந்தச் சின்னண்ணஞ் சுவாமி
என்னா சொல்லுறான் அந்த நேரத்திலே
அந்தச் சின்னண்ணஞ் சுவாமிகிட்ட
அண்ணா இந்த அததவான அலங்காட்லே
எங்கணா போறது
தண்ணிக்கிண்ணு கேக்குமும் போது

அட பச்சத்தண்ணித் தாவத்துக்கு
இந்த இடத்திலே நீ தண்ணிதான்
கொண்டாந்து குடுக்கலண்ணா
யாரடா சின்னண்ணஞ் சுவாமி
அது ராயிக்குப்படாதுண்ணு
கேக்குறானே பெரியண்ணஞ் சாமி

அப்ப அவுரு கேக்குமும்போது
நாம்ப தாயி தகப்பனுக்கு
பொறந்தவனா இருந்தாக்கா
இந்த அத்தவான அலங்காட்டில
நாங்க ரெண்டு பேரு இருக்கறமே
நான் ஒரு கல்ல பேக்கும்போது
தண்ணியா பொறப்பட்டு வரணுமுண்ணு
கேக்குறானே சின்னண்ணஞ் சாமியும்

அப்ப அவன் கேக்குமும் போது

ஒரு கல்லையும் பேத்தானே
அது சலமாக பொறப்பட்டு
வந்துமும் நிண்ணுச்சி
நிண்ணுச்சையா நிண்ணுச்சி

அவன் சலத்திலே கைகால களுவிகிட்டு
சாப்புட்டுப் போலாமண்ணா
அப்புடிண்ணு கேக்குறானே
சின்னண்ணன் சுவாமிகிட்ட
பெரியண்ணன் சுவாமியும்

அட நானு ஒருவனுக்கு ஒருத்தனுக்கா
பொறந்தவனா இருந்தாக்கா
திலும்பி பாக்காமே
கட்டிசாதம் சாப்பிடணும்னு சொல்லுறானே
பெரியண்ணன் சுவாமி

அண்ணா வேண்டாண்ணா
ஒன் சாதத்திலே பாதிகுடு
எஞ் சாதத்திலே பாதிதாரேன்
அப்புடிண்ணு கேக்குறானே
சின்னண்ணன் சுவாமியும்
முடியாதுண்ணு சொல்லுறானே
பெரியண்ணன் சுவாமியும்

அது ஒரத்தனுக்கு ஒருவனுக்கு
திரும்பியும் பாக்காமே
சாதத்த சாப்புட்டுட்டு
பொறப்பட்டுப் போறாங்க
அத்தவான அலங்காடு

அப்ப போகுமும் போதுதான்
பாத்தாங்க இந்த
கும்படி கல்லுமேல
ஏறியும் பாக்கறண்டா
சின்னண்ணஞ்சுவாமி

நிக்கிறியா நில்லுடாண்ணு சொல்லுறானே
அந்த பெரியண்ணஞ் சுவாமி

அப்ப மேல ஏறிப் பாக்கும்போது
மானுகளாம் நெறயாதான் மேயுதடா
சின்னண்ணஞ் சுவாமி
நாம்ப தகப்பன் தாயி செஞ்சநல்லா
அம்புகள மறந்துட்டுதான்
வந்துட்டம்ணு சொல்லுறானே
அந்தச் சின்னண்ணஞ் சாமிகிட்ட
பெரியண்ணன் சுவாமி

அப்ப அவன் சொல்லமும் போதுதான்
என்னண்ணா செய்யுறது
அப்புடிண்ணு அண்ணனதான்
திரும்பியும் கேக்குறானே
அந்த பெரியண்ணன் சாமிகிட்ட
சின்னண்ணஞ் சாமி

அப்ப அவன் சொல்லவும்போதுதான்
தம்பி யாரடா இனி
எச்சிமுஞ்சி எச்சி கரையறத்துல
தகப்பன் தாயி செஞ்ச
கள அம்புகள போயி எடுத்துக்கிட்டு நீ
வருணுமுண்ணு கேக்குறானே
அந்த பெரியண்ணன் சுவாமி

அப்ப அவன் என்னாண்ணு சொல்லுறான்
நானு என்னாண்ணா செய்யப்போறன்
ஏளுமலைக்கும் அந்தாண்டே
நான் போயி எடுத்துவரது நெசமாண்ணு
கேக்குறானே அண்ணங்கிட்ட திருப்பி
இனி அந்தப்பிரகாரம் எடுத்துவல்லை
அப்படியிண்ணு சொல்லம்போது
இந்த ஏளு அம்புகள ஒன்னசுட்டுடுவன்

எரையாக்கி விட்டுடுவண்ணு கேக்குறானே
அநதப்பெரியண்ணன் சாமி

அப்ப அவன் சொல்லவும் போது
அண்ணா பொறப்பட்டுப் போறண்ணு சொல்லிவிட்டு
சின்னண்ணன் சுவாமியும்
வந்துமும் சேருறான ஊருக்கு

அப்ப ஊட்டுக்குச் சென்று வரம்போது
அந்தப் பெரியண்ணன் சுவாமி பெண்சாதி
வீட்டுல கொளந்தைக்கு
தண்ணியும் வா(ர்)த்துக் கொண்டு
இருக்குறா இருக்குறா

அப்ப யாரப்பா சின்னண்ணன் சுவாமி
பாலும் தலமேல ஒண்ணம்பெத்த
பாலகனும் மடிமேல
சோறும் தலமேல ஒண்ணம் பெத்த
சோளகனும் மடிமேல
நீ எடுத்துக்கொண்டு போப்பாண்ணு சொல்லும்போது

அப்ப அந்தப் பிரகாரம்
அவனும் போயிதான்
அம்புகள எடுக்கும்போது
கட்டி தாவிதான்
புடிச்சிக்கிட்டா அந்த பெரியண்ணன் பெண்சாதி புடிச்சிக்கிட்டா
ஆராயா பெரியண்ணன் பெண்சாதி
மூணு மாசத்துக் கொளநதையிலே
என்னயும் எடுத்துமும்
நீ பால்குடுத்து வளத்தலவா
பெத்த தாயும் ஒண்ணு நீயும ஒன்ணுண்ணு
கேக்குறானே அவன்
சினனண்ணன சுவாமியும்

அப்ப அவன் கேக்குமும் போதுமும்
அவ என்னா சொல்லுறா

அதெல்லாம் முடியாது
எந்த சேருக்கையும் இருந்தே ஆகணுமுண்ணு
சொல்லுறாளே அந்தச் சின்னண்ணன் சாமிகிட்ட
பெரியண்ணன பெண்சாதி

அப்ப அவ சொல்லவும் போது
இவன் திமிறியும் பாத்தான்
மேனியெல்லாம் கிள்ளுபடா மேனியெல்லாம்
கிள்ளுபட்டு போச்சி
அள்ளுபடாத மேனியெல்லாம்
அள்ளுபட்டு போச்சி

ஆரடா அண்ணன் பெஞ்சாதி
இந்தமாதிரி இருக்குதே நான்
சத்தியம் குடுத்து வந்தேன்
சத்தியம் தவறிடுச்சி
இதுக்கு என்னா சொல்லுறது
அப்படிண்ணு சின்னண்ணஞ் சாமியும்
திருப்பியும் கேக்குறானே

அப்ப என்னா சொல்லுறா
பெரியண்ணன் பெண்சாதி
ஆள செவுரேறி
ஆங்கரிச்சி அம்பெடுத்தேன்
ஆங்கார பூனவந்து
அள்ளைய கிளிச்சிடுச்சி
குட்டி செவுரேறி
குதிகுதிச்சி அம்பெடுத்தேன்
குட்டித்தா பூனவந்து
குறுக்க நிண்ணு கிளிச்சிச்சிண்ணு
சொல்லுங்கையா அப்புடிண்ணு சொல்லுநாளே
பெரியண்ணன் பெஞ்சாதி

அப்ப அந்தப் பெரகாரம்
என்னா போயிதான்

நானு சொல்லுவேன் அண்ணங்கிட்டே
அப்படிண்ணு திருப்பியும் வளச்சியும்
கேக்குறானே அங்க
சின்னண்ணன் சுவாமியும்

மீண்டும் அதையே நீ
வளைச்சிக் கேக்கவேண்டாம்
நான் கொண்ட பிரகாரம்
நீ போயியே சொல்லுண்ணு
கேளுண்ணு சொல்லுறாளே

அவன் மீண்டும்
அம்ப எடுத்துகிட்டு
போயிமும் அண்ணங்கிட்ட சேந்தானே

அட தெரியும் தெரியுமடா
செட்டியாரு வித்தையெல்லாம்
அறியும் அறியுமடா
ஆசார வித்தையெல்லாம்
அப்படிண்ணு பெரியண்ணன் சுவாமியும்
சொல்லுறானே சொல்லுறானே

அப்ப அவன் சொல்லவும் போதுதான்
என்னா அண்ணா இந்தமாதிரி நான்
ஆள செவுரேறி நான்
ஆங்கரிச்சி அம்பெடுத்தேன்
ஆங்கார பூனவந்து
அள்ளய கிளிச்சிச்சே

குட்டிச் செவுரேறி
குதிகுதிச்சி அம்பெடுத்தேன்
குட்டித்தா பூனவந்து
குறுக்கே கிளிச்சிடுச்சி
அப்படிண்ணு அண்ணங்கிட்டே
சொல்லியும் பாக்குறானே

தெரியும் தெரியுமடா
செட்டியாரு வித்தையெல்லாம்
அறியும் அறியுமடா
ஆசார வித்தையெல்லாம்
அப்படிண்ணு அவனுந்தான் சொல்லிட்டு
ஆரண்ணா என்னண்ணா
செய்யுறதுண்ணு கேக்குறானே

இனி ஏளுதாட்டு மானு எல்லாம்
எளம் பருத்திக் காட்டில
மேயுதுண்ணு சொல்லுறானே
என்னண்ணா நான் செய்யப்போறன்
எப்படிநான் ஓட்டியாந்து
சேத்துட்டண்ணு சொல்லுறானே
சின்னண்ணன் சாமியும்

அப்ப இந்தப் பெரியண்ணன்சாமி
எண்ணா சொல்லுறான்
இந்த மானுஎல்லாம் ஓட்டியாந்து
சேக்குலாண்ணா இந்த அம்புகள்ல
எரையாவ சுட்டிடுவன
அப்படிண்ணு சொல்லுறானே
பெரியண்ணன் சாமி அந்த
கொம்படி கல்லுமேல நின்னுகிட்டு

அப்பநானு என்னா வருந்துறேன்
சின்னண்ணன் சுவாமியும்
நானு தாயி தகப்பனுக்கு
ஒருவனுக்குப் பொறந்திருந்தா
நானு இருபக்கம் போனா
பலபக்கம் இருக்குற மானுகள்ளாம்
ஒருபக்கம் வந்து சேருணுமுண்ணு
சொல்லுறானே வருந்துறானே சாமி அந்த
சின்னண்ணன் சாமி

அப்பஅவன் மகுடி எடுத்துதான்
கைலெடுத்து அவன் வாசக்கிறான்
சின்னண்ணன் சுவாமி
அந்த ஏளு நாவார குத்து
ஏளு இளவார குத்து
ஏளு மட்டிக்கா மரம்
ஏளு கெளா மரம்
ஏளு நாவார குத்து

(ஏதோ இடையீடு ஏற்பட பாடல் தடைப்பட்டு மீண்டும் பாடப்படுகிறது)

அப்ப அந்த ஏளு எளவார குத்தடியே
அண்ணா நான் ஓட்டியாந்து
சேத்துட்டண்ணா இந்த மானுகள்ளாம்
ஏளுதாட்டு மானுகள்ளாம்
அண்ணா என்னண்ணா செய்யிறதுண்ணு
சொல்லுறானே அந்தப்
பெரியண்ணன் சுவாமிகிட்ட
சின்னண்ணன் சுவாமி

அட யாரடா சின்னண்ணன் சுவாமி
நான் எங்கணா போவுட்டும்
அப்படிண்ணு பெரியண்ணன் சுவாமியே
சின்னண்ணன் சுவாமி கேக்குறானே

அட ஆரடா சின்னண்ணன் சுவாமி
ஒரு மரத்தடிய ஒண்டிதான்
நில்லுமுண்ணு சொல்லுறானே
பெரியண்ணன் சுவாமி

அவன் இளுத்துதான் அடிச்சானே
அந்த ஏளு அம்புகளும் ஏளு
அந்த ஏள்தாட்டு மானயும் சாய்ச்சிட்டு
அந்த ஏள்தாட்டு மான சாய்ச்சிட்டு
ஏளு எளவார குத்த சாய்ச்சிட்டு

ஏளு மத்திக்கா மரம் (?) சாய்ச்சிட்டு
ஏளு நாவார குத்த சாய்ச்சிட்டு
அந்த ஏளு அம்புகளும் போயி
சின்னண்ணஞ் சாமி
அள்ளயில ஏறிடுச்சி

அட ஆரடா சின்னண்ணன் சுவாமி
கூடிப் பொறக்கலியா
கூட்டுப்பாலு நானு உண்கலையா
ஆரடா பெரியண்ணன் சுவாமி
செத்தவன் செத்தே போறன்
மாண்டவன் மாண்டே போறன்
அப்படிண்ணு சொல்லிட்டு
அந்தச் சின்னண்ணன் சாமி
உயிருகள உட்டுட்டானே

அவன் அங்கருந்து அந்த
....
....
எறங்கி வந்து
இவன எடுத்துப் போனா ஏளுருக்கு

(ஒலிப்பதிவு நாடா மாற்றுவதால் இடையீடு ஏற்பட்டுப் பின்னர் தொடர்தல்)

இவன எடுததுக் கொண்டு/எடுத்துப்போனா
ஏளுருக்கு எளவாகும்
இந்த ஏள்தாட்டு மான
எடுத்துக் கொண்டு போனா
ஏளுருக்குக் கறியாகும்
அப்படிண்ணு சொல்லிட்டுதான்
இவன் ஏள்தாட்டு மானியும்
ஓரேகட்டா கட்டி
ஒருதோளுல மாட்டியும்
கொண்டுகிட்டு வரானே ஊருக்கு

அப்போ இந்த தன்னோட பொண்டாட்டி
எங்கப்பா கொளுந்தனார காணுமுண்ணு

கேக்கமும் போதுமும்
அப்பய அதுக்கு பெரியண்ணன்சாமி
என்னா சொல்லுறான்
ஒப்பமுட்டு ஊட்டுக்கு
மான்தொட கொண்டுபோயி
இருக்குறாண்ணு சொல்லுறானே
அந்தப் பெரியண்ணன் சுவாமி

அப்பய அந்தப் பெரகாரம்
இங்கருந்து கொண்டு போயி
ஏளுமானுகள உரிச்சிதான்
அதுல இருக்கும் பொருளுகள
எடுத்துதான் குடுக்குறானே
பொண்டாட்டிய வறுத்துதான் வையமாண்ணு
சொல்லுறானே பெரியண்ணன் சுவாமி
அவ எடுத்தும் அந்த ஈரல வறுத்துத்தான்
அந்தக் கி(ண்) ணியில ரெண்டுபேரும்
சின்னண்ணன் சாமியும்
பெரியண்ணன் சாமியும்
சாப்படக்கூடிய கி(ண்)ணியில
குத்தியே வச்சிட்டு
யாரப்பா பெரியண்ணன் சுவாமி
நீ சாப்புட்டு வாங்கப்பாண்ணு சொல்றாளே
பொண்டாட்டி தன்னோட பொண்டாட்டி

அப்ப அவன் சாப்பிடவும் போகுவுந்தான்
யாரப்பா சின்னண்ணன்சாமி
நாம்ப ரெண்டுபேரும் சேந்துதான்
இருவரும் சேந்து அந்த
கி(ண்)ணியில சாப்பிடவும் போவோம்
இண்ணைக்கு நானு
ஓரததனா சாப்புடுறண்ணு
கண்ணீரே உடுறானே

என்னப்பா பெரியண்ணன் சுவாமி

இண்ணைக்கு இருவருமிலல
இண்ணைக்கு கண்ணீரு உடுற காரணம்
என்னாண்ணு அந்த
பெரியண்ணன் சாமிய
தன்னோட பொண்டாட்டி
வளைச்சினு கேக்குறாளே

அய்ய இண்ணைக்கு
மேலயும் அண்ணாந்து பாத்தேன்
ஒரு தூசியும் கண்ணில உளுந்துடிச்சி
அப்படிண்ணு சொல்லிபுட்டு திண்ணுட்டு
இந்த ஏள்கொப்பற தண்ணிய
காயவச்சி குடுக்கும்போது
இவன் தண்ணிய வாத்துக்கிட்டு
கட்டிலில படுத்துதான்
நித்தர செய்யுறானே
அந்த பெரியண்ணன் சாமி

அப்ப இவ என்னா நெனப்பு நெனச்சா
.... துயிலெடுத்து
இடுப்புல உடுத்திக்கொண்டு
அவ புடிபிரம்ப கைலெடுத்து
புடிசொம்பு தண்ணிய கைலெடுத்து
அவ தன்னோட பையன எடுத்து
தொட்டிலில போட்டுட்டு
பொறப்பட்டு போறாளே
பெரியண்ணன் பெண்சாதி

அப்ப அவ வனாந்தரத்திலே போகும்போது
ஆரடா அண்ணன்மாரே
ஆட்டுக்காரன் அண்ணமாரே
மாட்டுக்காரன் அண்ணமாரே
இந்தச் சின்னண்ணஞ் சாமிய பாத்திங்களா
அப்படிண்ணு கேட்டுக்கிட்டுப் போறாளே

அப்பய நாங்க சின்னண்ணன் சாமியும்பாக்கல
நாங்க பெரியண்ணன் சாமியும் பாக்கல
நீ பொறப்பட்டுப் போயினு இருமம்மா
எங்களுக்குத தெரியாதுண்ணு சொல்லுறாங்க
ஆட்டுக்கார அண்ணன்மாரு

அப்போ அங்க பொறப்பட்டுப் போகும்போது
ஒணாந் தடத்திலே போகவும்போது
அந்தப் பெருமா களுவாகப்பட்டது
யாராயா பெண்ணே
யாரக் கேக்தறண்ணு
பெருமாக் களுவு கேக்குது

அம்மா உடுத்திருக்கும் துகிலுகள
போட்டு ஒருமொளம்
போடாத ஒருமொளம்
கிளிச்சி என்னோட
களுத்துல கட்டிக்கிட்டு
நீ கால்லஒரு நூலெடுத்துக் கட்டிபுட்டு
நீ பொறப்பட்டு போயிக்கிட்டே இரம்மா
என்னோட நெவலையும் பாத்துகிட்டு
போயிகிட்டே இரம்மாண்ணு
சொல்லுதே பெருமாக்களுவு

அப்ப இவ கிளிச்சி ஒருமொளம்
கிளிக்காத ஒருமொளம்
களுத்தில கட்டிபுட்டு
இவ போயிகிட்டு இருக்குறாளே
அந்தப் பெரியண்ணன் பெண்சாதி

அப்ப அது என்னா சொ ...
இங்கருந்து போயி
ஒரு வனாந்தரத்திலே
ஒரு மத்திக்கா மரத்துமேல
ஒக்காந்திச்சி அந்த பெருமா களுவாகப்பட்டது

அது ஒக்காரும்போது
அடிலே மத்திக்கா மரத்தடிலே
அவன் கெடக்குறானே
சின்னண்ணன் சாமி

அப்ப இவ கைலருக்கும் அந்த சொம்புகளதான்
தீர்த்தத்த தெளிச்சி ஒருபக்கம்
தெளிக்காத ஒருபக்கம் அவ
அடிச்சி எளுப்புறாளே
சின்னண்ணன் சாமிய

அவன் திடுக்குண்ணு எந்திரிச்சி ஒக்காந்து
யாரம்மா எளுப்புனண்ணு கேக்கும்போது
அப்ப யாரும் எளுப்புல
நானு பெரியண்ணன் பெண்சாதி
அப்புடிண்ணு சொல்லம்போது

அம்மா மாண்டவன் எந்திருச்சா
மடமே கொள்ளாது
செத்தவன் எந்திரிச்சா
சீமயே கொள்ளாது
அப்படிண்ணு சொல்லிட்டு
நான் மாண்டவன் மாண்டே போறன்
செத்தவன் செத்தே போறன்
அப்படிண்ணு அவன் சொல்லிபுட்டு அவன்
செத்தும் போயிட்டானே
சின்னண்ணன் சுவாமியும்

அப்ப அவ என்னடா
அத்தவான அலங்காட்டுலே
நாம்ப என்னடா செய்யுறது
அப்புடிண்ணு சொல்லிதான்
அளுது பொலம்பியும
ஒக்காந்து இருக்குறாளே
சின்னண்ணன் சாமிகிட்ட
பெரியண்ணன் பெண்சாதி

அப்ப அவ அளுது பொலம்பும்போது
ஏளு பொதிமாட்டுக் காருந்தான்
அந்த வனாந்தரத்திலே ஓட்டிக்கிட்டு வராங்க
என்னடா மின்னேரு
பொதிமாட்டுக்கார அண்ணமார்களா
ஒரு வனாந்தரத்திலே
ஒரு பொங்கொரலு சத்தமும்
காதிலே கேக்குதுண்ணு
சொல்லுறானே சொல்லுறானே

சரி ஓட்டிக் கொண்டி போயிந்தான்
பக்கத்தே நிறுத்திட்டு
கிட்டியும் போயிந்தான்
பாக்கமும் போதுந்தான்
அந்த யாரம்மா பெண்ணே
என்னம்மா இங்கே
அளுது பொலம்புறே
இப்பேர்கொந்த அளகுள்ள பொண்ணு
அப்படிண்ணு அந்த முன்னேரு
பொதிமாட்டுக்காரன் கேக்குறானே

அப்ப சின்னண்ணஞ் சாமியும்
பெரியண்ணஞ் சாமியும்
வேட்டைக்கு வந்தாங்க
சின்னண்ணன்சாமி
எறநது விட்டுப் போயிட்டானே
நான் அதுக்காக நானு
அளுது பொலம்புறன்
நல்லடக்கம் சேத்துனுண்ணு கேக்குறாளே
அந்த பெரியண்ணன் பெண்சாதி

அப்ப யாரப்பா ஏளுமாட்டுப் பொதிமாட்டுக்காரன்
இந்தச் சின்னண்ணஞ் சாமிய
எடுத்துமு நல்லடக்கஞ் செஞ்சிட்டா
நானு ஏளுபேத்துக்கும் நானு

எளைய பெஞ்சாதியா
இருக்குறண்ணு சொல்லுறாள
அங்க பெரியண்ணன் பெண்சாதி

சேரிடா நம்ப
பொண்டாட்டிமாரு எல்லாம்
சக்கிலிச்சுமில்ல பறச்சி(யு)மில்லே
அப்பிடியும் இருக்குறாளே
நாம்ப இவள கொண்டுக்கிட்டு போலாமிண்ணு
எந்நேர மாகுது
சந்தனக் கட்ட
குங்குமக் கட்ட
வெட்டி அடுக்கிபுட்டு
நாம்ப இவள கூட்டிக்கிட்டுப் போலாமுண்ணு
அந்த பொதிமாட்டுக் காரரு
ஏளுபேரும் சொல்லுறாங்க

அப்ப இவுங்க என்னா நெனச்சாங்க
ஏளுபேரும் போயி
ஆளுக்கொரு மரத்த
வெட்டியும் கொண்டாந்து
அடுக்கியும பிட்டு
ஆரம்மா பொண்ணே
அடுக்கிபுட்டம் அம்மா
இத என்னாம்மா செய்யுறது
அப்படிண்ணு கேக்குறாங்க
அந்த பெரியண்ணன் பெண்சாதிய

அப்ப எடுத்து சவத்ததான்
வச்சிநல்லா நானு
நல்லடக்கம் செஞ்சிட்டு
நாம்ப போலாம்ணு அவ சொல்லுறாள

அப்ப சொல்லவும் போவுதுந்தான்
சவத்தெடுத்து உள்ளியும் வைக்கிணும்

இவிங்க நீங்க பொறத்தால ஏளுபேரும்
போயிடுங்கப்பா நானு
சவத்துக்கு நான்
நெருப்பு பொரிச்சிட்டு வரன்
அதுக்குமேல போலாம்பா
என்னோட சாங்கியம் இருக்குதுண்ணு
நானு அத செஞ்சிட்டு வரண்ணு
அவ சொல்லுறாளே
அப்ப அவுங்க ஏளுபேரும்
புறத்தால நிண்ணுமு இருக்குறாங்க

இவ நான் தாயி தகப்பனுக்கா
பொறந்தன்னு இருந்தாலும்
நான் ஒரு கல்லெடுத்து
சக்கிமுக்கி அடிக்கிறன்
நெருப்பாக பத்தவேணும்
அப்படிண்ணு சாமிய வருந்துறாளே

அவ கெளக்கு மொகமாதான்
நிண்ணுதான் சந்திரனே
வருந்தியும் பொருத்துறாளே
பொருத்திகிட்டு அவ
எடம்பிரி வலம்பிரி
மூணுதரம் வந்து
அவ நெருப்ப கொள்ளிவச்சிட்டு
நல்லா துளுருட்டு வேவும்போது
எடம்புரி வலம்புரி
வாம்மா போலாம் அப்படிண்ணு
அவுங்க சொல்லவும்போது

அப்ப நல்லா துளுருட்டு வேவும்போது
இவ எட்டனதும் நெருப்புல குதிச்சிட்டா

அப்பஅவ குதிக்குமு போதுதான்
இந்தப் பொதிமாட்டுக்காரு ஏளுபேரும்
இப்பேர்கொந்த பெண்ணே

அளகுள்ள பெண்ணே
நெருப்புல வேகும்போது
நாம்ப இங்க இருந்தா என்னா
இருக்காத போனா என்னாண்ணு
ஏளுபேருமே எட்டியும்
நெருப்புல குதிச்சாங்கப்பா

அப்ப பில்லுகட்டு போடற
பங்காளியே(?) போயிட்டானே
நாம்ப எங்கடா போறதுண்ணு
ஏளு பொதிமாடும்
அந்த நெருப்பிலியே எறங்குச்சப்பா

அப்ப எறங்கும் போவுதுந்தான்
என்னாடா செய்யிறது
மூணுநாளா ஆகுதுண்ணு
பெரியண்ணன் சாமியும்
அங்கருந்து வந்துதான்
அங்கம் பொறுக்கிதான்
ஆத்தில விட்டுப் போறானே சாமி

'அதோட சரிங்க, பாதியோடய முடிச்சிட்டண்'

பாடியவர்: *பழனியப்பன்*

குறிப்பு: *கதைக்குச் 'சின்னண்ணன் பெரியண்ணன் கதை' என்று பெயர் கூறினார். பதினைந்து பதினாறு வயதில் இக் கதையைக் கற்றுக் கொண்டதாகவும் இரவில் உறக்கம் வராத நேரங்களில் படுத்துக் கொண்டே பாடுவதுண்டு என்றும் கூறினார். சிறு வீட்டின் முன்னறையில் பாடல் பதிவு செய்த போது அறை விளக்கை அணைத்து இருட்டாக்கு மாறு கூற, அவ்வாறே செய்து பாடல் பதிவு செய்யப் பட்டது. (பாடும் போது ஒருவர் விளக்கைப் போட, பாடலை நிறுத்திவிட்டு விளக்கை அணைக்குமாறு கூறினார்).*

சக்கிலியர், பறையர் போன்ற சாதியினர் இப்பாடலைப் பாடுவர் என்றார். கதையில் வரும் பெண் 'பத்தினியா' என்று கேட்டபோது 'அவ பத்தினியாங் கறத நாம்ப என்னா கண்டோம்' என்றார்.

(ஒலிப்பதிவு நாடா எண். 9)

14. சேலம் (நவபட்டி)

சித்தண்ணன் குட்டியண்ணன்
மட்டுக்கடங்காத கொட்டுக்கடங்காத
கோத்திரத்து சின்னண்ணஞ்சாமி

இங்க சித்தண்ணன் குட்டியண்ணன்
மட்டுக்கடங்காத
கோத்திரத்துச் சின்னண்ணஞ்சாமி

நம்ப ஏளுரு பங்காளிய
போயி கூட்டிக்கிட்டு வாருமடா
நாம்ப வேட்டைக்குப் போலாமடா சின்னண்ணஞ்சாமி

இண்ணைக்கு வேட்டைக்குப் போலாமுண்ணு
எளம்பருத்திக் காட்டுல
எளதாட்டு மானுமும்
எளதாட்டு குயிலும்
மேஞ்சிக்கிட்டு இருக்குதுடா சின்னண்ணஞ்சாமி

நம் ளெடத்தைக்குப் போயி
போலாமடா போயி
பங்காளிங்கள ஏளுரு பங்காளிங்கள்
கூட்டிட்டு வாரும்டா சின்னண்ணஞ்சாமி

ஏளுரு பங்காளிகள கூட்டிக்கிட்டு
ஓட்டம் புடிச்சான
சின்னோட்டம் சிறுநடையா
ஓட்டம் புடிச்சான
பெரியோட்டம் பெருநடையா
தண்ணிகண்டா குடிக்காம
நெவலுகண்டா நிக்காம
....
ஓட்டம் புடிச்சான

இண்ணைக்கு ஓட்டம் புடிச்சிப்போயி

நிக்கும்போது சின்னண்ணன்
ஏளுரு பங்காளிங்கள எளுங்கப்பா
பெரியண்ணன் சாமி
கூட்டிக்கிட்டு ஒங்கள வரச்சொன்னாங்க
எளம்பருத்திக் காட்டுல
ஏளுதாட்டு மானும்
ஏளுதாட்டு குயிலும்
மேஞ்சிக்கிட்டு இருக்குது
ஒங்கள வரச்சொன்னாங்க
கூடிய சீக்கிரமா
கூட்டிக்கிட்டு வரச்சொன்னாங்க
சின்னண்ணன் சாமி
ஒங்கள அனுப்பிவுட்டாங்க
ஏளுரு பங்காளிகள
எளுங்கப்பா போலாமுண்ணு கூப்புட்டாங்க
கூப்புடும் பொளுது
அடடா சின்னண்ணஞ்சாமி
சித்தண்ணன் குட்டியண்ணன்
மட்டுக்கடங்காத நீ
கோத்திரத்துச் சின்னண்ணஞ்சாமி
நீ போயி ஒங்களோட
வேட்டைய நீங்க ஆடுங்கடா
சின்னண்ணஞ் சாமி
எனக்கு வேலவெட்டி செய்யமுடியில (?)
வெலங்கி நிக்கநேரமில்ல
சின்னண்ணஞ் சாமி
நீங்க ஏளு பங்காளிங்க
வரமாட்டோமிடா
சின்னண்ணஞ்சாமி
ஒங்க வேல வேட்டைய போயி
ஆடிக்கிட்டு வாங்கண்ணு
சொல்லி அனுப்பிச்சி கொடுத்தானே
சின்னண்ணஞ் சாமி
சொல்லிக்குடுத்து

அனுப்பிச்சி விட்டாங்க
ஏளுரு பங்காளிங்க

ஓட்டம் புடிச்சி வந்து நிக்கும்போது
இது சின்னண்ணஞ்சாமி
எட்டிப் பாக்கும போது
இது சின்னண்ணஞ் சாமிய
அங்க ஆரப்பா பெரியண்ணஞ்சாமி
நம்ப ஏளுரு பங்காளிங்க
வரத்துக்கு நேரமில்லியப்பா
நீபோயி ஒங்களுட வேட்டைய
ஆடுங்கண்ணு சொல்லி அனுப்பிச்சி
குடுத்தாங்கண்ணா குடுததாங்கண்ணா

அனுப்பிச்சி குடுக்கும்போது
பெரியண்ணசாமி
வேட்டைக்கு வல்லைண்ணு: சொன்னாங்கண்ணா
போலாமாண்ணா நம்போட வேட்டைக்கு
போலாமாண்ணு கேக்கும்போது

யாரடா சின்னண்ணஞ்சாமி
போயி பெரியண்ணன் பெஞ்சாதி
கட்டிசாதம் கட்டச்சொல்லு கட்டச்சொல்லு
பெரியண்ணன் பெஞ்சாதிய
அண்ணங்க பெரியண்ணன் பெஞ்சாதி
பெரியண்ணன் பெஞ்சாதி
கட்டிச்சாதம் கட்டிக்குடு
நாங்க வேட்டைக்குப் போறோமம்மா
அங்க பெரியண்ணன் பெஞ்சாதி

கட்டிச்சாதம் கட்டிக்குடுண்ணு சொல்லும் போவிது
கட்டிச்சாதம் கட்டிக்குடுண்ணு சொல்லும் போவிது
அங்க சீரச்சம்பா நெல்லெடுத்து
உள்ளங்கைய உரலாவும்

உள்ளங்கைய உரலாவும்
பெருவிரல ஒலக்கையாவும்

அங்க சீர(க)ச்சம்பா அரிசிமொன முரியாத
கட்டிச்சாதம் கட்டிக் கொடுக்கறதுக்கு
நெல்லு குத்துறாளே
சின்னண்ணஞ் சாமிக்கு
பெரியண்ணன் பெஞ்சாதி

நீ கட்டிச்சாதம் கட்டும்போவிது
சின்னண்ணஞ் சாமிக்கு கட்டிச்சாதம்
சின்னச் சீர(க)ச்சம்பா நெல்லெடுத்து
கட்டிச்சாதம் கட்டிக் குடுததிட்டு
பெரியணணஞ் சாமிக்கு
ஏளுவருசத்து புற்றானி(?)எடுத்துத்தான்
கட்டுச்சாதம் கட்டுறாளே கட்டுறாங்க

நீ கட்டும் போவிது
ஏளு வருசத்து புத்தாணியம்(?)எடுத்து
கட்டுச்சாதம் கட்டி
ஒடைச்சி(?)...கட்டுச்சாதம்
கட்டிக் குடுக்கும் போவிது
நீ எடுத்துக் கட்டிச்சாதம் குடுக்கும்போவிது
நீ சின்னண்ணஞ்சாமி
எடது கையி சாப்பாடு ஒன்னோட
ஒண்ணனோட கட்டுசாதம்
வலதுகையி சாப்பாடு
சின்னண்ணஞ் சாமிண்ணு
சொல்லி அனுப்பிச்சி குடுத்தாங்க
பெரியண்ணன் பெஞ்சாதி குடுத்தாங்க

அதக் கொண்டுகிட்டுப் போவும் போவுது
நடுவெளியில தண்ணித் தாவம்னா
பச்சத் தண்ணித்தாவம்
நீங்க பல்லு உளுந்து போவுதுடா(?)
சின்னண்ணஞ்சாமி
சித்தானக் குட்டியண்ணன்

மட்டுக்கடங்காத கோத்திரத்து
சின்னண்ணஞ்சாமி
அண்ணன் இருந்தாலும் இருக்கட்டும் அண்ணாவே
பச்சத்தண்ணி தாகமண்ணா
இந்த வனத்தில எங்கபோயி
நான் வனத்திலே தண்ணிதேடி குடிக்கிட்டா
சின்னண்ணஞ் சாமிண்ணு கேக்கும்போவிது
நீங்க சுண்ணாம்புக்கு இரையாகிறியா(?)
தண்ணித்தேடி பிடிச்சி குடுக்கிறியாடா
சின்னண்ணஞ் சாமிண்ணு கேக்குறாங்க
பெரியண்ணன் சாமிஅம்மா
கேக்குறாங்க கேக்குறாங்க

கேக்கும் போவிது
கேக்கும் போவிது
அளுது புலம்புறானே
அளுது புலம்பிகிட்டு இருக்கும்போவிது
நீங்க போயி ஒருத்தனுக்கு
ஒருவனுக்கா எங்கம்மா
முந்தாணி போட்டிருந்தா
தொம்பரான் கல்லடிய
தண்ணி முட்டிக்கிட்டு
சலசலண்ணு சலம்
முட்டிக்கிட்டு வரணுமிண்ணு
அளுது புலம்புறானே। அங்க
சின்னண்ணஞ் சாமிஅம்மா

நீங்க அளுது புலம்பும் போவிது
பச்சத் தண்ணி முட்டிக்கிட்டு
சலசலண்ணு சலம் முட்டிக்கிட்டு
தொம்பராம் பில்லடிய
முட்டிக்கிட்டு வரும்போவிது
அண்ணன் பச்சத் தண்ணி கேட்டியண்ணா
இந்தாண்ணா ஒனக்கு

பச்சத் தண்ணி கெடைச்சிடுச்சிண்ணு
பெரியண்ணன் கூப்பிடும் போவிது
தண்ணிய குடிச்சிப்பிட்டு
யாரடா சின்னண்ணஞ்சாமி
நம்பள பெரியம்ப மறந்துபிட்டு வந்துட்டமே
சின்னண்ணஞ் சாமி

கல்லுமேல எச்சி மூஞ்சி வைக்கிறண்டா
சின்னண்ணஞ்சாமி
எச்சி கரையறதுக்குள்ள போயி
எடுத்துக்கிட்டு வரணுமடா
சின்னண்ணஞ்சாமி
எடுத்துக்கிட்டு வரணுமடா
நீ எச்சி கரையறதுக்குள்ள
எப்படிண்ணா போயி
நீ எடுத்துக்கிட்டு கூடியசீக்கிரமா
வரணுமின்னு கேக்கும் போவிது
நீ எடுத்துகிட்டு வாடாண்ணு
அனுப்பிச்சி குடுத்தாரு

மாடுகண்டா நிக்காம
தண்ணிகண்டா குடிக்காத
நெவலு கண்டா நிக்காம
மனுசன் கண்டா பேசாத புடிக்காத ஓடி
வாசப்படிமேலே நிண்ணுகிட்டு
பெரியண்ணன் பெஞ்சாதி எங்கள்
பெரியம்ப விட்டுட்டுப் போயிவிட்டம்
எடுத்துக் குடுண்ணு கேக்கும்போவுது
யாரப்பா சின்னண்ணஞ்சாமி
ஒண்ணன் பெத்த பாலகனா மடிமேல
ஒறங்குதங்க ஒறங்குதங்க

நீ ஒண்ணம் பெத்த பாலகனா
ஒறங்குதங்க ஒறங்குதங்க
பாலும் அடுப்புமேல
பொங்கிப் போகுதங்க போகுதங்க

நீ ஒண்ணம்பெத்த சோளகனும்
தூங்குதங்க தூங்குதங்க
நீங்கவந்து எடுத்துக்கிட்டு
போங்களண்ணு சொல்லுறாங்க
அண்ணன் பெஞ்சாதி சொல்லுறாங்க

நீங்க சொல்லும்போவிது
அண்ணன் பெரியண்ணன் பெஞ்சாதி
காடுமேடா திரிஞ்சிவந்தன்
அண்ணன் பெஞ்சாதி
நீங்கபோயி செத்த எடுத்துகிட்டு
எடுத்துக்குடுண்ணு சொல்லும்போவிது
யாரப்பா சின்னண்ணஞ்சாமி
ஒண்ணன்பெதத சோளகனும்
மடிமேல ஒறங்குதங்க
பாலும் அடுப்புமேல
பொங்கிப் போவுதங்க
நீ போயி எடுத்துக்கிட்டு போங்கண்ணு
சொல்லுறாங்க சொல்லுறாங்க
பெரியண்ணன் பெஞ்சாதி சொல்லுறாங்க

அப்ப இருந்தாலும் இருக்கட்டும்
எடுத்துக்கிட்டுப் போங்கண்ணு
சொல்லும் போவிது
சடீர்ணு உள்ளபூந்து எடுக்கும்போவிது
பெரியண்ணன் பெஞ்சாதி
கட்டிப் புடிச்சாள
கடவாய முததமிட்டா முத்தமிட்டா
அங்க தாவிபுடிச்சாள
தாவாய முத்தமிட்டா முத்தமிட்டா
அண்ணன் பெஞ்சாதி

கிள்ளுபடாத மேனியெல்லாம்
கிள்ளுபட்டுப் போயிருச்சே
கிள்ளுபடாத மேனியெல்லாம்

கிள்ளுபட்டுப் போயிருச்சே
அண்ணன் பெஞ்சாதி
எங்க அண்ணாங்கண்டா
கொஞ்சமா என்ன பேசுவாங்க
கேக்கும் போவிது

நீங்க ஆரப்பா சின்னண்ணஞ்சாமி
சித்தண்ணன் குட்டியண்ணன்
மட்டுக்கடங்காத கொட்டுக்கடங்காது
கோத்திரத்து சின்னண்ணஞ்சாமி
ஒனக்குநான் சொல்லித் தரணப்பா
சூரமுள்ளு காட்டில அங்க
ஓட்டமா ஓடிவந்தன் அண்ணாவே
நீ அங்க சூரமுள்ளு ஏறிபோச்சி
அங்க சுருண்டு படுத்திருந்தன் அண்ணா

காரமுள்ளு காட்டுலே
கடுத்தா நடந்துவந்தேன் அண்ணா
நீங்க காரமுள்ளு ஏறிவந்து
நான் கடுகடுண்ணு நோவுதுண்ணு
படுத்திருந்தன் அண்ணா

நான் குட்டிசுவரு ஏறி
குதிச்சோடி அம்பெடுத்தன் அண்ணா
நம்ப குட்டித்தா பூனவந்து
குறுக்க கிளிச்சிருச்சி

அண்ணா நான் அங்க
ஆல செவுரேறி நான்
ஆங்கரிச்சி அம்பெடுத்தன்
அண்ணா நம்ப ஆதமத்த பூனவந்து
அள்ளய கிளிச்சிடுச்சி அண்ணா
நீ அப்பிடிண்ணு போயி
சொல்லப்பா சின்னண்ணஞ்சாமி
ஒன்ன ஒண்ணும் பேசமாட்டாங்கண்ணு

சொல்லி அனுப்பிச்சி கொடுத்தாளே
ஓடிப்பாக்கும் போவிது
அங்க சின்னண்ணஞ் சாமி
ஒனக்கு என்னடா
கிள்ளுபடாத மேனில்லாம்
கிள்ளுபட்டுப் போயிருச்சி
காயம்படாத மேனில்லாம்
காயம்பட்டுப் போயிருச்சிண்ணு
கேக்குறாங்க கேக்குறாங்க

கேக்கும்போவிது
இப்படி இப்படிண்ணு சொல்லும் போவிது
இருந்தாலும் இருக்கட்டுண்டா
சின்னண்ணஞ்சாமி
எனக்குச் சாப்பாட்ட குடுமடாண்ணு
கேக்கும் போவிது கேக்கும்போவிது

அண்ணன் இருந்தாலும் இருக்கட்டும்ணு
எடுத்துக் குடுத்தான
எடதுகையி சாப்பாட்ட
எடுத்துக்குடுக்கும் போவிது
எடுதத சாப்பாட எடுத்து
கட்டிச்சாதம் அவித்துப் பாக்கும்போவிது
ஏளுவருச புற்றானி(?) கட்டுச்சாதம் நம்பளுக்கு
கட்டுச்சாதம் கட்டிக்குடுத்து இருக்குறாளே
சின்னண்ணஞ் சாமிக்கு
சீரகச்சம்பா நெல்லெடுத்து
சீரகச்சம்பா நெல்லெடுத்து
கட்டிச்சாதம் கட்டிக் குடுத்திருக்கும் போவிது
என்னாண்ணு பாக்கும்போவிது
எனக்கு வாணாடா சின்னண்ணஞ்சாமி
இந்தாடா சின்னண்ணஞ்சாமிண்ணு
சொல்லம் போவிது
இருந்தாலும் இருக்கட்டுமண்ணா

ஒன்னோட கட்டுச்சாதம்
என்னுகிட்ட இருக்குது அண்ணா
ஒன்னோட கட்டுச்சாதம்
என்னுகிட்ட இருக்குது அண்ணா
என்னோட கட்டுச்சாதம்
ஒங்கிட்ட இருக்குது
மாத்திக்கலாம்னு கேக்கும்போவிது

இருந்தாலும் இருக்கட்டுண்டா
சின்னண்ணஞ் சாமி
அப்படிண்ணு சொல்லிப்பிட்டு
நீங்க வச்சிட்டுப் பொறப்படுமடா
எளம்பருத்திக் காட்டில்
ஏளுதாட்டு மானும் போயிடும்
ஏளுதாட்டு குயிலும் போயிருமடா
சின்னண்ணஞ் சாமி

நீங்க பொறப்பட்டுப் போயிருமடா
சின்னண்ணஞ்சாமி
வேட்டைக்குப் போக நேரமாச்சி
எடுமடா போலாண்ணு
பொறப்பட்டுப் போறாங்க போறாங்க

நீங்க போயி பாக்கும்போது
யாரடா சின்னண்ணஞ்சாமி
எளம்பருத்திக் காட்டுல
எளதாட்டு மானும்
எளதாட்டு குயிலும்
ஓட்டிக்கிட்டு வாருமடா
சின்னண்ணஞ் சாமி

ஏளுபுளியமரத்தடிய
ஏளு மா மரத்தடிய
ஏளு பிலா மரத்தடிய
சின்னண்ணஞ்சாமி

நீ ஒட்டியாந்து நிறுத்திபுட்டு நிறுத்திபுட்டு
அங்க சின்னண்ணஞ்சாமி
நீ ஓடி தூரமாவே நிண்ணுக்கடா
ஒரு மூங்க குத்தடிய
மறைப்பிடமா நிண்ணுக்கடா
அங்க சின்னண்ணஞ்சாமி

அட ஏண்ணா மறைப்பிடமா
குந்தச் சொல்லுற அண்ணாவே
நிக்கச் சொல்லுற அண்ணாவே
என்னண்ணா காரணமுண்ணு
கேக்கும் போவிது

அட அம்பு மேல பட்டுருமடா
ஏளுதாட்டு மானுமும்
ஏளுதாட்டு பெலா குயிலுமும்
ஏளுதாட்டு பெலா மரத்தயும்
ஏளுதாட்டு புளிய மரத்தயும்
ஏளுதாட்டு பெலா மரத்தயும்
பொத்துட்டு வந்து
ஒன்ன பட்டுருமடா
சின்னண்ணஞ் சாமி

நீ போயி கொஞ்சம்
தூரமா எசையா
மூங்கக் கொத்தடிய
மறப்பிடமா நிண்ணுகிட்டு
இருடாண்ணு சொல்லிப்புட்டாங்க
பெரியண்ணஞ் சாமியமமா

பேச்சி தட்டளிக்காம
போயி நிண்ணாரு
அங்க சின்னண்ணஞ் சாமி
பேச்ச தட்டியளிக்காம
பெரியண்ணஞ் சாமி
பேச்ச தட்டளிக்காத
போயி நிண்ணுகிட்டிருக்கும் போவிது

நீங்க பெரியண்ணஞ்சாமி
ஏளதாட்டு மானுக்கும்
ஏளதாட்டு குயிலுக்கும்
நீங்க ஏளதாட்டு மானுக்கும் குயிலுக்கும்
அம்பெடுத்து போட்டாரு போட்டாரு போட்டாரு

நீங்க ஏளதாட்டு மானையும் பொத்துக்கிட்டு
ஏளதாட்டு குயிலயும் பொத்துக்கிட்டு
ஏளதாட்டு மாமரத்தையும் பொத்துக்கிட்டு
ஏளதாட்டு பெலாமரத்தையும் பொத்துக்கிட்டு
ஏளதாட்டு பொளிய மரத்தையும் பொத்துக்கிட்டு போயி
சின்னண்ணஞ் சாமிய
மூங்கக் குத்தடிய நிண்ணுக்கிட்டிருக்கிற
சின்னண்ணஞ் சாமிய
பொத்துகிட்டு நிண்ணுபோச்சி
தள்ளிருச்சி

அங்க ஓடி எட்டிப் பாக்கும்போவிது
அங்க ஓடி எட்டிப் பாக்கும்போவிது
தொலைஞ்சானா தொலைஞ்சானா
இண்ணைக்குப் புடித்து
போனானாண்ணு நெனச்சி போயி
நெஞ்சுமேல காலவச்சி
அம்ப உருவிகிட்டு
பொறப்பட்டாரே பொறப்பட்டாரே

நீ பொறப்பட்டுப் போவும்போது
ஒன்னத் தூக்கிக்கிட்டுப் போனாலும்
ஏளுரு பங்காளிகளுக்கு
எளவாவும் எளவாவும்
நான் மானுவேட்டக் குயிலு வேட்டத்
தூக்கிக்கிட்டுப் போனாலும்
ஏளுரு பங்காளிகளுக்கு கறியாவுண்ணு
ஒரு தொடய வெட்டி
மானு தொடய வெட்டி

தோளுமேல வச்சிக்கிட்டு
பொறப்பட்டு போறாரு போறாரு

நீங்க போகும் வளியில
போகும் வளியில
பெரியண்ணன் பெண் சாதி
யோசன பண்ணிக்கிட்டு
சின்னண்ணஞ் சாமிதான்
வருவாரு வருவாருண்ணு
ஏளு கொப்பற தண்ணிய
காயவச்சி வச்சிக்கிட்டு
இங்க தடந்தடமா பாக்குறாங்க
தடந்தடமா பாக்குறாங்க பாக்குறாங்க

இங்க தடந்தடமா பாக்கும் போவிது
பெரியண்ணஞ் சாமியம்மா
பெரியண்ணஞ் சாமியம்மா
மானுவேட்ட தூக்கி
குயிலுவேட்ட தூக்கி
தோளுமேல வச்சிக்கிட்டு
அம்ப தோளுமேல வச்சி
பொறப்பட்டு போவும்போவிது
நம்ம சின்னண்ணஞ் சாமிய காணுமே
பெரியண்ணஞ் சாமிதான
வராங்க வராங்க

நம்ப பெரியண்ணஞ்சாமி வராரே அங்க
சின்னண்ணஞ்சாமி எங்க போயிட்டார
அப்படிண்ணு
யோசன பண்ணிக்கிட்டு
இருக்கும் போவிது
கிட்டவந்த பிற்பாடு
எங்க ஒங்க தம்பிகாரன்ணு
கேக்கும் போவிது

ஆருமில்ல பின்னாலே
ஒப்பன்வீட்டு வீட்டுக்கு
மானுவேட்ட குயிலுவேட்ட
கொண்டுகிட்டு போயி(கி)றான் பிள்ள

நீங்க அப்படிண்ணா சரிண்ணு
அவ தண்ணிய காயவச்சி
ஏளு கொப்பற தண்ணியும்
புருஷனுக்கு ஊத்தியம்மா
கொண்டு போயி சாபபாடுகுந்தி
சாப்பாடு எடத்துல போட்டாள
எலைய போட்டு சாப்பிடும்போவிது
எலையில சாப்பாடு வைக்கும்போவிது
கண்ணுல தண்ணி
கடகடண்ணு உட்டாரே
பெரியண்ணன் சாமியம்மா

கண்ணுத் தண்ணி
கடகடண்ணு உடும்போவிது
என்னாங்க கண்ணுத் தண்ணி
கடகடண்ணு உடுறீங்க
என்னாங்க அளுது பொலம்புறீங்கண்ணு
கேக்கும் போவிது
புள்ள ஆருமில்ல புள்ளாவே
மேலப்பொறத்து தூசிவந்து

கண்ணுல விளுந்துபோச்சி
புள்ளாவ கண்ணு
உருத்துது புள்ளா
கண்ணுத் தண்ணி
கடகடண்ணு வந்திருச்சிண்ணு
சொல்லுறாரு சொல்லுறாரு

நீங்க இருந்தாலும் இருக்கட்டும்
நீங்க சாப்பாட்ட சாப்பிடுண்ணு

சொல்லும்போவிது
சாப்பாடு இருந்தாலும் இருக்கட்டும் பிள்ளாவ
அப்படிண்ணு விட்டுட்டு
எளுத்திருச்சி பொறப்பட்டாரு வெளியில
கட்டுல போட்டு நல்லாவும்
தூக்கந் தூங்கும்போவிது
யோசன பண்ணிப்பாத்தா
பெரியண்ணன் பெஞ்சாதி
என்னமோ மாருக்கும் (?)
செஞ்சிட்டாங்க செஞ்சிட்டாங்க
நாம்ப கொளந்தய பாலகன்
ஏணையில் போட்டு
தூங்கநல்ல வச்சிக்கிட்டு
நாம்ப பொறப்பட்டுப் போயி பாக்கலாண்ணு
யோசண பண்ணிக்கிட்டு
இருக்கும் போவிது
புடிசொம்பு தண்ணி மொண்டுகிட்டு
புடிபெரம்ப எடுத்துக்கிட்டு
பொறப்பட்டு போறாளே போறாளே
நீங்க போக வளியிலே போகவளியிலே
என்னாண்ணு கேட்டுக்கிட்டு
போறாவடி போறாவடி
ஆருங்கல்ல (?) அண்ணன்மாரே
ஆட்டுக்கார அண்ணன்மாரே
எங்க சின்னண்ணன் பட்டபாடு
ஒங்களுக்குத் தெரியுமா
சின்னண்ணன் பட்டபாடு
ஒங்களுக்குத் தெரியுமா
ஆட்டுக்கார அண்ணன்மாரே
அம்மா நீங்க பெரியண்ணன் பெஞ்சாதி
பெரியண்ணன் பெஞ்சாதி
அங்கசின்னண்ணன் பட்டப்பாடு
எங்களுக்குத் தெரியாது தெரியாது
பெரியண்ணன் பெஞ்சாதி

இன்னங் கொஞ்சந்தூரம் போயிநல்லோ
அந்தாண்ட நிண்ணுக்கிட்டு
யோசன பண்ணிப் பார்க்கும்போவிது
நீங்க யாரப்பா
மாட்டுக்கார அண்ணன்மாரே
மாட்டுக்கார அண்ணன்மாரே

இங்க பெரிய/சின்னண்ணன்சாமி பட்டபாடு
ஒங்களுக்குத் தெரியுமா தெரியுமா
மாட்டுக்கார அண்ணமாரே
ஒங்களுக்குத் தெரியுமா

நீங்க மாட்டுக்கார அண்ணன்மாரே
எங்க சின்னண்ணன் பட்டபாட
சொல்லுங்களேன்
வேட்டைக்குப் போனாரு
எங்க சின்னண்ணஞ் சாமிய
காணோமே காணோமே
எங்க பெரியண்ணன் சாமி வந்து
ஊடுவந்து சேந்துட்டாரு
செத்த சொல்லுங்களேன்.

அம்மா நீங்க பெரியண்ணன் பெஞ்சாதி
எங்கத்தான் போனாரு
எங்க சின்னண்ணன் பட்டபாடு
எங்களுக்குத் தெரியாது அம்மா தெரியாது

நீங்க அளுது பொலம்பிகிட்டு
போகும் போவிது
போக வளியிலே
போக வளியிலே
கெருடன் வந்து
பெருமாக் களுவு வந்து
நீங்க நிண்ணுகிட்டு என்னாம்மா அளுவுற
பெரியண்ணன் பெஞ்சாதி
என்னாம்மா அளுது பொலம்புற

அம்மா நீங்க பெரியண்ணன் பெஞ்சாதி
என்னாம்மா அழுது பொலம்புற
சொல்லும்மா ஒனக்குக்
கவலய தீக்குறன் தீக்குறன்

அம்மா இங்க சின்னண்ணன் சாமிஅம்மா
பட்டபாடு தெரியவில்லை
எங்க இருக்குறாரோ தெரியிலம்மா தெரியிலசாமி
பெருமாக் களுவாவ
எங்களுக்குத் தெரியவில்ல தெரியவில்ல

அம்மா இருந்தாலும் இருக்கட்டும்
ஒனக்குக் கட்டிக்கிற பொடவையில
ஒனக்கு முக்கா மொளம்போட்டு
எங்களுத்துல கட்டிக்குடுமம்மா கட்டிடும்மா
நான் பறந்துகிட்டு போறனம்மா போறனம்மா
என் நெவல புடிச்சிக்கிட்டு வாம்மா
என் நெவல புடிச்சிக்கிட்டே வந்தும்மா
நீங்க மூங்க கொத்த
மூணு சுத்து சுத்திப்புட்டு
கிராண்ணு கத்திப்புட்டு
நீங்க மூங்க கொத்துமேல குந்தும்போவுது
நீங்க பாருமம்மா
சின்னண்ணன் பட்ட பாட்ட பாருமம்மா

அம்மா அங்க சின்னண்ணன் பட்டபாட்ட பாருமம்மா
அப்பவந்து நீ பாத்துக்கம்மா
நேரடியா பாத்துக்கம்மா
நீங்க சொல்லிபுட்டு
முக்கா மொளம்போட்டு
துயில கிளிச்சி களுத்துல கட்டிவிட்டு
நீ புடிச்சொம்ப தண்ணி எடுத்துகிட்டு
புடிபெரம்ப எடுத்துக்கிட்டு
பொரணிய போறாளே

அந்த நெவல புடிச்சிக்கிட்டுப்
போகும்போவிது போகும்போவிது

நீங்க போடுபோடுண்ணு போறாங்க
பொடுக்கு பொடுக்குண்ணு போயிமமா
நொம்பதூரம் போயி பாக்கும்போவிது
நீங்க மூங்க குத்தடியே
......(?) மாந்து கெடக்குறானே
சின்னண்ணஞ் சாமியம்மா

கெடக்கும் போவிது
புடிசொம் பெடுத்து
தண்ணிய தெளிச்சிவிட்டு
புடிபெரம் பெடுத்து
தட்டிஎளுப்பும் போவிது
எளுப்பும் போவிது

நீங்க பெரியண்ணன் பெஞ்சாதி
என்னத்துக்கு வந்தம்மா
என்னத்துக்கு வந்த
பெரியண்ணன் பெஞ்சாதி வந்தீங்க
ஓம் புள்ளயாச்சி புருஷனாச்சி
இருந்து பொளைக்கிறது
இங்கவந்து தொளாவிகிட்டு வந்துகீற
போயி ஓம்புருஷனோட
புள்ளயோட பொளயிண்ணு
சொன்னாரே சின்னண்ணஞ்சாமியம்மா

அப்ப நீங்க தப்பிபொளச்சாலும்
ஓடி பொளச்சிக்கலாம்
தகப்பன் பேர சொல்லலாமே
எளுங்களேன் போலாண்ணு
எளுபபுறாளே எளுப்புறாளே

நீ எந்திரிச்சி குந்திக்கிட்டு
சின்னண்ணன் சாமியம்மா

ஓடி பொளச்சாலும்
தாயிபேரு சொல்லலாண்ணு கேக்கறம்மா
ஓடியும் பொளைக்கில
தகப்பன் பேருஞ் சொல்லவேண்டாம்
நீபோயி தாயிதகப்பனோட
நீ பிள்ளையோட புருஷனோட போயி
சேந்துக்கம்மா அப்படிண்ணு
சொல்லுறாரே சொல்லுறாரே
அங்க சின்னண்ணஞ் சாமியம்மா

அங்க இருந்தாலும் இருக்கட்டும்
சின்னண்ணஞ்சாமி
எளுங்களன் போலாமே(ண்ணு)
கேக்கும் போவிது
செத்தவன் செத்துப்போயிறன்
மாண்டவன் மாண்டு போயிறன்
மாண்டவன் பொளைச்சாக்கா
பூலோகம் தாங்காது
செத்தவன் பொளைச்சாக்கா
நாடு தாங்காது
நான் செத்தவன் செத்துப்போயிறன்
மாண்டவன் மாண்டு போயிறன்
நீபோயி ஒன் புருஷன் புள்ளயோட
பொளைச்சிக்கண்ணு சொல்லிகிட்டு
உயிர உட்டுறாரு
சின்னண்ணன் சாமியம்மா உட்டுறாரு

நீங்க அளுது பொலம்பி கிட்டு
இப்பிடியே ... ... (?)
குந்திகிட்டு கெடக்குறியே
கெடக்குறாளே அளுவுறாளே
பெரியண்ணன் பெஞ்சாதி

நீங்க ஏளுங்கல பொதிங்கல மாட்டுக்காரே
நீங்க ஏளுங்கல பொதிங்கல மாட்டுக்காரே

நீங்க என்னாடா பண்ணுவார
மின்னபோற பொதிங்கல மாட்டுக்காரா
ஒரு பொங்கொரலு சத்தம்பா வருதப்பா
நீங்க வாருங்கடா வாருங்கடா

அட இந்த வனத்துல
காத்தா கருப்பாக
பேயா பெசாசாவ கெடக்குமடா
நீங்க பொதிமாட்ட ஓட்டிக்கிட்டு
வாங்கமடா வாங்கமடா

அங்க ஆரடா
ரெண்டாவது பொதிங்கல மாட்டுக்காரா
இந்த வனத்துல
ஒரு பொங்கொரலு சத்தம் மாதிரி
ஒரு மாதிரியா வருதடா
சின்னண்ணஞ்சாமி
நீங்க யாரடா
பொதிங்கல மாட்டுக்காரா
நிறுத்துமடா போயி
பாக்கலாமடா பாக்கலாமடா

அட காத்தா கருப்பாவ
பேயா பெசாசாவ
வனத்துல கத்துதடா
ஓட்டிக்கிட்டு போங்கமடா
ஓட்டிக்கிட்டு போங்கமடா பொதிமாட்ட
வாங்கடாண்ணு சொல்லுறாங்க

அப்ப இருந்தாலும் இருக்கட்டுமடா
ரெண்டாவது பொதிங்கல மாட்டுக்காரா
ஒரு பொங்கொரலு சத்தம் மாதிரி
ஒரு மாதிரியா வருத
வனத்துல அளுது பொலம்புத
அடஒங்களுக்கு பாவ நேருமடா

அட வாடா போயி
பாத்துக்கிட்டு வரலாமடா
இந்த வனத்துல
அளுது பொலம்பறது
அது காத்தா கருப்பாவா
பேயா பெசாசா

நீங்க எடுமடா
ஓட்டிக்கிட்டு வாங்கமடா
பொதிங்கல மாட்டுங்கள

நீங்க ஓட்டிக்கிட்டு வாங்கமடா
ஓட்டிக்கிட்டு வாங்கடாண்ணு சொல்லறியப்பா
இது காத்தா கருப்பா
பேயா பெசாசாண்ணு சொல்லுறியே
நீங்க ஓட்டிக்கிட்டுப் போங்கடா
நான் போயி
ஒருத்தனா பாத்துகிட்டு வரண்ணு
மாட்டளுத்து கட்டுறானே கட்டுறானே மரத்திலே

கட்டிவிட்டு நீங்க பொறப்பட்டு போகும்போது
நீங்க பத்துங்கல பொதிங்கல மாட்டுக்காரா
கட்டுறாங்க கட்டுறாங்க
இளுத்து வைத்து கட்டுறாங்க

நீங்க கட்டிபிட்டு பத்துபேரும்
போயி வனத்திலே
அது காத்தா கருப்பா
பேயா பெசாசா
என்னாண்ணு போயி
பாக்கும் போவிது
நீங்க பெரியண்ணன் பெஞ்சாதியா
பேயாச்சி (?) இருக்குறபடி

அங்க யாரப்பா
பத்துங்கல பொதிங்கல மாட்டுக்காரா

ஓங்க பத்துப் பேத்துக்கும் நான்
பெஞ்சாதியா ஆவுறனப்பா

நீங்க பத்துப் பேத்துக்கும்
நான் பெஞ்சாதியா ஆவுறனங்க
பொதிங்கல மாட்டுக்காரா
நீங்க சின்னண்ணஞ்சாமிய எடுத்து
நலலடக்கம் செஞ்சுடுங்க செஞ்சிடுங்க

நீங்க குங்குமாக் கட்டயும்
சந்தனக் கட்டயும்
கொண்டாந்து நீங்க
நல்லடக்கம் செஞ்சிடுங்க
பத்து பொதிங்கல மாட்டுக்காரா
ஓங்களுக்கு பெஞ்சாதியா
ஆயிடறண்ணு சொல்லுறாளே
பெரியண்ணன் பெஞ்சாதி

நீங்க சொல்லும் போவிது
நெசமாலுமா பத்துப் பேத்துக்கும்
பெஞ்சாதியா ஆவுறனம்மா
பெரியண்ணன் பெஞ்சாதி

நீ நெசமாலுமா பத்துப்பேத்துக்கும்
பெஞ்சாதியா ஆவுறனுங்க ஆவுறனுங்க

நீங்க இருந்தாலும் இருக்கட்டும்
பெரியண்ணன் பெஞ்சாதி
நீ உண்மையாலே சொல்லுறியா
பொய்யா சொல்லுறியா
அங்க பெரியண்ணன் பெஞ்சாதி

நீங்க பத்துங்கல பொதிங்கல மாட்டுக்கார
உம்மையாலே நெசம்மாலுமே உம்மையாலே
ஓங்களுக்கு பெஞ்சாதியா ஆவுறனுங்கே
நீங்க சந்தனக் கட்டயும்

குங்குமக் கட்டயும்
கொண்டாந்து தீவச்சி
சின்னண்ணஞ் சாமிய
நல்லடக்கம் செஞ்சிடுங்க செஞ்சிடுங்க

நீங்க செஞ்சிவிட்டா செஞ்சிவிட்டா
ஒங்களுக்கு பததுப் பேத்துக்கும்
நான பெஞ்சாதியா ஆயிறன்
பொறப்பட்டு போலாமுண்ணு சொல்லுறாங்க
பெரியண்ணன் பெண்சாதி

அட எடுமடா பொதிங்கல மாட்டுக்காரா
பொதிங்கல மாட்டுல
சந்தனக் கட்டயும்
குங்குமாக் கட்டயும் இருக்குது
தூக்கிக்கிட்டு வந்து
தீவச்சி நீங்க வெவிச்சிருல்லா
சின்னண்ணஞ்சாமிய வெவிச்சிரல்லா

நீங்க வெவிச்சிரல்லா
பெரியண்ணன் பெஞ்சாதிய
கூட்டிக்கிட்டு போலாமடா
பத்துங்கல பொதிங்கல மாட்டுக்காரா

நீங்க பொதிங்கல மாட்டுலதான்
குங்குமாக் கட்டயும்
சந்தனக் கட்டயும்
ஏத்திக்கிட்டு கொண்டாந்து
தீவச்சி வெவிக்கிறாங்க வெவிக்கிறாங்க
திடுதிடுண்ணு மொளங்கும் போவிது
தீவச்சி திடுதிடுண்ணு மொளங்கும்போவிது

எளுங்க பெரியண்ணன் பெஞ்சாதி
போலாம்ணு கூப்பிடும்போவிது
என்னா சொல்லுறாண்ணு கேட்டாக்கா
பெரியண்ணன் பெஞ்சாதி

எங்க சாதி வளக்கத்துல
எடம்புரி வடம்புரி வந்துதான்
வரவனுங்க ஒங்களோட
பொறத்தால வருவனங்க

எடம்புரி வடம்புரி
வந்துதான் வந்துதான்
எட்டி தாவுனாளே அக்னில
எட்டி குதிச்சாளே தீயில
எட்டிக்குதிக்கும் போவிது
எட்டிக் குதிக்கும் போது
தீயிலியே வெந்து போயிட்டா வெந்துபோயிட்டா

அங்க ஆர்டா
பத்துங்கல பொதிங்கல மாட்டுக்காரே
இப்படியாபட்ட பொண்ணுநல்ல
அக்னிலே எட்டி குதிச்சி
சாவும் போவிது
நாம்ப உயிர வச்சிருந்தா என்னா
வைக்காத போனா என்னாண்ணு
எட்டிக் குதிங்கடா
எட்டிக் குதிச்சாங்க தீயிலதான்
எடம்புரி வடம்புரி வந்துதான்
எட்டிக் குதிச்சாங்க குதிச்சாங்க

இங்க பத்துங்கல மாடுமா
பொதிங்கல மாடு
யோசனபண்ணிப் பாத்துச்சி
நமக்கு புண்ணாக்கு தவுடுபோட்டு
தண்ணி வைககிறவங்க
யாருமடா யாருமடா

நம்பள தீனிபோட்டு கட்டுறவங்க
யாருமடா யாருமடா
நம்ப பொன்னாடிங்க (?)

போயிமா அக்னிலே
விளுந்துமா செத்துமா போயிட்டாங்க
நம்பளுமே போயிமா
எறந்துடலாமே எறந்துடலாமே

நீங்க பத்துங்கல பொதிமாடும்
பொறப்பட்டு வந்திச்சி வந்திச்சி
எடம்புரி வடம்புரி வந்து
எட்டிக் குதிச்சிச்சே
அக்னிலே குதிக்கும்போவிது
நெருப்பிலே நல்லா தாராளமா
வெந்திருச்சி வெந்திருச்சி

பாடியவர்: *கந்தசாமி.*

குறிப்பு : *பாடகர் கூறிய செய்திகளின் சாரம் வருமாறு: இவ்வூரில் இககதைப்பாடலைப் பலர் பாடுவர். 'சின்னண்ணன் பெரியண்ணன் சாமி' என்று இதற்குப் பெயர். ஆட்டுப்பட்டிக்குப் போகும்போது - கரட்டுக்கு (மலைக்குப்) போகும்போது - பாடுவது உண்டு. பலர் காது கொடுத்துக் கேட்பர். அப்பாவிடம் இருபது ஆண்டுகளுக்கு முன் கற்றுக் கொண்டது. இன்றும கேளஆடு, பன்றி, முயல் வேட்டைக்குப் போகும் பழக்கம் உண்டு. பொண்டாட்டி தப்பு பண்ணினாலும் பொண்டாட்டி வேண்டு மென்றால் தம்பியைத்தான் அண்ணன் கொல்வான்.' 12, 13-ஆவது பாடல் பதிவு செய்யப்பட்ட அதேஅறையில் அதே சூழலில் இப்பாடலும் பதிவு செய்யப்பட்டது.*

ஒவ்வொரு பத்தி (இடைவெளி விடப்பட்டு காட்டப்பட்டுள்ளது) முடிவிலும் ஒப்பாரி போன்று ஒருவித அழுகைக் குரலில் பாடினார். நீ, நீங்க போன்ற சொற்கள் தேவையற்ற இடங்களில் பயன்படுத்தப் பட்டன. பல இடங்கள் தெளிவற்றுக் காணப்படுவதற்கு நினைவுக் குறைவு காரணமாகலாம்.

(ஒலிப்பதிவு நாடா எண் : 8)

15. சேலம் (சின்னதண்டா)

அடியே ஏஏ
சின்னண்ணன் பெரியண்ணன்
சித்தானக் குட்டியண்ணன்
எட்டான பால்குடிக்கும்
எளையதம்பி சின்னண்ணன் சாமிநல்லோ

அடியேஏஏ
ஏறுமல எங்களுள்ள
எளையதம்பி அடஅங்க
நாம்பளும் ஏழுபேரும் - அட
வேட்டைக்குப் போகவேணும்
அப்படின்று சொல்லுறானே - அந்த
பெரியண்ணன் சாமிநல்லோ

அடியேஏஏ - அந்த
நாகுமல தோகுமல
நடுவிருக்கும் வீருமல - அந்த
வீருமல கொப்பத்துக்கு - அந்த
வெள்ளியட்டு வெடிஎடுத்துக்கிட்டு - அந்த
கருநாய கூட்டிக் கொண்டு

அந்த நாகுமல தோகுமல
நடுவிருக்கும் வீருமல - அந்த
வீருமல கொப்பத்துக்கு - அட
வேட்டைக்குப் போறாங்க
சின்னண்ணன் பெரியண்ணன்
சித்தான குட்டியண்ணன்
எட்டான பால்குடிக்கும்
எளையதம்பி சின்னண்ணன் ஏழுபேரும்

அடிஅப்போதுதானும் - அந்த
சின்னண்ணன் சாமிநல்லோ அந்த
பெரியண்ணன் சாமிநல்லோ
ஏதுமடா சின்னண்ணன்

நம்பளோட ஊட்டிலே - அட
குண்டு மறந்துதான்
அட்டாளில விட்டுவிட்டு - அட
வந்துவிட்டன் சின்னண்ணன்
ங்கப்படிண்ணு சொல்லுறானே - அந்த
பெரியண்ணன சாமிநல்லோ

அடியேஏ - அங்க
யாரடா சின்னண்ணன்
ஒரு சித்தமும் நேரத்திலே
ஓட்டமும் பெருநடையா - அட
வீட்டுக்குப் போயிநல்லோ - அட
குண்டு மருந்து எடுத்துக் கொண்டு
ஓட்டம் பெருநடையா வரவேணும்

அட அப்படின்று சொன்னதுமே அந்த
சின்னண்ணன் சாமிநல்லோ
நம்பளோட பெரியண்ணன்
சொன்னசொல்லு தவறாம
செய்யவேணும்
அப்படின்று சொல்லிநல்லோ
ஓட்டம் பெருநடையா
ஓடியும் வரானே - அந்த
சின்னண்ணன் தம்பிமன்னன்

அந்த சின்னண்ணன் பொண்சாதி - அந்த
பெரியண்ணன் பொண்சாதி - அந்த
ஏளுதலவாச மூடிக்கிட்டுத்தானும்
வீட்டுக்குள்ள படுத்துக் கொண்டிருக்கிறாளே

அடஅங்க சின்னண்ணன்
ஓட்டமா ஓடிநல்லோ
அண்ணிமாரே அண்ணிமாரே - எங்கள்
அண்ணனோட தேவியாரே

அடிஅங்க தாப்பாள நீக்குமடி - அடி
குண்டு மறந்துதான்

வீட்டுக்குள்ள விட்டுட்டு
காட்டுக்குப் போயிவிட்டோம்
சீக்கிரமா எடுத்துக்கிட்டு போகவேணும்
ங்கப்படிண்ணு சொன்னானே அந்த
பெரியண்ணன் மன்னவனும்

அடியேஏஏ
அப்போது தானமும் - அந்த
பெரியண்ணன் பொண்சாதி
தாப்பாள நீக்கிநல்லோ - அட
என்னாண்ணு கேக்கும்போது - அட
அட்டாளி மேலதான்
குண்டுமருந்து இருக்குதே

அடிஎடுத்துநல்ல குடுங்கடி - எங்கள்
அண்ணனோட தேவியாரே
அப்படின்று சொல்லிநல்லோ
வெளியே நிண்ணுகொண்டு கேக்குறானே - அந்த
சின்னண்ணன் தம்பி மன்னன்

அடஅங்க யாருடா சின்னண்ணன் - அட
பாலு அடுப்புமேலே - ஒண்ணன்பெற்ற
பாலகனும் மடிமேலே
சோறு அடுப்புமேலே - ஒண்ணன் பெற்ற
சோளகனும் மடிமேலே

அட அங்க எடுத்துக்கொடுக்க முடியாது
நீயேதான் வந்து
எடுத்துக்கொண்டு போகவேணும்
அப்படின்று சொல்லுறாளே - அந்த
பெரியண்ணன் பொண்சாதி

அடஅங்க அப்படிண்ணு சொல்லிநல்லோ - அந்த
சின்னண்ணன் சாமிநல்லோ
அண்ணிமாரு சொன்னசொல்லு

தவறாம செய்ய வேணும்
அப்படின்று சொல்லிநல்லோ - அங்க
ஓட்டமா ஓடி வீட்டுக்குள்ள போயிநல்லோ
அட்டாளி ஏறிநல்லோ எடுத்துக்கொண்டு
வெளியேதான் வரும்போது

அட அங்க ஏளு கதவவும் சாத்திவிட்டு - அட
யாருமடா எங்களுள்ள
எளைய கொளுந்தனாரே - ஒங்க
அண்ணன் படுத்துறங்கும்
பஞ்சண மெத்தையிலே
படுத்து நித்திரையும் செய்யவேணும்

நாம்பளும் ரெண்டுபேரும்
கொஞ்சியும் கோதாடி
சிரிச்சி வெளயாடி பாக்கவேணும்
அப்படின்று கேட்டாளே - அத்த
பெரியண்ணன் பொண்சாதி

அடிஅங்க வாண்டாமடி தாயாரே - எங்களோட
பெரியண்ணன் பொஞ்சாதி
பெத்த தாயோட ஒண்ணுமிண்ணு
அந்தமாரி பொண்ணநல்லோ
அப்படின்று சொல்லுறானே - அந்த
சின்னண்ணன் சாமிநல்லோ

அட ஏதோஒன்று சொன்னாலும்
பொறுத்துக்க மாட்டோமுண்ணா
அப்படின்று சொல்லிநல்லோ
கட்டிபுடிச்சி நல்லோ
சின்னண்ணன் சாமிக்குத்தான்
கட்டுமாறி புடிச்சிநல்லோ

அடஅந்தப் பெரியண்ணன் படுக்கும்
பஞ்சாணி மெத்தையிலே

படுத்து உறங்கிநல்லோ
கொஞ்சியும் கோதாடி பாத்துபுட்டு
போயிட்டி வாரேன் பெண்ணே
அப்படின்று சொல்லிநல்லோ
ஓட்டம் பெருநடையா வாரானே - அந்த
சின்னண்ணன் சாமிநல்லோ

அடஅந்த சின்னண்ணன் சாமிநல்லோ - அந்த
பெரியண்ணன் பொண்சாதி
புடிச்சிநல்லோ ஒடம்பெல்லாம் கீறிநல்லோ - அந்த
சின்னண்ணன் சாமிக்குத்தான்
ஒடம்பெல்லாம் நெத்தமா இருக்குதே

அடஅந்தப் பெரியண்ணன் சாமிநல்லோ
யாரடா சின்னண்ணன்
ரேகாதி ரேகமெல்லாம்
நெத்தமா இருக்குதே
விஷயத்த சொல்லுமடா
அப்படின்று கேட்டானே - அந்த
சின்னண்ணன் தம்பிமன்னன்

அடஅப்போது தானும்
யாருமடா எங்களுள்ள பெரியண்ணன் - நம்பளோட
குட்டிபோட்ட சட்டபூன
வீட்டுக்குள்ள போயிநல்லோ - அட
குண்டுமருந்து எடுத்துக்கிட்டு
வெளியாலே வரும்போது - அந்த
குட்டிபோட்ட சட்டபூன
மேலகுதிச்சி நல்லோ
ஒடம்பவும் கீறி
விட்டுடிச்சி பெரியண்ணன்
அப்படின்று சொல்லுறானே - அந்த
சின்னண்ணன் தம்பி மன்னன்

அடஅங்க இருந்தாலும் இருக்கட்டும்
யாருமடா சின்னண்ணன் - அட
வாங்கடா வேட்டைக்குப் போகவேணும்
அப்படின்று சொல்லிநல்லோ
வேட்டைக்குப் போறாங்க

அந்த வேட்டைக்குப் போயிநல்லோ - அட
யாருமடா சின்னண்ணன்
நாங்களும் ஆறுபேரும்
காடுகட்டிக் குந்துறமே - அங்கஅட
நீயுந்தான் போயிநல்லோ -அந்த
கருநாய கட்டிக்கொண்டு - அந்த
காடுகட்டி நல்லோ
ஓட்டிக்கொண்டு வரவேணும்
அப்படின்று சொல்லுறானே - அந்த
பெரியண்ணன் சாமிநல்லோ

அடஅங்க நம்பளோட பெரியண்ணன்
சொன்னசொல்லு தவுறாமே
நாம்பளும் செய்யவேணும்
அப்படின்று சொல்லிநல்லோ - அந்த
சின்னண்ணன் சாமிநல்லோ

அந்த மத்திக்கா மடுவுதாண்டி - அந்த
நாய்வர காடுதாண்டி - அந்த
ஊஞ்ச வனமுந்தாண்டி - அந்த
சின்னண்ணன் சாமியும் - அந்த
கருநாயி தானும்

இருவரும் சேர்ந்துநல்லோ
காடுகட்டி ஓட்டிட்டு வராங்கோ - அங்க
யாருமடா அண்ணமாரே
மானு வருகுதண்ணா
பாத்து சுடுங்கடா
அப்படின்று கூப்பிட்டு
அலங்காரமா சத்தமிட்டு

அந்த சின்னண்ணன் சாமிநல்லோ
ஒரு அலங்காரமா சத்தமிட்டு
கூப்பிட்டுச் சொல்லுறானே

அந்த பெரியண்ணன் சாமிநல்லோ
மானுக்கும் சேத்துநல்லோ – அந்த
சின்னண்ணன் சாமிக்கும் சேத்துநல்லோ
குறுப்பாவும் ஒட்டி பிடிக்குறானே

அட யாருமடா பெரியண்ணன்
என்னையும் சேத்துநல்ல
குறுப்பு புடிக்கிற
அப்படின்று சொல்லச்சொல்ல
வில்லயும் இழுத்துவிட்டான் அந்த
பெரியண்ணன் சாமிநல்லோ

அடஅந்த மானு விளுந்துடுது – அந்த
சின்னண்ணன் செத்துட்டான் – இவுங்க
ரெண்டுபேரும் கெடக்குறாங்க

அடஅந்த அண்ணமாரு ஆறுபேரும் – அட
யாருமடா அண்ணன்மாரே – அட
சின்னண்ணன் சாமியும் மானும்
செத்துக் கெடக்குதே

அடஏஏ – அந்தச்
சின்னண்ணன் சாமிக்கு
தூக்கிட்டுப் போனாலும் – அந்த
ஆறு ஊட்டுக்கு எழவுதான் ஆகுமடா
மானதான் கொண்டுபோனா
ஆறு ஊட்டுக்கு
கறியாதான் ஆகுமடா

அடஅந்த சின்னண்ணன் சாமிய
இருந்துட்டுப் போறானே அந்த
மான எடுத்துக்கொண்டு

வீடுபோயி சேரவேணும்
அப்படின்று சொல்லிநல்லோ
சின்னண்ணன விட்டுட்டு - அந்த
மான எடுத்துக்கொண்டு
வீட்டுக்கு வராங்க

அடஅங்க வீட்டுக்கு வந்துநல்லோ
அண்ணன்மாரு ஆறுபேரும்
பங்கிட்டு எடுத்துக்கிட்டு - அந்த
சின்னண்ணன் சாமிக்கு
கறியவ குடுத்துவிட்டாங்க

அடஅங்க யாருமடா
சின்னண்ணன் பெரியண்ணன்
நம்பளோட சின்னண்ணன்
எங்கயடா என்று
தாயாரும் தகப்பனும் கேக்கும்போது

அட நம்பளோட சின்னண்ணன் - அட
நம்பளோட அக்காவும் வீட்டுக்கு
கறியவும் கொண்டுகொண்டு போயிட்டானே
அப்படின்று சொன்னானே
பெரியண்ணன் சாமிநல்லோ

அட அப்போதுதானும் அந்த
சின்னண்ணன் பொஞ்சாதி
மாருமாரா அடிச்சிக்கிட்டு
மயித்த எல்லாம் பிச்சிக்கிண்டு
ரேகாதி ரேகமெல்லாம் கீறிக்கொண்டு
ஒடம்பெல்லாம் கீறிக்கொண்டு

அடஅங்க ஓட்டம் பெருநடையா
அழுது பொலம்பிக்கொண்டு போறாளே - அந்த
சின்னண்ணன தேடிக்கொண்டு

அடஅங்க அந்த சின்னண்ணன் பொண்சாதி
தேடிக்கொண்டு போவும்போது - அந்த

ஏளு ஏரவும் பூட்டிக்கொண்டு
ஓட்டிக்கொண்டு இருக்குறாங்க
மன்னவரு ஏரு ஓட்டுறவங்க

அடஅங்க ஒருஏரு மன்னவா
எங்களோட புருஷன பாத்திங்களா
அப்படின்று கேட்டாளே

அடஅங்க கேக்கும்போது தானும்
எனக்கும் தெரியாது
ரெண்டாவது ஏருகாரன கேளும்மா
அப்படின்று சொல்லுறானே - அந்த
முன்னால ஏருகாரன்

அடஅந்த ரெண்டாவது ஏருகாரன்
எங்களோட புருஷன பாத்தீயா
அப்படின்று சொல்லி நல்ல
ஏளுஏருகாரன கேக்கும்போது

ஒங்களோட புருஷந்தான் நேத்திக்கு
ஏளுபேரோட சேந்துகொண்டு
இதோ ஓர் தடத்திலே போனாங்க
அப்படின்று சொல்லிநல்லோ
தடமாவும் காட்டுனாங்க - அந்த
ஏளேருகாரரும் அண்ணன்மாரு

அடஅங்க அந்த சின்னண்ணன் பொண்சாதி - அந்த
தடமா புடிச்சிட்டுப் போயிநல்லோ - அந்த
சின்னண்ணன் கெடக்கும்
எடத்துல குந்திக்கொண்டு
அளுதுகொண்டு இருக்கிறாளே

அப்போது தானுமும்
பார்வதி பரமசிவன்
இவுகரெண்டு பேரும்

பறக்கப்பட்ட பட்சிகளுக்குந்தான்
படியளந்துகொண்டு வந்தாங்க

வரும்போது தானும் - இந்த
பார்வீதி காதிலே - ஒரு
பொண்ணு சத்தமாக உளுந்துதுங்க

அடஅங்க பறக்கப்பட்ட பன்னண்டு பட்சிகளுக்கும்
படியளக்கும் மன்னவரே - இந்த
அத்துவான அலங்காட்டில் - ஒரு
பொண்ணுசத்தம் ஆவுதே

இதப் போயியும் பாக்கவேணும்
அப்படின்று சொல்லிநல்ல
பார்வதி பரமசிவன்
இவுங்க ரெண்டுபேரும்
ஓட்டமார் பார்க்கும்போது

இந்தப் பொண்ணுவும் தானும்
அளுது பொலம்பிக்கிட்டு
மாருமாரு அடிச்சிக்கொண்டு
மயித்தஎல்லாம் பிச்சிக்கொண்டு
இருக்குறாளே அந்த
சின்னண்ணன் பொஞ்சாதி

அட யாருமடி பொண்ணநல்லோ
இருந்தாலும் இருக்கட்டும் - அட
கெளக்கே மொகம்போட்டு
திரும்பிநல்ல நில்லும் பெண்ணே
அப்படின்று சொன்னார் - அந்த
பரமசிவம் கடவீளு

அட அப்போது தானும் - அந்த
சின்னண்ணன் பொஞ்சாதி
கெளக்கே மொகம்போட்டு
கண்ணுமூடி நிற்கும்போது

ஒன்ணாவது மந்திரம் போடும்போது
எந்திரிச்சிக் குந்துறானே

ரெண்டாவது மந்திரம் போடும்போது - அந்த
சின்னண்ணன் சாமிநல்ல
எந்திரிச்சி நிக்குறானே

மூணாவது மந்திரம் போடுமபோது - அந்த
சின்னண்ணன் சாமிநல்ல
யாருங்க அப்படினறு சொல்லி
வாயில பேசுறானே

அடஅங்க யாரடா சின்னண்ணன்
யாருமடா அப்படின்று கேக்கும்போது
அத்துவான அலங்காட்டில்
ஒண்டியா கெடக்குறீயே
அப்படின்று கேக்கும்போது

அண்ணமாரு ஆறுபேரும்
வேட்டைக்கு வந்துநல்லோ - என்ன
சுட்டுவும் தள்ளிவிட்டு
மான எடுத்துக்கொண்டு
வீட்டுக்குப் போயிட்டாங்க

அப்படின்று சொல்லிட்டாங்க - அந்த
சின்னண்ணன் தம்பிமன்னன்

அடநீ இருந்தாலும இருக்கட்டும் - உன்
நாக்கதான் நீட்டுமடா
மூணுசொல்லு மந்திரமா
எளுதிபுட்டு போறேனே
அப்படின்று சொல்லிநல்லோ - அந்த
பரமசிவன் கடவீய

அடஅங்க வாய்தொறந்து கேட்டீனா
இன்னது வேணுமிண்ணு கேட்டீனா

வாய்தொறந்து சொன்ன வார்த்த - அங்க
வாயில இருக்கவே
கேட்டதெல்லாம் ஆகுமடா
அப்படின்று சொல்லிநல்லோ
ஒரு எளுத்தா எளுதிவிட்டார்

அடஅங்க ரெண்டாவது எளுதுங்க - உங்களோட
அண்ணமாரு ஆறுபேரும்
உனக்கு வெறுவு செமந்துதான்
போடவேணும் அப்படின்று சொல்லிநல்லோ
ரெண்டு சொல்லு எளுதியவிட்டார்

அடஅங்க மூணாவது சொல்லுதான் - ஒன்
அண்ணமாரு ஆறுபேத்துக்கும்
நீயேதான் சம்பாரிச்சிப் போடவேணும்
அப்படிண்ணு சொல்லிநல்லோ
மூணுசொல்லா சொல்லிநல்லோ எளுதிபுட்டார் - அந்த
பரமசிவன் கடவீயே

அடஅங்க சின்னண்ணன் சாமிநல்லோ
வந்துதான் தானும்
போங்கடி பொண்ணே நல்ல
வீடுபோயி சேரவேணும்
அப்படின்று சொல்லிநல்ல
கூட்டிக்கொண்டு வாரானே
சின்னண்ணன் பொஞ்சாதி
இவுங்கரெண்டு பேருந்தான்

அடியேஏ
யாருமடா எங்களுள்ள
எளய புருஷன்
அப்படின்று சொல்லிநல்லோ
பொஞ்சாதி கேக்குறாளே

அட ஒங்களோட அண்ணமாரு ஒன்ன
சுட்டுபுட்டு போனாங்கல்லோ

அவுங்களோட மூஞ்சதான் நாம்பளும்
பாக்காம இருக்கவேணும்
அப்படின்று சொல்லிநல்லோ
கேக்குறாளே அந்தப் பெஞ்சாதி தானுமும்

அடியேஏஏ
அப்படியே இருந்தாலும்
இருக்கட்டும் பெண்ணேநல்ல
இதோஒரு ஆலங்காட்டில்
நாம்பளும் தானுமும் — நம்பளுக்குஒரு
தோட்டமும் தரவேணும் பெண்ணே

அடஅங்க இல்லாத சொத்துசொகம்
இல்லாத காடுகர
அத்தினியும் வேணும் பெண்ணே
அப்படினறு சொல்லும்போது
அத்தனியும் உண்டு ஆயிடுச்சி
அங்க அந்த அண்ணமாரு ஆறுபேரும்
-- அட ஒவ்வொரு மொழம்

தாடி வளத்துக்கிட்டு
ஊருஊரா வெருவெல்லாம்
தூக்கிக்கொண்டு வித்துக்கொண்டு
பொழைச்சிக்கொண்டு இருக்குறாங்க

அடஅங்க அந்த சின்னண்ணன சாமதான—அந்த
காட்டுக்குள்ள இருக்குறாணு அந்த
அண்ணமாருங்க யாருக்கும் தெரியாது
ஒருராஜாதான் அந்தக் காட்டுக்குள்ள
இருக்குறாரு அப்படின்று

அந்த ராஜரோட வீட்டுக்கு
வெறுவு கொண்டு போகவேணும்
அப்படின்று சொல்லி நல்லோ அந்த
அண்ணமாரு ஆறுபேரும்
ஆறு சொமயவும்

அட அண்ணிமாரு ஆறுபேரும்
ஆறு சொமயவும் வெறுவ
எடுத்துக்கொண்டு வராங்க—அந்த
ராஜரோட வீட்டுக்கு—அந்த
சின்னண்ணனோட வீட்டுக்கு

அட யாருமடா நீங்களும்
அப்படின்று கேட்டானே — இந்த
சின்னண்ணன் தம்பிமன்னன்

அட என்னாத்த சொல்லயிங்க
அப்படின்று சொல்லிநல்லோ
அண்ணமார் ஆறுபேரும்
கண்ணீரு விட்டாங்க

அட எங்களோட அண்ணந்தம்பி
எத்தன பேர்களும் இருக்குதடா
அப்படின்று கேக்குறானே அந்த
சின்னண்ணன் தம்பிமன்னன்

அடநாங்களும் அண்ணன்தம்பி ஏளுபேரு
அப்படின்று சொல்லிநல்லோ—எங்களோட
அண்ணமாரு ஆறுபேரு—எங்களோட
சின்னண்ணன் சாமிக்குத்தான்
காட்டுக்குள்ள போயிநல்லோ
துப்பாக்கியால சுட்டுநல்லோ
எறிஞ்சிபிட்டு வந்துவிட்டோம்

அண்ணியிலே இருந்துதான்
எனக்கு விதிவாசம் நேர்ந்துதுங்க
அபபடின்று சொல்லிநல்லோ - அந்த
ஆறுபேரும் கண்ணீரு விட்டாங்க

அடியேஏஏ
அப்படின்று சொல்லும்போது

யாருமடா யாருமடா நீங்களும் - உங்களுக்குத்
தாயியும் தகப்பனும் இருக்குதடா
அப்படின்று கேட்டானே அந்த
சின்னண்ணன் தம்பிமன்னன்

அட எங்களுக்குத் தாயியும் தகப்பனும் இருக்குறாங்க
தாயியும் தகப்பனுக்கு
காதுங் கேக்காம
கண்ணுந் தெரியாம
வீட்டோட இருக்குறாங்க

அடஅந்த சின்னண்ணன் சாமிக்குக்
கொண்ணதுமே எங்களுக்கு
விதிவாசம் நேர்ந்ததுங்க
அப்படின்று சொல்லிநல்லோ
ஆறுபேரும் கண்ணீருவிட்டாங்க

அட அப்போது தானுமும்
உங்களோட வெறுவுகளும் - அட
ஆம்பளைங்க வெறுவுகளும்
ஆறுகாசா போடுங்கடா
பொம்பளைங்க வெறுவுநல்லோ
மூணுகாசா போடுங்கடா

அப்படின்று சொல்லிநல்லோ
வெறவவும் வாங்கிக்கொண்டு
நாளைக்கு வரும்போது - அட
தாயியும் தகப்பனும்
கூட்டிக்கொண்டு வாங்கடா
அப்படின்று சொல்லிநல்லோ
சொல்லி அனுப்பிவிட்டான்
சின்னண்ணன் சாமிநல்லோ

அப்போது தானுமும்
மக்காநாளு தானுமும்—அந்த
அண்ணிமார ஆறுபேரும்

பன்னண்டு பேர்களும்—அந்த
தாயியும் தகப்பனும்
அங்கரெண்டு பேரும்

அந்தப் பதினாலு பேருமும்
கூட்டிக்கொண்டு தானும்
ஓட்டம் பெருநடையா
வெறுவவும் தூக்கிக்கொண்டு போறாங்க - அந்த
சின்னண்ணன் சாமியோட வீட்டுக்குததான்
அடஅங்க வெறுவயும் போடுமுன்னே - அந்த
சின்னண்ணன் சாமிநல்லோ - ஒரு
நாசுவனார் சொல்லிநல்லோ
அந்த ஏளு பேர்த்துக்கும்
ஷேவிங்கும் கட்டிங்கும் செய்யவேணும் - அந்த
அண்ணிமார் ஆறுபேர்த்துக்கும்
ஆறுசீல லவிக்கயும் எடுத்துநல்லோ
அண்ணமார் ஆறுபேர்த்துக்கும்
வேட்டிதுணியும் சட்ட எடுத்துநல்லோ

அட என்னோட தாயும் தகப்பனும் - எங்களோட
அண்ணமாரா இருந்துட்டா
என்னோட தாயி மொலசீல
பாலா சொரந்து நல்லோ
கட்டியிருக்கு நல்லோ இந்த
ஏளு துணியவும்

அந்த ஏளுதுணியும் நனஞ்சிநல்லோ
என்னோட வாயிக்குள்ள - அந்த
பாலுசொரப்பு உளுகவேணும்
அப்படின்று கேட்டானே - அந்த
சின்னண்ணன் சாமிநல்லோ

அந்த சொன்னசொல்லு தவுறாமே - அந்த
தாயினோட மொலப்பாலு சொரந்து நல்லோ
ஏளுதுணியவும் நனச்சி நல்லோ - அந்த

சின்னண்ணன்சாமி
வாயில விளுந்துதுங்க

அடஅங்க இண்ணையில இருந்தும்
யாரடா அண்ணன்மாரே
நீங்களும் ஆறுபேரும் அண்ணன்மாரு
நானேதான் சின்னவன்
அப்படின்று சொன்னானே - அந்த
சின்னண்ணன் தம்பிமன்னன்

அட இருந்தாலும் இருக்கட்டும்
இன்னமே இப்படியே செய்யாதீங்க
நம்ம பொளச்சி நல்லோ
புத்தோட பொளச்சிக்கிங்க
அப்படின்று சொன்னாங்க அங்க
ஆறுபேரு அண்ணமாருக்குத்தான்

பாடியவர்: சுப்பிரமணி.

சேகரிப்பாளர்: திரு எஸ். இராதாக்கிருட்டிணன், ஆய்வாளர், மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம். லம்பாடிகளின் மொழி பற்றி ஆராய்வதற்காக லம்பாடி மொழிகளைப் பதிவு செய்யும்போது அம்மக்களை உற்சாகப்படுத்த லம்பாடிப் பாடல்களைப் பாடச்செய்து பதிவு செய்ததாகவும் அப்போது லம்பாடிப் பாடல் பாடிக்கொண்டிருந்த சுப்பிரமணி என்பவர் ஒரு தமிழ்ப் பாடல் பாடுகிறேன் என்று கூறி இப்பாடலைப் பாடியதாகவும் திரு எஸ். இராதாக் கிருட்டிணன் கூறினார். கோயில் பொது விழாவில் பிறர் பாடக்கேட்டுக் கற்றுக் கொண்டதாகக் கூறினார். பாடல் ஒரு வித சோக இசையில் பாடப்பட்டது. ஒவ்வொரு பத்தியிலும் ‘அடியேஏஏ’ என்ற

சொல்லை இராகமாக இழுத்த பின்னர் ஏனைய அடிகள் விரைவாகப் பாடப்பட்டன. அவர் பாடிய 'தொடக்கம்' 'முடிவை' வைத்துப் பத்திகள் பிரிக்கப்பட்டன. பாடலில் பாடல் தன்மை குறைந்தும் உரைநடைத்தன்மை மிகுந்தும் காணப்படுகிறது. திரு எஸ். இராதாக்கிருட்டிணனிடம் ஒலிப்பதிவு நாடா நன்றியுடன் திருப்பித்தரப்பட்டது.

16. சேலம் (சின்னதண்டா)

ஓர் ஊரில் அண்ணன் தம்பி இருவர் வசிக்கின்றனர்.

அண்ணனுக்குத் திருமணம் ஆகிவிட்டது; தம்பிக்கு ஆக வில்லை.

அவர்கள் வழக்கம்போல் ஒரு நாள் வேட்டைக்குச் செல் கின்றனர்.

அவர்கள் அம்பை எடுத்துச் செல்ல மறந்துவிட்டனர்.

அம்பை எடுத்துக் கொண்டு விரைவில் திரும்புமாறு அண் ணன் தம்பியை வீட்டிற்கு அனுப்புகின்றான்.

(மாடு கண்டா விலகாம
மனிதன் கண்டா பேசாம
எச்சில் துப்பி அது உணர்ற நேரத்துல
சீக்கிரம் போயிட்டு வந்துடணும்)

வீடு செல்லும் தம்பி வீட்டிலிருக்கும் அம்பை எடுத்துத் தருமாறு அண்ணியிடம் கேட்கிறான்.

அவள் அவனையே சென்று எடுத்துக் கொள்ளுமாறு கூறு கிறாள்.

('கொழுந்தனாரே, பாலும் அடுப்பு மேல, ஒண்ணன்பெத்த பாலகனும் மடிமேல, நீயே போயி எடுத்துக்க')

அவன் அவளைத் தாண்டிச் செல்லும்போது அவள் அவனைக் கட்டிப் பிடித்துக் கொள்கிறாள்.

அவளுடைய நகங்கள் அவனுடலில் காயத்தை ஏற்படுத்து கின்றன.

'அண்ணன் கேட்டால் பூனை காயப்படுத்தியதாகக் கூறு' என்று அவள் அவனுக்குச் சொல்லித் தருகிறாள்.

(குதிச்சோடி அம்பெடுத்தன்
குட்டித்தா பூவைந்து
குறுக்கே பிடிச்சிடுச்சி)

அவன் அம்பெடுத்துக் கொண்டு காடு திரும்புகிறான்.

அங்கே அண்ணன் 'நகக் காயத்திற்கான காரணம் என்ன' என்று அவனிடம் வினவுகிறான்.

அவன் அண்ணி சொல்லித் தந்தவாறு சொல்கிறான்.

ஆயினும் அண்ணன் சந்தேகிக்கிறான்.

இருவரும் சாப்பிடச் செல்கிறார்கள்.

அங்குச் சாப்பிடத் தண்ணீர் இல்லை.

நீர் எடுத்து வருமாறு அண்ணன் தம்பியிடம் கூறுகிறான்.

தம்பி சாமியை நினைத்துப் புல்லைப் பிடுங்க அங்கிருந்து நீர் வருகிறது.

இருவரும் உண்ண அமர்கின்றனர்.

அண்ணி தன் கொழுந்தனுக்கு அரிசி உணவும் கணவனுக்கு ராகி உணவும் கொடுத்தனுப்பியிருக்கிறாள்.

அவள் கூறிய அடையாளம் மறந்துவிட்ட காரணத்தால் உணவு மாறிவிடுகிறது.

அண்ணனின் சந்தேகம் அதிகமாகிறது.

மிருகங்களையெல்லாம் ஓட்டிக் கொண்டு வருமாறு அண்ணன் தம்பியை அனுப்புகின்றான்.

தம்பி புல்லாங்குழலைப் போன்ற ஒன்றை ஊதி மிருகங்கள் இருப்பதை அறிந்து வந்து அண்ணனிடம் கூறுகிறான்.

அவனை மறைந்து கொள்ளுமாறு அண்ணன் கூறுகிறான்.

அவன் மூங்கில் புதரில் மறைந்து கொள்கிறான்.

அண்ணன் தம்பி மீது அம்பை விட்டுக் கொல்கிறான்.

பின்னர் தனியாக வீட்டிற்கு வருகிறான்.

வீட்டில் அண்ணி தன் கணவன் குளிப்பதற்காக ஒரு கொப்பரை தண்ணியும் கொழுந்தன் குளிப்பதற்காக ஏழு கொப்பரை தண்ணியும் வைத்திருக்கிறாள்.

கணவனிடம் கொழுந்தன் எங்கே என்று கேட்கிறாள்.

'உங்கள் அப்பா வீட்டிற்குக் கறி கொண்டு சென்றுள்ளான்.

வந்துவிடுவான்' என்று அவன் கூறுகிறான்.

தான் செய்த தவறு அவனுக்குத் தெரிந்திருக்குமோ என்று அவள் சந்தேகிக்கிறாள்.

சாப்பிடும்போது அவன் கண்கலங்குகிறான்.

அவன் சாப்பிட்டுப் படுத்த உடன் அவள் ஒரு செம்பில் நீரும் ஒரு குச்சியும் எடுத்துக் கொண்டு கொழுந்தனைத் தேடி வெளியே செல்கிறாள்.

பறந்து கொண்டிருக்கும் கழுகு தனக்கு ஏதேனும் அடையாளம் செய்தால் அவள் கொழுந்தனிடம் அழைத்துச் செல்வதாகக் கூறுகிறது.

அவள் தன் புடவையிலிருந்து வெள்ளைத் துணியைக் கிழித்து கழுகின் கழுத்தில் கட்டிவிட, அது பறந்து செல்லும்போது தெரியும் அதன் நிழலைப் பின்பற்றிச் சென்று மூங்கில் புதரில் மாண்டு கிடக்கும் கொழுந்தனைக் காண்கிறாள்.

(பெருமாள் கழுகின் கழுத்தில் உள்ள வெள்ளை பெரியண்ணன் மனைவி கட்டிவிட்ட வெள்ளைத் துணி அடையாளம் என்று கூறுவர்)

கணவன் செய்த துரோகத்தை எண்ணிக் கொழுந்தன் பிணத் தருகில் அவள் ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருந்தாள்.

அவன் உயிர்பெற்று எழுந்து 'மாண்டவர் உயிருடன் வீடு திரும்பக் கூடாது' என்று கூறி மீண்டும் இறக்கிறான்.

அப்பக்கமாகச் சென்று கொண்டிருக்கும் பொதிமாட்டுக் காரர்கள் ஏளு பேர் பெண்ணின் அழுகுரல் கேட்டு அவளருகில் செல்கின்றனர்.

அவள் அந்தப் பிணத்தை அடக்கம் செய்ய உதவினால் அந்த எழுவருக்கும் அடிமையாக இருப்பதாகக் கூறுகிறாள்.

அவர்கள் அவள் கூறியவாறு சந்தனக்கட்டைகளை அடுக்கிப் பிணத்திற்குக் கொள்ளி வைக்கிறார்கள்.

அவள், பிணத்தை 'எடம்புரி வலம்புரியாக' மும்மூன்று சுற்று சுற்றிக் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில் குதித்து விடுகிறாள்.

'ஒரு கொழுந்தனாருக்காக அண்ணி உயிரை விட்டாள்; இவளுக் காகத் தானே நாம் இந்தப் பாடுபட்டோம்' என நினைத்து ஏழு பொதி மாட்டுக் காரர்களும் தீயில் குதித்து விடுகிறார்கள். தங்களுக்குத் தீனிபோட்டு வளர்த்தவர்கள் இறந்த பிறகு நாம் உயிர் வாழக் கூடாது என நினைத்த ஏழு பொதி மாடுகளும் தீயில் விழுந்து விடுகின்றன.

கூறியவர்: எஸ். இருசன்

சேகரிப்பாளர்: திரு எஸ். இராதாக்கிருட்டிணன். அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

குறிப்பு: திரு சுப்பிரமணி (சின்னதண்டா, மேட்டூர் வட்டம்) பாடிய பாடலின் கதை தெளிவில்லாமல் இருந்ததைச் சேகரிப்பாளர் சுட்டிக் காட்டியபோது திரு. இருசன் தானே முன்வந்து இக்கதையைக் கூறிப் பாடல் கதையைத் தெளிவுபடுத்தினார். இவருக்குப் பாடல தெரியவில்லை. இதனை நான் நேரில் சந்தித்தபோதும் (9.3.84) கூறினார்.

17. சேலம் *(செலவடை)*

அய்யா அங்க சீட்டிகொம்பு ஆயிரமாம் அய்யா
செவலமாடு ஆயிரமாம் அந்தக்
கட்டகொம்பு ஆயிரமாம் அய்யா அந்தக்
காரிமலஆயிரமாம் அந்தப்
பூங்கவெள்ள ஆயிரமாம் அந்தப்
பூமயிலு ஆயிரமாம் அந்தச்
செம்போத்து ஆயிரமாம்
செங்கமல(?) ஆயிரமாம்

('அப்புறம் என்னப்பா' என்று பாடகர் கூற அதையே தொடர்ந்து பாடுமாறு வேண்டியபோது)

அட வேட்டைக்கேதான் அட போனோமடா நம்ப
வேல்வடிய கைமறந்தோம் அட
ஓடுமடா சின்ன அண்ணா சின்னண்ணா
ஓட்டம் பெருநடையா

அண்ணா கரடி நல்லே அண்ணா ஒறங்குவனம் - இந்தக்
காட்டானையா தூங்குவனம் - இங்குச்
சிங்கம் ஒறங்குவனம்
சிறு புலியா தூங்குவனம்
அந்த நல்ல வனத்திலதான் அண்ணா
எப்படியா போவும் அண்ணா

அட அகடவெகடம் பேசவேண்டாம் - ஒன்ன
தவுடமேல அடிச்சிடுவேன்

அய்யா மீச துடிதுடிச்சி அவனுக்கு
மின்கோவம் ஆனது
கண்ணு துடிதுடிச்சி
கடுங்கோவம் ஆகுனுது - அந்த
ஓடுறானோ சின்னண்ணனும் அண்ணா
ஓட்டம் பெருநடையா

அய்யா மாடுகண்டா வெலங்காமே அங்க
மனுசன் கண்டா பேசாதே அங்க
தண்ணிகண்டா குடிக்காத
தாவுகண்டா நிக்காத அங்க
ஓடுறான சின்னண்ணன் அண்ணா அவன்
ஓட்டம் பெருநடையா

(பாடகர் 'அப்பற(ம்) என்ன' என்று கேட்க மேலே பாடுமாறு கூறப்பட்டது)

அங்க ஓடுறானே நம்ப சின்னண்ணனும் அந்த
ஓட்ட நல்ல பெருநடையா
வேட்ட பாறை போய் பூந்தம் அண்ணா
வேல்வடிவ கைமறந்தம்
அட ஓடுமடா சின்ன அண்ணா சின்னண்ணா
ஓட்டம் பெருநடையா

அண்ணா கரடிநல்லோ ஒறங்கும் வனம் இந்தக்
காட்டானையா தூங்கும்வனம் அந்த
சிங்கம் ஒறங்கும்வனம்
சிறுபுலியா தூங்கும் வனம்
அந்த நல்ல வனத்திலதான் அண்ணாநான்
எவ்விதமா ஓடுவண்ணா

அட அகடவெகட பேசவேண்டாம்
தவுடமேல அடிச்சிடுவன்
அவன் மீச துடிதுடிச்சி அவன்
மின்கோபம் ஆனது
கண்ணு துடிதுடிச்சி
கடுங்கோவம் ஆனதும் அவன்
ஓடுறானே சின்னண்ணனும் அண்ணா அங்க
ஓட்டம் பெருநடையா

அய்யா இங்கருந்து ஊட்டுக்கு
இங்கருந்து போன

ஆருள்ள ஊட்டுலதான்
அண்ணன்தேவி சின்னப்பொண்ணே
குதிருவடி மூலையில
குத்துவெடி சாத்திருக்கும் அங்க
எட்டி எடுத்துக் கொண்டா எனக்கு
எதிர பயணமம்மா
குதிருவடி மூலையில
குண்டுவெடி சாத்திருக்கும்
எட்டி எடுத்தா அம்மா எனக்கு
எதிரோ பயணமுண்ணா(ன்)

அந்த வலதுகால எடுத்துவச்சான் சின்னண்ணனுக்கு
வாசப்படி இடிச்சதையா அந்த
எடதுகாலே எட்டி வச்சான் அந்த
எரவாணம் இடிச்சுதையா

ஊட்டில பூந்தனையா இவ
கட்டி புடிச்சிக்கிட்டா
அட என்னபுத்தி இண்ணருக்க(?)
இந்தப்புத்தி நெனச்சதென்னா

அவ(ன்) வருவா(ன்) வருவானுண்ணு நான்
வெகுநா(ள்) தவமிருந்தேன்
எப்ப வருவானென்று நான்
எத்தினா(ள்) தவமிருந்தன்
வாருமையா மாளிக்குத்தான் மன்னா
தீருமையா எங்கொறையே
தீருமையா எங்கொறைய
திரும்புமையா மன்னா மாளிக்குத்தான்

அந்த மாதரி நல்லோ திரும்பியல்லோ நாம்
மகிழ்ச்சி சுவம் மன்னா வாழ்ந்திருப்பம்

அவன் ஓடுறானே சின்ன அண்ணன் அண்ணாஅவன்
ஓட்டம் பெருநடையா

அட வேட்டபாற போய்புகுந்தன் சின்னண்ணா
வேல்வடிய கை மறந்தன்
அட ஓடுமடா சின்ன அண்ணா சின்னண்ணா
ஒட்டம் பெருநடையா

அண்ணா எனக்கு கரடி உறங்கும்வனம்
அண்ணா எனக்குக் காட்டான தூங்கும்வனம்
எனக்கு சிங்கம்நல்லா அண்ணா ஒறங்கும்வனம்
சிறுபுலியா தூங்கும்வனம்
அண்ணா அந்தநல்ல வனத்திலதான் அவன்
எவ்விதமா ஓடுவண்ணா

அட அகடவெகடம் பேசவேண்டாம்
ஒனன தவுடமேல அடிச்சிடுவேன்
தவுடமேல அடிச்சிடுவேன் அட
ஓடுமடா சின்ன அண்ணா

அட மீச துடிதுடிச்சி
மின்கோவம் ஆனது
கண்ணு துடிதுடிச்சி
கடுங்கோவம் ஆனது அவன்
ஓடுறான சின்னண்ணன் அய்யாஅவன்
ஒட்டம்பெருநடையா

அவன் தண்ணிகண்டா அவன்குடிக்காததான் அவன்
தாவுகண்டா நிக்காததான்
ஓடுறானே சின்ன அண்ணன் சின்னண்ணன்
ஒட்டம் பெருநடையா

ஆருள்ள ஊட்டுலதான்
அண்ணாந்தேவி சின்னப்பொண்ணே
அந்தக் குதிரு அடி மூலையிலே
குண்டுவெடி சாத்திருக்கும்
எடுத்துதான் கொண்டாமம்மா எனக்கு
எதிர பயணமுண்ணான்

அந்த கதவடி மூலையிலே அம்மா எனக்கு
கனத்தவெடி சாத்திருக்கும்
எனக்கு எட்டிநல்லோ எடுத்தாளம்மா எனக்கு
எதிரநல்லோ பயணமம்மா

என் பாலும் அடுப்புமேல நீபெத்த
பாலகனும் கைதனிலே
ஒன் பாலகனும் வேணுமுண்ணா மன்னாநீ
பாத்து எடுத்துக்கலாம்

மன்னாநீ சோறுநல்லோ அடுப்புமேல நீபெத்த
சோலகிளி கைதனிலே — ஒன்
சோலகிளி வேணுமுண்ணா — மன்னாநீ
சோந்து எடுத்துக்குலாம்

இவ கட்டிநல்லோ புடிக்கிறாளாம்—இவ
கன்னமெல்லாம் கடிக்கிறாளாம்
இந்த மூஞ்சோட மூஞ்சிவச்சி
முத்தங்களும் குடுக்குறாளாம்

அட என்னபுத்தி இண்ணாருக்க—பாவி
இந்தப் புத்தி நெனச்சதென்னா

மன்னா நான் வருவா(ர்) வருவாரென்று—நான்
வெகுநாள் தவமிருந்தேன்
எப்ப வருவாருண்டு மன்னவா நான்
எண்ணிருந்தேன் புத்திலே

('எப்படி?' என்று பாடகர் கேட்க மேலே பாடச்சொன்ன போது)

அந்த வேட்டபாற போய்பூந்தான்
அந்த வேல் வெடிய கைமறந்தன்

அட ஓடுமடா சின்ன அண்ணா சின்னண்ணா
ஓட்டம் பெருநடையா

அண்ணாநான் கரடி ஒறங்கும்வனம்
அண்ணாநான் காட்டானையா தூங்குவனம்
அந்த சிங்கநல்ல ஒறங்குவனம்
சிறுபுலியா தூங்குவனம்
அந்த வனத்திலிய

(உரையாக: கட்டிப்புடிச்சி கன்னமெல்லாம் கடிச்சி சேத்து புடிச்சி சின்னமுத்தம் குடுக்குறா)

அந்த கன்னத்திலே இருக்குங்காயம்
என்னாண்ணு கேப்பானே

நான் குண்டுவெடி எடுக்கப்போனேன் – அந்த
குட்டித்தா பூனவந்து - என்
கன்னத்தக் கடிச்சதுண்ணு சொல்லுமையா

எங்க அள்ளயில ருக்குங்காயம்
என்னாண்ணு கேப்பானே

நான் அம்புகள்ள எடுத்துகிட்டு

(உரையாக: இந்த ஆதண்டம் முள்ளு......(?)......ஓடியாந்தேன் அந்த ஆதண்ட முள்ளு அள்ளய கிளிச்சிட்டுதுண்ணு சொல்றா)

அட தெரியுமடா தெரியுமடா சின்னண்ணா ஒன்
திருட்டுப்புத்தி தெரியுமடா

அட மானேநல்லோ வளைத்தாடா
அட வாருமடா சின்ன அண்ணா
மானே வளையுமடா

அந்த மானோடும் ஓட்டமெல்லாம் அண்ணா
நானோட வல்லவனோ

அட அகட வெகடம் பேசவேண்டாம் ஒன்ன
தவடமேல டிச்சிடுவேன்

அவன் மீச துடிதுடிச்சி
மின் கோவம் ஆனதும்
கண்ணு துடிதுடிச்சி
கடுங்கோவம் ஆனதும்

அந்த - ஓடுறான சின்னண்ணனும் - அவன்
ஓட்டம் பெருநடையா

அந்த மானே நல்லோ வளைச்சியல்லோ அவன்
மதுளமரம் சாத்துறானே
அவன் மானுக்கு ஒருகுண்டு சின்னண்ணன்
மாருக்கு ஒருகுண்டு அய்யா அவன
வச்சானாம் பெரியண்ணனும்

அண்ணா நான் மானவந்து அட தூக்குவனா
ஒன்னவந்து தூக்குவனா

அட அங்க மாண்டவன் எந்திரிச்சா
வைக்க (?) எடம் புடிக்காது
செத்தவன் எந்திரிச்சா
சீம எடம் புடிக்காது
மான எடுத்துக் கொண்டுமல்லோ - மன்னாநீ
போவுமண்ணா நாட்டுக்குதான்

அண்ணா அவன் நீட்டி கெடத்தியல்லோ
நெடுங்கெடையா போட்டு அல்லோ
மதுளமரத்தடிய
படுக்கவச்சி விட்டுநல்லோ
மான எடுத்துகிட்டு மன்னா அவன்
வரான ஊட்டுக்குத்தான்

அந்த மதுளமரம் சேத்தியல்லோ
மானுக்குப் போனமன்னே
வந்து இருக்கும்போது

(உரையாக: 'அப்ப நீட்டி கெடத்தி நெடுங்கெடையா படுக்கவச்சிட்டு வந்து..........ஊட்டுக்கு வரான்')

அடியே தவமாருக்குமுண்ணு பெண்ணே
காவடி தூக்குவே
அடியே தூரம் வருகுமுன்னே
தூக்குவ ஆலாத்தி நாயகிநாயகி

(உரையாக: '........ஆலாத்தியும் எடுக்குல. ஒண்ணும் எடுக்குல. கொண்ணுபுட்டாண்ணு கண்டுகிட்டாள்' என்று பாடகர் கூற வேட்டைக்குப் போனால் 'ஆலாத்தி எடுப் பார்களா' என்று கேட்கப்பட்டது. 'எடுப்பார்கள்' என் பதை அழுத்தமாகக் கூறினார். இப்பவும் 'வேட்டைக்குப் போறவங்க போவாங்க' என்றார்.)

.... வருகுமுன்னே பெண்ணேநீ
காவடி மாத்துவே நாயகிநாயகி
அடியேநான் தூர வருகுமுன்னே
தூக்குவ ஆலாத்தி நாயகி நாயகி

(உரையாக: அவ ஆலாத்தி எடுக்குல. அப்பதான் என்ன சொல்றா. சின்னண்ணன் வேட்டைக்குப் போயி... இவ கட்டிப் பிடிச்சி கடவாய கடிச்சி மூஞ்சி மொகரையெல்லாம கடிச்சிப்பிடறா. வெள்ளி வளைய போட்டிருந்து...அப்பறந் தான் போறான்...(?).)

அய்யா அவன் போறான சின்னண்ணனே
அய்யா அவன் வனமா வனந்தாண்டி
சின்னண்ணன் பாரா வனம் தான் தாண்டி
அய்யா அவன் சரியா நலலோ அந்த வனமுந்தாண்டி
அந்தச் செம்மலயுந் தான் தாண்டி

(குறுக்கிட்டு 'அதான் போயிட்டான். அவன் செத்துட்டான். அண்ணன் மான எடுத்துக்கிட்டு வரான். அவ ஆலாத்தி எடுக்குல. அப்புறம்' என்று கேட்ட போது அவர் கூறியது. உரையாக: 'ஆலாத்தி எடுக்குல மான எடுத்து சுட்டு பத னம் பண்ணிபுட்டு கொழந்தைய எடுத்து மடியில கட்டிக் கிட்டு தீப்புட்டிய எடுத்து மடில வச்சிக்கிட்டு அப்பறம்

என்ன சொல்றா...காடு வனம் போனவருக்கு கைவிளக்கா நிண்ண மாயா'. குறுக்கிட்டு 'பாட்டா பாடிடுங்களேன் என்று கேட்டுக் கொண்டபிறகு)

அந்த காடுவனம் போனவர்க்கே மாயா எனக்கு
கைவெளக்கா நிண்ணமாயா
எங்க மன்னவனும் செத்தசேதி
என்ன கூட்டிக்கொணடு காட்டவேணும்
மாயா காட்ட வேணும்
அந்த தேவ...

(உரையாக: 'அப்போ செந்தல் கருடன் கீழ பறந்துகிட்டு')

அய்யா அவ சந்தினதான் கட்டவெட்டி
அவ சாத்துகட்ட அவ போட்டாளையா
அவ குங்கும கட்ட வெட்டி
அவ கூட்டுக்கட்ட போட்டாளாம்
அய்யா குண்டத்த தானிருத்தி
அண்ணந்தேவி சின்னப்பொண்ணா
குண்டத்துக்கு தீமூட்டி
வச்சாள சின்னப்பொண்ணு

(உரையாக: 'குண்டத்துக்குத் தீமூட்டி வச்சிட்டா. தீப்புட்டி வச்சி குங்குமாக் கட்ட சந்தணக்கட்ட எல்லாம் வச்சி குண்டத்த மூணு சுத்து சுத்தி வந்து எட்டிக் குதிக்கிறா...')

அந்தக் குண்டத்ததான் சுத்தியல்லோ
மூணு சுத்து

(உரையாக: கொழந்தய மடியில கட்டிக்கிட்டே குதிக்கிறா)

அவ குண்டத்த தான் சுத்தியல்லோ
அவ எட்டிக் குதித்தாளாம்
எளங்கொடிய மாமயிலு

(உரையாக: 'அவ எட்டிக் குதிச்சதும் நாயும் எட்டிக் குதிச்சது. நாய் எட்டிக் குதிக்குதுண்ணு பொதிமாடு ஓட்டுனான்

ஒரு செட்டியாரு. இப்பேர்ப்பட்ட பொண்ணு சாவுதே நாம்ப என்ன செய்யிலாம்? நாம்பளும் சாவலாம்ணு அந்த மாடும் எட்டிக்குதிச்சது. மாடு எட்டிக் குதிக்கக் குள்ள நாம்ப என்னா பண்றதுண்ணு மாடும் எட்டிக் குதிச்சிப் புட்டுது. அந்த செட்டியாரும் குதிச்சிப்புட்டான். அப்புறம் கடைசியில பெரியண்ணலன் போறான். இங்கேருந்து போயி சந்தனக்கட்ட குங்குமாக்கட்ட இத்தனையும் வெட்டிவச்சி குதிக்கிறான். குதிக்கவே குப்புண்ணு குண்டம் அணைஞ்சி போவுது அவன் புழுவா புழுத்து அப்படியே...போற சனங்க துப்புண்ணு துப்பிபுட்டு போவுது'.)

பாடியவர்: *அம்மாசிக்கவுண்டர்.*

குறிப்பு: *இளைய தலைமுறையினர் இவரை மிகச்சிறந்த பாடகர் என அறிமுகப்படுத்தினர். ஒரு வீட்டின் முன்பகுதியில் சுமார் பதினைந்துபேர் சூழ்ந்து ஆர்வத்துடன் பாடல் கேட்க இவர் பாடினார். அம்மாசிக்கவுண்டர் ஆற்றல் மிக்க பாடகர். மிகப்பழைய பாடல்கள் பலவற்றையும் பல அரிய செய்திகளையும் அறிந்திருந்த அவர் வயது காரணமாக நினைவுத் தடுமாற்றம் மிக்கவராக இருந்தார். பாடிய அடிகளையே திரும்பத்திரும்பப் பாடுவதும் நினைவு படுத்திய பின்னர் மீண்டும் பாடுவதுமாக இருந்தார். இறுதிப் பகுதியை உரையாகவே கூறினார். கதையைக் கூறி முடித்த உடன் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கு அவர் கூறிய பதில்களும் வருமாறு*

கேள்வி: *யார துப்புறாங்க?*

பதில்: *பெரியண்ணன. இவன்தான் கருமஞ்செஞ்சான.*

கேள்வி: *அவன் என்ன தப்பு செய்தான்?*

பதில்: *தம்பிய கொண்ணுட்டான் இல்ல!*

கேள்வி: *தம்பி தப்புபண்ணுனதாலதான அவனக் கொண்ணான்?*

பதில்: *அண்ணந்தம்பிக்குள்ள ஒத்துக்கக் கூடாதா?*

கேள்வி: *நடைமுறையில அப்படி இருந்தா ஒத்துப்பாங்களா?*

பதில்: பாத்தாலும் ஒண்ணுமில்லண்ணு ஒத்துக்கறதுதான். ஒத்துககாததும் இருக்குதான்.

கேள்வி: ஒங்க காலத்துல எப்படி?அத எல்லாம் ஒத்துப்பாங்களா?

பதில்: ஏதோ அத கண்டுங் காணாத ஒத்துக்கினுதான் இருப் பாங்க. பின்ன அப்படியே இருக்க முடியுமா?

கேள்வி: 'அதுக்காக' இந்தமாதிரி கொலல்லாம் செய்ய மாட்டாங்க?

பதில்: கொலல்லாம் செய்ய மாட்டாங்க.

(ஒலிபபதிவு நாடாஎண்: 10)

18. சேலம் (செலவடை)

சின்னண்ணனும் பெரியண்ணனும் வேட்டைக்குச் செல்கின்றனர்.

புள்ளிமான் ஓடுகிறது. அதை ஓடி வளைக்குமாறு அண்ணன் கூற மானோடும் ஓட்டத்துக்கு நான் ஓட வல்லவனா எனத் தம்பி கேட்கிறான்.

அப்படியானா நான் போயி மான வளைச்சிவரன். ஒரு அங்குவடிய மறந்து வந்துட்டன். அதப்போயி எடுத்துவா என்கிறான்.

நீ மானை வளைத்துத் திரும்பு. நான் அதற்குள் எடுத்து வருகிறேன் என்று தம்பி கூறுகிறான்.

வர்ற வழியில ஏதேதோ சயனங்கள் ஆகுது. அண்ணன் சொல்லத் தட்டளிக்கக் கூடாதுண்ணு வந்தான்.

'அண்ணி, அண்ணன் அங்குவடிய மறந்துட்டுப் போயிட்டாராம்'.

'சுவாமி, அங்குவடிய அண்ணன் மறந்து போனது எதுண்ணு ஒங்களுக்கு சூழ்ச்சி தெரியாது சாமி. நீ சூழ்ச்சி இல்லாதவே அண்ணன் சொன்னபடியெல்லாம் கேட்டுக் கேட்டுதான் நாம்ப இப்படி ஆயிட்டோம். அங்குவடி மூலையில இருக்குது. வந்து எடுத்துப்போங்க சாமி. பாலும் அடுப்புமேல, ஒண்ணன் பெத்த பாலகனும் மடிமேல. நான் எந்திரிச்சி எப்படி எடுப்பன். அது வேற பொங்கி வந்துகிட்டு இருக்குது' அப்படிண்ணு சொல்லுது.

'அரண்மனையில நொழஞ்சா எனக்கு ஆபத்து வராதே அண்ணி'.

'எந்த ஆபத்தும் வாராது'.

அப்ப எடுத்துகிட்டுப் போவும்போது கொழந்த ஏணையில இருக்குது. இவ குறுக்க கட்டிக்கிறா.

'ஒன்மேல இருக்கக்கூடிய ஆச எனக்கு எவ்வளோ இருக்குது. இண்ணைக்கு நாம்ப சேராட்டா நாம்ப சாம்பலா ஆவ வேண்டியதுதான்' அப்படீண்ணு ஆசவந்து அவன புடிச்சி கடிச்சி தொந்தரவு பண்ணிடறா.

அவன் 'எதுண்ணாலும் அது இருக்கப்படாது. அண்ணனுடைய பெண்சாதி எனக்கு சின்ன-பெரிய தாய்தான தவிர அபபடி ஒன்னும் மறுமுறையா எனக்கு சொகப்படாது அம்மா' அப்படிங்கறான்.

'அட சண்டாளா, என்ன அம்மாங்கறயே'. அவளுக்குக் கோவம்.

இவன் அவகிட்டேயிருந்து புடுங்கிகிட்டு அங்குவடிய எடுதது கிட்டு ஓடிடறான்.

'எங்க ஓடுனாலும் நீ வரவா போற. போ. இதுதான் கடைசி காலம். கடைசியில ஒன்ன சேர்ந்து புணர்ச்சி ஆகலாம்ணு பாத் தேன். விதியில்ல. போ. நானும் வர்றேன்'ணு சொல்லி அனுப்பிச் சிடறா.

இவ புடிச்சி ஆசயா புடுங்குன சாயமெல்லாம் அவனுக்குத்தெரிய வைக்கல. பிருமத்தி புடிச்சிப் போச்சில்ல.

'என்னப்பா தம்பி இப்படி காயம்'.

'அண்ணா, நான் வந்து மனுசனக்கண்டா பேசாம, மாட்டாக் கண்டா ஒதுங்காம கருமுள்ளு காட்டுல வந்தன். இந்த இண்டு முள்ளு (கொக்கி மாதிரி இருக்கும்) கன்னத்துல கிளிச்சிடுச்சி'.

அவன் நம்பல.

'மானு அந்தப் பொதையிலதான் இருக்குது. நீ போயி வளைச்சி வா'.

'அண்ணா ஏதாவது தப்பு வராதே'.

'தப்பு வராது. நீ போயி மானயட்டும் எளுப்பிவிடு'.

மான எளுப்பி உட்டு மானு இப்படி ஓடுனா இப்படி ஓடி யிருக்கிறான். அப்ப மானுக்கு ஒருகுண்டும் சின்னண்ணன் மாருக்கு ஒருகுண்டும் அங்குவடிக்குத்தான் ரெண்டு குண்டு போட்டு சுட முடியுமாம்.

'அண்ணா நான் என்னாண்ணா பாவம் செஞ்சன். என்ன கொண்ணுட்டியே' அளுவும்போது - அளுது ஓடி ஆபத்துண்ணு உளுவும்போது அண்ணன் பொண்டாட்டிக்குத் தெரியுது.

அவன்மேல நாம்ப வச்சிருந்த ஆவலு (ஆவலும் ஒண்ணுதான் ஆபத்தும் ஒண்ணுதான்) அவன் மாண்டுட்டான்.

தம்பிய குங்கும கட்ட சந்தனகட்ட எல்லாம் பொறுக்கி தம்பிய எடுத்து அது மேல வச்சி தகனத்த பூட்டி உட்டுட்டு பொறப் பட்டு வீட்டுச்கு யான எடுத்துச்கிட்டு வரான். ஆரு? பெரி யண்ணன்.

வந்து இவன் மானுபாட்டுல மான உரிச்சி...பாகம் பண்ணுனான்.அப்ப பெரியண்ணன் பொண்டாட்டி சொல்றா–

'சாமி, அம்பு பட்ட கரிய நீங்க ஆம்பளைங்கதான் திங்கணும் நாவந்து ஏதோ எனக்குத் தெரிஞ்சத நான் ஒரு நக்கிரிக் கீரையைக் கொண்டாந்து... ஒங்களுக்கு அது ஆகாது...'

யான அவனுக்கு சமைச்சி வச்சிட்டு இவ நக்கிரிக்குப் போறா.

கொழந்தய எடுத்து மடில கட்டிக்கிட்டு மடமடண்ணு போனது ம் சின்னண்ணன் எரியிற எடத்துக்குப் போயி இவ மூணு சுத்து வலம்புரி எடம்புரி வந்ததும் கொளந்தையோட எட்டிக் குதிச்சிடுறா.

பின்னால என்னாண்ணா இவன் குஜல குமாரனா பொறக் குறான். அந்தக் கொளந்த. கடைசியா வந்து ராமாயணம் ஆயிடுதுண்ணு வச்சிக்கிங்களேன்.

அவ்வளவுதான். இந்த கதையோட அனுபவம் தெரியும்.

கூறியவர்: லெட்சுமணன்.

குறிப்பு: லெட்சுமணன் கூற்று: 'சின்னண்ணன் பெரியண்ணன் சிற்றின்பமான நாடகம் ... அண்ணங்காரன் சந்தேகத் தாலதான் கொண்ணுடறான். ஆச அன்பா பேசறது தான் வாயால. புருஷன கால்பாகமா வச்சிக்கிட்டு கொளுந்தன முளுபாகமா வச்சிக்கிட்டு இருக்கா. இவன் மேல நம்ப பொண்டாட்டிக்கு இருக்குற ஆச நம்பமேல இல்லியே...அதனால தான் கொண்ணுடறான். இதோட ஒரு ராத்திரி முடியுது.'

முதலில் அண்ணன்மார் சுவாமி கதைப்பாடலைப் பாடினார். பின்னர் இக் கதையைக் கேட்டபோது அக் கதைப் பாடலின் தொடர்ச்சியே இது என்றார். பாடலாகத் தெரியாது என்று கூறிவிட்டு கதையாகக் கூறினார். அம்மாசிக்கவுண்டர் பாடிய அதே இடத்திலிருந்து கொண்டு இவர் கதை கூறினார்.

(ஒலிப்பதிவு நாடா எண்: 10)

19. சேலம் (வெள்ளக்கல்பட்டி)

அங்க செந்தூளு கருந்தூளு
சேந்த மணக்காடு
செங்குட்டுப் பள்ளமாம்
திருவுகள்ளி நொளகளமாம்(?)
வெள்ளங் கொளத்தடிய
வெங்கல மதுவடிய
நாலுகாலு வெள்ளையது
நடுத்தல சுட்டியது
பூவாலு குட்டியது
அறவதடி நீளமது
எளுவதடி ஒயரமது
மாரடிக்கு வேங்கையது
அங்க காஞ்ச புளுதியில
கௌமானு மேயுது
உளுந்த புளுதியில
ஔமானு மேயுதங்கே

எங்க பத்திர காளி
படசாஞ்ச(?) நீலி
நீலி கவுளி(?)
நித்திர சாமுவளி(?)

எங்க சின்னண்ணஞ்சாமி
அந்தனோட வேங்கைய
சன்னதிக்கு முன்னால
கொண்டுவந்து நிறுத்திவிட்டார்

ஒனக்கு பொறந்தது ஒருதாவு
வளந்தது ஒரு எடமாம்
... ...
அந்த அவதாரத்த சொல்லுறண்டா

எங்க சின்னண்ணஞ் சாமியும்
பெரியண்ணஞ் சாமியும்

இருவரெண்டு பேருகளும்
பனமரத்த புடுங்கி
பல்லு வெளக்கிகிட்டு
எங்க பாரமடி சின்னு

அஞ்சி கண்டவ (?) கம்பு
இடிச்சி நல்ல போட்டு
ஒரு ஏனத்திலே
இருவது வெள்ளக்கல்லு ஊறுகாயி
அவரு ....
அந்திப் பளஞ்சோறு
ஆதண்டங்காய் ஊறுகாயி
அலசி குடிச்சிபுட்டு
அவரு வில்லெடுக்க போனாரு

எங்க பெரியண்ணஞ் சாமியும்
பேசாந் திருமுடியும்
சீக்கிரமா போயிநல்லோ
எங்க சின்னண்ணஞ்சாமிய
நீ வில்லெடுத்து வாடாதம்பி

எங்க சின்னண்ணஞ் சாமி
சித்தான குட்டி
எட்டான பால் குடிக்கும்
எங்க ஏலமடி சின்னு
அங்க வில்லெடுக்க போனாரு

அங்க வில்லெடுக்கப் போம்போது
பெரியண்ணன் பொண்டாட்டி
நீங்க பள்ளிக்கொடம் படிக்கும்போது
இங்க சின்னண்ணஞ் சாமியும்
தம்பி ஒம்மேல்நான் ஆசப்பட்டன்

நான் ஒம்மேல ஆசபட்டன்
கட்டி அணைஞ்சிடு

கடவாய முத்தம வையி
என்ன சேத்தி அணைஞ்சிடு
திருவாய முத்தம் வையி

பெரியண்ணன் பொண்டாட்டி
இங்க பெத்த தாயி இல்லியாண்ணி
சின்னண்ணன் பொண்டாட்டி
எனக்கு சின்னாயா இல்லியாண்ணி
அங்க வேண்டாமண்ணி கேளுமண்ணி

உன்னுமேல ஆசபட்டநாளா
என்னால தாங்கமுடியிலப்பா
அப்படிண்ணு சொல்லி
அவ கட்டி புடிச்சாளே
கடவாய கடிச்சாளே
சேத்தி புடிச்சாளே
சிறுவாய கடிச்சாளே
அங்க கிள்ளுபடா மேனி
கிள்ளுபட்டு போச்சி
காயம்படா மேனி
அங்க காயம்பட்டு போச்சுதங்கே

எங்க சின்னண்ணஞ்சாமிக்கு
கிள்ளுபடா மேனியெல்லாம்
கிள்ளுபட்டு போச்சுதங்கு
காயம்படா மேனியெல்லாம்
அங்க காயம்பட்டு போச்சுதங்கே

அய்யோ இத பெரியண்ணன் கண்டாண்ணா
என்னடா தம்பியும்
ஒரு புது அதிசியமா இருக்குதுண்ணு
அவுரு என்னியும் கேப்பாரு

தம்பி குட்டி செவுரேறி
கொக்கரிச்சி வேலெடுத்தேன்
குட்டித்தா பூனவந்து

குறுக்க கிளிச்சிதிண்ணு
நீங்க அண்ணனிடம் சொல்லுப்போங்க

ஆள செவுரேறி
ஆங்கரிச்சி வேலெடுத்தேன்
ஆளத்தா பூனவந்து
ஆளுத்தி கிளிச்சிதிண்ணு
நீங்க அண்ணனிடம் சொல்லுங்கையா

அப்பிடிண்ணு சொல்லி
அங்க சின்னண்ணஞ்சாமி
சித்தான குட்டி
எட்டான பால்குடிக்கும்
ஏலமடி சின்னு
அங்க வேகமா வரானே

அட இது என்னடா ஆச்சரியம்
சின்னண்ணஞ்சாமி
கிள்ளுபடா மேனிஇது
கிள்ளுபட்டு போச்சுதப்பா
காயம்படா மேனிஅங்க
காயம்பட்டு போச்சுதப்பா

அண்ணா நான் குட்டி செவுரேறி
கொக்கரிச்சி வேலெடுத்தன்
குட்டித்தா பூனவந்து என்ன
குறுக்க கிளிச்சிதண்ணா
ஆள செவுரேறி
ஆங்கரிச்சி வேலெடுத்தன்
ஆளத்தா பூனவந்து என்ன
அளுத்திக் கிளிச்சதண்ணா

எங்க சின்னண்ணஞ்சாமியும்
சித்தானகுட்டியும்

எட்டான பால்குடிக்கும்
ஏலமடி சின்னுமு
பெரியண்ணஞ் சாமியும்
இருவ ரெண்டு பேர்களும்
வெங்கல மதுவுக்கு
வேகமா போறாங்க

அந்தலோட வேங்கையும்
ம(ல்)லாந்து படுத்துகிட்டு
இருக்குதுண்ணு சொல்லியே
பெரியண்ணன் சாமியும்
அந்தலோட வேங்கையும்
நாய் கண்ணுல பாக்கும்போது
பயமாவும் இருக்குதடா

எங்க சின்னண்ணஞ்சாமி
சித்தான குட்டி
எட்டானபால் குடிக்கும்
ஏலமடி சின்னு
நமக்குப் பயமா இருந்தாலும்
பெரியண்ணஞ் சாமி
நீ கூந்த பனையேறி
குந்திகிட்டுப் பாருமண்ண

பெரியண்ணன் கூந்தபனையேறி
குந்திகிட்டுப் பாக்கும்போது
சின்னண்ணஞ் சாமிக்கு
கண்ணு துடிக்கிது
கடுங்கோவம் ஆவுது
அங்க மீச துடிக்கிது
மின்கோவம் ஆவுது
அவ்வரளி கண்கரெண்டும்
செவ்வரளி பூத்துதங்க

அங்க அந்தலோட வேங்கைய
மின்கட்டு பின்கட்டு
பதனாறு கட்டுகட்டு
தூக்கி தோளுமேல வச்சிகிட்டு
நீ கூந்த பனையவிட்டு
நீகுதிச்சோடி வாருமண்ணா

இங்க ஆரவனம் சூரவனம்
இண்டவனம் ஏலவனம்
முள்ளு முருகமாரிசி(?) வனம்

அந்தரோட வனத்திலே
எங்க பெரியண்ணஞ்சாமி
அட சின்னண்ணஞ் சாமியடா
சித்தான குட்டி
எட்டான பால்குடிககும்
ஏலமடி எங்க சின்னண்ணன்

நீ இநதலோட வேங்கைய
என் தோளுமேல வச்சீனா
மதுப்பா(க) வருவம்தம்பி

அண்ணா இந்தலோட வேங்க
இருவரெண்டு பேத்துக்கும்
இது சம்பந்தப்பட்ட வாட்ட
பேசாத வாருமண்ணா

அட சின்னண்ணா
அதெல்லாம் முடியாதடா
எளுவதூட்டு பங்காளிங்க
என்ன எளப்பங்களும் பேசுவாங்க
பத்திரகாளி எனன
பரிகாசம் பேசுவா

அவன் காணப்பொறந்த பையன்
கனத்த வேட்ட கொண்டுவரான்

மிந்திப் பொறந்தவன்
என்ன முட்டாளென்று சொல்லுவாங்க
எங்க அந்தலோட வேங்கையும்
என் தோளுமேல வையந்தம்பி

அண்ணா இந்தாண்ணா வாங்கிக்கண்ணா
அப்படின்று வைக்கும்போது
அந்தலோட வேங்க
பதினாறு கட்டியும் பிச்சி எரிஞ்சிபுட்டு

அது எட்டிக் குதிச்சிது
எளுநூத்திக் காதம்வளி
சொளட்டிக் குதிச்சிது
தொண்ணூத்திக் காதவளி
எங்க சின்னண்ணஞ் சாமிக்கு
அடங்காபடி எங்க சின்னண்ணன்
ஆக்குரோஷம் வந்து

அவுரு எட்டிக்குதிச்சாரு
எளுநூத்தங் காதவளி
சொளட்டிக் குதிச்சாரு
தொண்ணூத்தங் காதவளி

எங்க பெரியண்ணஞ் சாமியும்
பேசாந் திருமுடியும
இந்தலோட வேங்கைக்கு
தகராறு செய்யாத
இருந்தாலும் போவுதுண்ணு
நாம்ப கோயிலுக்கே போயிருப்பம்

அவன் சின்னண்ணஞ் சாமி
எங்கியும் செத்தானோ
என்னாத்த ஆனானோ
அப்படிண்ணு சொல்லி
வெசனம் புடிசசிகிட்டு

தேடவுந் தெரியாத
அவுரு தடுமாறி அளுவுறாரு

அங்க வளியும் தெரியாத
வனத்துல அளுவும்போது
எங்க பாருவதி அம்மாளும்
பரமசெவன் ஈஸ்பரனும்
அங்க ஒலகம் படியளந்து
பூசிக்கும் நேரமிண்ணு
பொறப்பட்டு போம்போது
ஒரு ஆண்கொரலு சத்தம்
அபயமிட்டு அளுவுதப்பா
பார்வத நாம்ப பாத்துமே போலாமடி

சாமி நாம்ப ஒலகம் படபடந்து (?)
... ... முடியிதுண்ணு
நம்பளுக்கு பூசைக்கு நேரமாச்சி
பொறப்பட்டு போலாஞ்சாமி

அடி காது கொடுத்து
நல்லாவே கேளு
ஒரு ஆண் கொரலு சத்தம்
அபயமிட்டு அளுவுதங்க

அங்க அப்பிடிண்டு சொல்லி
அங்க பரமசிவ நாதரு
பாருவதி அம்மா
இருவ ரெண்டு பேருகளும்
அவுங்க தொளவிகொண்டு வந்தாக

அட என்னடா பெரியண்ணா
அளுது பொலமபுற
எந்தனுக்குச் சொல்லுந் தம்பி

எங்க சின்னண்ணஞ்சாமி
எட்டிக் குதிச்சான்
எளுநூத்திக் காதவளி

சொளட்டி அடிச்சான்
தொண்ணூத்தங் காதவளி
அவுரு எங்க குதிச்சாரு
எங்கியும் செத்தான்ணு
எனக்கு தெரியலியே
நான் என்னாசாமி பண்ணட்டும்

அவன் சாவவும் இல்லியப்பா
அவன் எறங்குன எடம்
ஒரு தெப்பக் கொளம் உண்டாயி
சோமந் தொவச்சிக்கிட்டு
சொகுசாக சோமந் தொவச்சிகிட்டு

அந்த சலத்துல தண்ணியும் ஊத்திக்கிட்டு
ஒரு ஆரம்பலமா
அங்க இருக்குறாரு சின்னண்ணன்

அங்க அப்பிடிண்ணு சொல்லி
தங்கப் பிரம்பு
த(ண்)ணிச் சொம்பு குடுத்து

நீ தண்ணிப் பிரம்பால
தடத்தியும் ஒதுக்கிக்கிட்டு
போடா பெரியண்ணஞ் சாமி
பேசாத் திருமுடியும்
அப்பிடிண்ணு சொல்லிபிட்டு
எங்க பாருவதி அம்மாளும்
பரமசிவன் ஈஸ்பரனும்
பூசைக்கு நேரமிண்ணு
அவுங்க வேகமா போயிட்டாங்க

எங்க பெரியண்ணஞ் சாமியும்
பேசா திருமுடியும்
தங்க பிரம்பிலியும்
தடத்த ஒதுக்கிகிட்டு
அவுரு வேகமா போறாங்க

அந்த சின்னண்ணன் இருக்குற தாவுக்கு
கொண்டுபோயி விட்டுதாமே
எட்டியும் பாத்துட்டு
நான் அப்பிடிண்ணு சொன்னனே
சின்னண்ணா எம்பேச்ச கேட்டீயாப்பா

நான் என்னண்ணா பண்ணட்டும்
அந்தலோட வேங்கைக்கு
நீதாண்ணா தகராறு செஞ்ச
என்னோட தப்பு என்ன
அப்பிடிண்ணு சொல்லி
தங்கப் பெரம்ப
நீட்டி குடுக்கும்போது
எங்க சினனண்ணஞ் சாமி
அவுரு மேலேறி வந்தாரு

வாண்டாமடா சின்னு
நாம்பவீட்டுக்குப் போலாம்
தப்பி பொளைச்சிக்கலாம்
தாயிபேரு சொல்லலாம்
ஓடி பொளைச்சிக்கலாம்
ஓலகத்திய ஆளுலாம்பா
அந்தலோட வேங்கைய
கிட்டியே போவக்கூடாது
வாடாநாம்ப வீட்டுக்குப் போலாந்தம்பி

அண்ணனுக்குப் பயமாவும் இருந்தாலும்
எந்தோளுமேல ஏறிக்கண்ண

அங்க வெங்கல மதுவுக்கு
வேகமா போம்போது
அந்தலோட வேங்கையும்
இருவரெண்டு பேத்தியும்
அது கண்ணுல பாத்துது

அட சின்னண்ணன் பெரியண்ணன்
இருவ ரெண்டு பேத்துக்கும்
நான் சம்பந்தப்பட்டவட்டா
நீங்க பயப்படாத வாங்கடாப்பா

அப்படிண்டு சொல்லிட்டு
வெங்கல மதுவுக்கு
கிட்டியும் வரம்போது
அந்தலோட வேங்கையும்
இவுங்கள வெங்கலமதுவுக்குள்ள
உள்ளியும் தள்ளியே
ஒரு பூடடுகளும் போட்டுடிச்சே

அங்க பூட்டுகளும் போட்டுட்டு
அங்க வெள்ளி கெளமையில
விடிய ரெண்டாம் தேதியில
திங்கக் கெளமையில
எங்க திதிபொறந்த நாட்டுல
அவுரு தெவிசியும் நடக்குது (?)

நீங்க பாலமல நரியும்
வெத்தலமல நரியும்
பெரியமல நரியும்
எங்க தெவசியம் (?) தவறாத வராங்களோ

அப்படிண்ணு சொல்லி
அந்தலோட வேங்க
ஒரு காயிதம் எளுதி
அந்த மூவாயிரம் நரிகளும்
அங்க காயிதத்தக் கண்டு
அங்க கடுதாசிய பாத்து

அங்க நட்டுமுட்டு நவச்சாரம்
... ...
சீருமே தூக்கிக்கிட்டு

அங்கேருந்து மூவாயிரம் நரிகளும்
வேகமா வருதுங்களாம்

அங்க வேகமா வரம்போது
எங்க சின்னண்ணஞ் சாமியவன்
சித்தான குட்டியவன்
இது என்னடா சத்தமும்
கேக்குதின்று சொல்லியல்லோ
வெங்கல மதுவேறி
சின்னண்ணன் எட்டியே பாத்தாரு

அங்க எட்டியே பாக்கும்போது
பெரியண்ணஞ் சாமியடா
பேசா திருமுடியன்
நீ எட்டியே பாருமண்ணா

எங்க பெரியண்ணஞ் சாமி
எட்டியும் பாத்துட்டு
இது என்னடா சின்னண்ணா
அப்பியும் சொன்னன
நாம்ப தப்பி பொளைச்சிக்கலாம்
தருமநாடு ஓடிப்போலாம்
அப்பிடிண்ணு சொன்னன
எம்பேச்சி கேட்டியா
இந்த மூவாயிரம் நரிகளுக்கு
பாக்காட்டம் கடுவாட்டம்
வராதே பே (?) சின்னண்ணா
நான் என்னடா செய்யட்டும்
அப்பிடின்று சொல்லி
எங்க பெரியண்ணஞ் சாமி
காலோட தீத்தம் விட்டுட்டு
அவுரு கவுந்து படுத்தவரு
அவுரு நிமிந்துமே பாக்கவில்ல
எங்க சின்னண்ணஞ் சாமிக்கு
அங்க கோவமும் வந்துதங்க

எங்க சின்னண்ணஞ் சாமியும்
மல்லாந்து படுத்தாரு
வெங்கல மதுவுலியும்
எட்டி ஒதைக்கும் போது
வெங்கல மதுவுநல்ல
அங்க புட்டுக்கிட்டு ஓடியல்லோ
மூவாயிர நரிமேல
அங்க உளுந்துதாவே வெங்கல மதுவு

அங்க வெங்கல மதுவு உளுவும்போது
அது என்னமோ தெரியில
நம்பளுக்கும் பெரிசாவ
இந்தனோட ராஜ்ஜியம்
அட வலுத்துமே இருக்குதடா
அப்புடிண்ணு சொல்லிநல்லோ
அதது தேசத்துக்கு
அது ஓட்டம் புடிச்சிதாமே

எங்க சின்னண்ணஞ்சாமி
சித்தான குட்டி
எட்டான பால்குடிக்கும்
ஏலமடி சின்னு

அந்தலோட வேங்கைய
மின்கட்டு பின்கட்டு
பதனாறு கட்டுகட்டி
காளியாயி கோயிலுக்கு
எங்க பெரியண்ணஞ்சாமியும்
சின்னண்ணஞ் சாமியும்
வேகம்மா வராங்க

அங்க வேகம்மா வந்து
பத்திர காளி
படசாஞ்ச நீலி (?)

நீலி கவுளி(?)
நித்திர சாம்புவாளி (?)

நீ சொன்னதொரு அடையாளம்
நாலுகாலு வெள்ளபாரு
நடுதல சுட்டிபாரு
பூவாலு குட்டிபாரு
அறவதடி நீளம்பாரு
எளுவதடி உயரம் பாரு
நீ சொன்னதொரு அடையாளம்
சரியாக இருக்குதுண்ணு
திலும்பியே பாரம்மா
நாங்க கடும்பலி குடுக்கவேணும்

நாங்க பொறந்தது ஒருதாவு
வளந்தது ஒரு எடமாம்
தாயிதந்த பேருகளும்
நாங்க தவுறாத கேக்கவேணும்

அட சின்னண்ணஞ் சாமியடா
நான் சொன்ன பெரகாரம்
கொண்டுகிட்டு வந்துட்டிங்க
இந்தாண்ட மூணுசுத்து
அந்தாண்ட மூணுசுத்து
என் சன்னதிய சுத்திநல்லோ
நீங்க கடும்பலி குடுங்கடா

அப்பிடின்றி சொல்லி
எங்க சின்னண்ணஞ் சாமி
கடும்பலி குடுத்துவிட்டு
அப்பனாச்சும் எங்க
பத்தினி உத்திமி பராசக்தி
எனக்குப் பொறந்தது ஒருதாவு
வளந்தது ஒரு எடமாம்

தாயிதந்த பேருகளும்
நீ தவறாத சொல்லம்மா

அட என்னோட கெடாயி
பாலமல பக்கத்தில
ஏளுநலல தாம்புக்கு
அடங்காத பட்டியது
வெங்கல/வெள்ளியில அடிச்சிருக்கும்
அது வெங்கல பட்டியது
ஆயிரங் கெடாயி
அச்சணம யிருக்குதப்பா
அந்த சிம்புக்கொரு போலீசி
தவறாத நிக்கும்
அநதலோட கெடாய
சன்னதிககுக் கொண்டுவந்து
இங்கே கடும்பலி குடுக்கவேணும்

அங்க அப்படின்று சொல்லி
அந்த பத்திரகாளி
உத்தரவு போட்டாளே
எங்க சின்னண்ணஞ் சாமிக்கு
சித்தான குட்டிக்கு
எட்டான பால்குடிக்கும்
ஏலமடி சின்னுக்கு
எங்க பெரியண்ணஞ் சாமியும்
பேசான் திருமுடியாம்
அவன் போட்ட சோத்த திம்பானே
வச்ச வேல செய்வானே
அவன் முட்டாள் பலராமன்

நீ பேசாத வாருமண்ணா
பால மல தேடி
நாம்ப பட்டிக்குப் போலாம் வாடா

அங்க இருவரெண்டு பேரும்
பாலமலதேடி போம்போது

சிம்புக்கொரு போலீசி
தவறாத நிக்குது
ஆயிரங் கெடாயிக்கும்
ஆயிரம் போலீசி
அச்சணமா நிக்குதங்கே

நான் சொல்லியே கேட்டியா சின்னண்ணா
அங்க பாருடா திலும்பி
எத்தன போலீசி
அங்க எதிர்பார்த்து நிக்குதடா

இந்த ஆயிரம் போலீசில
நீகெடாய ஆயிரங் கெடாய
உன்னால முடியுமாடா

அண்ணா என்னால முடியும்
நீ பேசாத வாருமுண்ணு
சின்னண்ணஞ் சாமியும்
சித்தான குட்டியும்
எட்டான பால்குடிக்கும்
எங்க ஏலமடி சின்னு

அவன் எதுத்து நல்ல போராடி
சண்டையும் செஞ்சுமல்ல
ஆயிரம் போலீசியே
அடிச்சி அதோகதம் பண்ணிவிட்டு
ஆயிரம் கெடாயும்
அவுரு ஓட்டிக்கிட்டு வராரு

அங்க ஓட்டிக்கிட்டு வரம்போது
அதுல ரெண்டு போலீசி
தெரியாம போயி
ஒரு ரிப்போர்ட்டு பண்ணிறிச்சி

அங்க ரிப்போட்டு பண்ணும்போது
ரிசிர்வு நல்ல பார்ட்டி

அங்கருந்து வந்து
பெரியண்ணாஞ் சாமியும்
அங்க சின்னண்ணாஞ் சாமியும்
இருவ ரெண்டு பேத்துக்கும்
வெலங்குமே போட்டு
கூட்டிக்கிட்டு போறாங்க

எங்க சின்னண்ணஞ்சாமி
சித்தான குட்டி
எட்டான பால்குடிக்கும்
ஏலமடி சினனு
சுப்பரீங்கு கோரட்டிலே
இருவரெண்டு பேரும்
இருக்குமும் போது

அங்க தாம்புர பெரியநாச்சி
கூடப்பொறந்த தங்க
நாம்ப ஒரு காயிதமும் எழுதுலாண்ணா

அங்க அப்படிண்ணு சொல்லி
தங்காளுக்கு ஒரு காகிதம் எழுதும்போது
அங்க காயிதத்தே பாத்தாளே

அங்க கூடப் பொறந்த தங்கா
காயிதத்தப் பாத்து
ஐயோ சிவனே
நம்ப அண்ணன
சின்னண்ணனும் பெரியண்ணனும்
அவுங்க வெலங்குகளும் போட்டு
சுப்பரீங்கு கோரட்டுக்கு
கொண்டுகிட்டுப் போனதால
நீங்க இருவ ரெண்டு பேரும்

அவளொரு அளகான பண்ணிகுட்டி
பச்சரிசி நல்லவெல்லம்
போட்டு பாங்கா வளத்துறா

நாயும் வளத்துறாளே
அந்தலோட தங்காளும்

நீங்க இருவரெண்டுபேரும்
நம்ப அரண்மனைக்குக் காவலுமா
எங்க சின்னண்ணஞ் சாமிய
பெரியண்ணஞ் சாமிய
நான் சுப்பரீங்கு கோர்ட்டுக்கு
போயிமே பாத்து வரேன்

அங்க அந்தலோட நாயி
நான் பாத்துக்கிறன் இன்று
வாசப்புடியில
அதுகாலியும் நீட்டிவிட்டு
அது படுத்துமே கிச்சாமே

நான் வீட்டயும் பாத்துக்க மாட்டன
கோட்டையும் பாக்கமாட்டன்
அப்படிண்ணு சொல்லி
அந்தலோட பண்ணிகுட்டி
காலடியபோயி
குறுக்க உளுந்துதாமே

எங் கூடப்பொறந்தவங்க
கோரட்டுல இருக்கும்போது
உனக்கென்னா அப்படிண்ணு சொல்லி
இந்தலோட பண்ணிய
ஒதைச்சாங்(?) கால்ல எட்டி ஒதைச்சிபுட்டு
தங்கா அளுது பொலம்பிகிட்டு
அவ கோரட்டுக்குப் போறாளே

அங்க அந்தலோட பண்ணி
மதிலய இடிச்சிது
மல்லிய வெரைச்சிது
கோட்டய இடிச்சிது
கொத்துபுளி வெரைச்சிதங்க

இடிச்சி நெரவிபுட்டு
அங்க பொன்னு வளநாடு
வீரமலநாடு
... ... சேந்து
இந்த மூணு நல்ல நாட்டுக்கு
போயிட்டு வீரமலைக்கு
அது வேகமா போகுதாமே

இந்தலோட தங்க
சுப்பரீங்கு கோரட்டுல கொண்டுபோயி
சாப்பாட்டு பாத்தரத்துல
அவ திருட்டு சாவிகுடுத்து
இந்தாடா சின்னண்ணா
இதுனாலும் நாங்குடுத்துட்டுப் போறம்பா
எப்பிடியோ தப்பி பொளச்சி

நீங்க இருவ ரெண்டுபேரும்
விடுதல ஆவறதுக்கு மின்ன
நம்ப சீமைக்கு வேகமா வாங்களண்டா

அப்படின்று சொல்லி
கூடப் பொறந்த தங்க
குடுத்திட்டு வந்ததும்
எங்க சின்னண்ணஞ்சாமி
சித்தான குட்டி
எட்டான பால்குடிக்கும்
எங்க ஏலமடி சின்னு

எப்பிடியோ தப்பிச்சி
அங்க பாலமல நாட்டுக்கு
பட்டிக்குப் போயி
மறுபடியும் ஆயிரங் கெடாயும்
அங்க சன்னதிக்குக் கொண்டுவந்து

எங்க பத்திர காளியம்மா
படசாஞ்ச நீலியம்மா

நீலி கவுளியம்மா
நித்திர கூம்புவாளி
நீ சொன்னதொரு அடையாளம்
ஆயிரங் கெடாயில்
அது கொம்பு பெருத்த கெடா
அப்படின்று சொல்லியம்மா
நீ திலும்பியே பாரம்மா

எங்க பத்திரகாளி
படசாஞ்ச நீலியம்மா
நீலி கவுளியம்மா
நித்திர சாம்புவாளி
இந்தாண்ட திலும்பிய பாத்துட்டு
அவ மேக்கதான் திலும்புன மொகம்
தெக்க திலும்பிகிட்டு
எண்ணாத எண்ணமெல்லாம்
அங்க பத்திரகாளி
எண்ணுறா ஒண்டில

இனி என்னடா பண்ணுறது
நாம்ப சொன்ன சொன்னபடி
சரியா நடத்துறாண்ணு
நாம்ப என்னாத்தான் அவனுக்கு
சொல்லப் போறோம் அப்பிடிண்ணு
சொல்லி எங்க பத்திரகாளி
சின்னண்ணனுககுப் பயந்துகிட்டு
அவ இந்தப் பக்கம் பாத்தமொகம்
அவ அந்தப்பக்கம் திலும்பியல்லோ
வெசனம் புடிச்சிகிட்டு
எங்க பத்திர காளியம்மா
படசாஞ்ச நீலியம்மா
அவ எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணுறாள ஒண்டியில

எங்க பத்திரகாளி
படசாஞ்ச நீலியம்மா
நீலி கவுளியம்மா
நித்திர சாம்புவாளி
இருவரெண்டு பேத்துக்கும்
சீக்கிரமா சொல்லவேணும்
பொறந்தது ஒருதாவு
வளந்தது ஒரெடமாம்
தாயிதந்த பேருகளும்
எங்களுக்குத் தவுறாத சொல்லம்மா
நீ தவறாத சொல்லாவிட்டா
கத்தி எடுத்திடுவோம்
கண்டந் துண்டம் செய்வேன்
ஈட்டி எடுத்துடுவேன்
இரு துண்டா வெட்டுவேன்
கொடல புடுங்குவன் ஒன்ன
கொடமால போடுவேன்

எங்க சின்னண்ணஞ்சாமி
என்ன கொடல புடுங்க வேண்டாம்
கொடமால போடவேண்டாம்
ஈட்டி எடுக்க வேண்டாம்
இரு துண்டா வெட்ட வேண்டாம்

அட என்னோட நாட்டுல
என்னென்ன வெளையுதிண்ணு
ஒனக்குத் தெரியுமடா

அங்க உன்னோட நாட்டுல
என்னென்ன வெளையுமிண்ணு
எந்தனுக்கு சொல்லுமடா

அங்க பத்திர காளி
என்னோட நாட்டுல
அவர வெளையும்

கொட்ட வெளையும்
... ... காய்க்கும்
அவர வெளையும
ஆமணக்கங் கொட்ட நாண்
அள்ளி தெளிப்பணம்மா

அட சின்னண்ணஞ் சாமியடா
சித்தான குட்டியடா
எட்டான பால்குடிக்கும்
ஏலமடி சின்னண்ணன்
என்னோட நாட்டுல
கரடி ஒறங்குதடா
காட்டான தூங்குதடா
சிங்கம் ஒறங்குதடா
சிறுபுலி தூங்குதடா
அன்னம் ஒறங்குதடா
அன்னபட்சி சீறுதடா
அங்க கரடிபிலி சிங்கம்
ஒன்ன கண்டாலே சீறுமடா

இருந்தாலும் இருக்கட்டும்
எங்க சின்னண்ணஞ் சாமியடா
சித்தான குட்டியடா
எட்டான பால்குடிக்கும்
ஏலமடி சின்னண்ணன்

அங்க பால மலமேல
அடி எங்களுக்கு பாலமலமேல
ஆளரவம் கேக்குது
வெள்ளியில அடிச்சிருக்கும்
வெங்கல கருடகம்பம்

அந்தலோட கருடகம்பம்
மானத்துக்கும் பூமிக்கும்
சரியா யிருக்கும் தம்பி

அந்தலோட கருடகம்பம்
சன்னதிக்கும் மின்னால
எடுத்து நிறுத்திபிட்டா
பொறந்தது ஒருதாவு
வளந்தது ஓரிடாமம்
தாயிதந்த பேருகளும்
நான் தவுறாதே சொல்லுறண்டா

எங்க சின்னண்ணஞ் சாமியே
பெரியண்ணஞ் சாமியே
பேசான் திருமுடியும்
அந்தலோட வேங்கைக்கு
அண்ணைக்குத் தகராறு செஞ்சியப்பா
இண்ணைக்குப் போயி நல்லோ
அந்தலோட கெருட கம்பம்
நீ தூக்கிக்கிட்டு வரவேணும்

நம்ப எளுவ தூட்டு பங்காளிங்க
வீட்டுக்கு வராது
தவுறாத கூப்பிட்டு
பாலமல தேடியல்லோ
அந்தலோட கெருடகம்பம்
நீ தூக்கியே வாருமண்ணா

எங்க பெரியண்ணஞ் சாமியும்
பேசா திருமுடியும்
எளுவ தூட்டுப் பங்காளிங்க
இந்தன பேருநல்ல
பாலமல தேடி
போயி ஆட்டியும் பாக்குறாங்க
அந்தலோட கெருடகம்பம்
ஆட்ட முடியவில்ல
அசக்கியும் பாக்குறாங்க
அவுங்களால அசக்க முடியவில்ல

எங்க சின்னண்ணஞ்சாமி
எட்டிப் பாத்துட்டு
எட்டிக் குதிச்சி
தோளயுந் தட்டி
தூக்கித் தோளுமேல வச்சிக்கிட்டு
அங்கருந்து வந்து
காளியாயி கோயிலுக்கு
அந்தாண்ட நிறுத்தி
சொன்னதோர் அடையாளம்

அங்க மானத்துக்கும் பூமிக்கும்
சரியா இருக்குது
வெள்ளில அடிச்சிருக்கும்
அது வெங்கல கெருடகம்பம்
இது ஏளுநல்ல தாவுக்கு
அகலநல்ல(?) கெருடகம்பம்
நீ திலும்பியே பாருமம்மா

அட ஆமடா சின்னண்ணா
எடுத்து நிறுத்துங்கடா
பொறந்தது ஒருதாவு
வளந்தது ஓரிடமாம்
தாயிதகப்பன் பேருகளும்
அடநான் தவறாதே சொல்லுறண்டா

எங்க சின்னண்ணஞ் சாமி
சித்தான குட்டி
என்னோட வனம்
ஒரு அலங்கார வனமப்பா

என்னோட வனத்துலே
ஏளுவனமுந்தான் தவறாத இருக்குதப்பா
அது நாலுகாலு வெள்ளையது
நடுதல சுட்டியது
ஒரு அளகான புரவியது

அந்த அளகான பொரவிய
புடிச்சியே கொண்டாந்து
என்னோட ஒப்பிச்சா
அதுல தாண்டா என்னோட உயிரு
நான்........

அந்த அளகான பொரவிய
என்னிடம் கொண்டு வந்து
நீங்க ஒப்பிச்சிப் புட்டிங்கண்ணா
பொறந்தது ஒரு தாவு
வளந்தது ஓரெடமாம்
தாயிதந்த பேருகளும்
சின்னண்ணா தவறாத சொல்லுறண்டா

அட, ஆயிரம் வண்டிகரி
ஆயிரம் வண்டி உமி
ஆயிரம் வண்டி இரும்பு
நீங்க மூணியும் ஒண்ணா போட்டு
மானத்துக்கும் பூமிக்கும்
ஒரு வேலா தெரட்டி
என்னோட வனத்த
நீங்க அளிக்கவா வந்தீங்கண்ணு
என்ன வனத்த அளிச்சாதான்
அந்தலோட பொரவி
ஒங்களுக்குக் கண்ணுக்குக் கெடைக்கும் தம்பி

அவுங்க அம்பதூட்டு ஆசாரிங்க
அந்தரத்த கண்டு
எங்க சின்னண்ணஞ் சாமி
சித்தான குட்டி
இந்திந்த மாதிரி
மானத்துக்கும் பூமிக்கும்
ஒருவேலு வேணும்
அந்த வனத்த அளிக்குநல்ல

நாங்க அம்பது பொல்காசி
ஒங்களுக்கு வெத்தில தாம்பூலம்
அத்த வச்சிக் குடுக்குறம்பா
காலப் பொளுது
வேளச்(?) சூரியன்
முட்டி வரதுக்குள்ள
அந்த அம்பால(?) வேலு
அளகான பொரவி
எங்களுக்குத் தயாரிச்சிக் குடுக்கவேணும்

அப்படிண்ணு சொல்லி
அந்த அம்பதூட்டு ஆசாரிங்ககிட்ட
எங்க சின்னண்ணஞ் சாமி
சித்தான குட்டி
எட்டான பால்குடிக்கும்
எங்க ஏலமடி சின்னு

இந்தாடா ஒங்களுக்கு
அம்பது பொல்காசி
மின்னியும் குடுக்குறன்
உன்னம் ஆயிரம் பொல்காசி
கொண்டுவந்து குடுத்திட்டு
நான் வேலெடுக்க வரவேணும்

அந்த வேலெடுக்க வரதுக்குள்ள
நீங்க அம்பான வேலு
அளகாக செஞ்சி
எனக்கு வைக்க வேணுமப்பா

அவன் அப்படிண்ணு சொல்லி
எங்க சின்னண்ணஞ்சாமி
ஆசாரிங்க கிட்ட
அம்பது பொல்காசி
குடுத்திட்டு வீட்டுக்குப் போயிட்டாரு

அந்த ஆசாரி அத்தனையும்
அம்பது ஊட்டுக்கார ஆசாரிங்க
இது நம்பளால முடியாதுண்ணு
அப்படின்று சொல்லியே
பத்திர காளியோட
அவுங்க வனத்துக்குப் போறாங்க

அந்த அம்பதூட்டு ஆசாரிங்க
புள்ளதான் குட்டியெல்லாம்
வெளக்கொளுத்தி வச்சி
விடியகாலம் ஆவறதுக்கு மின்னியே
அவுங்க பொறப்பட்டு போயிநல்லோ
மூங்கவனம் ஆரவனம்(?)
முருக மரிசி வனம்(?)
அந்த பொதையிலியும்
அவுங்கவுங்க புள்ளய வச்சிகிட்டு
அவுங்க தவுளிச்சி நிக்கிறாங்க

எங்க பத்திரகாளி
படசாஞ்ச நீலி
நீலி கவுளி
நித்திர சாமுவாளி
அங்க வனம்பாக்க போறாளே

அங்க வனம் பாக்க போம்போது
அம்பதூட்டு ஆசாரிங்க
பொதருக்குள்ள அளுதுபொலம்பிகிட்டு
அவுங்க குந்தியே இருக்குறாங்க

அட என்னடா மக்களே
என்னோட வனத்துக்கு
நீங்க வந்த காரணமென்ன

யாரோ ஒரு சின்னண்ணன்
பெரியண்ணஞ் சாமியும்

வெத்தல தாம்பூலம்
மானத்துக்கும் பூமிக்கும்
எனக்கு வேணுமே வேணுமிண்ணு
எங்கள அதிகாரம் செஞ்சிச்சாமே

ஆயிரம் வண்டி கரி
ஆயிரம வண்டி உமி
ஆயிரம் வண்டி இரும்பு
ஒண்ணா போட்டு
மானத்துக்கும் பூமிக்கும்
ஒருவேலா தெரட்டி

அங்க காலபொளுது
வர சூரியன்
முட்டி வெளிய வரதுக்குள்ள
அம்பான வேலு
அளகான பொளுது
எங்களுக்குக் குடுக்க வேணும் என்று சொல்லி
அந்தச் சின்னண்ணன் எங்களுக்கு
உத்தரவு போட்டாங்க

அம்மா பத்திரகாளி
எங்களால அடிக்க முடியாது
நாங்க என்னம்மா செய்வோம்
அந்த சின்னண்ணஞ் சாமி
கெடாக்கினையும் (?) செய்தா
நாங்க என்னா செய்வோமிண்ணு
உன்னோட வனத்துக்கு
நாங்க ஓடியே வந்தமம்மா

அட இருந்தாலும் இருக்கட்டும்
நீங்க பயப்படாத மக்கள
பாலமல பூதன்
பெரியமல பூதன்
அங்க சேர்வ மல பூதன்

அங்க பூதத்தக் கொண்டுவந்து
ஆயிரம் வண்டிகரி
ஆயிரம் வண்டி உமி
ஆயிரம் வண்டி இரும்ப போட்டு
அங்க பத்திரகாளி
படசாஞ்ச நீலி

அந்த பூதத்த உட்டு
அடிச்சி வதைச்சி
அடிச்சி நொறுக்கி
அந்தலோட ... ...
அளகான பொருளு
அம்பான வேலு

அந்த மானத்துக்கும் பூமிக்கும்
ஒருவேலா தெரட்டி
அம்பதூரட்டு ஆசாரிங்க
நட்டநடு வீதிலே
கொண்டு போயிமே போட்டுநல்ல

அட ஆருமடா மக்களா
என்னோட வனத்துல
நீங்க அளுது பொலம்புறீங்க
நட்ட நடு வீதியிலே
அந்த வேலுமே
மானத்துக்கும் பூமிக்கும்
சரியா உருட்டி
நான் போட்டுட்டு வந்தனடா
நீங்க போங்கடா மக்களா
(அவ்வளவுதான் முடிஞ்சதுங்க.)

பாடியவர்: வீரம்மா

குறிப்பு: ஒரு வீட்டின் உள்ளே பாடல் பதிவு செய்யப் பட்டது. பாடகர் முதலில் ஒருமுறை பாடினார்.

ஒலிப்பதிவுக் கருவியின் கோளாறு காரணமாகப் பாடல் பதிவாகவில்லை என்பது அறியப்பட்டது. தயக்கத்துடன மீண்டும் பாடச் சொன்னபோது பாடிய பாடல் இது. பாடகர் மீண்டும் பாட வேண்டியதை எண்ணி மலைத்தாலும் உற்சாகத்துடனேயே பாடினார். பாடும்போது வீட்டைச் சேர்ந்தவர்கள் தவிர ஓரிருவர் மட்டுமே அங்கு இருந்தனர். பாடலைத் தொடர்ந்து பாடகரிடம் கேட்ட கேள்விகளும் பாடகர் பதில்களும் வருமாறு:

* கத முடிஞ்சிட்டுதா ?
இவ்வளவுதான் நம்பளுக்குத் தெரியும்.

* இதுக்குமேல கத கெடையாதுங்களா?
'ஊகூம்'

* முதலில் கூறப்பட்ட கதைப் பகுதியை (வரி எண்கள் 118 வரை) நினைவூட்டி அதற்குப் பின்னர் என்ன நடந்தது என்று கேட்டபோது- 'அவ்வளவேதான் எனக்குத் தெரியும். அதுக்கு மேலே எனக்குத் தெரியவே தெரியாது. என்று அழுத்தமாகக் கூறினார்.

* 'கத வேற மாதிரி போயிடுதே' என்றபோது - 'அதான் சொல்றனே. அதுல ஒண்ணு இதுல ஒண்ணுதான் எனக்குத் தெரியும்பா. இதெல்லாம் வந்து வரலாறு எனக்குத் தெரியாது. இது வந்து பதினெட்டு நாளு பாரதம். இது எத்தன ஆயிரமோ. அதுல எப்படி சந்து பொந்துக்கெல்லாம் சிக்கலு வருதோ. அந்தப் பண்ணி குத்தப் போகும்போதும் பொங்க வைக்கப் போகும் போது ... அந்த தங்காகிட்ட போறதும், பொண்டாட்டி செத்ததும் பொண்டாட்டிங்க வந்து வர்றதும் புடிக்கறதும் அதெல்லாம் நம்புளுக்குத் தெரியாது. இதுதான் நயக்குத் தெரிஞ்ச கத. நான் இதெல்லாம் சொன்னன. அத சொல்ல மாட்டனா?'

* கதையைக் கற்றுக் கொண்ட விதம் பற்றிக் கேட்ட போது– 'அண்ணன்மார் கோயிலு எங்க புள்ள ஊட்டுக் குலதெய்வம். அங்க போவோம் வருவோம் ...... சின்னண்ணன் பெரியண்ணங் கத எல்லாம் குந்திக்கிட்டுப் பாடு றாங்க இல்ல. அப்பபோயி நாம்ப குந்திக்கிட்டு இருக்கு றமில்ல. அதெல்லாம் ஏன்...எங்க ஊட்டுக்காரரு படுத்து கிட்டு விடிய விடிய பாடுவாங்க. இந்தப்பாட்டு அப்ப கேட்டு கத்துக்கிட்டன்.'

(ஒலிப்பதிவு நாடா எண்:15)

20. தென்னார்க்காடு (வளையாம்பட்டு)

தம்பிடா தம்பிடா
தணிகுடிக்கும் பாலகரே
ஒக்கப் பொறந்தவனே
ஒக்கப் பொறந்தவனே

நீயுந்தான் நானுந்தான் அந்த
அயோத்தி மாந (கர்)
ஆலமரத்துங்கீய
மானுதான் வெட்டிக்கினு
வருவோமே யிண்ணுதான்
பொறபபட்டு போறான அந்நேரம்

ஐயோ போவுமந்த வேளையில
போவுமந்த வேளையில

ஆயிரநாள் பயணத்த அரை
நாயிக்குள்ள போயிததான்

அண்ணனும் தம்பியும்
இஞ்சிதான் வெட்டும்போது

ஆரடா தம்பிதம்பி எனக்குப்பசி
அகோரந்தரமா எடுத்துக்கிச்சி

நாயிக்குக் கூயி
எனக்குச் சுடுசாதம்

சீக்கிரம் வந்து ஆவணும்னு
அரும்புறானாம் அந்நேரம்

அரும்புமந்த வேளையிலே
அரும்புமந்த வேளையிலே
இங்கேருந்து போயி

அண்ணியாரே அண்ணியாரே—எங்க
அண்ணன் அரண்மனைய
ஆளவந்த தேவதைய

நாயிக்குச் கூயிதண்ணி
எங்கண்ணனுக்கு சுடுசாதம்
சீக்கிரம் எடுத்துக்கினு
வரச்சொன்னாங்க யண்ணயிண்ணு
கேக்குந்தான் போது
நானும் ஒங்க அண்ணனும்
ஆண்டதான் பண்டகத்த
நீயும் நானும் ஆண்டாத்தான்
சாப்பாடு குடுப்பன்
இல்லாட்டி போனா
குடுக்க மாட்டான் யிண்ணுதான்
தகராறு பண்ணுறா

ஐய பண்ணுமந்த வேளையிலே
பண்ணுமந்த வேளையிலே
ஐயய்ய ஐயய்ய
அவதிவந்து நேர்ந்துச்ச
அண்ணந்தான் பொண்டாட்டி
அபசாரம் பண்ணச் சொல்லுறாளே
வாணாங்க அண்ணியாரே எங்க
அண்ணந்தான் பாத்துட்டா
இஞ்சி வெட்டும் கத்தியால
இருதுண்டமா ஆக்கிடுவான்
மானுவெட்டும் கத்தியால
மறிச்சிக் கொத்திப் போட்டிடுவான்
சாப்பாட்ட குடுங்க அண்ணி நான்
எடுத்துக்கினு போறண்ணு
கேக்குந்தான் போது

ஐயய்யோ ஐயய்யோ
நானும் ஒங்க அண்ணனும்
ஆண்டதான் பண்டகத்த
நீயும் நானும் ஆண்டாதான் நான்
சாப்பாடு குடுப்பன்

இல்லாட்டிப் போனா
குடுக்கமாட்டன் யிண்ணுதான்
தகராறு பண்ணுறாளே
இவுங்க ரெண்டு பேரும்
வகுத்தல (?) செய்யும்போது
அவன் அண்ணந்தாங் காரன்
என்னதான் பண்ணான்

பருந்தில வட்டமிட்டு
பாருவை யிட்டுப்புட்டு
ஆயிரநாள் பயணத்த

அர நாயிக்குள்ள போயிதான் அந்த
அயோத்தி நகர
ஆலமரத்துங் கீய
மானவளச்சிக்கினு
நிக்குறானாம் அந்நேரம்
இவன் ஆயிரநாள் பயணத்த
அரநாயிக்குள்ள போயித்தான்

வாங்கள யண்ணா
சாப்பிட யிண்ணு
கூப்பிடும் போது

தம்பிடா தம்பிடா
தணிகுடிக்கும் பாலகரே
அயோத்தி மாந (கர)
ஆலமரத்துங் கீய வச்சிப்பிட்டு – அந்த
மான வளையண்டா

மான வளைச்சண்டா
மான வளைச்சண்டா
யண்ணாடா யண்ணாடா
மான வளைச்சண்டா
மரத்துங்கீய நிண்ணண்டா
மானுமேல் பட்டு
மானுகுட்டிமேல் பட்டு

பையன் விலாவில பட்டு
விலுக்கு விலுக்குண்ணு
ஆலமரத்து அடிவேருல

ஒதைச்சிக்கினு கிடக்கும்போது
இவன் மானதான் தூக்கிக்கினு
வீட்டுக்கு வரானாம் அந்நேரம்

ஐய வருமந்த வேளையில
வருமந்த வேளையில
அங்கருந்து வந்துதான்
வாசபடில நிண்ணுகினு

மான எறக்கண்டி
சதிகார வேடச்சி
பழிகார வேடச்சி
கொலகார வேடச்சி
என்தம்பி போன
படுகளத்த நான் சொல்லி வாரன்
நான் மான எறக்குனண்டா
சதிகார வேடா
பழிகார வேடா
கொலகார வேடா
நீங்க இருவரும் போயி
ஒருவன் வந்த ஐயோ சாயலென்னா

அடி சோத்தயும் ஆக்கண்டி
சதிகார வேடச்சி
பழிகார வேடச்சி
கொலகார வேடச்சி
என் தம்பி போன
படுகளத்த நான் சொல்லிவாரன்

நான் சோத்தயும் ஆக்குனண்டா
சதிகார வேடா

பழிகார வேடா
கொலகார வேடா
நீங்க இருவரும் போயி
ஒருவன் வந்த ஐயோ சாயலென்னா

நீ கொயம்பயும் காச்சண்டி
சதிகார வேடச்சி
பழிகார வேடச்சி
கொலகார வேடச்சி
என் தம்பி போன
படுகளத்த நான் சொல்லிவாரன்

நான் கொயம்பயும் காச்சனண்டா
சதிகார வேடா
பழிகார வேடா
கொலகார வேடா
நீங்க இருவரும் போயி
ஒருவன் வந்த ஐயோ சாயலென்னா

நீ பாயயும் போடண்டி
சதிகார வேடச்சி
பழிகார வேடச்சி
கொலகார வேடச்சி
என் தம்பி போன
படுகளத்த நான் சொல்லிவாரன்

நான் பாயயும் போட்டண்டா
சதிகார வேடா
பழிகார வேடா
கொலகார வேடா
நீங்க இருவரும் போயி
ஒருவன் வந்த ஐயோ சாயலென்னா

வெத்தல குடண்டி
சதிகார வேடச்சி
பழிகார வேடச்சி
கொலகார வேடச்சி

என்தம்பி போன
படுகளத்த நான் சொல்லிவாரன்

வெத்தல குடுத்தண்டா
சதிகார வேடா
பழிகார வேடா
கொலகார வேடா
நீங்க இருவரும் போயி
ஒருவனவந்த ஐயோ சாயலென்னா

ஐய எச்சி ஓட்ட எடுத்தாடி
சதிகார வேடச்சி
பழிகார வேடச்சி
கொலகார வேடச்சி
என்தம்பி போன
படுகளத்த நான் சொல்லிவாரன்

எச்சி ஓட்ட எடுத்தண்டா
சதிகார வேடா
பழிகார வேடா
கொலகார வேடா
நீங்க இருவரும் போயி
ஒருவன் வந்த ஐயோ சாயலென்னா

நீபடுத்து நித்ரசெய்யண்டி
சதிகார வேடச்சி
பழிகார வேடச்சி
கொலகார வேடச்சி
என் தம்பி போன
படுகளத்த நான் சொல்லிவாரன்

நான் படுத்து நித்ரசெய்தண்டா
சதிகார வேடா
பழிகார வேடா
கொலகார வேடா
நீங்க இருவரும் போயி
ஒருவன் வந்த ஐயோ சாயலென்னா

ஐய சாணியும் போடண்டி
சதிகார வேடச்சி
பழிகார வேடச்சி
கொலகார வேடச்சி
என்தம்பி போன
படுகளத்த நான் சொல்லிவாரன்

நான் சாணியும் போட்டண்டா
சதிகார வேடா
பழிகார வேடா
கொலகார வேடா
நீங்க இருவரும் போயி
ஒருவன் வந்த ஐயோ சாயலென்னா

நீ தண்ணியும் மொள்ளண்டி
சதிகார வேடச்சி
பழிகார வேடச்சி
கொலகார வேடச்சி
என் தம்பி போன
படுகளத்த நான் சொல்லி வாரன்

தண்ணிக் கொடுத்த கொண்டுபோயி
கெணத்தங்கரையில வச்சிபுட்டு

குருவிய குருவிய
குருவிக்கி ராசகொலம்
கத்த குமிடி காரன்
கயிலம்பூ வேட்டிக்காரன்
செக்கச் செவந்திருப்பான்
செட்டிமவன் போலருப்பான்
மயிரா மயிரழகன்
மைகுந்த காரன்
என் மச்சினர ஐயா நீங்க கண்டதுண்டா

நான் போவக்கிலை கண்டதுண்டு
வ்ரக்கில நான்காணேன்

காக்காய காக்காய
காககாய்க்கு ராஜகொலம்
கத்த குமிடிகாரன்
கயிலம்பூ வேட்டிக்காரன்
செக்கச் செவநதிருப்பான்
செட்டிமவன் போலருப்பான்
மயிரா மயிரழகன்
மைகுந்தகாரன்
என் மச்சினர ஐயா நீங்க கண்டதுண்டா

நான் போவக்கிலை கண்டதுண்டு
வரக்கில நான்காணேன்

கெருடபகவானே கெருடபகவானே
கெருடபகவானுக்கு ராஜகொலம்
கத்த குமிடிகாரன்
கயிலம்பூ வேட்டிக்காரன்
செக்கச் செவந்திருப்பான்
செட்டிமவன் போலருப்பான்
மயிரா மயிரழகன்
மைகுந்த காரன்
என் மச்சினர ஐயா நீங்க கண்டதுண்டா

மானுமேல் பட்டு
மானுகுட்டிமேல் பட்டு
பையன் விலாவிலபட்டு
விலுக்கு விலுக்குண்ணு
ஆலமரத்து அடிவேருல
ஒஞ்சிகினு கிடக்கிறாண்ணு
சொல்லுது அந்நேரம் கெருட பகவான்

இவ இங்கிருந்து போயிதான்
அயுதுதான் உயுந்துதான்
பெரளுந்தான் போது
செத்துப்போன பொணத்துக்கு
உயிருநெல வந்து
ஐயய்யோ அண்ணியார

அண்ணியார அண்ணியார
என் அண்ணன் அரண்மனைய
ஆளவந்த தேவதையே
செத்த பொணம் வந்தாக்கா
சீமைக்கி ஆகாதண்ணி
மாண்டபொணம் வந்தாக்கா
மண்ணுக்கு ஆகாதண்ணி
என்ன சந்தன கட்டவெட்டி
சேத்து அடுக்கிபுடு
குங்கும கட்ட வெட்டி
கூட்டி அடுக்கிபுடு
தூக்கிதான் வச்சி
கொளுத்திதான் புட்டு
நீங்கபோயி வாயுங்க அண்ணியிண்ணு
சொல்லுறானே அந்நேரம்

சந்தனகட்ட வெட்டி
சேர அடுக்கிப்புட்டா
குங்கும கட்ட வெட்டி
கூட்டி அடுக்கிப் புட்டா
தூக்கி வைக்க ஆளில்லாத
அந்த அயோத்தி மாந(கர)
ஆலமரத்துங் கீய
அயுதுதான் புலம்பிக்கினு
ஒக்காந்து யிருக்கிறா

நாலு இசும்பலுகார தோட்டிதான் பறையன்
நாலுதான் பேரும்
இசும்பலுபணம் சர்க்காருக்கு
செலுத்ததான் போறானாம் அந்நேரம்

எங்கியோ பொண்கொரலு அகப்படுது
நாம்ப அந்த அயோத்தி மாந(கர)
ஆலமரத்துங் கீயபோயி
பாத்துபுட்டு வருவோமின்னு
நாலுதான் பேரும்

அங்கருந்து ஓட்டமா
வந்துதான் பாக்குறாரே
ஐய பாக்குமந்த வேளையில
பாக்குமந்த வேளையில
ஐயய்யோ சாமிகளா
ஒங்கநாலுதான் பேருக்கும்
நான் பொண்டாட்டியா இருக்குறனே
இந்த பொணத்த தூக்கி
அந்த சந்தணகட்ட மேல
சேத்து அடுக்கிடுங்க
அந்த குங்கும கட்டமேல
கூட்டிதான் வச்சிடுங்க
ஒங்க நாலுதான் பேருக்கும்
நான் பொண்டாட்டியா இருக்குறண்ணு
அவ கெஞ்சுறாளம்

பாத்தா பச்ச பாப்பாத்தியாட்டம் இருக்குறாளே
இவள உட்டுப்புட்டு
எப்படிடா போறது
அந்த சந்தணகட்ட மேல
சேத்து அடுக்கிடுவோம்
குங்கும கட்டமேல
கூட்டி அடுக்கிடுவோம்
நம்பளுக்கு கால்மணி நேரமாச்சும்
பொண்டாட்டியா இருக்கமாட்டாளாண்ணு நெனச்சிக்கினு

அந்த சந்தன கட்டமேல
தூக்கிதான் வச்சிதான்
நெருப்பதான் காட்டிப்புட்டு
இவள சேத்து அஞ்சிதான் பேரும்
பொறப்பட்டுதான் போறாங்க அந்நேரம்

ஆலமரம் அம்மாந்தூரம் போயிதான்
என்னதான் சொன்னாதான்
ஐயய்யோ சாமி

கொஞ்சம் நில்லுங்கசாமி
நான் பணப்புட்டிய
ஆலமரத்தடி வேருங்கிய
வச்சிபுட்டு வந்துட்டன்
நான் போயி பணப்புட்டிய
எடுத்துக்கினு வந்துடுறன்
நாம அஞ்சிதான் பேரும்
பொறப்பட்டுதான் போவுலாண்ணு
அவளூட்டமா ஓடியாந்து சேருறாளோ

வந்து சேருந்தான் போது
இவள கண்ட ஒடனேயே
எரிஞ்சிகினு கெடந்த பொணம்
அமிஞ்சி கெடக்குது
இவ சுத்து வலமா வந்தா
சூரியன தெண்டனுண்ணா
யக்கம் வலமா வந்தா
பகவான தெண்டனுண்ணா
நானும் எங்க அம்மாளும்
பத்தினியா இருந்தா
இந்த அமிஞ்சிபோன பொணம்
எரியணுமிண்ணு
விழுந்துதான் குமிட்டாளாம்

குமிடும் அந்த வேளையிலே
அவமார்கண்டத்து நேரா
அன்னக்கி சொன்ன சத்தியம்
இன்னக்கி விடுதலையாவுது
இண்ணுதான் போயிதான்
விழுந்தாளாம் அந்நேரம்
அபப ரெண்டுதான் பேரும்
வேவுறாங்க வேவுறாங்க
நான் அங்க போயிபாக்க நேரமில்ல

பாடியவர்: *பாஞ்சாலை*

குறிப்பு: *காலையில் வயல் வேலைக்குச் செல்லுமுன் பாடகரிடம் பாடல் பதிவு செய்யப்பட்டது. ஊர் மக்கள் 40, 50 பேர் கூடியிருந்து பாடலை ஆர்வத்துடன் கேட்டனர். பாடல்பற்றிப் பாடகர் கூறியபோது நடவுக்காலங்களில் ஒருவரே தனித்துப் பாடும் பாடல் இது என்றும் ஏனையோர் செவிமடுப்பர், திரும்பப் பாடுதலில்லை என்றும் கூறினார். பல பகுதிகள் உரைநடையாகவே உள்ளதைக் காணலாம். ஆனால் பாடல் முழுக்க இராகமாகவே பாடிக்காட்டப்பட்டது. விரைந்து பாடப் பட்ட இப்பாடல் ஒருவித சோக இசையாக இருந்தது.*

வளையாம்பட்டிலும் அதனைச்சுற்றியுள்ள கிராமங்களிலும் இக்கதைப்பாடல் மிகுதியாக வழங்கப்படலாம் என்ற நம்பிக்கையில் 11. 1. '84 அன்று மீண்டும் திருமதி பாஞ்சாலையைச் சந்தித்து (களத்து மேட்டில் பணி செய்து கொண்டிருந்த போது வயல் சொந்தக் காரரின் அனுமதியுடன் இச் சந்திப்பு நிகழ்ந்தது) விவரம் கேட்கப்பட்டது. அவர் தந்த விவரத்தின்படி இக்கதைப் பாடலை அறிந்தவர்கள் அப்பகுதியில் யாரும் இல்லை என்பதை அறியமுடிந்தது. அவரையே மீண்டும் அக்கதைப் பாடலைப் பாடச் செய்து பதிவுசெய்யப் பட்டது. (ஒலிப்பதிவு நாடா எண்: 5) பாடல் கதையில் பெரிய மாற்றம் ஏதுமில்லை என்பதை அறிய முடிந்தது. 1978-இல் பதிவு செய்யப்பட்ட பாடலே மேலே தரப்பட்டுள்ளது.

21. தென்னார்க்காடு (செல்லங்குப்பம்)

* மானெங்க மயிலெங்க சாமி மயிலெங்க
கூடவந்த தோழரெங்கசாமி தோழரெங்க
வில்லெங்க வில்லெங்க சாமி தமபிஎங்க
சுட்டுவந்த மானுஎங்க சாமி மானுஎங்க

நான் என்ன செய்வேன் ஏதுசெய்வேன் சாமி ஏது செய்வேன்
நான் எங்கேகண்டு தேடப்போறன்சாமி என்பொறப்ப

வில்லுஎங்க மானுஎங்க சாமி மானுஎங்க
எங்கூடவந்த தோழரெங்கசாமி தோழரெங்க

வெந்நீரு வையம் பொண்ணே கேள் வையம் பொண்ணே
வெசனப்பட சொல்லிவரன் பொண்ணே சொல்லிவரன்
வெந்நீரு வச்சிட்டந்தான் சாமி வச்சிட்டந்தான்
வெசனப்பட சொல்லிவாங்க சாமி சொல்லிவாங்க

சாதஞ்சமயம் பொண்ணே கேள் சமயம் பொண்ணே
ஒன்சஞ்சலத்த சொல்லிவரன் கேள் சொல்லிவரன்
சாதஞ்சமச்சனய்யா சாமி சமச்சனய்யா
சஞ்சலத்த சொல்லி வாயன்சாமி சொல்லிவாயன்

பாயப்பெருக்கிப்போடு பெண்ணே பெருக்கிப்போடு
என்பாவ கொற சொல்லிவரன் கேள் சொல்லிவரன்
பாயநான் போட்டுபுட்டன் சாமி போட்டுபுட்டன்
பாவகொற சொல்லிவாங்க சாமி சொல்லிவாங்க

மானெங்க மயிலெங்க சாமி மயிலெங்க
ஒங்கூடவந்த தோழரெங்கசாமி தோழரெங்க

ஈசன் செடியிலியும் பொண்ண செடியிலியும்
இருண்ட நல்ல வனத்திலியும் பொண்ண வனத்திலியும்
நான் மானுயிண்ணு தெரியாம பொண்ண தெரியாம
நான் மச்சானியும் சுட்டுவந்தன்சாமி சுட்டுவந்தன்

நான் என்னாசெய்வன் ஏதுசெய்வன் சாமி ஏது செய்வன்
** நான் எங்க கண்டு தேடப்போறன்சாமி என்பொறப்ப

(கடைசியாகத் தேடிக்கொண்டு காட்டுக்குச் செல்கிறாள். பிணத்தைக் கண்டுபிடித்து அதன்மேல் விழுந்து இறக்கிறாள்.)

நான் என்ன செய்வேன் ஏதுசெய்வேன் தம்பி
ஏதுசெய்வேன்
நான் எங்ககண்டு தேடப்போறன் தம்பி தேடப்
போறன்
நான் உழுந்து அழுதனத்தான் தம்பி அழுதனத்தான்
அப்போவதான் மரணமானன் கண்ணே மரணமானன்.

* *பாடல் முடிவில் பாடகர் கூறிய கதை வருமாறு:*

'மச்சானை (மனைவியின் தம்பி) அழைத்துக் கொண்டு வில் அம்புடன் மான் வேட்டைக்குச் செல்கிறான் ஒருவன். ஈச்சன் செடியிலும் இருண்ட வனத்திலும் மானென்று நினைத்து மச்சானைச் சுட்டுவிடுகிறான் அவன். தனியாக வீடுதிரும்பும் அவனிடம் அவன் மனைவி கூடவந்த தோழ ரெங்கே என்று கேட்கிறாள்.'

** *பாடல் இதுவரைதான் கூறப்பட்டது. கதை முடிவு என்ன என்று கேட்ட பின்னர் இறுதியில் உள்ள நான்கு அடிகள் பாடப்பட்டன.*

பாடியவர்: சிவபாக்கியம்.

குறிப்பு: *கூரை வீடு ஒன்றின் முன்புறம் சுமார் 30 பெண்கள் (ஆண்கள் சிலர்) கூடியிருக்கப் பாடகர் பாடினார். குழுமியிருந்தோர் பாடலை விரும்பிக்கேட்டனர். தன்னுடைய பனிரெண்டாவது வயதில் வயல் வேலையின்போது தன் சின்னமாமியாரிடம் இப்பாடலைக் கற்றுக் கொண்டதாகப் பாடகர் கூறினார். அவர் சின்னமாமியார் தற்போது உயிருடன் இல்லை. இப்பாடலைத் தெரிந்தவர் வேறு யாரும் தனக்குத் தெரிந்தவரை இந்த ஊரிலோ பக்கத்து ஊர்களிலோ இல்லை என்று பாடகர் கூறினார்.*

(ஒலிப்பதிவு நாடா எண்.5)

22. தஞ்சை (வேட்டங்குடி)

அண்ணனும் தம்பியும் மானை வளைக்கக் காட்டுக்குச் செல்கிறார்கள்.

அங்கே மானை வளைக்காமல் பந்து ஆடுகின்றனர்.
பந்து அண்ணன் அரண்மனைக்கு ஓடி அண்ணியின் பஞ்சணை மெத்தையில் விழுகிறது.
பந்து காணாமல் போகவே தன் அரண்மனைக்குள் ஓடியிருக்கும் எனக் கருதிய அண்ணன் தம்பியை அனுப்பி அண்ணியிடம் பந்து வாங்கிவரச் சொல்கிறான்.

தயங்கிக் கொண்டே செல்லும் தம்பி அண்ணியிடம்பந்து கேட்கிறான்
'இரண்டாம் படிதாண்டி அரண்மனைக்குள் வந்தால்தான் பந்து தருவேன்' என்று அண்ணி கூறுகிறாள்.

'படி தாண்டி அரண்மனை வந்தால் அண்ணன் தப்பாக எண்ணிக் கொலை செய்வானே' எனக் கூறித் தம்பி மறுக்கிறான்.
தன்னுடைய பஞ்சணை மெத்தையில் ஏறி "அகடபகட" ஆடினால் தான் தருவேன் என்று அண்ணி வற்புறுத்துகிறாள்.
அவன் சென்று ஆடுகிறான்.

நேரங்கடந்து பந்தை எடுத்துக் கொண்டு காடு திரும்புகிறான்.
அண்ணன் சந்தேகித்து நேரங்கடந்ததற்கான காரணம் கேட்கிறான்.
தம்பி நடந்ததைக் கூறுகிறான்.
'நான் ஏறிய பஞ்சணையில் நீ எவ்வாறு ஏறலாம்' எனக் கூறிய அண்ணன் கோபமுறுகிறான்.
பின்னர் அண்ணன் தம்பியை மான் பிடிக்க அழைக்கிறான்.
தம்பி மானை விரட்டிக் காளியம்மன் கோயிலுக்கு அனுப்புகிறான்.

அண்ணன் அம்பைவிட்டுத் தம்பியைக் கொல்கிறான் (மானு படுல; தம்பி பட்டுட்டான்).

அண்ணன் காட்டில் ஓடிய ஒரு மான்குட்டியை எடுத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்புகின்றான்.

அவன் மனைவி 'உன் தம்பி எங்கே' என்று கேட்கிறாள்.

ஒருபுடி மண்ணள்ளி ஓரம்பு திட்டயிலே
மானெங்கோ மயிலெங்கோ
கொண்டு போன அம்பு எங்கோ
கூடவந்த தம்பி எங்கோ

(இவ்வாறு பத்துவரை பாடப்பட்டது)

'சமையல் செய்; கூறுகிறேன்' என்று அவன் கூறுகிறான். சமைத்துப் பரிமாறி பின்னர் அவள் சொப்புக் குடம், நெருப்புப் பெட்டி ஆகியவற்றை எடுத்துக் கொண்டு வெளியில் கிளம்புகிறாள்.

மாடு மேய்க்கும் சிறுவர்களிடம் 'சீராளன் சிறுத்தொண்டன் மச்சினன்' சென்ற பாதையைக் காட்டுமாறு கேட்கிறாள்.

'மானைக் கொல்வதாக உன் கணவர் உன் மச்சினனைக் கொன்று விட்டார்; அவரை காக்கா, கழுகு புடுங்கித் தின்கிறது' என்று அவர்கள் கூறுகின்றனர்.

அவள் கோயிலருகில் கிடக்கும் பிணத்தைப் பார்த்துப் புலம்புகிறாள்.

'கையில் கழுத்தில் உள்ள ஆடை ஆபரணங்களைத் தருவதாகக் கூறி மாட்டுக்காரச் சிறுவர்களின் உதவியுடன் விரட்டி பொறுக்கி அடுக்கி அதில் அவனைத் தூக்கி வைத்து எரிக்கிறாள். பிறகு அதே நெருப்பில் அவள் 'உடன் கட்டை' ஏறி இறக்கிறாள். பின்னர் அண்ணன் தன் மனைவியைத் தேடி வருகிறான்.

மாட்டுக்காரச் சிறுவர்கள் நடந்ததைக் கூறுகின்றனர்.

அவன் எரிந்தவர்களின் சாம்பலை அள்ளிக் கொட்டிவிட்டு வீடு திரும்புகின்றான்.

வீடும் சாம்பலாகிக் கிடக்கிறது.

அவன் காட்டை ஆளச் (சாமியாராகச்) செல்கிறான்.

கூறியவர்: தனபாக்கியம்.

குறிப்பு: கம்பு அறுவடை செய்துகொண்டிருந்தவரை வயலிலேயே சந்தித்துக் கதை கேட்கப்பட்டது. நான்கு பேர் உடனிருந்தனர். தாத்தாவிடமிருந்து (அம்மாவின் அப்பா) கற்றுக் கொண்டதாகக் கூறினார். தன் அம்மாவுக்கும் தெரியும் என்றும் ஆனால் அவர்கள் யாரும் உயிருடன் இல்லை என்றும் கூறினார்.

பிறந்த ஊர்: கொத்தனூர், மாயவரம் வட்டம். தஞ்சை மாவட்டம்.

அண்ணி-கொழுந்தன் பகட ஆடுவதைப் பற்றி விரிவாகக் கேட்டபோது 'அவுங்க என்ன ஆடுனாங்களோ' என்று கூறிவிட்டார். இறுதியில் 'தப்பு செய்யாததால தான் வெந்தாங்க; இல்லண்ணா தீயில வேவுவாங்களா' என்று கூறினார். 'தனக்கு உரைநடையாகத்தான் கூறப்பட்டது; பாடலாக அல்ல' என்றும் கூறினார்.

கதை பதிவு செய்யப்படவில்லை. கேட்டு எழுதிக் கொள்ளப்பட்டது.

23. தருமபுரி (ஊத்தங்கரை)

காட்டுக்குப் போன தம்பி
என்னென்ன அடியைக் கண்டே
புழுதியிலே அடியைக் கண்டேன்-ரெண்டு
புள்ளி மானும் மேயக் கண்டேன்
சேத்திலே அடியைக் கண்டேன்-ரெண்டு
செல்லமானும் மேயக்கண்டேன்
சின்ன வீட்டைத் திறந்தல்லவோ
சின்னம்பை எடுத்துவாரும்
பெரிய வீட்டைத் திறந்தல்லவோ
பெரிய அம்பை எடுததுவாரும்
அண்ணியாரே அண்ணியாரே-எங்கள்
அண்ணனுக்குத் தேவியாரே
சின்ன வீட்டைத் திறந்தல்லவோ
சின்னம்பை எடுத்துத் தாரும்
பெரிய வீட்டைத் திறந்தல்லவோ
பெரிய அம்பை எடுத்துத் தாரும்
பாலு அடுப்பு மேலே-உங்கள் அண்ணன் பெத்த
பாலகனும் மடிமேலே
கூழு அடுப்புமேலே-உங்கள் அண்ணன் பெத்த
குழந்தையதும் மடிமேலே
சோறு அடுப்பு மேலே - உங்கள் அண்ணன் பெத்த
சுந்தரனும் மடிமேலே
சாறு அடுப்பு மேலே - உங்கள் அண்ணன் பெத்த
சந்திரனும் மடிமேலே
எந்நேரம் போன தமபி-நீ
இந்நேரம் ஆன தென்ன
படிக்காரப் பறையருக்கு
படியளக்க நேரமாச்சு
கூலிக்காரப் பறையருக்கு
கூலியளக்க நேரமாச்சு
மானே வளைச்சு வாரும்
மதுர மரம் சேர்ந்து வாரும்

அந்த மானோடும் ஓட்டமெல்லாம்
நான் ஓடி வெல்லுவேனோ
முசலை வளைச்சி வாரும்
முருக்க மரம் சேத்து வாரும்
மானுக்கு பட்ட அம்பு-உனக்கு
மார்பிலே பட்டதடா
முசலுக்கு பட்ட அம்பு-உனக்கு
முதுகிலே பட்டதடா
அந்த மானை எடுப்பேனா-தம்பி
உன்னை எடுப்பேனடா
என்னை எடுத்துப் போனால்–மதுரையில் கீரப் பெண்களும்
பகவேட்டை என்று சொல்லுவார்கள்
மானை எடுத்துச் சொல்லும்-என் அண்ணாவே
நீர் போய் சொல்லும்
இருவரும் சென்றவங்க-என்
மைத்துனரைக் காணவில்லை
நட்ட நடுக்காடு
மதுரமரம் ஓரத்திலே
மானுக்குப்பட்ட அம்பு-உன்
மைத்துனர்க்குப் பட்டதடி
ஆடுமேய்க்கும் அண்ணன்மாரே-என்
மைத்துனரைக் கண்டிங்களா
குட்டி மேய்க்கும் அண்ணன்மாரே-என்
கொழுந்தனாரைக் கண்டிங்களா
மதுரமரம் ஓரத்திலே-உன்
மைத்துனரும் மடிந்தாரம்மா
சத்தனக் கட்டை வெட்டி-அண்ணன்மாரே
சதுராகக் கூட்டிடுங்கோ
குங்குமக் கட்டைவெட்டி-அண்ணன்மாரே
கும்பலாய்க் கூட்டிடுங்க
கட்டைமேலே மைத்துனரை
தூக்கியல்லோ வைத்திடுங்க
சுத்தி நெருப்புகளும்
அண்ணன்மாரே வைத்திடுங்க

என்னிடம் கீர நகைகளெல்லாம்
உங்களிடம் சேர்த்திட்டேன்
கூடியெரியும்போது அவள்
எகிறியே விழுந்தாளாம்

ஆதாரம்: ச. வரதராசுலு, (1979:237-40).

குறிப்பு: 'தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டாரத்தில் சுருங்கிய வடிவில் வழங்கப்படும் கதைப்பாடல் இது' என்று சேகரிப்பாளர் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

24. தருமபுரி (ஆதாழியூர்)

ஒருசால் புளுதியிலே
ஒருசால் புளுதியிலே
ஒருருமானு மேயக்கண்டேன்
என்சின்னப்புள்ள நல்லத்தமபி
சின்னப்புள்ள நல்லத்தம்பி
ஓடி வளையண்டா
ஓடி வளையண்டா
ஒபாயமார் கூவண்டோ

அட மானோடும் பள்ளமெல்லாம்
மானோடும் பள்ளமெல்லாம்
நானோட வல்லுவனா

அடி ரெண்டாம் புளுதியிலே
ரெண்டாம் புளுதியிலே
ரெண்டுரு மானு மேயக்கண்டேன்
அட சின்னப்புள்ள நல்லத்தம்பி
சின்னப்புள்ள நல்லத்தம்பி
ஓடி வளையண்டோ
ஒபாயமார் கூவண்டோ

அட மூணாம் புளுதியிலே
மூணாம் புளுதியிலே
மூணூரு மானு மேயக்கண்டேன்
அட சின்னபுள்ள நல்லதம்பி
சின்னபுள்ள நல்லதம்பி
ஓடி வளையண்டோ
ஒபாயமார் கூவேண்டா

(கோபா...... ?
ஓடிவளையண்டா ஒபாயமார் கூவேண்டா?
ஒபாயமாண்ணா?
உபாயமா-நிதானமா (அருகிருந்த பெண்ணின் விளக்கம். பாடகர் ஒப்புதல்))

அடி நாலாம் புளுதியிலே
நாலாம் புளுதியிலே
நாலூரு மானு மேயக்கண்டேன்
அடி ஓடி வளையேண்டா
ஓடி வளையேண்டா
சின்னப்புள்ள நல்லதம்பி
ஓபாயமார் கூவண்டா

அட மானோடும் பள்ளமெல்லாம்
மானோடும் பள்ளமெல்லாம்
நானோட வல்லுவனா

அட அஞ்சாம் புளுதியிலே
அஞ்சாம் புளுதியிலே
அஞ்சூருமானு மேயக்கண்டேன்
அட சின்னபுள்ள நல்லதம்பி
சின்னப்புள்ள நல்ல தம்பி
ஓடி வளையேண்டா
ஓடிவளையேண்டா
ஓபாயமார் கூவண்டா

அட மானோடும் பள்ளமெல்லாம்
மானோடும் பள்ளமெல்லாம்
நானோட வல்லுவனா

அட ஆறாம் புளுதியிலே
ஆறாம் புளுதியிலே
ஆறூர் மானுமேயக்கண்டேன்

அட ஓடி வளையேண்டா
ஓடி வளையேண்டா
சின்னபுள்ள நல்லதம்பி
ஓபாயமார் கூவேண்டா

அட மானோடும் பள்ளமெல்லாம்
மானோடும் பள்ளமெல்லாம்
நானோட வல்லுவனா

அட ஏளாம் புளுதியிலே
ஏளாம் புளுதியிலே
ஏளுரு மானு மேயக்கண்டேன்
அட சின்னப்புள்ள நல்லதம்பி
சின்னப்புள்ள நல்லதம்பி
ஓடி வளையேண்டா
ஒபாயமார் கூவாண்டோ

அட மானோடும் பள்ளமெல்லாம்
மானோடும் பள்ளமெல்லாம்
நானோட வல்லுவனா

அட எட்டாம் புளுதியிலே
எட்டாம் புளுதியிலே
எட்டுரு மானு மேயக்கண்டேன்
அட ஓடி வளையேண்டா
ஓடி வளையேண்டா
சின்னபுள்ள நல்லதம்பி
ஒபாயமார் கூவேண்டா

மானோடும் பள்ளமெல்லாம்
மானோடும் பள்ளமெல்லாம்
நானோட வல்லுவனா

அட ஒம்பதாம் புளுதியிலே
ஒம்பதாம் புளுதியிலே
ஒம்பதுரு மானு மேயக்கண்டேன்
அடி ஓடி வளையேண்டா
ஓடி வளையேண்டா
சின்னபுள்ள நல்லதம்பி
ஒபாயமார் கூவேண்டா

அட மானோடும் பள்ளமெல்லாம்
மானோடும் பள்ளமெல்லாம்
நானோட வல்லுவனா

அட பத்தாம் புளுதியிலே
பத்தாம் புளுதியிலே
பத்தூரு மானு மேயக்கண்டேன்
அட ஓடி வளையேண்டா
ஓடி வளையேண்டா
சின்னப்புள்ள நல்லதம்பி
ஒபாயமார் கூவேண்டா

அட மானோடும் பள்ளமெல்லாம்
மானோடும் பள்ளமெலலாம்
நானோட வல்லுவனா

அடடா தம்பிதானே
அடடா தம்பிதானே
பாலுகொடம் எடுத்துனு போயி
காட்டுக்குப் போறண்டா
பாலக் கறந்துநான் தூக்கிவரன்

நான் போறன் அண்ணாவே
